மூன்று
காதல் பிரபந்தங்கள்



கூளப்ப நாயக்கன் காதல்
விறலி விடு தூது

சேதுபதி விறலி விடு தூது

[வசன விளக்கங்களுடன்]

பதிப்பாசிரியர்: சிரஞ்சீவி

விலை ரூ. 1—50

பிரேமா

பிரசுரம்

சென்னை—24

சென்னை நகர விற்பனை உரிமை:

நேரு நியூஸ் மார்ட்,

லஸ், மைலாப்பூர்.

மலிவுப் பதிப்பு. வரிசை—7
முதல் பதிப்பு ஆகஸ்ட்—1958

☆


EXPURGATED EDITION WITH REFERENCE TO THE MADRAS GOVERNMEMT G. O. Nos. 1507 OF 48 AND 3397 OF 49 PUBLIC GENERAL.

☆

அச்சகம் :
பிரேமா ஆர்ட் பிரிண்டர்ஸ்,
63, ஆற்காட் ரோடு, சென்னை—24.

கூளப்ப நாயக்கன் காதலுக்கு
விளக்கம் தந்தவர் :
துர்காதாஸ். எஸ். கே. சாமி

கூளப்ப நாயக்கன்
விறலி விடு தூதுக்கு
விளக்கம் தந்தவர் :
குளத்தூர் ரெட்டியார்



அணிந்துரை

பண்டைய தமிழ் நூல்களை ஆராய்ந்தால் அவை அனைத்தையும் இரண்டு வகையாகப் பிரிக்கலாம். அவையாவன, அகப்பொருளும் புறப்பொருளுமாகும். தமிழ் மொழியில் உள்ள இலக்கணத்தின் ஐந்து பகுதிகளில் அகப்பொருளையும், புறப்பொருளையும் பற்றி விளங்கக் கூறும் பொருளியற் பகுதியே தலை சிறந்ததாகக் கருதப்பட்டது. அதுபற்றியன்றே **"எழுத்தும், சொல்லும் யாப்பும் ஆராய்வது பொருளதிகாரத்தின் பொருட்டன்றே! பொருளதிகாரம் பெறேமேயெனின் இவை பெற்றும் பெற்றிலேம்"** எனப் பாண்டியன் கூறியதாக இறையனார் அகப்பொருள் உரைஎழுதியவரும் கூறியுள்ளார். மேலும் இப் பொருளிலக்கணம் தமிழ் மொழிக்கே ஓர் சிறந்த அம்சம் எனலாம்.

அகப்பொருள் என்பது அகத்தினால், பெறுகிற பயன். ஒருவனும் ஒருத்தியும் தம்முள் ஒத்த அன்பினராய் கூடி மகிழ்ந்தபின் அவர்கள் இருவரும் இணைந்து நுகர்ந்த இன்பம், பிரிய நேர்ந்தால் உண்டாகும் துன்பம், முதலிய அகத்தே நிகழும் உணர்ச்சிகளைப் பல துறைகளாய் வகுத்துக் கூறுவது அகப்பொருளாகும். புறப்பொருள் என்பது புறம், அதாவது வெளிப்படையாக பலரறிய நிகழும் நிகழ்ச்சிகள் பற்றிய பொருளாகும். எடுத்துக்காட்டாக போரும், வெற்றியும், வள்ளல் தன்மையும் புறச்செய்கையாக நிகழும் நிகழ்ச்சிகளைக் கூறுவது. எனவே அவை புறப்பொருளாகும். நிலத்தை ஐந்தாகப் பிரித்து (நெய்தல், குறிஞ்சி, முல்லை, மருதம், பாலை) ஒவ்வொன்றிற்கும், முதல்பொருள், கருப்பொருள், உருப்பொருள் என்று வகுத்து, ஒவ்வொரு திணைக்கும் அகப்பொருளும் புறப்பொருளும் வெவ்வேறாக அமைத்து இலக்கியம் செய்திருந்தனர் நம்முன்னோர். இலக்கியம் கண்டபின்பே இலக்கணம் தோன்றுவது இயற்கையாதலால் இலக்கண நூலாகிய தொல்காப்பியத்தில் இந்தப் பாகுபாடுகளை நாம் காணுவதால் தொல்காப்பியர் வாழ்ந்த காலத்துக்கு முன்பே அகப்பொருள், புறப்பொருள் பற்றி கூறும் இலக்கியங்கள் தமிழ் நாட்டில் இருந்திருக்க வேண்டும். மேலும் பொருளிலக்கணத்தை ஆராய்ந்தால் இக்காலத்தே நாகரீகம் பெற்றார் அனைவராலும் நல்லனவென நாடப்படுகின்ற பழக்க வழக்கங்கள், பண்புசார்ந்த ஒழுக்

கங்கள் பலவற்றை நந்தம் தமிழ்மக்கள் பல நூறு ஆண்டுகளுக்கு முன்பே தமது வாழ்க்கையில் வைத்து வாழ்ந்து காட்டியிருக்கின்றனர்.

காலவெள்ளத்தில் அழிந்ததுபோக எஞ்சியிருக்கும் சங்கநூல்களான எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண் கீழ்கணக்கு என்பனவற்றில் புறநானூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல் இவை நீங்கலாக உள்ள மற்ற நூல்களில் அகப்பொருளைப் பற்றித்தான் அதிகமாக கூறப்பட்டிருக்கிறது. முன்பு சொன்னபடி அகப்பொருள் என்பது தலைவன் தலைவிகளுக்கிடையே ஏற்படும் இன்பம், பிரிவாற்றுமை போன்ற உள்ளத்தில் உந்தி எழும் காதல் உணர்ச்சிகளைச் சித்தரிப்பதுவேயாகும். இத்தகைய அகப்பொருளை மட்டுமே அடிப்படையாகக் கொண்ட பல நூல்கள் நம் தமிழ்மொழியில் உள்ளன. தமிழில் பிரபந்தங்கள் என்பவை 96 ஆக கணக்கிடப் பட்டிருக்கின்றது. இத்தொண்ணூற்றாறு பிரபந்தங்களுக்கும் உரிய இலக்கணம் தொல்காப்பியத்தில் காண முடிவதில்லை. தொல்காப்பியத்திற்குப் பின் தோன்றிய சில இலக்கண நூல்களில் காணப்படுகின்றன உண்மைப் புலவனின் கற்பனையில் தோன்றும் மன எழுச்சியும், சொற்சுவையும், பாட்டின் அமைதியும், நூலின் அமைப்பும் இலக்கண வரம்புக்குள்ளே வைத்து அளவிடுவதென்பது சாத்தியமற்ற ஒரு காரியமாகும். ஆகவே நமக்குக் கிடைக்கும் தமிழ் நூல்கள் யாவற்றிற்கும் மேற்கோள், சூத்திரம் முதலிய இலக்கண விதிகள் தொல்காப்பியத்தில் இருக்கின்றனவா, இல்லையாயின் அந்நூல்களை நாம் ஏற்றுக் கொள்ளலாமா என்று ஆராய்வது சாரை ஒதுக்கிச்சக்கையை மெல்லுவதேயாகும். காலத்தின் போக்கில் இலக்கண எல்லைக் கோட்டையும் மீறி கற்பனையும், நடையும், சொல்லும், அமைப்பும் மாறுவது இயற்கைதானே! புலமையை அளப்பதற்கு சரியான அளவுகோல் இலக்கணம் மட்டுமல்ல; புலவன் சொல்லில் வடித்துத் தந்த சிருஷ்டி படிப்போர் உள்ளத்தைக் கொள்ளை கொள்கிறதா என்பதையும் நாம் உன்னிப்பாய் கவனிக்கவேண்டும் என்ற கூற்றையும் புறக்கணிக்கஇயலாது. நக்கிரர் "மதி" என்ற மூங்கிலை அசையை படர்க்கையில் உபயோகப்படுத்தினர். அதுஇலக்கணவழூஉ (குற்றம்) என்று சொல்வதைக் காட்டிலும் அது பெரும் புலவனின் அச்சமற்ற அபூர்வ பதப்பிரயோகம் என்று கூறுவது தகுமன்றோ? அதுபோல் கம்பன் "நாராயணன்" என்ற இலக்கண சிரமைந்த சொல்லை "நராயணன்" என்று கூறி விட்டான். கம்பன் இலக்கண வரம்பை மீறிவிட்டான்; அவன் ஒரு கவிஞனு என்று கேட்கத்தான் நமக்கு எண்ணம் எழுகிறதா? மேல்நாட்டில் தன் போக்கில் பாடல்களை இயற்றிய ஷேக்ஸ்பியர் என்ற மஹாகவியின் நூல்களுக்குத் தனி இலக்கணமே வகுத்து "Shakesperlan Grammar' என்று அழைத்தனர். ஆகவே தற்காலம் நாட்டில் உலவும் அநேக நூல்களுக்கு ஏற்ப தொல்காப்பியத்தில் மேற்கோள், சூத்திரம் இல்லாவிடினும் அந்நூலின் சொல்லழகு, கற்பனை முதிர்ச்சி, அணி அமைப்பு, உள்ளத்தை அள்ளும் வன்மை, முதலிய அரும்பெரும் சிறப்புகளைக் கொண்டு அந்நூல் ஓர் உண்மை இலக்கியம், அதைச் செய்தவன் ஓர் உண்மைப் புலவன் என்ற முடிவுக்கு வருவதே ஏற்றதாகும்.

காவியங்களில் காணப்படும் மற்றொரு அம்ஸத்தையும் இங்கு நாம் நினைவுக்குக் கொண்டு வரவேண்டும் அதுதான் "சுவை" என்பது. வடமொழியில் இதை 'ரஸம்' என்பர். பாட்டின் "சுவை"யை அனுபவிக்க நாம் பழகிக்கொள்ள வேண்டும். காவியச் சுவை பல வகைப்படும்.

சுவையில் காதல் சுவையை மட்டும் அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட நூல்கள் வட மொழியிலும், தமிழிலும் அநேகம் உள்ளன. அவையும்காலம்மாறமாற வெவ்வேறு உருவமெடுத்து தம்தனித் தன்மை மாறலாயின. முன்பு சொன்னது போல் பிரபந்தம் தொண்ணூற்றுறில் காதல் சுவையைமட்டும் அடிப்படையாகக் கொண்டு அகத்துறை முறையிலும், பிற முறையிலும், அமைந்த பிரபந்தங்களில் "கோவை', "உலா", "தூது, காதல், மடல்" என்பன சில.

இவற்றுள் தலை சிறந்து விளங்குவது கோவையே யாகும். அகப்பொருள் துறைகளை வரிசையாகக் கோர்த்ததைப் போல் கூறியுள்ளதால் அதற்கு கோவையெனப் பெயரிட்டனர். கோவை என்பது மரபுப்படி இருவகைப் பட்ட முதற் பொருளும், பதினான்கு வகைப்பட்ட கருப் பொருளும், பத்து வகைப்பட்ட உருப் பொருளும், பொருந்தி, கைக்கிளை. ஐந்திணை முதலிய காமப் பகுதிகளான, களவொழுக்கத்தையும் கற்பொழுக்கத்தையும் பற்றி கூறுவதையே நோக்கமாக உடைய நூலாகும். இதற்கு எடுத்துக் காட்டாக மணிவாசகரின் "திருச்சிற்றம்பலக் கோவையைக் கூறலாம். அதுவேயன்றி பிற்காலத்தில் எழுதப்பட்ட திருவெங்கைக் கோவை, தஞ்சைவாணன் கோவை என்பன போன்ற நூல்களும் இந்த வரிசையில் சேர்க்கப்பட வேண்டியவையே.

அடுத்தபடி உலாபிரபந்தம் காளைப் பருவமடைந்த தலைமகனை அவனதுகுலம், குடி, பிறப்பு, மங்கலம், பரம்பரை முதலிய பெருமைகள் தோன்ற எடுத்துக்கூறி, அவன் மாதர்கள் அதிகமாகப் புழங்கும் வீதியிலே பவனிவருவதாயும், அவனைக் கண்டு பேதை முதலிய ஏழு பருவப் பெண்களும் கண்டு காமுறுதலாக நேரிசைக் கலி வெண்பாக்களால் இயற்றப் படுவது உலாவாகும். இதற்கு சிறந்த உதாரணம் சேரமான் பெருமான் செய்தருளிய 'திருக்கயிலாய ஞான உலா". அது மட்டுமின்றி பல உலா, பிரபந்தங்கள் நம் தமிழ் மொழியில் இருக்கின்றன. அவற்றுள் மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை இயற்றிய திருவிடை மருதூர் உலா படித்து இன்புறத் தக்கது. இவர் மூன்று கோவை பிரபந்தங்களும் இயற்றியிருக்கிறார். உலாக்களுள் திரிகூட ராஜப்பக்கவிராயர் இயற்றிய திருக்குற்றால உலாவும் படித்து இன்புறத்தக்கது.

இனித் "தூது" என்பது, ஆண்பாலாயினும் பெண் பாலாயினும் அவரவர் காதலை பாணன் விறலி முதலிய உயர் திணையொடு கிள்ளை, வண்டு முதலிய அஃறிணையோடும் எடுத்துச் சொல்லி 'தூதுபோய் வா'வெனக் கலிவெண்பாவாற் கூறுவது. பெரும்பான்மையான தூது நூல்களில் ஒரு தலைவி, தலைவனிடம் ஒரு பொருளை தூது விடுவதாகவே காணப்படினும், சில நூல்களில் தலைவன் தலைவிக்கு தூதனுப்பியதாக வைத்து இயற்றப்படுதலும்

உண்டு.முன்னுல் சொல்லப்பட்ட தலைவி விடுகின்றதூது-மான்விடுதூது, கிள்ளை விடு தூது, தென்றல் விடு தூது என்பன போன்ற சிலவாம். பின்னுல் கூறப்பட்ட தலைவன் விடுகின்ற தூது பற்றி கூறும் நூல்களில் விறலி விடு தூதும் ஒன்ருகும். தூது என்பது கடவுள், ஆசிரியர், வள்ளல்கள், உபகாரிகள் முதலியவர்களைப் பாட்டுடைத் தலைவர்களாகக் கொண்டு, கதைப் போக்கோடு ஒட்டி அவர்களுடைய பலவகை சிறப்பு களையும் கூறுவதாகும். இரத்தினச் சுருக்கம் முதலிய இலக்கண நூல் களுள் தூதிற்குரிய பொருள்களாக அன்னம், மயில், கிள்ளை, மேகம், நாகணவாய்ப்புள், பாங்கி, குயில், நெஞ்சு, தென்றல் என்ற பத்தும் குறிக்கப்பட்டுள்ளன. இவையேயன்றி, புலவர்கள் தத்தம் கற்பனைத் திறனுக்கு ஏற்ப தூதுப் பொருள்களாக அமைத்துக் கொண்ட பொருள் களும் பல உள. நெல், துகில், மான், விறலி முதலியவற்ருேடு புகையிலை கூடத் தூதுப் பொருளாக பயன் படுத்தப்பட்ட நூல் ஒன்று இருக்கிறது. தூது நூல்களுக்கு ஆதார முதல் நூலாக விளங்குவன நமது பண்டைய தமிழ் நூல்களில் காணப்படும் பல தனிப்பாடல்களேயாகும். இரட்டை மணிமாலை, கலம்பகம், தேவாரம், திருவாசகம், திவ்விய பிரபந்தங்கள்முதலியவற்றில்சிலபகுதிகள் தூதுச் செய்திகளைக் கூறுவன வாகும். ஆண்டாள் அம்மை குயில், மேகம் இவற்றை தூதனுப்பிய திவ்விய பாசுரங்கள் தமிழ் இலக்கியத்துக்கே ஓர் பொலிவைக் கொடுப் பனவாக அமைந்தனவாகும். அது போன்றே மாணிக்கவாசகரும் "கோத்தும்பி" (அரச வண்டு) "குயில் பத்து"முதலிய ஒப்பற்ற அருள் பாக்களால் தூது செய்திகளைக் கூறியருளினர். வடமொழியில்பல தூதுப் பிரபந்தங்கள் உள்ளன. காளிதா னின் மேக ஸந்தேசத்தை அறியாதார் யார்? இது தலைவன் தலைவிபால் மேகத்தை தூது அனுப்பியதாகும். விறலி விடு தூதும் அத்தகையதே.

அடுத்தபடியாக "காதல்" என்றதொரு நூல் தொகுதி இது பொது வாக உலாவைப் போல் அமைந்துள்ளது. உலாவில் பேதை முதலிய ஏழு பருவத்துப் பெண்கள் பாட்டுடைத் தலைவனைக் கண்டு, அவரவர் பருவத்திற்கும்,பக்குவத்துக்குமேற்ப அவன் மீது காதல் கொண்டதாய்க் கூறுமல், குறிப்பிட்ட ஓர் தலைவி பூக்கொய்ய நந்தவனம் சென்றதும், ஆங்கு பாட்டுடைத் தலைவன் வேட்டைக்கு வர, வந்தவனைக் கண்டு காதலுற்றதும், அதனல் அவள் பட்ட வருத்தத்தை அப்பெண் பாங்கியரி டம் கூறியதாகவும் இயற்றப்பட்டது. இதற்கும் முதல் நூலாக இருக்கக் கூடியது மாணிக்கவாசகரின் "அன்னைப்பத்து" போன்ற தனிப்பாடல் களேயாகும். அதனை விரித்துப் பெருக்கி, பாட்டுடைத்தலைவன் சிறப்பு, அவன் ஆடிய வேட்டையின் சிறப்பு, அவனுடைய பரிவாரங்களின் சிறப்பு, அவனுடைய குடி, குலம், குணம் முதலியவற்றையும் கூறி,தலைவி அவனைக்கண்டு காமுற்று,அந்த வேட்கையால் தான் படும்பாட்டை தன் பாங்கியரிடம் கூறுவதாக இயற்றப்பட்டது. சுப்ரதீபக் கவிராயர் இயற்றிய கூழப்ப நாயக்கன் காதலும்,இராமநாதபுரம் சமஸ்தானம், இராமசாமிக் கவிராயர் என்பவர், மதுரைப் பிள்ளை என்பவர் மீது இயற்றிய மதுரைக் காதல் என்ற நூலுமாகும். 'காதல்' தனி வகை பிரபந்த மாக

முற்கூறிய தொண்ணூற்ருறில் காணப்படவில்லை. கடைசியாக 'மடல்' என்பதும் ஒன்று. மடல் என்பது தமிழ் மொழிக்கு உரிய தொண்ணூற்ருறு வகை பிரபந்தங்களில் ஒன்ருகவும், அகப் பொருள் கோவை துறைகளில் ஒன்ருகவும், கலம்பக இலக்கியங்களின் உறுப்பு களில் ஒன்ருகவும் காணப்படுகின்றது. இது அகப் பொருள் பற்றிய பிரபந்தம் என்பது உறுதி. மடல் என்பது உலா மடல் என்றும், வள மடல் என்றும் இரண்டு வகையாகப் பிரித்து கூறப்படுகின்றது. அதில் உலாமடல் என்பது கனவில் ஒரு பெண்ணைக் கண்டு கலவியின்பம் நுகர்ந்த தலைமகன் விழித்த பின் அவள் பொருட்டுமடலூர்வேன் என்ப தைக் கலி வெண்பாவில் பாடுவது. வளமடல் என்பது மங்கையர்பால் பெறும் காம இன்பமே பயனெனக் கொண்டு பாட்டுடைத் தலைவனின் இயற் பெயருக்குத் தகுந்தவற்றை எதுகையாக எடுத்துரைத்து கலிவெண்பாவில் பாடப்படுவதாகும். மடலூர்தலின் இயல்பு பற்றி வள்ளுவர்

> "காமம் உழந்து வருந்திஞர்க் கேமம்
> மடலல்ல தில்லைவலி"

என்று குறளில் கூறுகிருர். தலைமகன் தன்னுல் விரும்பப்பட்ட தலைவியை அடைய முடியாதபோது தம்மிருவர் படத்தையும் ஓர் துணியில் எழுதி, எருக்கு, பூளை எலும்பு இவற்ருல் கட்டிய மாலையை அதற்கு அணிவித்து, பனை மடல்களால் ஓர் குதிரை செய்து அதன் மேல் ஏறிக் கொண்டு, அதனைப் பிறர் இழுக்க, தெரு வழியே செல்லு வான். அவனைக் கண்ட அரசராயினும், அரசனிடம் அதிகாரம் பெற்ற பிற அதிகாரிகளாயினும்அவனைச் சோதனை செய்வர். அச் சோதனையாவது, அம் மடலூரும் ஆடவன் தன் உடம்பின் எந்த பாகத் திலேனும் பனை மடலால் சீவிக் காண்பிப்பான். அதில் இரத்தம் வராது வீரியமே தோன்றுமாயின் அவனது காதலின் சக்தியை வியந்து அவனுல் விரும்பப்பட்ட பெண்ணை அரசர் முன்னின்று அவனுக்கு மணம்முடித்து வைப்பார்.

மேலே குறிப்பிட்ட இவ்வைந்து காதல் பிரபந்தங்களே யன்றி அநுராகமாலை என்று ஒரு பிரபந்தவகை இருப்பதாக இலக்கண நூல் களில் கூறப்பட்டிருப்பதைக் கொண்டு நமக்கு தெரியவருகிறது. அதில் தலைவன் தான் காணும் கனவில் ஒருத்தியைக் கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து உற்றினிமையுறப் புணர்ந்ததை தன்னுயிர்ப் பாங் கர்க்கு உரைத்ததாக நேரிசைக் கலிவெண்பாவால் கூறுவதாகும்.

இனி விறலி விடு தூது என்பதைப் பற்றி சிறிது கூறுவோம். இது வரை நாம் பார்த்ததிலிருந்து தமிழ்ப் பிரபந்தங்கள் தொண்ணூற்ருறில் தூது என்பது ஒன்று என்று பார்த்தோம். அதில் தலைவி தலைவனுக்கு அனுப்பும் தூது ஒன்று, தலைவன் தலைவிக்கு அனுப்பும் தூது மற்ருென்று. மேலும் தமிழ் இலக்கியங்களில் காணப்படும் காதல் பிரபந்தங்கள், தனி நூல்களாயினும், ஒருநூலின் பகுதியாகவேனும் இருப் பதை உன்னி ஆராய்ந்தால் அவை பெரும்பாலும் சமயச் சார்புடையன

வாகவே இருப்பதைக் காண்கின்றேம். திருச்சிற்றம்பலக்கோவை, திருக்கயிலாய ஞான உலா, கோத்தும்பி,குயில்பத்து,வண்டுவிடுதூது, தென்றல் விடுதூது, கிள்ளைவிடுதூது, தாயுமானவர்மடல் முதலியன யாவும், இறைவனையே தலைவனுகவும், தன்னையே தலைவியாகவும், பாவித்து சிற்றின்பப் போர்வையில் பேரின்பப் பொருளைப் பொதித்து வைத்திருப்பதை உணரலாம். அதாவது சமயமும் இலக்கியமும் ஒன்றுக்கொன்று சார்புடையதாய் இருந்திருக்கின்றன. மேலும் "நரஸ் துதி" என்பதை அறவே அகற்றி, இறைவனையே போற்றிப்பாடி சுந்தரர் கூறுவதுபோல்"பொய்மையாளரைப்பாடாதேஎந்தன் புகலூர் பாடுமின் புலவிர்காள்" என்பதைக் கடைப்பிடித்து ஒழுகி வந்திருக்கின்றனர் நமது தமிழ் அருட்கவிகள். காலம் செல்லச் செல்ல, புலவர்கள் வறுமை யால் வாடும் காலத்தில் உதவிசெய்த உபகாரியைப் பாடுவது மரபாக மாறிவிட்டது. அத்தகைய நூலே விறலிவிடு தூதும், கூழப்ப நாயக்கன் காதலுமாகும்.

இவ்விரண்டு நூற்களையும் இயற்றியவர் சுப்ரதீபக் கவிராயர் என்பார். இவர் மதுரையைச் சார்ந்த திருமங்கலம் தாலூகாவிலே கம்மாளர் மரபிலே பிறந்தவர். இவர் மிக வாக்குவல்லமை யுடையராய் நிலக்கோட்டை ஜமீன்தார் கூழப்ப நாயக்கர்பேரில் காதல், விறலிவிடு தூது பாடி பரிசு பெற்றுள்ளார். இவர் பலபட்டடைச் சொக்க நாதப் புலவர் காலத்தவர் என்றும், அவரால் பாடப்பட்ட வண்டுவிடு தூது என்னும் பிரபந்தம் அரங்கேற்றுகையில் சுப்ரதீபக் கவிராயர், 'சண்பக மலரில் வண்டு படியாது' என்று கூறி அவரோடு எதிர்த்தார் என்றும் கூறப்படுகின்றது. பல பட்டடைச் சொக்கநாதப் புலவர் என்பவர் மதுரை நகரில் திருமலை நாயக்கர் அரசுபுரிந்த காலத்தில் இருந்தவர் என்று சிலர் கூறுவர். உ. வே. சாமிநாத அய்யர் அவர்கள் பதிப்பித்த பல பட்டடைச் சொக்கநாத பிள்ளை இயற்றிய பத்மசிர நாதர் தென்றல் விடு தூது என்ற நூலின் முகவுரையில், பல பட்டடைச் சொக்கநாதப் பிள்ளை சற்றேறக்குறைய 200 ஆண்டுகளுக்குமுன் மதுரையில் வாழ்ந்த வர் என்றும் இராமநாதபுரத்தில் அக்காலத்தில் விஜய ரகுநாத சேதுபதி (1711—1725] என்பவர் அரசாண்டு வந்தார் என்றும் கூறியுள்ளார். சுப்ரதீபக் கவிராயரும் அவர் காலத்தவராயின் சுமார் 200 ஆண்டு களுக்கு முன்பிருந்தவராகவே கருதுதல் வேண்டும்.

இவ்விரண்டு நூல்களில் மதன சாஸ்திர நுட்பங்கள் பல இருப்பதை நேயர்கள் அறிவார்கள். மேலும் அவற்றை ஒளிவு மறைவின்றி கூறி யிருக்கிறுர் கவிராயர் என்றும் நினைக்கலாம். அதனுலேயே இவ்விரண்டு நூல்களையும் திருத்திப் பதிப்பிக்க முற்பட்டவர்கள் மூலநூலில் பல கண்ணி களை அறவே அகற்றியும், பல சொற்களை மாற்றியும், மாற்ற முடியாத சொற்களுக்கு நட்சத்திரக் குறிகள் கொடுத்தும் பதிப்பித்தனர். கலி வெண்பா அமைப்பில் சுப்ரதீபக் கவிராயரின் புலமை சொல்லத் தரமல்ல. இவருடைய நூலில் எதுகை, மோனை, அணி முதலிய செய்யுள் இலக் கண உறுப்புகள் வெகு நயம்பட மிளிர்கின்றன. இவருடைய சொல் ஆட்சி மிகவும் உயரிய முறையில் காதுக்கினிமையாக அலைமோதி

வருகிறது. ஒரு புலவனின் நூலை ஆராயுங்கால், அவன் இருந்த காலம் அக்காலத்தில் நிலவிய கலாச்சாரம், வாழ்ந்த மக்களின் பண்பு, பழக்க வழக்கங்கள் முதலியவற்றோடு பொருத்தி ஆராய்வதுதான் சாலச் சிறந்தது, அக்காலத்து பாளையப்பட்டு தலைவர்கள் சிற்றின்பப் பிரியராய் இருந்திருப்பினும், தமிழ்ப் பற்றும், இலக்கண இலக்கிய அறிவும் உடையராய் இருந்திருக்கின்றனர். அவர்கள் ஆட்சி புரிந்த காலத்தில்தான் காதல் பிரபந்தங்கள் பல தோன்றின. அவற்றில் இறைவனை பாட்டுடைத் தலைவனாகக் கொண்டவை பல. சுப்ரதீபக் கவிராயர் போன்று தமக்கு உதவிசெய்த உபகாரியைப் பாட்டுடைத் தலைவனாய் வைத்துப் பாடப் பட்டவைசில. விறலிவிடு தூதில்வரும் தலைவன் அட்டாவதானி என்ற வைணவ அந்தணனுடைய கதை சுப்ரதீபக் கவிராயரின் சொந்த வாழ்க்கையைச் சித்தரிக்கிறதா அல்லது கவிராயர் வேசியர் மீது கொண்ட வெறுப்பையும் கோபத்தையும் படம் பிடித்துக் காட்டுகிறதா என்று முடிவு கட்ட முடியாத நிலையில்தான் வாசகர்களாகிய நாம் இருக்கிறோம். மேலும் மற்ற தூது நூல்களுக்கும் இதற்கும் ஓர் முக்கியமான மாறுபாடு இருப்பதையும் நாம் அறிய வேண்டும். மற்ற தூது நூல்கள் பாட்டுடைத் தலைவனை சிறப்பித்துக் கூறி, அவன் பால் தான் கொண்ட காதலையும், அவனை அடைய முடியாததால் தான் படும் அவதியையும் விரித்துரைக்கின்றன. தலைவன் தலைவிக்கு அனுப்பும் தூதுகளில் தான் அவள் மீது கொண்ட காதலையும், தான் பிரிந்திருக்க வேண்டிய அவல நிலையையும், தலைவி தன் மீது கொண்ட ஊடலைத் தீர்த்து வைக்கும் முறையில் அமைந்துள்ளன. ஆனால் இத் தூதோ பாட்டுடைத் தலைவன் பரத்தையர் வசப்பட்டு, மனைவியை விட்டுப்பிரிந்து, கைப்பொருள் யாவும் இழந்து, வறுமையால் வாடி, கூழப்ப நாயக்கனை அடைந்து, அவனிடம் பரிசில் பல பெற்று, திரும்பவும் மனைவியை நாடிப் போக எண்ணங் கொண்டு அவளது ஊடலைத் தீர்க்குமாறு விறலியைத் தூது அனுப்புகிறான் இதில் ஊடல் கொண்ட மனைவியைப் பற்றி அதிகம் கூறப்படவில்லை. தான் பரத்தையர் விரித்த வலையில் அகப்பட்டு பெற்ற இன்பத்தையும், பின்பு பட்ட துன்பத்தையும் பெரிதும் விரித்துக்கூறும் இத்தகைய நூலின் அமைப்பிலும் அது செய்யப்பட்ட காலத்தை அநுசரித்து அப்போது வழக்கத்திலிருந்த காம சாஸ்திர நுட்பங்கள்பல கூறப்படுகின்றன. அருணகிரியாரின் திருப்புகழ் பாட்டுக்களில் சில இதைவிட நேர்முகமான மொழியில் இருக்கின்றன.

''இருமலைபோல் எதிர்ந்த மல்லர்
  இருவர் அங்கம் எரி செய்தாய்! உன்
திரு மலிந்து திகழு மார்பு
  தேக்க வந்து என் அல்குல் ஏறி
ஒருமுலையை வாய்மடுத்து
  ஒருமுலையை வருடிக்கொண்டு
இருமுலையும் முறை முறையாய்
  ஏங்கி ஏங்கி இருந்து உண்ணாயே.''

மேலோட்டமாகப் பார்க்குமிடத்து இப்பாடல் எப்படிக் காணப்படுகின்றது! ஆனால் இது பெரியாழ்வார் தன்னையே யசோதையாகக் கற்பனை செய்து அக்கற்பனையின் முதிர்ச்சியால் கண்ணனை தன் குழந்தையாகக் கருதித் தன் மடிமேல் வைத்துக்கொண்டு தன் மார்பிலிருந்து பால் குடிக்க வேண்டுகிறார். இதை அறியும் போது அப்பாடலில் இருக்கும் "பச்சை"ச் சொற்கள் நமக்கு விரஸமாகப் படுவதில்லை. அதுபோன்றே அருணகிரிநாதர் வாக்கிலிருந்து பொழியும் சந்தப்பாக்களுமாகும். ஆகவே காவிய ரஸனையோடு பார்ப்பவர் கண்களுக்கு காமவிகாரம் தோன்றக் காரணம் இல்லை. காமக் கண்ணோடு பார்ப்பவர்கள் காவிய ரஸனையை இழந்து விடுகிறார்கள். அவ்வளவுதான். இதைப் போல தூது, உலா, கோவை, காதல், மடல் முதலிய பல காதல பிரபந்தங்களையும் உரை நடையில் மக்களுக்கு வழங்குவது பயன்படும். இம் முயற்சியில் ஈடுபட்டுள்ள சிரஞ்சீவி அவர்களுக்கும் அவருடைய சகாக்களுக்கும் தமிழ் உலகம் கடமைப் பட்டுள்ளது. வணக்கம்.

திண்டுக்கல்
விளம்பி, ஆடி, 14.

"சேக்கிழார் அடிமை"
பெருஞ்சொற் கொண்டல்
பெ. கா. சண்முகநாதன்





கூளப்ப நாயக்கன் காதல்

☆

காப்பு

பேராரும் பெஞ்சைப் பெரியநா கேந்திரன்மேற்
சீரருங் காதலையான் செப்பவே—நேராரும்
அக்கனித ரச்சொலிமுன் அப்பனைவ லத்தில்வரும்
கைக்கயமு கக்கடவுள் காப்பு.

எந்தத் தமிழ்க் கவிஞர்களும் ஒரு நூலை இயற்றுவதற்கு முன் பாக காப்புச் செய்யுளும் கடவுள் வாழ்த்தும் இயற்ருமல் நூலைத் தொடங்குவதில்லையாதலால் சுப்ரதீபக் கவிராயரும் வழக்கப்படிபிரணவ வடிவமுடைய விஞயகப் பெருமானை காப்புச் செய்யுள் கடவுளாக வைத்து வணங்கி வாழ்த்தையும் கோரி தன் காதல் பிரபந்தத்தை இயற்றத் தொடங்கினர்.

காப்புச் செய்யுளுக்குள்ளேயும் ஒரு கதையைப் புகுத்திவிட்டார் கவிராயர். அப்பன் வைத்திருந்த கனியைப் பெற தம்பியுடன் போட்டி போட்டு மூன்று முறை அப்பனை வலம் வந்துவிட்டு, 'மூவுலகையும் சுற்றி வந்து விட்டேன். கனியைக் கொடுங்கள்' என்று கேட்டுப் பெற்ருரே அந்த யானை முகக் கடவுளுக்குக் காப்புக் கட்டிவிட்டார் !

பிறகு கடவுள் வாழ்த்து கூறுகின்ருர். என்னதான் புலமை இருந் தாலும் தெய்வத் துணையும் வேண்டுமல்லவா ? ஆதலால் "கூளப்ப

நாயக்கன் மேல் காதல் பிரபந்தம் பாட கவிதைக் குரிய சொற்களையும், இனிமையான நடையையும் வழங்குவாயாக!'' என்று யானை முகக் கடவுளை மட்டும் துதிக்கவில்லை. “நீங்களும் அருள் புரியவேண்டும்'' என்று ஏடும் மணிமுத்து மாலையும் ஏந்துகின்ற கலைமகளையும், ஆடு கின்ற மயில் மீது ஏறி வருகின்ற முருகனையும் பிரார்த்திக்கின்றார்.

லெட்சுமி, சரஸ்வதி ஆகிய தெய்வங்களுக்கு அஞ்சலி செய்தாகி விட்டது. தன் இஷ்ட தெய்வங்களுக்கு மட்டும் பெருமை தந்தால் போதுமா? பாட்டுக்குடைய தலைவனின் குல தெய்வத்தை ஒதுக்கிவிடக் கூடாதே! அத் தெய்வத்தையும் வாழ்த்திலே புகுத்தி விடுகிறார் கவி ராயர். எவ்வாறு? செல்வத்திற் கெல்லாம் அதி தேவதையாகிய மகா லெட்சுமி தானாகவே விரும்பி அணைத்துக்கொள்ளும் அகோபில திரு மாலின் மெய்ஞான அருளைப் பெற்றுள்ளவனாக கூளப்பநாயக்கனைக் குறிப்பிடுவதன் மூலம் பாட்டுக்குடைய தலைவன் வழிபடும் கடவுளுக் கும் உரியதொரு ஸ்தானம் கொடுத்துவிட்டார்!

கடவுளுக்குத் துதி பாடிய கவிராயர், தன்னைச் சான்றோனாக்கிய வரை மறந்து விடவில்லை. தனக்குக் கல்வி போதித்த குருநாதருக்கும் தன் வணக்கத்தைக் கூறுகின்றார் கவிராயர். அந்தக் குருநாதர் யார்? மதுரை திருவிளையாடல் புராணம் இயற்றிய பரஞ்சோதி மாமுனிவரா கும். எனவே அவரை முனிவர்கள் கொண்டாடும் தலைவர் என பெருமைப் படுத்துகின்றார், குரு வணக்கத்தில்.

பொன்மாது மேவுதிம்ம ராயரருள் பூண்டிருக்கும் 1
நன்மா நிதிபெரிய நாயகன்மேற் காதல்சொல

வந்துதவு சொல்மதுர வாக்குதவி யெப்பொருளுந் 2
தந்துதவ வேண்டுமெங்கள் தந்தி முகத்தோனே

ஆளும் பெருமாள் அகோபிலமால் மெய்யருளெந் 3
நாளும் பெறும்பெரிய நாயகன்மேற் காதல்சொல

ஏடு மணிவடமும் ஏந்துஞ் சரஸ்வதியே 4
ஆடுமயில் ஏறிவரும் ஐயனே முன்நடவாய்

கோமுனிவர் கொண்டாடுங் கூடற் பரஞ்சோதி 5
மாமுனிவர் செம்பொன் மலர்ப்பாதம் நான்மறவேன்

குருவணக்கமும் செலுத்தி பிரபந்தம் இயற்றத் தொடங்கிவிட்டார். அந்தப் பிரபந்தமும் முடிந்துவிட்டதாகவே வைத்துக்கொள்ளவேண்டும். தான் எழுதிய காதல் பிரபந்தத்தை எடுத்துக்கொண்டு கூளப்பநாயக்க னின் கொலுமண்டபத்திற்கும் வந்து விட்டார். அங்கு சுற்றிலும் பார்க் கிறார். வீற்றிருக்கும் புலவர்களை கவனிக்கிறார். “புகழையே பரப்ப வேண்டும் என்ற பெரு நோக்குடைய கூளப்பநாயக்கன் மேல காதல் பிரபந்தத்தை நான் இயற்றியுள்ளேன். அதை புலவர் சபையில் சொல்வ தென்பது தத்துவமறியாத, அனுபவமும் இல்லாத ஒருவன் மெய்ஞ்ஞான

விளக்கத்தை எல்லாம் அறிந்த ஞானிகள் முன்பாக சொல்வதற்கு ஒப்பாகும்.'' என்ற பொருள்பட அவை அடக்கம் கூறுகிறார்.

மேலும் கூறுகிறார், '' அமுதம் போன்ற உணவை அளித்துக் காப்பாற்றி, பேசக் கற்றுக்கொடுத்து, வளர்த்து வரும் பச்சைக்கிளியின் கொச்சை மொழியைக் கேட்டு மகிழ்வதுடன், அந்தப் பேச்சில் பிழை கண்டாலும் திருத்தி அதைப் பழக்குவதைப்போல, நான் இயற்றியிருக்கும் இந்தக் காதல் பிரபந்தத்தில் எந்தவிதக் குற்றத்தைக் கண்டாலும் அதை ஒரு குற்றமாகவே கூளப்பநாயக்கன் கருதமாட்டார்.'' என்று தான் கொண்டுள்ள நம்பிக்கையையும் தெரிவித்துவிட்டு, "தமிழ்க் கவிதை என்றால் அதுவும் ஒருவகை இன்பமென்று ஏற்றுக்கொள்ளும் இயல்புடையவன்'' என்று கூளப்பநாயக்கனைப் புகழ்ந்து அவை அடக்கத்தை முடிக்கின்றார்.

நாட்டு புகழ்பெரிய நாயகன்மேற் காதலைநான் 6
சூட்டுகவி நாவலர்முன் சொல்லத் துணிந்ததுதான்

தானந் தவயோக தத்துவமில் லானொருவன் 7
ஞானந் தெளிந்தவர்க்கு நல்லறிவு சொல்வதொக்கும்

தெள்ளமுத மூட்டியுரை திருத்தி வளர்த்தெடுத்தோர் 8
கிள்ளை குழறுமொழி கேட்டு மகிழ்வதுபோல்

நன்னயவில் வேள்பெரிய நாகேந்த்ரன் என்கவியில் 9
என்ன வழுக்கண்டாலு மின்பமெனக் கொண்டருள்வான்

பிறகு கூளப்பநாயக்கன் ஆட்சிக்குட்பட்ட பத்துவித அம்சங்களான மலை, ஆறு, நாடு, ஊர், மாலை, பரி, யானை, குடை, முரசு, ஆணை, முதலியவைகளைப் பற்றி தசாங்கம் இயற்றி உள்ளார்.

முதலாவதாக கூளப்பநாயக்கனின் ஆட்சிக்குட்பட்டமலைப் பிரதேசத்தைப் பற்றி வர்ணிக்கையில் நிலக்கோட்டையின் காவல் அரணாக இருக்கும் வராகமலையை கவிராயர் வர்ணிக்கிறார். அதாவது. மலைத்தேனை அளந்து விற்கும் வேடர்களுக்கு, வானுலகத்து அமுதத்தை அளந்து கொடுக்கும் அளவிற்கு வான் முகட்டைத் தொடும்படியாக உயர்ந்து கம்பீரமாக நிற்கிறதாம்—அந்த வராகமலை !

மலையைப் புகழ்ந்த கவிராயர் அந்த காட்டில் ஓடுகின்ற ஆற்றைப் பற்றிப் பாடுகின்றார். குடவனாறு அக்காலத்தில் நிலக்கோட்டை மன்னனான கூளப்பனின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. இப்போது திண்டுக்கல் தாலுக்காவின் ஜீவ நதியாக ஓடுகின்றது. அந்த ஆறு எத்தகைய பெருமை உடையது என்று கூறுகையில், கன்னிப் பெண்ணைப் போன்ற

அரும்பதவுரை : கண்ணி (1) பொன்மாது—லட்சுமி (5) கூடல்—மதுரை. கோமுனிவா—முனிவர்களுக்கெல்லாம் தலைவராயிருப்பவர். (8) கிள்ளை—கிளி (9) வழு—குற்றம்.

தூய்மையுடைய யமுனையோடு கங்கை கலக்கும் சிறப்பைப் போன்று பொன்னி என்று அழைக்கப்படும் காவேரியோடு கலந்து பாய்கிறதாம் அந்தக் குடவனாறு !

ஆற்றுவளம் புகழ்ந்த கவிராயர் நாட்டு வளத்தைக் கூறுகின்றார். அழகான ஆற்றின் குளிர்ந்த தண்ணீரிலே நிலக்கோட்டையைச் சேர்ந்த பெண்கள் நீந்தி விளையாடிக் குளிக்கின்றனர். அவர்களுடைய அழகான குவிந்துள்ள கொங்கைகள் மீதும், உடல் மீதும் பூசிக் குளிக்கும் மஞ்சள் பொடியானது தண்ணீரில் கரைந்து, மஞ்சள் நீராகி, அந்தத் தண்ணீர் வயல்களுக்குப் பாய்ந்து பூச்சி புழுக்களை ஒழித்துவிடுவதால் பண்ணைப் பயிர்கள் எல்லாம் செழிப்பாக வளமாக வளர்ந்துள்ளதாம். அந்தப் பிரதேசம் ஒரு காலத்தில் தமிழ் வளர்த்த பாண்டியனின் வள நாடாக இருந்தது என்பதையும் மொழி உணர்ச்சியுடன், இரகசியமாக, ஆனால், புகழுரையாகப் பாடுகிறார்.

பிறகு ஊரைப் பற்றி வர்ணிக்கிறார். தலை நகரமான நவபுரியில் வேந்தன் அரண்மனையிலும், அதிகாரிகளின் இல்லங்களிலும் கொடிகள் பறக்கும் அழகை ரசிக்கிறார். ஆகாயத்தில் நீந்துகின்ற வட்ட வடிவமான சந்திரனையும் கவனிக்கின்றார். கற்பனை மித மிஞ்சுகின்றது. சந்திரனின் மையத்திலே உள்ள களங்கத்தைத் துடைக்க முயற்சிப்பதைப் போல, விண்பட உயர்ந்து வேந்தன் கூளப்பனின் கொடிகள் பறக்கின்றனவாம். அவ்வளவு பெருமையுடைய ஊர் என்று நவபுரியை—அதாவது நிலக்கோட்டையைப் புகழ்கின்றார்.

பிறகு கூளப்பநாயக்கனின் அகன்ற மார்பில் தொங்குகின்ற மலர் மாலைகளைப் பார்த்து பரவசமடைகிறார் கவிஞர். அதையடுத்து வேந்தன் ஏறிச் செல்லும் குதிரையை வர்ணிக்கிறார். குத்தும் கொலையும் நடைபெறும் போர்க்களத்தில் அச்சமின்றிப் புகுந்து, தன் தலைவன் வெற்றி பெறும்வரை களத்திலே ஓடி நடந்து அவனுடன் ஒத்துழைத்து விட்டு, அவன் வாகை சூடித் திரும்பும்போது நடனம் புரிந்து வருவதைப்போல அழகான நடை போட்டு வரக்கூடியதாம்—கூளப்பநாயக்கனின் குதிரை !

யானையைப்பற்றிப் பாடும்போது பகைவரை அந்த யானை எப்படித் தகர்த்து துதிக்கையில் எடுத்துத் தரையில் அறைந்து காலிலிட்டு அரைத்து விடுகிறது என்பதை தன் கவிதையில் அலாதியான அழகோடு கூறுகிறார். அதாவது பகைவரின் அணி வகுப்பில் முதல்வரிசையில் அணி வகுத்துக் கொடியேந்தி நிற்பார்களே, அவர்களையெல்லாம் துதிக்கையால் தூக்கியெடுத்து, தரையில் அறைந்து, கொன்றுவிட்டு கம்பீரமாகப் பிளிறுமாம் !

பின்னர், கூளப்பநாயக்கனின் வெண்கொற்றக் குடையைப் பற்றிப் பாடுகின்றார். அந்தக் குடை எப்படி இருக்கிறது ?—ஆகாயத்திலுள்ள சந்திரனை அழகிலும், வட்ட வடிவிலும் வெல்லுவதற்கென்றே பூமியிலே முளைத்தெழுந்தது போல குளிர்ந்த நிழலைத் தருகின்றதாம் !

பிறகு கூளப்பநாயக்கனின் கோட்டை முரசை முழங்க வைக்கிருர் கவிராயர். கூளப்பனின் முரசானது குமுறி வீசுகின்ற அலைகள் ஒன்ருேடொன்று மோதுகின்ற ஆழ்கடலின் பேரொலியைப் போலவும், மழைக் காலத்து மேகங்கள் இடியிடிப்பது போலவும் முழங்குகிறதாம். முரசத்திற்கு மணிமாலைகள் சூட்டப்பட்டிருக்கிறதாம். அதன் பயங்கர மான ஒலியானது, எதிரிகளின் காதுகளைக் குடைந்து செல்லும் வலிமை யுடையதுஎன்றும், அந்த ஒலியைக்கேட்டவுடனேயே நாயக்கனின் எதிரி கள் நடுங்குகின்றனர் என்றும் நயம்படக் கூறுகின்ற சுப்ரதீபர் அந்த முர சொலியைப் பாட்டின் சந்த ஒலியிலேயும் கேட்க வைக்கிருர்.

கூளப்பநாயக்கனின் ஆணையைப்பற்றிக் குறிப்பிடுகிருர். அவனு டைய சொல்லிலே கடுமை தொனிக்குமாளுல் அந்தச் சொல்லம்பைக் கண்டு எதிரிகள் அஞ்சுவார்களாம். அவனுடைய அரசை எதிர்த்துக் கலகம் செய்து வீம்பு பேசும் எதிரிகளின் மார்பிலே ஊடுருவிச் செல்லுமாம் அவனுடைய அம்பு போன்ற ஆணை!

தேனளந்த கானவர்க்குத் தேவர் அமுதளக்க 10
வானளந்து நிற்கும் வராக கிரிவேந்தன்
கன்னி யமுனையொடு கங்கை கலந்ததுபோற் 11
பொன்னி கலந்த புனற்குடப மாநதியான்
வண்ணக் குவிமுலையார் மஞ்சள்நீர் ஆருேடிப் 12
பண்ணைப் பயிர்வளர்க்கும் பாண்டி வளநாடன்
வட்ட மதிக்களங்கம் மாறத் தடவுதல்போல் 13
இட்டக் கொடியாடும் இயல்சூழ் நவபுரியான்
கொத்தார் கருங்குழலார் குத்துமுலை பாயமணி 14
முத்தாரம் பின்னலிடு முல்லைத் தொடைமார்பன்
ஓகைதந்து போர்க்களத்தில் உட்புகுந்து தாள்முடுகி 15
வாகைதந்து மீண்டுவரும் வாகைநட னப்பரியான்
சண்டையிற்பொ ருங்கொடித்த லந்தகர்த்து வஞ்சரைக்கைக் 16
கொண்டெடுத் தறைந்துரப்பு கும்பஉக்ர குஞ்சரத்தான்
விண்பிறையை வெல்லநில மீதின் முளைத்தெழுந்த 17
தண்பிறைபோல் ஓங்குந் தவளக் குடையுடையான்
உடைதிரைகள் குமுறுகடல் ஒலியுமுகில் இடியுமென 18
அடையலர்கள் செவிகுடைய அதிருமொலி மணிமுரசான்

அரும்பதவுரை: கன்னி (11) பொன்னி-காவேரி குடபாநதி-குடவனூறு; (13) நவபுரியான்-நவபுரியைத் நல்நகராகக் கொண்ட கூளப்பன்: (14) கொத்து-மலர்க்கொத்து, முல்லைத் தொடை-முல்லை மலர்மாலை; (15) ஓகை-மகிழ்ச்சி, தாள் முடுகி-விரைந்து அடியெடுத்து வைத்து; (16) கும்பம்-யானையின் மத்தகம். (17) தவளக்குடை-வெண்கொற்றக் குடை. (18) அடையலர்கள்-பகைவர்கள்.

அஞ்சினுர் வாக்கிலிருந் தம்புபோ லோடிமீண்டு 19
மிஞ்சினுர் மார்புருவி வீம்படக்கும் ஆணையினுன்

இதுவரை கூளப்ப நாயக்கனின் தலைசிறந்த பத்துவித அங்கங்களைப் பற்றிப் புகழ்ந்து தசாங்கம் பாடிய கவிராயர், நாயக்கனின் இதரச் சிறப்புகளையும் புகழ்ந்து பாடத்துவங்குகிருர். அவன் முடிசூட்டிக் கொண்ட பெருமையை எடுத்துக்காட்டுகையில், சுற்றுவட்டாரம் முழுவதையும் காத்து ரட்சிக்கும் கருணுகரனென்றும், அழகானவன் என்றும், குமார வர்க்கத்தின் பரம்பரை வாரிசாகப் பட்டம் சூட்டிக்கொண்டவன் என்றும், மிகவும் அருளுடைய மதுரையில் கோயில் கொண்டிருக்கும் மீனுட்சி சொக்கநாதர் அருள் வலிமையால் திக்கு விஜயம் செலுத்துகின்ற செங்கோலையுடையவன் என்றும், கோபத்தோடு அவன் பல்லக்கில் ஏறுவதற்கு முன்பாக அவனுடைய போர் வீரர்கள் போரில் வெற்றி பெற்று, எதிரிகளான மன்னர்களை பின்னடத்திக் கொண்டுவரும் சேனையை உடையவன் என்றும், அவனுடைய பாளையத்துக்கோட்டை மண் கோட்டையாகஇருந்தபோதிலும், அவன் கோபத்தால் கண்சிவந்து நிற்கும் நிலையைக் கண்டு பயந்து நடுங்கும் அவனுடைய எதிரிகள், அந்த மண்கோட்டையை செம்பொற்கோட்டை என்று புகழும் கோட்டையையுடையவன் என்றும், கூளப்பநாயக்கனைப் பெற்றெடுத்து கண்மணிபோல் வளர்த்த சிந்தமகூளேந்திரன் உலகத்தையே வென்று ஆட்சி செலுத்தக் கூடியவன் என்றும், அவனுடைய மகனுன கூளப்ப நாயக்கன் ஆணை செலுத்துவதில் துரையைப் போலவும், வீரத்தில் சிங்கத்தைப்போலவும் விளங்குகிருன் என்றும், அவன் பிறந்த பரம்பரையான வல்லக்காவார் குலத்தை உலகம்புகழும் பெருமைக்கு நிலைக்களனுக கூளப்பநாயக்கன் விளங்குகிருன் என்றும், கூளப்பநாயக்கனின் பிறப்பு சிறப்புகளைப் பற்றி பின்வருமாறு கவிஞர் பாடுகிருர்.

வட்டநிலம் புரக்கும் மாரன் குமாரவர்க்கப் 20
பட்டமெனக் கட்டிவைத்த பட்டார்பி டேகபரன்
மிக்கஅருட் சொக்கேசர் மீனுட்சி தம்மருளால் 21
திக்கு விசயஞ் செலுத்துகின்ற செங்கோலன்
சீற்றமுட னேதான் சிவிகைதனி லேறுமுன்னே 22
வேற்றரசர் பின்னிடப்போர் வென்றுவரும் சேனையினுன்
கற்கோட்டை யென்றவர்மேற் கண்சிவந்து கண்டவர்செம் 23
பொற்கோட்டை யென்னப் புகழும்நிலைக் கோட்டையினுன்
சிந்தமகூ ளேந்த்ர செகராசன் கண்மணிபோல் 24
வந்ததுரை சிங்கமெங்கள் மால்பெரிய நாகேந்த்ரன்
வாணிபுகழ் வல்லரக்கர் வார்குலத்தைக் கொண்டுவந்த 25
தோணியெனும் பெஞ்சைத் துரைபெரிய நாகேந்த்ரன்

அரும்பதவுரை : கண்ணி(20) புரக்கும்–ஆட்சி செய்யும்.

பின்னர் கவிராயர் கூளப்பநாயக்கனுடைய அரண்மனையின் ஆசார வாசல் அருகே வருகிறார். பொன்னாலான வாசற்கதவிலே, வைரங்கள் பதித்த சித்திர நகாசு வேலைகள் காணப்படுகின்றதாம். அந்தக் கதவுகள் முன்னும் பின்னும் திறக்கப்படும்போது பொன் தூசியும், வைரங்களின் ஒளிக் கதிர்களும் வீசுகிறதாம். கதவுகளைத் திறக்கும்போதும் மூடும்போதும் முத்துகளால் ஆன வாயில் தோரணங்கள் பளபள வென்று ஜொலித்துக்கொண்டே ஆடுகின்றனவாம். அத்தகைய அழகான வாசலையுடையவன் என்பதை அழகான நடையோட்டமும் மொழி யோட்டமும் கொண்ட கவிதை நயத்தோடு பாடுகிறார்.

பின்னர் அரண்மனை வாயிலில் நின்றிருக்கும் ஒட்டகத்தின் மீது முழங்கும் டமாரத்தின் ஒலியையும், பேரிகை, தம்பட்டம் முதலியவைகளையும் சித்தரிக்கிறார் கவிராயர். அந்த வாயில் வழியாக சோனு தேசத்தாரும், சிங்களத்தாரும், கப்பங்கட்ட திறைப் பணத்தோடு வருவதையும், கருமையான மேகங்களைப் போன்ற யானைக்குட்டிகள் வருவதையும் வர்ணிக்கின்றார். மேலும் அந்த அரண்மனை வாசலில் பிச்சையெடுக்கும் யாசகர்களுக்கு ஆடைகளும், அன்னமும், பொன்னும் வழங்கப்படுகிறதாம். மனுநீதி முறை தவறாத மன்னனின் அலங்காரமான அந்த வாசலில், சேல் மீன்களைப்போன்ற கூரிய கண்களையுடைய பெண்கள் நடனமாடவும், மன்மதனின் வில்லான கரும்புகள் வைக்கப்பட்டிருப்பதையும் காணும்போது லட்சுமீகரமான அந்த வாசலில் லட்சுமி தேவியே நடனமாடுவதைப்போல் விளங்குகிறதாம்.

வாசல் அழகைப் புகழ்ந்த கவிஞர், கூளப்பநாயக்கனின் வாய்மையையும் வள்ளல் தன்மையையும் தெளிவாகவும் எளிய தமிழிலும் எழிலோடு கூறுகின்றார்.

உலகத்தின் சிறந்த நூட்களாகக்கருதப்படும்வேதங்கள் பொய்யாகப் போனாலும், கடல்கள் வற்றி வரண்டுபோனாலும், சந்திர சூரியர்கள் இல்லாமற்போனாலும் போகலாமாம் ஆனால் கூளப்ப நாயக்கன், ஒருவருக்கு வாக்களித்த வார்த்தையை நிறைவேற்றத் தவறமாட்டான். அவன் சொன்ன சொல் தவறாத உத்தம குணமுடையவன் என்று அவனுடைய வாக்குத் தவறாத தன்மையை விளக்கிக் கூறிவிட்டு, அவனுடைய வள்ளல் தன்மையையும் மிகவும் அழகாகக் கூறுகிறார்.

வானத்திலே வாழுகின்ற தேவர்களுக்கு அவர்கள் நினைத்ததை நினைத்தவுடனேயே கொடுக்கவல்லது கற்பகவிருட்சமும் காமதேனுவும், இதேபோல தன்னிடமுள்ள மழை நீர் முழுவதையும் பொழிந்துவிடும் தன்மையுடையது கார்மேகம். இந்த மூன்றுக்குமே கொடை செய்வது எப்படி என்பதைப்பயிற்றுவிக்குமாம், கொடை கொடுத்துக் கொடுத்துச் சிவந்திருக்கும் கூளப்ப நாயக்கனின் கரங்கள்!

அவனுடைய பரம்பரையைப் பற்றிப் பாடும்போது அவன் மன்மதனைப் போன்றவன் என்றும், இந்திரனைப்போன்ற ஆட்சித் திறமையுடைய திருமலை நாயக்கனுக்கு மைத்துனன் முறை என்றும் கூறுகிறார் கவிஞர்.

பொன்னிலங்க வச்ரப் பொடியிலங்கப் பொற்கதவு 26
முன்னிலங்கப் பின்னிலிங்க முந்திலங்கு வாசலினுன்

ஓட்டகட மானத் தொலிமுழங்கப் பேரிகைதம் 27
பட்ட முழங்கப் பரிமுழங்கும் வாசலினுன்

கட்டிவருஞ் சிங்களத்தார் கப்பம்வரக் காரானைக் 28
குட்டிவரச் சீனர்திறை கொண்டுவரும் வாசலினுன்

ஆடை வழங்க அனம்வழங்க யாசகர்க்கு 29
மாடை வழங்க மனுவழங்கும் வாசலினுன்

சேலாடுங் கூர்விழியார் சென்ருடக் கைவசந்தன் 30
கோலாடப் பங்கயப்பெண் கூத்தாடும் வாசலினுன்

மாமறைநூல் பொய்த்தாலும் வாரிதிநீர் பொய்த்தாலும் 31
சோமரவி பொய்த்தாலும் சொன்னமொழி பொய்யாதான்

அண்டர் தருவுக்கு மருங்காம தேனுவுக்கும் 32
கொண்டல் தனக்கும் கொடைபயிற்று செங்கரத்தான்

சித்தசரா சேந்த்ரன் திருமலை கண்டமன்னன் 33
மைத்துனவே ளாக வரும்பெரிய நாகேந்த்ரன்

இவ்வளவு பெருமைகளையும் புகழையும் கவிதை நயத்தோடும் செந்தமிழ்ச் சொல்லழகோடும் பாடிய கவிஞர், கூளப்பநாயக்கன் கொலு வீற்றிருக்க தயாராவதையும், தர்பார் நடத்துவதையும் கூறத்தொடங்குகிருர். பெருவாழ்வும், நீதிமுறை தவருத நெறியும் கொண்டு ஆட்சி செய்கின்ற கூளப்ப நாயக்கன் வைகை நதியில் குளித்துவிட்டு வருகிருன். அதுவும் எப்படிப்பட்ட வைகை? ஒருகாலத்தில் திருஞானசம்பந்தர் தான் இயற்றிய தமிழ் வேதமாகிய தேவாரப்பதிகத்தை எந்தப்பெருநதியில் விட்டாரோ, அதனுல் எந்த நதி பெருமை பெற்றுவிட்டதோ, அந்த வைகை நதியாம். அந்தப்புண்ணிய நதியில் கூளப்பன் குளித்துவிட்டு நாராயணப் பெருமானை வணங்கி துதித்துவிட்டு, கோயில் பிரசாத தீர்த்தத்தைப் பருகி, மதிப்பிற்கும், மரியாதைக்கும் உரியவர்களான அரசாங்கக் காரியக்காரர்களோடும், உறவினர்களோடும் அறுசுவையும் பொருந்திய உணவு வகைகளைப் புசித்துவிட்டு, சந்தனம், கஸ்தூரி, ஜவ்வாது முதலிய வாசனை கலவைப் பொருள்களோடு பலவித நறுமணம் வீசும் மலர்களின் வாசனை சாரத்தையும் பூசி, அழகான முத்துக்கள் பதித்த நீண்ட அங்கியும் தலைப்பாகையும் கட்டிக்கொள்கிருன். அதன் பிறகு மாணிக்கம், பச்சை, வைரம், வைடூரியம் முதலிய நவரத்தினங்களை பத்தரைமாற்று தங்கத்தில் பதித்த ஆபரணங்களையும் அணிந்து கொள்கிருன். உடனே, சங்கீதம் பாட, சகல ஜனங்களும் விருதுகள் சொல்லிப் புகழ்ந்து வாழ்த்த, சிங்கத்தின் உருவத்தில் அமைந்திருந்த ஆட்சிபீடத்தில், தேவேந்திரனைப்போல வீற்றிருந்தான் என்று பாடி, கூளப்பநாயக்கனின் தர்பார் அழகை வர்ணிக்கிருர் கவிராயர்.

நீளும் பெருவாழ்வும் நீதிகளும் மேலோங்க 34
ஆளும் புவிபுரக்கு மந்நாளி லேயொருநாள்
ஆரணஞ்சேர் வையை அருந்தீர்த்தந் தானாடி 35
நாரணனைத் தாள்போற்றி நாமதீர்த் தம்பருகி
மிக்ககன காரியப்போர் வித்துவச னங்கள்துரை 36
மக்களுடன் இன்பரச வர்க்க அமுதருந்தி
சந்தனங் கஸ்தூரி சவ்வாது கதம்பம்பூசிச் 37
சுந்தரஞ்சேர் முத்துத் துராயிலங்கப் பாகைகட்டி
மாணிக்கம் பச்சை வயிர வயிடூரியத்தால் 38
ஆணிப்பொன் னாற்சமைத்த ஆபரண முந்தரித்து
சங்கீதம் பாடச் சகலசன மும்போற்றச் 39
சிங்கா சனக்கொலுவில் தேவேந்த்ரன் போலிருந்தான்

மன்னன் கூளப்ப நாயக்கன் தர்பார் மண்டபத்திற்கு வந்து கொலுவிற்றிருக்கிறான். வேட்டையாடுதல் போன்ற வீர விளையாட்டுகளில் சிந்தனை செலுத்தும் பழக்கமுடைய கூளப்பன் கட்டியக்காரர்களை அழைத்து பட்டணத்திலுள்ள சேனாதிபதிகளுக்கும், வேட்டையாடுவதில் புகழ் பெற்ற வீரர்களுக்கும் மன்னர் வேட்டையாடச் செல்ல விரும்புவதாக கூறி அனுப்புகிறான். கட்டியக்காரரை அனுப்பிவிட்டு, வேந்தன் கூளப்பன் அரண்மனைக்குள்ளே சென்று வேட்டைக்குச்செல்வதற்கான ஆடை ஆபரணங்கள், ஆயுதங்கள் முதலியவைகளைத் தரித்துக்கொள்ளும் வக்கணையைக் கவனியுங்கள். தங்கத் தகட்டைப்போன்ற சரிகை நிஜாரை இடுப்பிலே அணிந்து, இறுக்கிக் கட்டிக்கொண்டு, வைரக்கற்களை இழைத்து அழகாகச் செய்திருந்த கவசத்தை அணிந்து கொண்டு, அம்புகள் நிறைந்த அம்புருத்தூணியைத் தோளிலே மாட்டிக்கொள்கிறான். உடைவாள் வைத்திருக்கும் தோல்பட்டையும் இடுப்பில் வரிந்து கட்டப் பட்டுவிட்டது.

பளபளவென்று விதவிதமான வர்ணங்களை அள்ளிவீசும் மோதிரங்களை தாமரை போன்ற விரல்களிலே அணிந்து, தங்கத்தை இழைத்துச் சித்திர வேலைப்பாடுகள் செய்த மிதியடிகளைக் கால்களில் அணிந்துகொள்கிறான். பிறகு, குத்திட்டியை உறையில் சொருகிக்கொள்கிறான். வில்லை எடுத்து தோளில் மாட்டிக்கொண்டானாம். அந்த குத்திட்டிதான் எப்படிப் பட்டது? எடுத்து குத்துவதற்கு லாவகமாக அணிந்திருந்த அந்த குத்திட்டியானது உறையைவிட்டு வெளியே வந்தால், எதிரிகளின் மார்பிலே ஊடுருவிப்பாய்ந்து, அவர்கள் மார்பையே உறையாகக் கொண்டுவிடும் புகழுடையதாம்!

அரும்பதவுரை: கண்ணி (29) அனம்-அன்னம். மாடை-பொன். (30) வசந்தன்-மன்மதன். பங்கயப்பெண்-லட்சுமி. (31) வாரிதி-கடல் சோமரவி-சந்திர சூரியர். (32) கொண்டல்-மேகம்; (33) சித்தசன்-மன்மதன். (34) புவிபுரக்கும்-உலகை ஆளும். (35) ஆரணம்-வேதம் நாமதீர்த்தம்-பிரசாதம், தீர்த்தம். (37) துராய்-ஒருவகைத் தலையணி.

இத்தகைய ஆயுதங்களையும், ஆடை ஆபரணங்களையும் அணிந்த கூளப்ப நாயக்கன் பன்றி, புலி, யானை முதலியவைகளை அடக்குவதற்காக வேட்டைக்குப் புறப்படுகிறுனும். அந்த புறப்பாடு எப்படி இருக்கிறது என்பதை, கவிஞர் தமது கவிதைத் திறமையோடு 'மலைக்குகையிலிருந்து கர்ச்சித்துவெளிக்கிளம்பும் சிங்கத்தைப் போல புறப்பட்டான்!' என்கிருர். அவனுடைய கூர்மையான நீண்ட வேலாயுதம் எந்நேரமும் பகைவர்களைக் கொன்று குவிப்பதையே தொழிலாகக் கொண்டதாம். அதனுல் பிணம் தின்னிக் கழுகுகள், கூளப்ப நாயக்கனின் வேலைச் சுற்றிக்கொண்டேயிருக்குமாம் இத்தகைய விரப்பிரதாபமுடைய கூளப்ப நாயக்கனை காளிதாசனை ஆதரித்த வள்ளலான வடநாட்டு போஜராஜனுக்கு ஒப்பானவன் என்றும் கூறுகிருர் கவிராயர்.

அந்தமணி மண்டபமாம் ஆஸ்தானந் தன்னிலையன் 40
சிந்தையுற்று வேட்டையின்மேற் சென்றுவர வேண்டுமென்று
கட்டியரை நோக்கிக் கனவேட்டைக் காரருக்கும் 41
பட்டணத்துச் சேஞ பதிகளுக்குஞ் சொல்லுமென்ருன்
அங்கிருந்து கோமான் அரண்மனையின் உட்புகுந்து 42
தங்கரேக் கென்னத் தயங்குகிசார் தொட்டிறுக்கி
துப்பட்டா கட்டிவச்ரச் சோடிட்டுத் தூணிகட்டி 43
ஒப்பிட்டார் கச்சை யுடைப்பட்டை யூடுகட்டி
வர்ண மணியாழி வனசமலர்க் கையிலிட்டுச் 44
சொர்ணமய மாய்ச்சமைத்த தோற்கவசங் காலிலிட்டு
வாய்ந்த வுறைவிட்டால் மருவலர்கள் மார்புறையாப் 45
பாய்ந்த சமுதாடு பாங்கணைத்து விற்பிடித்து
கேழல் புலியானைக் கெர்வங் களையடக்க 46
யாளி மலைமுழைவிட் டலறித் தெழுந்ததுபோல்
புள்ளிருந்த கூர்நெடுவேற் போசன் அரண்மனையின் 47
உள்ளிருந்து கோட்டை யொலிமுகத்து வாசல்வந்தான்

வேந்தன் வேட்டைக்குக்கிளம்பி கோட்டை வாயிலுக்கு வந்துவிட்டான். அதே சமயத்தில், அவன் ஏற்கனவே கட்டியக்காரர்களிடம் கட்டளையிட்டிருந்தபடி, அவனுடைய பரிவாரங்கள் கோட்டையின் முன்புற வாசலில் வேந்தனுடன் வேட்டைக்குச் செல்ல தயாராக வந்து நிற்கின்றனர்.

வேந்தன் வெளியே வந்தவுடனேயே சேவகர்கள், வட்டமான வெண்கொற்றக் குடையைப்பிடித்து நின்றனராம்.கொம்பு என்ற வாத்தியமும், பேரிகையும், வெற்றியைத் தரக்கூடிய முரசும் ஒலியை எழுப்பி, எல்லாமே விரத்தின் சின்னங்களாக முழங்கின. உடனே வேந்தன் கூளப்பனின் குதிரை கொண்டுவரப்பட்டது. அந்தக் குதிரை எப்படிப் பட்டது தெரியுமா? மிகவும் வேகமாக விசக்கூடியது காற்று என்று

தான் எல்லோருக்கும் தெரியும். ஆனால் கூளப்பனின் குதிரையின் வேகமோ காற்றின் வேகத்தையும்விட நான்கு பங்கு வேகமுடையதாம்! எனவே, காற்றினுடைய வேகமானது, அந்தக்குதிரையின் வேகத்தில் கால் பங்குதான் என்று சொல்லும்படியான வேகத்தில் செல்லக்கூடிய தாம். அத்தகைய குதிரையின் மீது ஏறிக்கொண்டானும் கூளப்பநாயக்கன்.

மன்னன் குதிரை மீது ஏறியவுடனேயே, அவனுடைய சுற்றத்தார்களும் அவரவருடைய குதிரை மீது ஏறிக்கொண்டனராம்.

அந்தச் சுற்றத்தார் எபபடிப்பட்டவர்கள்? அவர்கள் தத்தம் கரங்களிலே வெற்றியைத்தரக்கூடிய வாள்களைப் பிடித்திருக்கிறார்களாம். அந்த வாட்களெல்லாம் வடித்த எஃகிலே செய்யப்பட்டவையாம். அவர்கள் ஏறியிருந்த குதிரைகளோ கோபத்தையே சுபாவமாகக்கொண்ட குதிரைகளாம். மன்னனுக்கு உறவு என்று சொல்லிக்கொள்ளும் சுற்றத்தார்களும் துணைவிபோல சூழ்ந்து கொண்டு புறப்படுகின்றனர் என்று ஹாஸ்யமாகவே அவர்களைப் பற்றி குறிப்பிடுகின்றார் கவிராயர்.

சுற்றத்தார் மட்டுமா சென்றார்கள்? வேந்தன் கூளப்பநாயக்கனின் முக்கியமான வீரங்கொண்ட அதிகாரிகளும், வேந்தனின் பாராட்டுதல்களைப் பல சமயங்களில் பெற்ற பெருமையுடைய சேனைத் தளங்களின் தலைவர்களும், வேலைக்காரர்களும், மணியக்காரர்களும், கணக்குப்பிள்ளைகளும், வேந்தனின் பிரதாபத்தை உடுக்கை, பம்பை முதலியவைகளைக் கொண்டு பாடுகின்ற அழகான பாவாணர்களும், சேனைத்தலைவர்களும், குறி சொல்பவர்களும் பயமென்பதையே அறியாத ராணுவ வீரர்களும் ஆகிய எல்லோரும் கவசமும் கச்சையும் கட்டிக்கொண்டு ஆயுதமுங் கையுமாக வேந்தனைப் பின்தொடர்ந்து செல்கின்றனராம்.

கொற்றக் குடைபிடிக்கக் கொம்பூதப் பேரிகையும் 48
வெற்றிமுர சுங்தொனிக்க வீரசின்னங் தான்முழங்கக்
காலின் கடுமைதனைக் காற்கடுமை யாக்குமிதன் 49
காலின் கடுமையெனுங் கந்துகமேற் கொண்டருளி
வெற்றிவடி வாள்பிடித்து வெம்பரியின் மீதேறிச் 50
சுற்றமெனச் சுற்றுந் துரைமக்கள் சூழ்ந்துவர
வீரியப்ர தானிகளும் மெச்சுதள கர்த்தர்களுங் 51
காரியப் பேர்மணியக் காரர்கரு ணீகர்களும்
தாக்குதுடி யூழியபிர தாப வசீகரரும் 52
ஆக்க மிகுசேர்வை யானகுறிக் காரர்களும்

அரும்பதவுரை: கன்னி (43) சோடிட்டு-கவசம் தரித்து. தூணி-அம்பறாத்தூணி. உடைப்பட்டை-வாள் செருகும் உறை. (44) ஆழி-மோதிரம். (45) மருவலர்-பகைவர் சமுதாடு-ஒரு வகை ஆயுதம. (46) கேழல்-பன்றி. ஆளி-சிங்கம். முழை-பொந்து: ஆலித்து-கர்ஜித்து (49) காலின் கடுமை-காற்றின் வேகம. காலின் கடுமை (பிறிதொரு இடத்தில்)-கால்களின்வேகம். (50) வடி-வாள். (51) கருணீகா-கணக்கர் (52) சேர்வை-படைத்தலைவன்.

அச்சமில்லா ராணுவப்பே ரத்தனையுஞ் சோடுகட்டிக் 53
கச்சைகட்டி ஆயுதமுங் கையுமாய் முன்னடக்க

வேந்தனுடன் வேட்டையாடச் செல்லும்போது உடன் சென்றவர்களின் மனதில் எண்ணங்கள் எவ்வாறிருந்தன என்பதையும் குறிப்பிடுகிறார் கவிராயர். அவர்களில் சிலர் சிங்கத்தை வேட்டையாடிக் குத்திக் கொன்று அதற்குப் பரிசாக வேந்தன் கூளப்பநாயக்கனிடத்தில் தங்கப் பதக்கத்தைப் பரிசாகப் பெறவேண்டுமென்று நினைக்கிறார்களாம். இன்னும் சிலர் ஒரு பெரும் புலியைக் கண்ணால் கண்டால் போதும் என்றும் உடனே அதைத் தமது கையில் வைத்திருக்கும் கோலாலேயே குத்திக் கொன்று, அதற்காக வேந்தன் கூளப்பநாயக்கனிடத்தில் விரதண்டைகளைப் பரிசாக வாங்க வேண்டுமென்றும் நினைக்கிறார்களாம் இன்னும் சிலர் துஷ்டத்தனங்கள் செய்கின்ற புலியைத் துப்பாக்கியால் சுட்டு,அந்தக் கடுங்கோபமுடைய புலியின் தோலை கேடயத்தின் மீது ஒட்டுவதற்கு உரித்து வரவேண்டுமென்று நினைக்கிறார்களாம். இன்னும் சிலருக்கு கடவுள் பக்தி இருக்கிறதாம். வெண்மையான ரோமத்தையுடைய வாலைக்கொண்ட வலிவுள்ள கவுரிமானைக் கொன்று, அதன் வாலைத் துண்டித்து அதன் வெண்மையான கவுரி ரோமத்தைக் கொண்டு வீசுவதற்குக் கவுரிக் குஞ்சம் தயாரிக்கவேண்டும் என்று நினைக்கிறார்களாம் அந்தத் தெய்வபக்தி கொண்டவர்கள். இன்னும் சிலருக்குத் தங்கள் காதற் கிழத்திகளைப் பற்றியும், அருமைப் பிள்ளைகளைப் பற்றியும் ஞாபகம் உண்டாகிறதாம். அவர்கள் என்ன நினைக்கிறார்கள் தெரியுமா ? அவர்களுடைய காதல் கிழத்தியருக்கும், பிள்ளைகளுக்கும் தாம் வேட்டையாடிக் கொன்ற புலியின் நகங்களைத் தங்கச் சரட்டிலே கோத்துப் போட்டு, அழகு பார்க்க வேண்டுமென்ற ஆசை ஏற்படுகிறதாம். தமிழகத்திலே, புலிப்பல்லையும், புலி நகத்தையும் கோத்து,ஆசைக்கும் அன்புக்கும் உரியவர்களுக்கு அணிவிப்பது வழக்கம். இன்றுகூட சிலர் புலிநகத்தைப் பொற்பூண் செய்து, பொற்சரட்டிலே கோத்து அணிவதைக் காணலாம். அது போலவே, சில வேட்டைக்காரர்கள் புலி வேட்டையாட விரும்பினார்களாம். இன்னும் சிலருடைய எண்ணத்தையும், நினைப்பையும் கவிஞர் கூறும்போது நமக்கே சிரிப்பு வருகிறது—அது என்னவென்றால், அவர்களில் சிலர் இரண்டாந்தார விவாகம் செய்துகொண்டவர்களாம். அந்த இளைய மனைவியருக்கு தலைமுடி எலிவாலைப் போலச் சிறியதாக இருக்கிறதாம். எனவே, அந்தக் கூந்தலைச் சிவி முடித்துச் சிங்காரம் செய்துகொள்ளச் சவுரிகள் தேவைப்படுகிறதாம். அதற்காக கருங்கவரிமானை வேட்டையாட நினைக்கிறார்களாம். இப்படியாக ஒவ்வொருவரும் தாம் விரும்பியவற்றையெல்லாம் எண்ணிக்கொண்டு வேட்டைக்குச் சென்றார்களாம். இதையெல்லாம் கவிராயர் எப்படிக் கண்ணிகளில் பொதித்திருக்கிறார் பாருங்கள்.

சிங்கத்தை யானாலுஞ் சென்றுகுத்தி யெங்கோமான் 54
தங்கப் பதக்கந் தனைவாங்க வேண்டுமென்றும்

கண்ட பெரும்புலியைக் கைகோலாற் கொன்றுகுத்தி 55
தண்டை மிகுவிருது தான்வாங்க வேண்டுமென்றும்
துட்டஞ் செயும்புலியைச் சுட்டந்த வெம்புலித்தோல் 56
ஒட்டும் பரிசைக் குரித்துவர வேண்டுமென்றும்
வெண்கவரி யெங்கள்திம்ம ராயருக்கு வீசுவெள்ளை 57
வண்கவரி மானைவெட்டி வால்துணிக்க வேண்டுமென்றும்
வைத்திடும்வைப் பாட்டிபிள்ளை மார்புக் குடைமைபண்ண 58
குத்திப் புலிநகங்கள் கொண்டுவர வேண்டுமென்றும்
கொண்ட இளைய குடியாள் முடிமயிர்க்கு 59
மண்டு கருங்கவரி வால்துணிக்க வேண்டுமென்றும்
வாய்த்த கரடி மணியீரல் பிய்த்தெடுத்துக் 60
கூத்திக் கிடுமருந்து கூட்டியிட வேண்டுமென்றும்
ஒன்றொன் றொருவர் மனத்துற்றுச் சிலரேக 61
வென்றி வெடிக்காரர் வேற்காரர் முன்னடக்க

இவ்விதமாகப் படைகள் செல்லும்போது குந்தங்கள் கொண்டு செல்கின்றனராம். அந்தக்குந்தங்களைக் காணும்போது வானத்திலிருந்து விழுதுகள் தரையிலே பாய்வதைப்போல இருந்ததாம். அந்தப்படையின் முன்பாக ஒட்டகங்களும்சென்றனவாம். அந்த ஒட்டகங்களின்முதுகிலே மேள வாத்தியங்கள் கட்டப்பட்டு, முழக்கப்படுகின்றதாம். அந்தவாத்திய முழக்கத்தை ரசித்துக்கொண்டே, ஒட்டகங்கள் கர்வநடை நடந்து சென்றனவாம். மேலும் அப்படிச் செல்லும் அந்த ஒட்டகங்கள் தங்களுடைய முதுகின் மேல் முழங்குகின்ற மேளத்தைப் போல, வானத்து மேகங்களின் இடி முழக்கம் எங்காவது கேட்கிறதா என்று எண்ணிக்கொண்டே கர்வமாக, ஆகாயத்தை அண்ணாந்து பார்த்துக்கொண்டே சென்றனவாம். அது மட்டுமா, காட்டிலே படைகள் நுழைந்தவுடன் காட்டிலே வாழும் வேடர்களும் நாட்டுக்காவலனின் வேட்டைப் படைகளுடன் சேர்ந்துக்கொள்கின்றனராம். அந்த வேடர்களோ உடுக்கை பம்பை முதலிய தோல் வாத்தியங்களை முழக்கிக்கொண்டு யானைக் கொம்புகளையும், வேட்டைக்குரிய வலைகளையும், கத்திகளையும் சுமந்து வருகின்றனர். அந்த வேடர்களுடன் வேட்டை நாய்களும் செல்கின்றனவாம். காட்டுப்புலியின் கழுத்தைக் கவ்வும்,புலிபோன்ற கனமான முகமும் தாடைகளும் கொண்ட அந்த வேட்டைநாய்களை அழைத்துவந்த வேடர்களின் உருவ அமைப்பு எப்படி இருக்கிறது தெரியுமா ? சால்பானையைக் கவிழ்த்ததுபோன்ற வயிறும்,மூன்று முழ நீளமுள்ள தாடிகளும், எண்ணெய் பூசி அறியாத செம்பட்டைத் தலை

அரும்பதவுரை: கண்ணி (55) தண்டை-காலணி. (59) இளைய குடியாள-இளைய மனைவி. மண்டு-மயிர் அடர்ந்த. (61) வெடிக்காரர்-துப்பாக்கி சுடுவோர்.

மயிருடன் கூடிய அந்த வேடர்கள், நீலநிற நிஜாரும் செருப்புகளும் அணிந்திருந்தனராம். அந்த வேடர்கள் எல்லோரும் வேட்டைக்குப் புறப்பட்டு, தங்கள் காட்டிற்கு வந்துள்ள வேந்தன் கூளப்பநாயக்கனைக் கண்டு கை குவித்து வணங்கி, கூடவே கூட்டத்துடன் செல்கின்றன ராம். அந்தப் படைகளின் முன்னே வேந்தனின் வெள்ளைக் கருடக் கொடிகள் பறந்து கொண்டிருக்கின்றனவாம். அந்தக் கொடிகளைப் பார்க் கும்போது, ஒருகாலத்தில் அனுமன் என்ற வானரவீரன், சூரியனைப்பழம் என்று கருதி, பாய்ந்து பறந்து, கதிரவனைப் பிடித்ததாக புராணக் கதை யில் கூறப்படும் அனுமானுடைய புகழைக் கேட்டு, மனந்தாளாத கருட னும் சூரியனைக் கவ்விப் பிடிக்கப் பறப்பது போலிருந்தது என்று கற்ப னைத் திறத்தோடு சொற்சிலம்பமாடிப் பாடுகின்றார்.

இவ்விதமாக வேட்டைக்குச் செல்லும் படைகளின் தம்பட்டம், கொம்பு தாரை முதலியவைகளின் முழக்கத்தைக் கேட்டு அண்டை நாட்டு அரசர்களும், வடநாட்டு அரசர்களும் கூளப்பநாயக்கன் தம்மீது தான் படைபெடுத்து வருகிறானேவென்று பயந்து பதுங்கிக் கொள் கின்றார்களாம்! தம்பட்ட ஓசை கேட்டு மகதங் கலங்க, கொம்பு ஊதும் சத்தத்தைக் கேட்டு மலையாளத்தான் மலையேறி மறைந்து கொண்டான் என்று வேடிக்கையாகக் கூறுகின்றார், கவிராயர்.

தானை பிடித்த சவளப் பெருக்கமுயர் 62
வானம் விழுதுவிட்ட வண்ணமாய் முன்னடக்க

கொண்டேகுந் தன்மேளக் கொள்கைபோற் பேசுமுகில் 63
உண்டோ விலையோவென்று ஒட்டகம் அண்ணுந்துவர

கொட்டுந் துடியும் குறித்தகரிக் கொம்புகளும் 64
கட்டும் பெருவலையுங் கைவேட்டைக் கத்திகளும்

காட்டுப் புலிக்கழுதைக் கவ்வும் புலிபோலக் 65
கூட்டமிட்ட ஞாளிகளுங் குத்தீட்டி யுங்கவணும்

சால்வபிறும் மூன்றுமுழத் தாடிகளுஞ் செந்தலையுங் 66
காலிலிடு தோலடியுங் காங்கிட்ட கச்சையுமாய்

கானவர்கள் வந்துகண்டு கைகுவித்து முன்னோடச் 67
சேனைநடு வெள்ளைச் செய்யா லிணைத்துவர

போயனுமன் பாய்ந்த புகழ்பொரு மற்கதிரைப் 68
பாயத் திரிவதுபோற் பைங்கருட்ட டாலேக

சந்த்ரோ தயம்போல் தயங்குஞ் சுருட்டிவரச் 69
செந்தூளி கண்டுவட சீனங் குடிவாங்க

தம்பட்ட வோசை தனக்குமக தங்கலங்கக் 70
கொம்புத் தொனிகேட்டுக் கொச்சி மலையேற

இத்தகைய வெற்றிப் பிரதாபமுடைய வீரமும், மங்களமும் பொருந்திய கூளப்பநாயக்கன், வேட்டைக்குப்போகிறவழியில் சகுனங்களைக்கூட 'நல்லதாகெட்டதா' என்று ஆராய்ந்து செல்லுகின்றார்களாம் அவனது பரிவாரத்தினர். 'நல்லவன் எங்கு சென்றாலும் நன்மையே விளையும்' என்பதைப் போல நல்ல சகுனம்தான் ஏற்படுகின்றதாம். அதாவது சிவப்பு நிறமுடைய, செம்போத்து என்னும் பறவையொன்று தனது ஜோடியான பெண்பறவையிருக்கும் பூமரத்திற்கு இடமிருந்து வலமாகப் பறந்து சென்று கூடிக் கலந்து மருவியதாம். மருவியதோடு நின்றுவிடாமல் ஆனந்த ஆரவாரம் செய்ததாம். இத்தகைய இயற்கை நிகழ்ச்சியில் தற்செயலாக ஏற்பட்ட ஒரு நிகழ்ச்சியை, ஆண்—பெண் உறவு நிலையை விளக்கும் தமது காதல் பிரபந்தத்திற்கு முத்தாய்ப்பு வைத்ததைப் போல, ஒரு சுபசூசக சகுனமாகக் கவிஞர் கூறுகின்றார். முயல், எருமை, செம்போத்து முதலிய பிராணிகள் இடமிருந்து வலம் சென்றால் வழிப்பயணம் செய்வது நல்லது என்ற சகுன சாஸ்திரத்தைக்கூட கவிஞர் அறிந்திருக்கிறார்!

இத்தகைய மங்களகரமான சகுன நிகழ்ச்சியை மன்னனும் தன் கண்ணாரக் கண்டு புன்னகை பூத்தானும். அந்த நிகழ்ச்சியை மன்னன் மட்டும் பார்க்கவில்லையாம். சகுன உண்மைகளைத் தெளிவாக உணர்ந்து விளக்கமாகச் சொல்லக்கூடிய ஒருவன், மன்னனிடம் ஓடி வந்து, ராஜசகுனம் என்றும், செம்போத்துப் பறவை வலது பக்கமாகச் சென்ற நிகழ்ச்சியினால் அன்றைய வேட்டை மிகவும் சிறப்புடைய வேட்டையாக இருக்கும் என்றும், அதுவும் அந்த செம்போத்துப்பறவை ஆனந்தமாக குரலெழுப்பிக் கூடியதால், மன்னனுக்கு வசமாகக் கூடிய பெண்ணொருத்தி கிடைப்பாள் என்றும், அதனால் திருமணம் நடக்கும் என்றும் முன்னதாக அறிவிக்கிறானும். அந்த விவரங்களைப் பின்வரும் பாடல்கள் தெரிவிக்கின்றன.

மங்கலஞ் சேர்நகர்:வாழ்பெரிய நாகேந்த்ரன் 71
எங்கள்பிரான் வேட்டைக் கெழுந்தருளும் அவ்வழியில்
போத்தொன் றிடத்திருந்து போய்வலத்தோர் பூமரத்தில் 72
வாய்த்தபே டொன்றை மருவிக் குரலெழுப்ப
மண்டலிகர் கண்டனெனும் மால்பெரிய நாயகவுத் 73
தண்டனது கண்டுநகை தந்து மனமகிழ்ந்து
ராச சகுனமென்ன ராசேந்த்ரன் முன்னோடி 74
யோசனையி னாற்சகுன வுண்மையறிந் தானொருவன்

அரும்பதவுரை: கண்ணி (62) தானை—சேனை. (65) ஞாளி—வேட்டை நாய். (66) தோலடி—செருப்பு (67) கானவர்—வேடர். செயடால்—வெற்றிக்கொடி (73) கண்டன்—தலைவன். (74) குக்கில்—செம்போத்து என அழைக்கப்படும் பறவை.

வந்தெதிரே போத்து வலம்பாயக் கண்டதனால் 75
முந்தவிட வேட்டை முழுவேட்டை யாய்கிடக்கும்
குக்கில்வனப் பெட்டைக் குரலெழுப்பிக் கூடியதால் 76
கைக்குள் வசமாகஇன்றோர் கன்னிமணம் கூடுமென்றான்

நல்ல சகுனம் என்று எல்லோரும் அறிந்தபிறகு, வேந்தனும் வேட்டைக்காரர்களும் பன்றி மலைச்சாரலையொட்டிய காட்டுக்குச் செல்லுகின்றனர். அந்தக் காடு ஒரே இருட்டாக இருக்கிறது. காரணம் என்னவென்றால் காட்டில் அடர்த்தியாக இருந்த மரங்களின் கிளைகளும் இலைகளும் பின்னிக்கொண்டு கதிரவனின் வெப்பமும் வெளிச்சமும் புகுந்துவிடாமல் தடுக்கிறதாம். அந்த இடத்தை நெருங்கியவுடன் கூளப்பன் குதிரையை விட்டுக் கீழே இறங்கி நான்கு பக்கங்களிலும் வலைகளைக் கட்டச் சொல்லுகிறான். வேலியடைத்த நிலங்களில் துப்பாக்கி வீரர்களை நிறுத்துகிறான். முரசுகளை முழங்கச் செய்கிறான். அந்த முரசுகள் மேகங்களைப்போல முழங்கினவாம். உடனே வேல், வில், ஈட்டி முதலியவற்றைத் தாங்கிய ஆயுத வீரர்கள் காட்டைக் கலைக்கின்றனர்.

பிறகு வேட்டையாடும் காட்சிகள் விளக்கப்படுகின்றன. ஓவியத்தைப்போல, வார்த்தை ஜாலங்களோடு அந்த நிகழ்ச்சியை வர்ணிக்கிறார் என்றே கூறவேண்டும். வேடர்கள் முழக்கிய தப்பட்டை தாரை, முரசு இவைகளின் ஒலியைக்கேட்ட பன்றிகள், முயல்கள், கரடிகள் முதலிய மிருகங்கள் புலியின் மீதும், மான் மீதும், காட்டெருமை மீதும் முட்டி மோதிக்கொண்டு, சிதறி ஓடுகின்றன. உடனே, அவைகளைக்குறிவைத்து அம்பை எய்வாரும், வேல் எறிவாரும் வேட்டையாடுகின்றனர். அவர்கள் கட்டியிருந்த ‘சுட்டாப்பு வலை’களில் சிக்கி ஓடுவதற்கு முடியாமல் இடறிவிழுந்த காட்டெருமையை மறைவிலிருந்த வீரர்கள்இழுத்துப்பிடித்துக் குத்திக்கொல்கின்றனர். பன்றி வேட்டையாடுவது என்பதும், புலி வேட்டையாடுவதும் மிகவும் பயங்கரமான வேட்டைகளாகும். துப்பாக்கியால் சுட்டால், சுட்ட குண்டை உடலில் தாங்கிக்கொண்டபடியே, ரத்தம் சொட்டசொட்ட,துப்பாக்கியின் புகை வந்த பாதையிலேயே பாய்ந்து எதிரியைத்தாக்கும் குணம் படைத்ததாம் அப்பன்றிகள்.

பிறகு புலி வேட்டையைப் பற்றிக் குறிப்பிடுகிறார். மிருகங்களின் சுபாவங்களை நேரிலேயே கண்டறிந்தவரைப்போல் கவிஞர் புலி வேட்டைக் காட்சியை கவிதைக் கண்ணாடியில் காட்டுகிறார். பயங்கரமான புலியொன்று வாலை இடப்புறமும் வலப்புறமுமாக தரையெங்கும் அடித்துக்கொண்டே வாயைப் பிளந்தவாறு பாய்கிறது. உடனே வீரன் ஒருவனின் வாள், அந்தப புலியின் வாயினுள் பாய்கிறது. வேல் பிடித்த வீரர் குத்தவும் புலி வீழ்கின்றது; உடல் துடிதுடிக்கிறது.

அடுத்தபடியாக கானகத்தில் வேடர்கள் விரித்த வலைகளில் விழுகின்ற மிருகங்களான கரடி, முயல், மான் முதலிய மிருகங்கள் துடித்துத் தவிக்கும் காட்சிகள் விளக்கப்படுகின்றன. கவிஞரின் கவிதை உள்ளம்

வேட்டைக் காட்சியிலும் உவமைக்காட்சியை உருவகத்தோடு விளக்க விரும்புகிறது. வேடர்கள் விரித்த வலையில் கவரிமான் ஒன்று அகப்பட்டுக்கொண்டு வேட்டை நாயின் கால்களுக்கிடையில் தவிக்கிறது. அது எப்படி இருக்கிறதென்றால், உயர்ந்த நல்லொழுக்கமுடைய ஒருவன் வேசி யொருத்தியிடம் சிக்கித் தவிப்பது போலிருக்கிறதாம்!

அடுத்தபடியாக கூட்டமாகக் கூடியிருந்த மயில்கள், முரசு, தம்பட்டம் முதலியவைகளின் சப்தத்தைக்கேட்டுப் பறந்து செல்கின்றன. அதை வர்ணிக்கும்போது, "ஒரு கவிஞன், பொருள் கொடுத்துக் காப்பாற்றும் சிறந்த ரசிகனும் வள்ளலுமான ஒருவன் மீது பாடினால், அக்கவிஞன் வறுமை ஒழிந்துபோகும் அளவிற்கு அவன் பொருள் கொடுப்பதால், கவிஞனின் வறுமை எப்படிப் பறந்துவிடுகிறதோ, அதைப்போல மயில் கூட்டங்கள் பறந்து சென்றன" என்று கூறுகிறார்.

பிறகு, ஒரு காட்டெருமையைக் காட்டுகிறார். அந்த எருமை மிகவும் முரட்டெருமை. வேடர்களின் வலையை அறுத்துக்கொண்டு, குத்தீட்டிகளின் தாக்குதலையும் லட்சியம் செய்யாமல் ஓடுகிறதாம்; அதற்கு உவமையும் கூறுகிறார். 'அழகு வண்ணச் சிலை போலிருக்கும் தாசியின் உடல் வசிகரத்திலும் மயக்க மூட்டும் மொழியிலும் மயங்காமல், அந்த மோக வலையை அறுத்துக்கொண்டு ஓடும் சந்நியாசியைப்போல போயிற்று!' என்று கூறுகிறார்.

இப்படியாக உவமைகளையும் உவமேயங்களையும் பின்னிப்பின்னி கன்னித்தமிழ்க் கண்ணிகளாகத் தருகிறார் கவிராயர். மேலும் பயங்கரமான வேட்டைக்காரர்களுக்குத் தொல்லை கொடுக்கும் ஒரு புலியை துப்பாக்கிகொண்டு தாக்குகிறார்களாம். அந்தத் துப்பாக்கியின் ஒலியானது மலைச்சாரலில் மோதி எதிரொலி செய்வதையும் கூறிவிட்டு, அந்த வேட்டையின் ஆர்ப்பாட்டத்தையும், ஆரவாரத்தையும் கண்டு, சிவபெருமானின் இடது கையிலிருக்கும் மானும், தலையில் ஒளிந்திருக்கும் சந்திரனிலிருக்கும் மானும் கலங்கினவென்று கூறி, காட்டைக் கலைத்து வேட்டையாடும் விதத்தை விளக்குகின்ற கண்ணிகள்முறையே பின்வருமாறு:—

அவ்வார்த்தை சொல்லமகா ராசனும் கூளேந்த்ரன் 77
மைவாய்த்த பன்றி மலைச்சாரல் வந்தணுகி,

நாலிடமும் கானவரை நாடிவலை கட்டவிட்டுக், 78
கோலியகட் டாப்பிற் குழற்கார ரைநிறுத்தி

ஏறும் பரிவிட் டிறங்கிப் படைக்கலிப்பு 79
மீறும் தொனிமுரசு மேகங்கள் போல்முழங்க,

அரும் பதவுரை:— கண்ணி (77) மைவாய்த்த – இருள் சூழ்ந்த. (78) கானவரை–வேடுவரை. கோலிய–சுற்றி வளைத்த. (79) படைக்கலிப்பு–படைகளின் ஆரவாரம்.

வேலாளும் வில்லாளும் வெல்லும் எறியீட்டிக் 80
காலாளு மாய்ப்பரந்து காட்டைக் கலைத்துவிட்டார்.

பன்றி முயல்கரடி பாய்புலிபுல் வாய்கடமா 81
ஒன்றோடொன்று தட்டுண் டுலைந்து கலைந்தோட

எய்வாரும், வேலால் எறிவாரும், ஒன்றையொன்றை 82
வைவாரும், சுற்றி மறிப்பாரு மாய்நெருங்க,

கட்டாப்பில் வந்த கடமாவைப் பின்வாங்க 83
ஒட்டாமல் குத்தி ஒளிவிருந்த பேரிழுக்க.

சுட்ட புகைவழியே தூக்கவரும் பன்றியுடல் 84
தட்டுருவி யோடத் தகட்டலகில் வேல்பாய,

வால்அடித்து மேல்பதுங்கி வாய்பிளக்க வாள்கிழிக்க 85
வேல்பிடித்து வீரர்குத்த வீழ்புலிக்கு மேல்துடிக்க,

வலையில்விழு கரடிமுயல் மரையின்மிசை ஞமலிவிழ 86
அலகின்மிசை பிடரின்மிசை அடிகள்விழ உடல்பதற,

செவ்வியோன் வேசிகையிற் சிக்கி உழல்வதுபோல் 87
கவ்வியநாய்க் காலிற் கவரிமான் வீழ்ந்துழல,

கூடுமயிற் கூட்டம் கொடுக்கின்ற தாதாவைப் 88
பாடும் புலவர் கலிபோல் பறந்தோட,

வட்டமுலை மின்னார் மயக்கறுத்த யோகியைப்போல் 89
கட்டு வலையறுத்தோர் கான்மேதி போனதுவே.

கொட்ட மிடும்புலியைக் குண்டுதுன் றுங்குழலால் 90
சுட்டதொனி வெற்பைத் தொடர்ந்து சிலையோட,

எம்மான் இடப்புலியும் இந்துமுய லும்மானும் 91
கைம்மானும் சற்றே கலங்கி மனந்தேற,

இவ்விதமாக வேட்டையைப்பற்றி விளக்கமாகவும், அழகாகவும் கூறுகிறார் கவிராயர். வேடர்கள் வீசிய வலையில் ஒரு மான் சிக்காமல் தப்பியோடிவிடுகிறது. அந்த மானை நோக்கிப் பலர் சுடுகின்றனர்; வேந்தனும் சுடுகின்றான். ஆனால், அந்த மானோ வேந்தனின் துப்பாக்கிக் குண்டுக்கும் தப்பியோடுகிறதாம்! அது எப்படியிருக்கிறதென்றால் கருமிகளைப்போலுள்ளது என்று ஹாஸ்யச் சுவையுடன் எடுத்துக் காட்டுகின்றார் கவிராயர்!

அந்த மானோ மிகவும் வேகமாகத் துள்ளியோடுகிறது. அதைக் கண்ட வேந்தன் கூளப்ப நாயக்கனுக்கோ கோபம் மீறுகின்றது. உடனே நாணேற்றிய வில்லுடன் மானைப் பின்தொடர்ந்து செல்கின்றான். இந்தக்

காட்சியைக் கவிஞர் குறிப்பிடும்போது, இராமாயண இதிகாசத்தில் இராமபிரான், மாரீசனைப் பின்தொடர்ந்து ஓடியதற்கு ஒப்பிடுகின்றார். இந்த மானும் தாவிக் குதித்து ஓடுகிறதாம். ஆனால் வேந்தன் தொடுத்த கூரிய கணை உடலில் தைக்க, இறகிழந்த பறவைபோல ஓடித் தளர்ந்து தரையிலே விழுந்து விடுகின்றது. இராமாயண இதிகாசத்தில் இராமன் பின்தொடர்ந்து ஓடிய மானால் சீதையை ரகுராமன் பிரியநேரிட்டது. ஆனால் இந்த மானோ கூளப்பநாயக்கனுக்கு ஒரு குமரிப்பெண்ணைக் கூட்டி வைத்ததாம்! சீதையை மயிலுக்கும், இந்தக் குமரிப்பெண்ணை ஒரு கருங் குயிலுக்கும் ஒப்பிடுகிறார் கவிராயர். இவ்வளவு கவிதை நயங்களையும் பின்வரும் கண்ணிகள் எடுத்துக் காட்டுகின்றன.

இவ்வண்ணம் ஐயன் இயல்வேட்டை யாடஒரு 92
செவ்வண்ண மான்வலையிற் சிக்காம லேகுதித்து,

பற்றவரும் பேர்க்கும் பதிகுழற்கும் எட்டாமல், 93
உற்றகவி வாணரைக்கண் டோடும் உலுத்தரைப்போல்

போங்கடுமை கண்டு, புகழ்பெரிய நாகேந்த்ரன் 94
வாங்கு சிலையும் வடிக்கணையு மாய்விரைந்து,

மானோடப் பற்றஅன்று வந்தரகு ராமனைப்போல், 95
தானோடப் பின்னோடித் தாவிக் குதிகுதித்துப்

பாரில்இற கில்லாத பட்சிபோல் செல்லநெடுந் 96
தூரம் தொடர்ந்து தொடுங்கணைக்குப் பூசையிட்டான்.

மால்தொடர்ந்த மான்ஓர் மயிலைப் பிரித்ததுஐயன் 97
கால்தொடர்ந்த மான்ஓர் கருங்குயிலைக் கூட்டியதே!

பிறகு வேந்தன் கூளப்பன் சிங்கக்குட்டியைப் போல நடந்து செல்கின்றான். அங்கே ஒரு பூஞ்சோலை. அதிலே ஒரு தண்ணீர்த் தடாகம். நீண்டநேரம் வேட்டையாடிய வேந்தன் களைப்போடு அந்தப் பூஞ்சோலைக்குள்ளே நுழைகின்றான். தடாகத் தண்ணீரைப் பார்க்கிறான். அதிலே மலர்கள் விழுந்து மிதக்கின்றன. எனவே தண்ணீர் மணம் வீசுகின்றது தண்ணீரை வாரி வாரிக் குடித்து மன்னன் தாகம் தீர்த்தான். முகத்தின் வேர்வையை அலம்பிக் கழுவிக்கொண்டான் நல்ல குளிர்ந்த தென்றல் வீசியது. களைப்படைந்திருந்த மன்னனை இந்திரனாகவும், மலர்ச் சோலையை கற்பகச்சோலையாகவும் புகழும் கவிராயர் அந்தச்

அரும்பதவுரை:—கண்ணி (80) புலவாய்-மான. கடமா-காட்டெருமை. (83) கட்டாப்பில்-வேலியடைத்த பகுதியில். (84) தகட்டலகில்-விசாலமான பக்கத்தில். (86) மரை-மான். ஞமலி-நாய். (87) செவ்வியோன்-ஒழுக்கமுடையவன். (89) மயக்கறுத்த-காமத்தைவென்ற. கான்மேதி-காட்டெருமை. (90) துன்றும்-கெட்டித்த. (94) வாங்குசிலை-நாணேற்றிய வில். வடிக்கணை-கூரான அம்பு.

சோலையின் மலர்கள் எல்லாம் வேந்தனின் வரவிற்காக தென்றல் காற்றிலே மலர் மழையையே பெய்வித்தது என்று கூறுகின்றார்.

சந்தன மரங்களில் வீற்றிருக்கும் பச்சைக் கிளிகள் சிந்துக்கவி பாடுவதைப்போல பாடுகின்றனவாம். அத்தகைய ஏகாந்தமான, இன்பம் நிறைந்த நேரந்தான் காதலர் தூது அனுப்பும் நேரம் என்பதைப்போல வண்டுகள் ரீங்காரம் செய்கின்றன.

சிறிதுநேரம் இளைப்பாறிய மன்னன் சற்று எழுந்து உலாவுகின்றான். சாம் சரமாக மலர்க்கொத்துகளைத் தாங்கியிருக்கும் சரக்கொன்றை மரங்களை நெருங்கும்போது ஆசைகொண்ட அரசனுக்கு அரசிளங்குமரி ஒருத்தி சுயம்வரத்தில் காதல் மாலை சூட்டுவது போலிருக்கிறதாம். இப்படியாக அந்தப் பூஞ்சோலையின் இயற்கை அழகை ரசித்துக்கொண்டு உலாவுகிறான்–மன்னன். இந்த நிகழ்ச்சியை கவிராயர் எப்படி கண்ணிகளில் பொதித்திருக்கிறார் பாருங்கள்:

சிங்கத்தின் குட்டி சிலைஏந்திச் செல்வதுபோல் 98
அங்கொருபூங் காவில்விடாய் ஆறத் தனிப்புகுந்தான்.

துன்று தடஞ்சுனைநீர் தோய்ந்துமலர்த் தாதளைந்து 99
தென்றல்வந்தென் ஐயன் திருமுகத்தின் வேர்வகற்ற,

கற்பகக்கா இந்திரனைக் கண்டுமலர் சிந்துதல்போல் 100
பொற்புடையோன் மெய்குளிரப் பூங்கானம் பூச்சொரிய,

சந்தனத்தின் மீதிருந்து சஞ்சரிக்கும் பைங்கிளிகள் 101
சிந்தமன்சேய்க் கின்பம்வரச் சிந்துக் கவிபாட,

இங்கிருக்கும் வேளைநல்ல ஏகாந்த வேளையென 102
மங்கைநல்லாள் தூதுவிட்ட வண்டுபோல் வண்டிரைய,

மையல்கொண்ட மன்னனுக்கு மாலையிட வந்துநின்ற 103
தையலார் போலச் சரக்கொன்றைக் கொம்பிலங்க,

நங்கோன் துரைபெரிய நாகேந்த்ரன் அவ்வனத்தின் 104
சிங்காரம் பார்த்துலவிச் சிந்தை மகிழ்போதில்,

மலர்ச்சோலையில் மன்னன் உலாவிக்கொண்டிருக்கும் அதே சமயத்தில் நவரத்னமாலை என்ற ஒரு பெண்ணைப்பற்றி கவிஞர் வர்ணிக்கிறார்.

காமநூல் வல்லுனர்கள் பெண்களை நான்கு ஜாதிகளாக, அவர்களுடைய உடல் அமைப்பையும், உருவ அமைப்பையும் கூறி வகுத்திருக்கிறார்கள். அதிலே முதற் ஜாதியைச் சேர்ந்த அழகும், உடலமைப்பும், உருவமுங்கொண்டவளாக நவரத்தினமாலை புகழப்படுகிறாள். அவளோ கல்வியில் கலைவாணியைப் போன்றவள். காமலீலைகளில் வல்லவள்.

மன்மதனும் ரதியும் கலந்து நீந்தும் தடாகம் போன்றவள். மங்களகர மான காதல் கலையில் சிறந்தவள்!—காமநூல் கல்வியை பயிற்சியிலும், பாடத்திலும் கற்றுக்கொடுக்கும் ஆசிரியை போன்றவள். தெய்வலோக ரதிதேவியைப் போன்றவள். தெய்வகுணங்கள் எல்லாவற்றிற்கும் உயிர் நாடி போன்றவள்; தெய்வலோகக் குவளைமலரைப் போன்றவள்; தெய் விக மலைகளின் மூலிகைச் சஞ்சீவியைப் போன்றவள்! தங்கச்சிலைகள் செய்யும் சிற்பியொருவன் அவளைப் போன்ற சிலையொன்றைச் செய்ய முடியாமற் போகவே, அந்தச் சிலைக்கு உயிரூட்ட படைப்புத்தொழில் கடவுளான பிரம்மதேவனுடைய கரங்களால் உருவாக்கப்பட்டவள்!—மௌனமாக மதிற் சுவரருகில் நின்று செவிலித்தாயோடு மட்டும் பேசி, சொல்லிலே இன்பந்தரும் ஓவியம் போன்ற உருவம் உடையவள்! மற்றொருவரின் கைபடாமலும், பிடித்து இழுக்கப்படாமலும், இதழ்கள் வாடிக் கன்றி விடாமலும், பெண்களின் மடியிலே மட்டும் தவழக்கூடிய மலர் மாலையைப் போன்றவள்.

வர்ணனை இதோடு மட்டுமா நிற்கிறது? உச்சத்தை எட்டுகிறது காற்றிலே அடிபடுவதால் முத்துவிளையும் செங்கரும்பு தன் ஆணிமுத்தை வெளியிட்டுவிடும். ஆனால் இந்த நவரத்ன மாலையோ, கண்ணீர் சிந் தாமல்-துன்பம் அறியாமல் வளர்க்கப்பட்ட பூங்கரும்பைப் போன்ற வளாம்!

மருக்கொழுந்து செடியானது நேரம் ஆக ஆகத்தன்னுடைய பசுமை வதங்கி, வாடிக்கருகி, மணத்தை இழந்துவிடும். ஆனால் நவரத்ன மாலையோ வாடி வதங்காமல் எந்த நாளிலும் மணம் வீசும் மருக்கொழுந் தைப் போன்ற தளதளப்பான உடலுருவங் கொண்டவளாம்.

குரலினிமை எப்படிப்பட்டது தெரியுமா? கறுத்துப் புழுங்கிவிடாமல் பாகு மணம் வீசும் தங்க நிறப் பக்குவத்தில் எடுக்கப்பட்ட சர்க்கரைப் பாகைப்போன்ற இனிமையுடையவளாம்!

மயிலோ, முட்செடிகளிலும் மலைக்காடுகளிலும் அலைந்து ஆடி ஓடி விளையாடித் தன் தோகையை சிதைத்துக்கொள்ளும். ஆனால் இந்தப் பெண் மயிலோ பஞ்சணை மெத்தையிலேறி விளையாடும் தோகை மயிலைப்போன்றவள்!

மாமரத்தில் கிளைக்குக் கிளை தாவிக்கொண்டும், கூவிக்கொண்டும் அலைகின்ற குயிலைப்போலத் திரியாமல் பொன்னால் செய்த ஊஞ்சலி லேயே ஆடிக்கொண்டு பாடுகின்ற பெண் குயிலாம் இவள்!

கொஞ்சலாகவும், குழறியும் பேசுகின்ற கூட்டிலகப்பட்ட கிளியைப் போன்றவள் அல்ல; இவள் காமநூற் கலையை சொல்லக்கூடிய திறமை பெற்றவள்!

அரும்பதவுரை:—கண்ணி. (98) சிலை-வில். (99) துனறு-நெருங்கிய (100) கற்பகக்கா-கற்பகத்தரு நிறைந்த சோலை.

பெண்கள் நடை பயிலவேண்டும் என்ருல் அன்னத்திடம் கற்றுக் கொள்ள வேண்டுமாம். ஆனல் இவளோ அன்னங்களுக்கே நடக்கக் கற்றுக்கொடுக்கும் சாதி அன்னத்தைப் போன்றவளாம்!

இப்படியெல்லாம் நவரத்ன மாலையை வர்ணித்துவிட்டுப் பின்னர் அவளை நவரத்னங்களுடனேயே ஒப்பிட்டுப் பாடுகின்ருர். அழகான ஆணிமுத்தானது அணிந்து பழக்கப்பட்டதால் தேய்ந்து தேய்ந்து சிறி தாகிவிடும். ஒளியையும் இழந்துவிடும். ஆனல் இவளோ ஒளிவிட்டுப் பிரகாசிக்கின்ற சாதி முத்தைப் போன்றவளாம்!

உண்மையான, மதிப்புமிக்க ரத்தினமானது செப்பு போன்ற பாத் திரத்தில் போடப்பட்டு, மூடி முத்திரையிடப்பட்டிருக்கும். ஆனல் இந்த பெண்ணின் ஜீவரத்தினமோ செப்புகளைப் போன்ற இரண்டு கொங் கைகளை வெளியே தாங்கி நிற்கின்றதாம்!

ஒருசமயம் சிவபெருமான் தவமியற்றிக் கொண்டிருந்தாராம். அப்போது அவருடைய தவத்தின் ஜ்வாலையால் அகில முழுவதும் அமிழ்ந்துவிடும் நிலை ஏற்பட்டதாம். தவத்தைக் கலைக்கும் தொழிலையுடைய காமக்கடவு ளான மன்மதன் தன் மலர்க்கணைகளை சிவன் மீது தொடுத்து தவத்தைக் கெடுக்க, அதனுல் கோபங்கொண்ட சிவபெருமான் அவனை நெற்றிக் கண்ணுல் தகிக்க, அவன் சாம்பலாகிவிட்டானும். பிறகு அவனுடைய மனைவியான ரதிதேவி சிவபெருமானிடம் மன்ருட, அவர் அவனுக்குத் திரும்பவும் உயிர் கொடுத்தார். ஆனல் யார் கண்ணுக்கும் புலனுகாத அரூபியாக்கிவிட்டாராம். அத்தகைய சாபத்திற்காளான மன்மதனுக்கு சிவபிரான் மீது தீராத மனத்தாங்கல் ஏற்பட்டதாம். அத்தகைய வைரத்தைவிட உறுதியான உள்ளம் படைத்தவள் என்பதை கவிஞர் பொருட்சுவையுடனும், சொற்சுவையுடனும் விளக்குகிருர். கண்ணுக் குள்ளே இருக்கும் கண்மணியைப் போலவும், அந்தக் கருவிழிக்கும் உள்ளே ஆடுகின்ற பாவையைப் போன்றவளாகவும், பெண்ணுக்குப் பெண்ணே ஆசை கொள்ளும் அழகு வாய்ந்த, பெண்களுக்குள்ளேயே பெருமை வாய்ந்த அரசியைப் போன்றவள் என்றெல்லாம் நவரத்ன மாலையைப் பற்றி வர்ணித்து அவளை எந்த அளவிற்கு வர்ணிக்க முடி யுமோ அந்த அளவிற்குப் புகழ்ந்துவிட்டார் கவிராயர்.

சாதியொரு நான்கின்முதற் சாதி பதுமினியாம் 105
மாது நவரத்ன மாலையெனும் பெண்பெருமாள்;

மதனகலை வாணி மதனசுர தானி 106
மதனரதிக் கேணி மதனசுப கல்யாணி;

காம குருபீடம் காமக் கொலுக்கூடம் 107
காமக் கிரீடம்இன்பக் காமக் கடலோடம்;

மாமுனிவர் வேதஅங்கம் மாமுனிவர் அந்தரங்கம் 108
மாமுனிவர் ஓதுசங்க மாமுனிவர் பிராணலிங்கம்;

தெய்வ ரதிதேவி தெய்வ குணவாவி 109
தெய்வச் செழுங்காவி தெய்வமலைச் சஞ்சீவி;

கம்மியன்கை யால்அடித்துக் காய்ச்சிவெட்டித் தீராமல் 110
செம்மலரோன் கைம்மலரால் செய்துவிட்ட பொற்பாவை;

வாய்பேசா வண்ணம் மதிலொட்டி நில்லாமல் 111
தாய்பேசப் பேசியின்பம் தந்துலவு ரூபசித்ரம்;

கையாற் பிடித்தொருவர் கட்டஇதழ் கன்றாமல் 112
மையார் குழலார் மடியிருக்கும் பூமாலை;

காற்றிலடி பட்டலைந்து கண்முத்து அரும்பாமல் 113
போற்றி மடவார் வளர்த்தெடுத்த பூங்கரும்பு;

மொய்க்கும்மணங் குன்றி முகங்கருகி வாடாமல் 114
மெய்க்குமணம் எந்நாளும் வீசும் மருக்கொழுந்து;

பொங்கிச் சிவந்து கறுத்துப் புழுங்காமல் 115
தங்கநிற மாகச் சமைந்த மணப்பாகு;

ஓங்கு மலைக்காட்டின் உள்ளிருந்து தூங்காமல் 116
தூங்குசப்ர மஞ்சமிசைத் தூங்கும் நவரசத்தேன்;

மொய்த்த மலைக்காட்டு முள்ளூ டலையாமல் 117
மெத்தையின்மே லேறி விளையாடும் தோகைமயில்;

கொம்புதொறும் போய்த்தாவிக் கூவித் திரியாமல் 118
அம்பொன்மணி ஊசலிருந்து ஆடுங் குயிற்பேடு;

கொஞ்சி மொழிகுழறிக் கூட்டிற் கிடவாமல் 119
செஞ்சொல் மதனகலை செப்புங் கிளிப்பேடு;

கன்னியர்க்குத் தன்நடையைக் கற்பித்த பேடையன்னங் 120
தன்னை நடைபயிற்றுஞ் சாதி யனப்பேடு;

தேய்ந்துபோ கிக்கச் செறிந்தகுணம் போகாமல் 121
தோய்ந்துபோ கிக்கத் துலங்குகின்ற சாதிமுத்து;

ஒப்பமிட்ட செப்பில் ஒளித்துக் கிடவாமல் 122
செப்பமிட்ட செப்பிரண்டும் தாங்கிவருஞ் சீவரத்னம்;

அரும்பதவுரை: கண்ணி (109) குணவாவி – குணக்கடல். (110) கம்மியன் – சிற்பி. செம்மலரோன் – பிரம்மா. (111) ரூபசித்திரம் – அழகு ஓவியம் (115) மணப்பாகு – சக்கரைப்பாகு. (118) குயிற்பேடு – பெண் குயில். (120) அனப்பேடு – பெண் அன்னம். (123) நிமலனார் – சிவபெருமான்.

நீருன காமன் நிமலனூர் மீதில்வைத்த 123
மாரு மனவயிரம் மாற்றவரும் மாவயிரம்;

கண்ணுக்குட் கண்மணிபோல் கண்மணிக்குட் பாவையைப்போல்
பெண்ணுக்குப் பெண்ணுசை கொள்ளவந்த பெண்ணரசு.

இவ்வளவு சொருப லட்சணங்களைக் கொண்ட நவரத்தினமாலை, தனது தோழியருடன் உட்கார்ந்து கொண்டிருக்கிருள். எல்லோரும் மகிழ்ச்சியும் வேடிக்கையுமாக பேசிக்கொண்டிருக்கிருர்கள். அந்தச் சமயம் குணமாலை என்ற தன் அந்தரங்கத் தோழியைப் பார்த்து தனது இடக்கண் இரப்பைகளும், புருவமும் தானுகவே துடிக்கின்றன என்கிருள் நம் தலைவி. அது மட்டுமா ? தன்னுடைய இடது தோளும் துடிக்கிறது என்று கூறினுளாம். உடனே, அந்தக் குணமாலை என்பவள் தன் தலைவியைப் பார்த்து ' கன்னி அழியாதவளே ! இன்று உன்னை சோபன முகூர்த்தம் எதிர்பார்த்து நிற்கிறது போலும். அதற்குத்தான் உனது இடது கண்ணும் தோளும் துடிக்கிறது !'' என்ருள். காதலனைக் கூடுவதுதானே கன்னிப்பெண்ணுக்கு இன்பம் !

அன்றுகுண மாலைஎனும் அன்பான பாங்கியைப்பார்த்(து) 125
இன்றெனது கண்ணில் இடக்கண் துடிக்கு(து) என்ருள்

தோளின் இடப்பால் துடிக்குதெனஉரைத்த 126
வாளினெடு வெட்டுப் படித்த வரிவிழியாய்!

கன்னி அழியாத காரிகையே இன்றுனக்குச் 127
சொன்னேன், அதிகசுப சோபனமுண் டாகுதென்ருள்.

குணமாலையின் பேச்சைக் கேட்ட மற்றைய தோழிகள் உடனே தலைவிக்குப்பூச்சூட்டி விதவிதமான நகைகளை அணிவித்து, அலங்கரிக்க ஆயத்தமாகின்றனர்.

நவரத்னமாலை குளித்துவிட்டு வரச் செல்கிருள். பசுமை நிறைந்த வாசனை தரக்கூடிய பச்சிலைகளையும் மலர்களையும் சேர்த்து அரைத்த வாசனைக் கலவையை நன்ருக உடலில் தேய்த்துக் குளித்து விட்டு வருகிருள். உடனே தோழிகள் சந்தனம், புனுகு, ஜவ்வாது போன்றவகை வகையான வாசனைத் திரவியங்களைக்கொண்டு அவளுடலில் பூசி விடுகிருர்கள். பிறகு கறுப்பாக இருக்கும் அவள் உடலுக்குப் பொருத்தமாயும் பிரகாசமாகவும் இருப்பதற்காக 'கண்டாங்கி'ச் சேலை என்ற செட்டிநாட்டுப் பகுதிகளில் வழங்கப்படும் பட்டுச்சரிகைச் சேலையைக் கட்டி விடுகிருர்கள். அதுவும் வெண்பட்டுச் சேலை.

பிறகு, கருங்குவளை மலரையொத்த செவ்வரி படர்ந்த நீண்ட கண்களையுடைய தலைவியின் கூந்தலை நன்ருக வகிடு எடுத்துச் சிவிச் சேர்த்துக் கொண்டை போட்டு விடுகிருர்கள். அதன் பிறகு கண்ணிற்கு மை தீட்டி நெற்றியிலே பொட்டிட்டு, வட்டமாக அமைந்த கொங்கைகளில் சந்தனக் குழம்பால் வரிக்கோலங்கள் எழுதி, பாதங்களின் மேற்புறத்

திலும், விரல்களை இணைத்தும் செம்பஞ்சுக் குழம்பினால் கோலங்கள் போட்டு விடுகிறார்கள்.

நவரத்னமாலைக்கு ஆபரணங்கள் சூட்டப்படுகின்றன. அந்த ஆபரணங்களை கவிராயர் வரிசை வரிசையாகக் கூறும்போது தமிழகத்திலே பதினேழாவது நூற்றாண்டில் என்னென்ன ஆபரணங்களைத் தமிழகத்துப் பெண்கள் அணிந்தனர் என்பதன் பட்டியலே கிடைத்து விடுகின்றது. ஆபரண அலங்காரங்களைப் பற்றிப் பாடும்போது, நான்கு வகையான பொன்னில், நல்லரகமான ஆடகப் பொன்னால் செய்த மெட்டுகள் கால் விரல்களை அலங்கரித்ததாம். வெள்ளியினால் செய்த அழகான தண்டைகளும் பாடகங்களும் கணுக்கால்களை அழகு செய்தனவாம். பொன்னாலான சதங்கைகள் இடுப்பை அலங்கரித்தனவாம் முத்துக்களாலான மேகலைமீது மூன்றுபட்டை தங்க அரை ஞாண் கட்டப்பட்டதாம். பின்னர், 'தங்க ஒட்டியாணம்' பூட்டினார்களாம். பவளத்தை விட சிவப்பாக பவளக்கொடியிலேயே முளைத்த செம்புகளைப் போன்ற செம்மணிகளால் ஆன ரத்தினக்கல் மோதிரங்களை விரல்களுக்கு அணிவித்தார்களாம்.

பிறகு பட்டு ரவிக்கை போட்டு, கழுத்துக்கு அலங்காரம் செய்கின்றனர். பொன்னாலான காரைமாலையையும் வட்டமான உருவமைந்த கொங்கைக் கலசங்களையும் பூட்டிவிட்டார்களாம். சங்கிலி, முத்துமாலை, ரத்தினமாலை ஆகிய பலவகை பொன்னாபரணங்களால் நவரத்னமாலையின் 'கமுகு' போன்ற கழுத்தை அலங்கரித்தார்களாம். அப்படி ஏராளமான நகைகளால் கழுத்தையே மூடிவிட்டார்கள் என்று கவிஞர் ஹாஸ்ய ரசனையோடு கூறியுள்ளார். அது மட்டுமா ?

தலைவியின் முகமோ, வானத்து வட்டமதியைப் போலிருக்கிறதாம். அந்த மதிமுகத்தில் முத்து ஒன்று முளைத்தது போல் முத்து மூக்குத்தியை அணிவித்தார்களாம் !

பிறகு பின்னல் அலங்காரத்தைப் பற்றிய வர்ணனை. பின்னிவிட்ட கூந்தலுக்கு தாழம்பூ மடலிட்டு, காதுகளுக்கு ஓலை, கொப்பு, வாளி, முதலிய காதணிகளை அணிவித்தார்களாம். பிறகு தலையில் லக்ஷ்மி தேவியின் உருவமைந்த நகையையும் பிறைச் சந்திரனைப் போன்ற நகையையும் கோர்த்து விடுகிறார்கள். முத்துக்குஞ்சத்தையும் கட்டி விடுகிறார்கள்.

இவ்வளவு அணிகளையெல்லாம் அணிவித்த பிறகு தோழிகள் அவளழகை ரசிக்கின்றனர். நவரத்ன மாலையோ, பொன்னால் செய்த சிலை போலிருக்க, அந்தச் சிலைக்கு எப்படியெல்லாம் அழகு செய்த போதிலும் அழகுக்கு அழகு செய்வதைப் போல் தானிருக்கிறது ! எனவே, நகைகளையெல்லாம் அணிவித்தபிறகு, ஒரே இடத்தில் நின்று பார்ப்பதோடு நின்றுவிடாமல் தோழிகள் அவளைச் சுற்றிச் சுற்றி வளைய வந்து பார்க்கிறார்கள். எப்படிப் பார்த்தாலும் அவள் அழகின் உடைமைப் பொருள்களைத்தான் அவர்கள் அணிவித்தது போலிருக்கிறதாம்.

பாங்கியுரை கேட்டுமற்றைப் பாங்கிமார் தம்முடனே 128
பூங்குழலாள் காவின்மலர் பூவெடுக்க வேண்டுமென்று,

பச்சைப் பரிமளங்கள் பாங்காய்க் கலந்தரைத்த 129
கொச்சி மஞ்சட் பூசிக் குளித்ததிரு மேனியின்மேல்

சாந்து புனுகுசவ் வாதுகதம் பம்பூசிக் 130
காந்திதர வெண்சலவைக் கண்டையிட்ட சேலைகட்டி

காவி வரிநெடுங்கட் காரிகைக்குப் பாங்கியர்கள் 131
சீவி வகுப்பெடுத்துச் சேர்த்துக் குழல்முடித்து,

மையெழுதிப் பொட்டெழுதி வட்டமிட்ட கொங்கைக்குத் 132
தொய்யில் எழுதித் துணையடிக்குப் பஞ்செழுதி,

ஆடகப்பொன் மெட்டிட்டு அழகுவெள்ளி தண்டையிட்டுப் 133
பாடகங்கள் இட்டுப் பசும்பொற் சதங்கையிட்டு,

முத்தார மேகலைமேல் மூன்றடுக்குப் பொன்னரைஞாண் 134
வைத்தாரக் கட்டி மருங்கொட்டி யாணமிட்டு,

செய்ய கொடிப்பவளஞ் செம்மணிகள் ஈன்றதுபோல் 135
கைவிரலுக் கேற்றரத்னக் கல்மோதி ரங்களிட்டார்

கட்டிப் பவளம் கனகவளை பொற்கடகம் 136
தட்டுச் சரியைச் சரியாகக் கைக்கணிந்து,

பட்டு ரவிக்கையிட்டுப் பட்டையப்பொற் காறையிட்டு 137
வட்டமுலை மார்பிலங்க வச்ரச் சவடியிட்டார்;

மோகனப்பொன் மாலையிட்டு முத்துமணி மாலையிட்டுப் 138
பூகத்தை வச்ரமணிப் பூடணங்க ளால்மறைத்தார்;

வாய்க்கும்ஒரு வட்டமதி யொருமுத்து ஈன்றதுபோல் 139
மூக்குத்தி முத்து முகத்துக் கிணங்கவிட்டார்;

கொந்தளப் பொன்னோலையிட்டுக் கொப்பிட்டு வாளியிட்டுச் 140
செந்திருவிற் கேற்கத் திருவும் பிறையுமிட்டுக்

கொண்டைச் சுருட்டிமுத்துக் குச்சிட்டுக் குப்பியிட்டுத் 141
துண்டப் பிறைக்கிணங்கச் சுட்டியொன்று கட்டிவிட்டார்;

பூட்டினார் பொற்சிலைக்குப் பொன்னிடுவார் போலுடைமை, 142
சூட்டினார் பூமாலை, சுற்றினார் தோழியர்கள்.

அடுத்தபடியாக ஆடை, அணி அலங்காரம் செய்துகொண்ட பிறகு மின்னலைப்போன்ற நவரத்னமாலை மலர்களைப் பறிப்பதற்குப் புறப் படுகிருள். அவளுடன் அவளது தோழிகளான வங்காரமாலை, முத்து மாலை, குணமாலை, சிங்காரமாலை, மோகனமாலை, சம்போகவல்லி, சரச வல்லி, காமவல்லி, அமிர்தவல்லி, நீலவல்லி, மோகரத்தினம், மாது ரத்தினம், முத்து, வசந்த ரத்தினம், நாகரத்தினம் ஆகியோரும் சேர்ந்து சண்பகப் பூந் தோட்டத்திற்குச் செல்கின்றனராம். அது எப்படி இருக் கிறதென்ருல், மான்களின் மத்தியில் குட்டியானை செல்வது போலி ருந்ததாம்! நவரத்னமாலையின் உடல் செழுமையை இயற்கை எழில் காட்சியோடு ஒப்பிட்டிருக்கிருர் கவிராயர். அது மட்டுமா? அவர்கள் மலர்களைக் கொய்யும்போது அந்த மலரிலிருக்கும் வண்டானது தங்கத் தாலான மலர்தானே என்று பறிப்பவரின் கைகளைச் சுற்றிப் பறக்கிற தாம். எனவே வேகமாக அவர்கள் பூப்பறிக்கிருர்களாம்.

மதிப்புடைய நவரத்னமாலை பூங்கொடியைப் போல மெதுவாக நடந்து பூப்பறிக்க, மற்றைய தோழிகள் எல்லோரும் ஓடியாடிப் பறிக் கிருர்கள். அந்த மலர்த் தோட்டத்தைக் கவிஞர் குறிப்பிடும்போது மன் மதனின் பாளையம் என்றும், அந்தப் பாளையத்தை வாளைப் போன்ற கூர்மையான செவ்வரி படர்ந்த கண்களையுடைய அந்தப் பெண்கள் கொள்ளையிடுகின்ருர்கள் என்றும் வர்ணிக்கிருர். இப்படியாகப் பாங்கி யர்கள் எல்லோரும் ஒவ்வொரு திசையில் மலர்கள் பறிக்கச் சென்று விடுகின்றனர். நவரத்னமாலை மட்டும், கூட்டத்தைப் பிரிந்த ஒற்றை மானைப் போலத் தனித்து விடப்படுகிருள்.

எனவே அவள் அழகாகவும், அடுக்காகவும் இதழ்கள் அமைந்த வெட்சி, இருவாட்சி, மல்லிகை, செவ்வந்தி, பிச்சிப்பூ, முல்லை போன்ற கொடிப்பூக்களையும், புதர் பூக்களையும் பறித்துவிட்டு, உயர்ந்து வளர்ந்த மரங்களின் கிளைகளில் மலர்ந்திருந்த மலர்களைப் பறிக்க விருப்பம் கொண்டாளாம்.

ஞாலம் புகழும் நவரத்ன மாலைமின்னுள் 143
கோலஞ் சிறந்தமலர் கொய்யவென்று தான்நடந்தாள்,

வங்கார மாலை, முத்து மாலை, குணமாலை 144
சிங்கார மாலை, திகழ்மோ கனமாலை,

சமபோக வல்லி, சரசவல்லி, காமவல்லி 145
அம்போ ருகக்கண் ணமிர்தவல்லி, நீலவல்லி,

அரும்பதவுரை : கண்ணி (131) காவி-கருங்குவளை (132) தொய்யில்-வரிக்கோலம்.(133) ஆடகப்பொன்-நால்வகை தங்கத்தில் ஒருவகை.(134) மருங்கு-இடை.. (138) பூடணம்-ஆபரணம் (140) கொத்தளம்-கூந்தல். செந்திரு-லட்சுமி. (145)அம்போருகம்-தாமரை.

மோகரத்னம் மாதுரத்னம் முத்து வசந்தரத்னம் 146
நாகரத்னம் என்னுமந்த நல்லஉயிர்ப் பாங்கியரும்

தானுமாய் அந்தமலர்ச் சண்பகப்பூங் காவனத்தில் 147
மானினங்கள் சூழ வரும்பிடிபோல் வந்தணுகிக்

கொய்யுமலர் வண்டெழுந்து கோகனகப்பூ வெனச்செங் 148
கைம்மலரைச் சுற்றக் கடுகிமலர்ப்பூ வெடுத்தாள்.

பூங்கொடிபோல் நின்றுலவிப் பொன்னனையாள் பூவெடுக்கப் 149
பாங்கிமார் எல்லாம் பரந்தோடிப் பூவெடுத்தார்.

வாளையொத்த செங்கருங்கண் மானார் மதராசன் 150
பாளையத்தைக் கொள்ளையிடும் பண்பாய் மலர்பறித்தார்,

அங்குநின்ற பெண்களெல்லாம் அங்கங்கே போய்மறைய, 151
இங்குநின்ற பேதை இனம்பிரிந்த மான்போல

மெல்லத் தனிநடந்து, வெட்சி இருவாட்சி 152
மல்லிகை செவ்வந்தி மலர்ந்தபிச்சிப் பூவெடுத்து

தோட்டுப்பூ முல்லைமுதல் தூயகொடிப் பூவெடுத்துக் 153
கோட்டுப்பூ மீதில்அந்தக் கொம்பனையாள் மாலானாள்.

இதுவரையில் செடி கொடிகளில் பறித்த மலர்கள் போதா தென்று மரங்களில் மலர்ந்திருந்த மலர்களைப் பறிக்க ஆசை கொள் கிறாள் நவரத்னமாலை. ஆனால் அந்தத் தலைவியிடத்திலேயே எல்லா வித மலர்களும் இருக்கின்றனவே யென்று கவிராயர் நயம்படக் குறிப் பிடுகிறார். அந்த மலர்கள் என்னென்ன என்பதை கவனிப்போமாக!

அவளுடைய கண்கள் இரண்டும் கருங்குவளை மலர்கள் என்றும், முகம், கைகள், கால்கள் ஆகிய ஐந்தும் தாமரைகள் என்றும், அவளு டைய இதழ்கள் செம்பருத்திப் பூவென்றும், அந்த செம்முருக்கம் பூவானது இயற்கைப் பூவைவிட வதங்கி நிறங்குன்றுத சிறப்புடையது என்றும், அவளுடைய கொங்கைகள் இரண்டும் வாழைப் பூவின் அரும் புகள் என்றும், வாயானது பூங்குமுதம் என்றும், மூக்கு சண்பகமென்றும் கூறி இத்தகைய மலர்களைக் கொண்டவளான நவரத்னமாலை மரத்து மலர்களை விரும்புவது வேடிக்கையாக இருக்கிறது என்றும் குறிப்பிட்டு விட்டு, அந்தச் செய்கைக்கு உபமானம் ஒன்றும் கூறுகிறார். அதாவது தம்மிடத்தில் ஏராளமான பொருளிருக்க, பிறரிடம் சென்று சிலர்யாசிப்ப தைப் போலிருக்கிறதாம்!

இப்படியாக அந்த மாதரசி, மலர்ந்த மரங்கள் ஒவ்வொன்றிடத் திலும் சென்று கெஞ்சுகிறாளாம். வாயைத் திறந்து கெஞ்சவில்லை. எட் டாத கிளையிலிருக்கும் மலர்களை எட்டிப் பிடிக்க அவள் தாவித்தாவிக் குதிப்பது கெஞ்சுவதுபோல் தோன்றுகிறது—கவிராயரின் கண்களுக்கு!

சண்பகமரத்திடமும், தர்தசி மரத்திடமும் சென்று தன் தலைக்குச் சூடிக்கொள்ள மலர்வேண்டுமென்றும், மந்தாரை, செருந்தி மரங்களிடம் சென்று, மனத்துன்பம் நீங்க மலர்கள் தரவேண்டும் என்றும், ஆகாயத்தை அளாவி அண்ணாந்து நின்று கொண்டிருந்த புன்னை விருட்சத்தையும், குங்கும மரத்தையும் பூக்கள் தரவேண்டும் என்றும் கெஞ்சுகிறாளாம். கெஞ்சிக் கெஞ்சிப் பார்க்கிறாள். மரங்களின் மனது மாறவில்லை. அவைகள் மரங்களாகவே இருக்கின்றன. எனவே குயில்களையும், கிளிகளையும் நோக்கி தன்னுடைய தோழிகள் தன்னைப் பிரிந்து சென்றுவிட்டார்கள் என்றும், அவைகளாவது மனமிரங்கி மலர்களைப் பறித்துக்கொடுக்க வேண்டுமென்றும் கெஞ்சுகிறாள். அவள் கேட்ட மலர்களைப் பறித்துக்கொடுக்க முடியாத அந்தப் பறவைகள் பறந்து போகின்றன. அவைகள் நாணத்தால்தான் பறந்து சென்றனவென்று கவிஞர் கூறுகின்றார். இப்படியாக எவ்வளவு கெஞ்சியும் பலனடையாமல் இங்குமங்குமாக ஒரு மரத்தின் நிழலில் உலவிக்கொண்டிருந்தாள் நவரத்னமாலை.

காவி இரண்டிருக்கக் கஞ்சமலர் அஞ்சிருக்கப் 154
பூவின்நிறங் குன்றாப் புன்முருக்கம் பூவிருக்க

கோங்கரும் பிரண்டிருக்கக் கோவையிட்ட முல்லைமுகை 155
பூங்குமுதத் துள்ளிருக்கப் பூஞ்சண் பகமிருக்க,

பூதலத்தி லேதான் பொதிவைத் திரப்பவர்போல் 156
மாதரசி பூத்த மரந்தோறும் சென்றுசென்று,

'சாதிநறுஞ் சண்பகமே, தாதுளபூந் தாதகியே 157
கோதிக் குழல்முடிக்கக் கோலமலர் தாரீரோ?

மந்தாரை யே,செருந்தி மாமரமே! நீர்எனது 158
சந்தாபந் தீரத் தரிக்கமலர் தாரீரோ?

பாதிரியே, காவிற் பனிநீர்ப் பருமரமே, 159
மாதவியே! நீர்எனக்கு வண்ணமலர் தாரீரோ?

விண்ணார்ந்த புன்னை விருட்சமே, குங்குமமே! 160
அண்ணாந்து நிற்குமெனக் கானமலர் தாரீரோ

அம்பிட்ட கண்ணார் அகன்றுவிட்டார்; உங்களைநான் 161
கும்பிட்டேன், கோகிலங்காள்! கொய்துமலர் தாரீரோ?

என்ற உரைகேட்டு எழிற்குயிலும் பூங்கிளியும் 162
கன்றிமனம் நாணியந்தக் காவின் புறத்தொதுங்க,

---

(148) கோகனகம்-செந்தாமரை. (150) மதராசன் பாளையம் - மன்மதன் பரிவாரங்கள். (153) தொட்டுப்பூ-இதழ் நிறைந்த பூ. மாலானாள்-- ஆசைப்பட்டாள். (157) தாதகி-ஆத்தி. (158) சந்தாபம்-மனத்துன்பம். (162) கன்றி-மனம் வருந்தி.

பூமரத்தின் நீழலிலோர் பூங்கொடிபோல் நின்றுலவித் 163
தாம நறுங்குழலி தானொருத்தி யாகிநின்றாள்.

மார்பிலே இளமையான கொங்கைகளை ஏந்தி நிற்பவளைப் போன்ற நவரத்னமாலை, அந்தக் காட்டுச் சோலையில் தன்னந்தனியாக இருக்கிற இந்தச் சமயத்தில் சிறந்த வாள்வீரனான கூளப்பநாயக்கன் அங்கு வருகிறான். அவன் வருவது எப்படி இருக்கிறதென்றால் மன்மதனே மனித உருவத்தில் வருவது போலத் தோன்றுகிறதாம். அதுவும் ஒரு சமயம் மன்மதனைப் பரமசிவன் தனது நெற்றிக்கண்ணால் எரித்ததை நினைத்து, பகைமை உணர்வோடு, அந்தச் சிவபெருமானை வெல்வதற்குக் கூரிய அம்பைத் தேடுவதுபோல வருகிறானாம்!

அப்படி அங்கே வருகையில், நவரத்ன மாலையைக் காண்கிறான். அம்புகளையும் கண்டுவிடுகிறான். அவன் கண்கள் குளிர நவரத்ன மாலையைக் கண்டானும். அவளழகைக் கண்ட கூளப்பநாயக்கனுக்குப் பலவித சந்தேகங்கள் தோன்றி விடுகின்றன.

இவள் நீரில் வாழும் தெய்வப் பெண்ணா? நாக கன்னிகையா? தெய்வலோகப் பெண்ணா? மேனகையா? என்றெல்லாம்சந்தேகிக்கிறான்.

பின்னர் அவளை உச்சந்தலையிலிருந்து உள்ளங்கால் வரை உற்றுப் பார்க்கிறான். அவளுடைய கண்கள் இமைத்தன. கால்கள் தரையில் பதிந்து இருந்தன. உடனே அவனுடைய சந்தேகமும் மறைந்தது. எனவே, அவன் மலைகளையடுத்த அந்தப் பூங்காவில் நவரத்ன மாலையை நெருங்கி, அவள் காதுகளில் இனிமையாக தொனிக்கும்படி பேசத் தொடங்குகிறான்.

ஏந்தும் இளமுலைப்பெண் ஏகாந்த மாயிருக்க 164
நாந்தகவீ ரன்பெரிய நாகமகூ ளேந்த்ரதுரை

பண்டுதனை வென்ற பகைதீரக் காமன்உருக் 165
கொண்டு சிவனைவெல்லக் கூர்அம்பு தேடுதல்போல்,

வண்டுலவும் போது மலர்ந்தபெருஞ் சோலைவளம் 166
கண்டுலவும் போதில்எதிர் கண்டான் விழிகுளிர;

நீரரமின் னாளோ நிசநாகக் கன்னிகையோ 167
சூரரமின் னாளோ, சுரலோக மேனகையோ?

கண்ணிமையும் மண்ணிலிட்ட காலும் மனந்திகைத்த 168
எண்ணம் அகற்றியதால் இவ்வுலகில் பெண்ணரசே!

என்றடுத்து மின்னாள் இருசெவிக்கும் இன்பமுறக் 169
குன்றடுத்த பூங்காவிற் கோமான் உரைக்கலுற்றான்:

பிரமித்துப்போன கூளப்பநாயக்கன், நவரத்ன மாலையை நோக்கி, "பெண்ணரசே! உன்னுடைய ஊர் எது? நீ இருக்கும் உலகம் எது? உன்னுடைய பேர் என்ன? இவைகளைப் பற்றி ஏதாவது ஒரு வார்த்தை பேசினால் ஆகாதோ?" என்று படபட வென்று கேட்டான்.

பிறகு பஸ்மாசுரன் என்ற அரக்கன் ஒருவன் சிவபெருமானைக் குறித்துத் தவம் செய்ய, அதைக் கண்டு மகிழ்ந்த சிவன். அவன் வேண்டிய வரத்தை வழங்கினாராம். யார் தலையில் அவன் கை வைத்தாலும் அவர் அழிவார் என்ற அந்த வரத்தைப் பெற்ற அந்த அசுரன், வரமளித்த பரமசிவன் தலையிலேயே கைவைக்க வந்தானாம். வரம் பொய்க்கலாகாதே என்றெண்ணிய சிவபெருமான், 'ஐவேலிக்காய்' என்ற ஒரு காட்டுச் செடியின் அடியில் ஒளிந்து கொண்டாராம். இந்த ஆபத்தான நிலையில் திருமால் அழகிய பெண்ணுருவம் தாங்கி, மோகினி ரூபத்தில் வந்து அந்த அசுரனை மயக்கி, அவனைத் தன் தலையிலேயே தன் கையை வைத்து அழித்துக் கொள்ளும்படி செய்தாராம். "அத்தகைய மோகினிதானோ நீ" என்று கேட்கிறான் கூளப்பன்.

பிறகு மற்றும் ஒரு கதையை ஞாபகப்படுத்துகிறான் தலைவன். "பந்தாடும் கைகளை உடையவளே! ஒரு காலத்தில் சிவபெருமானை தவத்தினின்றும் கலைத்த காரணத்தால், அவரது கோபத்திற்கு ஆளாகிச் சாம்பலாகி எரிந்து போன மன்மதனைத் திரும்பவும் பெற வேண்டி சிவபிரானிடத்தில் மன்றாடி ஓரளவு வெற்றியும் பெற்றாளே, அந்த ரதிதேவி நீ தானோ?" என்றும் கேட்கிறான்.

அதன் பிறகு, இன்னுமொரு கதையில் வரும் பெண்ணைப் பற்றிக் கூறுகிறான். தமயந்தி என்ற அரசிளங்குமரிக்கு சுயம்வரத் திருமணம் நடைபெறுகிறது. அந்தச் சுயம் வரத்தில் தமயந்தியின் மீது ஆசை கொண்ட இந்திரன் முதலான தேவர்கள் நளனைப போலவே உருவங் கொண்டு நிற்க, அவர்களுடைய கால்கள் தரையில் பதியாமல் இருந்ததைக் கவனித்துவிட்டு, காதலனை அறிந்து, அவனுக்கு மாலை சூட்டிய தமயந்திதானோ நீ" என்றும், "தேவலோகத்து ரம்பை போன்ற பெண்களைப் படைத்து அவர்களைவிட அழகாகப்படைப்பதற்கு மிகவும் வருந்தி உழைத்து உன்னைப் பிரமதேவன்தான் படைத்தானோ என்றும், தன்னுடைய எழிலால் இந்திரனைக்கூட மயங்கச் செய்த அகலிகை என்பவள் நீதானோ?" என்றும் அவளிடம் கேட்கிறான்.

'ஊரேது இருக்கும் உலகேது உமதுதிருப் 170
பேரேது, வார்த்தையொன்று பேசினால் ஆகாதோ?

ஐவிரலிக் குள்ளே அமர்ந்த சிவனார்க்குத் 171
தெய்வ வடிவெடுத்த சேயிழையும் நீர்தாமோ?

பந்தெழுப்புங் கையால், பரன்எரித்த மன்மதனை 172
வந்தெழுப்பிக் கொண்ட மகராசி-நீர்தாமோ?

பண்டுநள ரூபம் பலரெடுக்க வேநளனைக் 173
கண்டுமண மாலையிட்ட காரிகையும் நீர்தாமோ?

(165) பண்டுதனை வென்ற-முன்பே தனனை வென்ற. (167) நீரரமினனாள்-நீரில வாழும் நங்கை. சூரரமினனாள்-தேவ கன்னிகை. சுரலோகம்-தேவலோகம்.

தெய்வரம்பை மின்னார் திருவழகெ லாந்திரட்டிக் 174
கைவருந்த வேதன்உமைக் கற்பித்து விட்டானோ?

என்பட்ட மென்றுவரும் இந்திரனார் பட்டமெலாம் 175
தன்பட்ட மாக்கும் சமர்த்தியார் நீர்தாமோ?

பிறகு அவளுடைய அழகை கூளப்பநாயக்கன் வர்ணிக்கத் துவங்குகிறன். 'நீங்கள்' என்று பெண்ணை மரியாதையுடன் அழைக்கிறன்-கூளப்பன்,

"கடலிலும், மலையிலும் ஓடித்திரியும் கருமேகம், உங்கள் கூந்தலுக்குத் தோற்றுத்தான் ஓடுகிறதோ?" என்றும்,

"உங்களுடைய நெற்றியைப் பிறைச் சந்திரன் என்று உவமை கூறினல், பிறைச் சந்திரன் 'சுட்டி' என்னும் நகையை அணிந்து நான் பார்த்ததில்லையே!" என்றும்,

"படைப்புக் கடவுளான பிரமதேவன் வில்லைப்போல் படைத்திருக்கும் உங்கள் புருவத்திற்கு, மன்மதனுடைய கரும்பு வில் ஒப்புவமையாக முடியுமா?" என்றும்,

"ஒரு சமயம் நான்கு வேதங்களையும் ஒரு அரக்கன் கடலுக்குள்ளே மறைத்துக் கொண்டான். உடனே திருமால், மீனுருவம் தாங்கி, அந்த வேதத்தைக் காப்பாற்றினராம். உங்களுடைய இரண்டு விழிகளாகிய மீன்களை எந்த வேதத்தைக் கண்டு பிடிப்பதற்காகப் படைத்திருக்கிறன்" என்றும்,

"மன்மதனுடைய புகழைக் குறைக்கக் கூடிய மீன் கொடியின் மீனைப்போன்றும், அவனுடைய மலர்க்கணைகளில் ஒன்ருகிய கருநில மலர் போன்றும், அவனுடைய மேனி நிறத்தைப் போன்று கருமை நிறமே கொண்டது உங்கள் வாள்விழிகள்" என்றும்,

"வல்லயம் போன்ற சுழல் ஈட்டிக்கும் வாள், வேல் போன்ற ஆயுதப் படைகளுக்கும் நான் போரிலே பயந்து ஒதுங்க மாட்டேன். ஆனல், உம்முடைய கூறிய அம்பு போன்ற விழியைக் கண்டு நான் பயப்படுகிறேன்" என்றும்,

"குமிழியை உங்களுடைய மூக்குக்கு உவமையாகச் சொல்லலாம். ஆனல், உமது மூக்கிலே அணிந்திருக்கும் முத்து மூக்குத்தி அந்தக் குமிழுக்கு இல்லையே! ஆகவே, குமிழ் மூக்கு என்று நான் சொன்னல் முத்தமிழில் வல்லவர்கள் அந்த உவமையை ஏற்றுக் கொள்ள மாட்டார்களே!" என்றும்,

"உமது கபோலத்திற்கு மாங்கனியை உவமை சொல்லலாம். ஏனென்ருல் காமக்களியாட்டத்தில் கபோலம் மாங்கனி போல் சுவைக்கப்படுகிறது. காதுக்கு வள்ளை மலரை ஒப்பிடலாம். ஆனல் உம்முடைய பல்வரிசையின் அழகுக்கு எதை உவமையாகச் சொல்வது என்று எனக்கு விளங்கவில்லை" என்றும்,

"உமது வாயிதழ்களுக்கு செம்பவளத்தை உவமையாகச் சொல்லலாம். ஆனால் செம்பவளத்தில் முத்தம் கிடைக்காதே!" என்றும்,

"உமது மார்பகத்தை யானையின் மத்தகங்களுக்கு உவமையாகச் சொல்லலாம். ஆனால் சுந்தரவதனம் படைத்த உமது முகத்திற்கு உவமையாக எதைச் சொல்வது?' என்றும்,

"உங்களுடைய கழுத்தை சங்கிற்கு ஒப்பிடலாம் என்றும், அந்த சங்கிலே கலவிக் களியாடலில் நகக் குறி செய்யும் அடையாளங்கள் எதுவும் செய்யமுடியாதே!" என்றும்,

"உங்களுடைய தோளுக்கு மூங்கில்தான் சரியான உவமையென்று சொன்னால், மின்மினிப் பூச்சியை பெருந் ஜோதி வீசும் சூரியனுக்கு உவமை சொல்வதைப் போலல்லவா இருக்கும்" என்றும்,

"உங்கள் விரல்கள் காந்தள் மலர்கள் போலவே இருப்பதைக் கண்டதால்தான், காந்தள் மலர்ச் செடிகள்காட்டிற்குச் சென்று வரம் பெறத் தவம் செய்யப் புறப்பட்டிருக்கவேண்டும்" என்றும்,

"உங்கள் விரல்கள் தம்புருவை மீட்டி இசையெழுப்ப வல்லது. அத்தகைய பவள விரல்களைப் போல தன்னால் இசையெழுப்ப முடியாத செம்பவளத்தை உமது விரல்களுக்கு ஒப்பான உவமை வாய்ந்தது என்று எப்படி நான் சொல்வது!" என்றும்,

"உங்கள் கட்டை விரலின் நகத்திற்கு கிளியின் மூக்கை உவமையாகச் சொல்லலாம். ஆனால் அந்தக் கிளி உங்களுடைய பேச்சுக்குத் தோற்றுவிடும்; ஆகவே அதை எப்படி நான் உவமையாகச் சொல்வது?" என்றும்,

"பாடல் இயற்றுபவன் முதன்முதலாகப் பாடலின் இயல், இலக்கணம் இவைகளை நன்றாகக் கற்றறிய வேண்டும். அதன் பின்னர் பல பல பாடல்களைப் பாடிப் பழகிய பிறகு பெரியதொரு காவியத்தை எழுதிமுடிக்க வேண்டும். பின்னர் அந்தக் காவியத்தை கவிஞன் ஒருவன் அரங்கேற்றுவதைப் போல, உலகத்தில் முதன் முதலாக பிரளயக் காலத்துத் தாமரையில் தோன்றிய பிரமதேவன், தந்தச்சிமிழ், தாளவட்டம், வம்பு முதலியவைகளைப் படைத்துப் பழக்கம் ஏற்பட்ட பிறகு, அவைகளின் உருவத்தையும், யானையின் கொம்பைப் படைத்து அதன் கெட்டியான தன்மையையும், தேங்காய், பொற்குடம் முதலியவைகளைச்செய்து அவற்றின் திரட்சியையும் பருமனையும் தெரிந்துகொண்டு, மேரு போன்ற மலைகளையெல்லாம் செய்து செய்து பழக்கப்பட்ட பின்னர் உங்களுடைய கொங்கைகளைப் படைத்தானோ?" என்றும் "தாமரையை அடக்கும் சூரியனும், குமுத மலரையடக்கும் சந்திரனும், கயமுகன் என்ற யானைமுக அசுரனின் மத்தகத்தைப் பிளந்த விநாயகப்பெருமானும் உங்களுடைய தனபாரத்தின் எழில் கண்டு பகையடக்கத்தான் பிறந்தார்களோ?" என்றும், "மெல்லியளே! உங்களுடைய இடுப்பை 'உண்டு' என்று சொல்வதற்கு ஒரு பிரமனும், 'இல்லை' என்று சொல்லும்படியாகப் படைப்பதற்கு மற்றொரு பிரமனுமாக இரண்டு பிரம்மாக்கள் உண்டோ?" என்றும்

"வரால் மீனைக் கவ்விக்கொண்டு நிற்கும் நண்டுபோல உமது முழந்தாள் அமைந்துள்ளது, உமது காலடிகளோ ஆமையைப்போல் அமைந்துள்ளது!" என்றும்,

"விரல்களும் பாதமும் கூடிய உமது கால் ஐந்து தலைப் பாம்பாகவும் அதன் விரல்கள் அந்தப் பாம்பின் படமெடுத்த தலையைப்போலவும் இருக்கிறது!" என்றும்,

"மேகத்தைக்கண்டு ஆடும் மயில் போன்ற சாயலையுடையது உமது உடலின் சாயல்!" என்றும்,

"உமது பின்னழகைக் கண்டால் மன்மதன் அந்த அழகிலேயே மயங்கித் தன்னுடைய காதல் மனைவியான ரதிதேவியைத் திரும்பவும் நாடமாட்டான்!" என்றும்,

"உன்னுடைய முன்னழகை முனிவர்கள் கண்டுவிட்டால் தவஞ் செய்து பெறக்கூடிய ஸ்வர்க்க போக இன்பத்தைக்கூட வெறுத்துவிட்டு, உன்னையே கண்டு, அவர்கள் மயங்கி நிற்பார்கள்" என்றும் வருணிக்கிருன் கூளப்பன். இந்தப் பகுதியை கண்ணிகளில் கவிஞர் வர்ணித்துள்ள அழகைப் பாருங்கள்.

தெண்டிரையில் ஓடிமலைச் சென்றேறி வாய்வெருவிக் 176
கொண்டல் திரிவதுங்கள் கூந்தலுக்குத் தோற்றலவோ?

தேய்ந்தபிறை யுங்கள் திருநுதல் என்ருல்அதிலே 177
ஆய்ந்தமணிச் சுட்டி யணிந்திருக்கக் காணேனே!

பூமன் வளைத்த புருவத்துக் கந்தரதி 178
காமன் வளைத்த கரும்புருவம் ஒப்பாமோ?

அவ்வேதங் கொண்ட அருங்கயல்போல் வேதன்இனி 179
எவ்வேதங் காணப் படைத்தான் இருவிழியை?

சன்னதவேள் கீர்த்திப்பிர தாபம் புரிந்தகொலை 180
வன்னமென மூன்றும் இருப்பதுங்கள் வாள்விழியே!

வல்லையப்போ ருக்கொதுங்கேன் வாள்வேல் படைக்கொதுங்கேன்
மெல்லிநல்லீர் உங்கள்விழி அம்புக்கு அச்சமுற்றேன்

தூக்குமூக் குத்திமுத்துத் தூக்காக் குமிழையுங்கள் 182
மூக்குக் குவமைசொன்னுல் முத்தமிழோர்க்கு ஒவ்வாதே!

அரும்பதவுரை: கண்ணி (176) தெண்டிரை–கடல். (178) பூமன் வளைத்த –பிரமன் உனக்குப் படைத்த. கரும்புருவம்–கரும்பை யொத்த வடிவ முடைய புருவம். (180) சந்தனவேள்–மன்மதன்.

மாங்கனிக போலமென்றும் வள்ளைகா தொக்குமென்றும் 183
பாங்கில்உ வமைகண்டேன் பல்வரிசைக்கு என்சொல்வேன்?

வித்துருமங் தன்னையுங்கள் மெல்லிதழ்என் ருல்அதிலே 184
முத்தங் கிடைக்கும்அதில் முத்தங் கிடையாதே!

இபமான வுங்கள் இந்து முகத்திற்கோர் 185
உபமானஞ் சொல்ல வொருபொருளுங் காணேனே!

சங்கழுத்தும் உங்கள் தனிக்கழுத்தென் ருல்உகிரால் 186
அங்கழுத்தும் ரேகை அதிற்பதிய மாட்டாதே!

தோளுக்கு முங்கிலிணை சொன்னற் பெருஞ்சோதி 187
நாளுக்கு மின்மினியை நாவலருஞ் சொல்வாரே!

காந்தள்வனஞ் சென்றதுங்கள் கைபோலுங் தான்இருக்க 188
வாய்ந்ததவம் செய்து வரம்பெறுவோம் என்றலலோ!

தம்புருவை மீட்டிஇசைத் தந்திதனில் ஏற்றறியாச் 189
செம்பவளம் உங்கள் சிறுவிரலுக்கு ஒப்பாமோ?

வார்த்தைக்குத் தோற்ற வனக்கிளியின் மூக்குமுனை 190
சேர்த்தங்கம் என்றுவமை செப்பினுல் ஒப்பாமோ?

பாவின்இயல் கண்டுபல பாடத் தெரிந்துபெருங் 191
காவியத்தைப் பாடிக் கவிஞர்அரங் கேற்றுதல்போல்,

முந்தச் செழுங்கமலத் துள்ளே முளைத்தெழுந்தோன் 192
தந்தச் சிமிழ்படைத்துத் தாளவட்டங் தான்படைத்து,

வம்பைச் சமைத்து வடிவுகண்டு மால்யானைக் 193
கொம்பைச் சமைத்துக் குணஞ்சற் றதிலறிந்து

தேங்காயைச் செய்து திரட்சிகண்டு, பொற்குடத்தைப் 194
பாங்காகச் செய்து பணைப்பதிலே கண்டறிந்து,

விந்தைதரு மேருமுதல் வெற்பெல்லாஞ் செய்தவன்கை 195
வந்ததன்பின் உங்கள் வனமுலையைச் செய்தானே?

அரும்பதவுரை: கன்னி (183) கபோலம்-கன்னம். (184) வித்துருமம்-பவளம். (185) இபமான-யானைபோன்ற. இந்து-சந்திரன். (186) உகிரால்-நகத்தால். (187) பெருஞ்சோதி நாள்-சூரியன். (194) பணைப்பு-பருமை.

காமன்இமை யாமல்வைத்த கண்கறுப்புப் பாய்ந்ததுவோ, 196
வாமமுலைக் கண்கள்மணிக் கறுப்பையென் சொலுவேன்?

சூரியனும் இந்திரனுந் தும்பிமுகத் தோனும்உங்கள் 197
பாரமுலையின் பகையடக்கவோ பிறந்தார்?

ஆலோ வயிறுதனி ஆலிலைமேற் பள்ளிகொள்ளும் 198
மாலோ உரோம வகுப்பழகை யென்சொல்வேன்?

வந்திச் சுழியை வலமாகச் சுற்றிலும்நீர் 199
உந்திச் சுழிகளுங்கள் உந்திச் சுழியாமோ?

மெல்லிநல்லீர்! உங்கள்இடை மின்கொடிபோல் உண்டெனவும்
இல்லையென வும்படைக்க இரண்டு பிரமன்உண்டோ?

வாமமுதற்சாதி வடிவினுல்அல் குலுஞ்செங் 201
தாமரைப்பூப் போலிருக்குஞ் சந்தேகம் வேறுமுண்டோ?

வாழைக் குறங்கல்குல் மண்டபமாம் மன்மதனுக்(கு) 202
ஏழைக்கு இரங்குமிடம் என்றென்று அறியேனே!

செவ்வரால் கௌவிநின்ற சீரலவ ஞேமுழந்தாள் 203
அவ்வரா லைச்சுமத்த ஆமையோ பொன்னடிதான்?

அஞ்சு தலையரவோ அஞ்சுவர லும்படமோ 204
மஞ்சுவரக் கண்ட மடமயிலோ உம்சாயல்?

பின்னழகைக் காணில்ரதிப் பெண்ணுமதன் நாடுவனே? 205
முன்னழகைக் காணின் முனிவர்தவம் செய்வாரோ?

இப்படியெல்லாம் கூளப்பநாயக்கன் வருணித்தபோதிலும் அந்த நவரத்னமாலை தன்னந்தனியாகவும், மௌனமாகவும் நின்று கொண்டிருக்கிருள். உடனே அவளை அவன் வேண்டுகிருன்.

"தோழியர்கள் யாருமே இல்லாமல் தன்னந்தனியாக நிற்கும் தேன் போன்ற பேச்சையுடையவளே! இந்த வனத்தில் நீ வந்திருப்பது நான் செய்த தவப்பயனே?" என்று கேட்கிருன்.

அவளோ மௌனமாக நிற்கிருள். "ஒரு வார்த்தைகூடப் பேசாமல் நீங்கள் மௌனமாக நிற்கிறீர்களே! இந்த மௌனமே ஒரு வேதமோ? ஏனென்ருல் முன்னொரு சமயம் சிவபெருமான் தக்ஷிணமூர்த்தி வடிவமாக கல்லால மரத்தின் அடியில் வீற்றிருந்து' 'சின்மய' முத்திரையைக் காட்டி 'பசுபதி' மந்திரத்தை சனகாதி முனிவர்கள் நால்வருக்கும் தனது மௌன முத்திரையால் உணர்த்தி அருளினுர். அந்த மந்திர மௌனம் மந்திரம் ஆனது போல், உங்களுடைய பேச்சும் மௌனமாகவே உள்ளதே!" என்றும் கூறுகிருன்.

அப்போதும் அவள் வாய் திறக்கவில்லை. சிலை போன்ற எழில் உருவங்கொண்டு, வாய் பேசாமல் அவள் மௌனமாக இருக்க,கூளப்ப நாயக்கனுக்கு காதலைவிடக் காமமே மீறுகிறதாம். உடனே,அவன் காமச் சுவை மிகுந்த சொற்களையும், வருணனைகளையும் கூறி வேண்டுகிறான்.

"பரமசிவன் பார்வதியைத் தனது உடலில் பாதியாகக் கொண்டான். இலக்குமி தேவியைத் திருமாலும் தனது மார்பில் வைத்துக் கொண்டான். செங்கமலத்தில் வீற்றிருக்கும் நான்முகனும் சரஸ்வதியை நாவிலே வைத்துக்கொண்டான். நான் உங்களை என் மனத்துக்குள்ளேயே வைத்துக்கொள்வேன்!'' என்றெல்லாம் கூறி,ஏதோ காம மிகுதியால் கூறிக்கொண்டே இருக்கிறான். அந்த வேட்கை மேலும் உச்ச நிலையை அடைகிறது. வர்ணிக்கிறார் கவிராயர்.

சேடியரும் இல்லாமல் தேன்மொழியீர் இவ்வனத்தில் 206
நாடிவரப் பெற்றதும்முன் நான்செய்த மாதவமோ!

ஏதும்ஒரு வார்த்தை இயம்புகிலீர் உங்களுரை 207
வேதமோ? கல்லாலின் மேவுசிவ மந்திரமோ?

பாதி உடலில் பரமன்ஒரு பெண்ணைவைத்தான் 208
மாது ஒருத்திதனை மணிவண்ணன் மார்பில்வைத்தான்

செங்கமல வேதனொரு தேன்மொழியை நாவில்வைத்தான் 209
உங்களைநான் என்மனதுக் குள்ளிருத்திக் கொள்ளேனோ?

இப்படியெல்லாம் பேசிவிட்டு, நவரத்னமாலையை காந்தர்வ மணஞ் செய்து கொள்ளும்படி வேண்டுகிறான்.

"இவ்வளவு நேரமாக என் வார்த்தையைக் கேட்ட நீ எப்படியும் எனக்கு இரங்குவாய் என்றேநினைக்கிறேன். எனவே, உன்னோடு நான் கூடாமல் போகமாட்டேன்'' என்றும்,

"வலைகட்டின பிறகு, அதில் சிக்கிவிட்ட மானை விட்டுவிட்டு நான் அகலமாட்டேன்'' என்றும்,

"தாழ்வான மலைச்சாரலுடையதும், தாழ்ந்து நெருங்கி வளர்ந்துள்ளதுமான காட்டைச் சுற்றுமலேயே, அதிசயமாக எனக்குக் கிடைத்திருக்கும் மயிலைவிட்டு, பிரிந்து செல்வேனோ?' என்றும்,

"எட்டு வகைத் திருமணங்களில் காந்தருவ மணம் என்பதும் ஒரு நியாயமான திருமணம் என்று தெரிந்து கொண்ட பிறகும் இணங்கி சுகித்து திருமணம் செய்வது,சுபசோபனக் கல்யாணமல்லவா?'' என்றும்,

"காட்டிலிருந்த வள்ளியைக்கண்டு காதலித்து கந்தன் செய்து கொண்ட வள்ளித்திருமணமும், மானைப்போன்ற சுபத்திரையை வாள் வீரனான அர்ச்சுனன் மணந்துகொண்டதும், பரஸ்பர சம்மதத்தோடு அல்லாமல் தாய் தந்தையர்களைக் கேட்டா மணந்து கொண்டார்கள்?'' என்று கூறிவிட்டு, "நீயாகவேஎன்னைக்கூடுவதே நியாயம்'' என்றும்,

“மூலக்கோட்டையை கோட்டையாகவுடைய முத்துக்கோமளமே! நான் நிலக்கோட்டை வேந்தன்! இது உனக்கு முன்னமேயே தெரியாதோ?” என்றும்,

“நானே நவபுரியான், நீயோ பெண்களுக்குள் மணி போன்ற பெருமையுடைய நவரத்னமாலை என்று சொன்னால் எதுவும் தாழ்வாகி விடாது!” என்றெல்லாம் பேசியவன் மழை நீரைத்தாங்கிக் கொண்டு பொழிவதற்குத் தயாராக இருக்கும் மேகத்தின் எதிரே சென்று, மழை வேண்டும் என்று வருண செபம் செய்வாருண்டா என்ற நினைப்போடு அவளுடைய கரத்தைப் பற்றினான் கூளப்பன். நவரத்னமாலையும் புளகாங்கிதம் அடைந்தாள். ஒருவித மின்சார சக்தி உடலில் பரவியது போலிருந்ததாம்!

இந்நேரம் என்சொல் இரங்குவீர் எப்படியும் 210
மின்னே உமைக்கலந்து மேவாமல் போவேனோ?

ஓடி வலைகட்டி ஒதுக்காம லேஎளிதில் 211
நாடிய பொன்மானை நான்விட்டு அகல்வேனோ?

தாப்பான காடும் தடவரையும் சுற்றுமல் 212
வாய்ப்பாக வந்த மயிலைவிட்டுப் போவேனோ?

விண்டுநறுந் தேன்சொரிய மென்கமலம் பூக்கக்கண்ட 213
வண்டு படிந்துண்டு மகிழாமற் போவதுண்டோ?

காந்தர்வ நியாயமெனக் கண்டவுட னேயிணங்கித் 214
தோய்ந்திடுகல் யாணமே சோபனக்கல் யாணமன்றோ?

கானுறும் வள்ளிதனைக் கந்தனார் கூடியதும் 215
மானாள் சுபத்திரையை வாள்விஜயன் கூடியதும்,

தாங்களே சம்மதித்தோ தந்தைதாய் சம்மதித்தோ? 216
மாங்குயிலே! என்னை மருவுவதே காரியங்காண்

மூலக்கோட்டை யுள்ளமுத்து மோகனமே, என்னை 217
நிலைக்கோட்டை வேந்தன்என்று நீர்தாம் அறியீரோ?

நானும் நவபுரியான்; நாரியர்சி காமணிநீ! 218
தானும் நவரத்ன மாலையென்றால் தாழ்வாமோ?

அரும்பதவுரை : கண்ணி (212) தடவரை-தாழ்ந்த சாரலையுடைய மலை. (213) விண்டு-இதழ் விரிந்து. (215) கானுறும்-காட்டிலிருந்த. கந்தனார்-முருகன். மானாள்-மான் போன்ற பெண். வாள் விசயன்-அர்ஜுனன்.

என்றுபெருஞ் சூல்கொண்டு இரங்கும் மழைக்கெதிரே 219
சென்று வருணசெபஞ் செய்வது போல்,

தன்னிடத்தில் வைத்தமயல் தாங்காதாட் கிச்சைசொல்லி 220
அன்னவளைச் செங்கை தொடலுமயிர்க் குச்செரிந்தாள்.

நாகரீகமான அந்த நவரத்னமாலையுடன் கடையேழு வள்ளல்களில் ஒருவனுன பேகனைப் போன்ற கூளப்பநாயக்கன் தேன்சொரியும் மல்லிகையும், முல்லைக்கொடியும் படர்ந்த ஒரு மணி மண்டபத்தில் தரையெல்லாம் மலர்கள் பஞ்சணையைப்போல் நிறைந்திருக்க, அதன் மீது மன்மதனும் ரதிதேவியும் போல உட்கார்ந்து கொண்டான். தமிழ் நாட்டு வழக்கப்படி 'வெற்றிலை பாக்கு' போட்டுக்கொள்ள இருவரும் எண்ணுகின்றனர். உடனே பச்சைக் கொட்டைப் பாக்கை சுருள் சுருளாகச் சிவிளடுத்து இருவரும் போட்டுக்கொண்டு, சுண்ணும்பு தடவிய வெற்றிலைச் சுருள்களை இருவரும் மாறி மாறி வாங்கிப் போட்டுக் கொள்கின்றனர். செக்கச் சிவக்க கோவைப் பழத்தைப்போல் அவர்கள் உதடுகள் சிவந்து விடுகின்றன. கொய்து வந்த மலர்களை மாலையாகத் தலைவி தொடுத்து வைத்திருக்கிருள். கூளப்பநாயக்கன் அம்மலர் மாலையை அவளுடைய கொண்டையிலே சூட்டிவிட்டுச் சுகிக்கிருன்.

அவர்களது இருவரின் உடல்களும் தனித்தனியாக இருந்தபோதிலும், உயிர், ஆசை, நேசம், பழக்க வழக்கம் ஆகியவையெல்லாம் அவர்கள் இருவருக்குமே ஒன்றுதான் என்ற நிலையை அடைகிருர்களாம்.

பேகனெனும் பெஞ்சைப் பெரியநா கேந்த்ரதுரை 221
நாகரிக மோக நவரத்ன மாலையுடன்

கோங்கலரும் முல்லைக் கொடியும்நறு மல்லிகையின் 222
பைங்கொடியு மாகப் படர்ந்தமணி மண்டபத்தில்

பூத்துச் சொரிந்தமலர்ப் பூம்பாய லின்மீது 223
வாய்த்த ரதியும்அந்த மன்மதனும் போலிருந்து,

சீவு பிளவருந்திச் செங்கைச் சுருள்பகிர்ந்து 224
கோவைஇதழ் முத்தமிட்டுக் கொய்யுமலர்ப் பூமுடித்து,

கட்டி யணைத்துக் கனிவாய் இதழ்பருகி 225
வட்ட முலைபிடித்து வண்ணத் துகில்நெகிழ்த்தி,

ஆலிங் கனவிதங்கள் ஐந்தும் புரிந்தரவம், 226
போலும் கடிதடமாம் பூவைக் கனிவாக்கி,

பொற்கொம்பும் பூங்கொடியும் பூண்டுதுவண் டாடுதல்போல்
கற்கும்நவ சித்ர கரணவகை பாராட்டி,

குங்குமக தம்பமிடு கொங்கையில்ந கம்பதிய, 227
மங்குலின்இ ருண்டகுழல் மஞ்சரிகள் பின்சரிய,

வைக்குமுக பத்மமுக வட்டமதி யிற்பதிய, 228
நெக்குருகி நெக்குருகி நெற்றிகளின் முத்துதிர,

பாகனைய வாய்மொழிகள் பாதிதடு மாறவொரு 229
பூகமிசை காடைகள் புருவொலிகள் குகுகுவென,

வரிவிழிகள் கடைபுரள மதுரஇதழ் வெளிறஇரு 230
பரிபுரமும் வளையுமிடை பதனமிடை பதனமென,

ஆவியொன்று கூடிரண்டுள் ஆசைஒன்று, நேசம்ஒன்று, 231
மேவும்சம்ப்ர தாயம்ஒன்று வேளைஇந்த்ர போகம்வந்து

அந்தஅனு போகபர மானந்த சம்போகம் 232
தந்தசுகம் போகம் சரிபோக மாய்ப்பெருக,

சோபவிடாய் தீர்த்துச் சுனைநீர் அளைந்துபிர 233
தாபவிடாய் ஆறி யிருக்கும் தருணத்தில்;

இந்தச் சமயத்தில் தலைவனாகிய கூளப்பநாயக்க வேந்தனைத் தேடிக் கொண்டு அவனுடைய பரிவாரங்கள், அவனுடைய காலின் அடிச்சுவடுகளைப் பின்பற்றித் தேடி வருகின்றனர்.

ஒரு காலத்தில் பாண்டியனின் காலடிகளை ஏழு கடல்களும் தேடி வந்த திருவிளையாடற் புராணக் கதையைப் போல, மன்னனின் சேனை சமுத்திரமும், கூளப்பநாயக்கனைத் தேடி மலர்ச்சோலையை நெருங்குகின்றன.

அந்தச் சேனைகள் தன்னைக் காண்பதற்கு முன்னதாக அவர்களுடைய பேச்சுக் குரலைக் கேட்ட கூளப்பநாயக்கன், மின்னலைத் தன்னுள்ளே நிறுத்திவிட்டுச் செல்லும் மேகத்தைப்போல, நவரத்ன மாலையை ஓர் புறத்தே நிறுத்திவிட்டு, சேனைகளுக்கு எதிரே வந்து நின்றான். காட்டிலிருந்து தமது தலைவனாகிய கூளப்பநாயக்கன் வருவதைக் கண்டதும், சேனைகளின் முகங்கள் எல்லாம் சூரியனைக் கண்ட தாமரையைப்போல மலர்ந்தனவாம்!

சேனைகளை வந்தடைந்த கூளப்பநாயக்கன், கொடையிலே சிறந்தவன்! மேகங்கள் அவனிடமிருந்துதான் 'கொடை செய்யும்' வள்ளல் தன்மையை கற்றுக்கொண்டன! அப்படிப்பட்ட கூளப்ப நாயக்கன் தங்

அரும்பதவுரை : கன்னி (221) பேகன் - வள்ளல்களில் ஒருவன். (222) தொங்கு-தேன் (223) பாயல்-படுக்கை. (224) சுருள்-தாம்பூலம். (227) மஞ்சரி-பூங்கொத்து. (233) அளைந்து-நீராடி.

கப் பல்லக்கில் ஏறிக்கொண்டான். பல்லக்கும் சேனைகளும் அந்தச் சண்பகப் பூஞ்சோலையை விட்டுப் புறப்பட்டன.

மந்திரி, தளகர்த்தர்கள் சேனைகள் எல்லாம் முன்னே நடக்க, சந்தையூர் வழியாகக் கூளப்பநாயக்கனின் வேட்டைப்படைகள் ஊர் நோக்கி விரைகின்றன.

கூளப்பநாயக்கனின் தலைநகரான நவபுரியின் எல்லையைப் படைகள் நெருங்கியவுடன் சிவிகையை விட்டுக் கீழே இறங்கிய மன்னன் அகோபில திருமாலை வணங்கி வழிபட்டு, தீர்த்தமும், பிரசாதமும் வாங்கிக்கொண்டு தன் நகரத்திற்குப் புறப்பட்டான். காட்டின் பூங்காவிலிருந்து நகர எல்லைக்கு மீளும் வரையுள்ள காட்சிகளை கண்ணிகள் எவ்வாறு தாங்கி இருக்கின்றன பாருங்கள் :

நவ்வியடி பற்றி நடந்தங்கி எங்கமல்லன் 234
செவ்வியடி பற்றிச் சேனு தளங்தொடர்ந்து
தென்னன் அடிபரவத் தேடிவரும் ஏழ்கடல்போல்; 235
மன்னன் இருக்கும் மலர்க்காவில் வந்தணுகிக்
கண்ணாரக் காணுமுன்னம் காதாரச் சொற்கேட்டு 236
நண்ணார் புகழ்பெரிய நாகமகூ ளேந்த்ரதுரை
மின்னை நிறுத்திவரும் மேகம்போல் மோகமின்னாள் 237
தன்னை நிறுத்திவந்து தானைக் கெதிரானன்
கானில்இருந் தையன்வரக் கண்டோர் முகங்களெல்லாம் 238
பானு வரக்கண்ட பங்கயம்போல் ஆயினவே!
கொண்டல் படிக்குங் கொடைப்பெரிய நாகேந்த்ரன் 289
தண்டிகையில் ஏறியந்தச் சண்பகப்பூங் காவகன்றான்.
மந்திரிதள கர்த்தர்வர மாசேனை முன்நடக்கத் 240
தந்திரதுரை மக்களுடன் சந்தையூர்க் கேமுகமாய்
வந்து, நவபுரியில் வாழும் அகோபிலமால் 241
செந்திருவின் பாதமலர் சேவித்துத் தெண்டனிட்டு,
தீர்த்தமுடன் மாலைத் திருவடிபெற் றுள்மகிழ்ந்து 242
வார்த்தைதவ ருதகண்டன் மால்யானை மீதேறி,

யானை மீது ஏறிக்கொண்டு நகரப்பிரவேசம் செய்கிறன் மன்னன் கூளப்பநாயக்கன். தாரை, நவுரி, தவண்டை, துடி, நாதசுரம், பேரிகை எக்காளம், பெரிய மேளம் ஆகிய பலவகை வாத்தியங்கள் முழங்கு

அரும்பதவுரை: கண்ணி (234) நவ்வி-மான். (235) தென்னன்-பாண்டியன். (237) தானை-சேனை. (239) தண்டிகை-சிவிகை.

கின்றனவாம். வேலைக்காரர்களும், கட்டியக்காரர்களும், "பெஞ்சை நகர் வேந்தா! பிரதாப நிகளங்கமல்லா! தூங்கா, சுவாமி! ரணவீம ராயா! ரவுத்ர மிண்டா! திர சுத்த வீரா!" என்றும் "சுப்ரதிப நாவலர்க்கு உதார குணத்தோடு பொருள் வழங்கிய வள்ளலே!" என்றும் "பகைவனை அழிப்பவனே!" என்றும்கட்டியங்கூறுகின்றனராம். உடனே மகதர், அங்கர், கவுடர், வங்கர், வடகலிங்கர், குடகர், கொங்கர், குகுதர் போன்ற மன்னர்கள் கூளப்பநாயக்கனைப் பணிகிறார்களாம்.

இவ்வளவு சிறப்புகளுடன் மன்னன் இந்திரனைப்போலவும், உலகத்துச் சந்திரன் போலவும் தர்பாருக்குச் செல்கிறான். உடனே கட்டியக்காரன் "சாமி! பராக்கு; பராக், எச்சரிக்கை!" என்று சூரியனின் வருகையை அறிவிப்பது போல அறிவிக்கிறார்களாம்.

வேந்தன் கூளப்பன், வெண் கொற்றக் குடை நிழலில், இருபுறமும் கவுரிமான் குஞ்சங்கள் விசவும், மை திட்டிய குமரிப்பெண்கள் ஆலத்தி சுற்றவும், வருகின்றான். அவன் வரவைக் கேட்டு, மார்பிலே போட்டிருக்கும் மாலை தரையில் விழுந்து விடுவது போல ஓடி வருகிறார்களாம் சில பெண்கள். சில மங்கையர் கட்டியிருக்கும் புடவை நழுவிக் கொண்டிருப்பது கூடத் தெரியாமல் ஓடி வருகிறார்களாம்! இன்னும் சில குமரிகள், தான் அணிந்திருக்கும் பூமாலையை வேந்தன் தன் மீது தான் வீசுவான் என்ற ஆசையில், கையில் இருக்கும் வளையல் ஒன்றோடொன்று மோதி உடையக் கூடிய வேகத்தில் ஓடி வருகிறார்களாம்!

இன்னும் சில பெண்களின் மனது, வேந்தனைத் தேடி ஓடுகிறதாம். அப்படி தன்னையறியாமல் ஓடும் அந்த மனத்தைப் பிடிப்பதற்கென்றே அவர்கள் உடலும் ஓடுகிறதாம்! பிறகு ஓடி ஓடி களைத்து விழுகிறார்களாம்!

அது மட்டுமா? நவரத்னமாலை தலைவனின் உதடுகளில் பதித்த முத்த வடுக்களைக் கண்ட சில நங்கைகள் வேந்தன் தங்களுக்கு இரங்காமல், மற்றொருத்திக்கு இவ்வாறு இணங்கி இருக்கிறானே என்ற ஆத்திரத்தினால் தங்கள் உதட்டை தாங்களே கடித்துக் கொள்கிறார்களாம்!

பெண்களெல்லாம இப்படி ஒரு பரபரப்பைக்காட்டுகையில் நவரத்ன மாலையை அடைந்த வாள்வீரனான கூளப்பன், தன் எதிரே வந்த மான்களைப் போன்ற பெண்களைக் கண்டும், காணாததுபோல தன்னுடைய 'சருவ சித்தி' என்ற பட்டத்து யானையை விட்டுக் கீழே இறங்கி, சூரியனைப் போன்று அரண்மனைக்குள் சென்று விடுகின்றான்.

தாரை நவுரி தவண்டைதுடி நாகசுரம் 243
பேரிகையெக் காளம் பெரியமே ளந்தொனிக்க,

கஞ்சுகியர் கைப்பிரம்பர் கட்டியர்முன் கைநீட்டி 244
'பெஞ்சைநகர் வேந்தா! ப்ரதாபநிக ளங்கமல்லா;

துங்கா, சுவாமி! துரைராச சண்டசய 245
ரங்கா, ரணவீம ராயா, ரவுத்ரமிண்டா!

தீரசுத்த வீரசுப்ர தீபகர்த்த நாவலர்க்கு 246
தாரசத்ரு சேதநல்ப்ர தாபவஜ்ர தேகஉக்ரா!

மகதர்அங்கர் கவுடர்வங்கர் வடகலிங்கர் குடகர்கொங்கர் 247
குகுதர்வந்து பணியும்இந்த்ர கொலுவிருந்த புவனசந்த்ரா!

சாமீ, பராக்குப் பராக்கெச் சரிக்கையெனச் 248
சோமோ தயம்போல் துலங்கு குடைநிழற்றப்

பக்கக் கவரிரெட்டைப் பாவாடை வீசிவர 249
மைக்கண் குமரியர்கள் ஆலத்தி வந்தேந்த,

மாலை சரிய வருவார் சிலமடவார் 250
சேலை சரிய வருவார் சிலமடவார்

தண்ணுலவும் பைந்தார் தருவான் எனவோடி 251
வண்ணவளை தோற்று வருவார் சிலமடவார்;

தேடுபுகழ் வேந்தனுடன் செல்லுமன தைப்பிடிக்க 252
ஓடுதல்போ லோடியாடி ஓய்வார் சிலமடவார்;

வல்லியனை யாள்பதித்த வாய்வடுவைக் கண்டுதங்கள் 253
மெல்லிதழிற் பல்பதித்து மீள்வார் சிலமடவார்;

ஒருமானைப் பற்றிவிரைந் தோடியவாள் வேந்தன், 254
வருமான் அனேகம்எதிர் வந்துநிற்கப் பாராமல்,

வாழி சருவசித்தி வாரணத்தில் தானிறங்கி 255
ஆழி யனையான்பொன் னரண்மனைக்குள் வந்திருந்தான்.

கூளப்பநாயக்கன் அரண்மனையில் இருக்கும் அதே சமயத்தில் அன்ன நடைப் பெண்ணான நவரத்னமாலை, சண்பகப் பூஞ்சோலையில் தலைவனைக் காணாமல் தேடித் தவிக்கிறாள்.

பெரிய கொடை வள்ளலான கூளப்பன், தன்னைப் பிரிந்து சென்று திரும்பவும் வராததைக் கண்டு அவளுக்கு மயக்கமே வந்து விடுகின்றது என்றாலும் சமாளித்துக்கொண்டு அவனைத் தேடுகிறாள்.

அரும்பதவுரை: கண்ணி. (244) கஞ்சுகியர்-பணியாள், (245) துங்கன்-உயர்ந்தவன். (248) சோமோதயம்-சந்திரோதயம். (225) சருவசித்தி வாரணம்-கூளேந்திரனின் பட்டத்து யானை.

தன்னைப் பிரிந்துசென்ற ஆண்யானையைக் காணவில்லையே யென்று பெண் யானை தேடுவதைப் போல, நவரத்னமாலை மலர்மண்டபத்தையும், தண்ணீர் சுனையையும் தேடினுள். பெருமூச்சு விட்டாள். கால்கள் சிவக்க ஓடினுள்; ஓடினுள். ஓடிக்கொண்டேயிருந்தாள். வேந்தன் கூளப்பனின் உருவெளித் தோற்றம் தோன்றுகிறது. அதைக் கண்டு அதன் காலடியில் வீழ்ந்து "என்னிடத்தில் என்ன கோபம்?" என்றுள். எழுந்திருந்தாள். கரும்பு வில்லை வளைத்த ஒருவன் தன் கண்முன்னே நிற்பதைக் கண்டாள். அவளால் தன் கண்களையே நம்ப முடியவில்லை. காமனுடைய கைப்பாகத்தைப் போல, கூளப்பனின் கைகள் பதிந்த மார்பகத்திலே தோன்றிய வேதனையில் வேல் பாய்ந்து, பின்னர் துடிக்கின்ற மானைப்போல் புரண்டாளாம். கால்களை ஆயுதங்களாகக் கொண்டு குப்பையைக் கிளறுகின்ற சேவலைக் கொடியாகக் கொண்ட முருகனின் கை வேலைப் போன்ற கண்களையுடைய நவரத்னமாலை திருமாலின் ஆயுதமான சங்கு ஈன்ற முத்துக்களைப் போல விரக தாபத்தால், தன்னுடைய வேல் போன்ற கண்களிலிருந்து கண்ணீர் வடிய விடுகிறுள். அழுது அழுது புலம்ப ஆரம்பிக்கிறுள்.

அழகு நீங்காத மரங்கள் ஒவ்வொன்றிடத்திலும் சென்று தன் காதலனைப் பற்றி விசாரிக்கிறுள். "மாதவியே! புன்னையே! சண்பகமே! கற்பகமே!" என்றெல்லாம் அந்த மரங்களை அழைத்து, "கொடை வள்ளலான என் காதலனைக் கண்டீர்களோ?" என்று கேட்கிறுள்.

பிறகு அரச மரத்திடத்திலும், மலர்கள் நிறைந்த பூவரசு மரத்திடத்திலும் சென்று, "புவியரசான என் காதலனைக் கண்டீர்களோ?" என்று கேட்கிறுள்.

சூரியன் செல்லும் திசையை நோக்கித் திரும்பும் சூரியகாந்தி மலரை நோக்கி, "ஏ சூரிய காந்தமே! என் ஆசை காந்தனை நீ கண்டாயா?" என்று கேட்கிறுள்.

அதுவும் பதில் பேசவில்லை. உடனே, 'தன்னிடத்தில் ஆசைப்பட்டு, தனக்கு இதமாகப் பேசி, தன்னோடு சேர்ந்த காதலன், உண்மையிலே காதலித்திருந்தால் இப்படி அந்தரங்க விஷயம் எதையும் சொல்லாமல் போவானே' என்றும் நினைக்கிறுள். உடனே சந்தேகம் வந்து விடுகிறது.

'நான் கானகத்தில் தனியாக உலாவுவதைக் கண்டு தேவேந்திரன்தான், என்னைச் சேர்ந்து சுகித்துச் சென்றானே?' என்றெண்ணித் தவிக்கிறுள். தந்திகளைக் கொண்ட வீணையை ஒளித்து வைத்துவிட்டு ஆகாயக் கந்தருவன்தான் தன்னைச் சேர்ந்து சுகித்து விட்டுச் சென்றானே என்றும் சஞ்சலம் கொள்கிறுள்; பிறகு சிந்தித்துப் பார்க்கிறுள். தெளிவு ஏற்படுகிறது. அவனை இந்திரன் என்றால் தன்னைச் சேர்ந்த அவனுடலில் ஆயிரங்கண்கள் இருக்கவில்லையென்றும், கந்தருவன் என்றால் கண்கள் இமைத்திராதே யென்றும் எண்ணுகிறுள். எனவே, அவ்விருவரும் வரவில்லையென்றும், தன்னைச் சேர்ந்து மகிழ்ந்து சென்றவன்

மழையைப்போன்ற கொடையாளியானகூளப்பநாயக்க மன்னனே தவிர வேறு யாருமில்லை யென்றும் தெளிவடைகிருள்.

“அப்படி அவர் என்னைப் பிரிந்து சென்றதன் காரணம் என்ன? ஒருவேளை அவரையே என் மனதுக்குள்ளே ஓவியம்போல் தீட்டுவதற்குத் தானே?” என்றும், “கூடிக் கலந்து இன்பம் தந்து விட்டுத் தான் சென்ருல் இந்தப் பேதைப் பெண் தேடுவாளே, தயங்குவாளே என்று கூடக் கொஞ்சமும் எண்ணுமல் அவர் சென்றுவிட்டாரே!”

பிறகு அவளுக்கு இன்னுஞ் சில யோசனைகள் தோன்றுகின்றன. “இது போலவே கபடம் செய்வார் என்று நான் முன்னமே அறிந்திருந்தால், அவர் என்னைக் கூடுவதற்கு முன்னதாகவே அவரிடத்தில் ‘பிரியேன்’ என்று மூன்று முறைகள் கையடித்து சத்தியம் வாங்கியிருப்பேனே!” என்றும், ‘தன் நெஞ்சத்தைப் போலவே என் நெஞ்சமும் இருக்கும் என்று என்னைத் தழுவி விட்டு, இம் மாதிரியாகப் பிரிந்திருக்க வேண்டும் என்ருல் அவர் என்னை வன்நெஞ்சமுடையவள் என்றே நினைத்து விட்டார்!” என்றும் எண்ணுகிருள்.

பிறகு எப்படியாவது தன் காதலனைத் தேடிக்கண்டுபிடித்துவிட வேண்டுமென்றும் முடிவு செய்கிருள். ஆனல் அவரை எங்கே தேடுவ தூஊர் எது? யோசிக்கிருள். கொஞ்சம் நினைவு, அவளிடத்தில் கொஞ்சிய போது ‘ஒன்பது ஊர்’ என்றல்லவா கூளப்பன் சொல்லியிருக்கிருன். ஓர் ஊர் என்ருல் எப்படிபாவது தேடிக்கண்டு பிடித்து விடலாம் ஒபன்து ஊர் என்ருல் எப்படித் தேடுவது?” என்று மயங்குகிருள்! ஐயோ பாவம்!

இப்படி நினைத்து நினைத்து வருந்தி அவள் எக்காலத்திலும் ஜோடியைப் பிரியாத அன்றில் பறவையைப்போல, காதலனைப் பிரிந்த விரக தாபத்தாலும், சோகத்தாலும் மயங்கி விழுந்து விட்டாள். தலைவனை அவள் தேடுவதையும் காதலனைப் பிரிந்த சோகத்தோடு அவள் புலம்புவதையும் கண்ணிகள் எப்படி அறிவிக்கின்றன?

இங்கே துரைப்பெரிய நாகேந்த்ரன் வீற்றிருக்க, 256
அங்கே மலர்க்காவில் அன்னநடைப் பெண்பெருமாள்

பேராளன், பெஞ்சைப் பெரிய நாகேந்த்ரதுரை 257
வாராமை கண்டு மதிமறந்து மெய்சோர்ந்தாள்.

ஆனதனைக் காணுது அரும்பிடிபோய்ப் பார்ப்பதுபோல், 258
மானனையாள் அந்தமலர் மண்டபமும் நீர்ச்சுனையும்

தேடினுள், மூச்செறிந்தாள்; செங்கமலத் தாள்சிவப்ப 259
ஓடினுள்; எங்கோன் உருவெளியைத் தெண்டனிட்டாள்;

அரும்பதவுரை: கண்ணி. (256) பெண்பெருமாள்-நவரத்னமாலை. (257) பேராளன்-பெருமைக் குரிய ஆட்சியாளன்.

என்னிடத்திற் கோபமே தென்ருள் எழுந்திருந்தாள், 260
கன்னல்வளைத் தங்கொருவன் வந்தெதிர்க் கண்டயர்ந்தாள்,
காடுருவக் காமன்எய்த கைப்பாணம் தைத்தமுலை 261
ஊடுருவ வைவேல் உருவியமான் போல்உழன்ருள்.
காலா யுதக்கொடியோன் கையா யுதவிழியாள் 262
மாலா யுதமீன்ற மாமணியைத் தான்உதிர்த்தாள்.
பொற்பகலா மாதவியே, புன்னையே, சண்பகமே, 263
கற்பகமே, என்னுசைக் கற்பகத்தைக் காணீரோ?
முன்மான் பிணைநடக்க மோகமாய்ப் பின்தொடரும் 264
பொன்மானே! என்னுசைப் பூமானைக் காணீரோ ?
தோய்ந்த ரவியைத் தொடர்ந்த முகசூர்ய 265
காந்தமே! என்னுசைக் காந்தன்வரக் காணீரோ ?
என்னிடத்தில் மாலாகி இச்சைசொல்லிச் சேர்ந்ததுரை 266
பின்எனக்கோர் அந்தரங்கம் பேசாமல் போவானேே?
கானிடத்தில் நான்உலவக் கண்டுதனி யாகவந்து 267
வானவர்கோன் என்னை மனமுருகிச் சேர்ந்தானேே?
தந்திரிகொள் வீணை தனையொளித்து வந்துதெய்வக் 268
கந்தருவன் என்னைக் கருத்துருகிச் சேர்ந்தானேே?
இந்திரனே யானுல்கண் ஈரைஞ்சு நூறென்பதுண்டே 269
கந்தருவ னேயானுல் கண்ணிமைக்கக் காரியமேன் ?
பெய்யுங் கொடையான் பெரியநா கேந்த்ரதுரை 270
ஐயன் அணைந்ததல்லால் ஐயம்இனி வேறுமுண்டோ?
மன்மதனை வென்று வயங்குந் திருவழகை 271
என்மனத்துக் குள்ளே எழுதவோ வந்தகன்ருன் ?
கூடியின்பங் கண்ட குதலைமொழிப் பேதைநம்மைத் 272
தேடிமுகம் வாடித் தியங்குவளென் றெண்ணுனேே?
இந்தக் கவடுசெய்வான் என்றறிந்தால் கைகலக்கும் 273
முந்தக் குடிலமிட்டு முன்ருணை கொள்ளேனேே?

அரும்பதவுரை: கன்னி (260) கன்னல்-கரும்பு வில். (262) காலாயுதம் -கோழி கையாயுதம்-வேல். மால் ஆயுதம் - சங்கு. மாமணியைத்தான் உதிர்த்தாள்-கண்ணீர் சிந்தினுள். (266) மாலாகி-மோகமுற்று. (273) குடிலமிட்டு-தந்திரம் செய்து.

தன்னெஞ்சம் போலத் தழுவிப் பிரிந்திருக்க 274
வன்னெஞ்சி என்றோ மறக்கத் துணிந்தானே!

பேரூர் வழியேநாம் பின்தொடர்வோம் என்றாலும் 275
ஓரூர்என் றுனிலையே ஒன்பதூர் என்றானே!

என்றிரங்கும் வேளை இருஞ்சே வலைப்பிரிந்த 276
அன்றிலெனத் தானே சிறியாள் அறிவயர்ந்தாள்.

சண்பகச் சோலையில் மூர்ச்சையுற்று நவரத்னமாலை விழுந்து கிடக்கிறாள். வெவ்வேறு திசையில் மலர்பறிக்கச் சென்ற நவரத்ன மாலையின் தோழியர்கள் எல்லோரும் தலைவியை விட்டுச்சென்ற இடத்திற்கு வந்து தேடுகின்றனர். குன்றுகள் இரண்டைத் தாங்கும் கொடி போன்ற இடுப்பானது துவள, தங்களுடைய தலைவி மலர்பறித்துக் கொண்டிருந்தாளே! அவளைக் காணவில்லையே!' என்று தெரிந்தவுடன் தாங்கள் வந்தது வேறு வனமோ என்று திகைத்தார்களாம். பிறகு நவரத்ன மாலையின் காலடிச் சுடுவகளைத் தரையில் கண்டு, எல்லோருமாக 'தேன்மொழியே! தேன்மொழியே!' என்று அழைத்துக்கொண்டே சென்றார்கள். கடைசியாக நவரத்ன மாலையை அவள் மெய் சோர்ந்திருக்கும் நிலையில், அவளுடைய பாங்கியர்கள் காணுகின்றனர். அதுவும் எந்த நிலையில் அவர்கள் தம் தலைவியைக் காண்கிறார்கள்? கையிலே தலையை வைத்து, அணிந்திருந்த ஆடைகள் நிலைகுலைய, கண்கள் மூடியிருக்க மயக்க நிலையில் படுத்திருக்கும் தலைவியைப் பார்க்கிறார்கள். அவர்களுக்கு ஒன்றுமே புரியவில்லை. ஒருத்தி "தூக்கம்" என்கிறாள். இன்னொருத்தி "பசியால்மயங்கி இருக்கிறாள்" என்கிறாள். மற்றொருத்தி "நம்மை யெல்லாம் காணாத ஏக்கம் தானோ என்னவோ" என்கிறாள். இன்னுமொரு இளநங்கை "மன்மதனின் கண் திருஷ்டிபட்டதுதான் காரணமோ?" என்கிறாள். வேறொருத்தி "தெய்வக் குறை ஏதாவது இருக்குமோ!" என்று கையைப் பிசைய ஆரம்பிக்கிறாள்.

பிறகு அவளுடைய விலகியிருந்தஆடைகளைச் சரிப்படுத்தி, கட்டித் தூக்கி மார்போடு அணைத்துக் கொண்டார்கள். பிறகு அவளுக்கு இருக்கும் வெப்பத்தை உணர்ந்து மாந்தளிரால் வீசுகின்றனர். அவளுடைய வேர்வையைத் தங்களுடையமுன்தானையால் துடைக்கிறார்கள். ஒருவழியாய் தலைவி மூர்ச்சை தெளிந்தாள்! ஆனால் ஏக்கத்தால் பீடிக்கப் பட்டவளைப்போலக் காணப்பட்டாள்.

சில தோழிகள் அவள் உடலில் காணப்பட்ட நகக் குறிகளைக்கண்டு "இந்தக் குறிகள் எப்படி ஏற்பட்டன?" என்று தலைவியைக் கேட்கின்றனர். நவரத்னமாலையோ வாயைத்திறக்கவில்லை; அவள் எப்படி வாய் திறந்து பேசுவாள்? கள்ளப் புணர்ச்சிக்கு, உடன்பட்ட அந்த கள்ளிக்கு பேச வாயுமுண்டோ?

உடனே பாங்கியர்கள், கைநடுங்க, கால்நடுங்க விசாரத்தோடு நின்றார்கள்-

சூதாடுங் காய்களில் ராவணன்விழி என்ற சோழியைப் போன்ற கொங்கைகளை யுடைய நவரத்னமாலையை கைலாகிலேயே மெல்ல மெல்ல நடத்தியழைத்தபடி வீட்டுக்குச் செல்கின்றனர்.

அங்கு, அவளை ஒரு பஞ்சணை மீது படுக்கவைக்கின்றனர். உடனே மோக அனலாகிய காமவெப்பத்தில் முத்து முத்தாக வேர்வைகள் முகத்திலும், உடலிலும் அரும்பியதாம். அதைப் பார்க்கும்போது முத்துகள் பொரிவதைப் போலிருந்ததாம்.

அவளுடைய பெருமூச்சின் வெப்பத்தில் கைவளையல்கள் உருகியதாம். பின்னர் கண்ணீரின் குளிர்ச்சியால் திரும்பவும் பழைய நிலையை அடைவது போலக் காணப்பட்டனவாம்.

மெழுகு பொம்மைக்குள் காய்ச்சி ஊசியை சொருகுவதைப்போல மன்மதனின் பாணமானது உடலெல்லாம் தைத்ததைப்போல, அவள் தவித்துக்கொண்டிருப்பதைக் கண்ட அவளுடைய தோழியர்கள், அந்த நிலைமையைக் கண்டு சகியாதவர்களாகி, அவளுக்குக் குளிர்ச்சியான உபசாரங்களைச் செய்ய ஆரம்பிக்கின்றனர்.

அவர்கள் செய்கின்ற உபசாரங்களை யெல்லாம் நவரத்னமாலை விரகதாபத்தினுல் வெறுத்து, அவர்களை வைது திட்டி மனங்கொதிக்க ஏசுகிருள்.

தோழியர்கள் விசிறியால் விசுவதைக் கண்டு, "வெயிற் காலத்திய கோடை வெப்பத்தையெல்லாம் என் மீது வீசுகின்றீர்களே!" என்று திட்டுகிருள்.

அவர்கள் ஜன்னல்களைத் திறந்து, "நல்ல மலைத்தென்றல் வீசும்" என்கிருர்கள். அவளுக்கோ சாளரத்தை திறந்து வழிவிட்டு புலியைப் பாயவிட்டது போல் இருக்கிறதாம் — அந்த தென்றல் காற்று.

அவர்கள் அவள் படுத்திருக்கும் பஞ்சணை மெத்தையின் மேல் மலர்களைப் பரப்பி வைத்திருக்கின்றனர். அதன் மேல் படுத்த நவரத்ன மாலையோ, "ஏனடி காமரசத்தை யெல்லாம் மெத்தையின் மேல் பரப்பி விட்டு மலர்கள் என்கிறீர்களே, ஏன் இப்படிப் பொய் சொல்கிறீர்கள்?" என்று கேட்கிருள்.

அவர்கள் அவள் குடிப்பதற்குப் பாலைக் கொண்டு வந்து கொடுத்து 'பால்' என்கிருர்கள். அவளோ, "மன்மதனின் மாலையாகிய மஞ்சள் மாலையைப் பிழிந்து அதன் ரசத்தைக் கசப்பாக வடித்து பாலென்கிறீர்களே, ஏன் இந்த வஞ்சனையெல்லாம் செய்கிறீர்கள்?" என்று திட்டுகிருள்.

"நீங்கள் என் மார்பின் மீது தடவியிருக்கும் குங்குமமும், பன்னீரும், சந்தனமும் எனக்குக் குளிர்ச்சியைத் தரவில்லை. அவை ஆண்களைத் தேடி அலைகின்ற வேசியிடத்தில் காதலனைப் போகும்படி விட்டு விட்டுத் தவிக்கும் மனைவியைப் போல என் மனதை கொதிக்கச்

செய்யுதடீ!'' என்று அவள் குமுறுகிருள்! அந்தக் கண்ணிகளைப் படிப் போமாக :-

இவ்விடத்தில் மெய்சோர்ந்து இவள்கிடக்க, வெவ்வேருய் 277
அவ்விடத்தில் பூவெடுத்த ஆயிழையார் எல்லோரும்

குன்றிரண்டு தாங்கும் கொடிபோல் இடைதுவள 278
நின்று மலர்பறித்த நேரிழையைக் காணுமல்,

மற்ருேர் வனமோநாம் வந்த தெனத்திகைத்துச் 279
சிற்றடியைக் கண்டார், திரண்டார் ஒருமுகமாய்,

சென்ருர் நெடுந்தூரம் 'தேன்மொழியே தேன்மொழியே! 280
என்ருர், மதிமறந்த ஏந்திழையை வந்துகண்டார்.

கையணையிற் சாய்ந்து கலைகுலையக் கண்முகிழ்ப்பத் 281
தையல் கிடப்பத் தரியாமற் பாங்கியர்கள்,

தூக்கமோ வெம்பசியோ தோழியரைக் காணுத 282
ஏக்கமோ, மன்மதன்கண் ணேறுபட்ட காரணமோ?

தெய்வக் குறையோநாம் செய்வதென்என் றேதிகைத்துக் 283
கையாற் கலைதிருத்திக் கட்டி எடுத்தணைத்தார்.

மாந்தளிரால் வீசி மதிமுகத்தில் வெயர்துடைக்க, 284
ஏந்திழையாள் மூர்ச்சைதெளிந் தேங்கினுள் போலிருந்தாள்.

ஒண்டொடியார் மங்கை உடலில் குறியிடங்கள் 285
கண்டிதுவே தென்ருர்கள்: கள்ளிக்கும் வாயுமுண்டோ?

கைநடுங்கிக் கால்நடுங்கிக் கன்னியர்கள் எல்லோரும் 286
மெய்நடுங்கித் தாமே விசாரமிட்டுக் கொண்டுநின்ருர்.

வல்லணைய கொங்கை மடமானைக் கைலாகின் 287
மெல்லமெல்லத் தாம்நடத்தி வீட்டிற் கொடுபோனுர்.

பாகார் மொழியாளைப் பஞ்சணையில் சேர்த்திடலும், 288
மோக அனல்மீற முத்தம் பொரிந்ததுவே.

முன்கை அணிவளைகள் மூச்செறியக் காய்ந்துருகி 289
மென்குவளைக் கண்ணீரின் வெள்ளத்தால் ஆறியதே.

அரும்பதவுரை : கண்ணி (279)சிற்றடி-காற்சுவடு (281) கலை-ஆடை. முகிழ்ப்ப-மூடியிருக்க. (287) வல்லணைய-சூதாடும் கருவியை ஒத்த (ராவணன் முழி என்ற சோழியைக் குறிப்பிடலாம்) (288) பாகார்(பாகு-ஆர்) மொழி-தேன்பாகை ஒத்த இனிமையுடைய.

வீசியவேள் அம்பு மெழுகுபா வைக்குள்உருக்கு 290
ஊசிகள்போற் பாய உருக்கூசி உள்ளயர்ந்தாள்.

கண்டு சகியார் கருத்திற் சகியாராய் 291
ஒண்டொடிக்குச் சீத உபசாரம் செய்யலுற்ருர்.

செய்தஉப சாரமெலாம் தேனுள் பொருளாகி 292
வைதுமட வாரை மனங்கொதித்துச் சொல்லுற்ருள்:

'வேடையெலாந் தீரஎன்மேல் வீசுவார் போலவெயிற் 293
கோடையெலாம் என்மீதிற் கொண்டுவந்து விட்டீரே!

சாளரத்தை நீக்கித் தனிப்புலியைப் பாயவிட்டு, 294
நீளுமலைத் தென்றல்என்றீர் நிட்டூரம் செய்தீரே!

காமரச மெல்லாம் கனகமஞ்ச மேற்பரப்பிப் 295
பூமலரென்றீர், மடவீர்! பொய்யும் படித்தீரே!

சேலென்ற கேதனத்தோன் தேமாலை யைப்பிழிந்து 296
பாலென்று தந்தீர் பழிகார ரானீரே!

மங்கைநல்லீர், என்றன் வனமுலைக்கு நீர்அணிந்த 297
குங்குமமும் சாந்தும் குளிர்ந்த பனிநீரும்

தேடும் பரத்தையர்பாற் காதலனைச் செல்லவிட்டு, 298
வாடும் மனையாள் மனம்போற் கொதிக்குதென்ருள்,

நவரத்னமாலை பித்தேறியவளைப் போலப் பிதற்றுவதையும், அவதிப் படுவதையும் கண்டு அவளுடைய தோழிகள் திகைத்தனர். உடனே அவளுடைய அன்னையிடம் சென்று, அவள் பிதற்றுவதைப் பற்றிச் சொல்லுகின்றனர். அதைக் கேட்ட அவள் தாய் பதறிக்கொண்டு ஓடி வருகின்ருள்.

தான் பெற்று வளர்த்த மகளைக் கண்ட அவள், நவரத்னமாலையின் முகபாவத்தையும், உடலில் காணப்பட்ட குறிகளையும் கவனிக்கிருள். சிவந்த வாயிதழ்களில் பதிந்த பற்குறியையும், ஸ்தனங்களில் பதிந்த நகக்குறிகளையும், கண்களில் திட்டியிருந்த மை அழிந்திருப்பதையும் பார்க்கிருள். உடனே கோபங்கொண்டு தன் மகளுடன் சென்ற தோழியர்களைத் திட்டுகின்ருள். நவரத்னமாலையையும் கடிந்து கொள்கிருள். விசாரமும், வேதனையும் அவளைத் தொல்லைப்படுத்துகின்றன. பிறகு தோழிகளைப் பார்த்து, "ஏனடி பெண்களே! நீங்கள் அறியாமல் இவளை எந்த ஆண்மகன்தான் பூஞ்சோலையில் அணைந்திருக்க முடியும், நீங்களே சொல்லுங்கள்!" என்று கேட்கிருள் கோபமாக.

அரும்பதவுரை: கண்ணி (290) உருக்கூசி-உடல் குறுகி. (293) வேடை -வெப்பம். (296) கேதனத் தோன்-மன்மதன்.

உடனே அந்தத் தோழிப்பெண்கள், தாங்கள் பூஞ்சோலைக்குச் சென்றதையும், நவரத்னமாலை தனியாகி விட்டதையும் எடுத்துரைக்கின்றனர். அந்தத் தோழிகள் சொன்ன பிறகு, நவரத்னமாலையின் அன்புத் தோழியான குணமாலையென்பவள், வனத்தில் தலைவியைப் பிரிந்து மீண்டும் வந்து அவளைக் கண்டு அவள் நிலையை அறிந்து சந்தேகங் கொண்டதாகவும், அதே சமயத்தில் தரையைப் பார்த்ததாகவும், தரையிலே வேந்தனின் அடிகளைப் போன்ற காலடிப் பதிவுகளைக் கண்டதாகவும், அந்தப் பதிவுகளில் சங்கும், சககரமும் பதிந்திருந்ததைக் கண்டதாகவும் கூறுகின்றாள். அதே சமயத்தில், சந்தேகத்தை மெய்ப்பிக்கின்ற ரீதியில், உலகம் மெச்சுகிற கூளப்பநாயக்க மன்னனின் மேளத் தொனியும் வெடிகளின் சப்தமும் கேட்டதாகக் குறிப்பிடுகிறாள்.

இதைக் கேட்ட நவரத்னமாலையின் தாய்க்கு மகிழ்ச்சி ஏற்படுகிறது. "அப்படிச் சொல்லடி என் அமிர்த குணமாலை! அந்த வேந்தன் கற்ற செப்படி வித்தைக்கு சித்திரம்போன்ற என்மகள்தானா அகப்பட்டாள்!" என்றும், "நாகம கூளப்பநாயக்கன் என் மகளைக் கண்டால் விட்டு விட்டா போயிருப்பான்?" என்றும், என் மகள் அந்த வேந்தனின் அழகைக் கண்டால் ஒரு கை பார்க்காமலா இருந்திருப்பாள்!" என்றும், "எப்படியிருந்தாலும் எனக்குத் தெரியாமல் இந்த நவரத்னமாலை எப்படித்தான் அவனோடு சேர்ந்தாள்?" என்றும், "நமக்குத் தெரியாமல் அந்த மன்னன் தான் இவளை எப்படி அணைந்தான்?" என்றும் கூறி பரபரப்படைகிறாள்.

பிறகு சிறு சஞ்சலம் குடி கொள்கிறது. "யாராவது கள்ளன் ஒருவன் கன்னக்கோல் வைத்தால் காவலனாகிய வேந்தனிடம் போய்ச் சொல்லலாம்; மன்னனே இந்த மாதிரிச் செய்தால் யாரிடம் போய்ச் சொல்வது" என்று அங்கலாய்த்துக்கொண்டுவிட்டு "இவளைப் பன்றி மலைச்சாரலுக்குப் போகவே போகாதே என்று நான் சொன்னேன்; இவள் கேட்டாளா? பேயாக இருந்தாலும் அதனுடைய வார்த்தையை அதன் பிள்ளைகள் கேட்பதுண்டு. இந்தப்பெண் என் வார்த்தையைக் கேளாததால்தான் இந்தக் கதிக்கு ஆளானாள்" என்றும் நொந்து கொள்ளுகிறாள்.

பிறகு, "முயற்சி செய்தாவது தான் விரும்பியதை அடைந்து விடும் வல்லவனாகிய கூளப்பனைச் சேர்ந்துவிட்ட இவளை நான் கண்டிப்பது கூடாது" என்று சமாதானப்படுத்திக்கொண்டு, "இவள் மன்னன் கூளப்பனை சேர்வதற்குச் சென்றவளே தவிர, இவள் பூப்பறிக்கவா சென்றாள்? விந்தை தரக்கூடிய கூளப்பநாயக்கனுக்குப் பெண்களை மயக்கும் மோகினி மந்திரம் தெரியும் என்பது இவளுக்குத் தெரியாதா? புகழ் படைத்த கூளப்பநாயக்க மன்னனுக்கு நம்மைப்போல ஆயிரம் பெண்கள் இருக்கிறார்கள் என்பதைத்தான் இந்த நவரத்னமாலை அறியாதவளா? பூங்கொடிகள் சூழ்ந்த சோலையில் பூப்பறிக்கச் சென்ற தோழிப்பெண்கள் பலர் இருக்கத் தலைவியை மட்டும் அவன் சேர்வானேன்" என்றும் பலப்பல விதமாக யோசித்தும் ஒன்றுமே

அவளுக்கு விளங்கவில்லை. இறுதியாக, "பிரமன் விதித்த விதிப் படியேதான் எல்லாம் நடக்கும். எனவே என்மகளை நோவதும், வீணுகப் பிதற்றுவதும் தவறுதான்" என்றும் கூறுகிருள்.

பிறகு, "நம்மை அறியாமல் இம்மாதிரி நடந்தாலும்கூட அவளது திருமணத்துக்குச் சம்மதித்து விடுவார்கள் என்று தன்னைத்தானே தேற் றிக்கொண்டு "மன்னுக்குத்தான் என்ன? அவன் அழகில் என்னகுறை இருக்கிறது? எனவே என் மகளே அவனுக்குத் தகுந்தவள். என் மக ளின் அழகுக்கும் வேந்தனே தகுந்த காதற் கணவன்!" என்று எண்ணி மனம் மகிழ்ச்சி அடைகின்ருள்.

"என் மகள் என்ன தவம் செய்திருந்தால் வேந்தனைக் காதலனுகப் பெற்றிருப்பாள். இவள் பூவெடுத்து வருவாள் என்றுதான் நான் நினைத் தேன். இவள் புதையலையே எடுத்து வந்துவிட்டாளே! பழம் நழுவிப் பாலில் விழுந்ததுபோலத் திருமணம் செய்து கொடுக்க நான் நினைத் திருக்க, இவளோ தன் திருமணத்தைத் தானே முடித்துக்கொண்டாளே. இது நான் செய்த தவத்தினுலோ, அல்லது என் மகள் முன் ஜன்மத் தில் செய்த பூஜையின் பலனுகவோ இம்மாதிரி நடந்திருக்கிறது!" என்று மேலும் மனம் மிக மகிழ்ந்து, தன் மகளை இரு கரங்களாலும் இறுகத்தழுவி "ஒன்றுக்கும் பயப்படாதே! உன்பாடு யோகந்தான்" என்று பூரிப்போடு கூறி அவளுக்கு ஆறுதல் அளிக்கிருள். பிறகு தன் மகளைத் தன் வாயார வாழ்த்த வேண்டுமென்று தோன்றிவிடுகிறது. எனவே, அவள் "சிந்தம கூளேந்திரனின் மகனுன கூளப்ப நாயக்கனை உனது கணவனுகவே வரித்து மணந்து கூடிச் சுகித்திருந்து பூவுலகம் கொண்டாடும் நல்ல புத்திரர்களைப் பெற்று வாழ்வாயாக!" என்றும் வாழ்த்துகின்ருள்.

இத்தகைய கவிதை நயமும், கற்பனைசெறிவும் கன்னித் தமிழ் அழகும் கொண்ட கூளப்ப நாயக்கன் காதல் காவியத்தில் தாய் பாங்கி யரை வினவுதல், பாங்கி கூறல், கேட்டுத் தாய் மகிழ்தல், வாழ்த்துதல் முதலிய பகுதியின் கண்ணிகள் முறையே பின்வருமாறு. சந்த நடைக் கும் சுந்தரத் தமிழின் மொழி வளத்திற்கும் பின்வரும் கண்ணிகளே சான்று.

என்னப் புலம்பி இவள்படும்பா டத்தனையும் 299
அன்னைக்குச் சொன்னுர்; அவள்பதறி யோடிவந்தாள்.

பெற்றெடுத்த தன்மகளைப் பேய்க்கிழவி யானுலும், 300
குற்றமற நோக்கிக் குறிப்புறவே கண்டுகொண்டாள்.

செவ்வாய் இதழ்க்குறியும், செப்புமுலை மேற்பதித்த 301
கைவாள் உகிர்க்குறியும், கண்மை அழிந்ததுவும்,

பார்த்தாள்; உடன்போன பாங்கியரைச் சண்டையிட்டாள்; 302
வேர்த்தாள் மகளை வெகுண்டாள் விசாரமிட்டாள்.

நீங்கள்அறி யாமல்இந்த நேரிழையைப் பூங்காவில் 303
ஆங்கொருவன் கூடி அணைந்தவகை சொல்லுமென்ருள்,

போனதுவும் வெவ்வேருய்ப் பூவெடுக்க மங்கைதனி 304
ஆனதுவும் கண்டதுவும் ஆயிழையார் தாமுரைத்தார்.

சந்தமுலை யார்உரைக்கத் தையல்குண மாலைசொல்வாள்: 305
'அந்த வனத்தில் அசுகையுற்ற வேளையிலே,

சுற்றியடி பார்த்தேன் துரைகளடி போல்அதிலே 306
உற்றசங்க ரேகை யுடன்பதும ரேகைகண்டேன்.

அச்சுவடு கண்ட அசுகையல் லாற்புவனம் 307
மெச்சு நிலக்கோட்டை வேள்பெரிய நாகேந்த்ரன்

வேட்டைக்கு வந்தானும், மேளத் தொனியும்அந்தக் 308
காட்டில் வெடித்தொனியும் காதாரக் கேட்டதென்ருள்.

அப்படியோ? சொல்என் அமிர்தகுண மாலைமின்னே! 309
செப்படிவித் தைத்தொழிலிற் சித்திரத்தைக் கண்டானே?

வண்டார் குழலாய்! மதன்பெரிய நாகேந்த்ரன் 310
கண்டால் நான்ஈன்ற கரும்பைவிட்டுப் போவானே?

அந்தத் துரையழகைக் கண்டாலும், நான்ஈன்ற 311
பைந்தொடியும் தானெருகை பாராமல் மீள்வாளோ?

எம்மையறி யாமல்இவள் எப்படித்தான் கைகலந்தாள், 312
நம்மையறி யாமல்அந்த நாயகன்எவ் வாறணைந்தான்?

கன்னம் ஒருவரிட்டாற் காவலனேடேயுரைப்போம்; 313
மன்னவனே இந்த வலுமைசெய்தால் ஆர்க்குரைப்போம்?

பாகார் மொழியாளைப் பன்றிமலைச் சாரலுக்குப் 314
போகாதே யென்றுசொன்னேன், புத்தியைக் கேட்டாளோ?

பேய்வார்த்தை யானாலும் பெற்றபிள்ளை கேட்பதுண்டு 315
தாய்வார்த்தை கேளாத் தங்கச்சி மூப்பாச்சே!

தெண்டிக்கும் மன்னவனைச் சேர்ந்தவலுக் காரியைநான் 316
கண்டிக்கப் போகாதே, கள்ளியெனக் கூடாதே!

மானபரன் பெஞ்சை மகராச னைமருவப் 317
போனவளே யன்றிஇவள் பூவெடுக்கப் போனவளோ?

அரும்பதவுரை: கண்ணி (301) உகிர்-நகம். கண்மை-கண் மை. (305) சந்தமுலையார்-தோழிகள். அசுகை-அருகை (313) வலுமை-அக்ரமம்.

விந்தைதரும் ஒன்பதூர் வேந்தனுக்கு மோகினிமா 318
மந்திரமுண் டென்றென் மதலை யறியாளோ?

தூயபுகழ் பெஞ்சைத் துரைக்குநமைப் போல்மடவார் 319
ஆயிரம்பேர் உண்டென்று அரங்கி யறியாளோ?

பூங்கொடிசூழ் தண்டலையிற் பூவெடுக்கப் போனஉயிர்ப் 320
பாங்கிமார் தாம்இருக்கப் பாவைதனைச் சேர்வானேன்?

அந்நாளில் வேதன் அமைத்தபடி யேயொழிய, 321
மின்னுரை நோவதுவும் வீணே பிதற்றுவதும்,

நம்மையறி யாமல் நடந்ததல்லால் யாவருக்கும் 322
சம்மதிக்கும் காரியமே தையல் நடத்திவந்தாள்.

மன்ன னழகுக்கென் மகளே மணியாளாம்; 323
கன்னியழ குக்கும்அந்தக் காவலனே காதலனும்!

மாவடுக்கண் மங்கையென்ன மாதவம்முன் செய்தாளோ? 324
பூவெடுக்கப் போனாள், புதையல் எடுத்துவந்தாள்!

பையப் பழம்நழுவிப் பாலில் விழுந்ததுநான் 325
செய்ததவ மோமகள்முன் செய்தபூ சாபலமோ!

என்று மகளை இருகையால் தான்தழுவி, 326
ஒன்றுக்கும் அஞ்சாதே, யோகமும்உன் பங்காச்சே!

சிந்தமகூ ளேந்த்ரனருள் சேய்பெரிய நாயகனைச் 327
சொந்தமா கக்கூடிச் சுகித்துமிக வாழ்ந்திரென்றாள்.

காவுலவு மின்னே! கனகபல்லக் கேறிஇந்தப் 328
பூவுலகு கொண்டாடப் புத்திரரைப் பெற்றிரென்றாள்.

இப்படி அவள் வாயார வாழ்த்திக் கொண்டிருக்கும் சமயத்தில், அவள் வீட்டு வாசலில் மன்னன் அனுப்பிய அழகான பொற்பல்லக்கு வந்து நிற்கின்றது. அதைச் சூழ்ந்து அரண்மனைத் தாதிகள் நிற்பதைக்கண்ட நவரத்னமாலையின் அன்னை, அவளை அந்தப் பல்லக்கில் ஏற்றி, மிகவும் மகிழ்ச்சியடைகிறாள். நவரத்னமாலைக்குத் துணையாக குணமாலை என்ற அவளுடைய அன்புத் தோழியையும் கூடவே அனுப்பி வைக்கிறாள்.

சொன்ன வாக்குத் தவறாமல் அந்த கூளப்ப நாயக்க வேந்தனும் நவரத்னமாலையை மணந்து, அன்பு செலுத்தும் அரசியாகவும், காதலியாகவும் கொண்டு இல்வாழ்வு நடத்தினான். உலகத்தோர் வாழ்த்தக் கூடிய நல்ல புத்திரரைப் பெற்றெடுத்தாள் அந்தப் புண்ணியவதி நவரத்னமாலை.

என்னுமந்த வேளைசில ஏந்திழையார் சூழ்ந்துவர, 329
வன்னமணிப் பொற்சிவிகை வாயில்வரக் கண்டாளே!

கண்டாள், மகளைக் கனகபல்லக் கேற்றிஇன்பம் 330
கொண்டாள், குணமாலை கூடச் செலவிடுத்தாள்.


சொற்படியே அந்தத் துரைபெரிய நாயகனும் 331
கற்பகத்தைக் கூடிஅவன் காதல்கொண்ட காதலியாய்ப்

பூதலத்தோர் வாழ்த்தநல்ல புத்திரரைப் பெற்றெடுத்து 332
மாது நவரத்ன மாலைமகிழ் வுற்றிருந்தாள்.

இவ்விதமாக நாகம கூளப்ப நாயக்கனின் காதலைக் கல்யாணத்தில் சேர்த்து இல்லறத்தில் முடித்துவிட்ட கவி சுப்ரதீபர் பொது வாழ்த்து ஒன்றையும் பாடித் தமது காதல் பிரபந்தத்தை முடித்து விடுகிறார். அந்த வாழ்த்து கண்ணிகளில், சீரும் சிறப்பும் வாழவேண்டுமென்றும்' உலகம் செழித்து வாழவேண்டும் என்றும், ஒன்பதூராகிய நவபுரி வாழ வேண்டும் என்றும் கூளப்ப நாயக்க மன்னனின் ஆட்சிக் கொடியாகிய வெள்ளைக் கருடக்கொடி வாழவேண்டும் என்றும், லக்ஷிமி கடாட்சத்தால் கூளப்பநாயக்க மன்னன் வாழவேண்டும் என்றும் பாடிமுடிக்கிறார். அந்த வாழ்த்துக் கண்ணிகள் பின்வருமாறு.

வாழ்த்து

சீர்வாழி, லோகம் செழித்து மிகவாழி ஒன்பது
ஊர்வாழி, வெள்ளை உபய கொடி வாழி.
பெஞ்சை நகர் வாழி, பெரிய நாகேந்த்ரதுரை
கஞ்சமலர் மாது கருணை பெற்று வாழியவே!




கூளப்ப நாயக்கன்

காப்புச் செய்யுள்

பொங்குபெருஞ் செல்வப் புகழ்பெரிய நாகன்போர்த்
துங்கன் விறலிவிடு தூதுக்கு-மங்களஞ்சேர்
பஞ்சவருக் கங்கஙமுற் பைம்பொனெடு குன்றிடுக்கைக்
கஞ்சமலர்க் குஞ்சரமே காப்பு.

பழந் தமிழ் நாட்டில் பாணர்கள், என்ற இனத்தினர் வாழ்ந்திருந்தனர். அவர்கள் பாடல் கலையில் மிக்கத் தேர்ச்சியுள்ளவர்கள். ஆண்களும் பெண்களும் யாழ் மீட்டி இனிமையாகப் பாடுவதில் வல்லவர்களாய் விளங்கினர். அவர்களில் ஆண் பாடகனுக்குப் பாணன் என்றும் பெண் பாடகிக்கு விறலி என்றும் கூறுவதுண்டு. அவர்கள் யாழ் மீட்டி பாடிப் பிழைப்பதோடு மட்டுமல்லாது இல்லறத்தில் சதிபதிகளுக்கிடையே ஏற்படும் ஊடல்களைத் தீர்த்து வைக்கவும், புதிதாகக் காதல் கொண்ட இளங் காதலர்களைச் சேர்த்து வைப்பதற்கும் தூதுவர்களாக இருந்து வந்திருப்பதாகப் பழந்தமிழ் சங்க காலத்து நூல்களிலிருந்து தெரிய வருகிறது.

அம்முறையை அனுசரித்து, இந்நூலின் ஆசிரியரான சுப்ரதிபக் கவிராயர் நிலக்கோட்டை சமஸ்தானதிபதியான நாகம கூளப்பன் என்றவள்ளலால், தான் ஆதரிக்கப்பட்டதைப் போற்றி உரைக்கும் விதமாக அவதானி என்ற ஒரு அந்தணனைக் கதாநாயகனாகக் கற்பனைசெய்து அந்த அவதானியை பெண் சபலங் கொண்டவனாகவும் வைத்து, அவன் தன் மனைவியின் கோபத்திற்காளாகி, வீட்டை விட்டு வெளியேறி மதுரைக்கு வந்து ஒரு தாசியின் வலையில்சிக்கி, அவள் இட்ட மருந்தால் கைப்பொருளத்தனையும் இழந்து பலவிதத்திலும் சிரமத்திற்குள்ளாகி, கடைசியாக புத்தி தெளிவுபெற்று வள்ளல் நாகேந்திர கூளப்பனை அண்டிப் பொருள்பெற்றது போலவும், அதன்பின்



விறலிவிடு தூது

இயற்றியவர் :

சுப்ரதீபக் கவிராயர்

விளக்கம் எழுதியவர் :

குளத்தூர் ரெட்டியார்

அந்த அவதானி தன் வீடு திரும்ப எண்ணங்கொள்வது போலவும், ஆனால் தன் வீட்டையடையும்போது கோபங்கொண்டுள்ள தன் மனைவி தன்னை எப்படி வரவேற்பாளோ என்ற தயக்கமேற்பட்டதால் ஒரு விறலியிடம் தன் வரலாற்றை யெல்லாம் கூறி, அவளைத் தன்மனைவி யிடம் தூது சொல்லக்கேட்டுக் கொள்வதுபோலவும் இயற்றப்பட்டிருப்ப தால் இந்நூலுக்கு விறலி விடு தூது என்று பெயரிடப்பட்டிருக்கிறது.

* * *

தூதுக் காவியங்களில் முக்கிய அங்கம் தூது செல்பவர்களைப் புகழ்ந்துரைப்பது. அம்முறையில் அவதானி தனக்காக தூது செல்லும் விறலியைப் புகழ்கிறார். அவள் பாடகியாயிருப்பதால் அவள் குரலினிமை யையும், தூது செல்வதற்கேற்ற, தரத்தை உடைய வளாயிருப்பதால் அவளது சொல்வன்மையையும், இயற்கையாகவே பெண்கள் முகஸ்துதி யில் மயங்குபவர்களாததால், அவளது அழகையும் வர்ணித்துப் புகழ்கிறார். அதுவும் எவ்வாறு?



பாற்கடலில் கடைந் தெடுத்த அமுதத்துடன், வெல்லப்பாகு, தேன்,பால், கனி ரசம், சர்க்கரை இவற் றை யெல்லாம் ஒன்றாகக் கலந்துகூட்டி மந்தித்து எடுத்தால் கிடைக்கும் மதுரத்தைப்போல் எண் மடங்கு இனிமையுடைய

அரும் பதவுரை:—

காப்புச் செய்யுள்:

துங்கன் – மேன்மையுடை யோன் கஞ்சமலர்–தாமரை. குஞ்சரம் – யானை. (இங்கு விநாயகக்கடவுள்.)

குரலையுடையவளாம் அந்த விறலி. அவள் குரலினிமையைக் கேட்டு மயில்களெல்லாம் மாமரத்திற்குள் பதுங்கி மௌனமாகி விட்டனவாம். அவள் சொல்லைக்கேட்டு கிளிகளெல்லாம் மலைகளை நோக்கிப் பறந்து விட்டனவாம்!

யோகியர்களின்நினைவையும் அறிவையும்கூட போக்கிவிடும்படியாக பாடும் வல்லமையுடைய இவளைக் காண்பவர்கள் யாராயிருந்தாலும்? கண்ட அக்கணம்முதல் அவளழகில்தங்கள்இதயத்தைப் பறிகொடுத்துக் காமப்பேய் பிடித்து அலைவார்களாம்.

தனது கவர்ச்சிகரமான அழகிய மார்பகத்தின் மீது தம்புருவை சாய்த்து சுதியின் ரீங்காரத்துடன் இனிய குரலெடுத்து முறை தவறாது காம்போதிராகத்தைப் பாடுகையில் தும்புருஎன்ற சங்கித மேதை வெட்கி தனது யாழைப் பட்டுத்துணியால் செய்த உறைக்குள் வைத்து அயர்ந்து விடுவாராம்!

கேவலம் காக்கைகள்கூட உறவு கலந்து உண்ணுவதைக் கண்டும், அக் காகத்தின் அறிவுகூட இல்லாமல், பசி என்று வந்து நிற்பவர் களுக்கு ஒரு கவளம் அன்னம்கூட கொடுக்க மனமில்லாத பரம உலோபி பலர் இருக்கிறார்களல்லவா, அவர்களைக்கூட இசை என்ற சங்கிதக் கயிறு கொண்டு கட்டி, உருட்டி, தன் கடைக்கண் பார்வையில் சுழலவிட்டு, அமுதம் போன்ற சொல்லின் வன்மையால் அவன் கைப்பொருளை யெல்லாம் தானே மனமுவந்து கொடுக்கும்படி ஆட்டுவிக்கக்கூடிய வல்லமையுடையவளாம் அந்த விறலி.

அவளை நாடுகிறார் இந்த அஷ்டாவதானி. "மனைவியின் வெறுப்புக்கு ஆளாகி வீட்டைவிட்டு வெளியேறி வந்துவிட்டவர்களுக் கிடையே சென்று சொல் வன்மையால் காதலர்களைச் சமாதானமடையச் செய்து சேர்த்து வைக்கும் ஆற்றல்வன்மை படைத்தவளே! பாடும் வகை களை யெல்லாம் நன்கு கற்ற இனிய மொழியாளே! நான் பட்டபாட்டை யெல்லாம் சொல்லுகிறேன் கேட்பாயாக" என்றெல்லாம் அவளைப் புகழ்ந்து சொல்லுகிறார்.

கார்பூத்த மேனிக் கருணைத் திருநெடுமால் 1
பார்பூத்த உந்திப் பரந்தாமன்-நீர்பூத்த
வேலைகுமுறக் கடைந்த வேலைதருந் தெள்ளமுதும் 2
ஆலைதரு வெண்சாறு அடுபாகும்-பாலும்
கனியுஞ் சர்க்கரையும் கற்கண்டும் நாவுக்(கு) 3
இனிய பசுந்தேனும் இணக்கித் தனியாக
மத்தித்து எடுத்த மதுரத்துக்(கு) எண்மடங்கு 4
தித்திப்புக் கேட்போர் செவிக்குஏறத் தத்தைகள்போய்
குன்றேறத் தோற்றுக் குயில்மா மரந்தோறும் 5
சென்றுஏற வானில் சிறுகுரரி-நின்றேதுங்கி

விண்ணேற அந்தரத்தில் விஞ்சையர் ஏறக்கனிந்த 6
பண்ணேறப் பாடும்இசைப் பாடினியே-உண்மையருள்
போதிக்கும் மெய்த்தவத்தோர் புத்திக்கு இடையூரு 7
நாதிக்கும் ஏழிசைக்கும் நாயகமே-கீதக்
கொழுந்தோடி மன்னவராங் குன்றிற் படரக் 8
கொழுந்தோடி பாடிவரும் கொம்பே-எழுந்தசிமிழ்
கண்டர் அகத்தில்ஒரு காமப்பேய் ஏற்றுவிக்கும் 9
கண்டா ராகத்தில்வல்ல காரிகையே-கெண்டைநெடுங்
கண்சுருட்டி யோகர்கருத் தறிவுஎல்லாம் சுருட்டிப் 10
பண்சுருட்டிப் பாடும்உயிர்ப் பாவையே-ஒண்கிரணக்
காந்தாரக் கொங்கையின்மேல் கைத்தம்புரு அணைத்துக் 11
காந்தாரம் ஏற்றும் கனிமொழியே-சேந்தவரி
யம்பகாம் போதிலணங்கும் இணங்கும் இசைக் 12
கும்பகாம் போதிரசக் கும்பமே-தும்புருதன்
பாகரஞ்சி தத்தனியாழ் பட்டு உறையில் இட்டுஅயர 13
மேகரஞ்சி பாடும் விறலியே-லோகத்திற்கு
(ஆ)காக அறிவின்றிக் கலம்தனில் வைத்துஉண்பாரைத் 14
தேகி என்பார்க்கு ஈயாததீயாரை-ராகம்எனும்
கள்ளக் கயிறுகொண்டு கட்டி யுருட்டிவிழித் 15
துள்ளுமுனைச் சாட்டைகொண்டு சுண்டியே தெள்ளமிர்தத்
தீங்குதலைச் சொல்லால் திகில்ஏற்றித் தேட்டைஎல்லாம் 16
வாங்கிவிட வல்லம (மை) தங்கியே-நீங்கிவெறுப் (பு)
(ஆ) பான மடவார்க்கும் ஆடவர்க்கும் நல்லசமா 17
தான நிதான அவதானியே-கானவித்தைப்
பாட்டையெல்லாம் கற்ற பனிமொழியே நான்பட்ட 18
பாட்டைஎல்லாம் சற்றே பகரக்கேள்-வேட்டமனை

அரும்பதவுரை.— கண்ணி (1) கார்பூத்த மேனி - கருத்த மேனி. (2) வேலை-கடல். ஆலை-கரும்பாலை. அடு-உண்டான (3) இணக்கி-சேர்த்து. (4) எண்மடங்கு-எட்டு மடங்கு. தத்தைகள்-கிளிகள். (5) குரரி-ஆண் ஆடு. (6) விஞ்சையர் - தேவர்கள். (9) கண்டா ராகம் - மணி ஓசை போன்ற ராகம், (11) காந்தாரம்-இசையில் ஒருவகை ராகம் (12) கும்பகாம்போதி-ஒருபண், (13) தேகி-ஜீவாத்மா. மேகரஞ்சி-ஒருவகைராகம். (16) தேட்டை-பொருள். (18) பனிமொழி-குளிர்ந்த இன்சொல். பகர-சொல்ல. வேட்ட-விரும்பிய.

என் மனைவியுடன் மன வெறுப்படைந்து ஆட்டிவிட்ட பம்பரம் போல் ஊர் எல்லாம் சுற்றிவிட்டு,மதுரை சென்று, அங்கே ஒரு தாசி வலையில் சிக்கியதையும் அவ்வேசி வீட்டு தாய்க்கிழவி தன் கைப்பொருள்களை யெல்லாம் உறிஞ்சிச் சதி செய்ததும், அவளுடன் போராடி அம்பலமேறி வழக்காடியதும், அவளால் தான் ஊரை விட்டே ஓட்டப்பட்டதும், இனி புகல் எங்கே என்று ஊருராய் அலைந்ததும், கடைசியாக கருணாகரனை வள்ளல் நாகம கூளேந்திர பூபதியைப் பாடியதும், அப்பெருமான் தன் பரிதாப நிலை கண்டு அள்ளிக்கொடுத்து கலி தீர்த்ததும், நான் இங்கு வந்ததையும், மான் போன்ற இரு கண்களை யுடைய விறலியே, கேள்!'' என்று ஆரம்பித்து, முதலில் தன்னை ஆதரித்த வள்ளல் கூளப்ப நாகேந்திரன் சிறப்பைக் கூறுகிறார்.

யாட்டியுடன் போட்டிவிளைத்து ஆட்டிவிட்ட பம்பரம்போல் 19
நாட்டையெல்லாம் சுற்றியதும் நானொருநாள்-தோட்டிதழிப்

பூவுடையான் தென்மதுரைப் புக்கதுவும் அங்கேஓர் 20
தேவடியாள் கைக்குள்ளாய்ச் சிக்கியதும்-பாவிகிழ

(ஓ)வோரிஎன் கைப்பொன்னை உறிஞ்சியதும் போழ்வாய் 21
சாரிசதி செய்ததுவும் வைததுவும்-போராடி

மேரைகெட அம்பலத்தில் விட்டதுவும் வாய்ப்பகட்டாம்
ஊரை விடப் பற்றிஎனை ஓட்டியதும்

அங்கே'யிழுக்கமன தாகிவழி கொண்டு'புகல் 23
எங்கே'யென்று ஒன்பதுஊர்க்கு ஏகியதும்-சங்கேந்தும்

திம்மராயப் பெருமாள் செஞ்சரண சேகரனை 24
மும்மதமால் யானைமூர்த் தன்னியனை-ரம்ய

கரு ணாகரனைக் கனயோக வானைப் 25
பொரு நாவலர் பூஷணனை-இருநிதியைச்

சந்திரமுக மந்திரதள தந்திரகொலு இந்திரனைச் 26
சிந்தமகு மாரசெய தரனை-முந்து

நிலைக் கோட்டையானை நெடுங்கலியைத் தூரத் 27
துலைக் கோட்டுந் தியாக துரையை-மலைக்கோட்டில்

ஆளைவைத்துப் பார்க்கும் அறுபத்து நாலுமன்னர் 28
பாளையத்தை வென்ற படையானை-வாள்அரசர்

வெஞ்சமருக்கு அஞ்சா விருதுவென்றி வாகனைநம் 29
பெஞ்சநகர் காக்கும் பெருமானை-வஞ்சகர்க்கோர்

தண்டப் பெரும்புலியைச் சாமித்து ரோகரைக்காய் 30
வெண்டயத்தாற் சூரியனை வீரியனை-மண்டலிகர்

மாகனகம் கப்பமிடும் வாயிலானைப் பெரிய 31
நாகமகூ ளேந்த்ர நராதிபனை-யோகனையான்

பாடியதும் ஐயன்முகம் பார்த்ததுவும் என்கலிவிட்(டு) 32
ஓடியதும் பாக்கியம் வந்துஉற்றதுவும்-நாடிஇங்கே

நான் வந்ததுவும் நடுமதியிலே இரண்டு 33
மான்வந் தனையவிழி மாதேகேள்-தானபரன்

பிடிகையை ஆரம்பிக்கும்போதே, தான் கெட்டலைந்து வந்தபோது தன்னை ஆதரித்த கூளப்ப நாகேந்திரனுடைய சிறப்பைக் கூறுகிறார்.

பாட்டுடைத் தலைவனாக கவிதையில் அமைத்துக் கூறப்படும் தலைவனுக்கு தசாங்கம் பொருந்தி இருக்க வேண்டுமென்பது மரபு. அதாவது மலை, ஆறு, நாடு, ஊர், யானை, குதிரை, முரசு, கொடி, செங்கோல் குடை இவைகளின் சிறப்பைக் கூறுவது. அதேமுறையில் இந்நூலின் பாட்டுடைத் தலைவனாக நாகேந்திர கூளப்பனை புகழ்ச்சியாகப் பாடுகிறார்.

நாகேந்திர கூளப்பன் சமஸ்தானமான நிலக்கோட்டைப் பகுதியில் அவனுக்குட்பட்ட பன்றி மலையின் சிறப்பையும், குடவ நதி, நிலக்கோட்டையைச் சேர்ந்த ஒன்பது ஊர்களின் சிறப்பு அவன் சூடி இருந்த முல்லைப்பூமாலை, வெண்குதிரை, கம்பீரமான குஞ்சரம் இவைகளைப் பற்றியெல்லாம் சிறப்புடன் கூறி, அவனது செம்மையான ஆட்சி பற்றியும் கூறி, அவனது அழகையும் அழகாக வர்ணிக்கிறார். அதாவது கூளப்ப நாயக்கன் எப்படிப்பட்ட ரூபவானும்?

'பொன் முகத்தில் கருணையுடைய கண்ணன்!...தையலார் முத்தமிட வாய்த்த முழுமதிப் பொன்முகத்தான்!...செம்பொன் முடிதாங்கும் மலர்ச் சென்னியான்!' என்றெல்லாம் அவனது அழகைக் கூறுகிறார்.

திக்கெல்லாம் கொண்டாடும் செங்கோல் விஜயரங்க 34
சொக்கநா தேந்த்ர துரைராஜன்-சக்ரபதி

சேதுபதி பாண்டியகுல தெக்ஷிணசிங் காதனந 35
ராதிபதி மெச்சுநர பாலன்-கோதில்

உருப்பான்மை வெண்பிறைமேல் ஊர்வதுதான் கோல 36
மருப்பா கும்பன்றி மலையான்-திரைக்கரத்தில்

ஆரமணி யாரமணி யாரமணி வாரிநடு 37
வாரியிடுங் குடவ மாநதியான்-தார்வேந்தர்

அரும்பதவுரை: கண்ணி (19) (தோட்டு இதழ் பூ)—தோட்டிதழ்ப்பூ (20) புக்க–புக (21) ஓரி–கிழநரி. போழ்வாய்–பொக்குவாய். சாரி–அஞ்சனபாஷாணம். (22) மேரை–மரியாதை. எனை–என்னை. பற்றி–விரட்டி (31) கனகம்–பொன் (33) அனைய–போன்று.

வீதிக்கு வீதி விவாக மணிமுரசம் 38
நாதிக்கும் பாண்டிவள நாட்டினுன்-ஆதித்தன்

தேரூர் அருணசெய கோபுர நிலைக்குள் 39
ஊரூர் எனும் ஒன்பது ஊரினுன்-சூரியபோர்

வேலைவைக்கும் செங்கருங்கண் மின்னார் இதயவண்டு 40
மாலை வைக்கும் பூந்தளவ மாலையான்-கோல

முகம்இலங்கு பணியணிந்து முதுகணைந்த கலனைக்கொண்டு 41
தகைதவிர்ந்து நடைபிறந்து சமரடர்ந்து-பகைவர்தங்கள்

தலையினின்று திமிதிதிந்தி தகுதிதந்த யெனநடஞ்செய்(து) 42
உலவிவந்து கனகதண்டை ஒலிமிகுந்து-கலகலென்று

கொஞ்சிடச் சதங்கையிட்ட கொண்டல் ஒத்திடும்திறத்த 43
வெஞ்சினப் பிரசண்டவுக்ர வெண்பரியான்-விஞ்சுகரம்

ஒன்று படைத்துவரும் ஓங்கலுக்கு ஒப்பாய்இரண்டு 44
வென்றிப் பிறைசுமந்த மேகமென-துன்று

மதங்க ளெனும்மூன்று மாரிசிந்தப் பாகர் 45
ஒதுங்க நார்வாயால் உதறி-அதிர்ந்துபொரும்

அஞ்சார் உதிரத்தை ஆருக்கி ஓர்ஏழு(ம்) 46
மஞ்சார்ர் புனலை மடுத்துறிஞ்சிக்-குஞ்சரங்க(ள்)

என்பதோர் எட்டும் இணையில்லை என்றுஅகற்றி 47
ஒன்பதுஊர் வீதி உலாவியே-வம்புரைப்போர்

பைம்பொன் முடிஇடறிப் பத்துநகமும் தேய்ந்த 48
கும்பரண கம்பீர குஞ்சரத்தான்-அம்புவியில்

காந்து கலியைவெட்டுங் கண்டகோ டாரியைப்போல் 49
ஏந்து வெள்ளைப் பக்கறையி டாலினுன்-சாய்ந்தோடிக்

குன்றிற் கருதார் குடும்பம் குடியேற 50
முன்றிற் குமுறுமணி மும்முரசான்-நின்றஅடி

தூக்கினுர் சென்னி துடிக்கத் துணித்துவிடும் 51
ஆக்கினு சக்கரம்போல் ஆணையான்-பாக்கியவான்

அரும்பதவுரை : கன்னி (41) சமா-சண்டை (43) கொண்டல்-மோகம். பரி-குதிரை. (44) ஒங்கல்-யானை. துன்று-நெருங்கி. (45) மாரி-மழை. பாகர்-யானைப்பாகர். பொரும்-போராடும் (4) (மஞ் சார்) மஞ்சள். (49) பக்கறை-குழப்பம். (50) முன்றில்-முன்றில் அதாவது முற்றம். (51) ஆக்கினு-ஆக்கினைச் சக்கரம்: சென்னி-முகம்.

கற்பகமாம் பட்டர்ஐயங் கார்கருணை யேமணக்கும் 52
பொற்கமலம் போன்றமனப் பூரணவான்-பற்றலார்

தண்டார் மகுடம் தடவும் செயவீர 53
கண்டா மணிமுழங்கும் காலினன்-மண்டுசமர்

யுத்த களத்துஒன்னர் உயிர்மேய்ந்த குற்றுடைவாள் 54
வைத்து அணைத்துக்கட்டு மருங்கினன்-கைத்தலத்தில்

ஐந்தருவும் ஐந்துவிர லாகித்தருவ எனச் 55
செந்தமிழ்க்கு நல்கும்மலர்ச் செங்கையான்-பைந்தொடியார்

பொன்முலையாம் கோட்டிற் புதுக்கலவைச் சோரட்டி 56
மன்மதநூல் எழுதும் மார்பினன்-நன்மைதரும்

வெற்றிச் சிறுபெண் விளையாடும் சிற்றில்எனச் 57
சுற்றிய கேயூரமணித் தோளினன்-கற்றவராம்

கோக்குலத்தைக் காத்தருளும் கோபாலர் வேயிசைபோல் 58
வாக்கு மதுரம்பொழியும் வாயினன்-நாக்குளிரச்

சொல்விரசம் கடுஉவர்ப்பு என்றுதள்ளி இன்பக் 59
கல்விரசம் பருகும் காதினன்-வல்ல

மருவலரை வெட்டுகின்ற வாள்போல் முகத்தில் 60
கருணை உலவும்மலர்க் கண்ணன்-இரவின்உடல்

சாய்த்த மதிமுகத்துத் தையலார் முத்தமிட 61
வாய்த்த முழுமதிபோல் மாமுகத்தான்-காத்தருளும்

எம்பிரான் அகோபி லேசர்அடி எந்நாளும் 62
செம்பொன் முடிதாங்கும்மலர்ச் சென்னியான்-உம்பர்தொழும்

நின்மலனர் வெண்ணீற்று நெற்றிக்கண் காணாத 63
மன்மதன்காண் என்னும் வடிவினன்-தன்னுடைய

அரும்பதவுரை: சென்னி (53) தண்டார் குளிர்ந்தமாலை. தடவும்-தொங்கும். மண்டு-நெருங்கிய. (54) ஒன்னர் - பகைவர். மருங்கு-இடை (55) ஐந்தரு - பஞ்சதரு அதாவது. சந்தனம். கற்பகம். சந்தானம். பாரிசாதம். மந்தாரம் என்பன. (கேட்டது கொடுக்கும் மரங்கள் போல் அவ்விரல்கள் தானம் செய்யுமாம்) நல்கும்-கொடுக்கும். பைந்தொடியார்-பெண்கள். (56) கோட்டின்-மலை உச்சியில். கலவைச்சேர்-சந்தனக் கலவை அல்லது குழம்பு. (57) சிற்றில்-சிறு குடிசை. கேயூரம்-தோல் அணி. (58) கோகுலம்-யாதவ குலம் வேயிசை-புல்லாங் குழல இசை. நா-நாக்கு (59) கடுவாப்பு - கைப்பு. (60) மருவலர்-பகைவர். (61) தையலார் - பெண்கள். (62) நின்மலனர்-சிவன். (63) உம்பர்-தேவர்கள்.

வல்லக் காவார்குலத்தில் வாள்வேந்தர் கண்குளிரப் 64
பல்லக்கு மேல்உலவும் பாக்கியவான்-வில்லேற்றி

கைகொண்டு பொற்படியில் கால்கொண்டு பஞ்சகதி 65
மெய்கொண் டணையபரி மேல்கொண்டு-செய்யரண

துங்கதள கர்த்தர் துரைமக்கள் வாள்பிடித்துச் 66
சிங்கம்எனச் சுற்றித் திரண்டுவர-மங்குல்எனக்

கூனல்முது குஒட்டகம்மேல் கொட்டுகின்ற டம்மாரம் 67
யானையின்மேல் பேரி அதிர்ந்துவரச்-சேனையொடு

தாக்குமறு மண்டலிகர் தங்களுக்குச் சென்றுசொல்லும் 68
கூக்குரல்போல் வீரசின்னக் கொம்புஊத-நோக்கும்

பரிதி பகைக்கும் பகை எழுந்ததுஎன்ன 69
விருதுகரு ஆலவட்டம் வீசத்-தரளக்கால்

வெள்ளைக் கொடிஆடை மேகம் கிழித்துவரப் 70
பிள்ளைப் பிறைபோல் பிரகாசிக்க-வெள்ளை வட்டச்

சித்திரக் குடைகள்செய மாதுக்கு இட்டநிழல் 71
முத்துமணிப் பந்தரென மொய்த்துவரக்-கைத்தலத்தில்

கத்திபிடித்து வெள்ளி கட்டினதுப்பாக் கிகொண்டு 72
பத்துலட்சம் காலாள் படைநடக்கத்-தத்துபரி

கொக்குநரை யான்கைக்கு மரியென ராவுத்தர் 73
கைக்குள் அடங்காது கான்மீற-நெய்க்கவளம்

கூட்டிஇரை ஊட்டிஇரு கொம்புகத்தி பூட்டிமதம் 74
மூட்டிவிட்ட மால்யானை முன்நடக்கக்-கூட்டமிட்டு

வாரிட்டு அணிவகுத்து வாதிட்ட வேற்றரசர் 75
போரிட்ட வெங்களத்தில் போய்எதிர்த்து-நேரார்மேல்

அரும்பதவுரை: கண்ணி (64) வல்லக்காவார்-வலிமை மிக்க அரசர்கள். (65) பரி-குதிரை. (66) துங்க-பெருமை மிக்க, மங்குல்-மேகம். (67) டம்மாரம்-முரசு, பேரி-பேரிகை. (68) மறுமண்டலி -வானுலகம். (69) பரிதி பகை-சூரியனுடைய பகையான இருள், தாளம்-முத்து. (70) பிள்ளைப் பிறை-இளம்பிறை, (71) சித்திரம்-அழகு. பந்தர்-பந்தல் (72) தத்துபரி-குதிக்கும் குதிரை. (73) நரையான்-கிழவன், கான்மீற-காட்டைக் கடக்க (74) மால்-கருப்பு (75) வார் இட்டு-கட்டி, வாதிட்ட-போரிட்ட, வெம் களம்-கொடுமை பொருந்திய போர்க்களம்.

சுட்ட பீரங்கித் தொனியும் புகையும்சூல் 76
இட்ட முகிலும் இடியும்எனப்-பட்டயங்கள்

வீசுவதும் வெட்டுவதும் மின்னல்என வீரர்சிலை 77
பூசல்அம்பு மாரிமழை போல்பொழியத்-தேசப்

பரதளங்கள் பட்டுருளப் பாய்ந்தபெருஞ் செந்நீர்ப் 78
பிரளயப் பிரவாகம் பெருகச்-சிரதலத்தில்

ஆனை, இருப்புலக்கை யானை அடிக்கவிழும் 79
மூளை நுரைத்திரளாய் மொய்த்துஓட-வாளால்

படுந்தீரர் ஏறிவரும் பல்லக்குப், பேய்க்கு 80
விடுந்தோணி போலும் மிதப்பக்-கிடந்துசிலர்

வேர்த்துப் பரிசைகொண்டு மேன்மூடிச் சென்னியெட்டிப் 81
பார்த்துக் கமடம்எனப் பதுங்கப்-போர்த்தலையில்

மந்திர வாள்வேந்தர் மகுடத்து உதிர்ந்தரத்னம் 82
இந்திரகோ பங்கள்எனச் சிதற-செந்தறுகண்

விந்தை மிடிதீர வெற்றிப் பயிர்ஏற்றி 83
வந்து கொலுஇருக்கும் வாள்வீரன்-முந்துபெரும்

பாதலத்தில் வேரோடிப் பாரில் படர்ந்துவட 84
பூதலத்தில் ஏறும் புகழினன்-நீதிபரன்

சிந்தமகூ ளேந்த்ரதுரை சிங்கா சனாதிபதி 85
தந்தசௌ பாக்கிய சம்பன்னன்-செந்துவர்வாய்க்

காமவடி வேல்விழியார் கைவடிவு எல்லாம்எழுதும் 86
நாமவடி வேல்பெரிய நாகேந்த்ரன்-சேமநிதி

ஊராதி பன்வாழ்வை ஒக்குநவ கோடி 87
நாராயணன் பெரிய நாகேந்த்ரன்-சேரலராம்

ஆட்டுக்கூட் டங்களில்ஓர் ஆண்புலிபோல் பாயும்நடு 88
நாட்டுக்கூ ழிற்பெரிய நாகேந்த்ரன் பூட்டுசிலை

அம்புஒன்றால் ஈவேன் அரசுஉனக்கு வீடணா 89
நம்புஎன்ற மால்பெரிய நாகேந்த்ரன்-ஸ்தம்பம்என

அரும்பதவுரை: கண்ணி(76) தொனி-ஓசை. சூலிட்ட முகில்-நீர் சுமந்து வரும் மேகம். பட்டயம்-கத்தி. வாள். (77) சிலை-வில். பூசல்-சண்டை. (78) செந்நீர்-ரத்தம். சிரதலம்-சிரசு. (79) இருப்பு-இரும்பு (80)மிதப்ப-மிதக்க. (81) பரிசை-கேடயம். கமடம்-ஆமை (82) தறுகண்-அஞ்சாமை. குரூரம். (83) மிடி-வறுமை. (84) பாதலம்-பாதாளம். (85) சம்பன்னன்-செல்வம் மிக்கோன், செந்துவர்வாய்-சிவந்த வாய். (86)கை வடிவு-ஒப்பனை வடிவம். (87) வீடணா-விபிஷணா.

லோகம் சுமப்பதிஞல் ஓர்ஆயிரம் மௌலி 90
நாகம் பொரும்பெரிய நாகேந்த்ரன்-பாகெனும்சொல்
பாவுக்கேறிக் கனகப்பல் லக்குஏறிப் புலவோர் 91
நாவுக்கேறும்பெரிய நாகேந்த்ரன்-வாவிதிகழ்
பெஞ்சநகர் வாழப் பெருஞ்சீர் வளர்ந்துஓங்கக் 92
கஞ்சமலர் மாது களிகூர-வஞ்சகமும்
பொய்யும் பறந்துஓடப் புண்ணியமும் தண்ணளியும் 93
மெய்யும் கலந்து விளையாடப்-பெய்யுமழை
வானம் வழங்கமனே வாழ்க்கை ஓங்கஅன்ன 94
தானம் வழங்கத் தவம்ஓங்க-நான்மறைக்கும்
நன்நிதியாம் மேகவண்ண நாதர்திம்ம ராயர்திருச் 95
சன்னிதியில் பூசை தழைத்துஓங்க-இங்கிலத்தில்
எங்கோன் அபிஷேகம் ஏந்துமனு விஞ்ஞானச் 96
செங்கோல் அரசு செலுத்தும்நாள்-சங்கேந்தும்

இவ்வளவு சிறப்புடன் விளங்கிய கூளப்ப நாயக்கன் காலத்திலே தான், இந்த சம்பவங்கள் நடந்ததாகத் தன் வரலாற்றை ஆரம் பிக்கிருர் அவதானி.

கார்மேக வண்ணனை அரங்கநாதன் கோயில் கொண்டிருக்கும் சிரங்கத்தில் பிறந்து, செல்வச் சிறப்புடன் வளர்க்கப்பட்டேன். வயது பதினுறுக்குள் ஆரியமும், வேதமும், செந்தமிழும் முறையோடு கற்றுத் தேர்ந்தேன். கலைமகளின் அருளைப் பரிபூர்ணமாகப் பெற்ற நான், கவித் திறனுடையவனுமானேன்.

கற்றவர் கூடிய சபை நடுவே அமர்ந்து, வேலு மயிலுமென ஓயா மல் வாய் சொல்லிக்கொண்டிருக்க, பின்னலிடப்பட்ட லாடக் கம்பியின் சிக்கலைக் கை பிரித்தெடுத்துக்கொண்டிருக்க, பக்கத்திலமர்ந்திருப்பவர் கேட்கும் கேள்விகளுக்குப் பதிலுரைத்துக்கொண்டும், எதிரில் உட் கார்ந்து சூதாடுபவனுக்கு ஆலோசனை கூறிக்கொண்டும், பின்புற மிருந்து முதுகில் எறியப்படும் சிறு கற்களை எண்ணிக்கையிட்டுக் கொண்டும், புலவர் ஒருவர் இயற்றிச் சொல்லும் கவிக்கு எதிர்க் கவி சொல்லுவதுமாக ஏக காலத்தில் எட்டு விஷயங்களில் கவனம் செலுத் தும் திறமை பெற்று "அஷ்டாவதானி" என்ற பட்டமும் பெற்றேன்.

தக்க வயதடைந்து விட்ட நான் திருப்பதியில் வசிக்கும் வாசுதேவ ரின் செல்வக் குமாரத்தியான பூங்காவனம் என்ற இன்பக் கனியை

அரும்பதவுரை: கண்ணி (90) ஆயிரம் மௌலி நாகம் - ஆதிசேடன் பாகு-சருக்கரைப் பாகு. (91) வாவி-குளங்கள்.

விரும்பி மணந்துகொண்டேன். நான் அவளோடு பாங்குடன் இன்ப வாழ்வு வாழ்ந்து வரும் நாளில், ஓர் நாள், செவ்வந்திசர் கோயிலுக்குச் சென்றிருந்தேன். அங்கு சுவாமி சன்னிதியில் தாசி ஒருத்தியைக்கண்டேன். அவள் அழகில் மயங்கினேன். எப்படியேனும் அவளையடைய என் மனம் நாட்டங்கொண்டது. அவளுடன் நேசமானேன். இரகசியத் தொடர்பும் கொண்டேன். தினம் ஒரு முறையாவது அவள் வசித்து வரும் திருச்சிராப்பள்ளிக்குச் சென்று அவளைச் சந்திக்காவிட்டால் என் மனம் நிலை கொள்ளாது தவித்துப் புலம்பும்.

ஒருநாள் நேரம் அதிகமாகி விட்டதால் சிறுவன் ஒருவனைத் துணைக்காக என்னுடன் அழைத்துக்கொண்டு என் இதயம் கவர்ந்து ஆசை வெறியூட்டி மயக்கிவிட்ட அம்மோகினியின் வீட்டிற்குச் சென்று விட்டுத் திரும்பினேன். எனக்குத் துணையாக வந்த அந்தச் சிறுபயலை 'உலகமறியாப் பாலகன்தானே! அவனுக்கென்ன புரிந்திருக்கப் போகிறது?' என்றெண்ணியிருந்தேன். ஆனால் ஏமாந்தேன்!

ஊர் திரும்பியதும் முதல் வேலையாக எனக்கு முன்னதாக அவன் வேகமாய் என் வீட்டிற்கு ஓடிச்சென்று, என் மனைவியிடம், "அம்மா! உன் கணவர் செய்தியெல்லாம் தெரியுமா? சொல்கிறேன்; கேளுங்கள்: இன்று மாலை தங்கள் கணவர் என்னையும் அவருடன் அழைத்துக் கொண்டு காவேரி நதியைக் கடந்து திருச்சிராப்பள்ளி செல்ல ஓடத்திலேறினார். பரபரப்புடன் செல்லும் அவசரத்தினால் தன் மேல் அங்கவஸ்திரத்தை நதியில் நழுவ விட்டுப் போக்கடித்தார். அதையும் பொருட்படுத்தவில்லை. திருச்சிராப்பள்ளி சேர்ந்ததும், என்னை மட்டும் தனியே ஒரு சவுக்கையில் தனித்திருக்கச் செய்துவிட்டு, இன்பரசவல்லி என்ற பெயருடைய ஒரு தாசியின் வீட்டிற்குள் சென்றார். நான் இவர் செய்கை அத்தனையும் மறைந்திருந்து கவனித்தேன். அம்மம்மா! என்னவென்று சொல்வேன்! உன் கணவர் அவள் வீட்டிற்குள் புகுந்தவுடன் அவரைக் கண்டபடி பேசினாள் அவ்வேசி மகள். உங்கள் கணவரோ மிஞ்சி மிஞ்சிப் பேசும் அவளிடம் கெஞ்சிக் கெஞ்சிப் பேசினார். அதற்குப் பின் சிறிது நேரத்தில் இருவரும் அறைக் கதவை அடைத்துக் கொண்டனர். காதல் கொண்ட காட்டுப் புறாவைப்போல் படபடத்தாள்; சிணுங்கினாள்; கொஞ்சிக் கொஞ்சிப் பேசினாள் அத்தாசி மகள். சற்று நேரங்கழித்து அவள் வீட்டை விட்டுப் புறப்பட்டு நானிருக்கும் இடம் வந்து, 'வா போவோம்' என்றழைத்தார். நானும் மௌனமாக அவரைப் பின்பற்றி நடந்தேன். காவேரி நதிக்கு வந்து கைகள் சுத்தம் செய்து, சந்தி பண்ணி, இக்கரை வந்ததும் என்னை நோக்கி, 'நடந்ததையெல்லாம் யாரிடமும் சொல்லிவிடாதே' என்றார் உன் கணவர்" என்று அந்தக் கோள் மூட்டிச் சிறுபயல் என்மனைவியிடம் ஒன்றுக்குப் பத்தாகச் சொல்லி விட்டு ஓடிவிட்டான்.

சற்று நேரத்திற்கெல்லாம் நான் என் வீடு வந்து சேர்ந்தேன். என் மனைவி என்னைக் கொடும் பகைவனைப் பார்ப்பதுபோல பார்த்தாள். கடு கடுத்தா. ள்முகம் கொடுத்துப் பேசவில்லை. நான் ஒன்றும் பேசாமல்

படுக்கையறைக்குள் சென்றேன். வழக்கத்திற்கு மாருக கட்டிலில் படுக்காது தரையில் படுத்துவிட்டாள் என் மனைவி. எதுவும் நடவாததைப்போல் பாவித்து அவளிடம் பேச்சுக் கொடுத்தேன். அவளோ மௌனம் சாதித்தாள். அடுத்தடுத்துப் பேசிக் கெஞ்சினேன். கட்டிலை விட்டிறங்கி அவள் பக்கத்தில் வந்து கொஞ்சினேன். உடனே அவள், "என்னைத் தொடாதீர்கள் ! அந்தத் திருச்சிராப்பள்ளித் தேவடியாள் உங்களைக் காணுது தேடப் போகிருள் ! சீக்கிரம் செல்லுங்கள்; அவள் கோபித்துக் கொள்ளப் போகிருள்" என்று சீறினுள். மேலும், என்றைக்கும் சொல்லாத வார்த்தைகளையெல்லாம் சொல்லிச் சீறினுள். அருகே நெருங்கவிடக் கூட இல்லை. கடு கடுத்தாள். சொல்லத் தகாத வார்த்தைகளையெல்லாம் பொரிந்து கொட்டி ஏசினுள். அவளை எந்தவிதத்திலும் என்னுல் சமாதானப் படுத்த முடியவில்லை. மனைவி ஏறு மாருக நடக்கும் அளவிற்கு நிலைமை வந்துவிட்டபின் குடும்ப வாழ்வில் நிம்மதி காண முடியுமா? 'இல்லாள் வலி கிடந்த மாற்ற முரைக்கு மேல்அவ்இல் புலி கிடந்த தூருய் விடும்' என்று ஔவையார் உலகிற்குச் சொல்லியுள்ள வாக்கை எண்ணினேன். இனி என் இல்வாழ்வு நரகமாகத்தானிருக்குமெனத் தீர்மானித்து ஒரு முடிவிற்கு வந்து அன்றிரவே கைக்குக் கிடைத்த பொருளை எடுத்துக்கொண்டு வீட்டை, விட்டுப் புறப்பட்டேன்.

காரங்க மேனிக் கடவுள்இருக்கும் அந்தச் 97
சீரங்கத்தே பிறந்தேன் செல்வத்தில்-ஈரைந்தோ(டு)

ஆறு வயதினுக்குள் ஆரியமும் வேதமும்நா(வு) 98
ஏறித் தமிழ்நூல் இலக்கணத்தில்-மீறினேன்

வால சரஸ்வதிஎன் வாக்கில்பிர சன்னமதா 99
நாலு கவித்திறமும் நான்அறிந்து-வேலும்

மயிலும்எனச் சொன்னஉரை மாருமல் சொல்லக் 100
கயிலாட சிங்கி கழற்ற-அயலொருவன்

சொன்னவினுச் சொல்லஎதிர் சூதாடப் பின்முதுகு
தன்னில் எறிந்தகல்லும் தான்எண்ணப்-பன்னுசது

ரங்க விளையாட்டுக் கடிபார்க்கச் சொற்புலவோர் 102
தங்கள் கவியை அவதானிக்கச்-சங்கத்தில்

எட்டெட்டு எழுத்தாணிக்கு ஏற்றகவி சொல்லவும்யான் 103
அஷ்டாவ தானிஎன்பான் ஆயினேன்-மட்டார்

திருப்பதி யிலேவாசு தேவன் மகளைக் 104
கருப்புருவ இன்பக் கனியை-விருப்பமுள்ள

அரும்பதவுரை: கன்னி (98) ஆரியம்-சமஸ்கிருதம். (99) பிரசன்னம்-விளங்குதல். (105) வேட்டு-மணந்து.

பூங்கா வனத்தைப் பொருத்தமுடன் வேட்டுப் 105
பாங்கான வாழ்வில் பயிலும்நாள்-ஆங்குசெவ்வந்

தீசர்திருச் சந்நிதியில் ஏந்திழையார் தம்மில்ஒரு 106
தாசிமேல் வைத்தேன் தயவுநான்-நேசமாய்

இந்தரங்கத் தேதிரிந்தேன் இன்பரச வல்லியிடத்(து) 107
அந்தரங்கத் தேதிரிந்தேன் ஆசையால்-அந்தத்

திரிச்சிராப் பள்ளிக்குச் செல்லாது இருக்கத் 108
தரிச்சிராது என்மனது தானும்-ஒருத்தன்

அறியாச் சிறுவனுடன் யாளெருநாள் அந்த 109
வெறியார் குழற்பரத்தை வீட்டில்-பிரியமுடன்

சென்று இருந்துவந்தேன் 'திடுதிடென' ஓடிப்போய்க் 110
குன்று இருந்தகொங்கை குலமனையாட் கு'ன்கணவர்

ஓடத்தில் ஏறினர்; உத்தரியம் போக்கடித்தார்; 111
நாடிச் சிரகிரியை நண்ணினர்-கூடவந்த

என்னைச்சவுக் கையில்வைத்து இன்பரச வல்லிஎனும் 112
பொன்னனையாள் வீட்டுக்குள் போய்ப்புகுந்தார்-அந்நேரம்

மிஞ்சிமிஞ்சிப் பேசினள் வேசிமகள்; அதற்குள் 113
அஞ்சிஅஞ்சிப் பேசினர் ஐயங்கார்-வஞ்சியந்த

வீட்டுக் கதவடைத்தாள்; மெள்ளமெள்ளக் கொஞ்சினள்; 114
காட்டுப் புருஷைச காட்டினள்-வீட்டைவிட்டு

வந்தார்நம் ஐயர்என்னை 'வா'என்றார் காவிரியில் 115
சந்திபண்ணிக் கரையில் தாண்டினர்-'இந்தஊர்க்கு

என்மார்க்கம்சொல்லாதே!' என்றுசொன்னர்'' என்றுஅந்தத் 116
துன்மார்க்கப் பையல்எல்லாம் சொல்லிவிட்டான்-மன்மம்

தொடுத்தாள்; கடுகடுத்தாள்; தூங்கும் மஞ்சம்விட்டுப் 117
படுத்தாள்; பகைஞரைப்போல் பார்த்தாள்-அடுத்தடுத்து

வேண்டினேன்; 'குட்டுவெளி யாக்குவேன் என்னைத் 118
தீண்டாதே' என்றாள். 'சிராப்பள்ளியில்-ஆண்டவள்பால்

அரும்பதவுரை: கண்ணி (106) ஏந்திழை-பெண். (109) பரத்தை-வேசி. (110) குன்றிருந்த கொங்கை-மலையொத்த ஸ்தனம். (112) பொன்னனையாள்-பொன்னையொத்தவள். (115) சந்தி-சந்தியா வந்தனம்.

செல்லாய்'என் ருள்'பரத்தை தேடுவாளே' என்ருள் 119
சொல்லாத வார்த்தைசில சொல்லினுள்-'இல்லாள்
வலிகிடந்த மாற்றம் உரைக்குமேல் அவ்இல் 120
புலிகிடந்த தூருகி விடும்'என்று-உலகறியச்
செப்பினுள் அவ்வைஎன்று தேர்ந்தேன்; ராத்திரியே 121
தப்பினேன்' கைக்குஅடங்கத் தக்கதுகொண்டு-அப்பால்

பல புண்ணிய ஸ்தலங்களைத் தரிசித்து புண்ணிய நதிகளில் மூழ்க என் இதயம் நாடியது. ஆகையால் திருவானைக்காவல், தென் மதுரை, திருமறைக்காடு (வேதாரண்யம்) திருப்பாதிரிப் புலியூர், கும்ப கோணம், மைலாப்பூர், திருமுதுகுன்றம், சிவசமுத்திரம், திருக்கழு குன்றம், அவிநாசி, செங்காட்டான்குடி, சிதம்பரம், திருக்காளாத்தி, காசி, பிரயாகை, துவாரகை, ராமேஸ்வரம், ஸ்ரீ வைகுண்டம், ஆழ்வார் திருநகரி, கிருஷ்ணுபுரம் ஆகிய ஸ்தலங்களையும் தரிசித்துத் தீர்த்தமாடி பலாமரங்கள் நிரம்பிய குற்றாலத்திற்கு வந்து குற்றாலநாதனைத் தரிசித்து, திருநெல்வேலி, ஸ்ரீ வில்லிபுத்தூர், திருச்சுழி, திருப்பூவனம் இவை களையெல்லாம் கண்டு தரிசித்துவிட்டுக் கடைசியாக சங்கைக் கரத்தி லேந்தி எம்பெருமாள் கோயில் கொண்டிருக்கும் சோலைமலைக்குச் சென் றேன். அங்கு சிலம்பாற்றில் மூழ்கி எழுந்தேன். சோலைமலையில் குடி கொண்டிருக்கும் சங்கு கை கொண்ட அழகர் திருப்பாதத்தைச் சேவித்து ஆனந்தங்கொண்டேன். பெருமை வாய்ந்த அந்தத் தலத்தில் ஐந்து நாள் தங்கிவிட்டேன்.

அச்சமயத்தில் அங்கிருந்த ஞானி ஒருவருடன் நட்புக் கொண் டேன். சில நாட்கள் அவரோடு தங்கியிருந்தேன். ஒருநாள் எனக்கு சொக்கநாதக்கடவுள்கோயில் கொண்டிருக்கும்மதுரைக்குச்செல்ல விருப் பம் ஏற்பட்டது. அந்த ஞானியாரையும்என்னுடன் துணை வரக் கேட் டுக்கொண்டேன். ஆனல், அப்பெரியார் என்னை நோக்கி நகைத்தார். காரணம் தெரியாமல் அவரையே நோக்கி நின்றேன். என்னை நோக்கி அவர், "வேதங்களைக் கற்றுணர்ந்த உமக்கு உண்மையில் நடந்த கதை ஒன்றைக் கூறுகிறேன், கேளும்!" என்று சொல்லி நடந்த கதையொன் றைக் கூறினர்.

அதிசயங்கள் ஆனதலம் யாவும் அறிவோம் 122
நதிகள்பல மூழ்குவோம் நாம்என்று-இதமாய்
வெள்ளைநா வல்பழுக்கும் மிக்கபதி யும்நரிகள் 123
துள்ளுபரி யானதொரு தொன்னகரும்-தெள்ளுதமிழ்

அரும்பதவுரை: கண்ணி (120) தூறு-குகை (121) அவ்வை-ஔவை (123) துள்ளுபரி—துள்ளுகின்ற குதிரை. தொன்னகர்—பழமையான நகரம்.

செப்பக் கதவு திறந்தஊரும், கருங்கல் 124
கப்பல் எனவந்த கடற்பதியும்-இப்புறத்தில்

பாங்குடைய ஆண்டுபனி ரண்டுக்கு ஓர்கால்மா 125
மாங்கநீர்ப் பொங்கும் வளப்பதியும்-பூங்குடத்தில்

அங்கத்தை மங்கைவடி வாக்கினஊரும், தமிழ்க்குத் 126
தங்கத்தை ஈந்த தனிஊரும்-செங்கருங்கண்

காகம் எரியக் கனல்வீசும் மாமலையும் 127
யோகம் கழுகுசெயும் ஒண்கிரியும்-வேகமிக்க

கான்ருண்டு வெம்முதலை கௌவிஉண்ட பிள்ளைதனை 128
மூன்ருண்டு சென்றுஅழைத்த மூதூரும்-மான்ருன்நேர்

தாசிக்கு எழுந்ததனத் தைலிங்கம் என்றுஒருவன் 129
பூசித்துப் பேறுபெற்ற பொன்னகரும்-நேசித்து

மைந்தன் உடல்அரிந்து மாதவத்தோர்க்கு இட்டுவினைப் 130
பந்தம் அரிந்தோன் பழம்பதியும்-சொந்தமாம்

ஆட்டைப் புலிகாக்கும் அம்பலமும், நாலுவசி 131
நாட்டி நடுக்குதிக்கும் நன்னகரும்-காட்டெயினன்

கண்ணைப் பறிகொடுத்த கற்பதியும், வண்ணுன்தன் 132
பெண்ணைப் பறிகொடுத்த பேருரும்-மண்ணுலகில்

தீண்டாதார் எச்சில் செழுமறையோர்க்(கு) ஈந்தாலும் 133
வேண்டாம் எனுதுஏற்கும் மெய்ப்பதியும்-மாண்டவர்தம்

காதில் உபதேசம் கடவுள்சொல் லும்பதியும் 134
சீதரன் மாயாபுரியும் சேவித்து-நாதிக்கும்

சங்கமுகந்து அங்கெறி தரங்கமுக கங்கையுடன் 135
சங்கமுக தீர்த்தமெல்லாம் தாஞடி-அங்கிருந்து

கங்குல்பக லாகக் கடலோட்டக் கப்பலில்ஓர் 136
திங்களில்வந் தெய்தினேன் சேதுவினில்-மங்காத்

தனுக்கோடி தர்ப்ப சயனம் பணிந்து 137
மனுக்கோடி சூழ்செந்தூர் வந்தேன்-கனத்த

அரும்பதவுரை கன்ணி. (127) ஒண்கிரி-ஔிபொருந்தியமலை (130)மாதவத்தோர்-தவத்தில் வல்லவர்கள். (131) காட்டெயினன்-வேடுவன். (இங்கு கண்ணப்ப நாயனுர்) (135) தரங்கம்-கடல். (136) திங்கள்-மாதம்.

திருப்பதிகள் ஒன்பதுநான் சேவித்து அங்குள்ள 138
அருட்பொலியும் தீர்த்தமெல்லா(ம்) ஆடித் தருப்பொலியும்

குற்ருல நெல்வேலி கோதைவில்லி புத்தூர்வந்(து) 139
உற்றேன்; திருச்சுழிகை ஊர்பணிந்தேன்-நெற்றிவிழித்

தம்பிரான் பூவனத்தைச் சந்தித்தேன்; சங்கேந்தும் 140
எம்பிரான் சோலேமலேக்(கு) எய்தினேன்-பைம்பொன்

தலேயருவி ஆடிஎங்கள் சங்கத்து அழகர் 141
மலரடியைப் போற்றி மகிழ்ந்தேன்-ஸ்தலமகிமை

ஆனதிஞல் அஞ்சுநாள் அங்கிருந்தே(ன்) அங்கேயோர் 142
ஞானிஐயன் தன்னுடனே நட்பானேன்-மேன்மையீர்

சொக்கர் மதுரை தொழுதுவர வேநீரும் 143
ஒக்கவர வேண்டுமென உரைத்தேன்-தக்கோன்

நகைத்தான் இவ்வண்ண நடந்தகதை உண்டு 144
தொகுத்தமறை வேதியரே சொல்வேன்-மிகுந்தபுகழ்

"பேரோடும் புகழோடும் விளங்கி வந்த கெந்தி என்ற அரசன் திருவெற்றியூர்த் திருவிழாவைக் காண மிகுந்த விருப்பம் கொண்டான். இதையறிந்த அம்மன்னனின் அமைச்சன் அவ்வூரில் வசிக்கும் தாசிகளின் சாகஸச் செயல்களே எடுத்துக் கூறி, அங்கு சென்ருல் அவர்களது மையலில் சிக்க நேரிடுமாதலால் விழாவிற்குச் செல்லுதல் நல்லதல்ல என்று எவ்வளவோ சொல்லிப் பார்த்தான். அரசன் அதைப் பொருட்படுத்தவில்லே. திருவிழாக் காணச் சென்று அரசன் ஒரு தாசியின் அழகில் மயங்கி அவள் கைப்பொம்மையாஞன். அவளிட்ட வசிய மருந்தால் மதியுமிழந்து அவளே கதியாஞன். அவனுடைய பட்டத்து யானேயையும், நாட்டையும், நகரையும் நவநிதிகளடங்கிய பொக்கிஷத்தையும் அந்தத் தாசி தன் வசப்படுத்திக்கொண்டாள். முடிவில் அவள் நேசத்தால் நோய் வாய்ப்பட்டு, உடம்பெல்லாம் புண்பட்டுவிட்ட அந்த அரசனின் கையில் வேப்பங் தழையும், பிச்சை எடுத்துண்ண ஒரு ஓடும் கொடுத்துத் தன்விட்டை விட்டே ஓட்டிவிட்டாள் அந்தத் தாசி.

"குஞ்சரத்திலமர்ந்து பவனிவந்து அரசாட்சி செய்த அரசன் இன்று சூதாடிகளுடன் சேர்ந்து வேஷமிட்டுக் கூத்தாடி திரிவதைத் நீர் கேள்விப்பட்டதில்லேயோ ? ஆகையால் மதுரை நகரைக் காணச் செல்வதென்ருல் அங்கும் தொல்லே பல காத்துக் கிடக்கின்றன !" என்றெல்லாம் சொல்லி நான் மதுரை செல்வது நல்லதல்ல என்ருர்.

அரும்பதவுரை : கண்ணி. (138) அருட்பொலியும்-கருணேஒளிவீசும். (143) ஒக்கவர-உடன்வர. (144) சேவிக்க-வழிபாடுசெய்ய.

மேவிச்சிறந்த கொந்தி வேந்தன்ஒற்றி ஊர்த்திருநாள் 145
சேவிக்கப் போகமனம் சிந்தித்தான்-தாவில்


அமைச்சன்(அ)ங்கே சென்றக்கால் அங்கொருத்தி வல்லி 146
உமைச்சதி செய்வாள் என்றுரைத்தான்-அமைச்சன்உரை

மிஞ்சிநடங் தான்அந்த வேசைகைக்குள் சிக்கினன் 147
வஞ்சி மருந்தால் மதிகெட்டான்-குஞ்சரமும்

நாடு நகரும் நவநிதியும் வாங்கினள் 148
ஓடுங் குழையுமா(ய்) ஓட்டினள்-ஆடுகின்ற

கூத்தாடி கள்வன்போல் கோலம்பூண்(டு) ஆடுவதைப் 149
பார்த்தீர் இலையோசொல் பாவலீர்-வாய்த்த

கறைக்கண்டர் தென்மதுரை காணவென்றால் ஆங்(கு) ஓர் 150
தொறட்(டு) உண்டு அதனையான் சொல்வேன்-பொறுத்த கசம்



மதுரா நகர் தாசிபற்றி ஞானியார் சொல்லியது

எண் திசையும் புகழ் பெற்று 'இந்திர விமானத்தில் அமர்ந்திருக்கும் மதுரை [ஆலவாய்] சொக்கநாதக் கடவுளின் ஆலயத்தின் பணிக்குத் தன்னை அர்ப்பணித்துக்கொண்டு கோயிற் பணி செய்து வருபவள் தாசி மாணிக்கமாலை. அவளுக்கு நீண்ட நாளாகக் குழந்தை ஒன்றும் பிறக்கவில்லை. ஆகையால் அவள் தனக்குப் பின் வாரிசாக ஒரு பெண்

அரும்பதவுரை : கண்ணி. (147) குஞ்சரம்-யானை (150) கறைக்கண்டர் -திருநீல கண்டரான மதுரை சொக்கநாதப் பெருமாள்.

குழந்தை பிறக்க வேண்டுமென ஆவல் கொண்டு பல நோன்புகளிலிருந் தாள். கோயிலைக் கூட்டிச் சுத்தம் செய்து மெழுகி அதில் அன்னமிட்டு உண்டும், குறிகாரனிடம் குறி கேட்டுப் பரிகாரமாக யந்திரம் எழுதி வாங்கி அதைத் தன் கழுத்தில் அணிந்தும், கர்ப்ப முண்டாவதற்கெனச் சொல்லிய மருந்துகளை யெல்லாம் செய்து உண்டும், தினம்தோறும் அதிகாலையில் கோவிலில் திருப்பள்ளி யெழுச்சி தரிசனம் செய்தும், செண்பகப் பூப் போன்ற பல வாசனை மிகுந்த மலர்ச் செடிகள் நிறைந்து விளங்கும் நந்தவனங்கள் பலவற்றை உண்டாக்கியும், தனக்குப் பின் தன் வாரிசாக ஒரு பெண் பிறக்கக் கடும் நோன்பிருந்தாள். இளமை நீங்கி மேனி சுருங்க ஆரம்பித்த அவ்வயதில்-எவரும் கண்டு மோகிக்க விரும்பாத விதத்தில் கவர்ச்சி குன்றியிருக்கும் அப்பருவத்தில்-மாணிக்க மாலை தன் ஆசை நிறைவேற பல விதத்திலும் முயன்று, எப்படியோ காற்றடிக்கத் தாழை பூத்த கதையாய் கர்ப்பவதியானாள்!

கூந்தலில் நரையோடிவிட்ட மாணிக்கமாலையின் தொய்ந்து போன மார்பகத்தின் முனை, அவள் கர்ப்பமுண்டான காரணத்தால் இருண்டு கருப்பாக மாறியது!

குழி விழுந்த கன்னங்கள் கொண்ட அவளது முகம், கர்ப்பத்தின் வளர்ச்சி காரணமாக வெளுத்த சந்திரனைப்போல மாறிற்று. சுருக்கம் விழுந்த கிழமேனியில் பச்சை நரம்புகள் ஓடியது. பெஞ்சைமாநகர் நாகம கூளேந்திரனின் அன்னச் சத்திரத்தில் அளிக்கப்படும் உணவை உண்டு வருபவர்கள் வயிறு பெருத்திருப்பதைப்போல் அவளது கர்ப்ப முற்ற வயிறும் பெருத்து வளர்ந்தது! மசக்கையினால் புளிப்பு முதலிய பண்டங்கள் மீது ஆசை கொண்டு புசித்தாள். அறியாச் சிறு குழந்தை போல் மண்ணையும் சிறிது அள்ளி வாயில் போட்டுக்கொண்டாள்.

இம்மாதிரியாகப் பத்து மாதம் சென்றது. ஒருநாள் வயிறு உளைந்து பிரசவ வேதனையால் மூர்ச்சையுற்றாள். சற்று நேரத்தில் ஒருகுழந்தை பிறந்தது. அப்போது அங்கிருந்த தாதிப்பெண் அவள் அருகில் சென்று காதோடு காது வைத்து, "உனக்குப் பெண் குழந்தை பிறந்தி ருக்கிறது!" என்றாள். இவ்வார்த்தையைக் கேட்டதும் காதில் அமிர்தம் பிழிந்ததுபோல் துள்ளி எழுந்தாள். மூர்ச்சையும் தெளிந்தது. மாணிக்க மாலை பெற்றெடுத்த பெண் குழந்தையை "பொன் காய்க்கும் பூமி" என்று சொல்லி, தாதியரும் அங்கிருந்த மற்றவர்களும் பாராட்டி,நீராட்டி பட்டுத் துகிலால் அக்குழந்தையை துடைத்தெடுத்தனர்.

அட்டதிக்கும் சூழ்கோயில் ஆலவாய்ச் சொக்கருக்குத் 151
தட்டது எடுக்கும் தழியிலாள்-வட்டமுலை
மாணிக்க மாலைஎனும் மங்கையொரு பெண்ணடிதன் 152
காணிக்குத் தேடக் கருத்தாகி-ஊணைத்
தரைமெழுகி உண்டு தவங்கிடந்து(ம்) எந்தக் 153
குறைகள்எனக் குறிகள் கேட்டும்-பெறுவதற்குச்

செப்புத் தகடெழுதிச் செம்பொன் கழுத்திலிட்டும் 154
கொர்ப்பத்துக்கா(ய்) மருந்து கிண்டியுண்டும்-தப்பாத்
திருவனந்தல் சேவித்தும் செண்பகப்பூ வாசம் 155
மருவனந்த நந்தவனங்கள் வைத்தும்-திரையுடலை
வேற்றொருவர் கண்டுவிரும் பாதநாள் தாழை 156
காற்றடிக்கப் பூத்த கதைபோலச்-சாற்றும்
அரிவை தெரிவை கடந்துஅப்பால் நடக்கும் 157
பருவத்தே கர்ப்பம் படைத்தாள்-நரைவீழ்
தலையில் கறுப்பிறங்கி சாய்ந்ததுஎனத் தொங்கு 158
முலையில் கறுப்பும் உதிரக்-கலக
விழிவேல் குழியமுகம் வெண்மதிய மாக 159
எழில்மேனி பச்சை நரம்புஎய்தத்-தழைத்தரும்சூல்
கொண்டவயிறு பெஞ்சைக்கூ ளேந்த்ரன் சத்திரத்தில் 160
உண்டுவரு வோர்வயிற்றை ஒப்பாகத்-தண்தேன்
அளிக்குடிக்கும் தாரா எரும்புளியம் காய்க்கும் 161
புளிக்குடிக்கும் முன்னம்இச்சை பூண்டாள்-களிக்கவயிற்(று)
ஊடுதரித்த பிள்ளைக்குள் ஆவார் வாயில்அள்ளிப் 162
போடுவதைத் தன்வாயில் போட்டறிந்தாள்-கூடிவந்த
மாதம்ஒரு பத்தாய் வயி(று)உளைந்து பெற்றாள்அவ் 163
வேதனையால் மூர்ச்சையாய் மெய்சோர்ந்தாள்-தாதிமார்
பெண்ணென்றார் காதில் பிழிந்த மருந்ததுபோல், 164
துண்ணென்று எழுந்து துயர்தீர்ந்தாள்-வண்ணமணிப்
பொற்றொடிக்கை மங்கைநல்லாள் பொன்காய்க்கும் பூடுஒன்று
பெற்றதுபோல் ஈன்றெடுத்த பெண்கொடியை-மற்றுளார்
ஏந்திஇரு கையால் எடுத்துநறு நீராட்டிப் 166
பூந்துகிலால் மெய்துவட்டிப் போற்றினார்-வாய்ந்த சங்கில்

அரும்பதவுரை: கண்ணி (154) செப்புத் தகடெழுதல்-மந்திர வாக்கியம் எழுதிய செப்புத் தகடு(தாயத்து). (157) அரிவை தெரிவைகடந்துஅப்பால் நடக்கும் பருவம்-இளமை கடந்து முதுமை கவ்வும் பருவம். (159) முகம் வெண்மதியமாக-முகம் சந்திரனைப்போல வெளுத்துப்போதல்; சூல்-கர்ப்பம். (160) தண்தேன்-குளிர்ந்த இனிமையான தேன். (164) துண்ணென்று-விசையுடன்(வேகத்தைக் குறிக்கும் சொல்) (165) பொற்றொடி-பொன்னாலான வளையல்களை அணிந்தவள். (166) பூந்துகில்-மெல்லிய ஆடை.

குழந்தை பிறந்தவுடன் அக்குழந்தைக்கு முதன் முதல் புகட்டும் எண்ணெய்க்கு சேனையிடுதல் என்று சொல்லுவார்கள். தாசி மாணிக்க மாலையின் குழந்தைக்கு வெறும் சேனை மட்டும் புகட்டவில்லையாம்; சங்கிலிட்ட சேனையுடன் வஞ்சகம், உருட்டுப்புரட்டு, மனித வர்க்கத்தின ருக்குச் செய்யப்படும் சகல கபடுகள், திரிசமன்கள், ஆகாசப் புளுகு, பொய் ஆகியவற்றையும் கலந்து புகட்டினளாம்!

அதன் பின் அக்குழந்தையை, "தேனே, கனியே, தெவிட்டாத தெள்ளமுதே! மானே, என் கண்ணே, மரகதமே! நான் பெற்ற பொன்னே" என்றெல்லாம் கொஞ்சித் தன் பொற் துடைகள் மீது வைத்து ஆசையுடன் குழந்தை முகம் நோக்கி அதன் நெற்றியில் வெள் ளிப்பட்டம் சூட்டியது போல் திருநீறிட்டாள். சின்னஞ்சிறு கால்களுக்குக் காப்பணிந்தாள். "குவளை மலர் போன்ற அழகுக் கண்களையுடைய என் செல்வ மயிலே! உன் கடைக்கண் விச்சால் பொன்னும் பொருளுமுடை யவர்களை உன் கைக்குள் வளை!" எனக்கூறி அதன் சின்னஞ் சிறிய கைகளுக்கு வளையலிட்டாள்! "விரித்த வலையில் சிக்கும் பறவை போல் பெரும் பணம் படைத்தவர்கள் உன் பொட்டுக்கு மயங்கி வட்டமிட்டுத் திரியட்டும்!" என்று கூறி நெற்றியில் பொட்டிட்டாள். புதைத்து வைத்தி ருக்கும் வேந்தர்களின் தனத்தைக் கண்டுபிடிக்கும் அஞ்சன மையோ என எண்ணும்படி குழந்தையின் வேல் விழிக்கு மையிட்டாள். அழகிய செந்தாமரைப் பூவில் சிறு வண்டிருந்தாற்போல தன், செல்வ மகளின் சின்னஞ்சிறு கன்னத்தில் ஒரு கறுப்புப் பொட்டிட்டாள். பொன்னும் பொருளும் தன் விட்டில் குவியட்டுமெனக் குழந்தையை வாழ்த்திபொன் தொட்டிலிலிட்டு, "தேடி உன்பால் வராதவர் ஆரார், வந்து மடிச் சீலை கொட்டித் தாராதவராரார், தந்தணையிற் சேராதார் ஆரார், சேர்ந்து உனக்குள் ஆசை கொண்டு சுற்றுதார் ஆரார்? . . . ஆராரோ!" என்று தாலாட்டினள்.

இவ்வாறு பாராட்டிச் சீராட்டிச் செங்கை கொட்டி, அந்தி நிலவு காட்டி, மஞ்சள் நீராட்டி, இவ்வுலகில் பெரிய நாகேந்த்ரன் புகழைக் கவி வாணர்கள் போற்றிப் புகழ்ந்து வளர்ப்பது போல தன் பெண்ணை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்து வந்தாள். தன் செல்வ மகள் தத்தித் தத்தி நடைபோடுவதைக் கண்டு தாய்க் கிழவி துள்ளி நடந்தாள். துன்பமனைத்தையும் மறந்தாள். தன் குழந்தை சிற் றுடை உடுத்தித் தெருவில் சுற்றி வருவதைக் கண்டு திருஷ்டி சுற்றிப் போட்டாள். குழந்தை மழலை மொழிவது கண்டு உள்ளம் பூரித்தாள். வளர்ந்து வரும் தன் செல்வ மகளுக்கு வளையிட்டு, காதிற்குத் தோடிட்டு, தலை சீவிக் கொண்டையிட்டுக் குப்பி சூடி, கொப்பிட்டு, காலில் வெள் ளித்தண்டையும் பொற் சதங்கைக் கொலுசும் அணிவித்து, அவளது சிற்றிடையில் இரண்டு வட அரைஞாண் அணிவித்து, செம்பள மாலை யும் அணிவித்து, நெற்றிச்சுட்டி அணிவித்து, வைரத்தால் மூக்குத் தளுக்கு அணிவித்து, மகளை வாரித்தழுவி கன்னத்தோடு முத்தமிட்டு, ம த னா பி ஷே க மெ ன ப் பெயரிட்டு: உலகறியக் கூறினள்.

அதன் பின் பள்ளிக்கனுப்பி, ஆரியமும், கன்னடமும், களிதெலுங்கும், செந்தமிழும் படிப்பிக்கச் செய்தாள்.

சேனையுடன் வஞ்சம் திருட்டு மருட்டும்அவ 167
தானப்புரட்டும் தனம் பறிக்க-மானிடர்க்குச்

செய்யும் கபடும்மகா தித்திரிப்பும் ஆகாசப் 168
பொய்யும் கலந்து புகட்டினுள்-செய்ய'பசுந்

தேனே! கனியே! தெவிட்டாத தெள்ளமுதே! 169
மானே!என் கண்ணே! மரகதமே!-நான்ஈன்ற

பொன்னே!'என எடுத்துப் பொற்குறங்கின் மீதேற்றி 170
மின்னேர் இடையாள் விழிபரப்பி-நன்னுதலில்

பாப்பிட்ட சொல்லிவெள்ளிப் பட்டமென வெண்ணீற்றுக் 171
காப்பிட்டாள்; சிற்றடிக்கும் காப்பிட்டாள்-சேப்பிட்டு

'செய்க்குவளைக் கண்மயிலே! செம்பொன்உள்ள பேர்களைஉன்
கைக்குள்வளை' என்றுவளை கைக்(கு)இட்டாள்-'சிக்காப்புள்

ஓட்டுக்குள் ஆவதுபோல் உள்ளபணக் காரர்கள்உன் 173
பொட்டுக்குள் ஆக'வென்று பொட்டிட்டாள் பொட்(டு)எனவே

வேந்தர் புதையல் வெளியாக்கும் அஞ்சனம்போல் 174
வாய்ந்தவடி வேல்விழிக்கு மையிட்டாள்-காந்திமுக

வன்னக் கமலமதில் வண்(டு)இருந்தாற் போலமகள் 175
கன்னத்தின் மீதோர் கறுப்(பு)இட்டாள்-சொன்னதனம்

வீடேறப் பண்டைமுதல் மேலேறத் தன்குடும்பம் 176
ஈடேறப் பொன்தொட்டில் ஏற்றினுள்-'தேடிஉன்பால்

வாராதவர் ஆரார்? வந்துமடிச் சீலைகொட்டித் 177
தாராதவர் ஆரார்? தந்(து)அணையிற்-சேராதார்

ஆராரார்? சேர்ந்துனக்(உ)ள் ஆசைகொண்டு சுற்றுதார் 178
ஆரார்?' என்றுதா லாட்டினுள்-தாராட்டிச்

சீராட்டி, முன்னிருத்திச் செங்கைகொட்டி காட்டி மஞ்ச(ள்) 179
நீராட்டி, அந்திநிலாக் காட்டிப்-பாரில்

அரும்பதவுரை : கண்ணி (167) சேனையுடன்-குழந்தைக்கு முதன் முதலாக அளிக்கப் படும் உணவு (168) தித்திரிப்பு-சூது. வாது. (170) பொற் குறங்கு-பொன்னிறமானதொடை: மின்னேரிடையாள்-மின்னலை யொத்த (இல்லையோ என ஐயுறும்) இடையையுடையவள். (171) சிற்றடி-சிறிய பாதம். (172) குவளைக்கண்-குவளைமலர் போன்ற கண்கள். (174) அஞ் சனம்-கண்மை;

கிளைப்பெரிய நாகேந்த்ரன் கீர்த்தியைச்சொல் வாணர் 180
வளர்ப்பதுபோல் பெண்ணைவளர்த்தாள்-மூளைக்கு(ம்)மகள்

தள்ளி நடந்தாள்; அதுகண்டு தாய்க்கிழவி 181
துள்ளி நடந்தாள்; துயர்தீர்ந்தாள்-பிள்ளைஒரு

சிற்றாடை கட்டித் தெருவில்வரக் கண்டுதிட்டி 182
சுற்றாமலே திட்டிச் சுற்றினாள்-மற்று(ம்)அந்த

வம்பிமகள் மழலைவார்த் தையைக் கேட்(டு) ஆடவரைத் 183
தம்பிஎன்று சொல்லத் தலைப்பட்டாள்-அம்புயச்செங்

கைக்குவளை இட்டுக் கடகம் பவளமிட்டுத் 184
தக்கையிட்ட காதில் தளப்பமிட்டுப்-பக்கத்தில்

கொண்டையிட்டுக் குப்பியிட்டுக் கொப்பிட்டு காலில்வெள்ளித்
தண்டையிட்டுச் செம்பொற் சதங்கையிட்டு-வெண்தரள

மாலையிட்டு இரட்டை அரைஞாண் மருங்கில்(இ)ட்டு 186
வேலையிட்ட சுட்டிநெற்றி மேலிட்டுக்-கோலச்சிங்(து)

தாக்கிட்டுச் செம்பவளத் தாழ்வடங்கள் இட்டுவச்ர 187
மூக்குத் தளுக்கிட்டு. முத்தமிட்டு-நாக்குளிர

வாரிட்ட கொங்கை மதனாபி ஷேகமெனப் 188
பேரிட்டு உலகறியப் பேச்(சு) இட்டாள்-ஆரியமும்,

கன்னடமும், கட்டிக் கரும்புபோலே வடுகும் 189
பன்னு தமிழும் படிப்பித்தாள்-மன்மதவேள்

மதனாபிஷேகம் ஏழாவது வயதிலேயே பரத நாட்டியம் கற்றாள். முற்றும் துறந்த முனிவரும்கேட்டு மயங்கும்படியாகச் சங்கீதத்தைக் கரைகண்டாள். தன் பொன் மேனியில் வாச மஞ்சள் பூசி, மல்லிகைப் பூ சூடி ஆடவரைத் தன் வீட்டிற்கழைப்பதும், ஓடியாடிப் பிலுக்குவதும், கிட்ட நின்று பேசுகையில் முத்துப் பல் நகை காட்டி கொஞ்சுவதும், வெட்கங் கொண்டவளைப்போல தலைப்பை இழுத்து மார்பகத்தை மூடிக்கொள்வதும், அதைக் கண்டு பெருமூச்செறிந்து வாய் பிளக்கும் காமுகரை அந்தி மறையும் வரை தன் வீட்டில் வைத்து விளையாடுவதும், வருபவர்களை வாளால் வீசுவதுபோல் தன் வேல் விழியால் வெட்டி மயக்குவதும் போன்ற தன் மகளின் சாகசச் செயல்களைக்கண்டு பல் விழுந்த பொக்கு வாய்த்தாய்க் கிழவி உடம்பும் உள்ளமும் பூரித்தாள். அந்தப் பூரிப்பிலே அழகு வாய்ந்த இளம் வாலிபர்கள் சுலபமாக வசமாக்கி தன் காலடியில் கிடக்கச் செய்யக்கூடிய சொக்குப் பொடி மருந்து தயாரிக்கும் விவரத்தையும் போதித்து விட்டாள்!

வசந்தோற்சவம் வந்தது. சொக்கர் புது மண்டபத்தின் முன் தன் குமாரத்தியின் கலைத் திறமையை எண் திசையோரும் கண்டு வியக்கும் வண்ணம் அரங்கேற்றினாள்.

பொற் கொடியான மதனாபிஷேகத்தின் மார்பகம் சின்னஞ்சிறு செப்புச் சிமிழ் போலாகி, பிறகுபூரித்து வட்டமிட்டு அண்ணாந்து நிற்கும் சிறு தேங்காயளவில் வளர்ந்து, கண்டவர் மயங்கும் கன்னியாகி தன்னை யுணர்ந்தவளானாள். மகளின் பிரமாத வளர்ச்சி கண்ட தாய்க்கிழவியான மாணிக்கமாலை, தன் வாழ்நாளில் அதுவரை தேடிவைத்திருந்தபொருளை யெல்லாம் தன் வீட்டில் ஒரு புறத்தில் குழி தோண்டிப் புதைத்து வைத்துவிட்டாள். தன் மகளை, பணம் படைத்த செல்வர்கள் பலர் சுற்றி வட்டமிடுவதையும், அக் காமுகர்கள் மீது தன் மகள் நாட்டங் கொள்வதையும் தாய்க்கிழவி கண்டறிந்தாள்.

சிற்பரத அல்குல் சிறியாள் வயதேழில் 190
நற்பரதம் எல்லாம் நடித்தறிந்தாள்-உற்பனமாம்

மோனவித்தை யுள்ள முனிவோரையும் மயக்கும் 191
கானவித்தை எல்லாம் கரைகண்டாள்-மேனிக்குள்

வாடைமஞ்சள் பூசுவதும், மல்லிகைப்பூச் சூடுவதும், 192
ஆடவரை வீட்டுக்கு அழைப்பதுவும்-ஓடிப்

பிலுக்குவதும், கிட்டநின்று பேசையிலே முத்துக் 193
குலுக்குவதும், கொஞ்சுவதும், முலையின்-தலைக்கறுப்பை

முந்திகொண்டு வெட்கம்போல் மூடுவதும், காமுகரை 194
அந்திமட்டும் வைத்து விளையாடுவதும்-வந்தவரை

வாள்வீச்சுப் போல வரிவிழியாள் வெட்டுவதும் 195
போழ்வாய்ச்சி கண்டு(உ)டம்பு பூரித்தாள்-வேளையார்

கைக்குள்வசம் ஆகிவந்து காலைப்பிடிக் கும்அந்த 196
சொக்குப் பொடிமருந்தும் சொல்லிவிட்டாள்-சொக்கர்புது

மண்டபத்தின் முன்னே வசந்தன் திருநாளில் 197
எண்திசையோர் மெச்ச அரங்கேற்றினாள்-ஒண்டொடிக்குச்

அரும்பதவுரை. (180)கிளை–சுற்றம்; உறவு. கீர்த்தி–புகழ் (182)திட்டி–திருஷ்டி. (183) அம்புயம் – தாமரை. (183) ஆரியம்–சமஸ்கிருதம். (190) பரதம்–நாட்டியம் (191) கானவித்தை–இசைக்கலை. (192)பிலுக்குதல்–ஒய்யாரம் காட்டுதல். (195) வரிவிழி – செவ்வரி படர்ந்த விழிகள். (196) சொக்கர்–மதுரை சொக்கநாதப் பெருமான். (197)எண்டிசை–எட்டு திசைகள் (அஷ்ட திக்கு)

சின்னச் சிமிழாகிச் செப்பாகித் தேங்காயாய் 198
வன்னத் தனபாரம் வளர்ந்தேறக்-கன்னிகையாள்

தன்னை அறிந்தாள், தழியிலாள் தன்பழைய 199
பொன்னையொரு பக்கம் புதைத்துவைத்தாள்-மன்னவர்கள்

சுற்றுவதும், காமுகரைத் தோயமகளுக்கு மனம் 200
பற்றுவதும் கண்டறிந்தாள் அப்பரத்தி-பெற்றெடுத்த

பருவமடைந்துவிட்ட தன் மகளை அருகே அழைத்து உட்கார வைத்துக்கொண்டாள் மாணிக்கமாலை.மிகவும் கனிவோடு சில புத்திமதிகளைக் கூறலானாள்.

"மகளே! என் கண்ணே! மயிலே! நான் சொல்வதைக் கவனமாய்க் கேள். மீன் குஞ்சுக்கு எவரும் நீச்சல் கற்றுக் கொடுப்பதில்லை. பாம்புக்குட்டிக்கு நஞ்சை எவரும் கொடுப்பதில்லை. இது இயற்கையின் அமைப்பு. பெண் சிங்கமொன்று குட்டியீன்று கொண்டிருந்ததாம். அப்போது அச்சிங்கத்தின் கண்ணெதிரே யானையின் சித்திரம் ஒன்று தத்ரூபமாய் எழுதி வைக்கப்பட்டதாம். சிங்கக்குட்டி தாய் வயிற்றிலிருந்து பூமியை எட்டிப் பார்த்ததும், எதிரே எழுதி வைக்கப்பட்டிருந்த யானைச் சித்திரத்தைக் கண்டு அதன் மீது அது பாய்ந்ததாம்! அதைப் போல் அவரவர்களுக்குத் தன் குலத்தொழில் தானே வந்துவிடும்.சொல்லித் தெரிவதில்லையென்றாலும், பொற்கொடியான என் செல்வ மகளே! என்னைக் காட்டிலும் நீ இரு மடங்கு புத்தியிலும் சாகசத்திலும் கெட்டிக்காரிதானென்றாலும், அனுபவத்தில் உன்னிலும் சற்று முதிர்ந்தவள் நான். ஆகையால் ஒரு சில புத்திமதிகளை உனக்குச் சொல்ல விரும்புகிறேன். கவனமாய்க் கேள்.

"மகளே! நீ எந்நாளும் மஞ்சள் குளிப்பதை மறந்துவிடாதே.மஞ்சள் மணங் கமழ உயர்தர வாசனைப்பொடி பூசி ஆடவர்களின் மனம் மயக்கி உன் வசப்படுத்துவாயாக. பொன்னுடை கொண்டு உன்னை அலங்கரித்துக்கொள். செம் பொற் குடம் போன்று பருத்த உன் மார்பகத்தின் ஒரு பாதி சற்றே தெரியும்படியாக உன் மேலாக்கைத் தளர்த்திவிட்டு முத்துப் போன்ற உன் பற்கள் தெரியச் சிரித்துப் பேசி, வகையான சாகசச் செயல் புரிந்து, மின்னலிடை நெகிழ, அன்ன நடை காட்டி, உன் அழகின் மேன்மையைக் காணும் வாலிபர்கள் மயங்கி விழும்படியான ஆசையை ஊட்டு.

"விம்மிப் பருத்து நிமிர்ந்திருக்கும் உன் பெண்மையின் எடுத்துக் காட்டு தளர்ந்து சாய்ந்து விட்டால்-உன் அழகு முகத்தில் சுருக்கம் விழுந்துவிட்டால்-உனக்குச் சல்லிக்காசு கொடுத்து ஆதரிப்பவர் யாரடி

அரும்பதவுரை: (198) வன்னத் தனங்கள்—அழகிய மார்பகம். (200) தோய-மூழ்க. (இங்கு கலந்து சுகிக்க)

என் அருமை மகளே! மேலும் கொட்டை நீக்கிய பஞ்சுப் பெட்டிபோல் தலை நரைத்துவிட்ட பெண்கள் கைக்கு என்ன கிடைக்கப் போகிறது? அவர்கள் சட்டி சுரண்டுவதைத் தவிர வேறு வழியில்லை. ஆகையால் என் பெண்ணே! உடற்கட்டும் அழகும் வாலிபமும் இருக்கும்போதே பொருள் சம்பாதிக்க மனம் வைப்பாயேயானால், வீடெல்லாம் தங்கத் தகட்டால் வேலை செய்து கட்டலாம்.

''சிலர் வந்து உன் காலைப் பிடிப்பார்; இல்லாத பொய் புரட்டெல் லாம் பேசி வெற்றிலை மடித்துக் கொடுத்து அன்பு கொண்டவர் போல் உன்னிடம் வேஷமிடுவார். படுக்கை விநோதங்கள் பலகாட்டி சுகம் தருவேனென்பார்கள். இம்மாதிரி கள்ள மனம் படைத்தவர்களை உன் வீட்டிற்கு அழைக்காதே!

''மெல்லியலே! உன்னுடைய படுக்கையில் சிலர் பல பகட்டு விதங் கள் செய்து மயக்கப் பார்ப்பார்கள். அவர்கள் வாயில் மண்ணடிப்பதைப் போல் நீயும் ஏமாற்றுவிதமாக மேலும் அவர்கள் மயங்கும்படி மையலை ஊட்டு. ஆனால் நீ அவர்கள் பகட்டில் மனமயங்கி, ஆசை கொண்டு விடாதே! அப்படி நீ தனிப்பட்ட ஒருவர் மீது ஆசை வைத்தால், வேறு எந்த வாலிபனாவது உன்னிடம் வருவானா? மேலும் உன் போன்ற சக தொழில் தாசியரெல்லாம் ஏசிச் சிரிப்பதற்கிடமாகும். 'காசு பணத்தைக் குப்பல் குப்பலாகக் குவித்து உன்னை வைப்பாக வைத்துக் கொள்வதாக எந்தச் சீமான் சொன்னாலும் இவ் வாலிபப் பருவத்தில் யாருக்கும் வைப்பாக இருக்கச் சம்மதித்து விடாதே !

''செப்பு போன்ற உன் இளம் மார்பகத்தைத் தொட்டும், தடவியும், கசக்கியும் முட்டாள தனமான சல்லாபத்திலீடுபட விரும்புவோரை சிறிதும் அனுமதிக்காதே.

''முன்பின் அறிமுகமற்ற அன்னியர்கள் ஏழு நூற்றெண்பது பொற் காசுகள் கொண்ட முடிப்பு கொடுத்தாலும் அவர்களுக்கு மனமொப்பிச் சம்மதியாதே. ஏனென்றால், அவர்கள் ஆசையாய் இன்பமுடன் உன்னு டன் கூடுவார். அயர்ந்து நீ நித்திரை செய்யும் சமயம் பார்த்து மயக்கும் மாயப்பொடி தூவி, உன் சேலை முதல் பொன் பொருள் சகல உடமை களையும் ஒன்றாகச் சுருட்டிக் கொண்டு மறைந்து விடுவர். அதன் பின் நாம் யாரைப் போய் இழந்த அப்பொருளைக் கேட்பது?

ஊரிலே தகப்பனுக்கு அடங்கியபிள்ளையும், தாய்க்குக்கீழ் சிறுவரு முண்டு. அவர்கள் வந்தால், வாயால் வடுச்செய்து விடாது இன்ப சுகம் காட்டி, யாருக்கும் தெரியாமல் அனுப்பிவிடு.

''சேயிழையே! மாலை நேரத்தில் கையில் ரொக்கமாகப் பணம் கொடுத்தால் அவர்களிடம் சொந்தம் பாராட்டி இன்ப சுகம் காட்டு! தொலைதூர ஊரிலிருந்து உன்னிடம் வந்து கூடி இரவில் தங்குபவர் களிடம் அளவற்ற ஆசை கொண்டதுபோல் நடித்து, ''சுவாமி உன்னைக் கணமும் பிரிந்திருக்க முடியவில்லையே! என்ன பொடி தூவினாயோ! உன்னைப் பிரிந்து நான் தனித்திருக்க முடியாது. நீ

என்னுடன் இருப்பதே இனிமையடா! என் கண்ணுளா! சனிக்கிழமை கழித்து நீ வருவாயென்பதற்கு என்ன உறுதி? ஆணையிடு!' என்று சொல். 'சொன்ன சொல் தவருதே!' என்று திரும்பத் திரும்பச் சொல்லி சரசமாக வழியனுப்புவாயானல் போதுமானது. அவர்களுக்கு வேறு எந்த மருந்துமே கொடுக்க வேண்டியதில்லை! உன்னைத்தேடி புதையலே வருமடி!

"உன் அழகில் மயங்கி காதல் கொண்டு வரும் சிமான்களை பொன்னே பொருளோ கேட்காமல் உபசரி. என் மின்னற் கொடியே! இவ்வாறு பிரபுக்களின் நேசம்உனக்குக் கிடைப்பதால், ஊரிலும்நமக்குச் செல்வாக்கு; நம்மை யொத்தவர்களைவிட மேலான வாழ்வும் கிட்டும்.

"பணம் படைத்தோரிடம் தானு காசு கிடைக்கும்? உலகத்தில் புல் விற்றும், கிரை விற்றும்கூட நமக்குப் பொருள் கொடுப்பார். சிலர் முதுமைப் பருவமெய்தி, தலை நரைத்து, உடல் தளர்ந்தாலும் சபலம் தணியாத வயோதிகர்களும் வருவார்கள்.கிழவனுயிற்றே என்று எண்ணி அலட்சியப்படுத்தி விடாதே. பல்லெல்லாம் போய், முதுகு கூனி விட்ட கிழவன் ஆசையோடு கொடுக்கும் பணத்தில் நரையா விழுந்திருக்கப் போகிறது! மேலும் மானத்தை விட்ட சிலர் வருவர். அதன்பின் அவனுடைய மகனும் வருவான், 'அப்பனும் மகனுமாயிற்றே, தப்பான முறையாகுமே!' என்று நீ தள்ளிவிடாதே.

"என் மயிலே! வேலையின்றித் திரிந்து ஏமாற்றுவதையே தொழிலாகக் கொண்டு பணம் பறிக்கும் சில எத்தருமுண்டு. அந்த எத்தர்களை நீ எத்திவிட வேண்டும். என் பருவகாலத்தில் என் அனுபவத்தில் அப்படியொரு சம்பவம் நடந்திருக்கிறது, கேள்:

"என் பருவ வயதில் இவ்வூரில் ஒரு குச்சிலியப் பயலிருந்தான். அவன், மதுரை மழுங்குணி என்பவளை நட்புக்கொண்டு பணத்தையெல்லாம்பறித்துக்கொண்டான்.கிழக்குத்தெரு நெட்டைக்கிருஷ்ணுளின் வீட்டை அடியோடு நாசமாக்கி அவள் பொருளனைத்தையும் சுருட்டிக் கொண்டான். ஸ்ரீவில்லிபுத்தூர் குப்பியின் உடமை யெல்லாம் கைப்பற்றிக்கொண்டான்.தனக்கு வைப்பு எனக்கூறி தஞ்சாவூர் செல்லியிடம் தந்திரமாகப் பசப்பி முடிவில் இருந்ததை யெல்லாம் பிடுங்கிக் கொண்டு அவளை கட்டின கந்தையுடன் திரியவிட்டான். இம்மாதிரி பல தாசிகள் அவனிடம் பொருளைப் பறிகொடுத்தனரேயன்றி அவனிடமிருந்து எவருமே ஒரு செப்புக் காசுகூட வாங்கினவர்களில்லை!

"இந்த எத்தன் என்மேல் நாட்டம் கொண்டு இங்கு வந்தான். அவனைப்பற்றித்தான் எனக்குத் தெரியுமே. இருந்தாலும் பலரிடமிருந்து சுருட்டிய காசு அவனிடம் கொழுத்து இருந்ததால், அன்று முதல் அவனுக்கு ஆசார உபசாரம் செய்தேன். அவன் விருப்பப்படி யெல்லாம் இருந்து நடந்துகொண்டேன். அவன் என் வீட்டிற்கு வந்த நான்காம் நாள், இரவு நடுச்சாமத்தில், அவன் அயர்ந்து தூங்குகின்ற சமயத்தில் எழுந்து கால்களில் செருப்பை மாட்டிக்கொண்டு, உடம்பு முழுவதும்

திருநீற்றைப் பூசி, தலையில் ஐந்து சடைகளைப் பின்னிக்கொண்டேன். காண்பவர் பெண்பேய் என்று எண்ணி ஓடும்படியான கோலங்கொண்டேன். பிறகு மது கலந்த சோற்றுடன் கையில் கத்தியும் எடுத்துக்கொண்டு வெளியே புறப்பட்ட நான், கழுமரத்தில் செத்துத் தொங்கும் கள்ளளின் வலது குதிக்கால் நரம்பில் விளக்கேற்றி எரித்து நெய்யெடுத்துக்கொண்டு வீடு வந்து சேர்ந்தேன். அதன்பின் உழக்கரிசி எடுத்து அந்த நெய்யில் கலந்து ஊறவைத்துப் புளிப்பில்லா சாற்றிலிட்டு, பாற்குழம்பில் சர்க்கரையோடு கூட்டிச் சேர்த்து, அந்த மருந்தை சோற்றிலிட்டு அவனை உண்ணச் செய்தேன். பிறகு அவன் என் வசமானான்; சொக்கினான். இவ்வாறு அவன் நெஞ்சை என்பால் சுழலச் செய்த தந்திரத்தால், அவன் வசமிருந்த பணம் முழுவதையும், புற்றில் வாய் வைத்து ஈசலை உறிஞ்சும் கரடி போல் நானும் அவனிடமிருந்து அடியோடு கறந்து கொண்டேன். பிறகு என்ன? இருந்தவற்றை யெல்லாம அவன் என்னிடம் பறிகொடுதது விட்டு கையில் ஓடெடுத்துக்கொண்டு தெருத் தெருவாய் திரியலானான்!

"என்னருமைக் கண்மணியே! அந்த நெய்யரிசியில் ஆழாக்கு அரிசி உனக்கு உதவட்டுமென்று மீதப்படுத்தி வைத்திருக்கிறேன்.

"பிரகாசமான விழிகளையுடையவளே! மாசி வீதியில் நாம் உல்லாசமாய் உலவி வரும்போது, பணம் படைத்தவரை பல தந்திரங்கள் செய்து உன்னுடன் கூட்டிப்போய் மெல்ல நகைக்கடைக்குள் புகுந்து முத்துமாலை, பவளமாலை முதலியவற்றைக் காட்டு. 'நகைக் கடையைப் பார்த்தீர்களா? கிட்டாத சரக்கெல்லாம் இருக்கிறதே!... அப்படி இப்படி' என்றெல்லாம் அவனிடம் கூறு. ஆனால் 'வாங்கிக் கொடு' என்று வாய் திறந்து மட்டும் கேட்டுவிடாதே. உன் கழுத்துமாலையையோ, காதோலையையோ, விரலில்அணிந்துள்ள பொன் மோதிரத்தையோ கொடுத்து அடகு வைத்தாகினும் வாங்கித்தரும்படி சொல்.வட்டி ஐந்துபத்து போனாலும் பாதகமில்லை என்றுகூறிப் பசப்பு. உன் வார்த்தைகள் அப்போது சுருக்கென்று அவன் நெஞ்சில் தைக்கும். உடனே தன் கையிலுள்ள பணம் முழுவதையும் உன் கையில் கொடுத்து விடுவான். அதைக் கொண்டு நீ கடையிலுள்ள சரக்கை யெல்லாம் வாங்கி உன் அறையில் நிரப்பு!

"சிலர் தங்களது இடுப்பில் ஏதேனும் மருந்தை மறைத்துக் கட்டிக் கொண்டு வந்து உன்னுடன் கூடி உன் உடம்பை வாட்டி எடுத்துவிடுவார்கள்! நீ அவர்களைக் கூடு முன் பரிவுடன் அணைத்துக்கொண்டு, கொஞ்சிக்குலாவி, கைச்சரசமாடுவது போல் அவன் உடம்பெங்கும் தடவிக் கண்டுபிடித்து அம்மருந்தைக் கைப்பற்றிப் பிடுங்கி எறிந்துவிடு.

"என் செல்வ மகளே! மன்மதக் கலையை நன்கு கற்றுத் தேர்ந்து வெட்கத்தைவிட்ட சில வம்பர்களும் உண்டு. அவர்கள் வந்தால், என் மீது ஆணையிட்டுச் சொல்கிறேன், அப்படிப்பட்டவர்களை உன் ஜென்மமுள்ள மட்டும் சேராதே!

"சாதுக்கள் போன்ற ருத்திராட்சப் பூனைகள் சிலருண்டு. அவர்கள் உன்னை நாடி வந்தால் படுக்கையில் படுக்கவிட்டு விளக்கை அணைத்து விடு. அவர்களைக் கூடியிருக்கும் சமயம் யாராவது வந்து கூப்பிட்டால் என்னைக் கூப்பிடு. வந்தவர்களுக்கு சொல்கிறபடி சொல்லி நான் அனுப்பி விடுகிறேன்.

"கவிபாடும் புலவர்கள் வருவார்கள். ஐந்து பணத்திற்கு பதில் அரைப்பணந்தான் கொடுப்பேன் என்பார்கள். துடுக்காய்ப் பேசுவார்கள். அப்போது காசைக் கணக்கெடுக்காதே. அவர்களுக்கு நீ மகிழ்ச்சியூட்டினுல் உன்னைப் பாடிப் புகழ்வார். நீ மறுத்துரைப்பாயானுல் உன்னை இகழ்ந்து தூற்றி வசை பாடுவார்கள். அதனுல் நம் வாழ்வு பாதிக்கப்பட்டுவிடும்.

"அசையாத நம் நெஞ்சையும் கலக்கி அஞ்சச் செய்யும் அரண்மனை அதிகாரிகள் உன் மேல் விருப்பங்கொண்டு வருவார்கள். அவ்வாறு வருபவர்கள் நீ எதிர்பார்த்த தொகைக்கும் குறைவாகக் கொடுத்தாலும் கொடுப்பதை மகிழ்ச்சியுடன் பெற்றுக்கொள். கொஞ்சமென்றெண்ணுதே. நம் கை முதலா போய்விடும்?

"ஊர் மணியக்காரர் வந்து உன்னைகூடியிருக்க வாவென்று அழைப்பார்கள். அவர்களை மறுத்துரைத்து 'முடியாது' என்று சொல்லுவதால் அவர்களது பகையும் பொல்லாப்புந்தான் வந்து சேரும். இப்படிப்பட்டவர்களைத் தந்திரத்தால்தான் ஏமாற்ற வேண்டும். அவர்களுக்குத் தெரியாமல் உன் சேலையில் வெற்றிலைத் தம்பலத்தின் செஞ்சாற்றை உமிழ்ந்து கொண்டு, 'வீட்டுக்கு விலக்கு' என்று கூறி அவர்களை வந்த வழியே அனுப்பிவிடவேண்டும்.

"உண்மையாகவே மாதவிடாயானுலும் ரொக்கப் பணம் கிடைப்பதாயிருந்தால் அதை நழுவ விட்டுவிடாதே. குளித்துவிட்டு அவருடன் கூடிக் குலவு.

"ஒரு சிலர் வருவார். அவர்கள் உன்னேடு வார்த்தையாடும்போது, உன்னை நோக்கி, 'எனக்கு உன் மீது அதிக ஆசை ஆனுல் உனக்குத்தான் என்மேல்ஆசையேயில்லை!' என்றெல்லாம்கூறி உன்உள்ளத்தைச் சோதிப்பார்கள். உடனே நீ அவர்களிடம், 'ஆஹா! என்ன வார்த்தை சொன்னீர்கள். இவ்வாறெல்லாம் என்னிடம் அவநம்பிக்கை கொள்ளலாமா? சத்தியமாக உங்கள் மீது தான் எனக்கு ஆசை, நேசம், உயிர் எல்லாம்' என்று தலையிலடித்து ஆணையிட்டு நம்பிக்கையூட்டு. அப்படியெல்லாம் செய்கிற பொய்சத்தியத்தால் நம் உயிரா போய்விடும்? இம்மாதிரி பொய்ச் சத்தியமிடுவது எனக்குத் தயிர் சாதம் போல சர்வ சாதாரணம்!

"உன்னிடம் வருபவர்களில் சிலர் இருட்டில் செல்லாத பணத்தைக் கொடுத்து ஏமாற்றிவிட்டு அதிகாலையில் எழுந்து போய்விடுவார்கள். அவர்களிடம் ஒரு கண் வைத்து ஜாக்கிரதையாக இரு! நாம் எக்காலத்திலும் ஏமாந்தவர்களாய் இருக்கக்கூடாது. அவர்கள் வாய்த்துடுக்காகப்

பேசினால், முயலின் மேல் நாயை எழுப்பி விடுவது போல் 'அம்மா!' என்று எனக்குக் குரல் கொடு நான் வந்து அவர்களைக் கவனித்துக் கொள்கிறேன்!

"கோவில் குருக்கள் பலருக்கு என்னிடம் நட்பு உண்டு. நீ அவருடைய சகோதரர்களுடன் நட்பு கொள்ளலாம்! மைக் கண்ணுடையவளே! சில வாயாடிகளும், கைச்சரசமாடக்கூடிய வம்பர்கள் வருவர். அப்படிப்பட்டவர்களை அண்டவிடாதே. அவர்களை உதறித் தள்ளு.

"வேதம் படித்த வேதாந்திகள் சிலர் உன் அழகு வசப்பட்டு உன்னை நாடி வருவார்கள். தக்க சமயம் பார்த்து அவர்களுக்கு மருந்திட்டு, அவர்களது புத்தியை மயக்கிப் பொருள் பறித்துக்கொள்.

"சோறு சமைக்கும் சமையல்காரர்கள்கூட உன்னிடம் சபலம் வைத்து நாடுவார்கள். அவர்களை அலட்சியப்படுத்தி அகங்காரம் கொண்டு தள்ளிவிடாதே. அவர்களுடைய நட்பு இருந்தால் நம் வீட்டில் அடுப்பே மூட்டவேண்டாம்! அவர்கள் சமைக்கும் அறுசுவை உண்டிகள் யாவும் தவறாது நம் வீடு வந்து சேர்ந்துவிடும்.

"கோயில் பொக்கிஷதாரர், கோயில் கணக்கர் போன்றவர்கள் வருவார்கள். தள்ளாதே. உனக்கு நாட்டியம் ஆடுவதற்கு முதன்முதலாக உன் காலைப் பிடித்து அடி எடுத்து வைத்து நாட்டியம் சொல்லி வைத்த நட்டுவனார் உன் மீது ஆசை கொண்டு உன் கை பிடித்தழைத்தால் என் கண்ணே! அவரைத் தழுவிக் கூடுவாயாக! நீண்ட நேரம் உன்னிடம் இருக்க விரும்புகிறவரை அன்புடன் சிக்கிரம் அனுப்பிவிடு.

"திறமையாக நாடகங்களில் நடித்துப் பாடுபவனை உன் வசப்படுத்திக்கொள். ஆனால், தித்திக்காரனுக்கும் கைத்தாளம் [ஜால்ரா] போடுபவனுக்கும் இடம் கொடுத்து விடாதே! அலட்சியப்படுத்தி ஒதுக்கு.

"ஆசை அதிகமுடையவர்களாய், ஆனால் கண்டதும் உணர்ச்சி பொங்கி, வெறி தணிந்துவிடும் சில பலவீனர்களும் உண்டு. அவர்கள் எது கொடுத்தாலும், கொடுப்பதை வாங்கிக்கொள். கொஞ்ச நேரமே அவன் உன்னோடிருப்பான். பிறகு சென்றுவிடுவான்.

"நீ ஒருவனுடன் சரசமாடிக் கொண்டிருக்கையில் வேறு யாரேனும் பணத்துடன் வந்தால், வந்தவனை சமையல் அறையில் இருக்கச் செய்து, நான் உன் அறைக்கு வெளியிலிருந்து செருமிச் சாடை காட்டுவேன். உடனே கொல்லைப்புறம் சென்று வருவதாக உன்னுடன் அப்போது இருப்பவனுக்குப் போக்குக்காட்டிவிட்டு நீ வெளியே வந்துவிடு. பதுக்கி வைத்திருப்பவனையும் கவனித்துவிட்டு, பிறகு கொல்லைப்புறம் சென்று வந்தவள் போல கை கால்களை அலம்பி மீண்டும் உன் அறைக்குச் சென்றுவிடலாம்!

"உன்னுடன் அடிக்கடி வந்து கூடிப் பழகிய உத்தியோகஸ்தர்களுக்குப் பணமுடை ஏற்பட்டால், அவர்கள் உன்னிடம் வந்து,

'கண்ணே! அவசரத் தேவை, நீதான் எனக்கு உதவவேண்டும். உன் கண்டிகையையாவது, கால் தண்டையையாவது, உன் கழுத்திலணிந்திருக்கும் மாணிக்க மாலையையாவது கொடு. அதை அடகு வைத்து இப்போதைக்கு என் சிரமத்தைத் தீர்த்துக்கொள்கிறேன். மாதம் பிறந்தவுடன் திருப்பி உன் நகையை உன்னிடம் சேர்த்துவிடுகிறேன்' என்றெல்லாம் கேட்பார்கள். அவர்களுக்குக் கொஞ்சங்கூட ஈவு இரக்கம் காட்டாதே! 'எனக்கு எவ்வித ஆட்சேபணையுமில்லை. உங்களுக்கு இல்லாததா இவையெல்லாம். ஆனால், என் தாயாரான அக்கிழவியையும் ஒரு வார்த்தை கேட்டுவிடுங்கள். என் உடமைகளைத் தர சிறிதும் தயங்கமாட்டேன்' என்று சொல்லிவிடு. அவர்கள் என் வாய்க்குப் பயந்து பேசாதிருந்து விடுவார்கள். என்னிடம் வந்து கேட்கவும் துணியமாட்டார்கள்.

"இதற்கு முன் என்னிடம் நட்பு கொண்டிருந்தவர்களானாலும் சரியே, உன் மீது மோகமுற்று கை நிறையப்பொருள் கொடுக்க முன் வந்தால் அவர்களுடன் கூடக் கூசாதே! பறவையும், விலங்கினங்களும் முறையையா பார்க்கின்றன? தாசிக்கு ஏது முறை? வேசி முறை பார்த்தால் பிழைப்புக்கே மோசம் வந்துவிடும்! வாலிபமிருக்கும்போதே பொன்னும் பொருளும் சம்பாதித்துக் கொண்டால்தான் தப்பலாம்."

இவ்வாறெல்லாம் தாய்க்கிழவியான மாணிக்கமாலை தன் மகள் மதனாபிஷேகத்திற்கு புத்திமதிகள் போதித்து தொழில் நுணுக்கங்களைச் சொல்லிக் கொடுத்தாள்!

மானே, என் கண்ணே! மயிலே! குயிலே!செங் 201
தேனே! மதனபி ஷேகமே!-மின்ஈன்ற

குஞ்சுக்கு நீச்சும் கொடும்பாம்பின் குட்டிகு 202
நஞ்சும் கொடுத்தவரார் மங்கையே-செஞ்சிலைக்கை

சீவகனுக்கு அங்கொருபெண் சிங்கம்ஒரு கன்றுஈனும் 203
பாவனைபோ லேஎழுதிப் பக்கத்தில்-ஓவியமாக்

காராளை ஒன்றெழுதிக் காட்டஅரிக் கன்றுதுள்ளிப் 204
போராடிப் பாய்ந்தகதை பொய்யலவே-யாருக்கும்

சாதித் தொழில்தனக்குத் தானே வருமொருவர் 205
போதிக்க வேண்டுமோ பொற்கொடியே!-மாதர்க்குள்

உன்புத்தி என்புத்திக் கோரிரட்டி யாகிலும்என் 206
தன்புத்தி யும்மகளே! சற்றேகேள்-ஒன்பதூர்க்

கொஞ்சு பரிநகுலன் கூளேந்த்ரன் பன்றிமலை 207
மஞ்சள் குளியை மறவாதே!-மஞ்சள்

மணம்காட்டி ஆள்பிடிக்கும் வாடைப் பொடியின் 208
குணங்காட்டிக் கண்காட்டிக் கோலம்-இணங்கியபொன்

உத்தரியம் சற்றே ஒருபால் தெரியவிட்டுக் 209
குத்துமுலைச் செம்பொற் குடங்காட்டி-முத்துநகை

காட்டிவகை காட்டிநடை காட்டிஇடை காட்டிநயம் 210
காட்டிஇளை யோர்க்குஆசை காட்டுவாய்-கோட்டுமுலை

சாய்ந்தால் முகந்திரைத்தால் சல்லிக்காசு ஒன்றுமுனக்கு 211
ஈந்து ஆதரிப்பவரார்; ஏந்திழையே-ஆய்ந்தபஞ்சுப்

பெட்டிபோ லேநரைத்த பெண்கள்கையில் என்னவரும்! 212
சட்டி சுறண்டவரும் தையலே-கட்டழகின்

வாலிபத்தே தேட்டில் மனம்வைத்தால் பொன்தகட்டால் 213
வேலிஇட்டுக் கட்டலாம் வீடுஎல்லாம்-காலைப்

பிடிப்பார்! முழுப்புரட்டுப் பேசிஇலை கறி 214
மடிப்பார்! தருவார்! வருவார்!-படுக்கைவிதம்

காட்டுவேன் என்பார்அக் கள்ளவண்டர் தங்களைஉன் 215
வீட்டில் அழையாதே மெல்லியலே-வீட்டில்வந்து

பாயப் பகட்டுவிதம் பண்ணுவார்க் குப்புழுதி 216
வாயில் புகட்டு மயல்பூட்டு!-நீஒருத்தர்க்கு

ஆசைவைத்தால் பின்னொருத்தர் அண்டார் உடன்ஒத்த 217
வேசையர்க்கெல் லாம்நகைப்பாம் மெல்லியலே-காசுபணம்

குப்பல்குப்ப லாகக் குவித்தாலும் வாலிபத்தில் 218
வைப்பிருக்கச் சற்றுமனம் வையாதே-செப்பு

முலையைக் கசக்கிவிட்டு முட்டாள் சரசத்து 219
அலையவிடும் பேரை அழையாதே-சிலைநுதலாய்!

முன்பின் அறியார் முடிப்பாகப் பொன்எழு நூற்று 220
ஒன்பதுதந் தாலும்மனம் ஒவ்வாதே-இன்பமுடன்

கூடுவார் நித்திரைநீ கொள்வதுபார்த் துப்பொடியை 221
போடுவார் சேலைவர்க்கம் பொன்னுடைமை-சோடிணையாச்

சேரச் சுருட்டிஅப்பால் செல்வார் விடிந்ததற்பின் 222
யாரைப்போய்க் கேட்பதுநாம் ஆரணங்கே-ஊரிலே

அரும்பதவுரை : கண்ணி (209) உத்தரியம்-மேலாடை (210) கோட்டு முலை-கொம்பு போன்ற நிமிர்ந்த மார்பகம். (216) மயல்-மோகம். (219) நுதல்-நெற்றி

தந்தைக்கீழ்ப் பிள்ளையுண்டு தாய்க்கீழ்ச் சிறுவர்உண்டு 223
வந்தால் மறைய வரச்சொல்-தந்தமதால்

வாயில்வடுச் செய்யாமல் மார்பில்நகம் வையாமல் 224
தோயும்இதம் காட்டிச் சுகங்காட்டு-சேயிழையே!

அந்தி படப்பயணம் அத்தரொக்கமாக வந்தால் 225
சொந்தமுள்ள பேர்தமக்குச் சொல்லியே-முந்திவந்து

சாரம் உண்பாய் நீஅவன்பின் சக்கையைத்தின் பானெனமுன்
நேரம் அழைத்தனுப்பு நேசமாய்-தூரத்து

இருந்துவந்து கூடிவிடிந்து ஏகுவார் தம்மேல் 227
பரிந்துஆசை போற்பிறகே பற்றி-பிரிந்திருக்க

மாட்டேனே உன்னாலே மாப்பிள்ளைமார் ஆசைஎல்லாம் 228
போட்டேனே என்னபொடி போட்டாய்நீ-வீட்டில்

தனித்திருக்கப் போமோடா! சாமீ!உன் தம்பல் 229
இனித்திருக்கும் தாடா! இருடா-சனிக்கிழமைக்கு

அப்பாலோ நீவருவாய்! ஆணையிடு! முக்காலும் 230
தப்பாதே! என்றுஅனுப்பு தார்குழலே!-மைப்பொருங்கண்

மாதுநல்லாய் வேறு மருந்தேன் அவர்திரும்பும் 231
போது வருமே புதையலெல்லாம்-காதல்கொண்ட

மன்னவரைத் தூங்குசப்ர மஞ்சத்தின் மீதிருத்திப் 232
பொன்அவரைக் கேளாமல் புல்லினால்-மின்அரசே

ஊர்க்கும் சலுகைநம்மோடு ஒத்தவர்க்கும் எண்ணிக்கை 233
யார்க்கும் கனத்தகுடி யாகலாம்-பார்க்குள்ளே

புல்லுவிற்றும் கீரைவிற்றும் பொன்கொடுப்பார் காண்நமக்குக்
கொல்லிமலைப் பாவாய்! குலதெய்வம்-பல்விழுந்த

கூனற் கிழவன் கொடுக்கும் பணயமதில் 235
நானக் குழலே! நரையுண்டோ?-மானமின்றி

அப்பன் வருவான் அதன்பின் மகன்வருவான் 236
தப்புமுறை யென்றுநீ தள்ளாதே-இப்புவியில்

அரும்பதவுரை: கண்ணி. (223) மறைய-ஒருவரும் அறியாமல். (224) வடு-தழும்பு. (227) ஏகுவார்-செல்வார். (229) தம்பல்-வெற்றிலைபாக்கு. (232) சப்ரமஞ்சம்-பஞ்சணை; புல்லினால்-சுகம் கண்டால். (235) நானக் குழலே-கஸ்தூரி அணிந்த கூந்தலை உடையவளே.

மாலைக் குளியர்வெகு மாமாயக் கள்ளர் தங்கள் 237
சோலிக்குப் போகாதே தோகையே!-வேலையின்றித்

தத்தை அனையாரைத் தழுவிப் பணம்பறிக்கும் 238
எத்தரைநாம் எத்துவதும் எத்துகாண்-சித்ரக்

கதையைக்கேள் என்பருவக் காலத்தில் இந்தப் 239
பதியில் ஓர் குச்சிலியப் பையல்-மதுரை

மழுங்குணிஎன் னும்பேரான் மாதர் தனத்தைத் 240
தழுவிப் பறிப்பான் தனத்தை-முழுதும்

கிழக்குத் தெருவின்நெட்டைக் கிருஷ்ணனின் வீட்டைக் 241
குளப்பறியா கப்பறித்தான் கூடி-முளைத்துஎழுந்த

செப்பு முலைமாதே சீவிலிப்புத் தூர்த்தாசி 242
குப்பி உடைமைஎல்லாம் கொள்ளைகொண்டான்-வைப்பென்று

தந்திரமா கப்பசப்பி தஞ்சாவூர்ச் செல்லிதனைக் 243
கந்தை பொருத்தவிட்டான் கைமருந்தால்-இந்தவகை

ஆங்குஅவனுக் கேகொடுத்தார் அல்லாது அவன்பொருளை
வாங்கினபேர் இல்லைஎன்மேல் மாலாகி-ஈங்குவந்தான்

குன்றுமுலை யாய்க்கொழுத்த குட்டியகப் பட்டது 245
என்றுபூ ரித்தேன் இருதோளும்-அன்றுமுதல்

மாட்டுப் பரங்கிக்காய் மாதே தினம்கறியாக் 246
கூட்டிக்கொண்டு ஆங்கவனைக் கூடியே-வீட்டில்வந்த

நாலாம்நாள் அல்லில் நடுச்சாமம் சோதித்துக் 247
காலில் தொடுசெருப்புக் கட்டியே-மேலெல்லாம்

வெண்ணீறு பூசிஐந்து வீரசடை பின்னிவிட்டுப் 248
பெண்நீலி என்றுகண்டோர் பின்வாங்க-எண்ணமின்றிக்

கள்ளுஞ்சோ றுங்கைச் சுரிகையுமாய்ப் போய்க்கழுவில் 249
கள்ளன் வலதுகுதிக் கால்நரம்பில்-மெள்ள

அரும்பதவுரை : கண்ணி; (239) குச்சிலியப் பையல் – குச்சுக்கூட இல்லாத பயல்; எத்துவம்-ஏமாற்றுவோம். (241) குளப்பறியாக-குளம் தோண்டுவதைப்போல. (243) கந்தை பொருத்த-இற்று நைந்த துணிகளை, அணிய. (247) அல்-இரவு. (249) சுரிகை-கத்தி.

விளக்குஎரித்து நெய்வடித்து வீட்டில்வந்து நன்றாய் 250
உழக்கரிசி பெய்துஊற வைத்துப்-புளிப்பில்லாச்

சாற்றிலிட்டும் பால்குழம்பில் சர்க்கரையில் கூட்டிஇட்டும் 251
சோற்றில்இட்டும் நெஞ்சைச் சுழலவிட்டு-வேற்றவன்,

பாயத்தால் தேடும் பணம்புற்றி லேகரடி 252
வாயைவைத்தாற் போல்உறிஞ்சி வாங்கிவிட்டேன் பேய்போலக்

கையில்உள்ளது எல்லாம்போய்க் கப்பரைஒன்று ஏந்திஅதோ
தெய்வமே என்று திரிகிறான்-நெய்யரிசி

நாளுக்கு நாள்செலவாய் நங்காய் உனக்குவரும் 254
ஆளுக்குஇருக்குது இன்னம் ஆழாக்கு-வாள்விழியாய்!

வேடிக்கை யாய்மாசி வீதியிலே நாம்உலவ 255
ஆடிக்கு முன்னேஎன் ஆசைஎனத்-தேடுநிதி

உள்ளவரை மெள்ளஉ பாயமாய்க் கூட்டிப்போய்க் 256
கொள்ளும் பவளமுத்துக் கோவைவடம்-உள்ள

கடையும் சவுளிக் கடையும்பார்த் தையா 257
கிடையாச் சரக்குக் கிடைத்தது அடைவாய்என்

உத்தண்ட மாலையைக் காதுஓலையைப் பொன்மோதிரத்தை
வைத்தென்றாலும் கடுக வாங்கித்தா-பத்துஅஞ்சு

வட்டிசுமந் தாலும்அப்பால் வாங்கலாம் என்பாய்ச் 259
சொட்டனுக்கு நெஞ்சு சுறுக்குஎன்னும்-பொட்டெனத்தன்

கைத்தனத்தை ஈவான் கடையிலே உள்ளசரக்கு 260
அத்தனையும் வாங்கி அறையிலிடு-வைத்து

மருந்து இடுப்பிற்கட்டி வருவார் சிலர்மேல் 261
இருந்து உடம்பைவாட்டி எடுப்பார்-பரிந்தணைந்து

கைச்சரசம் போல்தடவிக் கண்டுபிடித்து உடனே 262
பிச்சுப் பிடுங்கிஎறி பெண்அணங்கே-லச்சையற

அரும்பதவுரை: கண்ணி (251) வேற்றவன்-அந்த மழுங்குணி என்பவன். (253) கப்பரை-திருவோடு. (254) வாள்விழி-வாள் போன்ற கூரிய விழி. (255) மாசி வீதி-மதுரை நகரில் நாற்புறமும்உள்ள வீதிகள். (256) உபாயம்-தந்திரம். (257) அடைவாய்-அடகுவைத்து. (259)பொட்டென-வேகமாக (260) கைத்தனத்தை-கையிலுள்ள பொருளை. (262) லச்சையற-வெட்கமில்லாமல்.

மன்மதநூ லைப்படித்த வம்பரைஎன் ஆணையுன்தன் 263
சென்மசென்மம் உள்ளமட்டும் சேராதே-சன்யாச

ருத்திராட் சப்பூனே ரூபர்சிலர் உண்டுவந்தால் 264
மெத்தையிலே வைத்து விளக்குஅணைத்துச்-சத்தமின்றிக்

கூடையிலே ஆள்வந்து கூப்பிட்டால் ஐயர்தமைக் 265
கூடையிலே முடிவைத்துக் கூப்பிடுநீ-பாடிக்

கடுக்கன் அலைக்கும் கவிப்புலவர் வந்தால் 266
துடுக்காய் ஒருவார்த்தை சொல்வார்-கொடுக்களன்ருல்

ஐந்துபொன்னும் வாங்கார் அரைப்பணமே போதும்என்பார்
சிந்தை அவர்மகிழச் செய்திட்டால்-நம்தம்

இசைபாடு வார்கூடா தென்ருல் கொடிய 268
வசைபாடு வார்கெடுமே வாழ்வு-அசைஅளவும்

அஞ்சுகின்ற கச்சேரி ஆள்சேவ கர்வந்தால் 269
வஞ்சிஅவர் ஈந்ததைநீ வாங்கிக்கொள்-கொஞ்சமென

எண்ணுதே கைமுதல்மற்று என்னபோம் ஓர்செம்பு 270
தண்ணீர்போம் நாமிடும்பொய்ச் சத்தியம்போம்-பெண்ண

வாஎன்று அழைப்பார் மணியப் பிலுக்கர் சும்மா (ணங்கே
போஎன்று சொன்னுலும் பொல்லாப்பு-பாவையே!

சாதனையாய்ச் சேலையிலே தம்பலத்தின் சாறுஉமிழ்ந்து 272
சூதகம்ஆ னேன்என்று தூரஇரு-மாதவிடாய்

ஆனநாளில் பணயம் அத்தரொக்கம் காணில்ஒரு 273
பானைவெந்நீர்க்கு ஆகஎண்ணிப் பாராதே-நான்உன்மேல்

மோகமுற்றேன் நீஎன்மேல் மோகமில்லை என்றுசிலர் 274
தோகைநல்லாய் உன்கருத்தைச் சோதிப்பார்-ஓகோநீர்

என்னமாய்ச் சொல்லவந்தீர் என்னுசை உம்மேல்என்று 275
அன்னமே என்தலைதொட்டு ஆணையிடு-சொன்னஅந்தப்

அரும்பதவுரை : கண்ணி. (263) மன்மத நூல்-காமசாஸ்திரம். (265) கூடையிலே-சேரும் போது. (266) துடுக்காய்-துஷ்டத்தனமாய். (268) வசை பாடுதல்-இகழ்ந்துபாடுதல். (269) ஈந்ததை-கொடுத்ததை. (271) பிலுக்கர்-பகட்டுக்காரர். (272) சூதகம்-தீட்டு. (274) சோதித்தல்-ஆராய்தல்.

பொய்ஆணை யால்சீவன் போகுதோ பார்எனக்குத் 276
தையால் அவ்ஆணை தயிர்ச்சாதம்-கையில்
இருட்டினில்செல் லாப்பணத்தை ஈந்து படுத்துக் 277
கருக்கலிலே போவாரைக் காட்டித்-தரச்சொல்லு
வாயைமட்டமாப் பேசினுல் மானே முசலின்மேல் 278
நாயைவிட்டாற் போல்எழுப்பி நம்மைவிடு-கோயிலுக்குள்
நம்பியார் ஐயருடன் நான்உண்டு நம்பியார் 279
தம்பியரைக் கூடிச் சஞ்சரிநீ-அம்புஎனும்கண்
மைவித்தா ரக்குயிலே வாய்வித்தா ரக்காரன் 280
கைவித்தா ரக்காரன் கையைவிடு-செய்யுமறைக்
கட்டளையார் வந்தால்உன் கைமருந்தா லேஅறிவைத் 281
தட்டழியப் பண்ணித் தனம்பறிநீ-அட்டிலிலே
சோறு சமைக்கும் சுயம்பாகி வந்தக்கால் 282
வேறும் ஒருவேளாண்மை வேண்டுமோ-சாறும்
பரும்படியும் சம்பாவும் பால்குழம்பு நெய்யும் 283
வரும்படிஇந்தக் கட்டளையாய் மானே-தரும்பொருளை
வெம்பளிக்கை பண்ணுதே வஞ்சினப்பண் டாரிவந்தால் 284
உம்பளிக்கை ஊர்வரத்தை ஒக்குமே-சம்பளத்தைக்
கூட்டிச் சுமத்திவைப்பான் கோயிற் கணக்கன்ஒரு 285
வேட்டுப்போட் டுப்போத வீட்டில்அழை!-ஆட்டுவிக்கக்
கால்பிடித்த நட்டுவனர் கையைப் பிடித்தழைத்தால் 286
வேல்படைத்த கண்மயிலே! மேவிவிடு!-சாலநெடு
நேரஞ்செல் லாமல் நெடுங்குடசக் காரனைமுன் 287
நேரம் அழைத்தனுப்பு நேசமாய்-சாரமுள்ள
நாடகத்துப் பாங்கு நமக்கு நடத்துவிக்கும் 288
பாடகனை யும்தனது பண்ணிக்கொள்-கூடுதித்திக்

அரும்பதவுரை : கண்ணி: (276) அவ்ஆணை தயிர்ச்சாதம் -பொய் ஆணையிடுவது தயிர்ச்சாதம் உண்பதைப்போல. (277) கருக்கலில்-பொழுது சரியாக விடிவதற்குள். (280) வாய் வித்தாரக்காரன்-வாய் வீச்சு வீசுபவன் (281)தட்டழிய—சிதைந்துகெட (282) சுயம்பாகி-சமையற்காரன். (283) பரும்படியும் சம்பாவும்-பெரியபடிக்கணக்கில் சம்பாச் சோறு; பாற்குழம்பு திரட்டுப்பால். (284) வெம்பளிக்கை-அலட்சியம்; பண்டாரி-பொக்கிஷதார் (288) தித்தி-துருத்தி.

காரனையும் கைத்தாளக் காரனையும் எக்காளக் 289
காரனையும் கூடிஇதம் காட்டாதே-தூறு

தலையராய்க் கைத்தாழைத் தம்பியராய்ப் பீறல் 290
கலையராய் உன்அழகைக் கண்டு-விலைகொடுத்தால்

வாங்குவாய். சற்றே மருவுவான்; பேய்ப்படுவான்; 291
தூங்குவான்; போவான்; சுகமறியான்-பூங்குயிலே

மஞ்சத்தில் நீயும்ஒரு மாப்பிள்ளையு மாயிருந்து 292
மிஞ்சுசர சத்தில்ஒரு வேற்றாள்வந்து-அஞ்சாறு

தந்தால் அவனைச் சமையல்வீட் டில்பதுக்கிச் 293
செந்தேனே! மெல்லச் செறுமுவேன்-வந்தணைந்து

கொல்லைக்குப் போன குணம்போல்கை கால்அலம்பி 294
மெல்லப்போ நம்மைஎவர் வெல்லுவார்!-நல்ல

உடன்தையா கத்திரிந்த உத்யோ கஸ்தர்க்கு 295
இடைஞ்சல்வந்தால் உன்னையும் வந்துஏய்ப்பார்-மடந்தையே

காணிக்கை ஆனேன்உன் கண்டியைத்தா தண்டையைத்தா 296
மாணிக்க மாலையைத்தா வைத்துநான்-காணிக்கை

தீர்த்தமறு மாதம் திருப்பித் தருவன்என்பார் 297
ஏந்திழையே! நீசற்றும் இணங்காதே-காந்தாரி

தாய்க்கிழவி சம்மதித்தால் சம்மதம்என் பாய்,எனது 298
வாய்க்குப் பயந்தவர்பின் வாய்பேசார்-நோக்கமாய்

என்னைக் கலந்தவர்கள் என்றாலும் கைநிறையப் 299
பொன்னைக் கொடுத்தால் புணர்ந்துவிடு-மின்னே!

பறவைமிரு கங்கள்முறை பார்க்குமோ வேசி 300
முறைபார்க்க வேபிழைப்பு மோசம்-சிறுபோதே

தேடியல்லோ வன்பில் சிலம்பிஎன்று மன்னவரைக் 301
கூடு திருவாரூர்க் கொண்டிஎன்றும்-ஆடவரைத்

தெட்டும் பெருங்குண்டைத் திம்மிஎன்றும், கொண்டையில்பூ 302
மட்டுண்ட ஒற்றியூர் வல்லிஎன்றும்-சிட்டர்தொழும்

அரும்பதவுரை: கண்ணி: (289) தூறு-விரித்த. (290) பீறல்-கிழிசல்: கலை-ஆடை (291) மருவுவான் - தழுவுவான். (293) செறுமுதல்-கனைத்தல். (297) காந்தாரி-பொல்லாத குணம் படைத்தவள். (299) புணர்தல்-போகித்தல்: மின்னே-மின்னலைப் போன்றவளே. (301) வன்பு-வலிமை. (302) தெட்டும்-வஞ்சிக்கும்.

பூவணமாம் பொன்னகரிப் பொன்னையாள் என்றுஉடல் 303
பூவணமாம் தென்உறையூர்ப் பொன்னிஎன்றும்-தேவர்தொழும்

சொக்கேசர் கோயில் துணைக்கொடிஎன் றும்புவிக்குள் 304
மிக்கான பேர்படைத்தார் மெல்லியலே!-அக்காலம்

வண்ணமாற் றுப்பசும்பொன் வாங்கிஒருத்தி செய்த 305
கிண்ணமாற் றுக்கதையைக் கேட்டிலையோ-பெண்அணங்கே!

என்றுஇப் படித்தாய் இயம்பினுள் புத்திஅதை 306
அன்றிப் படித்தாள் அநேகபுத்தி-அன்றுமுதல்

தாய் போதித்த உபதேசங்களை யெல்லாம் மதனபிஷேகம் எந்த அளவு கடைப்பிடித்தாள்?

மதங்கொண்ட யானையை அங்குசத்தால் குத்தி அடக்கி, இனிமை தரும் கரும்புகளையும் அரிசியையும் கொடுத்துக் கொட்டடியில் சங்கிலியால் பிணைத்துக் கட்டுவார்களல்லவா? அதைப்போல, மதனபிஷேகம் தன் தாயின் உபதேசப்படி, தன் மீது காதல் மிகக் கொண்டு,காமம் மீறி, மதங்கொண்ட யானையைப் போன்று தன்னை அடையச் சுற்றித்திரியும் வாலிபர்களிடம் கரும்பினும் இனிமையாய்ப்பேசி அழகென்னும் அங்குசத்தால் குத்தி ஆட்டிப்படைத்து வந்தாள்.

மேலும் யோகசாதனைகளால் உள்ளமும் உடலும் உறுதி பெற்றுள்ள மகாயோகிகளையும் முனிவர்களையும்கூட, பொம்மலாட்டத்தில் உபயோகிக்கப்படும் தோல் பொம்மையைப்போல் மெலியச் செய்தாள். வீரமும் புகழும் படைத்த அரசர்களையும் மயக்கி, அகஸ்திய முனிவர் கடல் நீரைக் குடித்ததைப்போல், அவர்களுடைய பெருஞ் செல்வத்தை யெல்லாம் தன் வசப்படுத்திக்கொண்டாளாம்.

காதல்மதம் மீறிவரும் காமுகராம் யானைகளைக் 307
கோதும்உகிர் அங்குசத்தால் குத்திஇதம்-ஓதிஅந்த

மாரன் அரண்மனைக்குள் வைத்தணைத்துச் சேர்ந்துரச 308
சாரக் கரும்பு தனைஊட்டி-மூரல்வாய்த்

தம்பல் கவளம் தனைக்கொடுத்துக் கும்பமுலைக் 309
கம்பத் துடன்பிடித்துக் கட்டினுள்-அம்பரத்தீ

அரும்பதவுரை : கண்ணி. (303) பூவணமாம்-திருப்புவனம்: பொன் நகரி-அழகிய நகரம். (304) சொக்கேசர்-சொக்கநாதப் பெருமாள். (307) காதல் மதம்-மோகப் பரவசம்: கோதும்-தழுவும்: அங்குசம்-யானையை அடக்கப் பயன்படும் கருவி. (308) மாரன் அரண்மனை-மன்மதன் மண்டபம். (309) கும்பமுலை-குடம் போன்ற ஸ்தனம்:

மூட்டுவிக்கும் யோக முனிவோரை யும்பொம்மல் 310
ஆட்டுவிக்கும் தோலுருப்போல் ஆக்கிஞள்-தீட்டியவேல்

வண்ணக் குடையரசர் மாநிதியாம் முந்நீரை 311
உண்ணக் குறுமுனியை ஒப்பாஞள்-பெண்ணுக்குத்

மதனபிஷேகத்திற்குப் பலவிதத்திலும் உதவக்கூடிய முக்கிய தோழியர்கள் பத்து பேர் இருந்தனர். பெயர்கள் முறையே,கைமருந்துச் சொக்கி, சாராயத்தாழி, தூது சவுந்தி, ஏழுமதிலேறி, தஞ்சாவூர் எத்தி, மாமாயக்காரி, குண்டுணி வாய்க்கள்ளி, மாருட்டக்குள்ளி, மாயக் குருவி, மாரீசக்கள்ளி என்பதாகும். இவர்களெல்லாம் தாசி விடு நாடி வரும் காமுகரின் ஊடலைத் தீர்த்து கூட்டிவைப்பதிலும்,வாடிக்கைக்காரர் களைப்பிடித்து வந்து சேர்ப்பதிலும், பொருள் தீர்ந்தவர்களைக் கடிந்து விட்டைவிட்டுத் துரத்திவிடுவதிலும் சாமர்த்தியசாலிகள். அதோடு மட்டுமா? கல்லிலும் நார் உறித்தெடுக்கும் திறமையுடையவர்கள். எப் படிப்பட்ட கஞ்சனுக இருந்தாலும் அவர்களைக் கசக்கிப்பிழிந்து பொருளை யெல்லாம் பறித்து விடுவர்.

தோழிமார் கைமருந்துச் சொக்கிஎன்றும், சாராயத் 312
தாழிஎன்றும், தூது சவுந்திஎன்றும்-ஏழுமதில்

ஏறிஎன்றும், தஞ்சாவூர் எத்திஎன்றும், மாமாயக் 313
காரிஎன்றும், குண்டுணிவாய்க் கள்ளிஎன்றும்-மாருட்டக்

குள்ளிஎன்றும். மாயக் குருவிஎன்றும், மாரீசக் 314
கள்ளிஎன்றும், பத்துப்பேர், காமுகரை-மெள்ளப்

பொருத்துவார்; ஊடலாய்ப் போவாரை மோடி 315
திருத்துவார் தாராரைச் சிம்பித்-துரத்துவார்;

கல்லிலே நார்உரித்துக் காண்பார், நணேந்தஇடம் 316
கல்லுவார் தாமும்ஒரு கைமபார்ப்பார்-மெல்லிநல்லார்

இந்நிலையில் குலத்தொழிலிலிடுபட்ட மதனபிஷேகத்தின் மைவிழிக்கும், பிறை நெற்றிக்கும், கொடி போன்றுள்ள சிற்றிடைக்கும், பால் போன்ற அவளது வரிசைப் பற்களின் குறுநகைப்புக்கும், மயங்கி மனம் பறி கொடுத்தவர் பலர். அவளுடைய அன்ன நடையிலும், அமுத மொழியிலும், சுழலும் இரு விழி வீச்சிலும் மனதைப் பறிகொடுத்து

அரும்பதவுரை : கண்ணி. (310) பொம்மல் ஆட்டுவிக்கும் – பொம்மலாட் டம். தோல் உரு–தோல் பொம்மை. (311) மாநிதி–பெருநிதி. முந்நீர்– கடல், குறுமுனி–அகத்தியன். (312) தாழி–சால்போன்றபாத்திரம். (314) மாரீசம் – நயவஞ்சகம். (315) பொருத்துவார்–இணைப்பார்,

மயங்கி வேறெதிலும் நாட்டம் கொள்ளாது அவளிடமே தங்கள் மனதை வைத்து அவளை அடைந்துவிட்டவர்களும் அநேகர். ஆனல், அவர்களெல்லாம் வலையில் அகப்பட்ட மானைப்போல் மருண்டனர். தூண்டிலில் சிக்கிய மீனைப்போல துடிதுடித்தனர். இவர்களிலே, 'ஐயோ! இவளிடம் சிக்கிக்கொண்டோமே!' என்று உள்ளக் கொதிப் படைந்தவரும் உண்டு. 'எப்படியிருந்தால் என்ன? அவளுடன் கூடி இன்பங்கண்டோமே, அதுவே போதும்! எது போனலென்ன?' என்று உள்ளம் மகிழ்ந்தவரும் இல்லாமலில்லை!

மதனுபிஷேகம் விரும்புவாளென்ற எண்ணத்துடன் பல வாசனைப் பொருள்களைத் தங்கள் உடம்பில் பூசிக்கொண்டு அவளை அணைந்து கொள்ள வட்டமிடுபவர்களும், மயக்கப்பொடி தூவும் அவளிடம் வாசனைப்பொடி பூசிச்செல்பவர்களும், தம் கையிலுள்ளதனங்களைக் கொண்டுபோய் கொடுத்துவிட்டு, தந்திரத்திற்தள்ளாகி, தாய்க்கிழவியிடம் ஏமாந்து மனந்தளர்ந்தவர்களும் பலர். தாங்கள் தந்திரக்காரர்கள் என்ற எண்ணத்தில், சூழ்ச்சியாக மதனுபிஷேகத்தை வளைத்துவிடலாமென்றெண்ணிச் செல்பவர்கள், துணிவுடன் அவள் வீட்டின் வாசல் வரை சென்று அங்கே தலையெல்லாம் நரைத்த தாய்க்கிழவி பூதம்போல் காவலிருப்பதைக் கண்டு பயந்து அகன்று போய்விடுபவரும் அநேகர்.

இன்னும் சிலர் அவளிடம் வந்து, "கண்ணே! உன் கால்களைப் பிடித்து விடட்டுமா? செண்பக மலர் போன்ற உன் மேனியைப் பிடித்து விடட்டுமா?" என்றும், "விசிறி கொண்டு வீசுகிறேன்!" என்றும், 'மலர் பறித்து மாலை கட்டித் தரவா?"என்றும்,"உன்னை, நித்திரையில் ஆழ்ந்த உன் பொற்றுடையைப்பிடித்துவிடட்டுமா?"என்றும் கொஞ்சிக் கொண்டு அவளிடம் உறவாடுவார்கள்.

மற்றும் சில காமாந்தகர்கள் அவள் குளித்த பின் தேங்கி நிற்கும் மஞ்சள் கலந்த வாசனை நீரை தங்கள் கையால் அள்ளித் தலையில் தெளித்து மகிழ்ந்து ஆத்ம திருப்தி அடைவார்கள்! சுவாமி சன்னிதியில் தரிசனத்திற்கு செல்லும்போது கூட்டத்தில் இடிபட்டு தள்ளாடி விழும் பக்தர்களைப்போல, அவளைக் கண்டவுடன் காம மயக்கத்தில் தள்ளாடித் தாவிப் பிடிப்பவர் சிலர்.

ஏற்கனவே அவள் வீட்டிற்குள் வேருெருவன் இருந்தால், தான்வந் திருப்பதற்கு அடையாளமாக பலவித சாடைகள் காட்டி அங்குமிங்கு மாகத் திரிவான் ஒருவன்.

அவள் தாழிட்டு அறைக்குள் ஒருவனுடன் சல்லாபித்திருக்கும் போது, மனம் துடித்தபடி வீட்டு முற்றத்திலிருந்து தவித்துக்கொண்டிருப்பான் ஒருவன்.

தான் கூடிச் சுகமனுபவித்த அவளின் முகத்தை தன்னுடைய மேல் துண்டால் துடைக்க, அவள் பூசியிருந்த வாடை மஞ்சள் அத்துணியில் ஒட்டிக்கொள்ள, வெட்கத்தை உதிர்த்துவிட்டு அதைப் பெருமையுடன் தன் தோளில் போட்டுக்கொண்டு வீதிதோறும் சுற்றித் திரிவான் ஒருவன்.

அவள் மஞ்சத்தில் படுத்திருக்கும்போது துப்பட்டியால் அவளது கால்களைத் துடைத்து விடுவார்கள் சிலர்.

தெப்பத் திருநாள் காண அவள்வருகிறபோதும், மல்லிகை மண்டபத்தில் அவள் நாட்டியமாடும்போதும், மல்லிகை முதலிய மலர்களை வாங்கி அவளுக்கு அதைக் கசங்காது கொடுக்க, ஓடுகிறபோது, கூட்டத்தை ஒழுங்குபடுத்துபவர்களின் கைக்குச்சியால் அடிபட்டு வேதனைக்குட்பட்டும் கூட அதையும் ஒரு பொருட்டாக மதியாமல் முன்னேறுபவர் சிலர்.

நடுச்சாமத்தில் அவளிருக்குமிடத்தை நாடி பதுங்கியபடி ஒருவன் கள்ளனைப்போல் செல்லுகையில், வீதியில் நாய் குரைத்து அவனைக் காட்டிக் கொடுத்துவிட, அவனைக் கண்ட தலையாரி மூக்கில் இரத்தம் கொட்டும்படி அடித்தும் குத்தியும் விரட்டியதால், நெஞ்சில் சீழ் கட்டித் திரிந்தான் ஒருவன்.

வீட்டிற்குள் அவளுடன் ஒருவன் படுத்திருப்பதை அறியாமல் வேறொருவன் புகுந்துவிட, இருவருக்கும் பொறாமையால் பூசல் விளைந்து, ஒரு பெண்ணுக்காக வாலியும் சுக்கிரீவனும் சண்டையிட்டுக் கொண்ட கதையைப்போல ரோசத்துடன் ஒருவருக்கொருவர் சண்டையிட்டு அடித்துக்கொண்டு தெருவில் புரண்டனர்.

இரவில் இளம் பெண்கள் திவட்டி ஏந்தி முன்னால்வர, பாதத்தில் பவளக் குமிழ் பதித்த குறட்டை அணிந்து மன்னர் போன்ற ஒரு பிரபு பின் தொடர்ந்து தாசி மதனாபிஷேகத்தின் வீட்டிற்கு வர, அப்பிரபுவின் வருகையை முன்னாலோடி ஒருவள் தெரிவிக்க, அச்சமயத்தில் அவளுடனிருந்தவன் அங்கிருந்த பரணியில் ஏறி பதுங்கியிருந்தானாம் பயத்தினால்.

அவளையே எண்ணி எண்ணித் தவித்து தூக்கத்தில் அவளுடன் புணர்ந்திருப்பது போல் கனவு கண்டு சக்தியிழந்தவர்கள் எத்தனையோ பேர்.

இவளுக்குக் கொடுக்கக் கையில் பொருளற்றசிலர், ரசவாதம் பண்ணியாவது பொன் சம்பாதிப்போமென்று பல மூலிகைகளுடன் இரசத்தைக் கலந்து ரசவாதம் பண்ணுகையில், அதிலிருந்து கிளம்பியபுகை அவர்களுடைய கண்ணைக் கெடுத்து மாலைக் கண்ணாக்கிவிட்டதாம்! அதனால் கால்களையே கண்ணாக உபயோகித்து தடவித்தடவித் தெருவில் திரிந்தனராம் அவர்கள்.

எப்படியாவது அவளை அடையவேண்டுமெனக் கருதி பொருள் திருடவும், கன்னமிடவும் முற்பட்டு, பிறகு அகபபட்டுக்கொண்டு கை வெட்டுப்பட்டோடியவரும் தலையிழந்தவரும் பலர்.

குறுக்கு வழி தேடி, அதன் பயனாய் தாய்க் கிழவியை வசப்படுத்த எண்ணிய சில அப்பாவிகள் பலவித மருந்துகளைச் செய்து அவளுடைய படுக்கைக்குஅடியில் புதைத்து வைத்திருக்க, அவள் கலந்து கொடுத்த

கொடிய வசியமருந்தால் சாசம் பிடித்து குட்டிபோட்ட நாய்போல ஓயாமல் இருமி இருமிக் குரைத்தனராம் !

பொன்சரிகைச் சேலையைப் பரிசாக அவளுக்குக் கொடுத்ததற்குப் பிரதியாக அச்சிமாட்டி பதிலுக்கு அவர்களுக்கு என்ன கொடுத்தாள் தெரியுமா ? சூலை நோயைக் கொடுத்தாள் ! மூலம், அரையாப்பு முதலிய நோயால் அவதிப்பட்டு காக்காய்த் தோப்பின் நடுவில் படுத்துத் துடித்தவருமுண்டு !

“இவள், நம்முடன் ஒரு சில இன்ப மொழிகள் முத்து முத்தாய்ப் பேசினாலும் அல்லது தூஷணையாய் வாய்திறந்து திட்டினாலும் போதும்” என்றெண்ணினர் சிலர். மற்றும் சிலர், மலர் தூவிய மஞ்சத்தில் மதனாபிஷேகம் அயர்ந்து நித்திரை செய்யும்போது இந்திரன் கும்பகர்ண லீலை செய்ததுபோல தூங்கும் அவ்வழகியின் ஒவ்வொரு அங்கங்களையும் கண்டு மனமகிழ்வதில் ஆத்மதிருப்தி அடைந்தனர்.

“ஐம்பது மாடுகள் விற்ற பணம் முழுவதையும் அவளுக்கேகொடுத்து விட்டோம் ; நூறு இளங்கன்றுகளையும் விற்றுக்கொடுத்தோம்; ஏழு மந்தை ஆடுகளையும் விற்றுக் கொடுத்தோம். கிடைக்காத வெண்கலக் குத்து விளக்கையும் நிலத்தையும் விற்றோம். சாப்பிடும் தட்டையும் விற்றோம். இவ்வாறு சகல உடமைகளையும் விற்று அவளுக்கே கொடுத்து விட்டோம். மேலும் செலவுக்குத் தேவை என இவள் பொருள் கேட்டால் எதைக் கொடுப்போம்? என்ன செய்வோம்” என்று சிலர் கலங்கி சந்நியாசிக் கோலம் பூண்டார்கள் ! இந்த அற்ப சுகத்தின் மீது ஆசை கொள்ளாமலிருந்தால் இக்கதிக்கு உள்ளாகி இருக்கமாட்டோமே' என்று புலம்பித் திரிந்தனர் பல பேர்.

“குடும்பத்திலே எங்களுக்கிருந்த பங்கு முழுவதும் கொடுத்துவிட்டோம். இனி நாங்கள் இச்சுமையைத் தாங்க முடியாது” எனத் தவித்து வந்தினவர் பலர்.

வட்டிக்குப் பணம் கொடுத்து வியாபாரம் செய்யும் சிலரும் மதனாபிஷேகத்தின் கையில் சிக்கித் தவித்தனராம். “ஐயோ! இவ்வேசிக்குக் கொடுத்த பணத்தை வட்டிக்குக் கொடுத்திருந்தாலும் கொள்ளை லாபம் கிடைத்திருக்குமே; அவளுக்குக் கொடுத்த பணத்தைக் கொண்டு குடியிருக்க மச்சு விடாவது கட்டியிருக்கலாமே” என்று சிலர் வருந்தினராம்.

“இளமை நீங்காத சொந்த மனைவிக்கு ஆடை ஆபரணங்களை வாங்கிக் கொடுத்து மகிழ்விக்காமல் வேசிக்குக் கொடுத்தோமே!” என்று தலையில் அடித்துக் கொண்டவரும் சிலர்!

“அத்தாசிக்குக் கொடுத்த பணத்தைக் கொண்டு ஆடு மாடுகள் வாங்கியாவது வளர்க்காமற் போனோமே! கோயில் குளத்திற்குச் செலவு செய்திருந்தால்கூட புண்ணியம் கிட்டியிருக்குமே!” என்று வருந்தியவர் எத்தனையோ பேர்.

'வறுமையால் கஷ்டப்பட்டு பிச்சை கேட்டு வந்தவர்களுக்கு ஒரு சல்லிகூடக் கொடுக்காமல் விரட்டிவிட்டு, இப்போது நம் கைப்பொருளை

யெல்லாம் அவளுக்கு அள்ளி அள்ளிக் கொடுத்தோமே!'' என்றும், "நாகம கூளேந்திரன் மேல் பாமாலை பாடி அதன் மூலம் பெற்று வந்த பொருளை அத்தாசிக்குக் கொட்டி தரித்திரத்தைத்தானே தேடிக்கொண்டோம்'' என்றும், வருந்தி மதிமயங்கி இன்னது செய்வதெனத் தோன்ருது உழன்று கொண்டிருந்தவரும் அநேகர்.

இப்படிப்பட்டவர்களில் காளத்தி ஐயர் மகனை ஆதிஐயனும் ஒருவன். அவன் ஒருநாள் மதுரை வந்து சேர்ந்தான்.மாசித் தெருவில் மதனபிஷேகம் போய்க் கொண்டிருக்கும்போது விதி அவளை ஆதிஐயன் கண்ணில் படச்செய்தது. அவளது அழகில் அவன் சொக்கி விட்டான். காயம்பட்ட மாமரத்தில் தன் தினவைத் திர்த்துக்கொள்ள தன்னுடலைஉரசி, உரசிகவரியிழந்து உயிரைவிடுகின்ற கவரிமான்போல, அவள் மையலில் விழ்ந்து கையிலிருந்ததையும், வீட்டிலிருந்ததையும், கடன் வாங்கியும் இழந்து பிச்சைக்காரனுன். அதன் பிறகு மதனை விட்டில் அவனுக்கு என்ன வேலை? துரத்தியடிக்கப்பட்டான்! அவளிட்ட மருந்தினுல் கள் குடித்தவன்போல் கலங்கித் திரியலானுன். அதோடு மட்டுமா? ஒழுக்க சிலனுன அந்த ஆதிஐயன் ஒழுக்கம் தப்பி ஊராரின் ஏச்சுக்கும் இலக்கானுன். ஆதிஐயன் என்ற பெயர் மறைந்து வியாதிஐயன் என்று ஊராரால் அழைக்கப்பட்டான். இப்போது அவன் பலங்குன்றி, பாதி உடலாய் வற்றி உலர்ந்து, எவரும் பக்கத்தில் வந்து நிற்கக் கூட முடியாத அருவருக்கத் தக்க சிழ்வடியும் புண்களாலும் அரையாப்பு, மேகவெட்டை, அண்டத்து வாதட, மூலம், பவுத்ரம், புகைச்சல், இருமல், இளைப்பு ஆகிய கொடிய வியாதிகளால் பீடிக்கப்பட்டு, மூச்சுத் திணறி, பூனைக்குரல் எடுத்துக் கத்திக்கொண்டு கிழக்குப் புறமாக உள்ள ஒரு விட்டின் வெளித் திண்ணையில் படுத்துககிடக்கிருன். அவனது பரிதாப நிலையைப் பாரும், ஐயா! நீரோ நன்கு கற்றுணர்ந்தவர். இத்தகைய கொடும்பாவித் தாசிகள் வாழும் மதுரை நகருக்கு நீர் போகலாமா? சென்ருலும் மீண்டும் வரமுடியுமா? யோசித்துப்பாரும் என்றெல்லாம் அந்த ஞானியார் புத்திமதிகள் கூறித் தடுத்தார்.

இவ்வாறு செய்ய இருநிதியம் தேடும்அந்த 317
மைவார் விழியாள் மதிநுதற்கும்-செவ்விக்

கொடிஇடைக்கும் நிலவுஎறிக்கும் குறுநகைக்கும் ஒயில்விளைத்த
பிடிநடைக்கும் வயிரமிட்ட ப்ரமைமிகுத்த-தொடிகளுக்கும்

அலைஉதித்த அமுதெனச்சொல் அருமொழிக்கும் இருவிழிக்கும்
மலைகள்ஒக்கும் முலைகளுக்கும் மனதுவைத்து-வலையினுக்குள்

மான்சிக்கி னுற்போல் மருள்வாரும் தூண்டிலிலே 320
மீன்சிக்கி னுற்போல் மெலிவாரும்-ஏன்சிக்கிக்

அரும்பதவுரை: கண்ணி (317) இருநிதியம் - மிகுந்த பொருள். மைவார்-மை திட்டிய நீண்ட. செவ்வி - அழகு. (318) தொடிகள் - வளைகள்.

கொண்டோம்என்று உள்ளம் கொதிப்பாரும் கூடிஇன்பம் 321
கண்டோம்என்று உள்ளம்களிப்பாரும்-கண்டுஅணைய

பேச்சுமடந் தைக்குப் பிடிக்கும்மன தாசைஎன்று 322
பூச்சுமருந் திட்டணையப் போவாரும்-வாய்ச்சுதென்றே

யார்க்கும் பொடிபோடும் ஆயிழைமுன் வாடைமணம் 323
சேர்க்கும் பொடிபூசிச் செல்வாரும்-ஊர்க்கிணங்கத்

தம்தனத்தை ஈந்து சரிந்ததனக் காரிபண்ணும் 324
தந்தனத்துக் குள்ளாய்த் தளர்வாரும்-தந்திரமாய்

மாதைப் பசப்பஎன்று வாசல்மட்டும் வந்துநரைப் 325
பூதத்தைக் கண்டகலப் போவாரும்-“கோதாய்!உன்

கால்பிடிக்க வோ?அடைப்பை கட்டவோ? செண்பகப்பூ 326
மேல்பிடிக்க வோ?விசிறி வீசவோ?-கோலமலர்

கட்டவோ? கட்டழகி! கண்ணுறங்கப் பொற்குறங்கு 327
தட்டவோ?” என்றருகில் சார்வாரும்-வெட்டிவேர்

மண்டுகுழ லாள்குளித்த வாடைமஞ்சள் நீரைஅள்ளிக் 328
கொண்டுதலை மேல்தெளித்துக் கொள்வாரும்-அண்டர்பிரான்

சன்னிதியில் சந்தடியில் தள்ளுண்டு வீழ்வார்போல் 329
பின்னுகுழ லாளைப் பிடிப்பாரும்-பின்னொருத்தன்

வீட்டி லிருக்க வெளியிலே நின்றுசன்னை 330
காட்டித் திரிந்து கரைவாரும்-வீட்டுஇறப்பை

அண்டிக் கலவிசெயும் ஆரம்பம் கேட்டுவெட்டித் 331
துண்டித்தாற் போலத் துடிப்பாரும்-கண்டணையாள்

சோதிமுக மஞ்சள் துவண்டதுகிற் போர்வையுடன் 332
வீதிதொறும் போய்ப்பிலுக்கி மீள்வாரும்-காதளவும்

மைப்பட்ட கண்ணிசப்ர மஞ்சத்தின் மேற்காலைத் 333
துப்பட்டி கொண்டு துடைப்பாரும்-செப்பமுள்ள

அரும்பதவுரை : கண்ணி (324) சரிந்ததனக்காரி-தொய்ந்து போன ஸ்தனங்களை யுடையவள் (தாய்க்கிழவி) தந்தனம்-சூழ்ச்சி. (326) அடப்பை-வெற்றிலைப் பெட்டி. (327) பொற்குறங்கு-பொன் போன்ற தொடை. (330) சன்னை-சமிக்ஞை. இறப்பு-தாழ்வாரம். (332) பிலுக்கி-பெருமை காட்டி.

தெப்பத் திருநாளில் தெப்பக் குளத்துமங்கை 334
தெப்பத்தே ஏறிவரும் சீராட்டில்-அப்பம்

வடைசுசியன் தோசை வகைகள்பணி யாரம் 335
கடையிலே கொண்டுமடி கட்டி-சடுதியிற்போய்

நாரிகையி லேகொடுக்க நாடிவட மோடும்ஆள் 336
வாரியிலே ஓடி வருவாரும்-பேராம்

வசந்தன் திருநாளில் மண்டபத்தில் மங்கை 337
இசைந்து நடம்புரியும் ஏல்வை-கசங்காமல்

மல்லிகைப்பூச் செண்டு மருக்கொண்டு சந்தடியை 338
மெல்ல விலக்கிவரும் வேளையிலே-நல்லபடைக்

கம்பால் அடிபட்டுக் கத்தியினால் நொந்துடம்பு 339
செம்பால் ஒழுகத் திரிவாரும்-தம்பிரான்

பல்லக்குக் கூடிப் பதினாறு நாழிகைமேல் 340
வல்லொக்கும் கொங்கை வளைவுக்கு-செல்லுகையில்

குக்கல்வாய் காட்டிக் கொடுக்கத் தலையாரி 341
கைக்குள் அகப்பட்டுக் கட்டுண்டு-கக்குரத்தம்

மூக்கில் ஒழுகொழுக. முழங்கைஇடி பட்டுநெஞ்சில் 342
சீக்கட்டிக் கொண்டு திரிவாரும்-தூக்குமஞ்சத்

தேஒருவன் வீட்டில் இருக்கஅது காணமல் 343
போய்ஒருவன் வீட்டில் புகுதவே-ஞாயமற்ற

பூசல் விளைத்துப் பொறுமையின லேவாது 344
பேசி வெளியில் புறப்பட்டு-ரோசமுடன்

மாதொருத்திக் காப்பொருத வாலியும்சுக் ரீவனும்போல் 345
வீதியிலே மற்கட்டி வீழ்வாரும்-பாதையில்தீ

வட்டி வெளிச்சம் மினுமினென வந்தியர்முன் 346
கட்டியங்கள் கூறக் கடுநடையாய்-தொட்டுவரும்

அரும்பதவுரை : கண்ணி (334) சிராட்டில்-சிறப்பில். (337) ஏல்வை-சமயம். (339) செம்பால்-ரத்தம். (341) குக்கல்-நாய். (346) வந்தியர்-துதிபாடுவோர்.

பாதக் குறட்டில் பவளக் குமிழ்இலங்க 347
மாது மணவறைக்குள் மன்னர்வரும்-போதில்அந்த

வீட்டிற் பரண்ஏறி மேவுந் தொழில்அமளி 348
கேட்டுப் பதுங்கிக் கிடப்பாரும்-பாட்டிளஞ்சொல்

மாங்குயிலைப் போல மருவக் கனவுகண்டு 349
தூங்குகையில் இந்திரியம் சோர்வாரும்-ஈங்கிவளுக்கு

ஈயவகை காணேம் இரதம்பொன் னாக்குவது 350
பாயம்என்று மித்ரம் பலகூட்டித்-தீயில்

குகையிலே வைத்துக் குனிந்தூதி வாதப் 351
புகையிலடி பட்டுப் புகைந்து-திசைதெரியா

மாலைக்கண் ணாகி மதிமயங்கித் தங்கள்தங்கள் 352
காலைக்கண் ணாக்கிவழி காண்பாரும்-வாலிபத்தில்

பூணார் முலையாட்காப் பொன்திருடிக் கைஇரண்டும் 353
சாணாகக் கண்டு தளர்வாரும்-வாள்நுதற்காத்

தாங்கன்னம் இட்டுத் தலையைக் கடைக்காசு 354
வாங்கென்ன விட்டுடலை மாய்ப்பாரும்-தூங்கிவிழும்

வண்ணான் நரைமயிரும் மாதவிடாய்த் தம்பலமும் 355
பெண்ணாய்த் தலையோடும் பிள்ளைஒன்றும்-சுண்ணாம்புப்

பானைபோ லேநரைத்த பாவிபடுக் கைத்தலத்தில் 356
பூனைபோற் தோண்டிப் புதைப்பாரும்-மான்அனையாள்

இட்ட மருந்தால் இருமல்பிடித் தோயாமல் 357
குட்டியிட்ட நாய்போற் குரைப்பாரும்-ஒட்டியபுண்

என்பவர்க்கு நாணி இரசம்தின் றின்கரும்பு 358
தின்பவர்க்கு நாணித் திரிவாரும்-பொன்சரிகைச்

சேலை கொடுத்ததற்குச் சீமாட்டி என்கொடுத்தாள் 359
சூலைகொடுத் தாளென்று சொல்வாரும்-மூலஅரை

அரும்பதவுரை : கண்ணி (350)மித்திரம்-பச்சிலை, (353) சாணாக-(சாண் ஆக, வெட்டுப்பட்டு ஒரு சாண் அளவுக்கு குறைய, (359) சூலை-கெட்ட தொரு நோய்.

ஆப்புக்குச் சத்திரமிட் டாவிகாக் கக்காக்காய்த் 360
தோப்பிற் கிடந்து துடிப்பாரும்-மாப்பிள்ளைமார்

வைத்த நகக்குறியை மங்கைஇரு கொங்கையிற்கண்டு 361
எய்த்து நெடுமூச் செறிவாரும்-முத்துமுத்தாய்ப்

பேசினு லும்போதும் பேதைநமைத் தூஷணமாய் 362
ஏசினு லும்போதும் என்பாரும்-பாசிழையாள்

கொந்தலரும் பூஅணைமேல் கும்பகர்ண லீலைசெய்ய 363
இந்திரன்போல் பக்கத் திருப்பாரும்-ஐந்துபத்து

மாடுவிற்றும் நூறு மறிவிற்றும் ஏழுமங்தை 364
ஆடுவிற்றும் வீட்டில் அடிமைவிற்றும்-தேடரிய

வெண்கலத்தாற் குத்துவிளக்கு விற்றும் காணிவிற்றும் 365
உண்கலத்தை விற்றும் உடைமைவிற்றும்-பெண்செலவுக்கு

என்னத்தை கேட்கவந்தால் என்னத்தை நாம்கொடுப்போம் 366
என்னத்தைச் சொல்லுவோம் என்பாரும்-முன்னம்இந்த

மின்னாசை கொள்ளாமல் வீணுக்குக் கொண்டோம்இச் 367
சன்னுசம் என்று தளர்வாரும்-என்னசெய்வோம்

பங்கைவிற்று ஈந்தோம் பணம்இனும்தா போவென்றாள் 368
எங்கே சுமைஎடுப்போம் என்பாரும்-ரங்குலுக்கு

தித்திலோ னுக்காசு செல்லேனு போங்குலுநாம் 369
இத்தனையும் தொற்றழிந்தோம் என்பாரும்-அத்தையார்

சூளை மகளுநன்னு சொர்ணமெல்லா தக்கொண்டு 370
நாளைஎன்றாள் என்றுமனம் நைவாரும்-நாளிலே

பாண்டிநாட் டிச்சி பணம்உறிஞ்சி னாள்நாங்கள் 371
ஆண்டியா னோம்என் றலைவாரும்-ஆண்டியர்தம்

தொண்டுபோய் வேடம்போய்த் தோகைக்குடையவரைக் 372
கொண்டுபோய்க் கையிற் கொடுப்பாரும்-கண்டசெட்டு

அரும்பதவுரை : கண்ணி (360) சத்திரம் இட்டு - கத்திக் கொண்டு கிழித்து (368) ரங்குலுக்கு-வேசிக்கு.

மோசமாச் சுக்காண் முதலுக்குப் புல்வாண்டைக் 373
காசுமில்லை என்று கரைவாரும்-வேசைஇவட்கு

ஈந்த பொருளைவட்டிக் கீந்தோமா? நாம்இருக்க 374
வாய்ந்தமச்சு வீடுகட்டி வைத்தோமா?-கூந்தலிளம்

பேடைமயில் போல்வீட்டுப் பெண்டாட்டிக் கேஉடைமை 375
சோடினையாய்ப் பூட்டிச் சுகித்தோமா?-ஆடுகொண்டு

விட்டோமா?மாடுகொண்டு விட்டோமா? தெய்வத்துக்கு 376
இட்டோமா? தேகிஎன்பார்க் கீந்தோமா?-அட்டதிக்கும்

நாடிப் புகழ்பெரிய நாகமன்மேல் பாமாலை 377
சூடித் தியாகம் சொரிந்தோமா?-தேடுநிதி

தன்னைக் கொடுத்துத் தரித்திரத்தை வாங்கினேம் 378
என்ன வியாபாரம் என்பாரும்-இன்னவகை

காமுகரெல் லாமயங்க காளத்தி யையன்மகன் 379
ஆம்ஒருவன் இவ்வூரான் ஆதியையன்-சேம

மதுரைக் கொருநாட்போய் மாசித் தெருவில் 380
விதிவசத்தால் கண்டான் அம்மின்னை-மதிநுதலாள்

மையலுக்குள் வீழ்ந்தான் வடுச்செய்த மாமரத்தில் 381
மெய்உரிஞ்சப் போய்க்கவரி வீழ்ந்தாப்போல்-கையில்

இருந்ததெல்லாம் வீட்டில் இருந்ததெல்லாம் ஆஸ்தி 382
இருந்ததெல்லாம் தோற்றுன் இழந்தான்-மருந்தினுல்

கள்ளுண்டார் போலக் கலங்கினுன் வாசலிலே 383
தள்ளுண்டான் தன்ஒழுக்கம் தப்பினுன்-விள்ளுவதென்?

ஆதியையன் என்னும்பேர் அன்றேபோய் இப்பால்வி 384
யாதியையன் என்னும்பேர் ஆயினுன்-பாதி

உடலாகி ஒட்டியபுண் உள்ளுருக்க யார்க்கும் 385
தொடலாகாச் சீச்சிரங்கு சூலை-கொடிய

அரும்பதவுரை: கண்ணி (373) புல்வாண்டைக் காசு - சில்லறை வகை நாணயம். (379) சேமம் - காவல். (381) உரிஞ்ச - உராய.

அரையாப்பு மேகவெட்டை அண்டத்து வாதம் 386
புரைவாய்ப் பவித்திரம்பு கைச்சல்-இருமல்

இளைப்புப் பொடுகுமரூந் திட்டநோய் பித்தம் 387
களைப்புமாய்ப் பூனைபோற் கத்தி-கிழக்கே

அடுத்த மனையில் அருகுதிண்ணை தன்னில் 388
படுத்துக் கிடக்கின்றான் பாரும்-படித்தவரே!

இப்படியாத் தேடியுண்ணும் ஏந்திழையாள் வாழ்மதுரைக்கு 389
எப்படிப்போ வீர்வருவ தெப்படிக்காண்-செப்பும்அவ

தானியைய ரே!என்று தக்கபுத்தி போதிக்க 390

தாசி மதனபிஷேகத்தின் சாகஸச் செயல்களையெல்லாம் காதாரக் கேட்டும்கூட, மதுரை செல்லும் ஆசை என்னை விட்ட பாடில்லை. நான் அந்த ஞானியாரை நோக்கி, "இரும்புத் தூணைக் கறையான் என்ன செய்யமுடியும்? எரிகின்ற நெருப்பை புழு அரிக்குமா? இவைகளெல்லாம் தாங்களறியாததா சுவாமி!" என்று கூறி, மதுரை செல்ல வற்புறுத்தினேன். நான் மட்டுமா? என்னோடு மதுரைக்கு வருமாறு அவரையும் தொந்திரவு செய்தேன். வேறு வழியின்றி, "நல்லது ஐயனே! உன் இஷ்டப்படியே வருகிறேன்" என்று சொல்லி அவரும் என்னோடு மதுரைக்குப் புறப்பட்டார்.

அங்கு சென்று வைகை நதியில் நீராடி, பொற்றாமரைக் குளத்தில் மூழ்கி எழுந்து, பக்தருக்கு அருளும் சித்திவிநாயகனையும், அற்புத மகிமைகொண்ட அங்கையற்கண் அம்மையையும் தொழுது, பிறகு நேசர், மனவாசர், பவநாசர், கயிலாசர், சுகதிசர், மதுரேசரான சொக்கேசரின் அடிபணிந்து, பிரகாரத்தைச் சுற்றிவந்து, வடமேற்கில் உள்ள சங்கப் புலவர்களையும் வணங்கி, ஆயிரங்கால் மண்டபத்தை வந்தடைந்தேன்.

ஞானியைய ரைப்பார்த்து நான்விரத்தி-ஆனேன்

இருப்புத்தூ ணிற்கறையான் ஏறுமோ? போம்போம் 391
நெருப்பிற் புழுவிழுமோ?நீர்என்-கருத்தை

அறியீர்என் றேன்நல்லது ஐயரே என்று 392
பிரியாமல் வந்தார்என் பின்னே-நெறியினிற்போய்

வையகமேல் எய்தியசீர் வைதிகநூல் மெய்யொலிசேர் 393
மொய்திரைநீர் வையையில்யான் மூழ்கியே-உய்யப்

அரும்பதவுரை : கண்ணி. (388) அருகு திண்ணை-வெளித் திண்ணை. (390) விரத்தி-வெறுப்பு. (393) மொய்-நிறைந்த.

படியுமடி யவர்கொடிய படிறுசெயும் இடர்முழுதும் 394
அடருமெழு கடலினிடைஆடி-கிடையாப்

பரத்துக்கே விருப்புற்ருர் பவத்துக்கோர் நெருப்பொப்பாம் 395
அருட்பொற்ரு மரைக்குட்போய் ஆடி-உருச்செபிக்கும்

ஐந்தெழுத்தைச் சிந்தைவைத்திட் டன்பருக்குச் சஞ்சலத்தைச்
சிந்துசித்திக் குஞ்சரத்தைத் தெண்டனிட்டு-கந்தபுஷ்பக்

கற்பகமெ னப்பொலிக டப்பமிழ லிற்குலவும் 397
அற்புதக யற்கண்உமை யைத்தொழுது-சிற்பரத்தில்

நேசர்மன வாசர்பவ நாசர்கயி லாசர்சக 398
தீசர்மது ரேசர்அடி யான்போற்றி-நேசமுடன்

துங்கப்ர காரத்தைச் சுற்றி வடகுடபால் 399
சங்கப் புலவர் தமைஏத்தி-எங்குமுள்ள

தீயமா பாதகமும் தீரத்தீர்த் தம்பருகி 400
நாயகர்பொற் கோபுரத்தை நான்நீங்கி-ஆயிரக்கால்

அம்மண்டபத்தில் தான் முதன் முறையாக மதனுபிஷேகத்தை நேருக்கு நேர் கண்டேன். விண்ணுலகை விட்டு வந்த மேனகையோ என எண்ணும்படியிருந்த அவளது கொண்டைச் சொருக்கழகும், அதில் அவள் சூட்டியிருந்த முத்துக் கோர்த்த கிரீடம் போன்ற தலையணியின் அழகும், கொவ்வைச் செவ்வாய் அழகும், வேல் போன்ற கூரிய விழிகளும், ஒளி வீசும் முகத்தழகும், தண்டையணிந்த காலழகும், பொன் வளையல் அணிந்துள்ள கையழகும், ஓலையணிந்துள்ள காதழகும், இறுக்கிக் கச்சணிந்த மார்பழகும், உடல் கட்டழகும், நெற்றிப் பொட்டழகும் கண்டுசொக்கினேன்-மயங்கினேன்—மனதைப் பறிகொடுத்தேன்.

அவளுடைய அழகைக் கண்டு பிரமித்தபடி என் நினைவே இல்லாமல் அவள் அருகே நின்று கொண்டிருந்தேன். நந்தவனங்களிலுள்ள அத்தனை மலர்களையும் கவர்ந்து கொண்டுவந்து மன்மதன் தன் கையில் வில் தொடுத்து எய்த அதே சமயத்தில், மதனுபிஷேகத்தின் கண் அம்பும் என்மீது பாய, அடிபட்ட மானைப்போல் துவண்டு தள்ளாடினேன்.

தாளம், மத்தாளம், கை தித்தி, குழல் இவைகளுடன் இசைந்து தேவகானத்தின் ரிங்காரத்துடன் இனிய குரலெடுத்து இசை பொழி

அரும்பதவுரை: கண்ணி (394) படியும் – நீராடும்: படிறு – வஞ்சகம். (395) பரம் – பரலோகம்: பவம் – பிறவி. (396) ஐந்தெழுத்து – பஞ்சாட்சரம். (சிவாய நம) (397) கற்பகம் – கற்பகத்தரு. (398) மனவாசர்–மனத்துள் வசிப்பவர். (399) துங்கம் – உயர்வு: வடகுடபால் – வட்மேற்கில்.

யும் அதே நேரத்தில், மலரம்புப் பூட்டி ஆண்கள் மீது தொடுக்க காமதேவனுக்கு மலரை எடுத்துக் கொடுப்பவளைப்போல் தன்கைகளைக் குவித்து புஷ்பாஞ்சலி செய்தாள் மதனபிஷேகம்.

பரதநாட்டிய இலக்கணம் பிசகாமல் அவள் ஆட்டத்தின் ஆரம்ப அடியை எடுத்தாள். தன் நீல விழிகளைச் சுழற்றுவதன் மூலம் என்னை யும் சுழற்றி, தன் வலைக்குள் என்னை விழும்படி செய்தாள். அவளையே நோக்கி நின்ற என் மீது கணை தொடுக்க காமனும் மலரம்பை எடுத்து விட்டான்.

ஜதி வரிசைக்கேற்ப அற்புதமாய் நாட்டியமாடி என்னை நிலைகுலைய வைத்து மயங்கச் செய்தாள். மயக்கத்தால் தள்ளாடினேன். கீழே விழுந் தும் இருப்பேன், நல்லவேளையாக என். அருகே நின்றவரைப் பிடித்துக் கொண்டேன்.

அவள் பாடிய பிரபந்தத்திற்கிணையாக வேறு பிரபந்தமேது என எண்ணும்படி நாதசுகத்துடன் இசைந்து கீதம் பாடினாள். ஒயிலாக நின்று ஆடிய அவள் ஆட்டத்தின் மயக்கத்திலே, அது ஒரு பொதுச்சபை என்பதைக் கூட மறந்து, அந்த மைக் கண்ணாளினருகே ஓடி இறுகக் கட்டித் தழுவி முத்தமிடலாமா என்று கூடப் பித்தமானேன். அவளது நாட்டியத்திறனும், குரலினிமையும் என் மனதைக் கொள்ளை கொள்ள அவளது கண்ணம்பு பட்டு அம்பாலடிபட்ட மான் போலானேன்.

மங்களம்பாடி நாட்டியத்தை அவள் முடித்தாள். அடிபட்ட பந்துபோல் நான்மனம் துள்ளத் தத்தளித்தேன். மதியிழந்தேன். உற்றார் உறவினர் சுற்றம் முதலிய எல்லா பந்த பாசங்களையும் மறந்தேன். அவ ளது நினைப்பைத்தவிர, வேறெதிலும் எண்ணம் செல்லா நிலையானேன்.

ஆட்டத்தை முடித்து வீட்டை நோக்கிப் புறப்பட்டாள். நானும் பெண் யானையைத் தொடர்ந்து செல்லும் ஆண் யானையைப்போல் அவளைப் பின் தொடர்ந்தேன். அழகிய மலர் போன்ற அவளது கால் சதங்கை, கலிர் கலிரென ஒலிக்க அவளது ஆபரணங்கள் மின்னிச் சுடர் விட்டுப் பிரகாசிக்க, சுற்றிநின்ற வாலிபர்கள் பூரித்துப்போய் வட்டமிட்டு அண்ணாந்து நிற்கும் கொங்கைகளின் மீது அறிவைப் பறிகொடுத்து, வெற்றிலைக்கு சுண்ணாம்பு தடவவும் மறந்து, அப்படியே சுருட்டி வாயில் அடக்கிக் கொண்டனர். அது மட்டுமா நிகழ்ந்தது? வருவோரும் போவோருமாக எதிரெதிரே செல்பவர்கள் அவளையே பார்த்துக் கொண்டு சென்றதால் ஒருவரோடு ஒருவர் மோதிக்கொண்டனர்.

அவள் தன் வீடு செல்லும்வரை அவள் அழகில் மயங்கிப் பின் தொடர்ந்தோர் பலர். நானும் அவள் பின்னே சென்றேன். முடிவில் அவள் தன்பொன்முகப்பு மாளிகையில் போய் புகுந்தாள். அதற்குமேல் பின் தொடர்ந்து செல்வதற்குப் பயந்து அவள் வீட்டின் முன் முகப் பிலேயே ஊமையாய் நின்றுவிட்டேன்.

மண்டபத்திற் கண்டேன் மதனுபி ஷேகத்தை 401
விண்டலத்தை விட்டுவந்த மேனகையை-கொண்டைச்

சொருக்கழகும் முத்துத் துராயழகும் செவ்வாய் 402
முருக்கழகும் சேலை முகப்பில்-கருக்கழகும்

வேலழகு போன்ற விழியழகும் தண்டைஇட்ட 403
கால்அழகும் பொற்கடகக் கைஅழகும்-ஓலைஇட்ட

காதழகும் வச்ரமணிக் கச்சிறுக்கும் மார்பழகும் 404
சோதி முகத்தழகும் துங்கரத்ந-மாதுரதி

கட்டழகும் பொட்டழகும் கச்சைகட்டி வந்தகட்டு 405
மட்டழகும் கண்டு மயங்கினேன்-கிட்டவந்த

நாட்டத்தைக் கண்டு நடந்துசிலைக் காமனும்பூந் 406
தோட்டத்தைக் கொள்ளைகொண்டு தோன்றினான்-வாட்டுமதன்

கையம்பு பாயவஞ்சிக் கண்ணம்பு பாயநின்று 407
தொய்யும்மான் போலத் துவக்குண்டேன்-தெய்வசுதி

காணும் இசைராகம் கைத்தாளம் மத்தளம்கை 408
வீணைபல கைத்தித்தி வேணுசுரம்-கோணாமல்

கூடும் சுருதியுடன் கொம்பனையாள் சங்கீதம் 409
பாடும் சுருதிஇன்பம் பாலிக்க-ஆடவரை

எய்யுமத வேள்கைக்கு இசையுமலர் ஈவாள்போல் 410
தையலாள் புஷ்பாஞ் சலிசெய்தாள்-செய்துபிள்ளை

யார்கவுத்து வங்கொண்டான் ஆட விளையநயி 411
னார்கவுத்து வங்கொண்டு நண்ணினேன்-சேரும்

நிலைக்கிடைகொண் டாள்மருட்டும் நீலமலர்ச் செங்கண் 412
வலைக்கிடைகொண் டாள்என் மனத்தை-கலைப்பரத

முந்தோர் எடுப்பெடுத்தாள் மூரிவில்லைப் பூட்டிஎன்மேல் 413
வந்தோர் எடுப்பெடுத்தேன் மன்மதவேள்-நந்திசொன்ன

அரும்பதவுரை: :கண்ணி (400) விண்டலம்-வானலோகம். (402) கருக்கு-கரை. (404) வச்ரம் – வைரம்; கச்சு – ரவிக்கை. (405) கட்டுமட்டு – கட்டுக் கோப்பு. (406) சிலைக்காமன் – வில்லேந்திய மன்மதன். (409) கொம்பனையாள்–பூங்கொம்பைப் போன்றவள். (410) புஷ்பாஞ்சலி – பூக் களைத்தூவி வழிபடல். (413) மூரிவில் – வல்லமை படைத்த வில்.

சொற்கட்டி லாரி தொடுத்தாள்முன் நின்றவரை 414
மற்கட்டு வாள்போல் மறையநின்றேன்-பொற்கடகக்
கைச்சலாங் கொண்டாள் கனம்பேச லாம்இதற்கே 415
மெச்சலாம் என்றுரைத்தார் விஞ்சையோர்-மெச்சும்
தருக்கொண்டாள் மற்ருேர் சதிகொண்டாள் கண்டே 416
மருட்கொண் டிருக்கஎனை வைத்தாள்-விரித்தசுருள்
பாதிநடித் தாள்கீதம் பாடினுள் பூப்போட்டு 417
வாதில்நடித் தாரும் மயங்கினுர்-சூதுமுலை
மாதுபிர பந்தம் வகுத்தாள் இதற்குரைப்பது 418
ஏதுபிர பந்தம்என எண்ணினேன்-நாதப்
பதசாரி சாரிகொள்ளப் பார்வேந்தர் ஈந்தார் 419
முதுசாளி கைப்பொன் முடிப்பை-எதிராக
நின்றவின யங்கள்செய்தாள் நிட்டூரி என்மனது 420
கன்றவினயங்கள் செய்தாள் கண்ணுலே-மன்றிலொரு
கோப்பெடுத்தாள் வேந்தர்பொன்னைக் கொள்ளைகொள்ளக் கள்ளிஇந்தக் 421
கோப்பெடுத்தாள் என்ருர்என் கூடவந்தோர்-காப்பான
தாரணிகொண் டாள்வோர் தடமகுடம் தம்பிக்கப் 422
பேரணிகொண் டாள்ஆசைப் பேய்கொண்டேன்-ஆரணங்கு
சக்கணிநின் ருடச் சபையிலே ஓடிஅந்த 423
மைக்கணியை முத்தாட வாஞ்சித்தேன்-இக்கனையாள்
செய்லாகு வித்தையினுல் செம்பொனுடல் ஓமெனஎன் 424
கய்லாகில் ஏந்தக் கருத்தானேன்-மய்வாளும்
கய்வாளும் என்னைவெட்டக் கள்ளிஒரு கூத்துவிதம் 425
செய்தாள்அம் மான்வலையிற் சிக்கினேன்-தொய்யாமல்
தேசிகத்தில் ஓர்நடனம் செய்தாள் கடையிலுள்ள 426
கோசிகப்பொன் ஆடையெல்லாம் கொள்ளைகொண்டாள்-பேசும்

அரும்பதவுரை: கண்ணி(415) விஞ்சையோர் - கலாவல்லுனர்கள். (416) மருள் - மயக்கம் (417) வாதில்-தர்க்கத்தில். (419) சாளிகை-பணப்பை (420) மன்றில் - அரங்கில் (422) தம்பிக்க - அசைவற்ற இருக்க. (423) மைக்கணியை-மையிட்ட கண்ணுளை. (424) கய்லாகில்-கைத்தாங்கலாக. (426) கோசிகம் - பட்டு.

நயமங் கலப்பெண் நடம்பல செய்தாள் 427
செயமங் களம்பாடித் தீர்த்தாள்-மயல்கொண்ட
பேதையேன் தன்மனதும் பெண்களும்பின் னேதொடர 428
மாது மனைக்கே வழிக்கொண்டாள்-காதில்விசைப்
பந்தடிபோற் துள்ளிப் பரதவித்தேன் பாங்கனைஅச் 429
சந்தடியிற் கையைவிட்டுத் தப்பினேன்-மந்த்ரசெப
சுற்றம் எனும்தளையும் தோழனெனும் பாகனும்நல் 430
புத்திஎனும் அங்குசமும் போக்கியே-மத்தமிஞ்சப்
பெண்ஆனை யைத்தொடரும் பேரானை யேபோலப் 431
பண்ணுர் மொழியாள்பின் பற்றினேன்-வண்ணமலர்க்
காலில்இட்ட தண்டை கலின்கலின்என் றேலம்இட 432
மேலில்இட்ட பூஷணப்பொன் மின்எரிப்ப-வாலிபர்கண்டு
அண்ணுந்த கொங்கைக்கு அறிவைக் கொடுத்திலையிற் 433
சுண்ணும்பி டாமல் சுருட்டியுண்ண-கண்இரண்டும்
மங்கைமேல் ஆக வருவாரும் போவாரும் 434
தங்களிலே தங்கள் தலைமோத-துங்கமத
அத்தியின்மேல் செல்லும் அரசர்இவள் கொங்கைகளும் 435
மத்தகமும் நோக்கி மதிமருள-தத்துபரி
கால்மீறி னுற்போற் கலினம் நெகிழவிட்டு 436
மால்மீறி னுர்எதிரே மாறிவிழ-வேல்விழியாள்
சந்தன கும்ப தனங்கள் சுமந்திடை 437
நைந்தனம் என்று நடுங்கிட-வந்துதன்
பொன்முகப்பு மாளிகையிற் போய்ப்புகுந்தாள் நின்றேன் நான்

அப்படி நான் நின்றுகொண்டிருக்கும்போது என்னை நோக்கி செக்கு வருவதுபோல கை மருந்துச் சொக்கி என்ற பெயருடைய தோழிப்பெண் ஒருத்தி வந்தாள். வந்த அந்த சொக்கி, என்னை யாரென்று விசாரித்தாள். ஊர் எது என்று கேட்டாள். பெயர் என்ன என்றும் வினவினுள். ஒவ்வொரு பேச்சிற்கும் ஒவ்வொரு அடி எடுத்து வைத்து என்னை நெருங்கி வந்தாள்.

அரும்பதவுரை: கண்ணி (427) தீர்த்தாள் –முடித்தாள். (429) பாங்கன்–தோழன் (இங்கு ஞானியையன்) (430) தளை – பிணைப்பு. (431) பேர் ஆனை – பெரியயானை. (432) மின்எரிப்ப–ஒளிவீச. (435) அத்தி–யானை. (436) கலினம் – கடிவாளம்,

அவள் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் நானும்பதில் கொடுத்தேன். "எனது ஊர் ஸ்ரீரங்கம். என்தந்தையின் பெயர் சிங்கையர். என் சகோதரனின் பெயர் சாரங்கபாணி. தமிழ்க்கவிபாடும் அஷ்டாவதானி நான். என்மனைவியின் மீதுள்ள மன வருத்தத்தால் வீட்டை விட்டு உங்களூர் வந்தேன்!" என்றெல்லாம் என்னைப் பற்றிய விவரங்களைக் கூறிவிட்டு அவளை நோக்கி, "பெண்ணே! இன்று சொக்கலிங்கப் பெருமாள் முன் நின்று ஆடிய பெண்ணரசி யார்?" என்று கேட்டேன்.

அதற்கவள் என்னைப் பார்த்து "ஐயா ஆண்பிள்ளையே! மாணிக்க மாலை பெற்றெடுத்த வைரத்தை—குலவிளக்கை—ஆணி முத்தை—விண்ணிலுள்ள தேவர்களெல்லாம் இச்சை கொள்ளும்படியான அந்த மேனகையை—பெண்ணுக்குப் பெண் ஆசை கொள்ளும் அழகுப் பெண்ணமுதை—மன்மத நூல்களையெல்லாம்கரைகண்ட பைங்கிளியை, மரகதத்தை—மதனபிஷேகததை நானிலத்தோரும் அறிந்திருக்க, நீர்மட்டும் அறியாதிருப்பது விந்தையிலும் விந்தையாயிருக்கிறதே! எவ்வாறு உங்களுக்குத் தெரியாமல் போயிற்று?" என்றாள்.

"இன்றைக்கு இவளிடம் யார் வரப் போகிறார்?" என்றேன். அதற்கவள், "பட்டணத்து பாஸ்கரய்யர், சோலையப்பபிள்ளை, மாலையப்பபிள்ளை, மணியம் கனக சபாபதி, அரசப்பன், இன்னும் எத்தனையோ பேரெல்லாம் தினம் தினம் வந்து எவ்வளவோ பொன்னும் பொருளுமாகக கொண்டுவந்து என்னென்ன விதமாகவோ கெஞ்சியும் எங்கள் உத்தமி, அவர்களில் எவருக்குமே மசியவில்லை; இணங்கவுமில்லை. வாய் திறந்து ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை. எங்கேயாவது சிங்கம் சிறு தேரையைத் தின்னுமா?" என்று சொல்லிவிட்டு, வேறொரு தோழியின்உதவியை நாடும்படிகூறி சவுந்தி என்பவளை நானிருக்கும் இடத்திற்கு அனுப்பி வைத்தாள்.

அவளும் என்முன் வந்து நின்று "எதற்கழைத்தீர்?" என்றாள்.

"இன்று உன் தலைவியிடம் யார் வருவார்?" என்று கேட்டேன்.

"எவரும் வரமாட்டார். கை நிறையப் பொன்னும் பொருளும் கொண்டு வந்திருந்தால் இங்கே நீங்கள் நிற்கத் தேவையில்லையே! தாராளமாக உள்ளே வரலாமே!" என்றழைத்தாள்.

"முத்துப்போன்ற அவளுக்கு எவ்வளவு பொன் கொடுக்கவேண்டும்?" என்று விசாரித்தேன்.

தலைவிக்கு முந்நூறு பொன்னும், தனக்கு ஒரு முந்நூறும், மற்றும் ஒரு நூறு பொன் இதரத் தோழிகளுக்கும் தரவேண்டுமென்றாள். உடனே அவள் கேட்டபடியே அள்ளிக் கொடுத்தேன்.

பொன்னை வாங்கிக்கொண்டு உள்ளே போனாள் அந்தப் பெண். அடுத்த கணத்தில் வீட்டுக்குள்ளிருந்து அழகிய கூந்தலையுடைய, இளமையும் அழகும் நிறைந்த பெண்கள் சிலர் ஓடிவந்து என்னைக் கை கூப்பி வணங்கி வரவேற்று உள்ளே அழைத்துச் சென்றனர்.

சந்தனத்தி என்பவள் கைவிளக்குஎடுத்துக்கொண்டு வெளிச்சம்காட்டி முன்னே செல்ல, கை கால் கழுவ நீர் நிறைந்தபொற் செம்புடன் தெய்வி என்பவள்என்னைப் பின்தொடர, என்மேல் இருந்த அங்கவஸ்திரத்தை மைவிழியாள் கையேந்தி வாங்கவும், வெற்றிலை அடப்பத்தை சின்னத்தங்கி தாங்கி வர, பூச்சி என்பவள் மலர் தொடுக்க, பூவி என்பவள் சாமரம் வீச, ராசி என்பவள் என்னைக் கைலாகு கொடுத்து அழைத்துச் செல்ல, வெயிலாள் நடைபாதையில் பட்டுப் பாவாடை விரித்தாள். நான் மதனபிஷேகத்தின் வீட்டிற்குள் புகுந்தேன். உள்ளே சிங்கக் கால்களமைந்த தங்க ஆசனத்தில் ரத்தினக் கம்பளம் விரித்துப் போட்டு என்னை அமரச் செய்தனர். கட்டுடல் வாய்த்த பெண்கள் நான் சாய்ந்துகொள்ள திண்டு கொண்டு வந்து போட்டனர். அரசன் போல அமர்ந்திருந்தேன் நான்.

முன்முகப்பு வாயிலிலோர் மூங்கைபோல்-என்முன்ஒரு
செக்கு வருவதுபோல் சீமாட்டி கைமருந்துச் 439
சொக்கிஎன்னும் பாங்கிவந்து தோன்றினாள்-மைக்குழலாள்
ஆர்என்றாள் உங்களூர் யாதென்றாள் ஏதுங்கள் 440
பேர்என்றாள் அண்டியண்டிப் பேச்சிட்டாள்-காரிகையே !
சீரங்கம் எங்கள்பதி சிங்கையர் என்தகப்பன் 441
சாரங்க பாணியையர் தம்பிநான்-நாரணையர்
சுப்பையரென் மாமனார் சோமாசிப் பட்டர்பெரும் 442
அப்பையங்கார் தாம்எங்கள் அத்தம்பி-செப்புகவி
அட்டாவ தானிஎன்பேர் ஆயிழை என்மனைவி 443
மட்டார் குழலி மனவெறுப்பால்-விட்டேகி
நாடிவந்தேன் உங்கள்பதி நம்பர்சொக்க லிங்கர்முன்னின்று 444
ஆடிவந்த பெண்ணரசி யார்என்றேன்-ஆடவரே !
மாணிக்க மாலைபெற்ற வச்சிரத்தைக் கும்பகுடக் 445
காணிக்கு வாய்த்த கனதனத்தை-ஆணிமுத்தை
விண்இச்சை கொள்ளவந்த மேனகையைப் பெண்ணுக்குப் 446
பெண்இச்சை கொள்ளவந்த பெண்அமுதை-எண்ணரிய்
சாத்ரவித கொக்கோக சாரத்தை மேல்விருது 447
பாத்திரசி ரோமணியைப் பைங்கிளியை-வாய்த்தமட

அரும்பதவுரை: கன்னி (439) பாங்கி – தோழி. (440) அண்டியண்டி– நெருங்கி நெருங்கி. (441) பதி – ஊர். (443) மட்டு–தேன். (445) காணி– உரிமை. (446) விண்–வானம். (இங்கு வானவர்கள்) (447) கொக்கோக– கொக்கோக நூல்.

மானே மரகதத்தை மன்மதகு டோரியைச்செந் 448
தேனே மதனுபி ஷேகத்தை-நானிலத்தோர்

எல்லாம் அறிந்திருக்க யாமறியோம் என்றவிதம் 449
சொல்லீர்என் ருள்மயலைத் தூண்டினுள்-மெல்லிநல்லாய்!

இன்றைக் கெவர்வருவார் ஏந்திழைக்கென் றேன்அந்தக் 450
குன்றைப் பொருதமுலைக் கொம்பனையாள்-அன்றதற்குப்

பட்டணத்துப் பாரபத்யம் பாஸ்கரைய னோ?கோட்டைக் 451
கட்டளையா னோ?பாயக் கட்டுபல-பட்டடையிற்

சோலையப்ப பிள்ளையோ? சுற்று தடைகட்டு 452
மாலையப்ப பிள்ளையோ? வாசல்வழிச்-சாலைஅஞ்சற்

காரமணியம் கனக சபா பதியோ? 453
பாரணிலா யம்மணியம் பங்காரு?-சீர்அணவு

ஆனை மணியம் அரசப்ப னோ?தர்ம 454
தான மணியம் சதாசிவனோ?-மேன்மைதரும்

கோயில் துறைமணியம் கும்பலிங்கப் பிள்ளையோ? 455
ஆயத் துறைமணியம் ஆண்டியோ?-ஓய்வறுகர்

மோட்ட மணியம் முருகப்ப னோ?கீரைத் 456
தோட்ட மணியம்நெட்டைச் சொக்கனோ?-மாட்டுவரிக்

காரனோ? பாசிவரிக் காரனோ? பீரங்கிக் 457
காரனோ? பொற்கொடிமேற் காதலொடும்-ஓர்இரவில்

எத்தனையோ பேர்இங்கே எத்தனையோ பொன்கொடுவந்து 458
எத்தனையோ சொல்வார்கள் எத்துக்கள்-உத்தமிதான்

அங்கவரி லேஒருவர்க் கானுலும் வாய்நேராள் 459
சிங்கம் சிறுதேரை தின்னுமோ?-உங்களைப்போல்

நற்குணமுள் ளார்தமையே நாடுவாள் வேந்தர்தரும் 460
பொற்குவைக்கும் உள்ளம் பொருந்தாள்காண்!-சொற்புலமை-

வீறுடைய ராகியநல் வேதியரே! என்றுசில
கூறிஅதன் பின்னேஅக் கோதைஅங்கே-தூறுதலைத் 461

அரும்பதவுரை ; கண்ணி (450) ஏந்திழை-பெண்: குன்றைப் பொருத-மலையோடு போர் தொடுத்த. (458) பொன் கொடு வந்து-பொன்னைக் கொண்டு வந்து; எத்துக்கள்-ஏமாற்றுகிறவர்கள். (459) வாய் நேராள்-உடன்படமாட்டாள். (461) பொற்குவை-தங்கக் குவியல்.

தூது சவுந்திக்குச் சொன்னாள் பயிலாக 462
ஏதுக் கழைத்தீர் எனவந்தாள்-மாதுக்கின்று

ஆர்வருவார் சொல்என்றேன் ஆருமில்லைப் பொன்கொடுத்து 463
நீர்வருவீர் ஆகில்இங்கே நிற்பானேன்?-வாருமென்றாள்

முத்தனைய முத்துநகை மோகவல்லிக் குப்பணயம் 464
எத்தனைபொன் சொல்என் றியம்பினேன்-அத்தைக்கு

முன்நூறு பொன்மகட்கு முந்நூறு பொன்எனக்குப் 465
பின்நூறு பொன்தோழிப் பெண்களுக்கு-சொன்னது

ஒருநூறு பொன்னும் ஒருமுடிப்பாய்த் தந்து 466
வருவீரேல் வாருமென்றாள் மங்கை-துரைமதுரை

வெள்ளைப் புதுவெட்டு மின்னலாய் அப்படியே 467
அள்ளிக் கொடுத்தங்கு அனுப்பினேன்-உள்ளிருந்து

பைந்தார் அணிகூந்தல் பைங்கனிவாய்ப் பெண்கள்சிலர் 468
வந்தார் தொழுதார் வரச்சொன்னார்-சந்தனத்தி

கைவிளக்குக் கொண்டுவந்தாள் கால்விளக்க நல்லதண்ணீர் 469
தெய்விகொண்டு வந்தாள்பொற் செம்பிலே-மைவிழியாள்

அங்கி பிடித்தாள் அடைப்பை வரிசைசின்னத் 470
தங்கி பிடித்தாள் தனிப்படிக்கம்-செங்கலவை

பூசினாள் பூசிவந்து பூமுடித்தாள் பூவிமெல்ல 471
வீசினாள் பொன்கவரி வெண்கவரி-வீசி

கயிலாகு தந்தாள்என் கால்நோகும் என்று 472
வெயிலாள்பா வாடை விரித்தாள்-ஒயிலாகப்

பம்புபெரு போனுட் பகட்டறியாப் பாய்புலிபோல் 473
அம்பொன் நெடுமனைக்குள் யான்சென்றேன்-செம்பவளப்

போதிகைக்கால் ஏந்துசிங்கப் பொங்கல்தங் கச்சவுக்கை 474
மீதுரத்னக் கம்பளவி சாலத்தில்-மோதுகரிக்

கோட்டாரக் கொங்கையார் கொண்டுவந்து திண்டருகு 475
போட்டார் துரைப்பாங்கு போலிருந்தேன்-வாள்தடங்கண்

அரும்பதவுரை : கண்ணி (468) பைந்தார்-குளிச்சி மலர் வகை. (470) அடைப்பை வரிசை-தாம்பூல வகை. (475) வாள்தடங்கண்-வாளால் வெட்டப்பட்ட வடுப்போன்ற கண்.

இத்தகைய உபசரிப்பில் நான் அகமகிழ்ந்திருக்க, நான் கொடுத்து அனுப்பிய பொன் முடிப்பைப் பெற்றுக்கொண்ட மதனுபிஷேகம், கையில் இரண்டு எலுமிச்சம் பழத்துடனும், மருக்கொழுந்துச் செண்டுடனும், ஏற்கனவே என்னிடமிருந்து அபகரித்துச் சென்ற என் மனதையும் எடுத்து க்கொண்டு என்முன் வந்து நின்று, கை கூப்பி வணங்கி நின்ருள்.

இதற்கு முன் எந்த ஆடவரையும் சந்தித்தறியாத கன்னிபோலவும், சூதுவாதறியாப் பேதை போலவும் கூசி நின்ற அவள், தணிந்த மெல்லிய குரலில், தயங்கித் தயங்கி, "மாதவா! மண்டபத்தில் நான் ஆடிக்கொண்டிருக்கையில் வந்து நின்றீர். கண்டேன் நான். அடுத்த கணம் உங்கள் மீது மையல் கொண்டேன். என் பக்கத்தில் அப்போது நின்றுகொண்டிருந்த தோழியிடம், உங்களை என் வீட்டிற்கு அழைத்து வரக் கட்டளையிட்டேன். ஆனால் அந்த மாரீச மாருட்டக் கள்ளி குழப்பம் செய்துவிட்டாள். எங்கள் குலதெய்வந்தான் என் பங்கிலிருந்து தமிழ்ப் புலமை மிக்க தங்களை என் வீட்டிற்குக் கொண்டுவந்து சேர்த்திருக்கிறது. வந்ததுதான் வந்தீர்களே, உள்ளே வராமல் தலைவாசல் முற்றத்தில் ஏன் நிற்கவேண்டும்! என்னிடம் வர தாங்கள் பொன்னு கொடுக்கவேண்டும்? 'நல்ல மலர், அதைப் பறித்து முகர்ந்துவிட்டுப் போய்விடலாம்' என்றெண்ணினீர்கள் போலும்! இனி உங்களை நான் என்னை விட்டுப் போகவிடவே மாட்டேன்" என்று குழைந்து குழைந்து கூறினுள். நம்பிவிட்டேன் அவளை.

மின்னற்கொடி போன்ற அந்த நுண்ணிடையாளின் செந்தாமரைக் கையைப் பிடித்து மெதுவாக என் பக்கத்தில் இழுத்து அமர்த்திக் கொண்டு, குனிந்திருந்த அவள் முகத்தை நிமிர்த்தி என் இரு கண்களாலும் ஆசை தீரப் பார்த்துப் பருகிக்கொண்டிருந்தேன்.

பிறகு தம்பூரெடுத்து சுருதி சேர்த்தாள், அந்த நிமிர்ந்த மார்பழகி: வீணையைக் கையிலெடுத்து மீட்டினுள். தேவமாது போல மெல்லிய குரலில் சொக்கேசர் மீதும், அங்கயற்கண்ணி மீதும் வெல்லச் சாறூட்டினாற்போல் இனிமையாகப் பாடினுள். பதம் (வர்ணம்) பாடிய வண்ணம் குரலினிமையால் என் செவிக்கு இதமூட்டி, சீர்களும் மோனைகளும், பொருளும், சொற்களுமுடைய விதவிதமான பாடல்களைப் பாடி மனங் குளிர வைத்தாள். மயங்கிய நான் தொண்ணூறு பொன் பெறுமானமுள்ள ஒரு வைரம் கட்டிய மோதிரத்தை அவள் விரலில் அணிவித்தேன்.

வட்டமிட்ட கொங்கை மதனுபி ஷேகமும்நான் 476
கட்டிவிட்ட பொன்முடிப்பைக் கைக்கொண்டே-இட்ட
தருக்குடையேன் தன்னைவந்து சந்திக்க இரண்டு 477
பருத்தஎலு மிச்சம் பழங்கள்-மருக்கொழுந்துச்

அரும்பதவுரை : கண்ணி (476) கட்டிவிட்ட—கட்டி அனுப்பிய. (477) தருக்கு—கர்வம்.

செண்டுகொண்டு தன்னிடத்திற் சென்றிருந்த என்மனதும் 478
கொண்டுகொண்டு வந்துநின்று கும்பிட்டாள்-ஒண்டொடியாள்
காதலரைச் சேர்ந்தறியாக் கன்னிபோல் சூதறியாப் 479
பேதைபோற் கூசிமெள்ளப் பேசினுள்-"மாதவரே!
மண்டபத்தில் ஆடினேன் வந்துநின்றீர் உம்மைநான் 480
கண்டுமய லாகிஎன்பக் கத்துளவோர்-ஒண்தொடியை
மெள்ளப்போய்க் கூட்டிவா வீட்டிலென்றேன் மாரீசக் 481
கள்ளி குழப்பிக் கழப்பிவிட்டாள்-தெள்ளுதமிழ்ப்
பாட்டிலே வல்லீர்! என்பங்கிற் குலதெய்வம் 482
வீட்டிலுமைக் கூட்டிவந்து விட்டதே-வீட்டில்வரத்
தாங்களேன் வாசல் தலைக்கடையில் நிற்பானேன்? 483
பாங்கியேன்? வந்தாற் பணயம்ஏன்?-நீங்கள்நல்ல
பூவைக்கண் டேமுடித்துப் போவோம்என் றெண்ணினிர்! 484
மேவிச்சென் ருல்நான் விடமாட்டேன்!-தேவரீர்!
சித்தமெங்கள் பாக்ய"மென்று செப்பினுள் சாலவித்தை 485
அத்தனையும் மெய்என்றே யான்இருந்தேன்-கைத்தலத்தால்
மின்இருக்கும் நுண்இடையாள் மென்கமலக் கைபிடித்து 486
முன்இருத்திக் கொண்டு முகம்பார்த்தேன்-கின்னரத்தைக்
கூட்டினுள் ஏந்துமுலைக் கோட்டினுள் தந்திரியை 487
மீட்டினுள் சங்கீத வெல்லச்சாறு-ஊட்டினுள்
சொக்கேசர் மேற்கவியும் சொக்கேசர் தம்பாதி 488
மிக்கான அங்கயற்கண் மேற்கவியும்-தக்கபுகழ்ப்
பாண்டித் துரைமீதிற் பாட்டும் படித்ததற்பின் 489
ஆண்ட நிலைக்கோட்டை யதிபன்மேல்-தூண்டுபுகழ்ச்
சிங்காச னுதிபதி சிந்தமகா ளேந்த்ரனருள் 490
எங்கோன் பெரியநா கேந்த்ரன்மேல்-மங்கை
பதம்படித்தாள் வண்ணம் படித்தாள்என் காதுக்கு 491
இதம்படைக்கும் தேன்போல் இனிக்க-விதம்படைக்கும்

அரும்பதவுரை : கன்னி. (480) மயலாகி-மயங்கி. (483) தாங்களேன்-தாங்கள் ஏன். பயணம்-பணம். (484) மேவி-சுகித்து. (485) கைத்தலம்-கை. (486) மென்கமலக்கை - மெல்லிய பூப்போன்ற கை. (487) தந்திரி-யாழ்நரம்பு. (488) அங்கயற்கண் - மீனுட்சி. (489) அதிபன் - அரசன்.

முற்கட்டும் பாகமும்சீர் மோனை களும்பொருளும் 492
பிற்கட்டும் முன்முரணும் பின்முரணும்-நற்கட்டாம்
சொற்கட்டும் கண்டுவிலை தொண்ணூறு பொன்பெறுமோர் 493
கற்கட்டு மோதிரத்தைக் கையிலிட்டேன்-விற்பிடித்து

அப்போது அங்கே தாய்க் கிழவி வந்து நின்றாள். பலங்கொண்ட மட்டும் வளைக்கப்பட்ட வில்லின் தோற்றத்தைப்போல் கூனியபடி கையில் ஒரு கோலுடன், தேங்காய்க் குடுக்கை போன்ற வாயை அசை போட்டுக்கொண்டு வந்தாள். தளர்ந்து நடுங்கும் நரைத் தலை! சிறு சிறு கொசுக்கள் கண்களில் மொய்க்க, குத்திருமலுடன் இருமிக்கொண்டு அங்கு வந்து நின்றாள்.

என் முன்னே நேராக வந்து நிற்கவில்லை. நாணம் கொண்ட மாமியாரைப் போல் சிறிது கோணியும், நாணியும், சேலைத் தலைப்பை ஒதுக்கி ஒழுங்குபடுத்தியவாறு ஒரு தூண் மறைவில் நின்றுகொண்டு, "வந்தீர்களா, எங்கள் வரிசைத் துரையே! தங்கள்வருகையால் இவ்வீடு என்ன புண்ணியம் செய்ததோ! என் மகளும் முற்பிறப்பில் என்ன தவம் செய்தாளோ? நேற்றைக்கு முன் தினம், என் கன்னிப் பெண்ணான இவள் கண்டதாகக் கூறிய கனவும், அவளது மணித் தோளின் இடது புறம் துடித்ததும், தாழ்வாரத்தில் காகம் கதறியதும், வேலைக்கார கட்டச்சி தும்மியதும், யோகம் வரப்போகுதென்று குறத்தி சொன்ன குறியும், அதிர்ஷ்டம் வரப்போவதைக் குறித்து பல்லி பல தடவை சொல்லியதும் கண்டு, 'நமக்கு நல்லகாலம் வரப் போகிற'தென்று இவளிடம் சொன்னேன். நான் சொல்லியபடியே தாங்களும் வந்து விட்டீர்கள்!

"என் ஆசை மகளின் அருமைக்குணம் இன்னதென்று தாங்கள் அறிய மாட்டீர்கள். பொய், புரட்டு பேசத் தெரியாது. சால வித்தைக் காரப் பெண்கள் செல்கிற பாதையில் கூட நடக்கமாட்டாள்! மற்ற வேசிகளைப் போல காசு பணம் தேடவேண்டுமென்ற ஆசை இவளிடத்தில் கொஞ்சமேனும் இல்லை. இவளை நாடி எத்தனையோ பேர் வந்தனர். ஆனால், யாரையும் நான் இவளிடத்தில் அனுமதிக்கவில்லை. அவ்வாறு நான் விட்டிருந்தால் என்ன ஆவது? கிரந்திப்புண் முதலிய நோய் வந்து விட்டால் இவள் அரைக் காசுக்கு ஈடாவாளா? நான்பெற்ற செல்வமாகிய இவளுக்கு கன்னி வளர்ச்சியே யல்லாமல், இன்றுவரை வேறொன்றும் அறியாத சிறியவளே இவள்! சின்னஞ் சிறிய பேதைப் பெண்ணானாலும் உம்மைக் கூடிக் கலந்து கொஞ்சுவதற்கேற்ற வயதுடையவள்தான்!

"இவள் தன் மனதிற்குப் பிடிக்காதவர்களை ஏற்றுக்கொள்வாளா? அவளுக்காகவே பிறந்திருக்கும் தங்களையன்றி இனி மன்மதனே வந்தாலும் விரும்பமாட்டாள். என் மகளுக்கென்றே நீங்கள் வந்து சேர்ந்திருக்கிறீர்கள்!

"புலவர் பெருமானே! நீலியாகிய நான் ஒரு பேய்ப் பிள்ளையைப் பெற்றுவிட்டேன். ஏதுமறியாத சிறுமி இவள். உங்களிடம் ஒப்புவித்து

விட்டேன். அவளிடம் தாங்கள் கொண்டுள்ள இந்தப் பிடிப்பு விடாமல் மாப்பிள்ளையும் பெண்ணுமாய் வாழ்ந்திருங்கள்'' என்று என்னிடம் சொல்லிவிட்டு, மகளை நோக்கி, ''கிளிமொழியாளே! மாப்பிள்ளைக்கு நித்திரை வரும் நேரமாகிவிட்டது.போவாயாக!'' என்று சாடையாக சொல்லிச் சென்றாள்.

அங்கிருந்த தோழியர்களும் அவ்விடத்தை விட்டு அகன்றனர். செம்பவளம் போன்ற உதட்டில் குறுநகை தோன்ற ''அறைக்குள் செல்வோம் வாருங்கள்'' என்றழைத்தாள் மதனாபிஷேகம்.

வாங்கினாற் போல வளைந்த வறட்டுடலும் 494
தாங்கிவைத்த காலும் தடிக்கம்பும்-தேங்காய்க்

குடுக்கைபோல் வாயும் கொடுவாயும் சற்றே 495
நடுக்கும் தலையும் நரையும்-பொடிக்கொசுக்கள்

மொய்த்தகண்ணும் காற்றுமுட்டி மின்பறியப் பின்பறியக் 496
குத்திருமல் போட்டலைக்கும் கோப்புமாய்-வித்துக்கு

விட்டசுரைக் காய்போல் விழுந்துமுழங் காலதனைத் 497
தொட்டமுலைத் தாய்க்கிழவி தோன்றினாள்-கிட்டவர

நாணமுற்றாள் மாமிஎன்று நான்அறியத் தன்உடம்புக் 498
கோணலுக்குள் ளேசற்றே கோணினாள்-தூண்ஒதுங்கி

''வந்தீரோ! எங்கள் வரிசைத் துரையே! நீர் 499
சந்தோஷ மாகஇங்கே தான்வரவே-இந்தமனை

என்ன தவம் செய்ததோ என்பேதை முன்பிறப்பில் 500
என்ன தவம்செய் திருந்தாளோ?-கன்னிமுந்தா

நாள்இரவு கண்டகனா நன்மையும்என் பேதைமணித் 501
தோள்இடது பக்கம் துடித்ததுவும்-ஆள்வரத்தில்

காகம் கதறியதும் கட்டைச்சி தும்மியதும் 502
தோகைக் கொருகுறத்தி சொன்னதுவும்-யோகம்வரப்

பல்லி நிமித்தம் பலகால் இயம்பியதும் 503
நல்லவரைச் சேர்க்கும்என்று நங்கையுடன்-சொல்லிவைத்தேன்

அப்படியே வந்தீர்என் ஆசை மகள்குணத்தை 504
இப்படியென் றேஅறியீர் இன்னமுநீர்-பொய்ப்புரட்டுச்

அரும்பதவுரை: கண்ணி. (494) வாங்குதல் - வளைத்தல். (495) கொடுவாய் - வடியும் வாய் நீர். (498) தூண்ஒதுங்கி-தூணின் புறத்தே மறைந்து நின்று. (499) மனை - வீடு. (503) நிமித்தம் - சகுனம், குறி; இயம்புதல்-சொல்லுதல்.

சாலவித்தைப் பெண்கள் தடத்தில் மிதித்தறியாள் 505
மாலவித்தைப் பெண்கள் மணக்கேகாள்-நாலு
பரத்தையரைப் போலே பணங்காசு தேடும் 506
கருத்துண்டோ காயக்கம் காணேன்-ஒருத்தர்கிட்ட
மாணுளை விட்டேனே? மாயக் கிரந்திவந்த 507
தாணுல் ஒருகாசுக் காகுமோ?-நான்ஈன்ற
மாதுக்கு ராஜ வளர்ச்சியே அல்லாமல் 508
ஏதுமறி யாள்சிறியாள் இன்னங்காண்!-பேதைக்குக்
கொஞ்சவய தானாலும் கூடி உமைக்கலந்து 509
கொஞ்ச வயதுகாண் கொற்றவரே!-வஞ்சிநல்லாள்
தன்மனதுக் கேற்கச் சவதரித்தாற் பொன்கோடி 510
மன்மதன்தந் தாலுமினி வாங்காள்காண்!-என்மகட்குப்
பாலிலே மெள்ளப் பழம்நழுவி வீழ்ந்தவிதம் 511
போலவந்து வாய்த்தீர் புலவரே!-நீலிஒரு
பேய்ப்பிள்ளை பெற்றேன் பிடிப்புவிடா மற்கொண்ட 512
மாப்பிள்ளையும் பெண்ணுமாய் வாழ்ந்திருங்கள்!-மாப்பிள்ளைக்கு
நித்திரைக்கு மெத்த நெடுநேரம் ஆகுதுபோ 513
தத்தைமொழி யாய்!''என்று சன்னைசொல்லி-அத்தையரும்
போயினார் பாங்கியரும் போயினார் செம்பவள 514
வாயினாள் உள்வீட்டில் வாருமென்றாள்-சேயிழையாள்

அந்தச் சேயிழையாள் அன்னம்போல் நடந்து பள்ளியறைக்குள் புகுந்தாள். அவள் பின்னால் நானும் சென்றேன். ஆஹா! அந்தப் பள்ளியறையின் சிறப்பைத்தான் எப்படி வர்ணிப்பேன்? அவ்வறையின் முகப்பு பொன்னால் இழைக்கப்பட்டு. தூண்களெல்லாம் இரத்தினம் பதிக்கப்பட்டு விளங்கியது. அறை முழுதும் வாசனை மலர் மாலைகள் வரிசை வரிசையாக அழகாகக் கட்டித் தொங்கவிடப்பட்டிருந்தன. வச்சிரத்தால் காலிட்ட மஞ்சத்தில் மிகவும் பளபளப்பான உயர்ந்த பட்டாடை விரித்து, அதன்மீது மலர் மெத்தைபோன்று மல்லிகைப் பூக்கள் பரப்பப்பட்டிருந்தது. எண்ணெய் குறைகிறபோது தனக்குத் தானே எண்ணெய் விட்டுக்கொண்டு ஒளி விட்டுப் பிரகாசிக்கும் அமைப்புடன்கூடிய யந்திரப் பாவை விளக்கும், மஞ்சத்தினருகில் வெள்ளிப் படிக்கம் ஒன்றும்-இம்மாதிரி பலவகைப் பொருள்களுடன்

அரும்பதவுரை: கன்னி (505) தடத்தில் – கால் சுவடு பதிந்த இடத்தில் (506) காயக்கம் – மோகமயக்கம். (509) கொற்றவன் – அரசன். (510) சவதரித்தால் – ஒத்துநடந்தால். (513) தத்தை மொழி – கிளி போன்று பேசுதல்; சன்னைசொல்லி – ஜாடை காட்டி. (514) சேயிழை – செவ்விய நகையணிந்தவள்.

அப்பள்ளியறை மிக அழகாகத் தோற்றமளித்தது. சுவற்றின் நான்கு பக்கங்களிலும்மன்மதக் கலையை விளக்கும் பலவித ஓவியங்கள் தீட்டப் பட்டிருந்தன. அதன் அற்புதத்தை என்னவென்று சொல்லுவேன்!

ரதிபோன்ற பேரழகுடன் கூடிய ஆறு அழகிகளை ஒருவனே கூடி லீலை புரிவதைக் காட்டும் சித்திரம் ஒரு பக்கம். நாயகன் கூடிச் செய்த கலவிகள் யாவற்றையும் அவன் புரிந்த அதே விதத்தில் நாயகி மாறிக் கலந்திருத்தலான 'உபரிதம்' என்ற லீலையை விளக்கிக் காட்டும் சித்திரம் ஒரு பக்கம். தன் கார்மேகக் கொண்டை சரிந்து பின்புறம் விழ, தன் ஒரு காலை மேலெழுப்பி மற்போர் செய்தல் போன்ற லீலையை விளக்கிக் காட்டும் சித்திரம் ஒருபுறம்! பிணக்கு கொண்ட நாயகியின் முகம் திருத்தி, கடைக்கண் நோக்கி, நயம் பேசி, அவள் பொற்கரம் பிடிக்க, அவள் தன் கடகமணிந்த கரங்களைக் குவித்து நாயகன் தலையில் தாடனம் (தட்டுதல்) செய்து அனுபவிக்கும் விந்தை லீலையைக் காட்டும் ஒரு சித்திரம்! அவன் தலைப்பக்கம் நாயகியின் கால் களும், அவள் தலைப்பக்கம் அவன் கால்களுமாக மாறியிருந்து செய்யும் விநோத லீலையை விளக்கி ஒரு சித்திரமுமாகப் பலவிதச்சித்திரங்களின் அற்புதத்தை என்னென்பேன்!

இவைகளை யெல்லாம் கண்டு களித்து வியப்பெய்தியவனாய் கொப்பத்தில் யானைபோல் சென்று அங்கிருந்த சப்ரமஞ்சத்திலேறி அமர்ந்தேன்.

முன்சென்றாள் பின்சென்றேன் முன்முகப்பு வாசலிலோர் 515
பொன்கொண் டிழைத்தரத்னப் போதிகையோ?-மின்கொண்ட
சித்ரக் கொடுங்கையோ? செம்பொன்நிலை யோ?கதவிற் 516
பத்திஇட்ட கண்ணாடிப் பட்டமோ?-கத்திரிப்பு
வேலை நிறைத்தபுது மேற்கட்டி யோ?சிறந்த 517
மாலை நிறைத்த வரிசையோ?-கோலவச்ரக்
காலிட்ட தூங்குமஞ்சக் காந்தியோ? பட்டாடை 518
மேலிட்ட மல்லிகைப்பூ மெத்தையோ?-ஏல்வைகண்டு
தாங்கியதீ வட்டிக்குத் தானே தயிலம்விடப் 519
பாங்கில்வைத்த சூத்திரப்பொற் பாவையோ?-தூங்குமஞ்சப்
பக்கத்தில் வெள்ளிப் படிக்கமோ பள்ளியறைத் 520
திக்குக்குத் திக்குமதிற் சித்திரத்தில்-மைக்கருங்கண்
பெண்இரதி போல்ஆறு பேர்க்கொருவ னேலீலை 521
பண்ண எழுதிவைத்த பாவனையோ?-தண்அளியோன்
மேற்கொண் டொருமடந்தை மிக்காம லீலைசெய்யக் 522
கார்க்கொண்டை பின்சரியக் கால்எழுப்பி-போர்க்கலவி

ஆட்டத்திற் சூதகமும் ஆகஎழு திக்கழுவில் 523
போட்டவிதம் போலிருந்த பொங்கமோ?வாட்டமுற

மோடிவைத்த பெண்கமல முன்கைபிடித் துக்கடைக்கண் 524
நாடிவைத்தாள் என்று நயம்பேசச்-சூடகக்கை

தன்னைக் குவித்துத் தலைவன் தலையில்அந்த 525
மின்னனையாள் தாடனஞ்செய் விந்தையோ?-பின்ஒருபால்

அம்பனைய கண்ணியும்ஓர் ஆளும் தலைமாறிச் 526
சும்பனங்கள் செய்யும் தொழில்விதமோ-சம்ப்ரமங்கள்

சொல்ல முடியாது தூங்குமஞ்சத் தேறினேன் 527
மெல்லவிழும் கொப்பத்தில் வேழம்போல்-நல்லதங்கத்

தங்கத் தட்டிலே பாக்கும், வெள்ளித் தட்டிலே இளந் துளிர் வெற்றிலையும், பொன்னால் செய்த புஷ்பக் கூடையிலே மல்லிகைப் பூ, பிச்சிப் பூ, வெட்டிவேர் முதலிய வாசனை மலர்களும், தங்கச் சிமிழில் சவ்வாது வாசனை கலந்தகுர்ணுப்பட்டையும், பவளக்கிண்ணத்தில்சந்தனக் குழம்பு முதலியனவும் கொண்டுவரப்பட்டன. அது மட்டுமா ? அக் கிளிமொழியாளுடன் கூடிக் கலந்து இன்ப மனுபவித்தபின் என்களைப்பை ஆற்றிகொள்ள உண்ணுவதற்குச் சிற்றுண்டிகளும், மற்றும் பீங்கானில் பன்னீர், செம்பு நிறைய வெந்நீர் இவைகளையெல்லாம் தனித்தனியே பல பெண்மணிகள் எடுத்துக்கொண்டு வந்து வைத்துவிட்டு, ‘‘ தங்கள் மாமியார் தங்களுக்குக் கொடுத்தனுப்பிய வரிசைகள் இதெல்லாம்’’ என்று சொல்லி நின்றனர். என் காமசுந்தரி அங்கு நின்றிருந்த அவர்களை நோக்கி அவ்வறையை விட்டுச் செல்லும்படி கண் சாடை காட்டினாள். உடனே அவர்கள் அவ்விடத்தை விட்டு அகன்றனர்.

தட்டிலே பாக்குவெள்ளித் தட்டிலே வெள்ளிலைபொற் 528
பெட்டியிலே மல்லிகைப்பூ பிச்சிப்பூ-வெட்டிவேர்

தந்தச் சிமிழிற் சவாதுகுர்ணுப் பட்டைதனில் 529
கெந்தப் பொடிபவளக் கிண்ணத்தில்-சந்தனங்கள்

கூறுங் கிளிமொழியைக் கூடின் விடாயாறித் 530
தேறும் பொழுதிலுண்ணச் சிற்றுண்டி-வேறுசில

அரும்பதவுரை: கண்ணி (516) கொடுங்கை – வளைந்திருக்கும் பொருள். (517) வச்ரம் – வைரம். (518) ஏல்வை – சமயம். (519) தயிலம் – நெய். பாவை-பொம்மை (521) பாவனை-நகல் (மாதிரி) (522) கார்கொண்டை-மேகத்தையொத்த கூந்தல். (522) பொங்கம் – களிப்பு. (524) மோடி-மகுடி; சூடகம்-வளையல் (525) தாடனம்செய்தல்-தலையில் அடித்தல். (526) சப்ரமங்கள் – சிறப்பியல்கள். (527) கொப்பம் – குழி. (528) வெள்ளிலை – வெற்றிலை. (530) விடாய் – களைப்பு.

பீங்கானிற் பன்னீர் பிடிசெம்பி லேவெந்நீர் 531
தேங்காய் முலையார் சிலபேர்கொண்டு-ஆங்குவந்து
மாமிவர விட்ட வரிசைஎன்று வைத்துநின்ருர் 532
காமி அவர்களைக்கண் காட்டினுள்-சேமமணி
வாசற் கதவடைத்தாள் மங்கைநல்லார் போனதற்பின்

கட்டிலில் அமரச் செய்தேன். நாணத்தோடு தலை குனிந்திருந்த அவளது முகத்தை நிமிர்த்தி, முகத்தோடு முகம் வைத்து, கண்ணோடு கண் சேர்த்து ஆவலுடன் நோக்கினேன். மனம் குளிரப் பேசி மல்லிகை மலர், பிச்சிப்பூஆகியவற்றைச்சூடி, சவ்வாது, சந்தனம்முதலிய வாசனைப் பொருள்களைப் பூசியபடி அன்புடன் வெற்றிலை மடித்துக் கொடுத்தாள். அதைக் கொஞ்சம் தன் வாயாலும் கடித்துக்கொடுத்தாள். அதன் பின் கொஞ்சியபடி என் மடியில் சாய்ந்து படுத்தாள். உடலெல்லாம்—உள்ள மெல்லாம் புளகம் கொண்டேன். அப்படியே அவளை வாரி எடுத்து அணைத்தேன்.

ஆயிரக்கால் மண்டபத்தில் அன்று அப் பொற்கொடியாள் நாட்டியக் ஆடினதைப் போல ஒவ்வொரு அங்கங்களும் அசைவுற்று மன்மதக் கூத்தாடின. உணர்ச்சி மிகக்கொண்டு கழைக் கூத்தாடினுற்போல் இருந் தது அவள் நெளிவு சுழிவுகள் !

அன்றில் பறவைகள்எப்போதும்ஒன்றைவிட்டு ஒன்று இணைபிரியா திருப்பதைப்போல நானும் அவளும் உடலும் உடலும் ஒன்ருக, உயிரும் உயிரும் ஒன்ருகி, மோகமும் மோகமும் கலந்தாற்போல் ஆனேம்.

அப்போது மதனபிஷேகமும் நீண்டதொரு பெருமூச்சு விட்டு, "முருங்கமரம் தூணுக முடியுமா? ஆணென்ருல் உம்மைப் போல் எல்லாரும் ஆண்மையுடையவராகக் கருத முடியுமா? முருக்கம் பூவை யார்தான் சூடுவர்? சூடினுலும் அதற்கு மருக்கொழுந்து வாசம் உண்டாகுமா? ஆண்மை என்ருல் உருவத் தோற்றம் மட்டுமிருந்தால் ஆண்மையுள்ளவனுகி விட முடியுமா? ஆகையால் இனி நீங்கள் தான் என் பள்ளியறைத் தனித் தலைவர். வேறெவருக்கும் இங்கு இட மில்லை. வேறு எவரும் காலடிகூட எடுத்து வைக்க முடியாது! யார் வரி னும் அவர் முகத்தை ஏறிட்டும் பாரேன்" என்று இன்பமுடன் அன்பொழுகக் கூறினுள் என் மதனபிஷேகம்.

இவ்வாறெல்லாம் பலவிதமாகப் புகழ்ந்து யானைக்கு அதன் பாகன் கவளம் ஊட்டுவதுபோல் என் கட்டழகி புசிக்க எனக்குக் கனி கொடுத் தாள். சுண்டக் காய்ச்சிய பால் கொடுத்தாள். அன்பு பொங்க மகிழ்ச் சியுடன் 'சாப்பிடும், சாப்பிடும்' என்று உண்ணக்கொடுத்து ஊட்டினுள். இருந்தாலும் அம் மின்னற்கொடியாளின் இதழமுதம் போல் அவை களெல்லாம் எனக்கு இனிப்புத் தரவில்லை!

நாங்கள் இருவரும் மீண்டும் மீண்டும் சொர்க்க போகத்தில் மிதந்து அனுபவித்ததைச் சொல்வதென்ருல் நான்கு நாளாவது செல்லும்.

எங்கும், எப்போதும் இன்பமன்றி வேறொன்றையும் அறியேன். அதற்குள் விடிந்து விட்டது.

ஆணெல்லாம் உம்மைப்போல் ஆணுகுமோ முருங்கைத் 533
தூணெல்லாம் நல்வயிரத் தூணுகுமோ!...வீணே

முருக்கமலர் ஆர்தாம் முடிப்பார்? முடித்தால்! 534
மருக்கொழுந்தின் வாசம் வருமோ?-ஒருத்தர்முகம்

பாரேன் இனிஎனக்குப் பள்ளியறை மாப்பிள்ளையும் 535
நீரே சரி என்ருள் நேசம்போற்-காராளைக்கு

ஊட்டுங் கவளம்போல் உண்ணக் கனிகொடுத்தாள் 536
கோட்டும் குழலி:குழம்புப்பால்-நாட்டம்

விரும்பக் கொடுத்தாள் அம்மின்னுள் அதரக் 537
கரும்பைப்போ லேருசிக்கக் காணேன்-திரும்ப

நடந்த கலவிசொல்ல நாலுநாட் செல்லும் 538

பொழுது விடிந்தது! என் இன்பவல்லியின் ஆலிங்கனத்தால் என் மார்பு மீது கிடந்த வெண் பூணூல் மஞ்சள் நிறமாகி, பொன் பூணூலாகக் காட்சியளிப்பதைக் கண்டேன். மனம் மகிழ்ந்தேன். மற்ற ஆடவர்கள் கண்டு பொருமை கொள்ளும்படியாக அழுந்தப் பதிந்திருந்த அவளது நகக்குறிகளுடன் வைகை நதிக்கு நீராடச்சென்றேன்.

அவளுடைய நினைவாகவே சென்றதால் பல் துலக்குவதற்கு சாயுருவிக் குச்சிக்குப் பதிலாக குப்பமேனி செடியைப் பிடுங்கிப் பல் துலக்கி விட்டேன். நியம நிஷ்டை தவருத நான் தர்ப்பணத்திற்குப் பிறகு அவள் எண்ணமாகவே அவளையே உருப் போட்டுச் செபித்து நீராடினேன். அவளை-அம்மாய மோகினியைக் கணமும் விட்டு இருக்க மனமில்லாததால், நேரமாகுமென்று காயத்ரி செபத்தையும் தள்ளி காம மிகுதியால் பரபரப்படைந்த நான் பிரவகித்து ஓடும் வைகை நதியில் முன்பு ஒரு சமயம் காவேரியில் மேல் வேட்டியை விட்டதைப்போல இன்னும் ஒரு துணி ஆற்ரோடு போய்விட்டதையும் பொருட்படுத்தாமல் விரைந்து சென்றேன். என் பொற்கொடியாளின் உத்தரவுப்படி பணிப்பெண் ஒருத்தி வந்து "மீனுட்சியின் வீட்டில் சமையலுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது, வாருங்கள்!" என்று உபசரித்துப் பணிவுடன் அழைத்துச் சென்ருள்.

அரும்பதவுரை: கண்ணி• (535) பள்ளியறை – படுக்கையறை. (536) கவளம் – உருண்டை; கோட்டும் குழலி – சுருண்ட கூந்தலையுடையவள் (537) அம்மினுள் – அந்தஒளி பொருந்தியவள்.

இலேயில் பரிமாறப்பட்டுள்ள காய்கறிகள் இன்னதென்று அறியேன். என்ன குழம்பு, என்ன ரசம் விட்டு உட்கொண்டோம் என்பதெல்லாம் நானறியேன். எண்ணமெல்லாம் அவளாய்—மூச்செல்லாம் அவளாய்-உணர்வெல்லாம், உயிரெல்லாம் அவளாக ஆகிவிட்ட எனக்கு உணவின்சுவையைஎவ்வாறு அறிய முடியும்! எந்நேரமும் மதனுபிஷேகத்தின் காலடியே சொர்க்கமாய்க் கருதிவிட்டேன். எப்படியோ உணவை அள்ளி வாயில் போட்டுக்கொண்டு கை கழுவி அந்த ஈரம் காயும் முன்பாகவே அவளைத் தேடி ஓடினேன். இவ்வாருக மதனுபிஷேகத்தின் இன்பசுகத்தைநாடி, நடுக்கடலில் செல்லும் பாய்மரக் கப்பலில் அமரும் காகம்போல ஆனேன், தாசியின் மோகாவேசத்தால்.

விடிந்து உதயம்எய்தினுன் வெய்யோன்-மடந்தைநல்லாள்
மேலிலங்கு மஞ்சள்பட்டு வெண்பூணூல் பொண்பூணூல் 539
போலிலங்கக் கண்டுமனம் பூரித்தேன்-சால

அழுந்து நகக்குறியை ஆடவர் கண்[டு]ஏங்கச் 540
செழுந்திரைநீர் வையையில்யான் சென்றேன்--தொழுங்குலத்து

நான்அவள்மேல் ஆசையினுல் நாயுருவி என்றுகுப்பை 541
மேனிபிடுங் கிப்பல் விளக்கினேன்-மோனமந்த்ர

தர்ப்பணத்தை நீக்கித் தலேமுழு கினேன் கலவி 542
உற்பனத்தை எண்ணி உருச்செபித்தேன்-பொற்புடைய

மாயத்தி ரியைவிட்டு வந்து நெடு நேரம் என்று 543
காயத் திரியைவிட்டேன் காமிபோல்-தூயமணி

தூவுதிரை வையையிலோர் சோமன் மறந்தேன்முன் 544
காவிரியிற் போட்டலிங்கம் போல்-தீவிரமாய்ப்

போனேன் அவள்மனேயிற் பொற்கொடியாள் சொற்படிஓர் 545
மானுள் எனே அழைத்து வாரும் என்று-மீனுட்சி

ஆயிவீட் டிற்சமையல் ஆச்சுதுபோம் என்ருள்நான் 546
போயிருந்து சாப்பிட்டேன் போஜனத்திற்-காய்கறிகள்

இன்ன தெனஅறியேன் இன்னரசம் என்றறியேன் 547
கன்னிமேல் வைத்த கவனத்தால்-என்னுடைய

அரும்பதவுரை: கன்னி (539) சால - நன்ருக. (543) மாயத்திரி: மாயக்காரி. காயத்திரி- காயத்திரி ஜெபம் (544) தூவுதிரை - அலேவிசும்: கலிங்கம் - ஆடை (545) மனே - வீடு: மானுள் - மானேப்போன்ற மங்கை.

கைஈரம் ஆறுமுன்னே காதலியை வந்தணைந்து 548
சையோக வைபோக சம்போக-மெய்போகம்

ஆகச் சுகித்தேன் அகப்பட்டேன் பாய்மரத்திற் 549
காகத்தை ஒத்தேன் என்காதலால்-மோகவலைப்

இவ்வாருக மதனுபிஷேகத்தின் தாயான பொக்கை வாய்க் கிழவியின் மோகக்கட்டுக்குள் சிக்கிவிட்ட என்னை மருந்துக் கூட்டுக்குள் அடைக்கச் சதி செய்துவிட்டாள்.

ஒரு சூரிய கிரகணத்தின்போது அனேக விதமான வன மூலிகைகளைத் தேடிச் சேகரித்தாள். அந்த வன மூலிகைகளோடு, பலதரப்பட்ட மருந்துச் சரக்குகளைக் கடையில் வாங்கிச் சேர்த்துக்கொண்டாள். பல விதக் காட்டுப் பிராணிகளின் விதவிதமான உறுப்புகளையும், மாமிசத்தையும் சேகரித்துக்கொண்டாள். அவற்றுள் வன மூலிகைகளை ஆவியில் வேகவிட்டுத் தைலமாகக் காய்ச்சி எடுத்துக்கொண்டாள். கடைச் சரக்கையெல்லாம் பேய்க் கரும்புச் சாற்றை விட்டு, மைபோல் அரைத்து உருட்டி எடுத்துக் கொண்டாள்.வனவிலங்குகள் உறுப்புகளையெல்லாம் சாராயத்தில் ஊரவைத்து, சமையலறை .அடுப்பின் கீழ் குழி தோண்டி ஒருமாதம் வரை புதைத்து வைத்திருந்து எடுத்து, அந்த ஊரலுடன் எல்லாவற்றையும் ஒன்ருகச் சேர்த்துத் தன் மகளின் சிறு நீர், நாக்கின் அழுக்கு,நகத்தழுக்கு, காலடிமண், மூக்கின் வியர்வை, முதலியவற்றையெல்லாம் அத்துடன் சேர்த்து, அம்மியில் வைத்து, மூன்றுநாள் வரை நன்ருக மசித்து, மையாக்கி உருட்டி எடுத்துக்கொண்டு, அதைத் தன் மகளிடம் கொடுத்து, 'இதன் குணம் தவருது பலிதமாகும்' என்று உறுதி கூறினுள்.

பூட்டுக்குள் ளானேன்அப் போழ்வாய்ச்சி கைம்மருந்துக் 550
கூட்டுக்குள் ளேஅடைக்கக் கோப்பிட்டாள்-காட்டு

மருந்துவகை நாவடக்கி வாதம் அடக்கி 551
கருந்துவரை பாடவரை கஞ்சா-பெருந்தும்பை

ஆதளைமேற் புல்லுருவி ஆவிரைமேற் புல்லுருவி 552
மாதளை மேற்புல்லுருவி வல்லாரை தூதுவளை

பேய்ப்பீர்க்குப் பேய்முசுட்டை பேய்ச்சிமிட்டி பேய்ப்புடலை 553
நாய்ப்பாகல் நாயுருவி நாய்வேளை-நாய்க்கோட்டான்

புன்னைப்பூ வன்னிப்பூ பூளைப்பூ தாழைப்பூ 554
முன்னைப்பூ மாம்பூ முருக்கம்பூ-சின்னிப்பூ

அரும்பதவுரை: கண்ணி (550) போழ்வாய்ச்சி – கிழவி: கோப்பு – திட்டம்

பூலாவேர் சங்கவேர் புங்கவேர் தைவளேவேர் 555
வேலாவேர் நெட்டிவேர் வெட்டிவேர்-பாலேவேர்

அத்தக்காய் துத்திக்காய் அல்லிக்காய் நெல்லிக்காய் 556
கத்திரிக்காய் பேய்ச்சுரக்காய் காஞ்சிரங்காய்-மத்தங்காய்

நின்று சிணுங்கி நிலம்புரண்டி ஆலின்கீழ்க் 557
கன்று பணமுறிஞ்சிக் காஞ்சோறி-குன்றிஇலே

பின்தொடரி முன்தொடரி பெண்தொடரி ஆண்தொடரி 558
பொன்தொடரி ஐவாய்ப் புலிதொடரி-இன்பூறல்

ஆனே வணங்கி அழுகண்ணி தொழுகண்ணி 559
பூனே வணங்கிப் புளிமடலே-ஊனு

தலேசுருளி நன்னரி தான்றிவெள்ளேத் தோன்றி 560
மலேகலக்கி தேட்கொடுக்கு வாகை-இலேக்கருநா

ரத்தங்காய்ப் பிஞ்சுதம ரத்தம்பூப் பிஞ்சுமலே 561
நத்தைச்சூ ரிக்கொழுந்து நாட்டகத்தி-சித்தகத்தி

தோதகத்தி வட்டநரைத் தோதகத்தி பஞ்சமா 562
பாதகத்தி சூரியனேப் பாம்பணேயும்-போதிற்

கருத்துவகை யாய்த் தேடிக் கடையில் 563
மருத்துவகை கஸ்தூரி மஞ்சள்-அரைத்தசித்ர

மூலம் செவிட்டாதி மூலம் கடையினிற்றக் 564
கோலம்தாம் பூலம் குரோசாணி-ஏலவெங்

காரம் சீனக்காரம் கற்பூர சாரம்அரி 565
தாரம்நவச் சாரம் சவுக்காரம்-காரீயம்

துத்தம் துரிசு துருசா வசப்படுத்தும் 566
கொத்தமல்லி வெய்விளக்கம் குங்குமப்பூ-முத்தக்கா

செட்டுப் பணவிடைஇங் துப்பு வெடி வாணஉப்புக் 567
கட்டுப்பு வீட்டிற் கறியுப்பு-மட்டிப்பால்

இஞ்சி லவங்கம் இதன்பத்ரி சிங்களத்தோர் 568
கஞ்சியிலே போடும் கசகசா-மஞ்சள்

அரும்பதவுரை: கண்ணி (562) சூரியனேப் பாம்பணேயும் போதில் - சூரிய கிரணம் உண்டான சமயம். (568) சிங்களத்தோர் - இலங்கையில் வசிப்பவர்கள்.

அதிமதுரம் ஆசை அதிமதுரம்-ஆக்கும் 569
சதகுப்பி சாதிக்காய் பத்ரி-அதிவிடயம்

பாக்குச் சிறுதேக்குப் பாஷாணம் வேப்பம்புண் 570
ணுக்கு நிருவிஷமுள் ளாவியும்புண் ணுக்குபச்சை

நாபி அபினிமுதல் நாலுமுழம் நாலுமூலைப் 571
பாவி சவதரித்துப் பாரிலுள்ள-ஜீவன்

மருந்துவகை செவ்வரணைவால் ஆந்தைப்பிச்சு 572
பருந்து நகம் முதலைப்பல்லு-குரங்கிந்

திரியம் மரஅட்டை செவ்வட்டை பெட்டை 573
நரிமுதுகுத்தோல் உடும்பு நாக்கு-குருகு

முனைவாய் கருஞ்சேவல் முள்ளு வெள்ளைப்பல்லி 574
சினவலி யாண் காடைச்சிறகு-பனையடியிற்

குன்னுன் கண்வாகை மேற்கூகை கீழ்வாய்அலகு 575
செந்நாய்ப் பவனவாய் தேவாங்கு-கன்னம்

வலியான் கழுத்து மணிக்காடை முட்டை 576
எலிமூளை பன்றி இறைச்சி-புலிமீசை

வல்லூற்று வல்எலும்பு மாடப்புரு வினெச்சம் 577
கல்லூரிக்கொம்பு கவுரி மயிர்-நல்லபாம்பு

ஈரல் அலைஈற்றெருமை இளங்கொடி செம் 578
பூரமுசற் புழுக்கை புற்றின்மேல்-தேரைக்கால்

தூக்கணுங் குஞ்சு சுழல் வண்டுநண்டுகருங் 579
காக்கை நிணம் காராணக் கருமுலைப்பால்-நாக்குப்

புழுப்பூனைப் பீசம் பொலிப்புக் கடாவின் 580
கொழுப்பும் பெருச்சாளிக் குட்டி-பழுத்தமர

வவ்வாற் றலைக்குதிரை வாயின் நுரைகரடிச் 581
சவ்வு கிழ வானைமதம் சங்கிலூன்-நவ்விரத்தம்

கன்னிகழி யாதபிள்ளை காதிற் சிறுகுறும்பி 582
தன்னை யறியாள் தலையிற்பேன்-சின்னஅட்டை

வாற்குருவிச் சங்தெலும்பு வானம்பா டிக்குடலுள் 583
ஊர்க்குருவி கொக்கரை தன்ஊருக்கு-மேற்குக்

கரட்டோரித் தொண்டை கரட்டோந்தி மண்டை 584
வரட்டோரி தேடி வகையால்-நிறுத்து

வனமருந்தெ ல்லாம்தை யிலம் வாங்கிக் கடையில் 585
கனமருந்தெல் லாம்பேய்க் கரும்பு-தனில்வடித்த

சாற்றில் அறைத்துத் தசையூனைத் தாழியிலே 586
ஊற்றிய சாராயத்தில் ஊறவைத்துச்-சோற்றடுப்பில்

செம்மிப் புதைத்துமறு திங்களிலெல் லாமருந்தும் 587
அம்மியிலே இட்டுமகள் அங்குலினீர்-செம்மைதரும்

நாக்கில் அழுக்கு நகத்தழுக்குக் காலடிமண் 588
மூக்கில் வியர்வும்விட்டு மூன்றுநாள்-தாய்க்கிழவி

மைப்போல் அறைத்துருட்டி மங்கைநல்லாள் இந்தஉண்டை
தப்பா தெனக்கொடுத்தாள் சர்ப்பனையால்-அப்பளத்தில்

அவளிடத்திலேயே மையலாகி இருந்த எனக்கு அவ் வசிய மருந்தை நான் அறியாத வண்ணம் அப்பளத்திலும், பழத்திலும், சுண்ணும்பிலேயும் கலக்து எனக்குக் கொடுத்துவிட்டாள். மதிமயக்கம் மிகுதியாகக் கண்டேன். மதனுபிஷேகத்தின் மோக சமுத்திரத்தில் மூழ்கியிருப்பதே யல்லாது, என் மனம் ஊணையும் தேடவில்லை; உறக்கத்தையும் விரும்பவில்லை. நான் நதிக்குச் சென்று நீராடி செய்யும் நியம நேஷ்டைகளையும் தவறவிட்டேன். அவளையே எண்ணி ஜெபித்தேன். அழகிய அவள் கண் கலங்கிவிடக் கூடாதே என எப்போதும் நிதானத்துடன் நடந்துகொண்டேன். ஊடல் கொண்டு விட்ட அவளது காலைப் பிடித்து நமஸ்கரிப்பதையல்லாது வேறு புண்ணிய நமஸ்காரங்களை செய்யத் தவறியவனுனேன். அப்பெண் மயிலின் கொங்கையே சிவ லிங்கமாகக் கருதி தரிசிப்பதையே யல்லாது வேறெதிலும் கவனம் செலுத்தவில்லை !

தெய்வ பூசையை விட்டேன். ஆனுல் அவள் வாயமிர்தம் உண்பதிலேயே ஆசை கொண்டேன்.

இட்டாள் பழத்திலே இட்டாள்சுண் ணும்பிலே 589
இட்டாள் மதிமயக்கம் எய்தினேன்-விட்டிருக்கக்

கூடாது கண்ணுறக்கம் கொள்ளாது சாப்பாட்டைத் 590
தேடாது வேறுமனம் செல்லாது-பேடனையாள்

மோக சமுத்திரத்தில் மூழ்குவதல் லாதுபிர 591
வாக நதியை மறந்துவிட்டேன்-மோகனஞ்செய்

சித்தசனன் மந்த்ரகலை தேர்ந்தறிவதல்லாது 692
நித்தியசெப மந்திரத்தை நீக்கினேன்-தத்துவரிக்

கண்ணிசெயும் மோடிக்குக் கால்பிடிப்ப தல்லாது 593
புண்ணியநமஸ் காரங்கள் போட்டுவிட்டேன்-பெண்அணங்கின்

செங்களபக் கொங்கை தெரிசனமல் லாதுசிவ 594
லிங்க தெரிசனத்தை நீக்கினேன்-அங்கசவேள்

மாபூஜை வேளையவள் வாயமிர்தம் உண்பதல்லால் 595
தேபூஜை மேற்கவனம் தீர்ந்துவிட்டேன்-சோபமுற்ற

இவ்வாறு மதனபிஷேகமே கதியென்று கிடந்த என்னை அவளது தாயான நரைக் கிழவி சமயமறிந்து என்னிடமுள்ள பொருளத்தனையும் வஞ்சனையால் கொள்ளை கொள்ளும் கருத்துகொண்டு என்னிடம் வந்து, "அழகருக்கு ஆடித்திருநாள் வெகுவிமரிசையாக நடைபெறுகிறது. கணக்கற்றவர் திருநாள் காணச் செல்கிறார்கள். நீங்களும் சென்று தீர்த்தமாடி அழகரைச் சேவித்தால் புண்ணியமல்லவா?" என்றாள். எனக்கோ மதனபிஷேகத்தைப் பிரிந்திருக்க மனமில்லை. ஆகையால் மதனபிஷேகத்தையும் என்னுடன் திருநாள் காண அழைத்தேன். அவளும் "உங்களை, விட்டுத் தனித்திருக்க என்னாலாகுமா? பிரிந்தால் உணவு செல்லுமா? உறக்கந்தான்வருமா?" என்று சொல்லி என்னோடு புறப்படத் தயாரானாள்.

தாய்க்கிழவி அவளுக்குப் போலி நகைகளை உண்மையானதைப் போல அணிவித்து, அலங்கரித்து தானும் அவளுடன் புறப்பட்டு விட்டாள். மூவருமாகப் புறப்பட்டு அழகர்மலை சென்று தீர்த்தமாடினோம். அதன் பின் அழகே உருவான என மதனபிஷேகம் மான்போல் முன்னால் செல்ல, அவளுக்குப்பின் நரைத்த கிழக்குரங்கு போல தாய்க்கிழவி தொடர, மூவருமாக சுவாமி அமர்ந்திருக்கும் தேருக்குப் பின்நடந்தோம்.

அச்சமயத்தில் நான் அதுவரை மறந்துவிட்ட என் நண்பரான அந்த ஞானியார் சற்று தொலைவில் நின்று என்னை நோக்குவதைக் கண்டுவிட்டேன். உடனே கூட்டத்தில் மூவருமே அவர் கண்ணுக்குத் தெரியாதவாறு அங்கிருந்த ஒரு அந்தணர் வீட்டிற்குள் சென்று மறைந்து கொண்டோம்.

நாட்டம் அறிந்தென்னை நரைக்கிழவி மெல்லஒரு 596
பூட்டகந்தான் பேசினாள் பொன்பறிக்க-தாட்டிகரே!

ஆடித் திருநாள் அழகருக்குஇன்று ஆகுதந்த 597
வேடிக்கை பார்க்க வெகுஜனங்கள்-கூடியே

செல்கின்றார் நீங்களும்போய்த் தீர்த்தத்தில் ஆடிவந்தால் 598
நல்லபலன் எங்களுக்கு நண்ணாதோ?-கல்வியீர்!

அரும்பதவுரை: கண்ணி (594) செங்கபளம்-சந்தனம். அங்கசவேள்-மன்மதன். (596) பூட்டகம் - வஞ்சகம். தாட்டிகரே-பெருமை மிக்கவரே. [598] நண்ணாதோ-கிடைக்காதோ.

என்ருள்அவ் வார்த்தைக் கிருந்தால் அறிவிலியாம் 599
சென்ருலும் மங்கைமேல் தேட்டமாம்-என்றுசெழுந்
தேனே ! மதனுபிஷேகமே ! நீவருவை 600
ஆனுல் திருநாட்கு அழகென்றேன்-நானும்உம்மைக்
காணு திருந்தால்என் கண்உறங்கு மோஎன்று 601
பூணூர் முலையாள் புறப்பட்டாள்-பாணிப்பாய்
பித்தளையினுல் உடைமை பெண்ணுக்குப் பூட்டிவிட்டே 602
அத்தை தொடர்ந்தாள் அடிப்பிறகே-பத்துப்பேர்
பாங்கியரும் இன்றிவரும் பாவையுடன் சென்றழகர் 603
ஓங்குமலைத் தீர்த்தம் உவந்தாடி-பூங்குழலாய் !
மானும் கலையும்நரை மந்தியும்போ லேஇறங்கித் 604
தேனுந்து பூந்துளவச் செங்கண்மால் தானேறும்
தேருக்குப் பின்னுகச் சென்ருேம்ஓர் பாணஇசைத் 605
தூரத்தே ஞானியையன் தோன்றினுன்-தேருக்குப்
பக்கத்தி லேஒதுங்கிப் பாந்தினேன் அப்புறத்தோர் 606
தக்கமறை யோன்மனையில் தங்கினேன்-கக்கத்தில்

சிறிது நேரத்திற்கெல்லாம் அதை விட்டுப் புறப்பட்டோம். அரை நாழிகை தூரம் சென்று ஒரு பாலத்தினருகே வந்ததும் தாய்க் கிழவி பரபரப் படைந்து "அடடா! தங்கியிருந்த இடத்தில் சரிகைச் சேலையை மறந்து வைத்துவிட்டேனே!" என்ருள். உடனே நான் அதை எடுத்து வருவதாகக் கூறி ஓட்டமாக ஓடினேன், அந்த இடத்தை நோக்கி.

நான் திரும்பி வருவதற்குள் கிழவி தன் மகளுக்கு அணிவித்திருந்த பித்தளை நகைகளையெல்லாம் ஒன்றுவிடாமல் கழற்றி எடுத்துக்கொண்டு மதுரைக்குச் சென்றுவிட்டாள். இந்தச் சூதையெல்லாம் அறியாத நான் போன வேகத்தைக் காட்டிலும் பன்மடங்கு வேகமாய் என் மதனுபி ஷேகம் இருக்குமிடத்தை நோக்கி ஓடி வந்தேன். அங்கு வந்தவுடன் மதனுபிஷேகத்தின் நிலையைக் கண்டு திகைத்துவிட்டேன். அங்கே அவள் இலையெல்லாம் உருவிவிட்ட முருங்கைக் குச்சி போல் கண்ணீர் சிந்தியபடி நின்றுகொண்டிருந்தாள். பரபரப்புடன் அவளை நோக்கி, "ஏன்? என்ன நடந்தது?" என்று கேட்டேன். அதற்கவள் விம்மிவிம்மிச் செருமிக் குமுறிக்கொண்டே, "ஐயர் வந்து விடுவார். நீ வா வீட்டிற்கு, திருவிழாக் கூட்டத்தோடு போகலாம் என்று என் அம்மா கூப்பிட் டாள். நான் தங்களை விட்டுத் தனியே வர முடியாதென்று கண்டிப் பாய்க் கூறி மறுத்தேன். அவள் மேலும் வற்புறுத்தினுள். 'நான் அவரை விட்டு ஒரு கணமும் பிரிந்து வர முடியாது. நீ வேண்டுமானுல் போ!' என்று பிடிவாதம் செய்தேன். அவள் என் மீது கோபங்

கொண்டு சென்று விட்டாள். பிறகு நான் தாங்கள் சென்ற வழியிலேயே விழி வைத்துத் தங்கள் வரவை எதிர் நோக்கிக் கொண்டிருந்தேன். அச்சமயத்தில் பூண்போட்ட தடியொன்றை ஊன்றியவண்ணம் பல்லெல்லாம் போன ஒரு பொக்குவாய்க் கிழவன் தனித்துவிடப்பட்ட என்னிடம் வந்து என்னை அடித்து மிரட்டி என் நகைகளையெல்லாம் அபகரித்துக்கொண்டு ஓடிவிட்டான். தாங்கள் செய்த புண்ணியத்தால் நான் உயிருடன் இருந்து தங்களைக் காணும் பாக்கியம் பெற்றேன்'' என்று புலம்பி என்னைக் கட்டித் தழுவிக் கதறினாள்.

அழுது வருந்திய அவளைத் தேற்றி, "நீ இழந்து விட்டதற்கு மேல் பன்மடங்கு அதிகமான ஆபரணங்கள் உனக்கு நான் தருகிறேன்; வருந்தாதே, வா போகலாம்'' என்றுகூறி அவளுடன் வீடு திரும்பினேன்.

தூக்கிட்ட தோசைச் சுமையும் மடிதனிலே 607
பாக்கிட்ட கைவாளப் பையுமாய்-தாய்க்கிழவி

மாதைத் தொடர்ந்துவர மங்கைஎனைப் பின்தொடரப் 608
பாதைவழிக் கொண்டேன் பரிசுடனே-பாதை

அரைநாழி கைக்கப்பால், அத்தை குறுகி, 609
"வரைமா முலையாய்! மறந்தேன்-சரிகையிட்ட

சேலை!''என்றாள் ; "ஓடித் திரும்புகிறேன் நில்லு''மென்று 610
வாலிபப்பெண் மேலென் மனங்கிடக்கக்-காலிற்

கடுமையுள ஓட்டமெலாம் காட்டினேன் என்பின் 611
குடுமியிலே தட்டக் குதிக்கால்-விடுதியிற்போய்

மீளுமுன்னம் மங்கையிட்ட வேற்றுடமை யைக்கழற்றிப் 612
பீளைதள்ளும் கண்ணி பிழைகேடீ-ஆளுடனே

போனாள் மதுரைக்குப் போய்த்துகிலை நானெடுத்து 613
மானைத் தேடி வரும்வேளை தேனனையாள்

ஊரின் முருங்கை உருவியகோல் போல்நின்றாள் 614
மாரியெனக் கண்ணீர் வழிந்தோடக்-"காரிகையே!

என்னென்றேன்!'' விம்மிவிம்மி ஏக்கம்போல் நாக்குழறி 615
முன்னின்று மெள்ள மொழியலுற்றாள்-"அன்னை

அரும்பதவுரை: கண்ணி (606) பாங்கினேன்-பதுங்கினேன், மறையோன்-வேதியன். (607) கைவாளப்பை-வெற்றிலைப்பை. (612) பீளை-கண் அழுக்கு. பிழைகேடி-சூதுக்காரி.

வருவார்நம் ஐயர் வழியிற் பறியார் 616
திருநாட் சனத்துடனே செல்வோம்-அரிவையே !
வாஎன்றுள் விட்டுவர மாட்டேன்நான் நீபயந்தாற் 617
போஎன்றேன் கோபமாய்ப் போயினுள்-கூஎன்றுற்
கேள்வியுண்டோ வந்தான் கிழவன் ஒருவன் ஐயோ 618
போழ்வாய் நரைத்தலைப் பூண்கட்டு-நீளத்
தடிக்கொம்புக் காரன் தனிவழியில் என்னை 619
அடித்துப் பறித்தான் அகன்றான்-திடுக்கிட்டேன்"
என்றுளைத் தேற்றிஅதற்கு எண்ணமேன் உன்அதிர்ஷ்டம் 620
ஒன்றுமேல் லட்சம் உடைமையாம்-நின்று
வருந்தாதே என்று மதுரைக்கு வந்து 621
திருந்திழையாள் வீட்டிலே சென்றேன்-மருந்துருட்டி

விடு வந்து சேர்ந்ததும் ஏதுவுமே அறியாதது போல கிழவி வந்து தன் மகளை நோக்கினுள். "எங்கே நகைகள் எல்லாம் ?" என்றுள் பர பரப்புடன். கலங்கிய கண்களுடன் "பறி போயிற்று!" என்றுள் அவள் மகள்.

இவ்வார்த்தையைக் கேட்ட தாய்க்கிழவி துடிதுடித்துப் போனுள். கையைப் பிசைந்தாள். நெறித்தாள். வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டு, "ஐயோ மகளே! யாருமற்ற அந்த இடத்தில் தனியாயிருந்த உன்னை கொலை செய்திருந்தால் நான் என்ன செய்வேன்!" என்று மதனுபிஷேகத்தைக் கட்டிக்கொண்டு அழுதாள். பரதவித்தாள். விம்மினுள். பொருமினுள். "ஐயோ! நகையெல்லாம். போச்சே! இனி கோவிலுக்குக் கூட நீ வெளியில் செல்ல முடியாதபடி ஊரார் ஏசும்படியாச்சே! உடமை பறி போனதோடு மட்டுமல்லாது, ஊரா ரிடையே நம் அருமை பெருமையெல்லாம் குறைவாச்சே! அடி பேதைப் பெண்ணே! நீ பறிகொடுத்து விட்ட நகைகளுக்கு ஈடாக செய்து போடுவதற்கு இங்கு காசு பணமா கொட்டிக் கிடக்கிறது ? அப்படியே நகைகளைச் செய்வதென்றுலும் கள்ளன் பறித்துச் சென்றுவிட்ட நகை களைப் போல் வருமா ? ஐயோ! அவைகளெல்லாம் பத்தரை மாற்றுப் பசும் பொன்னல்லவா! இருநூறு கொடுத்து ரத்தினங்கள் பதித்துச் செய்ததாயிற்றே! காதுக் கொப்புக்கிணையாக இனி அதுபோல் ஒன்று பண்ணித் தர யாரால் முடியும்? புண்ணியவானும் மாவீரனுமான சிந்தம கூளேந்திரனிட்ட கை வளையலுக்கு இணையானதை இனி எக் காலத்தில் காணப் போகிறேன் ? பல பெரியோர்களும் பிரபுக்களும் கொடுத்த பற்பல விதமான ஆபரணங்கள் அத்தனையும் பறிகொடுத்து விட்டாயேடி பாவிப் பெண்ணே!' என்று ஒப்பாரி வைத்துப் புலம்பி ஓலமிட்டாள். தாய்க் கிழவிக்கும் மகளுக்கும் பலவாறு ஆறுதல் கூறித் தேற்றினேன். அதோடு மதனுபிஷேகத்தையும் தாயையும்

திருப்திப்படுத்த நகை செய்வதற்காக ஐயாயிரம் பொன்னை எடுத்துக் கொடுத்து என் கையாலேயே தட்டானிடம் ஆபரணங்களைச் செய்துவாங்கி மதனுபிதேஷகத்துக்கு அணிவித்து அழகு பார்த்தேன். அவளுடன் மஞ்சத்தில் அமர்ந்து ஆனந்தங் கொண்டேன்.

அங்கேவந் தாள்மகளை ஆவலாய்ப் பார்த்துடைமை 622
எங்கேஎன் றுள்பறிபோச் சென்றுரைத்தாள்-செங்கை

நெரித்தாள் பதறி நெரித்தகையை விட்டுப் 623
பிரித்தாள் வயிற்றைப் பிசைந்தாள்-ஒருத்தருமில்

லாத இடத்துடைமைக் காசையாய் உன்னுயிரைச் 624
சேதப் படுத்திலென்ன செய்குவேன் ?-பேதை

மகளே எனக்கதறி வாய்விட்டு அழுது 625
வெகுவாய்ப் பரிதவித்து விம்மி-நகைகளெல்லாம்

போச்சுதே கோவிலுக்குப் போக வரத்தடையொன்று 626
ஆச்சுதே ஊரும் அறிந்ததே-ஏச்சொன்று

வந்ததே பண்ணி மறுத்தும்இடக் காசுபணம் 627
சிந்துதோ கண்டேன்உன் தேட்டைநான்-வந்தடித்துக்

கள்ளர் பறித்தநகை கைக்குவரு மோஉடைமை 628
உள்ளதெல்லாம் ரத்த உடைமையே-அள்ளிஅள்ளி

எண்ணிஇட்ட செம்பொன் இருநூறு நான்கொடுத்துப் 629
பண்ணிஇட்ட கொப்பும் பறிபோச்சோ-புண்ணியவான்

திக்கடைய வெற்றிகொண்ட சிந்தமகூ ளேந்த்ரனிட்ட 630
கைக்கடகம் போலும் இனிக்காண்பேனோ!-விக்கிரமகோ

தண்டசர பாணிதுரைச் சாமராயன் கொடுத்த 631
கண்டசரம் ஏன் இவட்குக் காட்டினேன்!-அண்டலரை

வெட்டிய வாள்வீரன் விருபாட்சி யான்கொடுத்த 632
ஒட்டியா ணம்போல் உண்டாமோ-சிட்டர்புகழ்

ஆணிக் கனகநிதி அப்புரா யன்கொடுத்த 633
மாணிக்க மாலையைப்போல் வாய்க்குமோ!-வாணப்புகழ்

அரும்பதவுரை கண்ணி. (618) போழ்வாய்-பொக்குவாய். (621) மருந்து உருட்டி-மருந்து உருட்டுவதையே முக்கிய தொழிலாக உடைய தாய்க் கிழவி. (627) தேட்டை-சம்பாத்தியத்தை. (630) திக்கடைய-திக்கு எங்கும்.

அம்மைரா யன்கொடுத்த ஆணிமுத்துத் தாழ்வடத்தைக் 634
கொம்மைமுலை யாட்கேன் கொடுத்தேன் நான்!-நம்முடைய
வல்லக்கொண் டையன்அருள் வச்ரக் கணையாழிக் 635
கல்லுக்கு ஒருவர்விலை காண்பாரோ!-வல்லிசெய்த
கின்னரிப் பாட்டுக்குக் கெடிக்காமையன் கொடுத்த 636
பொன்னரைஞாண் போற் கிடைக்கப் போகுதோ-மன்னர்புகழ்
கச்சுமுலை யாளுக்குக் காளிங்கன் முன்கொடுத்த 637
பொற்சிமிக்கி போற்கிடைக்கப் போகுதோ!-குச்சிலியக்
கெங்காசி ரா[வ்]அளித்த கெம்பிழைத்த மோதிரம்போல் 638
இங்கார் கொடுப்பார் சொல் ஏந்திழையே!-மங்கைபுரி
நாட்டியத்தைக் கண்டுமெச்சி நத்தத்து லிங்கேந்த்ரன் 639
போட்ட கொலுசு எண்ணூறு பொன்பெறுமே!-வாட்டமிலாக்
கோக நகவதனன் கோபாலராயன் அருள் 640
மோகனப் பொன் மாலைமுற்றும் மோகனமே!-போகத்
திருமலைகண்ட மன்னன் தந்தருள்சிங் தாக்கை 641
இருமுலையாட்கு ஏன்கழுத்தில் இட்டேன்-கருணைநிதி
பூசாரி ராயன்இட்ட பொற்சவளி போலவும்ஓர் 642
ஆசாரி பண்ண அறிவானோ!-தேசம்மெச்சும்
போடிமகி பன்கொடுத்த பொற்சுட்டி கட்டிவிட்டுப் 643
போடிஎன்றேன் என்னமதி போனே(ன்]நான்!-தாடகையை
அம்பிற் பொருராம பக்ததுரை அன்றுதந்த 644
தும்பிப் பதக்கவிலை சொற்பமோ!-சொம்புபெறும்
நாடகத்தைக் கண்டுமெச்சி நம்முத்தை யன்அளித்த 645
பாடகத்தைக் கண்டால் பசிபோமே!-நாடுபுகழ்
தொட்டரா யன்கொடுத்த சோடுவச்ர ஓலையும்பொற் 646
பட்டைஅரை ஞாணும்விலை பண்ணுவதோ!-வெட்டுகின்ற
வாளுலவும் செங்கண் மடந்தைபொட்டுக் காறைஎந்த 647
ஈளுவன் வீட்டில் இருக்குதோ-தாளவட்டப்

அரும்பதவுரை : கன்னி. (636) கின்னரி-வீணை (642) சவளி-அட்டிகை (645) பாடகம்-கால் சதங்கை.

பூணார் முலையாட்குப் போட்டவெள்ளித் தண்டைஎந்த 648
சாணான் வளவிற்போய்ச் சார்ந்ததோ!-வீணேஎன்
மானானைக் கொள்ளைகொண்டேன் வச்ர முருகைஎந்தக் 649
கோனான்தன் கையிற் கொடுத்தானோ!-ஆனாலும்
மூவைந்தாம் பாட்டிகண்ட மூக்குத் தளுக்கைஎன்ன 650
பூவென்றெங கேஎறிந்து போட்டானோ?--பாவைநல்லாய்
என்னசெய்வோம் நாமினிமேல் என்றாள் கிழவியையும் 651
கன்னியையும் தேற்றிக் கணக்கேற்றி-அந்நேரம்
ஐயா யிரம்பொன் அவல்போலப் பார்வையிட்டுக் 652
கையாரத் தட்டான் கடையிலிட்டுச்-செய்த
உடைமையெல்லாம் அந்த உருப்படியே இட்டு 653
வடிவைஎல்லாம் பார்த்து மகிழ்ந்தேன்-கொடிஇடையே

இவ்வாறு அவளுடன் ஆனந்தக் கடலில் மூழ்கி இருக்கும்போது ஒருநாள், பஞ்சு போன்று நரைத்துவிட்ட அத் தாய்க்கிழவி மெதுவாக நாங்கள் இருக்கும் அறைக்கு வந்தாள். வந்தவள் தன் மகளை நோக்கி, " கண்ணே ! கோவிலுக்குச் சென்று விட்டு வந்து விடேன்!'' என்றாள். இதைக் கேட்ட மகள், '' சேலையெல்லாம் சாயம் வெளுத்துப் பழமை யாகிவிட்டன. புதிதாக ஒரு சேலையுமில்லை: எவ்வாறு செல்வேன் ?'' என்று முகம் வாடிக் கூறினாள்.

'' அட பேய்ப் பெண்ணே ! நீ என்ன ஊருக்குப் புதியவளா ? பிறந்து வளர்ந்த ஊரில் எப்படி இருந்தால் என்ன ? புதுப்புடவை எதற்கு ? பொற் குடத்திற்குப் பொட்டிடவும் வேண்டுமா .?'' என்றாள் தாய்க் கிழவி.

இதையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்த நான் அவளை அன்புடன் அழைத்துக்கொண்டு, நன்னி செட்டி கடைக்குச் சென்றேன். அவளுக் குப் பிடித்தமாயிருந்த விதவிதமான சரிகை போட்ட பட்டுச் சேலைகளும், சரிகை ரவிக்கைகளும், பளபளக்கும் பட்டுப் பாவாடைகளில் பதினாறு வகைகளும் வாங்கியதோடு, தாய்க் கிழவியான அப் பேய்க் கிழவிக்கு வாங்காதிருந்தால் அவள் புருபுருப்பாளோ என்றெண்ணி, அவளுக்கும் இரண்டுசேலைகள் நல்லதாக வாங்கிக்கொடுத்தேன். அதோடு மட்டுமா? வெற்றிலைப் பாக்குக் கடைக்காரன் வன்னிக்கும், பால்கார மாரிக் கும், நெய்யளந்த சின்னிக்கும், நெல் அளந்த செல்லிக்கும், ஏகமாகத் தொகை பாக்கியாகி நின்றுவிட்டதால் வீட்டுவாசலில் வந்து நின்று திட்டி தாறுமாறாகப் பேசவும் செய்ததால், அவர்களது கடன்பாக்கியையும் கொடுத்துத் தீர்த்தேன். காலையிலும் மாலையிலும் தாய்க்கும் ளுக்குமாக வாடிக்கையாகச் சாராயம் கொடுத்து வெறிப்பேய் ஊட்டி வந்த நெட்டைப்பிச்சி வந்து ' எனக்குச் சேரவேண்டியதை கொடுக்கா

மல் இருப்பது நியாயமா?' என்றாள். சண்டைக்கு வாய் திறக்க ஆயத்தமாயிருந்த அவளுக்கு முப்பதுபொன் கொடுத்து அவளுடைய வாய் மூடினேன்.

திடீரென ஒருநாள் மதனபிஷேகம் வயிற்றுவற வலிக்கிறது என்று துடித்தாள். அவள் துடிப்பைக் காண எனக்கு வேதனையாய் இருந்தது. அவள் வயிற்றைத் தடவ மெதுவாகக் கை வைத்தேன். தொட்டால் அதிகமாகிறதென்று துடித்தாள். உடல் சோர்ந்தாள். வாடினாள். இதற்கென்ன செய்வதென்றேன். "இது எங்கள் குலதெய்வத்தின் குற்றம்! வைத்தியத்திற்குக் கட்டுப்படாது!" என்றாள். "தெய்வ குற்றத்தின் நிவர்த்திக்கு என்ன செய்யவேண்டும் சொல்" என்றேன். அதற்கு அவள், "கையில் அரிவாளுடன் உருவம் ஒன்று செய்து, பொன் சரிகை உருமாலையால் அலங்கரித்து, அதன் இரு கால்களுக்கும் பொற்சிலம்பிட வேண்டும். பலியிட்டுப் பூசை செய்ய குட்டியிடாத இரண்டு ஆட்டுக்குடடிகளும், செஞ்சேவலும் வேண்டும்" என்றாள். அவள் இஷ்டப்படியே அதற்கான செலவிற்கு ஐம்பது பொன் கொடுத்தேன்.

மஞ்சத்திற் கூடி மகிழ்ந்திருக்கும் போதொருநாள் 654
பஞ்சொத்த கூந்தலாள் பையவந்து வஞ்சியே!

கோயிலுக்குப் போஎன்றாள் கோடியில்லை சேலைஎல்லாம் 655
சாயமில்லை என்று சலிப்பாளள்-'பேயே!

பிறந்தஊ ருக்குப் புடவைஏன் நம்மை 656
அறிந்தவரே அல்லால்மற் றூர்காண்-நறுங்குழலாய்!

பொன்னின் குடத்துக்குப் பொட்டிடலேன் போ'என்றாள் 657
அந்நேரம் மாதை அழைத்துப்போய்-நன்னிசெட்டி

கட்டுவர்க்கச் சேலைக் கடையில் இடைக்கிசைந்த 658
பட்டுவர்க்கம் பார்த்துப் பளபளப்பாம்-மட்டுவர்க்கப்

பாவாடை இட்டமொழிப் பாவைக்குப் பொன்ரவிக்கை 659
பாவாடை வர்க்கம் பதினாறு-மேவிஇரு

செப்புவர்ணப் பூமுலைக்குச் செம்பருத்திப் பூநிறத்துக் 660
கொப்புவர்ண மார்த்தீர்ந்த கோப்புவர்ணம்-இப்புவியில்

ஆதிவண்ணம் போலும் அழகுடையா ளுக்கிசைந்த 661
வீதிவண்ணச் சேலைஒன்று விந்தையாம்-வாதுமத

பாணத் தார்க்கூந்தற் பவளவாய்ப் பைந்தொடிக்கு 662
வாணத்தார்ச் சேலை வகைமூன்று-வேணுமணி

முத்துவண்ண மூரல்நல்லாள் மூலைக்குள் வைத்துடுக்க 663
முத்துவண்ணச் சேலையிலே மூன்றுவகை-வைத்ததிருச்

சூரணவர் ணத்திலகு சுட்டிநுத லாட்கிசைந்த 664
நாரணவர் ணச்சேலை நாலைந்து-போரிற்

படைமுறிச்சுக் குத்தியகட் பாவையாள் கட்ட 665
உடைமுறிச்சுக் குத்தியிலே ஒன்று-தொடையல்

சொருகு மணிக்குழலாள் சோடியனையாக் கட்ட 666
அருகுமணிச் சேலையிலே அஞ்சு-பிரிவுகொண்டு

செல்லாச்சே லைப்பொருங்கட் சேயிழையாள் கட்டநல்ல 667
சல்லாச்சே லைத்தரமாய்த் தானிரண்டு-மெல்லமெல்ல

வாள்எழுத்தோள் ஆடவரை மாலழுத்து வாள்உடுக்க 668
ஆள்எழுத்துச் சேலையிலே ஆரேழு-நீள்எழில்சேர்

சுந்தரத்தோள் மங்கைக்குத் தொட்டிழுத்துக் கட்டநல்ல 669
சந்திரகாத் தக்கச்சுத் தானைந்து-அந்தரத்தில்

இந்திரகா விற்குலவு ரம்பையனை யாட்கிசையச் 670
சந்திரகா விச்சேலை தானிரண்டு-சிந்துமழை

மாரிக் கொடிமின் மருங்கிற் கிணங்கியகஸ் 671
தூரிக் கொடிச்சேலை சோடிரண்டு-காரிகைக்குக்

காங்குசரி கைச்சேலை கம்பா வரித்துகில்பட் 672
டாங்குகம்பிச் சேலை அரைவர்ணம்-தாங்குசிலம்பு

எச்சரிக்கை என்னும் இடைக்குச் சரிதென்றற் 673
குச்சரிகை வர்க்கமெல்லாம் கொண்டீந்தேன்-உச்சிதமாத்

தாய்க்கிழவி கேட்டாள் தனக்கிரண்டு சேலை அந்தப் 674
பேய்க்குதவா விட்டாற் பிழைப்பேது?-பாக்களந்த

வன்னிஎன்றும் பாலளந்த மாரியென்றும் நெய்யளந்த 675
சின்னிஎன்றும் நெல்லளந்த செல்லிஎன்றும்-எந்நேரம்

வைவதுவும் போவதுவும் வாசலிலே நின்றலம்பல் 676
செய்வதுவும் போலிட்டால் தித்திரிப்பு-கைமேலா

அந்தக் கடன்காரர்க் கென்றேநான் ஐம்பதுபொன் 677
இந்தக் கடன்காரிக் கீந்துவிட்டேன்-அந்திசந்தி

தாய்குடிக்கப் பெண்குடிக்கச் சாருயம் ஊற்றிவெறிப் 678
பேய்பிடிக்க விட்டநெட்டைப் பிச்சிவந்து-'ஞாயமோ

அரும்பதவுரை : கன்னி (676) தித்திரிப்பு-கபடம்.

தப்பறைக் காரி'என்று சண்டைக்கு வாய்திறந்தாள் 679
முப்பதுபொன் போட்டுவாய் மூடிவிட்டேன்-செப்புமுலை
மங்கை வயிற்றை வலிக்குதென்று மார்க்கமிட்டாள் 680
அங்கைதொட்டக் காலதிகம் ஆகுதென்றாள்-எங்கள்
குலதெய்வம் பண்ணுதிந்தக் கோட்டாலை என்றாள் 681
கலைகுலைந்து சோர்வடையும் கண்ணாள்-சிலைநுதலாய்
தெய்வக் குறைக்கென்ன செய்யவே ணும்சொல்லென்றேன் 682
கையில் அரிவாளும் கட்டளையாச்-செய்த
உருவேணும் பொற்குச்சு உறுமாலை வேணும் 683
இருகாலுக் குச்சிலம்பும் ஈனுப்-புருவைகளும்
செஞ்சே வலும்வேணும் சேவிக்கும் பம்பைக்கோர் 684
அஞ்சாறு பொன்வேணும் ஆடிவரக்-குஞ்சமிட்டுப்
பூங்கப் பரையெடுத்துப் பூசையிட வேணுமென்றாள் 685
ஆங்கப் படிக்கீந்தேன் ஐம்பதுபொன்-தாங்கருங்கண்

இதற்கிடையே என்னிடமிருந்த முத்துக்களையும், பொற்காசுகளையும், விலையுயர்ந்த ஒரு மாணிக்கக் கல்லையும் மதனாபிஷேகத்திடம் கொடுத்து வேண்டும்போது வாங்கிக்கொள்வதாக ஒப்படைத்திருந்தேன்.

மதனாபிஷேகமும் தாய்க்கிழவியும் தனக்குத் தேவையானவற்றையெல்லாம் வாய் கூசாது என்னிடம் கேட்ட வண்ணமிருந்தனர். கட்டிலென்றும், பட்டுமெத்தையென்றும், சால்வையென்றும், வட்டிலென்றும், தலைவாரச் சிப்பென்றும், குத்து விளக்கென்றும், குடம் குடமாய்ப் பால் கறக்க எருமையென்றும், பசுமாடென்றும், மச்சு விடென்றும், அவளது சின்னத் தங்கையின் கால்களுக்குத் தண்டையென்றும், அவளுக்கு ஆடல் சொல்லிக்கொடுத்த நட்டுவனாருக்கு மேலங்கியென்றும், பாடல் ஆசிரியனுக்குத் தலைப்பாகையென்றும், சேடிகளுக்குச் சேலையென்றும், காதோலையென்றும், தவலையென்றும், செம்பென்றும், சவ்வாது வைக்கத் தந்தச் சிமிழ் என்றும், வாசனைப்பொடியென்றும், கதம்பமாலையென்றும், தைப் பொங்கலுக்கென்றும், சிவராத்திரிக்கென்றும், பற்பல முகாந்திரங்களைக் கூறி, என் தலையைத் தடவி, மூளையை உறிஞ்சுவதுபோல் என்னை ஏய்த்துப் பணம் பறித்தாள் மதனாபிஷேகம். கடலில் கவிழ்ந்த

அரும்பதவுரை : கண்ணி (679) தப்பறைக்காரி-குழ்ச்சிக்காரி. (681) கோட்டாலை-கோளஷ்கை. கலை-ஆடை, (683) பொற்குச்சு உருமாலை-பொற்குஞ்சம் கட்டிய தலைப்பாகை ஈனுப் புருவை-குட்டுபோடாத ஆடு. (684) பம்பை-தம்பட்டம், (685) கப்பரை-பிக்ஷைப் பாத்திரம்.

கப்பலைப்போல கையிலுள்ள அத்தனைப்பொன்னையும் இழந்துவிட்டேன் மேற்கொண்டு கொடுப்பதற்கு வகையற்றவனாய் இருளும் மருளுங் கொண்டு திகைத்துவிட்டேன்.

கேட்பதும் ஓயவில்லை. கொடுப்பதற்கும் வகையில்லை. கொடுக்காமலும் இருக்க முடியாது. ஆடைகளை விற்றேன். காதுக்கடுக்கனையும் விற்றேன். அப்போதும் போதவில்லை. தாயக்கிழவி தந்திரமாய் வீட்டுச் செலவிற்கென கேட்டபோது கையில் காசில்லாமல் தலை கவிழ்ந்து நின்றேன். கையில் பொருளில்லை என்பது அவளுக்குத் தெரிந்து போகவே என்னை வீட்டை விட்டுத் துரத்த உபாயமிட்டாள்.

வாளைதா வீங்காது மாதுநல்லாய் நான்கேட்ட 686
வேளைதா என்றவள் தன்வீட்டிலே-ஆழாக்கு

முத்துவைத்து வைத்தேன் முடிப்பாய்ஓர் ஆயிரம்பொன் 687
வைத்துவைத்தேன் பின்னுமொரு மாணிக்கம்-சித்திரக்கால்

கட்டிலென்றும் கட்டிலின்மேற் கட்டிசக லாத்தொன்றும் 688
வட்டிலென்றும் சீப்பு வகைஎன்றும்-கட்டுமட்டாம்

குத்துவிளக் கென்றும் குடப்பால் எருமைஎன்றும் 689
பத்தணையோர்என்றும் பசுக்களென்றும்-மெத்தைஎன்றும்

மச்சுவீ டென்றும் மணைக்குதிர்கள் என்றுமங்கை 690
மெச்சிவிளை யாடிநிற்க மேடைஎன்றும்-கச்சிறுக்குங்

கொங்கைச் சிமிழ்மாது கூடப் பிறந்தசின்னத் 691
தங்கச்சி கால்களுக்குத் தண்டைஎன்றும்-இங்கிதமாய்

ஆடவிட்ட நட்டுவனார்க்கு அங்கிஎன்றும் சங்கீதம் 692
பாடவிட்ட பாடகற்குப் பாகைஎன்றும்-சேடியர்க்குக்

கம்பிகுறிச் சேலைஎன்றும் காதோலை என்றும்வெள்ளத் 693
தம்பிக்கை என்றும் தவலைஎன்றும்-செம்பென்றும்

தந்தச் சிமிழிற் சவாதென்றும் ஆண்டியப்பன் 694
கந்தபொடி என்றும் கதம்பமென்றும்-சந்தனங்கள்

என்றும் ஆடிக்கழிவுக் கேற்றதென்றும் தைப்பொங்கற்கு 695
என்றும் சிவராத் திரிக்கென்றும்-நின்று.

தலைதடவி மூளை தனைஉறுஞ்சு வார்போல் 696
பலவிதமாய் ஏய்ச்சுப் பசப்பிக்-கலவைஅணிந்து

அரும்பதவுரை : கண்ணி (686) வாளை-மீன். (688) சகலாத்து-படுக்கை விரிப்பு. (689) குடப்பால் எருமை-குடம்பால் கறக்கக் கூடிய எருமை, (693) தம்பிக்கை-கூஜா. (696) ஏக்கப் பசப்பி-தளுக்கு செய்து.

ஓங்கும் இளமுலையாள் ஊனிருக்க வேஉயிரை 697
வாங்குவது போற்பொருளை வாங்கிவிட்டாள்-சோங்கிலிட்டுக்

கட்டியசெம் பொன்னைக் கடலிற் கவிழ்த்ததுபோல் 698
ஓட்டொழியத் தோற்றுவிட்டேன் உள்ளதெல்லாம்-இட்ட

மருந்தால் இருளும் மருளுங்கொண் டாற்போல் 699
இருந்தேன் கொடுக்கவகை இன்றி-உரிந்து

கலைவிற்றேன் காதிற் கடுக்கனையும் விற்றேன் 700
மெலிவுற்றேன் தாய்க்கிழவி வீட்டுச்-செலவுக்குத்

தத்திரமாய்க் கேட்டாள் தலைகவிழ்ந்து நான்துரும்பு 701
குத்துவதைக் கண்டாள் குறிப்பறிந்தாள்-எத்திஎன்னைத்

தாரைவிட்ட வேல்விழிபாள் தாய்க்கிழவி வார்த்தைகேட்டு 702
ஊரைவிட்டுப் போக்க உபாயமிட்டாள்-சேரஎன்றும்

மஞ்சத்தில் மதனபிஷேகத்திடம் சல்லாபிக்கச் சென்று முன்புறமாகப் படுத்தால், அவள் தன் முகத்தைப் மறுபுறம் திருப்பிப் படுத்துக் கொள்வாள். அன்புடன் அவளை உபசரிக்கச் சென்றால், தன் முழங்கையால் என்னை இடித்துத் தள்ளிக் கடுகடுப்பாய் நடந்துகொள்வாள். இப்படியாக நான் நடத்தப்பட்டேன். எப்போதாவது அவளுக்குக் குணம் திரும்பி என்னுடன் அவள் பேசிக்கொண்டிருந்தாள். அப்போது மெதுவாக வெளிப்புறமிருந்து தாய்க்கிழவி செறுமிச் சாடை காட்டுவாள். உடனே அவள் என்னைத் தனியே விட்டு விட்டு எழுந்து போய்விடுவாள். எனக்குத் தெரிய பொருள் கொடுப்பவர்களிடம் சல்லாபிப்பாள். அதன் பின் களைப்புற்றுத் திரும்பி வருவாள். என்னைப் பொருட்படுத்தாமல் என் பக்கத்திலேயே வந்து படுத்து நன்றாகத் தூங்கி விடுவாள்!

தன் தோழிகளில் ஒருத்தியான மாயக்குருவி என்பவளை ஏவி தன் வீட்டிற்கு முன்பு வந்துபோய்க் கொண்டிருந்த வாடிக்கைக்காரர்களை அழைத்து வரச் செய்வாள் மதனபிஷேகம். அவர்கள் அங்கு வந்திருக்கும் சமயத்தில் நான் அங்கிருந்தால், என்னை நோக்கி, "சந்தர்ப்பம் தெரியாத சவமே! குறிப்புத் தெரிய வேண்டாமா?" என்றெல்லாம் மட்டரகமாக ஏக வசனத்தில் ஏசினாள். என்னைப் பற்றி இகழ்ச்சியாக அளவுக்கு மீறி இல்லாததையும் பொல்லாததையும் சொல்லி வருவோர் போவோரிடமெல்லாம் பேசினாள். இவ்வாறு என்னை அவள் விரட்டினாலும், எனக்கு அவளை விட்டுப் பிரிய மனமில்லாது செக்கில் பூட்டிய மாட்டைப்போல அவளையே சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருந்தேன்.

அரும்பதவுரை : கண்ணி (697) சோங்கு-கப்பல். (698) ஓட்டொழிய-எல்லாம் தொலைய. (700) கலை-ஆடை.

மின்புறங்காட் டும்சயனம் மேற்படுத்தால் என்புறத்தில் 703
பின்புறங்காட் டிப்படுப்பாள் பேசாமல்-அன்புடன்நான்

செய்யா உபசாரம் செய்யப்போ னலும்முழங் 704
கையால் இடிப்பாள் கடுகடுப்பாய்-பையயவே

அன்னைவந்து தன்னை அழைக்கச் செறுமந்தச் 705
சன்னையறிந் தென்னைவிட்டுத் தானேகி-பொன்முடிப்பு

வாங்குவதும் கூடுவதும் வந்தெனரு கிற்படுத்துத் 706
தூங்குவது மாகத் தொழில் எடுத்தாள்-பாங்கியரிற்

கோப்புடைய மாயக் குருவியைவிட் டுப்பழைய 707
மாப்பிளைமார் தம்மை வரச்சொல்லி-"பேய்ப்படுவாய்!

அன்னியர்கள் வந்தால் அருகிற்போய் நானிருந்தால் 708
சன்னைதெரி யாதோ சவுங்களே!-என்னடா

போடா வெளியிற் புதுமண்ட பத்திருந்து 709
வாடா!" எனச்சொலுவாள் மட்டுமிஞ்சி-ஓடியங்கள்

சொல்லத் தோடுத்தாள் துரத்திடினும் பூட்டியசெக் 710
கெல்லைவிட்டுப் போகா எருதானேன்-மெல்ல

இத்தனை அவமானங்களையும் நான் சகித்துக்கொண்டு, நான் மேலும் அங்கேயே இருப்பதைக் கண்ட தாய்க்கிழவி, தன் மகளிடம் வந்து, "இந்தப் புரட்டுக்காரப் பார்ப்பான் உனக்கென்ன சதமா? இவன் என்னத்தைக் கொடுத்தான்? விட்டுப் பிரிவதில்லையென்று அவனுடன் என்ன உடன்படிக்கையா செய்திருக்கிருய்? இது பார்த்தவர்களுக்கு ஏற்றதாய் இருக்குமா? என் அருமை மின்னற்கொடியே! யாராயிருந்தாலென்ன? கொடுக்கும்வரை வாங்கிக்கொண்டு கொடுப்பதற்கு இனி கையிலில்லை என்பதை அறிந்தவுடன் விட்டுத் தொலைக்க வேண்டியதுதானே தாசி முறை! நீ என்ன எடுப்பார் கைக்குழந்தையா? பேய்ப் பிள்ளையாய் இருக்கிருயே! நம் விட்டிற்கு வரும் மாப்பிள்ளைமார் திருடனைப்போல் திரியக் காரணமென்ன? ஓடத்திலேறி கடக்க முடியாவிட்டால் அக்குற்றத்தை ஓடக்காரன் தலையில் சுமத்த வேண்டியதுதானே! உன்னிடம் நான் கொடுத்து வைத்துள்ள அம் மருந்தை உபயோகிப்பாயேயானுல் உன்னை நோக்கி மலையும் நகர்ந்து வருமே! உனக்கென்ன வாலிபமா போய்விட்டது? உன் அழகிய முகத்தில் சுருக்கங்கள்தான் விழுந்து

அரும்பதவுரை : கன்னி (705) சன்னை-சமிக்ஞை. (709) மட்டுமிஞ்சி-அளவுக்கு மீறி. ஓடியங்கள்-பரிகாசப் பேச்சு.

விட்டதா? அல்லது தலைதான் நரைத்து விட்டதா? அல்லது உன்மேனி கட்டுவிட்டு இளைத்தாவிட்டாய்? இல்லையே! இவ்வாறெல்லாம் குறை வற்று இருக்க, இவனை விட்டால் உனக்கு வேறு ஆளா கிடையாது! இந்தப் பார்பான் மீதா மோகங்கொண்டுவிட்டாய்? இந்த நிமிடமே அவனை ஊரை விட்டே துரத்தப் பார்!'' என்றாள்.

இவைகளை யெல்லாம் மறைந்திருந்து கேட்டுக் கொண்டிருந்த நான் ''நன்றி மறைந்தவரைத் தெய்வம் கேட்கட்டும்!'' என்று உரக்கச் சொல்லிக்கொண்டே அவர்களெதிரில் வந்து நின்றேன்.

மகளை அழைத்து மருட்டுருட்டிச் சொல்வாள் 711
''தகல்பாசிப் பார்ப்பான் சதமோ-முகமாயம்

என்னசெய்தான் நீஅவனுக் கேற்ற உடன்படிக்கை 712
என்னசொன்னாய் பார்த்தவருக் கேற்குமோ-மின்னே!

கொடுக்குமட்டும் வாங்கிக் கொடாதிருந்தால் விட்டு 713
முடுக்கலல்லோ வேசி முறைமை-எடுப்பார்கைப்

பிள்ளையோ நீயுமென்ன பேய்ப்பிள்ளாய்! மாப்பிள்ளைமார் 714
கள்ளரைப்போ லேதிரியக் காரணமேன்-மெள்ளமெள்ள

ஓடங் கடக்கவிட்டால் ஓடக்கா ரன்தலையிற் 715
போடுவது சொட்டென்பார் பூதலத்தோர்-வாடீ

சிலைநுதலாய்! நானுனக்குச் சேர்த்த மருந்துக்கு 716
மலையும் நகர்ந்து வருமே-முலைவயிற்றைத்

தொட்டதோ கன்னம் கரித்ததோ கூந்தல்நரை 717
இட்டதோ மேனி இளைத்ததோ-தொட்டவனை

விட்டுப் பிரிந்தக்கால் வேறுபிழைப் பில்லையோ 718
முட்டிவாங் கிப்பயலோ மோப்பாச்சு-கெட்டிகெட்டி

ஊரைவிடப் பற்று'' என்றாள் ஊதாரி வீட்டிறப்புக் 719
கூரையில் ஒன்றிக்கேட்டுக் கொண்டேனன்-மேரைதப்பி

நன்றிமறந் தாரை நடுக்கேட்கு மோதெய்வம் 720
என்றுசொல்லி வந்தேன் எதிரேநான்-என்றவுடன்

என் கைப்பொருளையெல்லாம் கவர்ந்து ஒட்டாண்டியாக்கிவிட்ட கிழவி இதைக் கேட்டவுடன் அளவற்ற ஆத்திரங் கொண்டாள். ஆம்! என் மாமியார்தான்! அங்குவரும் காமப் பேயர்களின் பலஹீனத்தைப் பயன்படுத்தி கடைசிச் சல்லிவரை உறிஞ்சிவிடும் மாமியார்! மானைக் கண்டு புலி பாய்வதுபோல ஈயாதவரிடமும் கறந்துவிடும் கிழட்டு

அரும்பதவுரை: கன்னி (720) நடு-நியாயம்.

மாமியார்! பல் விழுந்து தன் மூப்பைக் கொடுத்து இளமை வாங்க மொட்டைப்பயல்களைத் தேடும்மாமியார்! கோப்பைக்கும், மாவடுக்கும், வெற்றிலைப் பாக்குக்கும், மஞ்சளுக்கும் சஞ்சாரம் பண்ணும் மாமியார்! ஒரு காலத்தில் மஞ்சத்தில் தன்னுடன் கூடியிருந்தவர்களில் பணம் படைத்தவர்களை இன்று தன் மகளுக்கு மாப்பிள்ளையாக்கி வைக்கும் மாமியார்! ஆசைகொண்டு தன் மகளிடம் சேர்ந்து அன்பைக் கொட்டியவர்களைக் கழுத்தறுக்கும் வாள்போன்ற நாக்குப்படைத்த மாமியார்! எவ்வளவு கெட்டிக்காரர்களாகவும் சாமர்த்தியசாலிகளாகவும் இருந்தாலும் கொடிய புலியைப்போல் பாய்ந்து பணம் பறிக்கும் வல்லமை படைத்த என் அத்தை! இவ்வளவு குணநலன்கள் கொண்ட அவள் பொலிப்பாட்டுப் பாடிக்கொண்டு :வந்து "என்னடா சொன்னாய் பார்ப்பாரப் பயலே! இன்னுமொருதரம் சொல்லு பார்க்கிறேன்; கன்னத்தில் அறைய ஆளில்லையென்று பார்த்தாய்?" என்று சொல்லிப் பாய்ந்தாள். "என்னைப் பைத்தியக்கார கிழவியென்று எண்ணினாய்? சின்னஞ்சிறுக்கி உன் கையில் வகையாகச் சிக்கி விட்டாளென்று எண்ணிக் கொண்டாயோ? அவளை மயக்கி உன்வசப்படுத்தி வைப்பாக வைத்துக் கொள்ள எண்ணுகிறாயே! நீ இத்தனை காலமும் இங்கேயே சுற்றித் திரிந்திருக்கிறாயே, பசிவேளைக்கு ஏதாவது கொடுத்திருக்கிறாயா? இவ்வளவு நாள் நீ இங்கிருந்தது போதும்; போ என்றால் போகவேண்டியதுதானே! என் மகளென்ன உனக்குத் தாய்மாமன் மகளா? இல்லை உனக்குத் தாலிகட்டிய பெண்சாதியா? அல்லது நீமட்டுந்தான் என் மகளுக்கு அபூர்வமாக நேசமானவனா? ஒரு சாண் வயிற்றுக்குப் பிச்சை என்று வந்தவனாகிய நீ, என் பெண்ணுக்குச் சொந்த மாப்பிள்ளையோ? உனக்கே எப்போதும் சொந்தமாய் கிடப்பாள் என்று எண்ணி விட்டாயோ? தேவடியாள் ஒருவனுக்கே சொந்தமாக எத்தனை நாளைக்கு இருக்கமுடியும்?" என்றெல்லாம் வாயில் வந்தபடி ஏசிப் பேசி தன் சேலையை வரிந்து இறுக்கிக் கட்டிக்கொண்டு என்னுடன் மல்லுக்குக் கிளப்பினாள்.

எனக்கு வந்த கோபத்தில் அவளை அப்படியே கடித்துத் தின்று விடலாம்போலிருந்தது. நெருப்பின் நடுவே உயிருக்கு மன்றாடிக்கொண்டிருந்த விஷப்பாம்பை காப்பாற்றியதற்குப் பிரதியாக நளனையே அந்தப் பாம்பு தீண்டிய கதையைப்போல என் கதையும் ஆயிற்று.

எனக்கு ஆத்திரம் மண்டிக்கொண்டு வந்தது. வயிறு எரிந்தேன். "அடி, நன்றி கெட்டவளே! நீயா இப்படிப்பேசுகிறாய்? இவ்வாறு துடுக்குத்தனமாய் ஏச உனக்கு வாயேது? நான் உனக்கு ஒன்றுமே கொடுத்ததில்லையா? நான் கொடுத்ததும் ரகசியமாய் கொடுக்க வில்லையே? நான் கொடுத்த கட்டித்தங்கவராகனுக்குக் கணக்குண்டோ? இதற்கு இவ்வூர் தட்டார்களே சாட்சி சொல்வார்களே! அல்லது இவ்வூரார்தான் அறியாரோ? இல்லை உன்நெஞ்சுதான் அறியாதா? கிழப்பிணமே! உன் மனசை நீயே தொட்டுப்பார். உன்னிடம் நான் கொடுத்த பணமுடிப்பு எட்டுத் தலைமுறைக்குக் காணுமேயடி!" என்று சினங்கொண்டு சீறினேன்.

உடனே அவள் அடங்கா ஆவேசம் கொண்டவளாய் கண்டபடி பேசி, "போகிருயா இல்லையா?" என்று என் மடி பிடித்திழுத்தாள், நான் அவள் தலை மயிரைப் பிடித்தேன். அவள் என்னைத் தள்ள, நானும் அவளுக்கு ஐந்தாறு அடிகொடுத்தேன். பொக்கைவாய் கிழட்டுச் சிறுக்கி என் தலைக்கு டுமியைப் பற்றி இழுத்தாள்.

ஆங்காரம் இட்டாள்என் ஆஸ்தியெலாம் தன்கையில் 721
வாங்காமல் வாங்கிவிட்ட மாமியார்-ஆங்குவரும்

பேய்மடையர் பொன்னும் பெருங்குளத்து நீரைத்தன் 722
வாய்மடையா லேஉறிஞ்சும் மாமியார்-ஈயாரைப்

புல்வாயைக் கண்ட புலிபோலப் போய்ப்பிடிக்கும் 723
வல்வாய்க் கிழநெட்டை மாமியார்-பல்லுவிழும்

கோப்புளதன் மூப்பைக் கொடுத்திளம் வாங்கமொட்டை 724
மாப்பிளைமா ரைத்தேடும் மாமியார்?கேப்பைக்கும்

பிஞ்சுமாங் காய்க்கும் பிளவுக்கும் வெற்றிலைக்கும் 725
மஞ்சளுக்கும் சஞ்சரிக்கும் மாமியார்-மஞ்சத்தே

தேற்றித் தனைமுன்பு சேர்ந்தபணக் காரர்முறை 726
மாற்றிமக ளுக்கிணங்கும் மாமியார்-போற்றிவைத்த

காசழியா மல்திரியும் காவிப்பற் காரரைத்தன் 727
வாசல் மிதிக்கவொட்டா மாமியார்-ஆசைகொண்டு

சேயிழையைச் சேர்ந்தவரைத் தேற்றிக் கழுத்தறுக்கும் 728
ஆயிதம்போ லுங்கருநாக் கத்தையார்-மேயஒரு

செம்பிலே தண்ணீரும் சீலைப்பா யுங்கொடுபோய் 729
அம்பலத்தி லேபடுக்கும் அத்தையார்-வெம்புலிபோல்

தாட்டிகரை யும்பிடித்துத் 'தாலதத்திம் மா'என்று 730
ஆட்டிப் பணம்பறிக்கும் அத்தையார்-மோட்டுப்

பொலிப்பாட்டைப் போல புறப்பட்டாள் அன்று 731
பொலிப்பாட்டுப் பாடப் புகுந்தாள்-வலுத்தவர்போல்

"என்னசொன்னுய் பார்ப்பான்நீ இன்னம்ஒரு காற்சொல்லு 732
கன்னத்தி லேஅறைவார்க் காணேனே-சின்னம்

சிறுக்கி உனக்குநன்ருச் சிக்கினு ளோநான் 733
கிறுக்குப் பிடித்த கிழவி-உறுக்கி

அரும்பதவுரை : கண்ணி (723) புல்வாய்-மான். (730) தாலதத்திம்மா-நாட்டியக் குறிப்பு. (731) பொலிப்பாடு (பொலிப்பு ஆடு) முரட்டுக் கடா. பொலிப்பாட்டு-வசைபுராணம். (733) உறுக்கி-அதட்டி.

வசமாக்க வல்லோ வகைசெய்தாய் வைப்பு 734
நிசமாச்சோ குல்லாலி நீயோ-பசிவேளைக்கு
ஏது கொடுத்தாய்நீ இத்தனைகா லந்திரிந்தாய் 735
போதுமினிப் போஎன்றால் போகாயோ-மாதுனக்குநீ
தாய்மாமன் பிள்ளையோ தாலிகட்டித் தந்தேனோ 736
நீமாத் திரமகட்கு நேசமோ-மாமிகிட்டத்
தந்தபணம் சேதமுண்டோ சாண்வயிற்றுப் பிச்சைக்கு 737
வந்தவனும் பெண்ணுக்கு மாப்பிளையோ-சொந்தமாக்
கிட்டக் கிடக்கக் கிடைப்பாளோ தேவடியாள் 738
இட்டொருவ னைச்சேர்வ தெத்தனைநாள்-குட்டுணிஉன்
வாணளை வாங்கிடுவேன் வாயைமூ டுன்வயிறு 739
சாணோ முழமோ சவுங்கலே-நாணமற்ற
மூடாஇ தேது முழக்கம் வெளியிலே. 740
வாடா ஒருகால் மதிகேடா—நாடலாம்''
என்று புடவை இறுக்கினாள் நானவளைத் 741
தின்றுவிடத் தக்க சினமானேன்-''நன்றியற்ற
பாவிநீ கேளாய் பழங்கதைசெந் தீஇடைப்பட்டு 742
ஆவிவிடும் பாம்பைஎடுத் தாதரிக்கத்-தாவி
நளன்கரத்திற் தீண்டியது நன்மைசெய்யக் கர்மம் 743
விளைந்தகதை என்னளவும் மெய்யே-உளம்பதறிப்
பேசலா மோநீ புறம்விடலா மோதுடுக்காய் 744
ஏசலா மோகொடுத்த தில்லையோ-ராசியமேன்
செட்டிகளுக் கெல்லாம் தெரியாதோ நான்கொடுத்த 742
கட்டி வராகன் கணக்குண்டோ-தட்டார்
அறியாரோ ஊரார் அறியாரோ உன்நெஞ்சு 746
அறியாதோ தோஷம் அலவோ-மறுபடிஉன்
கிட்டவைத்த என்முடிப்போ கேளாய் கிழப்பிணமே 747
எட்டுத் தலைமுறைமட் டிங்குண்டே-கெட்டபுத்திக்

அரும்பதவுரை : கண்ணி (738) குட்டுணி-பிறரால் குட்டுப் படுபவன், வாணாள்-வாழ்நாள். (740) சாடலாம்-சண்டையிடலாம். (742) ஆவி விடும்-உயிரைவிடும் (743) என் அளவும் மெய்யே-என் வரையும் உண் மையே (744) புறம் விடலாமோ?-தள்ளலாகுமோ.

கந்தலே!'' என்றேன் ''கவட்டில் நுழையடா 748
சந்தையின்மாங் கொட்டாய் சரசம்போல்-முந்துன்

வளவிற் சிலஉடைமை வைத்துவைத்தேன் என்ருய் 749
களவாணி யப்பயலே கண்ணைக்- கிளறட்டோ

பின்ஆசை வேண்டாம் புறப்பட்டுப் போ''என்ருள் 750
அந்நேரம் ஓர்வடுகன் ஆயுதமும்-கன்னப்

பரிசையும்தன் காலிலே பாப்பாசும் போட்டுப் 751
பெரியபட்டை நாமமும்தன் பின்னே-ஒருவனுமாய்க்

கக்கத்தில் வாளிடுக்கிக் காச்சூமூச் சென்றுவந்தான் 752
பக்கத்தி லேசலுகை பாராட்டி-வெட்கமறந்து

ஆடாத கூத்தெல்லாம் ஆடியே அம்பலத்தில் 753
வாடாஎன் றென்னை வறட்டுத்தோய்ப்-பாடி

மடிய்யைப் பிடித்தாள் மயிரைப் பிடித்தேன் 754
தொடையிலடி பட்டதவள் தோற்பை-மடிநழுவித்

தொங்கியகை வாளமென்று தூக்கிச் சுருட்டியெடுத்து 755
அங்கையிஞற் கக்கத் தடக்கினேன்-மங்கைஎன்னைத்

தள்ளிஞள் அஞ்சாறு தாக்கினேன் பொக்கைவாய்க் 756
குள்ளி பிடித்தாள் குடுமியை-உள்ளூரார்

இவ்வாறு எங்கள் போராட்டத்தைக் கண்டு ஊரார் கூடிவிட்டனர். சண்டையிட்ட எங்களைக் கூடியிருந்த ஊரார் விலக்கி விட்டனர். ''குய்யோ முறையோ!'' வென்று கூப்பாடு போட்டுக்கொண்டு கிழவி பஞ்சாயத்தாரிடம் ஓடிஞள். நானும் சென்றேன். தாடகையைப்போல் சென்ற கிழவி புதுமண்டபத்தில் கோயில் தளத்திலுள்ள பஞ்சாயத்தார் களிடம் முறையிட்டு அவர்களைக் கூட்டம்போட்டு விசாரணைசெய்யும் படியாக வாய்விட்டழுதாள்.

சபையும் கூடிற்று. பஞ்சாயத்தார்முன் தன்மகளையும் தன்பக்கத்தில் நிறுத்தி வைத்துக் கொண்டு சபையோருக்கு கூழைக் கும்பிடு போட்டு விட்டு பின் வருமாறு கூறிஞள்:

''ஐயா! பழிக்குஅஞ்சும்:தேவேந்திரப்பட்டரே! காமாக்ஷிப்பட்டரே! நரசிங்கையரே! நாராயண தீக்ஷிதரே! :செவந்திலிங்க அய்யரே!

அரும்பதவுரை: கன்னி (748) சரசம்போல்-உள்ளாச விளையாட்டுப் போல். (749) வளவு-வீடு. கண்ணைக் கிளறட்டோ-கண்ணைத் தோண்டி எடுத்து விடவா. (750) வடுகன்-தெலுங்கன் (751) பாப்பாசு-செருப்பு (752) காச்சு மூச்சு-பேச்சொலி. (753) அம்பலம்-சபை. (754) கைவாளம்-வெற்றிலைப் பை.

எங்கள் சொக்கலிங்கய்யரே! ஆனந்த சாஸ்திரியாரே! ஐயா, கோவில் ஸ்தானிகரே! ஊருக்குள் நியாய மென்பதே இல்லையா? என் அருமை மகளை ஒரு பாப்பாரப் பேய் பிடித்து ஆட்டுகிறதே! ஐயா, நீங்களே சொல்லுங்கள்; ஐந்தாறு மாதமாக என்மகள் கோயிலுக்கு வந்து ஆடவோ பாடவோ செய்தாளா? ஏன் பாடவில்லை? ஏன் ஆடவில்லை? சொல்லுகிறேன் கேளுங்களய்யா!

"ஒருநாள் இந்தப் பஞ்சமா பாவியானபார்ப்பான் பணங்கொடுத்து என்மகளுடன் கூடியிருந்தான். விடிந்தவுடன் போய்விடுவான் என்றிருந்தேன். ஆனால் என்னமருந்திட்டானோ? என்ன வகைவசியம் பண்ணினானோ? மதனநூல் பாடமானவனோ என்னவோ? என் பெண்ணைத் தனக்கு வைப்பு' என்றான். வட்டிலில் இட்ட கஞ்சிக்கு உப்பென்றுகூடக் கேளாதபடி அவன் நினைவாகவே என்மகளை இருக்கும் படி மாயம் செய்து மயக்கிவிட்டான். கைப்பிடித்த மனைவியைப்போல அவளிடம் கூடிக் குலவினான். எந்த மற்ற ஆண்களைக் கண்டாலும் தலைநிமிர்ந்து நோக்காமலும் பேசாமலும் இருக்கும்படி என்மகளைவசியம் செய்து கொண்டான். சொக்குப் பொடியிட்டு எனக்கு வாய்ப்பூட்டும் போட்டுவிட்டான். ஏதேதோ மந்திரக் கோடுகளைச் சுழித்து எங்கள் பொருளையெல்லாம் பறித்துக்கொண்டான். எனக்கு பட்டி நிறைய மாடு கள் தருவதாகவும், 'தொம்பை தொம்பை'யாகச் சம்பா நெல்கொண்டு வந்து கொட்டுவதாகவும், இன்னும் என்னவெல்லாமோ ஆசை வார்த்தை காட்டினான். ஆனால் அப்படி ஏதாவது செய்தானா? எங்களைச் சோற்றுக்குத்தான் தூங்கவைத்தான்! ஏங்கவைத்தான்! இன்று அம்பலமும் ஏறவைத்து விட்டான்!

"வெறும் பயலான இவன் என் வீட்டிற்கு வந்தநாள் முதலாக எதைக் கொடுத்தான்? ஒன்றுமில்லை! ஆனால் இவனோ குங்குமச் சம்பச அரிசியென்றும், பொங்கலுக்கு பாசிப் பருப்பென்றும், பாலென்றும், நெய்யென்றும், தோசைக்குஉளுந்தென்றும், கட்டவேட்டியென்றும், பூசிக் கொள்ள சவ்வாதென்றும், வெற்றிலைப்பாக்கென்றும், ரச பானவர்க்க மென்றும், பகல் இரவாய் படுக்கையிலிருந்தபடியே இவன் கேட்ட வண்ணமாய் இருப்பான். கடன்பட்டவனைப்போல் நானும் படைத்துக் கொண்டே இருந்தேன்.

"என்மகளின் காது நகைமுதல், தாலிபபொட்டுவரை இவனுக்கே கொடுத்துஎங்கள்உடைமை முழுவதும்தோற்றோம். மோகனமந்திரத்தை நன்றாய்க் கற்ற இப்பட்டிமகன், காமசாஸ்திரத்தையும் கரைகண்டவனாய் இருக்கிறான்! மாகரிகப் பொட்டறிவானாம்; தண்டுப் பூச்சறிவானாம்; போகக் கட்டறிவானாம்! ஒருநாள் இவனில்லாத சமயம் பார்த்து இவன் அறையினுள் சென்று இவனது பை ஒன்றை சோதித்தேன். அதில் சிறு மந்தரம்போலும் நரிக் கொம்பும், விபூதி முடிச்சும, வசியப்பொடியு மாக சில பொருள்கள் வைத்திருக்கக் கண்டேன். எதற்காக இதை யெல்லாம் வைத்திருந்தான் என்பது அப்போதுதான் எனக்கு விளங் கியது.

"அவனது திருட்டுப் புரட்டையெல்லாம் நான் உணர்ந்து கொண்டேன். அதையெல்லாம் இங்கு அவன் இப்போதுகொண்டு வந்திருக்க மாட்டான். தன் குட்டு அம்பலத்தில் வெளிப்பட்டு விடுமென்று இவனுக்குத் தெரியாதா என்ன!

"என் மகள் விட்டுக்கு விலக்கானால், தானே அவளுக்கு நீராட்ட வேண்டும் என்பான். அல்லும் பகலும் அடைத்த கதவைத் திறக்க மாட்டான்! இவைகளெல்லாம் மனிதத் தன்மையாகுமா? கொஞ்ச நேரங்கூட என் மகளை வெளியேற விடமாட்டான். என் மானமெல்லாந் தான் போயிற்றே, இனி நான் வெளிப்படையாகச் சொல்வதால் குற்றமென்ன? இரவிலும்பகலிலும் பத்துதடவைக்குக் குறையாமல் கூடுவான். இந்தப் பாவிப் பார்ப்பான், முற்பிறப்பில் ஊர்க் குருவியாக இருந்தானோ என்னவோ? உத்தமியான என் பெண்ணால், எவராலும் முடியாத காரியத்தை எத்தனை நாள்தான் தாங்குவாள். நூறு வயதுவரை வாழ வேண்டிய என்மகளுக்கு இப்போது இவன் தீராத நோயைக் கொடுத்து விட்டான். சொர்ணம் கொடுப்பேனென்று இந்தப் பாவி மகன் வாயால் கூறியதைத் தவிர என்னத்தைக் கொடுத்தான்? ஒன்றுமில்லை! ஆனால் அதற்குப் பதில் என் மகளுக்கு மோகம் கொடுத்தான்; ரோகம் கொடுத்தான்; அவளை மெலியவைத்தான்!

"இவனிட்ட மருந்தால் என் மகள் குரங்கானாள்; உடலெல்லாம் சிரங்கானாள்; குத்திருமல் கொண்டாள். யார் மருந்து கொடுப்பார்கள்? யார் இனி இவளை நாடி வருவர்? பாவி, இவன் என் மகளைக் கெடுத்து விட்டானே! இந்த வயதில் என் மகளை வைத்து அதன் மூலம் பொருள் குவித்திருக்க வேண்டிய வீட்டை, போக்கற்ற இவன் தங்கும் விடுதியாக்கி விட்டானே! வீட்டிற்கு வரும் ஆடவர்கள் இவன் குடுமித் தலையைக் கண்டு ஓடியே போய்விடுகின்றனர்!

"தினம் தவறாது படுக்கைக்கு நூறுபொன் கொடுத்துவந்த முத்திரைப்பண்டாரமோகோபங்கொண்டு வெறுப்பானான். மாலைகட்டும் கன்னியப்பனோ முற்றிலும் வெறுப்படைந்தான். இந்தச் சிறுக்கி மேல் ஆசை வைத்திருந்த வாத்தியாரய்யர் கண்டபடி பேசிக் கோபித்துக் கொண்டு சென்றவர் இப்போது பகைவராகி விட்டார் காசு பணத்தை மாரியெனச் சொரிந்த மாரியப்பனும் சண்டையிட்டு விரி வளைவிற்குப் போய்விட்டான். இனி அவன் திரும்பி வரவா போகிறான்? பொன்னுடை பூட்டிவிட்ட பொன்னப்பன் அந்தியிலும், சந்தியிலும் சாடைகள் பல செய்து பார்த்தான்; பலிக்கவில்லை; சலிப்படைந்தான். இப்போது நாங்கள் இருக்கும் திசையின் பக்கமே திரும்புவதில்லை!

"என்றைக்குமே இவனிடம் ஏதுவும் கேட்டதில்லை; இன்றைக்கு என் மகள் உடுத்திக்கொள்ள ஒரு சேலை வாங்கித் தரச் சொன்னாள். அவ்வளவுதான், சண்டைபிடிக்க ஆரம்பித்து விட்டான். வாயில்வந்தபடியெல்லாம் திட்டினான். என் மகளின் காதைப் பிடித்திழுத்து கையால் அடித்தான். விலக்க வந்தவர்களையெல்லாம் முழங்கையால் இடித்தான்.

என்னையும் இடுப்பொடிய உதைத்தான். நான் மூர்ச்சையுற்று விழுந்து விட்டேன். சற்றைக்கெல்லாம் மூர்ச்சை தெளிந்து எழுந்தேன். எல்லோரும் சாட்சி, இதையெல்லாம் ஏன் செய்தானென்று அவனையே கேட்டுப் பாருங்கள். தன் குற்றத்தை ஒப்புக் கொள்ளமாட்டான். 'இதெல்லாம் தாய்க் கிழவியின் சூழ்ச்சி!' என்றுதான் சொல்வான். அது மட்டுமா சொல்வான். வாரிக்கொடுத்து நஷ்டப்பட்டேன். கொடுத்த பொருளுக்குக் கணக்கேயில்லை!' என்று கூட வாய் கூசாமல் சொல்வான்.

"இந்த பஞ்சப் பார்ப்பானா மனதாரப் பொருள் கொடுப்பான்? வளர்த்த கடா மார்பிலே பாய்ந்ததைப் போல எங்களிடமிருந்து இவன் பணத்தைப் பறித்தானே தவிர, இவன் ஒரு செம்புச் சல்லியேனும் கொடுத்ததில்லை. தாயும் மகளுமாக நாங்கள் இருவரும் தாமரையிலைத் தண்ணீராய்த் தத்தளிக்கிறோம்.

"ஐயா பெரியோர்களே! பெண் என்றால் பேயும் இரங்கும் என்பார்கள். எங்கள் நிலைகண்டு நியாயம்கூறி இவனிடமிருந்து எங்களுக்குக் கிடைக்க வேண்டிய பொருளை வாங்கிக் கொடுத்து இவனையும் தகுந்தபடி தண்டியுங்கள்" என்று கோரினாள் அந்தத் தாய்க்கிழவி.

கூடி விலக்கிவிட்டார் கூகூஎன் றம்பலத்தில் 757
ஓடினாள் நானும் உடன்சென்றேன்-தாடகைபோற்

போயப் பொழுதே புதுமண் டபத்திலந்தக் 758
கோயிற் தலத்தாரைக் கூட்டமிட்டாள்-வாய்விட்டு

அழுதாள் மகளை அருகே நிறுத்தித் 759
தொழுதாள் மடைமாறி சொல்வாள்-பழியஞ்சிப்

பட்டரே! தேவேந்த்ர பட்டரே! மீனாட்சி 760
பட்டரே! காமாட்சி பட்டரே!-இட்டநர

சிங்கையரே! நாரணைய தீட்சதரே! செவ்வந்தி 761
லிங்கையரே! எங்கள்சொக்க லிங்கையரே! சங்கராச்

சாரியா ரே!அனந்த சாஸ்திரியா :ரே!கைவிஸ் 762
தாரியா ரே!கோவில் ஸ்தானிகரே!-ஊருக்குள்

ஞாயம் இலையோ நடுவிலையோ பார்ப்பாரப் 763
பேய்பிடித்த தேனது பெண்பிள்ளையைக்-கோயிலுக்குள்

அஞ்சாறு மாதமாய் ஆடிப்பா டித்திரியச் 764
சஞ்சாரம் கண்டீரோ சர்ப்பனையாய்-பஞ்சமா

அரும்பதவுரை: கண்ணி (757) அம்பலம்-வழக்கு உரைக்கும் மன்றம். (759) மடைமாறி-புரட்டுக்காரி. (763) நடுவிலையோ-பாரபட்சமற்ற தன்மை இல்லையோ. (764) சஞ்சாரம்-போக்கு வரத்து. சர்ப்பனை-வஞ்சம்,

பாவிஇந்தப் பார்ப்பான் பணயம் கொடுத்தொருநாள் 765
மேவி இருந்தான் விடிந்தவுடன்-போவானென்று
எண்ணினேன் என்னமருந் திட்டானோ என்னவகை 766
பண்ணினு னோமதநூல் பாடமோ-பெண்அணங்கை
வைப்பென்று பேரிட்டான் வட்டிலிற்கஞ் சிக்குமகள் 767
உப்பென்று கேளாதிருக்க உபாயமிட்டான்-கைப்பிடித்துக்
கொண்டானைப் போலக் குடிலமிட்டான் ஆண்பூண்டு 768
கண்டாலும் பேசாமற் கட்டிவிட்டான்-ஒண்தொடிக்கு
வாடைப் பொடியிட்டான் வாய்ப்பூட் டெனக்குமிட்டான் 769
கோடைச் சுழித்துவைத்துக் கொள்ளையிட்டான்-மாடாயோர்
பட்டிவைக்கி றேன்பலதொம் பைக்கூட்டாற் சம்பாநெல் 770
கட்டிவைக்கி றேன்பொற் கடாரங்கள்-எட்டேழு
தூங்கவைக்கி றேன்என்ருன் சோற்றுக்குத் தூங்கவைத்தான் 771
ஏங்கவைத்தான் அம்பலத்தில் ஏற்றிவைத்தான்-வீங்கலிவன்
இங்குவந்த நாள்முதலா ஏதுகொடுத் தான்தனக்குக் 772
குங்குமச்சம் பாஅரிசி கொள்ளஎன்றும்-பொங்கலுக்குப்
பாசிப் பயரென்றும் பாலென்றும் நெய்என்றும் 773
தோசைக் குளுந்தென்றும் சோமனென்றும் பூசுதற்கு
ஆனசவ்வா தென்றும் அலகுபாக் கென்றும்ரச 774
பானவர்க்கம் என்றும் பகலிரவாய்-ஏனோ
படுக்கைக்கு வாழைப் பழமென்றும் கேட்பான் 775
கொடுக்கும் கடன்போற் கொடுத்தேன்-மடக்கொடியாள்
பொட்டொழியக் காதிற் பொகட்டவொரு தோடொழிய 776
ஒட்டொழியத் தோற்றும் உடைமையெலாம்-பட்டிமகன்
மோகினி மந்த்ரம் முழுதுமறி வான்மதனன் 777
ஆகமங்கள் எல்லாம் அவதானம்-நாகரிகப்
பொட்டறிவா னும்தண்டுப் பூச்சறிவா னும்போகக் 778
கட்டறிவா னும்ஒருநாள் கைவாளத்-தட்டறையில்

அரும்பதவுரை : கண்ணி (765) பணயம்-பணம். (766) மதநூல்-காமக் கலை. (768) கொண்டான்-திருமணம் புரிந்தவன். குடிலம்-வஞ்சனை (771) தூங்க-தொங்க: வீங்கல்-தடியன். (174) அலகு பாக்கு-இலைப் பாக்கு. (776) பொகட்ட-போட்ட. ஒட்டொழிய-அடியோடு அழிந்து போக. (777) மதனன் ஆகமங்கள்-காமலீலை நூல்கள்.

சோதித்தேன் சின்னமயிர்த் தோலும்நரிக் கொம்பும்வி 779
பூதிக் கிழியும் பொடியுமதில்-ஏதுக்கு.

உருட்டிவைத்தா னோசில உண்டையும்நான் கண்டேன் 780
திருட்டுப் புரட்டனென்று தேர்ந்தேன்-அரைக்காசுத்

தொண்டனிவன் அம்பலத்திற் சோதிப்பார் என்றிங்கே 781
கொண்டு வருவானோ கொண்டுவரான்-வண்டனிவன்

மானேர் விழியணங்கு மாதவிடாய் ஆனக்கால் 782
தானே விடவருவான் தண்ணீரை-மானுடமோ

அல்லும் பகலும் அடைத்தகத வைத்திறவான் 783
மெல்லியலைச் சற்றும் வெளியில்விடான்-சொல்லுவதென்

பத்து விசையாம் பகலுக்கும் ராத்திரிக்கும் 784
பத்து விசைக்கும்என்றன் பாவைபோல்-உத்தரிக்க

ஆர்க்கு முடியுமிவன் ஆனாலும் முன்பிறப்பில் 785
ஊர்க்குருவி யோபெண் உடம்பிலே-தீர்க்கவொண்ணா

நோவொதுங்க விட்டானே நூறுவய துப்பயிர்க்குப் 786
பூவொதுங்க விட்டான் பொறுபொறென்று-பாவிமகன்

சொன்னங் கொடுப்பேனென்று சொன்னது உண்டல்லாமல்
என்ன கொடுத்தான் இதுவரைக்கும்-என்மகட்கு

மோகங் கொடுத்தான் முளையரையாப் புக்கொடுத்தான் 788
மேகங் கொடுத்தான் மெலியவிட்டான்-ஆகம்

சிரங்காணாள் தம்பிஇட்ட தீமருந்தால் மாது 789
குரங்காணாள் குத்திருமல் கொண்டாள்-மருந்து

கொடுப்பவரார் புண்ணுக்குக் கூசாமற் கிட்டப் 790
படுப்பவரார் என்மகளைப் பாவி-கெடுத்தானே

தேட்டுவந்து சேரும் சிறுவயதிற் போக்கறுவான் 791
வீட்டிற் புகுந்தான் விடுதிபோல்-நாட்டமாய்க்

கூடவந்தங் கிந்தக் குடுமித் தலையைக்கண்டு 792
ஆடவர்கள் எல்லாம் அகன்றுவிட்டார்-தேடாமல்

அரும்பதவுரை: கண்ணி. (779) கிழி-பை அல்லது முடிச்சு. (782) மானுடமோ-மனிதன் தானோ. (783) அல்-இரவு. (784) பத்துவிசை-பத்துமுறை: உத்தரிக்க-ஈடு கொடுக்க. (786) நோவு ஒதுங்க-பிணி குடியிருக்க, (787) சொன்னம்-பொன். (788) ஆகம்-தேகம். (791) தேட்டு-ஊதியன். போக்கறுவான்-போக இடமற்றவன்

நித்திரைக்குப் பொன்நூறு நித்தம் கொடுத்துவந்த 793
முத்திரைப்பண் டாரமோ மோடிவைத்து-மெத்தக்
கறுப்பானுன் ; மாலேகட்டிக் கன்னியப்பன் முற்றும் 794
வெறுப்பானுன் ; மெய்காவல் வேலன்-சிறுக்கிமேல்
ஆசைவைத்த வாத்தியார் ஐயர்முறை தப்பிதமாப் 795
பாஷைவைத்துப் போனுர் பகையானுர்-காசுபணம்
மாரி எனச்சொரிந்த மாரியப்பன் சண்டைஇட்டு 796
வீரிவள விற்போனுன் மீள்வானே-தேரேறப்
பொன்னுடைமை பூட்டிவிட்ட பொன்னப்பன் அந்திசந்தி 797
சன்னேயிட்டுப் பார்த்தான் சலித்துவிட்டான்-பின்னே
வரத்துமில்லேத் தானும் வழங்கானே்ர் சேலே 798
தரச்சொன்னுள் இன்றைக்குச் சண்டைக்கு-ஒருப்பட்டான்
வைதான் எனேயும் மயிர்பிடித்தான் செய்யாதது 799
செய்தான் மகளேச் செவியிலே-கையால்
அடித்தான் விலக்கு மவரைமுழங் கையால் 800
இடித்தான் கரத்திஞல் என்னே-இடுப்பொடியப்
போட்டானங் கேமூர்ச்சை போனேன் எழுந்திருந்தேன் 801
கேட்டார் சிரிக்கவல்லோ கீர்த்திவைத்தான்-ருட்டிசெய்தது
ஏதென்று நீர்கேட்டால் என்னசொல்வான் தாய்க்கிழவி 802
சூதென்பான் வாரிச் சொரிந்தபொருட்-சேதம்
கணக்குண்டோ என்பான் களரியெச்ச இந்தத் 803
துணுக்குண்ணி யோகொடுப்பான் சொர்ணம்-பணக்கவளம்
மாந்தரிட்டுக் கட்டி வளர்த்தகடாக் கையிலே 804
பாய்ந்தகதை மெய்யாய்ப் பலித்ததே-ஈந்ததில்லே
தாயும் மகளும்ஒரு தாமரையில் நீராஞேம் 805
பேயும் இரங்குமே பெண்என்ருல்-தூயவரே
கண்டநடுப் பேசிக் கணக்குப்பார்த் துப்பொருளேத் 806
தெண்டித்து வாங்கிஇந்தச் சேமனேநீர் -கண்டிப்பா

அரும்பதவுரை: கன்னி (795) பாஷை வைத்து-வசைபாடிவிட்டு. (796) மாரி-மழை, வளவு-வீடு. (797) சன்னே-ஜாடை. (798) ஒருப்பட்டான்-தலேப்பட்டான். (801) மூர்ச்சை போனுன்-மயக்கமடைந்தான்; ருட்டி-அக்கிரமம். (803) களரி-மன்றம். துணுக்குண்ணி-கையில் கிடைத்ததை யெல்லாம் பொறுக்கி உண்பவன். (806) கண்டநடு-உணர்ந்த நியாயம். சேமன்-அயோக்கியன்.

மெட்டுக் கடக்க வெருட்டிடுமென் ருள்என்ற 807
சட்டித் தலைப்பேயைத் தானமர்த்திப்-பட்டன்மார்

நில்என்ருர் உன்வழக்கை நிர்ப்பாக்கி யாநீயும் 808
சொல்என்ருர் சொல்லத் தொடங்கினேன்-கல்லும்

சபையினர் அவளைக் கையமர்த்தி என்னை நோக்கி, "உம் கக்ஷியைக் கூறும்" என்றனர்.

நானும் நடந்ததையெல்லாம் எடுத்துச் சொன்னேன்: "பெரியோர்களே! கல்லும் கரையும்படியாக இம் மாயக்கள்ளி இப்போது உங்கள் முன் நடக்காததையெல்லாம் நடந்ததைப்போல் கூறினுள்-அவள் வாக்குக்கு எதிர்வாக்கும் உண்டோ என்னும்படியாகக் கூறினுள். என் வழக்கை உங்கள் முன் நடந்தபடியே கூறுகிறேன். ஆனுல் நீங்கள் நம்பினுலும் சரி, நம்பாவிட்டாலும் சரி. ஏன் இப்படிக் கூறுகிறேன்என்பதற்கு ஒரு சிறுசம்பவம்ஒன்றைக்கூறுகிறேன் கேளுங்கள்" என்று முறையிட்டு முன்பு நடந்த ஒரு சம்பவத்தை அவர்களுக்குக் கூறினேன்.

பழையனூர் நீலி

நெடு நாளைக்கு முன் செட்டி ஒருவன் நடுக்காட்டில் சென்று கொண்டிருந்தான். அப்போது அவனை நீலி என்ற பேய் ஒன்று தொடர்ந்து வந்தது. காட்டுவழியில் பிரயாணம் செய்யவேண்டியதாயிருந்ததால், அவன் தன் பாதுகாப்பிற்காக மந்திரத் தாயத்தொன்றை வைத்திருந்தான். அதனுல் அப் பேய் அவனை ஒன்றும் செய்ய முடியவில்லை. எனவே அவனைச் சூழ்ச்சியால் வெல்ல வேண்டுமென்று அப் பேய் தீர்மானித்து, அவனுடைய மனைவிபோல் உருவெடுத்து அவனைத் தொடர்ந்தது. இதைக்கண்டு பயந்த செட்டி விரைந்து நடந்து பழைய பழையனூர்அடைந்தான். அங்கு கூடியிருந்தஅம்பலத்து வேளாளர்முன் சென்று, "ஆலங்காட்டில் சஞ்சரிக்கும் பேய் ஒன்று என் மனைவியென்று சொல்லிக் கொண்டு என்னைப் பின்தொடர்ந்து வருகிறது. அதனிடமிருந்து என்னைக் காப்பாற்ற வேண்டும்!" என்று முறை இட்டான்.

அந்த நீலி மாயம் செய்து கையில் ஒரு குழந்தையையும் ஏந்திக் கொண்டு அச்சபையின் முன் வந்து நின்று கண்கலங்கி, "ஐயா நல்லவர்களே! இந்தமாதிரி அநியாயத்தை எங்கேனும் கண்டதுண்டா? கேளுங்கள் என் குறையை: என் கணவரானஇவர், என்னை நடுக்காட்டில் விட்டு விட்டு ஓடமுனைந்தார். நான் அவரை விடாது தொடர்ந்து வந்து கெஞ்சிக் கதறினேன்.என்னை வாளால் வெட்ட வந்தார்.என்னைப் பேயென்றும் பிசாசென்றும் திட்டினுர். என் தலை விதியை என்ன

வென்று சொல்வேன், இக் குழந்தையை-அவருக்குப் பிறந்த என் செல்வத்தை --தன்னுடையதில்லை என்றெல்லாம் திட்டிப் புரட்டுப் பேசுகிறார். எனக்கு உற்றார்பெற்றோர் எவருமில்லை. இவரே எனக்குக் கதி.

"இங்கு கூடியிருக்கும் தூயவர்களான உங்கள் முன்பாக, இதோ, இக் குழந்தையைக் கீழே இறக்கி விடுகிறேன். அது அன்புடன் தன் தந்தையை நோக்கித் தாவிச் செல்கிறதா இல்லையா என்பதை நீங்களே உங்கள் கண்களால் பாருங்கள்" என்று சொல்லி அக் குழந்தையை, சபையின் முன் விட்டாள். உடனே அக் குழந்தை தவழ்ந்து சென்று அச் செட்டியின் மடியில் தாவி விழுந்தது.

செட்டி திடுக்கிட்டான். "இவள் என் மனைவி இல்லை ஐயா! சத்தியமாக, என் கண்ணுணை இது பேய்தான்!" என்று எவ்வளவோ கதறிப் பார்த்தான். சபையினர் அவனுக்குச் செவி சாய்க்கவில்லை; அவன் வார்த்தைகளை நம்பவும் இல்லை.

அவன் அணிந்திருந்த மந்திரத் தாயத்தைநீலியின் வேண்டுகோளுக் கிணங்கி பஞ்சாயத்தார் வாங்கிவைத்துக் கொண்டு, "கணவன் மனைவி சண்டையைப் பெரிதுபடுத்தக்கூடாது. நீங்கள் இருவரும் ஒற்றுமை யாயிருந்து சேர்ந்து வாழுங்கள். இப்பொழுது நடுச்சாமம் ஆகிவிட்ட படியால் இன்றிரவு இங்கேயே தங்கியிருந்து விட்டு காலையில் செல்லுங் கள்" என வற்புறுத்தி, அவர்கள் இருவருக்கும் ஒரு தனி வீட்டை ஒதுக்கி, அதற்குள் அவர்களைப் படுக்க வைத்து, செட்டி ஓடி விடாமல் இருக்க பஞ்சாயத்தார் வெளிக் கதவையும் பூட்டிவிட்டுச் சென்றனர்.

அவ்வளவுதான்; அடுத்தக் கணத்தில் அந்த நீலி தன் சுய ரூபங் கொண்டு செட்டியாரின் இடுப்பை ஒடித்தது! கழுத்தைக் கடித்தது! ரத்தத்தை உறிஞ்சியது! இறுதியில் அவன் நெஞ்சைப் பிளந்து குடலைப் பிடுங்கி மாலையாக கழுத்திலணிந்து சென்றுவிட்டது!

செட்டிக்கு ஏற்பட்ட கதியை அடுத்த நாள்தான் நியாயம் உரைத்த வர்கள் கண்கூடாகக் கண்டனர்.

* * *

இந்தச் சம்பவத்தை உதாரணத்துக்கு சொல்லுகிறேன் "ஆகை யால், கட்டுக் கதைகளைக் கூறினும் பெண்கள் வார்த்தைக்கு ஒருதனி மதிப்பு உண்டு. அவர்கள் வார்த்தைகளை நம்புவது நீங்கள் சகஜமே. எனவே, பெரியோர்களாகிய நீங்கள் பேயினும் கொடியவளாகிய இவள் வார்த்தையில் நம்பிக்கை வைக்காதீர்கள். குதிரை கீழே தள்ளியது மல்லாமல் குழியும் பறித்தது போலாயிற்று என் கதி. பெரியோர்களே! இவள்மீது நான் ஆசைகொண்டபோது இவள் இவ்வாறெல்லாம்மோசம் செய்வாள்என்று எண்ணவேயில்லை. இவளின் தாயான இக்கூனி எனக்கு வசிய மருந்திட்டாள். அன்று முதல் என்மேனி ஒடுங்கியது. என்னையே மறந்து விட்டேன். அவள் ஆட்டிவைத்தபடி யெல்லாம் ஆடினேன்.

பொன்னும், பொருளும், பூந்துகிலும், ஆபரணமுமாக நான் கொடுத்த பொருள்களுக்குக் கணக்கே கிடையாது. அப்படியிருந்தும் எனக்கு மட்டுமா வைப்பாக இருந்தாள்? அவளிடம் வருவோர் போவோர் ஆயிரம் பேர். என்னிடமிருந்ததையெல்லாம் தந்திரமாகக் கறந்து கொண்டு இப்போது என்னை ஒட்டிவிட, இல்லாததையும் பொல்லாததையும் கூறி இங்கே முறையிடுகிருள். 'நீ என்ன கொடுத்து விட்டாய்?' என்று கூசாமல் மடி பிடித்திழுத்து அவமதித்தாள் . என் மார்புப் பூணூலையும் அறுத்தாள். தலையில் குட்டினுள். என் மானம் மரியாதையெல்லாம் போச்சுதய்யா! அதோடு என்னை விட்டாளா? முரடன் ஒருவனைத் தூண்டிவிட்டு அடிக்கச் சொன்னுள். வேருெருவனுயிருந்தால் உயிரோடு என்னை விட்டிருக்க மாட்டான். அடிக்க வந்த அந்தப் புண்ணியவான் ஏதோ ஈவு, இரக்கம் காட்டி, என்னை உயிரோடு விட்டு விட்டான்! இவ்வாறு கிழவி என்னை அலைக்கழிப்பதையெல்லாம் அவள் மகளும் பார்த்துக் கொண்டிருந்தாள். ஏனென்று ஒரு வார்த்தை கூட அவள் கேட்கவில்லை! எனக்காகப் பரிந்து வரவுமில்லை! சண்டை நடந்து கொண்டிருந்த சமயத்தில் நின்று பார்த்துக் கொண்டிருந்த மதனுபிஷேகத்தை நான் பரிதாபத்துடன் பார்த்து, "கண்ணே! என்னை நீ நேசிக்கவில்லையா? இக் கொடுமைகளைக் காண உன் மனம் எப்படியடி பொறுக்கிறது?" என்றேன். சடாரென்று என் தலையில் ஓங்கி அடித்தாள். பொழுது சாயும் முன்பே அங்கு வந்தான் சந்தி வீரப்பன். அவனுக்கெதிரே இச்சதிகாரி முந்தி போட்டுத் தாண்டி 'அவன் மீது தான் முக்காலும் தனக்கு ஆசை யென்று ஆணையிட்டாள்!

"ஐயா, கற்றவர்களே! நான் கொழு கொழுவென எண்ணெயிட்ட மெழுகுப் பிள்ளையார்போல் நல்ல திடகாத்திரத்துடன் இருந்தேன். இந்தக் கூனியிட்ட மருந்தினுலும், குமரி கொடுத்த நோயினுலும் ஒட்டி உலர்ந்த உடலானேன். நீங்களே என்னைப் பார்த்துத் தெரிந்து கொள்ளுங்கள். நான் கொடுத்த கணக்கற்ற பொன்னும் பொருளும் போனல் போகட்டும். வேண்டும்போது வாங்கிக்கொள்வதாக அவளிடம் ஒப்படைத்து வைத்திருந்த பொன் முடிப்பையும் மாணிக்கக்கல் ஒன்றையும் கைப்பிடி முத்துக்களையும் இவளிடமிருந்து வாங்கிக் கொடுத்து விடுங்கள். அதையும் நான் இழந்தால் எனக்கு வேறெதுவும் தஞ்சம் இல்லை" என்று சபையோர்முன் கண்கலங்கிக் கூறிமுடித்தேன்.

* * *

கரையுமே மாமாயக் கள்ளிசொன்ன வார்த்தைக்கு 808
உரையும் எதிர்வழக்கும் உண்டோ-ஒருநாள்

நடந்தகதை கேளீர் நடுக்காட்டு நீலி 809
தொடர்ந்தாளோர் செட்டிதனைச் சூதாய்-நடந்தவன்கைப்

பத்திரத்தால் தப்பிப் பழையனூர் அம்பலத்தில் 810
மொய்த்திருந்த வேளாளர் முன்சென்ருள்-சத்துருப்போல்

ஆலங்காட் டுப்பேய் அதோவருகு தென்மணையாள் 811
தோல்காட் டிப்பகட்டிக் கொண்டென்ருன்-நீலியெலும்

கள்ளி முலைப்பாலும் கண்ணீரும் கால்கழுவக் 812
கள்ளி யொன்றைப் பிள்ளையாக் கையேந்தி-மெள்ளவந்து

நாட்டிலே கண்டதுண்டோ நல்லோரே! என்னைநடுக் 813
காட்டிலே விட்டார் கணவனுர்-மீட்டுமவர்

கிட்டவந்தார் நான்பயந்து கெஞ்சிவந்தேன் வாளுருவி 814
வெட்டவந்தார் முன்னுள் விதிப்படியோ-முட்டமுட்டப்

பேயென்ருர் என்னை இந்தப் பிள்ளைகள்ளிக் கொப்பென்ருர் 815
தாயென்ருர் இல்லை தமர்இல்லை-தூயவரே!

பீர்விட்ட பால்முலைக்கீழ்ப் பிள்ளையைவிட் டாலதுதான் 816
ஆர்கிட்டப் போம்என் றறியலாம்-பாருமென

விட்டாள் சபையிலது மெள்ளத் தவழ்ந்துமடி 817
தொட்டேறச் செட்டி துணுக்கென்ருன்-ஒட்டாரம்

பண்ணுகிருன் செட்டிஎன்ருர் பார்த்தவரெல் லாமவள்என் 818
கண்ணுனை நீலிஎன்ருன் கால்நடுங்கி-பெண்ணலது

சத்துருப்பேய் ஆகிச் சதிசெய்தால் நாங்களுனக்கு 819
இத்தனைபே ரும்பழிகாண் என்றுரைத்துப்-பத்திரத்தை

வாங்கி வணிகனையும் மார்க்கமிட்ட நீலியையும் 820
பாங்கிலொரு வீட்டில் படுக்கவைத்து-தூங்குமெனப்

பூட்டிக் கதவடைத்துப் போயினுர் பேய்மதியோர் 821
வாட்டமிட்ட நீலிபழி வாச்சதென்றே-ஊட்டி

பிடித்தாள் வணிகன் பிடரிதனைக் கையால் 822
ஒடித்தாள் கடித்தாள் உதிரம்-குடித்தாள்பின்

நீண்டாள் பிளந்தெறிந்தாள் நெஞ்சிற் குடர்மாலை 823
பூண்டாள் எழுந்தாள் பொருள்வணிகன்-மாண்டதற்பின்

கண்டார் வழக்கையெந்தக் கற்பனையாற் கற்பனைகள் 824
விண்டாலும் பெண்வார்த்தை மெய்யேகாண-அண்டினர்க்கூறு

அரும்பதவுரை கண்ணி (811) கோலம்-வேடம் (815) கள்ளி-கள்ளிச் செடி. தமர்-சுற்றம் (820) மார்க்கம்-வழக்கு. (821) ஊட்டி-குரல்வளை.

ஆக்கி நடுக்காட்டில் அடித்துப் பறித்தூரிற் 825
சூக்குரலும் இட்டாற்பின் கூறுவதென்-வாய்க்கலினம்
பூண்ட பரிஎடுத்துப் போட்டதுமல் லாதுகுழி 826
தொண்டுதென்ருல் நானினிமேற் சொல்வானேன்-ஆண்டமறை
அந்தணரே நானிவள்மேல் ஆசைகொண்டேன் மோசமதாய்827
இந்த விதிவருமென் றெண்ணுமல்-முந்தமுந்தக்
கூனி மருந்தைஇட்டுக் கூறுகொண்டாள் அன்றுமுதல் 828
மேனி ஒடுங்கினேன் மெய்மறந்தேன்-நானிவட்கு
முன்னுட் கடனை முதலிடுவார் போற்கொடுத்த 829
பொன்னேபொற் பூந்துகிலோ பூஷணமோ-சொன்னசெலவு
அத்தனைக்கும் வீணே அழித்ததெல்லாம் யான்கணக்கிட்டு 830
எத்தனையென் றுங்கட்கு இயம்புவேன்-நித்தநித்தம்
வல்லார் தனத்திசொந்த வைப்பென்று பேரெனையும் 831
அல்லாமல் போக்குவரத் தாயிரம் பேர்-நல்லவள்போல்
உள்ளதெலாம் மெள்ள உபாயமா வாங்கிஎனைத் 832
தள்ளிவிடக் கள்ளி தளமெடுத்தாள்-உள்ளுடையப்
பேசினுள் சும்மா புறப்பட்டுப் போடாஎன்று 833
ஏசினுள் நீகொடுத்த தென்என்ருள்-கூசாமல்
முந்தி மடிபிடித்தாள் முந்தானை யைக்கிழித்தாள் 834
சந்தியிலே பூனூல் தனை அறுத்தாள்-இந்தநரைத்
தாட்டானை வந்தென் தலையிலொரு குட்டுப் 835
போட்டாளென் குட்டெல்லாம் போச்சையா-மோட்டு
வடுகனைஎன் மேல்விடுத்தாள் மற்றொருவ னுனல் 836
விடுவானே புண்ணியவான் விட்டான்-இடுதூருய்
அந்தக் கிழவி அலக்கழிக்கப் பார்த்திருந்த 837
இந்தக் குமரிஏன் என்ருளோ-சந்த்ர
கலைவாள் நுதலணங்கே காதலென்மேல் உண்டோ 838
இலையோ உனக்கென்றேன் எட்டித்-தலைமேற்

அரும்பதவுரை கண்ணி. (825) வாக்கலினம்-வாய்க்குக் கடிவாளம். (829) பூஷணம்-நகை. (832) தளம் எடுத்தாள்-படையெடுத்தாள், உள் உடைய-மனம் ஒடிய. (835) தாட்டனை-கிழட்டுக் குரங்கு. (836) இடுதூறு-அவமானம்.

சளக்கென் றடித்தாள் சதிகாரி வீட்டு 839
விளக்கில் அடித்தாள்பின் வெள்ளி-முளைக்குமுன்னே

முந்திபோட் டுன்மேலே முக்காலும் ஆசைஎன்று 340
சந்திவீ ரப்பன்முன்னே தாண்டினுள்-வந்தொருவன்

முத்தம் கொளுவாய்க்கு முன்னொருவன் தான்கொடுத்த 841
அத்தம் பலங்கொடுப்பார்க் காணையுண்டோ-வித்தகரே !

மேனியிட்டு நல்ல மெருகுபிள்ளை யார்போலே 842
யானிருந்த தீர்க்கம் அறியீரோ ?-கூனிஎனக்கு

இட்டமருந் தாலும் இவள்கொடுத்த புண்ணாலும் . 843
ஒட்டி உலர்ந்த உடலானேன்-மட்டைக்கு

இறுத்ததெல்லாம் போகட்டும் என்பொருள்ஈ தென்று 844
மறித்துமொரு பொன்முடிப்பு வைத்தேன்-நிறுத்தமுழு

மாணிக்கம் ஒன்று மணிமுத் தொருசிறங்கை 845
பேணிவைக்கச் சொல்லிவைத்தேன் பெண்ணிடத்தில்-ஏணியை
வைத்து

ஏறவிட்டு வாங்கிஎனை இக்கோலம் கண்டசுழல் 846
மாறிகிட்ட வாங்கி வழங்குவீர்-வேறெனக்குத்

தஞ்சமில்லை நீங்களே தஞ்சம்என்றேன் அந்நேரம் 847

நான்சொல்லியதைக் கேட்ட அக்கிழவி துள்ளியெழுந்தாள். "வஞ்சகத் திருடன் இவன்! கூத்திச் செலவுக்கே வகையற்ற இவனிடம் கொடுத்து வைக்க பொன் முடிப்பு எங்கிருக்கும்? இவனை மருதங்குடி தெய்வந்தான் கேட்க வேண்டும்! அழகர்கோயில் பதினெட்டாம்படித் தெய்வமே! நீதி இல்லையா? இவன் என்னிடத்தில் எதுவுமே கொடுத்து வைக்கவில்லை. என்னைக் கிடத்தி என் மகள் தாண்டட்டும். என் மகளைக் கிடத்தி நான் அவளைத் தாண்டிச் சத்தியம் செய்கிறேன்! கொடுத்து வைத்ததுப்போல பொருள் கேட்கிருனே, இவனென்ன முற்பிறவியில் என் மகளுக்குப் பிள்ளையாகவா பிறந்திருந்தான்?" என்றெல்லாம் அக் கள்ளி பலவிதமாக ஓலமிட்டாள்.

அதைக்கேட்ட நியாயம் வழங்கும் பெரியோர்கள் நகைத்தனர். என்னை அவர்கள் அழைத்து, "ஐயா, மாதவரே! வேசி உமக்கு மருந்திட்டாளென்று சொல்லுகிறீரே, அதெப்படி உமக்குத் தெரியும்? உமக்குத் தெரியும்படியாகவா வசிய மருந்திட்டிருக்க முடியும்?" என்று கேட்டனர்.

"ஐயா! நேற்று எனக்கு ஆசையூட்டி மயக்கிய இத் தாசி தன் வீட்டில் கூட்டமாகக் கூடி சாராயம் குடித்துக் கும்மாளமிட்டாள். அத் தோழியர்களுக் கெல்லாம் நிறையக் குடிக்கக் கொடுத்தாள். அத்தனை

பேரும் குடித்துவிட்டு ஆட்டம் போட்டனர். நான் தலைவாசலில் மௌனமாக படுத்துக் கிடந்தேன். அப்போது மாடுபோன்ற ஒருவன் வீட்டிற்குள் நுழைந்தான். மதனபிஷேகம் தன் சேடியரை யெல்லாம் தூஷித்து வெளியில் தள்ளினாள். அப்போது திண்ணையில் படுத்திருந்த என்னிடம் குண்டுணி வாய்க்கள்ளி என்ற பெயருடைய ஒரு சேடி வந்து சேர்ந்தாள்.

சாராய வெறி கொண்டிருந்த அவள் என்னிடம் ஒரு மாதிரியாய் நடந்துகொண்டாள். அப்பொழுது அவள் என்னை நோக்கி, 'காட்டு மருந்தும் கடை மருந்தும் கூட்டிக் கலந்து, கிழவியைப்போல் உனக்கு நான் இட்டிருந்தால் என் மீதும் உனக்கு ஆசை விழுந்திருக்கும்' என்றாள். அவள் மதனபிஷேகத்தின் அந்தரங்க தோழியானதால் அவள் மூலமாக மருந்திட்டதை அறிந்து கொண்டேன்'' என்று சொல்லி முடித்தேன்

நான் கூறியதைக் கேட்ட சபையோர்கள் என்னை நோக்கி "அந்தணரே! நீரோ வேதங்களை யெல்லாம் நன்கு கற்றறிந்தவர். தாசியோடு அம்பலத்தில் ஏறுவது உம்போன்றவர்களுக்குத் தகுதியானதல்ல தாசி உம் கைப்பொருளை அபகரித்துக் கொண்டதோடு விட்டாளே; அந்த மட்டும் நீர் பாக்கியசாலிதான். வேதியராயுள்ளவர் வேசியரைக் கண்டால் காதவழி ஒதுங்குவதுதான் முறையாகும். வேத மந்திரங்களை ஓதும் வாயால் வேசியின் வாய் அமுதுப் பருக எப்படித் துணிவு கொண்டீர்? உமக்கு மையல் தீர்த்த கடனுக்கு உம் கைப்பொருளை கொடுத்ததாகக் கருதிக் கொள்வீராக!

"அவளிடம் நீர் கொடுத்து வைத்திருந்த பொன்னையும் மற்ற பொருளையும் திரும்பவும் வாங்கிக் கொடுக்கும்படி சொல்கிறீர். பாம்பின் வாய்க்குள் அகப்பட்ட தவளையும், யானையின் வாயில் அகப்பட்ட கரும்பும், நெருப்பிலிட்ட நெய்யும், வேசியின் கைப்பொருளும் எங்காவது திரும்பக் கிடைத்ததுண்டா? அவைகளெல்லாம் சாத்தியமானால் இத் தாசியிடமிருந்து உங்கள் பொருளையும் வாங்க முடியும். ஆகவே, போனதெல்லாம் மறந்து விட்டு இனி நாங்கள் சொல்லும் புத்திமதிக்கு செவி சாய்ப்பீர்களானால் உம்மால் பொன்னும் பொருளும் சம்பாதிக்க முடியும். ஆகையால் மனத்துயர் அடையாமல் சொந்த ஊரை நோக்கிச் செல்லும்'' என்றனர்.

* * *

தொஞ்சமுலைக் காரி துடிதுடிப்பாய்-வஞ்சத்
திருடனிவன் கூத்திச் செலவுக்கும் போக்கி 848
ஒரு முடிப்பை வைத்ததுவும் உண்டோ-மருதம்
குடியிருக்கு தேஅழகர் கோலில்பதி னெட்டாம் 849
படியிருக்கு தேமுதலைப் பள்ளம்-நடுஞாயம்
சொல்லுதே சிங்கம் பிடாரி துடியால் 850
கொல்லுதே தீர்த்துக் கொடுக்கிறோம்-அல்லஎன்றால்

என்னேக் கிடத்தி எனதுமகள் தாண்டமகள் 851
தன்னேக் கிடத்திநான் தாண்டுகிறேன்-சொன்னதென்ன

தெள்ளிமையோ முற்பிறப்பிற் சீர்கேடன் என்மகட்கு 852
பிள்ளேயோ என்ருள் பெரியோர்முன்-கள்ளிசொல்லேக்

கேட்டு நகைபுரிந்தார் கிட்டஅழைத் தென்னேஅவர் 853
கூட்டத்துக் குள்இருத்திக் கூறுவார்-வாட்டமுற்ற

மாதவரே வேசி மருந்திட்டாள் என்றிர்அச் 854
சேதிஉமக் கெங்கே தெரிந்ததென்ருர்-காதல்தந்த

முத்தனேயாள் நேற்றிரவு மூலேக்குள் வைத்துநிறை 855
குத்திஅரக் குக்குடித்துக் கூட்டமிட்டிங்-அத்தைமுதல்

வெள்ளாட் டிகளும் குடித்து வெறிபிடித்துத் 856
துள்ளாட்டம் ஆடமங்கை தூஷணித்து-........

குண்டுணி வாயக் கண்ணி சொன்னது

காட்டு மருந்தும் கடைமருந்தும் ஊன்மருந்தும் 857
கூட்டியிட்டால் ஆசைஒரு கோதைமேல்-நாட்டம்வர

ஒட்டுமோ என்ருள் உடங்தையா கத்திரித்த 858
வட்டமுலே யாள்சொல் வகைவகையாற்-சிட்டரே

இந்தவிதம் நானறிங்தேன் என்றுரைத்தேன் கேட்டுநல்ல 869
விந்தை எனச்சிரித்தார் மேலோர்கள்-சிங்தைநொந்த

பூசுரரே வேத புனிதரே அம்பலத்தில் 860
தாசியுடன் ஏறத் தகாதுகாண்-வேசிஒரு

செய்யமறை வேதியனேச் சென்னியிற்கல் இட்டகதை 861
ஐயரே நீர்தாம் அறியீரோ ?-கையில்

திரவியத்தை வாங்கிஉமைச் சீவனுடன் விட்ட 862
மரியாதைக் குண்டோ வழக்கு-பெரியோரே

வேதியராய் உள்ளவர்கள் வேசியரைக் கண்டாக்காற் 863
காத வழிவிலகல் காரியங்காண்-ஓதுமுறை

மந்திர நூல் வாயால் மதுவாய் ரசம்கொள்ள 864
எந்த வகைதுணிவாய் எண்ணினிர்-சிங்தைமயல்

அரும்பதவுரை கண்ணி. (855) அரக்கு-சாராயம் (856) வெள்ளாட்டி-வேலேக்காரி. (859) சிட்டரே-சபையோரே. (861) பூசுரரே-அந்தணரே.

தீர்த்தவா சிக்குத் திரவியமெல் லாங்கொடுத்துத் 865
தீர்த்வா கிக்கடனைத் தீர்த்துவிட்டீர்-கீர்த்தியா

நாமறியாக் கூத்து நடித்துவிட்டீர் உம்மளவோ 866
மாமறையோர்க் கெல்லாம் வசையாச்சே-சேமநிதி

தன்னைப் பறித்தாள் தரச்சொல்லும் என்றீர்அப் 867
பொன்னை இனிக்கேட்கப் போகுமோ-பொன்னைப்போற்

கூட்டியசெங் தேனெடுத்துக் கொண்டபேர் தம்மைஅவர் 868
ஓட்டியசுத் தெண்டிப்ப துண்டோகாண்-சூட்டரவின்

வாய்க்குள் அகப்பட்ட மண்டுக மும்யானை 869
வாய்க்குள் அகப்பட்ட வான்கரும்பும்-தீக்குள்ளே

விட்டநறு நெய்யும் வெயின்முகத்தி லேவெடிக்கம் 870
பட்ட கமரில்விட்ட பாற்குழம்பும்-கட்டுபுகழ்

பாங்கினால் தேடாப் பரமலுத்தர் கைப்பொருளும் 871
வாங்கினால் இப்பொருளும் வாங்கலாம்-நாங்கள்சொன்ன

புத்திவழி நின்றூற் பொருளரிதோ நீர்கற்ற 872
வித்தையிலே செம்பொபன் விளையுமே-எத்தும்

பரத்தையருக் கீந்ததிலும் பத்தத் தனையாய் 873
வரத்தக்க யோகம் வருங்காண்-கழுத்திலே

எண்ணி இடையாது இருக்கும்ஊர்க் கேகுமென்று 874
புண்ணியர்தம் தம்மனையிற் போயினர்-பெண்அணங்கை

நான் அவளைப் பிரிந்துபோக வேண்டியவன்தான். ஆனாலும், அவளை முன்னே விட்டுப் பின் சென்று, அவளது பின்னழகைக் கண்டு நான் ரசித்ததை என்னால் மறக்க முடியவில்லை. ஆனால் அந்தப் படு பாவிப் பெண்ணோ, வற்றிய குளத்தை விட்டுச் செல்லும் பறவைபோல் என்னை உதறித் தள்ளிவிட்டுத் தன் வீடு நோக்கிச் சென்றுவிட்டாள்

மோகம் கொண்ட என்னைக் கிழவி எத்தனையோ விதத்தில் இடர் செய்து பிரித்துவிட்டதால், கிழவியின் கொடுமைகளை எண்ணி யெண்ணி மனம் துடித்தேன். அடங்கா ஆத்திரம் வந்தது. மாட்டு மதி கொண்ட அவளது தலையில் ஒரு பாராங்கல்லைத் தூக்கிப் போட்டுவிட்டுச் செல்லலாமா என்று கூடத் தோன்றியது. எத்தனை அவமானம் !

அரும்பதவுரை : கண்ணி (865) தீர்த்தவாசிக்கு-தீர்த்த வகைகளுக்கு. சேமநிதி-ஒதுக்கி வைத்திருந்த பொருள். (868) சூட்டரவு-படமெடுத்தாடும் பாம்பு. (869) மண்டுகம்-தவளை. (873) பத்தத்தனை-பத்து மடங்கு (874) இடையாது-வேதனைப்படாமல்.

நான் பிறந்து வளர்ந்த ஊரெங்கே? உற்ருர் உறவினர் எங்கே? நான் கற்ற கல்வியின் பெருமை எங்கே? கவித்துவம் பெற்று அஷ்டாவதானி என்ற பட்டமும் பெற்று, நான் எடுத்த புகழ் எங்கே? இவைகளெல் லாம் மங்கி, மானங்கெட்டு, இன்று நட்டாற்றுக் கோரைப் புல்லானேமே என்று பலவிதமாக எண்ணிக் கலக்கம் கொண்டவனுய், சொக்கநாதர் கோவிலே அடைந்து, சொக்கேசரை மனமுருகிப் பிரார்த்தித்து என்னே அனுக்கிரகிக்கும்படி வேண்டினேன். பிரகாரங்களேச் சுற்றி அங்கிருந்த இதர தெய்வங்களே யெல்லாம் தொழுதுகொண்டு வரும்போது, அங்கு பிரமாதமாக தெய்வ ஆராதனே நடத்திக் கொண்டிருந்த வரதய்யன் என்பவரை நோக்கி, "இம்மாதிரி செய்யப்படும் தெய்வ பூஜையின் கைங்கர்ய கட்டளே யாருடைய உபயம்?' என்று கேட் டேன். அதற்கு அவர் "ஒன்பதூர் வாழ் பெரிய நாகம கூளேந்த்ர நரபாலனின் கட்டளே இது" என்று தெரிவித்தார்.

பின்நடத்திச் செல்லினவள் பின்அழகைப் பாரேனே 875
முன்நடத்திச் சென்ருள் முழப்பாவி-நன்னீர்கட்டு

ஆகும் குளத்தில் அனுபவித்து வற்றியபின் 876
ஏகும் பறவைகள்போல் ஏகினேன்-மோகமுற்ற

என்னேக் கிழவி இடர்செய் தெனேப்பிரியாக் 877
கன்னி தனேப்பிரிவு கண்டாளே-இந்நாட்டில்

மாட்டுமதித் தாய்க்கிழவி மாமிதலே யிற்கல்லேப் 878
போட்டுப் புறப்பட்டுப் போவோமோ-நாட்டமுற்ற

ஊர்எங்கே தோழர்எங்கே உற்ருர்எங் கேமனேவி 879
யார்எங்கே அட்டாவ தானிஎனும்-பேரெங்கே

நானு விதமுமெண்ணி நட்டாற்றுக் கோரையைப்போல் 880
ஆனேம் எனக்கலக்கம் ஆயினேன்-யானே

என்னேத்தேற்றிக் கொண்டுபோய் எங்கள்சொக்க லிங்கம் 881
தனேப்போற்றி என்கவலே சாற்றி-அனுக்கிரகம்

பெற்றிரண்டாம் செம்பொற் பிரகாரம் யான்வலமாய்ச் 882
சுற்றி வயிரவசு வாமியையும்-முற்றும்

வணங்கியம்பொற் கம்பம் தனக்கு வடபால் 883
இணங்கும் திருவாசற் கிப்பால்-மணங்கமழ்ப்பூ

அரும்பதவுரை: கன்னி (878) மாட்டுமதி-தடிப் புத்தி. (883) அம் பொற் கம்பம்-அழகிய தங்கத் துவஜ ஸ்தம்பம்.

மாலை நிரைத்த மணிவாசல் முன்முகப்பிற் 884
சேலை நிரைத்த திருவிளக்கும்-பாலரவி

காந்தி தரநிரைத்துக் கட்டளைக்குக் கட்டளையாய் 885
வாய்ந்ததெலாம் சொர்ண மயமாக்கி-தேய்ந்தமுனை

நெட்டிலைவேற் சங்க நிதிக்கரசன் ஆபரணப் 886
பெட்டி திறந்தபிர காசம்போல்-சட்டப்

புழுகு மணக்கப் பொலிந்தஅறை கண்டு 887
தொழுதேன் அதிசயமும் தோன்றப்-பழுதில்

மறையோன் மணியம் வரதையன் என்போன்அவ் 888
அறைவா சலில்இருந்தான் ஐயா-நெறியுடையாய்

ஆருபயம் ஈதென்றேன் ஆடலப யன்முல்லைத் 889
தாருலவு மேருத் தடம்புயமால்-பாராளும்

யோக மகராஜன் ஒன்பதூர் வாழ்பெரிய 890
நாகமகூ ளேந்திர நரபாலன்-தோகைமயில்

மீனாட்சி அம்மைக்கும் மிக்கசொக்க லிங்கருக்கும் 891
தானாட்சி தானஉப சாரமா மேன்மைஅபி

ஷேகமது மாலை சிறப்பமுது தீபமுதல் 892
ஆகநடப் பிக்கும் அறைஎன்றான்-மோகம்நமக்கு

அப்போதுதான் என் நிலைமையை உணர்ந்தேன். நடந்ததையெல்லாம் எண்ணிப் பார்த்தேன். மோகத்தில் மூழ்கி இறைத்த பொருளைத் தெய்வத்திற்குச் செலவிட்டாவது பலன் கண்டோமா? பெரியோர் தொழும் அங்கையற்கண்ணி அம்மனுக்கு அழகு திருவாட்சி ஒன்று தங்கத்தால் செய்தோமா? சொக்கேசர் அருளை வேண்டித் திருத்தேர் ஒன்றையாவது செய்தோமா? அத் தாசிக்குக் கொடுத்த பொருளைக் கொண்டு அழகு நிரம்பிய புதுமண்டபத்தின் முன்புறத்திலும் பின்புறத்திலும் தங்கத்தால் தகடு செய்து போட்டிருக்கலாமே! சத்திரம் சாவடிகளாவது கட்டியிருந்தால் புண்ணியமாக இருந்திருக்குமே? கையில் உள்ள பொருள்கள் அத்தனையும் இழந்ததுமின்றி பாவத்தை அல்லவா கட்டிக்கொண்டேன்! இனி யாரிடத்தில் சென்று எவ்வாறு பொருள் பெற்று நல்ல காரியங்கள் செய்து வாழ்வேன்?” என்றெல்லாம் நெக்கி மனம்உருகினேன்.

அரும்பதவுரை: கண்ணி (884) நிரைத்த-வரிசையாய் தொங்கவிடப் பட்டுள்ள. பாலரவி-இளஞ் சூரியன். (886) சங்கநிதிக்கரசன்-குபேரன். (889) தார்-மாலை.

எனக்குச் சட்டென ஒரு எண்ணம் உதித்தது. வள்ளலான பெரிய நாகையனை அண்டிப் போனாலென்ன என்ற எண்ணம் உண்டாயிற்று. உடனே அக் கோயில் பணியாளரை நோக்கி, “ஐயா, நான் நாகம கூளேந்திரனிடம் தஞ்சம் புகுந்தால் பலன் கிட்டுமா?” என்றேன். அதற்கவர், “அவதானியே! திருப்பாற் கடலிற்குச் சென்றவர்களில் பால் குடிக்காதவர் யாராவது இருக்க முடியுமா? மழையில் நனையாத பூமியும் உண்டோ? ‘வள்ளலான பெரிய நாகேந்திரனுடைய கை ஆதரிக்குமா?’ என்ற சந்தேகமே வேண்டாம். நீர் நம்பிக்கையுடன் அவரிடம் செல்லும். உமக்கு நிச்சயம் ஆதரவு கிட்டும்” என்று கூறி, என்னை வாழ்த்தி விபூதி கொடுத்தனுப்பினார். நானும் அங்கையற் கண்ணியின் கோயில் வாசலைக் கடந்து, மறுவீதியும் கடந்து, நடந்து கொண்டிருந்தேன்.

ஆனால் மதனாபிஷேகத்தின் நினைவு என்னைவிட்டொழியாத நிலையில் மதுரையை விட்டுச் செல்ல மனமற்றவனாய் என்னுடைய ஒருகால் பின்னிழுக்க, மற்றொரு கால் அக்கிழவியின் மோசத்தை எண்ணிப் பிடரியைப் பிடித்துத் தள்ள, முன்னேபோவதும் பிறகுதயங்கித் திரும்புவதுமாகத் தத்தளித்து, கடைசியாக மனதைத் திடப்படுத்திக்கொண்டு மதுரையை விட்டுப் புறப்பட்டு விட்டேன். நான் நடந்து கொண்டிருந்தாலும் என் சிந்தனைகள் தாசி வீட்டிலேயே நின்றிருந்தன. “என் மோகனாங்கியின் வீட்டில் இந்த நேரத்தில் நான் இருந்தஸ்தானத்தில் எவன் இருந்து சுகமனுபவிப்பானோ? நான் ஆனந்த நித்திரை செய்த மலர் பரப்பிய மஞ்சத்தில் எனக்குப் பதிலாய் எந்தத் தகுதியற்றவன் படுத்திருப்பானோ? அன்று, வீதியில் கிழவி என்னுடன் சண்டையிட்ட போது ஒரு முரடன் அவளுக்குப் பரிந்துகொண்டு வந்தானே, அந்தத் தொந்தி வயிற்றுத் தடியன் அவளிடம் சுகமனுபவித்துக் கொண்டிருப்பானோ? மதனாபிஷேகத்துடன் நான் அனுராகம் பாடி உறவாடிக் கூடிச் சுகித்த இன்ப நினைவுகளெல்லாம் அவள் நெஞ்சில் எழ என்னை நினைத்துப் பெருமூச்செறிவாளோ?” என்றெல்லாம் என் மனதிற்குள்ளாகவே எண்ணி யெண்ணி ஏங்கினவனாய் மதுரை நகரைவிட்டு வடக்கு முகமாய் நடந்து கொண்டிருந்தேன்.

அப்பொழுது எனக்குச் சற்று முன்னால் அடக்கமே உருவான அந்த ஞானியார்-‘மதுரை போகாதே’ என்று உபதேசித்த அந்தப் பெரியவர் நின்றுகொண்டிருப்பதைக் கண்டேன்; திடுக்கிட்டேன். அவர் என்னை எச்சரித்து புத்தி சொல்லியதையும் கேளாமல் நான் நடந்துகொண்டதை நினைத்து அளவற்ற துயரம் கொண்டேன். அவரைத் தலை நிமிர்ந்து காணவும் கூசினேன். திருடனைப்போல் என்னுடைய எண் சாண் உடம்பு ஒரு சாணாகக் குறுகிவிட, வெட்கித் தலை குனிந்து நின்றேன். என் பரிதாப நிலையைக் கண்ட அந்த மஹான் அன்புடன் என்னைத் தழுவிக் கொண்டார்.

“யானை போன்றிருந்த உம் உடல் உருமாறி இன்று பூனை போலாகி விட்டதே! இவ்வாறு ஆனதற்கு என்ன காரணம்?” என்றார் அப்

பெரியார். "நான் எப்படிச் சொல்வேன் ?" என்று பெருமூச்செறிந்து, தலை குனிந்தவண்ணம், "சாமி! தங்கள் வார்த்தையைத் தட்டிநடந்ததால் இன்று அனுபவிக்கிறேன். தாங்கள் முன்புசொல்லியது முற்றிலும் உண்மையாகி விட்டது தங்கள் வார்த்தையை மீறி மதுரை சென்று, வேசி மகள் கால்பிடித்து காமத்தில் மூழ்கிவிட்ட எனக்குத் தாய்க் கிழவி மாய மருந்திட்டு மயக்கி, என் கைப்பொருளையெல்லாம் நயவஞ்சகமாய்க் கொள்ளை கொண்டாள். பிறகு என்னை கைக்குரங்காய் ஆட்டினுள். கடைசியில் இந்தக் கோலத்தில் என்னை விரட்டி விட்டாள். கேட்பவரின் நகைப்பிற்கும் ஆளானேன்" என்று கண் கலங்கி நடந்ததை யெல்லாம் அவரிடம் கூறினேன். இதைக் கேட்ட ஞானியார் பரிவுடன் என்னை நோக்கி, "அவதானியே! யார் எதற்காக உம்மைக் கண்டு எள்ளி நகைப்பார்கள்? பெண் மோகம் யாரைத்தான் விட்டது? கைப் பொருள் போனதற்கு வருந்தாதிர். கற்றறிந்துள்ள உமக்குக் கல்விதானே வேளாண்மை. இவ்வுலகத்தில் மன்னனையும், மாசறக் கல்வி கற்றவனையும் சீர்தூக்கிப் பார்க்கும்போது மன்னனிலும் சிறந்தவன் கல்வி கற்றவன்தானே! 'மன்னனுக்குத் தன் தேசத்தில்தான் சிறப்பு. கற்றவனுக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு' என்று முழங்கிய அவ்வைப் பிராட்டியாரின் வாக்கை நீர் அறியீரா ? இனி எல்லாக் கவலைகளையும் இங்கேயே உதறிவிட்டு, உம்முடைய ஊர் போய்ச் சேரும்" என்று ஞானியார் ஆறுதல் கூறி விடை கொடுத்தார்.

இட்டணையும் கன்னிக்கு இறைத்ததெல்லாம் இப்படியோர் 893
கட்டளையாச் செய்துபலன் கண்டோமோ-சிட்டர்தொழும்

அங்கயற்கண் அம்மைக்கு அழகுதிரு வாட்சியொன்று 894
தங்கத்தி னாலே சமைத்தோமோ-சங்கரர்சொக்

கையர்மகிழ்ந் தேற அபிஷேகப் பண்டாரம் 895
செய்ததிருத் தேர்போலச் செய்தோமோ-வைபோகம்

பெற்றபுது மண்டபத்தில் பின்புறமும் முன்புறமும் 896
பொற்றகடு கொண்டமுத்திப் போட்டோமோ-மற்றுமெங்கள்

மாலழக ருக்கு வயிரத்தால் மின்எறிந்தாற் 897
போலழகாம் அங்கிபண்ணிப் பூட்டினமோ-சாலைஅறம்

செய்தோமோ கோதானம் செய்தோமோ பூதானம் 898
செய்தோமோ சத்திரங்கள் செய்தோமோ-துய்யநிதி

ஆரிடத்தில் வாங்கி அரும்பலனைத் தேடுவோம் 899
பேர்படைத்த பெஞ்சைப்ர தாபன்ஒன்ப-தூர்படைத்த

அரும்பதவுரை: கண்ணி (897) சாலைஅறம்-ரஸ்தா அமைத்துக் கொடுக்கும் தர்மம். (898) கோதானம்-பசு தானம்.

ஐயன் பெரியநா கையனிடம் சொல்வோமோ 900
செய்யுமறை வேதியரே செப்புமென்றேன்-எய்துதிருப்
பாற்கடலுக் கேகினவர் பால்குடியா ரோஇதற்கு 901
மேற்புத்தி யுங்கேட்க வேணுமோ-சூற்கொண்டு
பெய்யும் மழைக்கு நனையாத பேருமவன் 902
கையிலேற் காதவரும் காணேன்நான்-ஐயமின்றிப்
போம்எனவெண் ணீறுதந்து பூசிவிட்டார் சந்தனத்தை 903
ஆம்எனச்சொக் கேசர் அடிபணிந்து-மாமேவு
கூடலழ கர்மதன கோபாலர் பூந்துளவ 904
ஏடலரும் தார்வீர ராகவமால்-மாடேறும்
நல்லாண் டவர்யார்க்கும் இம்மையிலே நன்மைதரு 905
மல்லாண் டவர்பாதம் வாழ்த்தியே-செல்வ
மடந்தைஅங்க யற்கண்ணி வாசல்அறச் சாலை 906
கடந்துமறு வீதி கடந்து-நடந்துவரப்
பின்இழுக்கும் ஓர்காலைப் பெண்ணுசை மாமிசினம் 907
முன்இழுக்கும் ஓர்காலை மூன்றுதரம்-பின்னே
திரும்புவதும் மீள்வதுமாய்ச் சீமாட்டி ஆசைக் 908
கரும்பை நினைத்தேன் கருத்தில் விரும்புமவள்
குன்றிருக்கும் மென்முலைமேற் கூட்டிக் கலந்தசுகம் 909
இன்றுருத்தன் பாங்காய் இருக்குமோ மன்றலர்தார்ச்
சுற்றுட நான்படுத்த தூங்குமஞ்ச மீதிலொரு 910
பற்றுப் பயலும் படுப்பானோ மற்றுமந்தச்
சந்தியிலே மாமிஇட்ட சண்டையிலே வந்தஒரு 911
தொந்தி வடுகன் சுகிப்பானோ-முந்திவிளை
ஆடி அநுராகம் பாடிவிளை யாடிநான் 912
கூடியதெல் லாம்நினைத்துக் கொள்வாளோ-மேடையின் மேல்
கிண்ண முலைமேற் பதித்தகிள்ளைப் பார்த்தென்னையும் சற்று 913
எண்ணி நெடுமூச் செறிவாளோ-எண்ணிற்

அரும்பதவுரை: கண்ணி. (905) கூடல் – மதுரை: ஏடு அலரும் – இதழ் விரிகின்ற (909) பாங்கு – பக்கம் (911) வடுகன் – நாயக்கர். (913) கிள்ளை – கிள்ளியிருப்பதை

படாதபா டித்தனையும் பட்டேன் என்பாவம் 914
இடாதோ பிரமனார்க் கென்றே-தடாமல்

வடக்கு முகக்கோட்டை வாசல்நடுக் கட்டு 915
முடக்கில்வரும் போதெனக்கு முன்னே அடக்கமுள்ள

மானு பரஞானி ஐயன் மதுரைக்கன்று 916
ஏனோவந் தான்என் எதிராக-நானவனைக்

காணும் அளவிற் களவாண்ட வன்போலென் 917
சாணுடம்பும் குன்றிஒரு சாணானேன்-நாணயமாய்

மாமிதனைக் கண்ட மருமகள்போல் ஆனேனைச் 918
சாமிஎனை அன்பாய்த் தழுவினான்-நாமறிய

ஆனைபோ லேஇருந்தீர் ஐயரே உம்உடம்பு 919
பூனைபோ லேஒடுங்கிப் போவானேன்-ஆனஇது

என்னவகை என்றான்மற் றேதுவகை நீர்முதலே 920
சொன்னவகை கேளாத தோஷவகை-முன்உமது

கையைவிட்டு வேசிமகள் கால்பிடிக்கச் சென்றேன்நான் 921
மையைஇட்ட கண்ணிக்கு மாலானேன்-பையஉண்டை

கூட்டியிட்டாள் கைப்பொருளைக் கொள்ளையிட்டாள் கைக்குரங்கா
ஆட்டியிட்டாள் இக்கோலம் ஆக்கிஇட்டாள்-கேட்டார்

பொருள் இல்லாமல் சொந்த ஊரை நோக்கிச் செல்ல மனமில்லை. ஆனால் பல ஊர்களைச் சுற்றி அலைவதிலும் பயனில்லை. நாகேந்திர பூபதியின் ஒன்பதூருக்குச் செல்வதுதான் சிறந்ததென்று முடிவு செய்தேன். அந்த எண்ணங்கொண்டு புறப்பட்டதும் எனக்குப் பல நல்ல சகுனங்கள் ஏற்பட்டது. அதனால் மனத் துணிவும் நம்பிக்கையும் கொண்டு விரைந்து நடந்து நிலைக்கோட்டை வந்தடைந்தேன்.

அந்நாட்டின் பலவிதச் சிறப்புகளை யெல்லாம் கண்டு மகிழ்ந்த படியே அங்குள்ள கோவிலுக்குச் போய் தரிசனம் செய்துவிட்டு ஊருக்குள் சென்று நாகேந்திர பூபதியின் அரண்மனையடைந்தேன். அங்குள்ள வாயில் காப்போனிடம், 'நான் ஒரு தமிழ் வித்வான்' என்று சொன்னதும் பணிவுடன் அவன் என்னை வரவேற்று அரண்மனைக்குள் அழைத்துச் சென்றான்.

அங்கே கனகமணி மண்டபத்தில், வீரக்கழல் பொருந்திய வள்ளலான பெரிய நாகேந்திர கூளப்ப பூபாலன் கம்பீரமாகக் கொலு வீற்றி

அரும்பதவுரை: கண்ணி. (916) மானுபரன் – மானத்தையே பூஷணமாகக் கொண்டவன். (921) மாலானேன் – பலியானேன்.

ருந்த காட்சியைக் கண்டு மகிழ்ந்து மனப்பூர்வமாக அவரை வாழ்த்தி வணங்கினேன். அவரும் என்னை அன்புடன் வரவேற்ருர்.

நான் பலவிதக் கவிபாடி அவரை மகிழ்வித்தேன். என் கல்வித் திறமை கண்டு பெரிய நாகேந்த்ர பூபதி, பொன்னும், பொருளும், ஆடையும், ஆபரணமும், நிலமும் வழங்கினுர். இவரைப்பேரல் யார் எனக்கு இம்மாதிரி கொடுக்க முடியும் ?

நகைப்பாரென் றேனிதற்கு நாணமேன் யார்க்கும் 923
வகைதப்பா மோசம் வராதோ-பகுத்தறிவாம்

இந்திரன்மெய் யோனிக்கண் ஈரைஞ்ஞூ ருனதுவும் 924
அந்தணனுர் சென்னியிலொன் றற்றதுவும்-சுந்தோப

சுந்தர் மடிந்ததுவும் சுக்ரீவ னுல்வாலி 925
முந்த முடிந்ததுவும் முன்ஒருநாள்-கந்தன்

மரமா னதும்இலங்கை வாழ்வேந்தன் சிந்து 926
சிரமா னதுவும்வச்ர தேகத்து-உரம்படைத்த

கீசகனுர் மாண்டதுவும் கேட்டீர் இலேயோபெண் 927
ஆசையால் என்ப தறியீரோ-பூசுரரே

கைப்பொருள்போச் சென்று கவலேயேன் கல்வி ஒன்ருல் 928
மெய்ப்பொருளாம் பாவலர்க்கு வேளாண்மை-இப்புவியில்

"மன்னனும் மாசறக் கற்ருேனும் சீர்தூக்கின் 929
மன்னனிற் கற்ருேன் சிறப்புடையன்-மன்னனுக்குத்

தன்தேசம் அல்லாற் சிறப்பில்லேக் கற்ருேர்க்குச் 930
சென்றஇடம் எல்லாம் சிறப்பு" என்று-நன்றிபெற

அவ்வைசொன்ன நீதி அறியீரோ நீரினிமேல் 931
இவ்விடம்விட் டுங்களூர்க் கேகுமென்று-தெய்வ

மறைவல்லோன் என்னே வழிவிடுத்துப் பார்த்துத் 932
தறுகின்ருன் என்மேல் தயவால்-நெறியுடனே

ஐம்பதூர்க் கேகி அலேந்துபலன் ஏதென்றே 933
ஒன்பதூர்க் கேக ஒருமித்தேன்-முன்புகருங்

காகம் இடத்திலிருந்து கைக்கு வலப்புறத்தில் 934
ஏகக் கருடன் இடமாக-யோகபலம்

அரும்பதவுரை; கண்ணி. (924) யோனிக்கண் - யோனி போன்ற கண். ஈரைந்நூறு - ஆயிரம். அந்தணனுர் - பிரம்மா. சென்னி - தலே (926) சிந்து சிரமானது - தலேயில்லா உடலானது. (927) பூசுரர் - மண்டலாதிபதி. (932) மறைவல்லோன் - வேதமுணர்ந்தோன். (934) ஒருமித்தேன் - முடிவு செய்தேன்.

இன்றுவந்த தாகும்நமக்கு என்றுவந்தேன் ஏடகத்திற் 935
சென்றுவந்தே அந்தச் சிவஞரை-அன்றுதெரி

சித்தேன்என் பூர்வ ஜெனனதோ ஷங்களெல்லாம் 936
எத்தேசம் கண்டதென அறியேன்-அத்தலத்தில்

வேம்பு கரும்பாமாம் வெண்மணலோ நீருமாம் 937
தாம்புவிடு நீர்அமிர்தம் தானுமாம்-தேம்பும்

வறியேன் மருந்தின் மயக்கமும்நோ யுந்தீர்த்து 938
அறிவாளன் ஆக்கிவிட்டது அவ்வூர்-நெறியுடனே

அற்றைநாள் தங்கி அருஞே தயத்தெழுந்து 939
மற்றைநாள் மேற்கு வழிகொண்டேன்-வெற்றிபுரி

கோடுகொண்ட மால்யானைக் கூளேந்த்ரன் ஒன்பதூர் 940
நாடுகண்டேன் என்கவலை நான்கானேன்-ஆடகவான்

எட்டியபூஞ் சோலை எழிற்கமுகும் வாழைகளும் 941
கட்டியபூங் காவணமாக் காண்பிக்க-விட்ட

வருக்கை பலாக்கனியை மந்திஇரு கைக்கொண்டு 942
இருக்குமது மத்தளக்கொட் டென்ன-உருக்கும்இசை

வண்டுதித்தி கூட வரிக்குயில்கள் பண்பாடக் 943
கண்டு கிளிகள் கவிபாடத் தண்டாத

மன்றலந்தார் அல்லிமலர் வாடைக்காற் ருலடிபட்டு 944
ஒன்றெடொன்று தாளம்போல் ஒத்திசைப்ப-நின்றுலகில்

நீலவண்ணத் தோகை நெடுஞ்சிறகை மேல்விரித்துக் 945
கோல வனிதையர்போல் கூத்தாடச் சேலைக்குள்

ஆங்குநதி பாயும் அலரோடை வாளைவாள் 946
வாங்கிய வீச்சு வளங்காட்டப்-பூங்காவில்

வந்து நுழைந்துசெல்லும் வாளிரவி கூத்துக்குப் 947
பந்தம் பிடிக்கும் படிசிறப்ப-முந்த

முகைத்திருக்கும் முல்லைமலர் மொய்த்திருந்து பார்ப்போர் 948
நகைத்திருக்கும் பாவனையாய் நண்ண-மிகுத்தபொறி

அரும்பதவுரை கண்ணி. (935) ஏடகம்-ஒரு புண்ணிய ஸ்தலம் (937) தாம்பு-கயிறு. தேம்பும்-கலங்கும் (840) கோடு-தந்தம். ஆடகவான்-பொன்னுலகம் (942) வருக்கை பலா-ஒருவகை பலா (943) தித்திகூட-துருத்தி வாசிக்க. தண்டாத-குறையாத (944) மன்றல்-வாசனை (946) அலரோடை-மலர் நிறைந்த குளம். வாளைவாள்-மினுங்கிய கண் (947) இரவி-சூரியன்

வண்டாடும் செங்காந்தள் வாடையா லேஅசைந்து 949
கொண்டாடு வோர்க்கை குணம்காட்டக்-கண்டெதிர்புன்

நாக மலரும் நறுங்கொன்றைப் பூவிதழும் 950
த்யாகமெனப் பொன்னுமுத்தும் சிந்திநிற்பத்-தோகைவிரித்து

ஆடுகின்ற மஞ்சைஎதிர் அன்னம் பறந்துவந்து 951
போடுகின்ற வெண்தூசு போற்படிய-நீடுவயற்

சாலிக் கதிர்க்குலையும் தாமரையும் அந்தநறுஞ் 952
சோலைக்குள் மன்னர்குழாம் சூழ்ந்ததொக்கும்-சோலைவளம்

ஏதென்று சொல்வேன் இருதோளும் பூரித்தேன் 953
வேதன் தொழுங்கோயில் மேட்டிலே-சீதையுடன்

மாதவனைக் கண்டேன்என் வல்வினையெல் லாமுடன் 954
ஆதவனைக் கண்டபனி ஆக்கினேன்-பாதம்

தொழுதுதிம்ம ராயா! துதித்துணைப்பா டாமல் 955
பழுதிலே வேசையரைப் பன்னி-முழுவதுமுன்

மீன வடிவைஅந்த மின்னார்கண் என்றும்நீ 956
ஆனசிங்க ரூபமிடை ஆமென்றும்-மேன்மையுடன்

மைக்கிசைந்த ரூபத்தை மங்கையார் கூந்தலென்றும் 957
கைக்கிசைந்த சங்கைக் கழுத்தென்றும்-திக்கனைத்தும்

தந்திப் புவனமெலாம் தந்தவனைத் தந்தமலர் 858
உந்தி திருமுகத்துக் கொப்பென்றும்-சந்தகமும்

வேயடுத்த நின்இசையை மின்னார் வசனமென்றும் 959
நீபடுக்கும் பாயை நிதம்பமென்றும்-வாய்பிதற்றிப்

பாடினேன் இந்தப் பலன்கண்டேன் சிந்தைமலர் 960
சூடினேன் பாதம் தொழுதெழுந்தேன்–ஆடி

அளகா புரிக்கும் அமரா வதிக்கும் 961
வளமாம் நவபுரிக்கு வந்தேன்-பளபளெனும்

செம்பொன் நெடுமதிலும் தேரோடும் வீதிகளும் 962
கும்ப முடிநிரைத்த கோபுரமும்-அம்பரத்தில்

அரும்பதவுரை: கண்ணி. (651) மஞ்ஞை-மயில். (952) சாலி – நெல். (955) பன்னி-உரையாடி. (958) தந்திப்புவனமெல்லாம்-தந்து இப் புவன மெல்லாம். (959) வேய் – குழல் வாத்யம். (962) நிரைத்த வரிசையாக வைத்த.

ஆற்றநீர் அள்ளி அருக்கண் உடல்குளிரத் 963
தூற்றிய பொன்மாடத் துயிற்கொடியும்-நீற்றெளிசேர்

தன்னிறத்தைப் பொன்னிலத்துத் தந்திக் கீந்திலத்துப் 964
பொன்னிறத்தைப் பெற்ற புரிசைகளும்-இன்னஅழகு

அத்தனையும் கண்டுமகிழ்ந்து ஐயன் அகோபிலனும் 965
கர்த்தனையும் கண்டு கமலத்தாள்-பத்தியுடன்

சேவித்தேன் கோவிலுக்குத் தென்புறுத்திற் கற்பகப்பூ 966
நீவித்தேன் ஊற்றும் நெடுமதிலும்-மேவுமுகம்

இட்டமணிப் பொற்குடங்கள் எட்டுவகைச் செந்திருவின் 967
வட்டமுலை போலிலங்கு மாளிகையும்-தொட்டுக்

குழைக்கின்ற நல்குரவு கொண்டேனை வாவென்று 968
அழைக்கின் றதுபோற்நின் ருட்டம்-தழைக்கின்ற

சிங்கார வெள்ளைச் செயடாலும் கண்டிதுவே 969
எங்கோன் அரண்மனைஎன் றெய்தினேன்-துங்கப்

படையால் திருடர் பயத்தால் கொடையால் 970
அடையாத வாசலுக்குள் ஆனேன்-தடவிகட

காந்து கழற்சிறுகண் காரனை நிற்ப அது 971
ஏந்துகொம்பைக் கண்டுபகீல் என்றுமனம் சோர்ந்துநான்

வெல்லவிட்ட பூண்முலையாள் மென்முலைமேல் என்மனதைச்
சொல்லிவிட்டேன் மெள்ளத் திரும்பினேன்-செல்வமுதல்

வாசலுக்குள் மன்னர் வருவாரும் போவாரும் 973
“ ஜே ஜே ” எனும் சந்தடிக்குட் சிக்கினேன்-வீசுகின்ற

பட்டைக்கம் புக்குப் பயந்தெனைப்பின் பற்றிவந்த 974
மொட்டைக் கலியன் முடுக்குண்டான்-கிட்டப்போய்

அத்தினேன் கொல்லரெனை யாரென்றல் அப்பாநான் 975
வித்துவான் என்றுசொன்னேன் விட்டுவிட்டார்-மொய்த்தமணிப்

பத்தி விலாசப் பவளக்காற் போதிகைப்பூ 976
வைத்த கனகமணி மண்டபத்தில்-இத்திகிரி

அரும்பதவுரை: கண்ணி. (963) அருக்கன்-சூரியன். (964) தந்தி-வெள்ளை யானை. புரிசை-கோட்டை. (969) துங்கம்-பரிசுத்தம். (974) முடுக்குண்டான்-அடிபட்டான். (976) திகிரி-சக்கரம்.

வாழவோ கம்புரக்கும் மால்பெரிய நாகேந்த்ர 977
கூளபூ பாலன் கொலுவாகத் தோளில்

ஜெயமாது கூத்தாடத் திங்கள்முக மேற்பங் 978
கயமாது தண்கருணை காட்டக்-கயிலேந்து

நெய்வடித்த வாள்செவிக்கு நேராக நின்றெனக்கூண் 979
எவ்விடத்தை யாசொல் எனக்கேட்பச்-செவ்விபூஞ்

சந்திர காவித் தலைப்பாகை மேற்கவிகை 980
சந்த்ரோ தயகாந்தி தான்காட்ட-சுந்தரமும்

திக்கணைத்தும் சுற்றச் சிறகடிக்கொள் கீர்த்தியைப்போல் 981
மிக்கிரட்டைப் பாவாடை வீசிநிற்கச்-செக்கர்

அவிரொளிரத் தாங்கி அடுத்திருப்பால் வீசும் 982
கவரி உபயநிறங் காட்டக்-கவலைபடும்

சொற்காட்டும் ஒன்னார் தொழுது விழுந்துகெஞ்சிப் 983
பற்காட்டும் சென்னி பதித்தமணி முற்காட்டும்

சாமித் துரோகரைப்போல் தண்டை முகப்பில்வெற்றிச் 984
சோமத் தலைபோலச் சோதிவிட-வீமரண

தீரதுரை மக்கள் ஜெயமங் திரிமாரும் 985
வீரதள கர்த்தர்களும் வேந்தர்களும்-பார்மதிக்கும்

தானு பதிகளும் ப்ரசண்ட நியோகிகளும் 986
நானு கலைதெரிந்த நாவலரும்-கோன்முறமைக்கு

இந்தவகைக் கிந்தவகை இன்பம் தருவதென்ன 987
வந்துபர ராஜர் மநுக் கேட்பச் செந்திருவாழ்

துய்ய வதனசந்த்ர சோபைநறுந் தெள்ளமுதைத் 988
தையல்நல்லார் செங்கட் சகோரமுண்ணக் கைகுவித்து

வாரிட்ட ராணுவ வரிசையாய் நிற்கஎதிர் 989
காரிட்ட யானைநின்று காதாட்டத்-தாரிட்டுப்

பொன்னின் முகப்பூட்டுப் பூட்டிநிரை த்தடில்லி 990
வன்னப் பரிகணைத்தும் வாவிநிற்க-எந்நேரம்

அரும்பதவுரை: கண்ணி. (980) அந்தரம்-வானவெளி. (981) சிறகடிக் கொள்-சிறகின் கீழே. (982) கவரி-சாமரை. (993) ஒன்னார்-எதிரிகள். [988] சகோரம்-ஒரு பறவை. (990) டில்லி வன்னப் பரி-டில்லிக் குதிரை.

சூடும் சனஊழி யக்காரர் கோடிசெயங் 991
தேடும் கனகசேரு வைக்காரர் சோடிட்டுத்

தத்தரமாய் காலிலிட்ட தண்டைகளும் கேடயமும் 992
கத்தியுமாய் வந்துநின்று கைகுவித்துச் சித்தம்வரச்

சிங்களத்தை வெட்டிச் சிறைபிடிக்க வோநாங்கள் 993
வங்களத்தி லேகலகம் வைக்கவோ-பங்கமிலா

வல்லத்துக் கோட்டையைப்போய் வாங்கவோ வாங்காத 994
கொல்லத்தைக் கொள்ளையிட்டுக் கொள்ளவோ-மெல்லப்போய்

சொல்லையா என்னத் துடிமணியக் காரர்பணம் 995
செல்லும் வரவும் செவிக்கேற்ற-நெல்லுமதி

ஆயக்க மும்செலவும் ஆதாய மும்கழிவும் 996
வாயிர் கணக்கர்வந்து வாசிக்கத்-தேயத்துக்

கோவோலை வாசகத்தைக் கூறுவார் தாம்எழுதி 997
ஏவோலைக் கொப்பம் இடச்சொல்லத்-தாவித்

தகரும் தகரும் தலையும் தலையும் 998
தகரும் தகரும்எனத் தாக்க-விகடநட

மல்லராய் முற்பகையும் அல்லராய்க் கட்டிவிழும் 999
மல்லராய் கைகுவித்து வாங்கிநிற்ப-வெல்லக்

குறும்புள்ளாய் அங்கைக் குறும்புள்ளாய்க் கோபக் 1000
குறும்புள்ளாய் பாய்ந்துகுதி கொள்ளப் பறங்கிகளும்

சோனகரும் தந்த துரித வராகனிது 1001
சீனர்வர விட்ட சிவிகைஇது-யானைகட்டி

மிண்டுகொண்ட மைசூர்மேல் வேட்டைபோய் நம்முடைய 1002
தண்டுகொண்டு வந்த தனங்களிவை-மண்டலிகர்

இட்ட திரைகள் இவைபராக் கென்றுசொல்லிக் 1003
கட்டியர்கொண் டாடக் கனபேரி-கொட்டரணம்

மல்லாரி கொட்ட அகோபிலமால் கோயிலார் 1004
எல்லாரும் ஓர்பால் இனிதிருப்ப-நல்லமிர்த

அரும்பதவுரை: கண்ணி (991) சோடு - மிதியடி. (993) வங்களம் - வங்காளம். (996) ஆயக்கம் - மொத்தப் புள்ளி. (997) கோவோலை - அரசருக்கு எழுதும் கடிதம். சிலை - சிட்டு (1000) குறும்புள்ளாய்-சிறு பறவையாய் (1001) சோனகர் - யவன நாட்டினர் (1002) மிண்டு-வலிமை

போஜனுங் கூளபூ பாலன்ச முத்திரத்து 1005
மாஜனமும் மன்ருடி மங்கலத்து-மாஜனமும்

வத்தலக் குண்டு மகாஜனமும் மாற்றாராம் 1006
அத்தலத்தில் வைதிகநூல் அந்தணரும்-வித்வஜனர்

பட்சமுறும் எங்கோன் பவிசும் பலன்களும்என்று 1007
அட்சயமாம் என்றட் சதைவழங்க-ரட்சகனும்

கோரசிங்க ரூபஉக்ர கோதண்ட பாணியைப்போல் 1008
வீரசிங் காதனத்தில் வீற்றிருந்தான்-சூரியன்முன்

பங்கயம்போ லானேன் பரபரெனச் சென்றெதிரே 1009
செங்கைதனை ஏந்திச் செயமென்றேன்-இங்கே

இருமென்றென் ஐயன் இடம்காட்டப் பெற்றேன் 1010
அருகிலிருந் தேன்மகிழ்ச்சி ஆனேன்-கருணைபுரிந்து

என்மேல் விழிவைத்தான் எங்கோன் குறிப்பறிந்து 1011
பொன்மேவும் பெஞ்சைப் புரந்தரா !-மன்னு

நிகளங்கா ! மல்லா ! நிலைக்கோட்டை ராயா ! 1012
அகளங்கா ; ஆளுக் கபிமா !-நகைமுகப்ர

தாபா ! ககலகோ தண்டா ! விருதுபண்டு 1013
பாபா ! வலக்கவம்ச பாக்யகுல-தீபா !

சுகமுப்ர ! முகலளித சுகுணகுண ரவியனைய 1014
சமுகநகை முககமல தளநயன !—அமிர்தரச

மதுரவித வசனமிர்த மதமெழுது புயசயில 1015
சதுரதட கடகரட சமரகரி!-உதயகெரு

விதநடன பரிநகுல விகடமிகு மகுடமுடி 1016
அதிரஅடி வருடுசரண் அடலபய!-அதுலகுல!

சந்திர சிந்துர சந்தன குங்கும 1017
மந்தர கொங்கை மடந்தையர்-சுந்தர!

கல்விப் பெருங்கடலே! கற்பகக்கன் றே!கமலச் 1018
செல் விக்கு வாய்த்த திரவியமே!-வெல்லுமதக்

அரும்பதவுரை கண்ணி (1012) ராயன்-மன்னன். அகளங்கன்-குற்ற மற்றவன். (1013) வலக்க வம்சம்-கூளப்பனின் குலம் (1015) சதுரன்-சாமர்த்தியசாலி. கடம்-மதம். சமரம்-போர்.

கூன்கோட்டு யானைக் குறுகார் எனுங்காட்டு 1019
மான்கூட்டம் சாடும் வரிப்புலியே!-மீன்கூட்டம்

பாதிக் குறிவந்த பன்றிமலைச்சாரலிலே 1020
ஆதிக்கம் செய்திருக்கும் ஆளியே!-ஓதுபகை

வீரமண்ட லீகரெனும் வேழங் களைவிழுங்கும் 1021
பாரகண்ட பேரண்டப் பட்சியே !-சேரவராய்

அண்டிப் பொருவோர் அரிக்குலத்தை வாளுகிராம் 1022
தண்டிற் கிழிக்கும் சரபமே !-திண்டிறல்வேற்

போஜேந்த்ரா ! சக்ர புவனேந்த்ரா ! ராஜாதி 1023
ராஜேந்த்ரா ! தீனஜன ரட்சகா !-வீசுதிரை

ஆற்றிலே நாலும் அனுதினமும் பொன்னூறும் 1024
ஊற்றிலே ஆறும் உடையானே !-ஏற்றமுள்ள

பத்தூர்ஒவ் வொன்ருப் படைக்கும் தலையூராம் 1025
நத்தூரும் ஒன்பதூர் நாயகனே !-மொய்த்தகடல்

ஒப்பத் திரண்டதளம் உள்ளசதுர் ஊடியங்கள் 1026
முப்பத் திரண்டுபெற்ற மொய்ம்பனே !-இப்புவியில்

அண்டலரை வெல்லும் அறுபத்து நாலுமன்னர் 1027
கண்டசெய துங்கரண கங்கணனே!-மிண்டுகொண்டு

சண்டைக்கு டில்லித் தளம்வந்த தானும் 1028
கண்டுமலை ஏருத கண்டனே!-தண்டஜெய

தண்டனே! காரியஉத் தண்டனே சூகரவே 1029
தண்டனே! வீரியகோ தண்டனே!-தண்தளவத்

தாரனே! சற்குணவிஸ் தாரனே! கற்றவர்க்கு 1030
தாரனே! அற்றவாக்கா தாரனே!-ஆரமுத

சோமனே! அன்னசத்ர சோமனே! கற்பகப்பூங் 1031
காமனே! விற்கரும்புக் காமனே!-நாமகள்சேர்

பெஞ்சைநகர்ச் சிந்தமனற் பேறே! சரத்கால 1032
மஞ்சைநிக ருந்தியாக வள்ளலே!-அஞ்சித்

அரும்பதவுரை: கண்ணி. (1019) குறுகார்-அடையாதவர். (1020) ஆளி-சிங்கம். (1021, பார கண்டம் - பெரிய கழுத்து. (1025) நத்து-சங்கு. (1026) சதுர் ஊடியங்கள்-நால்வகைப் படைகள். (1029)தவளம்-முல்லை.

தொழுதுங்க வேந்தருக்குத் துள்ளுசீட் டொப்பம் 1933
எழுதும் பெரியநா கேந்த்ரா!-எளியோர்
கரங்கள் விரித்தேற்கக் கன்றுகண்ட ஆப்போல் 1034
இரங்கும் பெரியநா கேந்த்ரா !-வரங்கள்
செருக்குமத ரூபம்போல் சிங்கா சனத்தில் 1035
இருக்கும் பெரியநா கேந்த்ரா !-பருக்கும்
மழைக்கும்ப கம்ப மதயானை வீரிட்டு 1036
அழைக்கும் பெரியநா கையா !-தழைத்தபுகழ்க்
கூள மகிபன் குமாரதுரைச் சித்தமனும் 1037
வாளபய சோதரவ சீகரனே ! நீர்சகல
சம்பனு ! என்று தமிழ்பாடி னேன்தமிழிற் 1038
கம்பனும் என்றார் கவிராஜர்-சொம்புபெறக்
கட்டாக நூறு கவிசொன்னேன் அங்கேஎன் 1039
அட்டாவ தானம்அரங் கேற்றினேன்-அட்டாங்க
யோகக்கா வித்துகிலோர் உள்ளம் மகிழ்ந்தமிர்த 1040
பாகம் எனச்சொல்லப் பண்ணினேன்-த்யாகநிதி
என்னும் பெரியநா கேந்த்ரன் அகளங்க 1041
மன்னன் திருவாய் மலர்ந்தருளி-என்னைக்
கவிச்சக்ர வர்த்திஎன்றான் காவலா நீயே 1042
புவிச்சக்ர வர்த்திஎனப் போற்றச்-செவிக்குநல்ல
முத்துக் கடுக்கனொடு முன்கை தனக்கிணங்கும் 1043
அத்த கடகம்ரத்ன ஆரமணிக்-கொத்துச்
சரப்பணிதும் பிப்பதக்கன் சாலுவைபொற் காந்தி 1044
பரப்பியிடு பொற்சரிகைப் பாகை-தரித்தருள்பீ
தாம்பரங்கள் ஈந்தான் தருப்போல் அவனெனக்கங்கு 1045
ஆம்பரிசில் ஈயும் அதற்குமுன்னே-மேம்படுபோர்
தீட்டுபுகழ்க் கல்லூர்வாழ் திப்பணவேள் எந்தலைக்குச் 1046
சூட்டஒரு முத்துத் துராயீந்தான்-தாட்டிகோத்

அரும்பதவுரை : கன்னி (1033) துள்ளுசீட்டு-அபயக் கடிதம். (1043) அத்த கடகம்-ஒரு விதஅணி. (1044) சாலுவை-போர்வை. (1045) மேம்பாடுபேர்-சபையிலுள்ள பெரியோர்கள்.

தண்டனெனும் கூளேந்த்ரன் தம்பியாம் சிந்தமனோர் 1047
கண்டசரம் ஈந்தான் கழுத்துக்குக்-கொண்டலெனும்

முத்துரா யன்கொடுத்தான் முன்னணிசு மாக்கியணன் 1048
பத்துவரா கன்பெறவோர் பாகீந்தான்-சித்தசனும்

கங்கப்பன் கைக்கொலுசு நல்கினன் மோதிரமென் 1049
செங்கைவிர லுக்கணிந்தான் சிந்தமவேள்-தங்கவளே

ராஜகோ பாலயன் நல்கினன் சீர்கொள்முத்துப் 1050
போஜனொரு முத்துவடம் பூட்டினன்-பேசுபுகழ்

சாந்தபூ பன்கொடுத்தான் சாலுவைநல் நாகரத்னம் 1051
ஈந்தான் கொடிநாகன் என்கையில்-வாய்ந்தபுகழ்

நல்லையனன் நச்சும் நடைப்பரிஈந் தான்உலகம் 1052
சொல்லும் பணிக்காயன் சொக்கலிங்கம்-மல்லிகைப்பூத்

தையலங்கி ஒன்றெனக்குத் தந்தான் பெரியதம்பி 1053
துய்யவெள்ளிக் குண்டொடுசொக் காய்தந்தான்-பொய்யுரையாக்

கூளக் கணக்கன்மணி குண்டலந்தந் தானிரண்டு 1054
தோளிற் குணுக்களவாய்த் தூங்கவே-வேளைக்கு

உதவியதம் பான்கொடுத்தான் ஒன்பதுபொன் பட்டுச் 1055
சதுரன்கை லாச தயாளு-புதுவயிரத்

தண்டோட்டி தந்தான் சவாதுப் பரணிதந்தான் 1056
கொண்டசொக்க லிங்கன் கொடுத்தானோர்-முண்டாசு

சட்டமிடும் சொக்கலிங்கன் தந்தான் கணையாழி 1057
கட்டழகன் பாசிபந்து கட்டினன்-பட்டை

அரைஞாண்தந் தான்பொன் அரைச்சட்டை தந்தான் 1058
வரிசையாம் ராம மகிபன்-முருகுமுத்துச்

சின்னன் உதவினன் தீரன் வடகூளன் 1059
பொன்னால் விருதுதண்டை பூட்டினன்-மின்எறிக்கும்

தாயித்து ராமனன்று தந்தான் திருமலையன் 1060
நேயத்தார் பொற்பூ நிசாறுதந்தான்-தூயதுணைக்

அரும்பதவுரை: கன்னி. (1048) பத்து வராகன் – முப்பத்தைந்து ருபாய். பாகு – தலைப்பாகை. சித்தசன் – மன்மதன். (1050) நல்கினன் – கொடுத்தான். (1052) நச்சும் – விரும்பும். (1053) வெள்ளிக்குண்டு – வெள்ளியால் செய்யப்பட்ட பொத்தன். (1059) மின் எறிக்கும் – சுடர் விடுகின்ற.

காமனிங் தான்நற் கறவைஜந்து கண்டையிட்ட 1061
சோமனிங் தான்அரைக்குச் சோடாக-சோமனெனும்

சோலை சிவப்புத்துப் பட்டிதங் தான்மாடன் 1062
பாலுக்குக் காராம் பசுதந்தான்-மால்குழந்தை

வேலன் எனக்கிரண்டு வெள்ளைஎரு தாய்மேகம் 1063
போலக் கொடுத்தோட்டிப் போஏன்றான்-சீலிபூ

பாலன் கொடுத்தானோர் பச்சைவடம் சோடங்கி 1064
நாலு முடிப்புரொக்கம் நல்கினான்-சீலனெனும்

நல்லமரு தன்கொடுத்தான் நல்ல குதிரைமறி 1065
கல்விதெரி சிக்கணனென் கண்குளிரக்-கொல்லத்துப்

பச்சைக்க பாய்தந்தான் பாரியொத்த காமியங்கே 1066
மெச்சி எனக்கிரண்டு மேதிதந்தான்-உச் சிதமாக்

கூதலுக்குப் போர்வைதந்தான் கொண்டபூ பன்உலக 1067
நாதன் சகலாத்து நல்கினான்-மாதங்கக்

கட்டி கொடுத்தனன்நா கக்கவுண் டன்குருவா 1068
ரெட்டிகொடுத் தானதற்கு ரெட்டிப்பு-தட்டிலிட்டு

நாழிமுத்தை முத்தையவேள் நல்கவர தப்பனொரு 1069
தாழிவில்லை போட்டான் சமுகத்தில்-வாழிஎன

ரங்கையனிங் தானங்கோர் ரத்னகண்டி ராமையனாங் 1070
துங்கன் கொடுத்தான்பொன் தொண்ணூறு-திங்கள்முக

வீரப் பெருமாள் விரலுக்கு வச்சிரக்கல் 1071
சேருற்ற பொன்மோ திரந்தந்தான்-கோர

அநுமத் துவசர் அருங்கருட டாலர் 1072
கனவிருது சிங்கடாற் காரர்-எனவாழும்

அரும்பதவுரை: கண்ணி (1061) கண்டையிட்ட-சரிகைபோட்ட. (1066) கபாய் - சட்டை. மேதி - எருமை உச்சிதாக -உயர்வானக (1067) மாதங்கம்-சொக்கத்தங்கம். (1069) நாழிமுத்து - ஒரு படி முத்து. (1072) டாலர் - கொடி. டால் - கொடி.

எல்லாரும் செம்பொன் இறைத்தாரை ஆனனஞ்சூழ் 1073
நல்லாச னன்பெரிய நாகேந்திரன்-செல்வத்

துரைஎனக்கங் காட்டினுன் சொர்ணுபி ஷேகம் 1074
வரைஎனத்தந் தானேர் மதமா-தரளக்

கவிகைதந்தான் வெள்ளைக் கவரிதந்தான் செம்பொற் 1075
சிவிகைதந்தான் காந்தி சிறந்த-ரவிபோல்

இருட்டகற்றும் தீவட்டி ஈந்தான் மதிபோற் 1076
சுருட்டிதந்தான் தந்தான் துவஜம்-பெருத்தசில

ஊர்தந்தான் உப்பளிக்கை ஊர்தோறும் பண்ணைவைக்க 1077
ஏர்தந்தான் வாழ்வுக்கு இடந்தந்தான்-ஆர்தந்தார்

இந்தத் தியாகம் இவனைப்போல் வாவிஅர 1078
விந்தத்தி யாகவந்த மெல்லியே !-இந்தவிதம்

இப்படியாகத் தன் விருத்தாந்தங்களை விறலியிடம் கூறிய அஷ்டாவதானி, அவளை மிகவும் வேண்டிக்கொள்ளும் தோரணையில், "நடந்த என்கதை முழுவதையும் ஒன்று விடாமல் உன்னிடம் சொல்லி விட்டேன். ஆகையால் இனிய குரல் படைத்த விறலியே ! நீ என் ஊருக்குச் சென்று, என் மனைவியிடம் பக்குமவாகப் பேசி, என் மனக் குறையை எடுத்துச் சொல்லி, இனி எக்காலத்திலும் வேசியின் நேசம் கொள்ளமாட்டேன் என்ற என் சபதத்தையும் கூறி, முன்பு நான் செய்த குற்றங்களை யெல்லாம் சுட்டிக் காட்டி என்னை ஏசாமல் இருக் கும்படியும், என் மீது அவளுக்கு ஆசையேற்படும்படியாகவும் எடுத்துச் சொல்லி, கோபம் நீக்கி, முன்போல் என்னை உறவாக்கிச் சேர்த்து வைக்க, எனக்காக நீ அவளிடம் தூது சென்று வருவாயாக !" என்று சொல்லியனுப்பி விறலியைத் தூது விடுகிறுர் !

என்செய்தி யாதிதொடர்ந் தெல்லாம் உனக்குரைத்தேன் 1079
பொன்செய்த எம்மூர்க்குப் போயினிநீ-மின்செய்த

சிற்றிடையாள் ஆகியஎன் தேவியா ரைக்கண்டு 1080
நற்றிறம்சேர் வீணை நயம்பாடி-மற்றவளுக்கு

அரும்பதவுரை. கண்ணி (1074) மதமா – மதயானை. (1075) கவிகை – குடை. (1076) சுருட்டி – விருதுகளில் ஒன்று, துவஜம் – சொடி. (1077) உம்பளிக்கை – மான்யநிலம்.

என்குறையை மெள்ள இயம்பிஎதிர் சொல்லுமந்தப் 1081
பொன்குறையும் கேட்டூடல் போக்கியே-நன்குறுமென்

ஆசைமனை யாட்டிதனக்கு ஐயங்கார் இன்னுமொரு 1082
வேசைமனைக் கேகுவரோ விட்டெனவால்-ஓசனையுட்

கொள்ளாமல் என்சபதம் கூறிமுன்னைக் குற்றம்நினைந்து 1083
எள்ளாமல் கற்பின் இயல்போதி-உள்ளாரப்

பண்பாடி உட்காம பாணம் படச்செய்து 1084
நண்பாடி என்வரவை நன்கேற்றுக்-கண்பார்க்க

ஓகையாய் முன்போல் உறக்கச் சொல்வாழி 1085
தோகை விறலிநீ தூ து!

[முற்றும்]



அரும்பதவுரை: கண்ணி (1081) மெல்ல இயம்பி – இதமாகச்சொல்லி. ஊடல் – பிணக்கு. (1082) ஓசனை – யோஜனை. (1083] எள்ளாமல் – தூற்ருமல், ஓதி – எடுத்துச்சொல்லி. (1084) நண்பாடி–(ந ண் பு ஆ டி) (சிநேகம் செய்து) (1085) ஓகையாய் –மகிழ்ச்சியோடு.



சேதுபதி விறலி விடு தூது

காதல் பிரபந்தங்களில் விறலி விடு தூது என்ற தலைப்புடன் பல நூல்கள் இருக்கின்றன. அதிலே இதுவும் ஒன்று. இந்த நூலை இயற்றியவர் ராமநாதபுரம் ஜில்லாவைச் சேர்ந்த முதுகுளத்தூரில் வாழ்ந்தவராகும். பெயர் சரவணப் பெருமாள் கவிராயர். சேது நாட்டின் புலவர் பரம்பரையின் வழி வந்தவராகும்.

இந்த நூல் மிகவும் பழமையானது என்று சொல்லுவதற்கில்லை. பத்தொன்பதாவது நூற்றாண்டில்தான் இது பாடப்பட்டிருக்கிறது.

இந்தப் பாடல்களுக்கு இதிலே வசனவிளக்கம் கொடுக்கப்படவில்லை. சுப்ரதீபக் கவிராயர் இயற்றிய விறலி விடு தூதைப் படித்துவிட்டு நேயர்கள் இதைப் படிப்பார்களாதலால், இரண்டுக்குமிடையே கதைப் போக்கிலோ அல்லது சம்பவத் தொடரிலோ அதிக வித்தியாசமில்லாத காரணத்தால் விளக்கம் கொடுக்கப்படவில்லை.

இந்த இரண்டு விறலி விடு தூதுக்களுக்குமிடையே ஏதாவது மாறுபாடுகள் காண்கிறோமென்றால் அது கண்ணிகளின் சொல் நயத்திலும், கதா பாத்திரங்களின் பெயர்களிலும்தான் காண நேரிடும். சுப்ரதீபக்

கவிராயர், தமது விறலி விடு தூதில் கூளப்ப நாயக்கனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டுள்ளார். இந்நூலாசிரியர் சேதுபதியை அந்த ஸ்தானத்தில் வைத்திருக்கிறார். ஒரே வரியில் கூறப்போனால் இது சுப்ரதீபக்கவிராயர் பாடிய விறலிவிடுதூதை அப்படியே பின்பற்றப்பட்டிருக்கிறது.

இந்த விறலிவிடு தூதின் கதையென்ன என்பதை இங்கே சுருக்கமாகக் கொடுத்து விடுகிறோம். இந்த நூலில் கூறப்படும் நிகழ்ச்சிகள் யாவும் தென் பாண்டிய நாட்டிலே நிகழ்ந்தவையாகும். திருவாடானையில் வாழ்ந்து வந்த ஆதிரத்தினம் ஐயர் என்பவரின் மகனான சுந்தரமையன், கல்வி கேள்விகளில் நல்ல தேர்ச்சியுடையவன். சோடச அஷ்டாவதானி. அதாவது ஒரே சமயத்தில் பதினாறு விஷயங்களைக் கிரகித்துக் கொள்ளக் கூடிய கவனம் கொண்டவன். இவ்வளவு சிறப்புப் பெற்ற சுந்தரமையன், பிரிதொரு மங்கையை நாடுகிறான். இது அவன் மனைவிக்குத் தெரிந்து விடவே, மனஸ்தாபம் ஏற்படுகிறது. தன் மனைவியோடு சண்டையிட்டுக்கொண்டு, வீட்டைத் துறந்து வெளியேறுகிறான், சோடச அவதானி.

வெளியேறிய பிறகும் பெண் சபலம் அவனை விட்டு ஒழியவில்லை. வேசியொருவளின் வலையில் வீழ்கிறான். கைப் பொருள் யாவையும் இழக்கிறான். நோயும் நொடியுங் கொண்டு சீரழிகின்ற சமயத்தில், தன் வறுமையைப் போக்கிக் கொள்ள வள்ளலான • சிவசாமி சேதுபதியை நாடுகிறான். பொருள் பெறுகின்றான். தரித்திரம் நீங்கிக் காசோடும் பணத்தோடும் இருக்கும் நிலையில், விடு திரும்பி தன் மனைவியோடு சேர்ந்து வாழ்ந்து, இல்லறத்தை மேற்கொள்ள சுந்தரமையனின் மனம் துடிதுடிக்கின்றது.

ஆனால் அவதானியின் மனதிலே மற்றொரு புறம் திகில் ஏற்படுகிறது. கெட்டழிந்து வீட்டைத் துறந்து வந்துவிட்ட காரணத்தால், மனைவி எத்தகைய கோபங் கொண்டிருப்பாளோ என்று எண்ணி, அவளைச் சமாதானப்படுத்துவதற்காக ஒரு விறலியை மனைவியிடம் தூதாக அனுப்புகிறான்.

அப்போது தன்னுடைய சரிதையை விறலியிடம் ஒன்றுவிடாமல் கூறுகிறான். அவன் கூறியவற்றை, அவன் வாய் மொழியாகவே, கீழே காண்க.

சுந்தரமையன் விறலியிடம் கூறுதல்:

நான் திருவாடானையில் ஆதிரத்தினம் ஐயனின் மகனாய்ப் பிறந்தேன். தெலுங்கு, தமிழ், சமஸ்கிருதம் முதலியவைகளைப் பன்னிரெண்டு வயதுக்குள்ளாகவே கற்றுத் தேர்ந்தேன். திருப்புல்லாணியிலிருந்த மங்களையன் என்பவரின் மகளான துணைமாலை என்பவளை

மணந்தேன். இருவரும் இணை பிரியாமல் இன்பமாக வாழ்ந்து வந்தோம்.

ஒருநாள், உத்திரகோச மங்கை என்ற ஊரில் தேர்த் திருவிழா என்று கேள்விப்பட்டு, அங்கு சென்றேன். அங்கே மாணிக்கம் என்ற வேசையின் வீட்டுக்குச் சென்றேன்; என் கையிலிருந்த பணத்தையெல்லாம் அவளிடத்தில் கொடுத்துவிட்டு, அவளிடம் இன்பமனுபவித்து வரலானேன். அப்படிப்பட்ட ஒரு நாளில் மாணிக்கத்திடமிருந்து விடை பெற்று வீடு திரும்பி வரும்போது, என்னோடு கூட வந்திருந்த பையன் ஒருவனிடத்தில், நான் வேசை வீட்டிற்குச் சென்ற விஷயத்தை என் மனைவியிடம் சொல்லி விடாதே என்று கூறி எச்சரித்து அனுப்பி விட்டு, நதியிலே குளிக்கச் சென்றேன்.

அந்தச் சமயம் பார்த்து அந்தப் பையன் என் மனைவியிடம் சென்று, என்னோடு விழாவிற்கு வந்ததையும், வேசி மாணிக்கத்தின் வீட்டுத் திண்ணையில் அவன் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்த போது, நான் வேசி வீட்டில் நடந்து கொண்டது யாவற்றையும் ஒன்று விடாமல் என் மனைவியிடத்தில் கூறிவிட்டான். குளித்துவிட்டு நான் வீடு திரும்பிய போது, என் மனைவி கடு கடுப்போடு இருந்தாள். அவளை அன்புடன் நெருங்கினேன். "என்னைத் தீண்டாதே! உமக்கும் எனக்கும் என்ன உறவு?" என்று கோபித்துக்கொண்டாள். தாறு மாருகப் பேசினுள். ஏறு மாருக நடந்து கொள்ளும் மனைவியுடன் வாழ விருப்பமில்லாமல் மனம் வெறுத்து வீட்டை விட்டுப் புறப்பட்டு விட்டேன்.

சுந்தரமையன் யாத்திரை

புண்ய ஸ்தலங்களைத் தரிசிக்க அவாக் கொண்டேன். காளையார் கோவில், திருக்கோஷ்டியூர், மதுரை, திருக்கழுக்குன்றம், திருச்செந்தூர் முதலிய பலப்பல தெய்வத் தலங்களுக்கெல்லாம் சென்று. :கடவுளை வழிபட்டு, முதுகளத்தூர் என்ற ஊருக்கு வந்தேன். அங்கே பத்து நாட்கள் தங்கியிருந்தேன்.அப்போது அங்கிருந்த வேதமையன் என்னும் பெரியாரோடு தொடர்பு கொண்டேன். பின்னர் ஒரு நாள் திருமருதூர் என்ற ஊருக்குச் சென்று வரலாமென்று நான் அவரை அழைத்தேன், அந்தப் பெரிய மனிதருக்கு திருமருதூர் செல்வது பிடிக்கவில்லை. "காவிரிப்பூம்பட்டினத்துக் கோவலன், தன் மனைவியான கண்ணகியின் சொல்லை மீறி, மாதவி என்ற தாசியிடத்தில் சென்று, பொருள்களையெல்லாம் இழந்து. கொலைப்பட்ட வரலாற்று நாடகத்தை நீ கண்டதில்லையோ?" என்று என்னைக் கேட்டு விட்டு மருதூருக்கு நான் செல்வது கூடாது என்றும், அந்த ஊர் தாசிகள் நிறைந்த ஊர் என்றும், அங்கே நான் செல்வது தகாது என்றும் கூறினுர்.அவர் என்ன சொல்லியும் நான் கேட்கவில்லை. மருதூருக்குக் கட்டாயம் போய் வரவேண்டும் என்று கூறினேன், உடனே அவர் பின்வருமாறு கூறினுர்.

"அந்த ஊர் தாசிகளின் சாகஸங்களின்றும் மீண்டவர் எவருமே இல்லை. அந்த தாசிகளில் ஒருவளான செங்கமலவல்லி என்பவள், நெடு நாட்களாக மலடியாக இருந்து, குமரக் கடவுளை வணங்கி அவனருளால் பெண் குழந்தை ஒன்றைப் பெற்றெடுத்தாள். தாசிகள் வீட்டில் பெண் குழந்தைகளுக்குத்தானே மதிப்பு! செம்பொன் விளையும் ரசவாதப் பச்சிலையாகவே அந்தப்பெண் குழந்தையைக் கருதி வளர்த்தாள். அந்தக் குழந்தைக்கு வஞ்சகம், சூது, கவடு, பகட்டு, தித்திரிப்பு முதலியவை களை யெல்லாம் கலந்த பாலை ஊட்டினுள். பலவிதமான நகைகளைப் போட்டு அழகு பார்த்தாள். நாட்டியம், சங்கீதம் போன்ற கலைகளை யெல்லாம் கற்றுக்கொடுத்தாள். நல்ல வாலைப்பருவ வயதில் மோதிரங் கள், மூக்குத்தி, தங்கப் பதக்கம் கைவளைகள் முதலிய நகைகளைப்பூட்டி, அவளுக்கு மோகனமுத்து என்று பெயரிட்டாள். பருவத்திற்கேற்றபடி அவளுடைய அங்கங்கள் முழுவதும் பூரண வளர்ச்சியடைந்து புது மெருகுடன் விளங்கின. ஒருநாள், திருவிடைமருதூரில் சுவாமி சந்நிதி யில் மோகனமுத்துவின் நாட்டிய அரங்கேற்றமும் நடைபெற்றது. அவளு டைய நாட்டியத்தைக் கண்டு ரசித்த எண்ணற்ற வாலிபர்கள், அவளை நாடி வர ஆரம்பித்தனர். மோகனமுத்துவும் பருவத்துடிப்பின் காரண மாக வந்த வாலிபர்களின் மீது தன் கவனத்தைச் செலுத்த ஆரம்பித் தாள். இதைக் குறிப்பால் உணர்ந்த தாய்க்கிழவி, தன் மகளான மோகன முத்துவுக்கு, தனது குலத்தொழிலைப் பற்றிய போதனைகளைக் கூற ஆரம்பித்தாள்.

தாய்க்கிழவி போதனை

மோகனமுத்துவை நோக்கி, குலவித்தை என்பது வாழ்வின் பாதிக்காலத்திலேயே வந்துவிடும் என்றும், பலாப்பழத்துக்கு ஈக்களை பிடித்து விட வேண்டாததைப்போல் பருவத்தால் எழில் நிறைந்த அவளை வாலிபர்கள் நெருங்குவார்கள் என்றும், உடல் கட்டு தளர்ந்து, கூந்தல் நரைத்து, கன்னங்கள் குழிவிழுந்து விட்டால் யாருமே அவளைச் சீண்டமாட்டார்கள் என்றும், ஆகவே, நாடி வருகின்றவர்களுடைய பொருள்களை மட்டுமே கவர்ந்து கொள்ளவேண்டுமே தவிர, அன்பு, ஆசை என்பதற்கெல்லாம் இடங்கொடுக்கக்கூடாது என்றும் ஒவ்வொன்ருக போதனை செய்யத் தொடங்குகிருள்.

வருகின்றவனேடு தாம்பூலம் தரிப்பதற்கும் பொய் மொழி சொல்வ வற்கும் அஞ்சக்கூடாது என்றும், பொருளைப் பறிப்பதில்தான் நாட்டம் கொள்ள வேண்டுமென்றும், அதைப் பறிப்பதற்கு என்னென்ன செய்ய வேண்டும் என்றும் கூறுகிருள். குறிப்பாக, கொக்கோம் படிந்தறிந்த யாராக இருந்தாலும் அவர்கள் செம்பொன்னை அளக்காமல் அள்ளி அள்ளிக் கொடுத்தால்கூட அவர்கள் அவர்களுடன் சேரக்கூடாது என்று கூறுகிருள்.

ஏமாற்றுவதற்கும், வஞ்சனை செய்வதற்கும், பொய் சத்தியம் செய்வதற்கும், கொஞ்சங்கூடத் தயங்கக் கூடாது என்றும், பொய் சொல்வதும் கண்வீசுவதுந்தான் குல வித்தையென்றும், இதற்காகத் தெய்வம் தம்மை ஒன்றும் செய்து விடாது என்றும், தலைவிதிப்படியே எல்லாம் நடக்கும் என்று கூறிவிட்டு, தனது அனுபவங்களையும் அவளுக்குச் சொன்னாள்.

அந்தத் தாய்க்கிழவியின் இந்த போதனைகளையெல்லாம் கவனமாகக் கேட்டுக் கொண்ட மோகன முத்து, நடைமுறையில் அந்தப் போதனைகளில் ஒன்றைக்கூட மறக்கவில்லை; இம்மியளவும் விட்டுக் கொடுக்கவுமில்லை. எனவே, எண்ணற்ற காம வெறியர்கள் மோகனமுத்துவின் மோக வலையில் சிக்கி, பொன்னையும், பொருளையும், மதிப்பையும், மானத்தையும் இழந்தனர்.

* * *

வேதமய்யர் இதையெல்லாம் சொன்ன போதிலும், மருதூருக்கு செல்லவேண்டும் என்ற ஆசை எனக்கு மாறவில்லை. எனவே அவரை மிகவும் வற்புறுத்தி அவரையும் என்னுடனேயே அழைத்துக்கொண்டு, திருவிடை மருதூர் கோவிலுக்குச் சென்றேன். அன்று, அந்தக் கோயிலில், மோகனமுத்துவின் பரதநாட்டியம் நடந்து கொண்டிருந்தது. அவளுடைய ஆட்டத்திலே நான் சொக்கி விட்டேன். ஆடல் முடிந்து அவள் தன் வீட்டுக்குப் புறப்படும்போது, நானும் கூட வந்திருந்த வேதமய்யரையும் மறந்து அவளைப் பின் தொடர்ந்து புறப்பட்டு விட்டேன். நான் மட்டுமா சென்றேன்? எத்தனையோ பேர் சென்றார்கள்! அவர்களில் நானும் ஒருவனாகத்தான் சென்றேன். வீட்டு வரையில் அவளைப் பின் தொடர்ந்து சென்ற நான், அவள் தனது வீட்டிற்குள் நுழைந்த பின்னும் எனக்குப் பின் தொடரத் துணிவில்லை. மயங்கி வாசலிலேயே நின்றேன்.

உள்ளிருந்து தோழி ஒருத்தி வந்தாள். மோகனமுத்துவை அடைய திரண்ட பொன் கேட்டாள். எது போனாலும் கவலைப்படாத நிலையில் இருந்தநான்; அவள் கேட்டபடி 1750 பொன் கொடுத்தேன்.

அந்தப் பணத்தை வாங்கிக் கொண்டு உள்ளே அவள் சென்றாள். அடுத்த வினாடியே ஒன்பது பணிப் பெண்கள் வெளியே வந்து எனக்கு ஆசார உபசாரம் செய்து உள்ளே அழைத்துச் சென்றனர்.

நாணமே உருவாய், பிறரை ஏறெடுத்துப் பார்த்துப் பரிச்சயமில்லாதவள் போல் இன் முகத்தைக் காட்டியும் காட்டாமலும் என் எதிரில் வந்து நின்றாள். ஆசையோடு என்னைப் பருகி விடுபவள்போல் பார்த்தாள். நேசத்தைக் கண்களில் பிரதிபலிக்க விட்டாள். "சுவாமி! உம்மை ஆடலரங்கிலிருந்தபடி அப்போதே கண்டேன். ஆசை கொண்டேன். ஆடல் முடிந்தவுடன் உங்களை அழைத்து வரும்படி என் தோழியிடம் கூறினேன். உம்மை அவளால் கண்டு பிடிக்க முடியவில்லை. தெய்வம்தான் உங்களை இப்போது கொண்டுவந்து சேர்த்திருக்கிறது.

வந்தீர்களே, வாசலிலேயே ஏன்நிற்கவேண்டும்? காசுஏன்கொடுத்தனுப்பினீர்கள். இந்தக் காசுக்கா உங்களை எதிர்பார்த்தேன். நேசம் இருந்தால் போதுமே!" என்றெல்லாம் குழைந்து குழைந்து பேசினாள். அவள் பேசப் பேச பாகாய் உருகி விட்டேன்! அவள் சொன்னதெல்லாம் நிஜமென்று முகுந்து போனேன்! வீணை எடுத்தாள். சுருதி மீட்டினாள். இசை வெள்ளம் பெருக்கெடுத்தது. என் மனதிலும் ஆசை வெள்ளம் கரை புரண்டது.

இந்தச் சமயத்தில் தாய்க் கிழவியும் அங்கு வந்தாள். முகமன் கூறினாள். என் வரவினால் அவள் தன்யமானது போலெல்லாம் பேசினாள். "என் பெண் கன்னி கழியாதவள்! உங்களுக்கென்றுதான் அவள் காத்திருந்தாளோ என்னவோ, எவரையும் ஏறெடுத்துப் பார்க்காமல் பிடிவாதமாய் இருந்து வருகிறாள்! நீங்கள் தெய்வம் போலே வந்திருக்கிறீர்கள். கூடிக் குலாவி சுகமுற்று என்றும் இன்றுபோல் என்றும் இருங்கள்!" என்றெல்லாம் உபசரித்துச் சென்றாள். சென்றவள் பாலும் பழங்களும் கூடக் கொடுத்தனுப்பினாள்!

பிறகென்ன? அவள் அழகை மட்டுமல்ல, அவளுடைய எழிலான உடல் எனக்கே சொந்தம் போலாகி விட்டது. அங்கேயே தங்கினேன். விரும்பியபோதெல்லாம் அவளோடு மருவிக் கலந்து மயங்கிச் சுகித்து இன்பம் அனுபவித்து வந்தேன். வேறெந்த நினைப்பும் எனக்கில்லை. எல்லாம் அவளே! யாவுமே அவள் அசைவில் லயித்தது. என்ன மருந்திட்டாளோ என்னவோ! என் கைக் காசுகளையெல்லாம் அவளுக்காகவே செலவழித்துக் கறைத்துவிட்டேன்.

என் கைக்காசு கறைந்ததும் என்னை வீட்டை விட்டே துரத்திவிட முற்பட்டாள். எங்களுக்குள் அடிபிடி கூட நடந்தது. பஞ்சாயத்தாரிடம் போய் நிற்கவேண்டிய நிலைக்கும் வந்தேன். பஞ்சாயததரைக் கூடவைத்து என்னைப் பற்றி முறையிட்டாள். தாய்க்கிழவி நடக்காததையெல்லாம் நடந்ததாகச் சொன்னாள்.

"இந்தச் சண்டிப் பார்ப்பான், முன்பு ஒரு சமயம் எங்கள் வீட்டிற்கு வந்திருந்தான். என் மகளுடன் சேர்ந்திருந்தான். பொழுது விடிந்தவுடன் போய்விடுவான் என்று நான் நினைத்தேன். ஆனால், இவன் போகவில்லை. என் மகளுக்கு சொக்குப்பொடி போட்டுவிட்டு, என் வீட்டோடு இருந்து என்சொத்து சுகத்தைபெல்லாம் நாளாவட்டத்தில் அபகரித்து கொண்டு விட்டான். 'போடா' என்றால் இப்படியெல்லாம் அடித்து அலைக்கழிக்கிறான் என்று முறையிட்டாள். அத்தனையும் பொய் என்று அலறினேன். ஒட்டாண்டியாக்கி விட்டாள் என்று குமுறினேன். வஞ்சிக்கப்பட்டது யார் என்பதை என் உடம்பைப் பார்த்துத் தெரிந்து கொள்ளும்படி பஞ்சாயத்தாருக்குக் கூறினேன். நான் அவளுக்கென ஒரு காசுகூட செலவழித்ததில்லை என்று கிழவி மறுத்து ஓலமிட்டாள். மேலும் நான் அவமானப்பட விரும்பாததால் "இவளுக்கு வாங்கிக் கொடுத்த நகைகளைக் கேட்கவில்லை. ஆனால், நான், இவளிடம் கொடுத்து வைத்திருந்த காற்படி முத்தையும் ஆயிரம் பொன்னையும்

கையகலமுள்ள வைரத்தையும் வாங்கிக் கொடுத்து விடுங்கள்', என்றேன்.

உடனே மோகனமுத்துவின் தாய் எந்தெந்த தெய்வங்களின் பேரிலோ சத்தியம் செய்து, "அந்தப் பொருளை என்றைக்கு நீ கொடுத்தாய்?" என்று என்னையே கேட்டு தூஷித்தாள். அது மட்டுமா? என்னை மிகவும் கேவலமாக அந்தச் சபை முன்பு அவமானப் படுத்தினாள்.

அந்தச் சமயத்தில், சபையிலிருந்த ராமசாமி ஐயர் என்பவர் என்னிடத்தில் வந்து, "மை விழியார் தம் மனை அகல் என்ற ஔவையாரின் முதுமொழி உமக்குத் தெரியாதோ? கூட்டி வந்தால் தெய்வமல்லோ கொல்லும்' என்றார்.

நானோ அதே ஔவையார் 'கூடிப் பிரியேல்' என்றும் 'மெல்லி நல்லாள் தோள் சேரவேண்டும்' என்றும் கூறியிருப்பதைச் சொன்னேன். அங்கிருந்தவர்கள் எல்லோரும் சிரித்தார்கள். நானும் சிரித்தேன். என்னை அம்பலத்தில் ஆட்டி வைக்க வேண்டாம் என்றும் மோகனமுத்துவுடன் என்னைக் கூட்டி வைத்தாலே போதும் என்றேன்—சபையோரிடத்தில்

உடனே சபையினர்கள் என்னைப் பார்த்து, "ஏனய்யா! உமக்கு ஒருவர் புத்தி சொல்லவும் வேண்டுமா? வேசியுடன் அம்பலத்துக்கு வரலாமா? வேசையுடனும் வியாபாரியுடனும் கொள்ளும் உறவு, காசு பணம் இருக்கும் வரையில் நிலைத்திருக்கும் என்ற போதனையையும் தனம், கல்வி, அயலான் மனைவி மேல் கொள்ளுகின்ற நேசம், ஈரமில்லாத நெஞ்சத்தையுடையவர்களின் நேசம், இவையெல்லாம் நீரின் மேல் எழுதிய எழுத்தாகத்தான் இருக்கும் என்பதையும் நீங்கள் கேள்விப்பட்டது இல்லையா?

"வேசையின் மனத்தில் பற்று இராது என்று கூறுகின்ற பழைய பாடல்களை நீங்கள் படித்ததில்லையா? அவர்களுக்குப் பக்தியும் கிடையாது. தனுக்காக நம்மோடு பேசி 'சாவேன்' என்பார்கள். அதனால் தீயையும், சண்டாளர்களையும், தாசிகளையும் கண்டு நாம் ஒதுங்குவது தான் நல்லது. இத்தகைய தாசிகளை நம்புவது என்பது நட்ட நடு ஆற்றில் முளைத்திருக்கும் நாணற் புல்லை நம்புவது போலத்தான்!

"எனவே, இவர்களின் நேசத்தை விட்டு விடுங்கள். திருடனுடைய உறவு, மேட்டின் மேல் வைத்த இலவம் பஞ்சு, கருடன் வாயில் சிக்கிக் கொண்ட பாம்பு, காட்டு மழை, சவத்திற்கு செய்த அலங்காரம், வேசையருக்குச்செலவழித்தபணம் இவையெல்லாம் ஒருக்காலும் மீள வராது. எனவே, போனது போகட்டும். இப்போது தான் என்ன? உமக்கும் இருக்கும் வித்தையைக் கொண்டு, ஒரு கோடிப் பொன் கூடச் சம்பாதிக்கலாமே!" என்று என்னைத் தேற்றினார்கள்.

அவர்கள் ஒரே வார்த்தையில் சொல்லிவிட்டார்கள், மோனமுத்துவை விட்டுப்போய்விடு என்று! பெண் ஆசை என்னை விட்டுப் போகுமா? பிரமை பிடித்து நான் நின்று கொண்டிருந்தேன், தன் பெண்ணைக் கூட்டிக்கொண்டு விரைந்து நடந்து சென்றுள் தாய்க்கிழவி. போகும்போது மோகனமுத்து என்னை ஒரு முறையாவது திரும்பிப் பார்ப்பாளா என்று எண்ணினேன். அவளும் பார்க்கவில்லை. நானும் அங்கிருந்து புறப்பட்டேன். ஊருக்குத் திரும்பிச் செல்வதற்கும் எனக்குத் தெம்பில்லை. என் மனைவியின் நிலையும் தெரியவில்லை. என்னை நடுத் தெருவில் நிற்க வைத்து விட்ட அந்தக் கூனி மீது அறம் பாடி அழித்து விடலாமா என்று கூட ஏங்கினேன். பிறகு சிந்தித்தேன். நான் சீரழிந்ததற்கு நான் தானே காரணம் என்பதை உணர்ந்தேன். மனம் மிகமிக வருந்த, மோகனமுத்துவின் மோகத்தை மறந்து, மருதலிங்கரைத் தரிசிக்கக் கோவிலுக்குச் சென்றேன்.

அங்குள்ள தெய்வத்தின் மார்பில் பதக்கமொன்றைக் கண்டேன். எத்தனையோ க்ஷேத்திரங்களுக்குச் சென்றிருக்கிறேன். ஆனால் எந்தக் கோவிலுமே அம்மாதிரியான ஒரு ஆபரணத்தைக்கண்டதில்லை.எனவே அந்தக் கோவில் அர்ச்சகரான தில்லை முத்துசாமி பட்டரை விசாரித்தேன். முகவை வேந்தனாகிய சிவசாமி சேதுபதி அந்தப் பதக்கத்தை வாங்கிப்போட்டதாகக் கூறினர். அம்மனுக்கும் மணிமாலைசூட்டியிருப்பதைக் காண்பித்தார். பிறகு நான் யோசித்துக் கொண்டிருக்கும்போதே ஒரு மண்டபத்தைக் காண்பித்தார். அதையும் சேதுபதி மன்னர்தான் கட்டியதாகக் கூறினர்.

உடனே என் கடந்த காலம் எனக்கு வேதனையளித்தது. மோகன முத்துக்குக் கொடுத்து அழித்த பொருளை இம்மாதிரித் திருப்பணிக்குச் செலவிட்டிருந்தால் என் பெயர் நிலைபெற்றதாக இருக்குமே என்றெல்லாம் நினைத்தேன். இப்படியெல்லாம் நான் ஒவ்வொன்றையும் பார்த்து வியந்து விசாரிக்கும்போது, ஒவ்வொன்றும் ஒவ்வொரு சேதுபதியின் கட்டளை என்பது தெரியவந்தது. அந்த மோகனமுத்துவுக்காக நான் அழித்த செல்வத்தைக் கொண்டு, இதுபோன்ற நினைவுச் சின்னங்களில் எதையாவது செய்திருந்தாலுங்கூட என் பெயரும் புகழும் நிலைத்திருக்குமே என்று எண்ணி வருந்தினேன்.

பிறகு என் பாபத்தைத் போக்கிக்கொள்ள க்ஷேத்ராடனம் செய்யப் புறப்பட்டேன். வழியிலே, சில அவதானிகள் பல்லக்கிலே சென்று கொண்டிருந்தனர். அவர்களை விசாரித்தபோது, அவர்கள் சேதுபதியின் அவதானியன் என்று கேள்விப்பட்டேன். சேதுபதியைப்போய் பார்த்தால் என்னையும் அவர் ஆதரிப்பார் என்று அவர்கள் கூறினர்கள். நான் சேதுபதியைப்பற்றிய அடையாளங்களைக் கேட்டேன்.அவர்கள் அவனது கொடியைப்பற்றியும், முரசைப்பற்றியும் அடையாளங்கள் கூறினர்கள்.

மருதூரை விட்டுப் புறப்பட்டபோதுகூட, எனக்கு மோகன முத்துவைப் பற்றிய நினைவுதான் வந்தது. ஆனை இருந்த வாசலிலே,

பூனை இருப்பது போலவும், புலி இருந்த கூட்டிலே எலி இருப்பது போலவும், மோகனமுத்துவின் வீட்டில் நான் இருந்த ஸ்தானத்திலே எனக்குப் பிறகு வேறு யார் அவளுடன் குலவிக்கொண்டிருக்கிருளோ என்று நினைத்தேன். பிறகு, வெகு பிரயாசைப்பட்டு அவள் எண்ணங்களை மறக்கடித்துக்கொண்டேன். என் நினைவு மாறியது. கடவுளை வணங்கி விட்டு அவ்வூரை விட்டுப் புறப்பட்டுவிட்டேன்

போகும் வழியில், ஆதியிலேயே எனக்குப் புத்தி சொன்ன வேதமய்யர் என்னைச் சந்தித்தார். இளைத்திருந்த என் உடலைக் கண்டு மிகவும் வருந்தினுர். அவருடைய புத்திமதியைக் கேளாததால் எனக்கு ஏற்பட்ட இன்னல்களை அவருக்கு எடுத்துரைத்தேன்.

அவர், யானைக்கும் அடிசருக்கும் என்றும், நடக்கிற கால் இடறுவது சகஜம் என்றும், எல்லாம் ஊழ்வினைப் பயன்தான் என்றும், மன்மதன் சிவனால் எரிக்கப் பட்டதும், சந்திரன் அழிந்ததும் எல்லாம் விதிப்பயன் என்றும் கூறி, எனக்கிருக்கும் வித்தைக் கொண்டே நான் பெருவாழ்வு வாழலாம் என்றும், 'கைப் பொருள் தன்னிலே மெய்ப் பொருள் கல்வி' யென்றும், ஆறுதல் கூறிச் சென்ருர். பிறகு நான் அரண்மனைக்குச் சென்று, சேதுபதியைக் கண்டேன். அவர் கொலுச் சிறப்பைக் கண்டு வியந்தேன். அவரைப் புகழ்ந்து பாமாலை ஒன்றைப் பாடினேன். மன்னன் என்னை வியந்து பாராட்டி எனக்கு சோமன், அங்கி, சால்வை மாணிக்கம் பதித்த மோதிரம், முத்தாரம், கண்டி, முருகு, யானை, குதிரை, ஒரு கோடிப் பணம் முதலியவற்றை வழங்கினுர்.

மன்னரின் உறவினர்களும், மற்றவர்களும் அவரவர் தகுதிகளுக்கு தக்கவாறு எனக்குப் பரிசுகள் வழங்கிக் கௌரவித்தார்கள். எனவே எல்லாச் செல்வத்தையும் நான் அடைந்து இப்போது மகிழ்ச்சியோடு இருக்கிறேன்.

* * *

இப்படியாகத் தன் வாழ்வில் நடந்தகதையைக்கூறிவிட்டு, "விறலியே! நீ என் மனையாளிடத்தில் சென்று, அவளுடைய மனத்தை மாற்றி, நான் பட்டகஷ்டங்களையும் அவளுக்கு சொல்லி, நான் இப்போதிருக்கும் நல்ல நிலைமையும் எடுத்துக் கூறி, நான் அங்குவருங்கால் அன்போடும், மலர்ச்சியோடும் என்னை எதிர் கொண்டு வரவேற்கும்படி அவள் மனதைமாற்றி வருவாயாக!" என்று சொல்லி விறலியை தூது செல்லும்படி வேண்டுகிருர். விறலியிடம் கூறி அனுப்புகிருர் சுந்தரமய்யர்.

* * *

இதுதான் சேதுபதி விறலி விடு தூது எடுத்துச் சொல்லும் கதை.

இந்த விறலி விடு தூது பாடப்பட்ட காலம் பத்தொன்ப தாவது நூற்றுண்டு என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. ஆனுல், இதில் பாட்டுடைத் தலைவனுக இடம் பெற்றிருக்கும் சிவசாமி சேதுபதி என்பவர் சேதுபதி பட்டத்தில் வீற்றிருந்ததாகச் சரித்திரங்களில் காணப் படவில்லை அதனுல் இந்த சிவசாமி என்பவர் சேதுபதி பரம்பரையில் வழிவந்த ஒரு பெருந்தனக்காரர் என்றே கொள்ள வேண்டும்.

இந்த இரண்டு 'விறலி விடு தூது'களுக்கிடையே எது சிறந்தது என்பதை எடைபோட்டு நிர்ணயிப்பது தேன்பாகு ருசியா, தித்திக்கும் செங்கரும்பு ருசியா என்று சர்ச்சை செய்வதுபோலாகும். இந்த 'விறலி விடு தூது' அருமையான கவிதைநயத்தோடு கன்னல் தமிழில் பாடப்பட்டுள்ளது—சுவைப்போமாக.

சேதுபதி விறலி விடு தூது

காப்பு

திருமருகன் தேவைச் சிவசாமி செல்வத்
தருமருமன் மேல்விறலி சாற்றக் - கருணைசெய்வான்
மாதங்கத் தான்அனத்தான் மாதவன்வா னேர்பரவு
மாதங்கத் தானனத்தான் வந்து.

விறலி புகழ்

திருமாலும் பொன்னுலகத் தேவர்களும் தேவர் 1
பெருமானும் இன்பம் பெருக - வரிசேர்.

வடஅரவம் பூட்டிநெடு மந்தரத்தை நாட்டிப் 2
புடவிஅதி ரத்திருகும் போது - கடலில்

புடைபட்டு எழுந்துவந்த புத்தமிழ்தம் அந்நாள் 3
கடைபட்ட தென்று கடத்தி - வடிஇட்ட

தேங்குழம்பைக் கள்ளுவெறி சேர்ந்த தெனஅகற்றி 4
மாங்கனிக்கும் கொஞ்சம் வடுக்காட்டிப் - பூங்குயிலை

ஆங்கோது சின்னம்என்றும் ஆலைக் கருப்பமொழி 5
தாங்கோது பட்டதென்றும் தள்ளிவைத்துப் - பாங்கிலிசை

பொங்குதமிழ்ப் பால்வாங்கிப் பூங்கருணைத் தேன்கலந்து 6
மங்களரா கப்பாகின் மத்தித்துச் - சங்கீதக்

கான ரசம்எழுப்பிக் கற்றோர் செவிக்கமுத 7
பானரசம் என்னஇசைப் பண்காட்டித் - தானொருபால்
கிள்ளைமொழி வந்துகற்கக் கேட்கும் குழல்வகைகள் 8
உள்ளதெல்லாம் பேசாது ஒழிந்துவிட - வெள்ளைநிறப்
பாரதியும் நாரணியும் பார்மகளும் தும்புருவும் 9
நாரதரும் வந்து நயம்கேட்பச் - சாரமுள்ள
பத்தர்மனம் தானுருகப் பட்டமர மும்தழையச் 10
சித்திரமும் கூடச் சிரம் அசைக்க - எத்திசையும்
விண்டுருகக் கற்றறிந்தோர் மெய்யுருக இன்பரசம் 11
கண்டுருகக் கல்லும் கரைந்து'ருகத் - தொண்டைசற்றும்
விக்காமல் வீணையிசை மிஞ்சாமல் பாடியசொல் 12
திக்காமல் ராகம் சிதையாமல் - பக்கத்தில்
சித்தம் கலையாமல் சிற்றிடைதள் ளாடாமல் 13
குத்து முலையும் குலுங்காமல் - கத்திமுனை
வெல்லம்போ என்னும் விழியிமையும் கொட்டாமல் 14
வெல்லம்போல் பாடும் விறலியே ! - வல்லமையாய்
மன்மதநூல் பார்க்கும் மதியுள்ள வாலிபர்க்குச் 15
சொன்ன முலைக்கோட்டுச் சொர்க்கமே ! - எந்நாளும்
காகம் பறவாத காமக் கடல்நடுவே 16
நாக சுனைகாட்டும் நாயகமே ! - மோகவெறி
ஏர்காட்டும் காமத் திளையோர் விளையாட்டுப் 17
போர்காட்டும் ஆலவட்டப் பூந்தேரே ! - யாரும்
வரிசைத் திருநிதம்ப மண்டபத்தைக் கண்டு 18
தெரிசிக்க முத்தி தரும் தேவே ! - பருவமுள்ள
வேடிக்கை வாலிபரை வித்தாரக் கொச்சிமஞ்சள் 19
வாடைக்குள் ளாக்கும் மருக்கொழுந்தே ! - நாடிப்பொன்
பாரப் பலாச்சுளைக்கும் பாலுக்கும் மாங்கனிக்கும் 20
சாரச் சுவைபயிற்றும் சர்க்கரையே ! - பேருற்ற

அரும்பதவுரை ; கண்ணி வரிசை, (6) மத்தித்து-கடைந்துகூட்டி; (7) ஒரு பால்-ஒரு பக்கம்; (8) கிள்ளை-கிளி; (9) பாரதி-கலைமகள்; நாரணி-திருமகள்; தும்புரு-ஒரு இசை ஞானி; (10) பத்தர்-அடியார்கள்; (11) விண்டு-பிளந்து. தொண்டை-குரல்; (12) வீணையிசை மிஞ்சாமல்-தும்புருவின் சுருதியை விட்டு நழுவாமல்; (13) சித்தம் கலையாமல்-சிந்தனை சிதறிவிடாமல். (14) வெல்லம்போ-வெற்றிதரக் கூடிய அம்போ. வல்லமையாய்-தேர்ந்தவளாக. (15) சொன்னம்-பொன்; கோடு-சிகரம்.

கோபால சக்கரத்தைக் கொண்டு கொடுத்துமுத்து 21
யாபாரம் செய்யும்முத லாளியே ! - சோபமொடு

சொம்பாய் அநுதினமும் சுற்றிஇளை யோர்களாம் 22
கொம்பானை வந்துவிழும் கொப்பமே ! - நம்பிஎதிர்

வக்கணையே பேசிவரும் வாலிபராம் காளைகளைச் 23
சிக்கிப் பிடிக்கும் திருகுணியே ! - தக்கோருக்கு

எவ்வளவும் தன்மம் அறிந்து ஈயார் புதைத்தபொருள் 24
அவ்வளவும் பார்த்தெடுக்கும் அஞ்சனமே செவ்வாகப்

பாரிலிளை யோர்களெனும் பாரவரால் கன்றுகளை 25
வாரிப் பிடிக்கும் மணிவலையே! - சீராக

வென்றியுள்ள வாலிபர்தம் வீட்டிலெலாம் போய்வலியச் 26
சென்றுவிழும் ஜோதிமணித் தீபமே !- துன்றும் இருள்

காம்போதி தோளரம்பைக் கன்னியரும் காதல்வைக்கக் 27
காம்போதி பாடிவருங் காரிகையே !- தேம்பொதிந்த

பாகனரா கங்காட்டிப் பண்காட்டிக் கண்காட்டி 28
மோகனரா கங்காட்டும் மோகனமே !- நாகமன்னன்

நாட்டையர சாட்சிசெயும் நங்கைசெவிக் காரமுதாய் 29
நாட்டைநயங் காட்டும்மதன் நாட்டமே ! - சூட்டுமணி

நாகவரா ளிக்கிசைக்கொண் ணுதவநு ராகநய 30
நாகவரா ளிக்கிசைந்த நாயகமே ! - மேகநிறச்

சாரங்கர் ஆகந் தழுவியின்பத் தேனூட்டும் 31
சாரங்க ராகப்ர சங்கமே ! - சீர்பொங்கும்

பாடி இராகவன்பேர் பாரவருக் குண்டாகத் 32
தோடியிரா கம்பாடும் தோகையே ! - மோடிசெய்து

கத்தரிப்புட் கொண்டகடுங் கல்நெஞ்சை யும்கரைக்கும் 33
தித்திரிப்புக் கேற்ற சிரோமணியே ! - பைத்தசொர்ன

அரும்பதவுரை; கண்ணி வரிசை; (22) சொம்பாய்–அழகாக; கொப்பம்–பள்ளம். செவ்வாக–ஒழுங்கான முறையில். (25) பாரவரால்–கனமான வரால் மீன். (26) துன்றும் இருள்–அடர்ந்த இருட்டு. (32) பாடி–ஆயர் குடி. (33) கத்தரிப்புட் கொண்ட–கத்தரிப்புத் தொழிலைக்கொண்ட. தித்திரிப்பு–தானபேதம்.

வாசகர்கள் கவனிக்க : அச்சுப் பிழை காரணமாக பக்க நெம்பர் மாறியிருக்கிறது. 201லிருந்து 208வரை பக்கம் கிடையாது. ஆனல் தொடர்ச்சி விட்டுப் போகவில்லை.

விண்ட துயரமுலை மேனகையே ! யான்வருத்தம் 34
கொண்ட துயரமெலாம் கூறக்கேள் ! - பெண்டியுடன்

தன் கதைச் சுருக்கம்

பூசலிட்டுக் காற்ருடி போல்சுழன்று நான்சிலநாள் 35
தேசமெட்டுத் திக்கும் திரிந்ததுவும் - வாசத்
திருமருதூர் சேர்ந்து திருகுணிக்குள் சிக்கி 36
வரும்எருதாய்த் தாசி வசமாகி - உருகியதும்
என்இளமை வேசைமகட்கு ஈந்ததுவும் கூனிகைக்குள் 37
சொன்னமெலாம் நான்கொடுத்துத் தோற்றுதுவும் - கல்நீலி
வைததுவும் சேர்ந்திருந்த மாஞளும் கூடிவஞ்சம் 38
செய்ததுவும் அம்பலத்தில் சேர்ந்ததுவும் - தொய்யஎனை
ஆட்டவட்டம் கொண்டதுவும் அப்பால் உபாயமதாய் 39
வீட்டைவிட்டுத் தூர விரட்டியதும் - கோட்டுமுலைக்
கன்னியைநான் விட்டு கடந்துவெளி யேறியதும் 40
தென்முகவை யம்பதியில் சேர்ந்ததுவும்-அன்னையன்ன

பாடல் தலைவன் சிறப்பு

வன்திக்கு வந்ததுவும் மங்கைமங்க ளேசரடி 41
வந்திக்கும் தூய மனத்தானை - முந்தமரில்
சிந்துரத்தம் சிந்துரத்தைச் சேரமரு வார்தளத்தைச் 42
சிந்துரத்த கைச்சிந் துரத்தானை - வந்துகப்பம்
காணவைத்துப் பொன்முடிமேல் கையைவைத்துப்
போற்ருதார் 43
தாணையத்தை வென்ற தளத்தானைச் - சேனுலவும்
பேரானைத் தன்மநிலை பேரானைத் தென்முகவை 44
ஊரானை அர்ச்சுனன்தேர் ஊர்ந்தானை - நேரான
செஞ்சொல்நவ ரஞ்சிதசெ யம்பெறுது ரந்தரனை 45
அஞ்சலர்இ றைஞ்சுசர ணும்புயனைத் - தஞ்சமென்று

அரும்பதவுரை: எண் வரிசை; 34. விண்டு - மலை; அது ஒத்த உயரமுலை - குன்று போல உயர்ந்த தனம்; 35. பூசல் - சண்டை; 36. திகுகுணி - செக்கு; 39. கோட்டு - கொம்பு; 40. முகவையம் பதி - இராமநாதபுரம்; 41. வந்திக்கும் - வணக்கம் செய்யும்; மங்கை - உத்தரகோசமங்கை; அமர் - போர்க்களம். 42. சிந்துரத்தம் சிந்துரத்தை - இரத்தம் சிந்துகின்ற யானை; மருவார் - எதிரிகள்; 43. தாணையம் - சேனை; 44. தன்மநிலை - தர்ம வழி; பேரான் - நகராதவன்; 45. அஞ்சலர் - பகைவர்; - சரண - அம்புயம் - பாத்தாமரை.

வந்தவர்ச காயன்விசு வாசசது ரங்கதள 46
தந்த்ரபுய மந்தரச வுந்தரனைத் - தந்திரமாய்
எத்தளப்புப் பார்க்குமொன்னுர் எழுசுற்றுக்
கற்கோட்டைக் 47
கொத்தளத்தைத் தூளாக்கும் கோமானை - நித்தநித்தம்
கப்பமிடச் சொல்லிக் கலிங்கருக்குச் சீட்டெழுதி 48
ஒப்பமிடும் தென்முகவை ஊரானைச் - செப்புமுலைத்
தையலர்க்கு வேளைத் தனுக்கோடி காவலனைத் 49
துய்யகடல் தொண்டித் துறையானைச் - செய்யவள
மேதினியாள் முத்து விஜய ரகுநாத 50
சேதுபதி செல்வச் சிரோமணியை - மாதரசி
விண்மணியாய் வந்தமுத்து வீராயி நாச்சியார் 51
கண்மணியை மன்னவர்சி காமணியை - எண்ணுபுகழ்
நாதன் விஜயரகு நாத சிவசாமி 52
சேது பதியை ஜெயபதியை - ஆதிபனைக்
கண்டதுவும் எங்கோன் கருணைமுகம் பார்த்துமகிழ் 53
கொண்டதுவும் தண்டமிழ்யான் கூறியதும் - பண்டென்
கலியார் கலியைக் கடந்தப்பால் ஓடிப் 54
புலியாரைக் கண்டமான் போல - விலகியதும்
செல்வம்வந்து கூடியதும் சித்தமகிழ்ந் தென்மனையாள் 55
நல்வசனம் காணமனம் நாடியதும் - மெல்லமெல்ல
இங்கவளைத் தேடிநான் இன்றுவந்து சேர்ந்ததுவும் 56
தங்கவளைக் கைமாதே சாற்றக்கேள் ! - எங்குமலர்

தசாங்கம்

1. மலை

கொந்தூரும் பூஞ்சோலைக் கொம்பெல்லாம் கார்மேகம் 57
வந்தூரப் பிள்ளை மதியூரர்ச் - சந்தூரும்

அரும்பதவுரை: கண்ணி வரிசை; 46. சதுரங்கதளம் - நாற்படைச் சேனை; புய மந்த்ரம் - குன்று போன்ற தோள்; 47, எத்தளப்பு - ஏமாற்றுதல்; 48. ஒப்பம் - லிகிதம்; கொத்தளம் - மதிள்; 49. தையலர்க்கு - பெண்களுக்கு; - வேள் - மன்மதன்; 52. விஜய ரகுநாத சிவசாமி சேதுபதி - பாடல் தலைவனின் பெயர்; 53. தண்டமிழ் - குளிர்ச்சியான தமிழ்; 54. கலி ஆர்கலி - துன்பக் `கடலின் அலைபோன்ற துன்பங்கள்; 57. கொந்து - பூங்கொத்து; சந்து- சந்தனம்.

தென்றல்கால் தேடிச் சிலைமாரன் வந்திருக்க 58
மன்றல்கா தேடிமக வானிருக்கத் - தென்தமிழைப்

பன்னுகும்பன் இப்பூமி பாரத்துக் காயிருக்க 59
மன்னுபுகழ்த் தென்பொதிய மாமலையான் -
பொன்னையள்ளித்

2. ஆறு

தெள்ளுபுனல் கையால் சிறந்தமல ரைத்தூவி 60
அள்ளிக் கனிகளையன் பாக்குவித்து - வெள்ளைநிறச்

சங்கமணி தாங்கிச் சைவசம யந்தாங்கிச் 61
செங்கமலம் தாங்கிவரும் செய்கையால் - பொங்கியபால்

அன்னத்தை வாரிவரும் ஆதரவால் ஆதைவரும் 62
பொன்னைத் துரும்பாக்கும் பொற்பினால் - நன்மணியால்

மின்பரவும் தன்கரைவாய் வீற்றிருக்கும் ஈசனடிக்கு 63
அன்பரைப்போ லும்வையை ஆற்றினான் - பொன்பரவு

3. நாடு

தேவர் அரசாட்சி செய்வதனால் செவ்வரம்பை 64
மேவுதலால் கற்பகத்தார் மிச்சத்தால் - நாஇரசத்

தெள்ளமுதுண் டானகடல் சேர்க்கையால் சொற்புலவர் 65
உள்ளதனால் சிந்தா மணியுளதால் - விள்ளரிதாம்

பொன்னாட்டைப் போலும் புகழ்நாட்டிச் சீர்நாட்டும் 66
நன்னாட்டின் மிக்கசெம்பொன் நாட்டினான் - மின்நாட்டி

4. நகர்

வாடும் மருங்கார் வருநடைகண் டன்னமெல்லாம் 67
நாடி வரும்முகவை நன்னகரான் - நீடுமுனை

அரும்பதவுரை: கண்ணி வரிசை; 58. தென்றல் கால் - தென்றல் காற்று; சிலைமாறன் - மன்மதன்; மன்றல்கா - மணம் வீசும் சோலை; 59. கும்பன் - அகத்தியன்; 60. தெள்ளுபுனல் - தெளிவான தண்ணீர்; 62. பொற்பு - தன்மை; செவ்வரம்பை - சிவந்த மேனியுடைய அரம்பை; செவ்வாழை. 65. விள்ள - சொல்வதற்கு; மருங்கு - இடை; நீடுமுனை - நீண்ட போர்க்களம்.

5. குதிரை

வெஞ்சினங்க ளும்கிளம்ப வெண்டயஞ்ச தங்கைகொஞ்ச 68
வஞ்சர்நெஞ்ச கங்கலங்க மஞ்சுடைந்த - கஞ்சுருங்க

மண்டலங்க ளுந்தயங்க மந்தரஞ்சு ழன்றுதுங்க 69
அண்டபிண்ட முங்கலங்க அந்தரந்தி - ரண்டெழும்ப

அட்டதிக்கும் எட்டுவெற்பும் அப்புறப்ப டக்குதித்து 70
வட்டமிட்ட ரைக்கணத்தின் மைப்புயற்றி - ரட்டகற்றி

மற்றறச்சி னத்தெதிர்த்த மக்கரைப்ப டத்துவைத்து 71
வெற்றிபெற்ற சக்ரவட்ட வெண்பரியான் - பற்றும்

6. யானை

இருப்புலக்கை யால்கீறி ஏறிவரும் ஒன்னூர் 72
இருப்புலக்கை யெல்லாம் இடித்து - நெருப்பைப்

பிடித்துப் பிழிந்து பெலத்துவா ரத்தை 73
அடித்துமக மேருவைத்தூள் ஆக்கி - விடப்பாரப்

பையரவொ ரெட்டைப் பணிமணியென் றேசினந்து 74
துய்யமே கங்களையும் சூல்கிழித்து - வெய்யவனைத்

தெற்குவடக் காகத் திருப்பிப் பழையபடி 75
வைக்குமுக்ர வீரமத வாரணத்தான் - மைக்குழலார்

7. மாலை

கண்வண்டும் ஏடவிழ்த்துக் கானஇசை வாசிக்கும் 76
தண்வண்டும் சூழுமுல்லைத் தாரினான் - வண்மையென்றும்

8. முரசு

தோன்றவரு வெற்றியென்றும் சூடியகல் யாணமென்றும் 77
மூன்றாய் முழங்கும் முரசினான் - வான்தாவிப்

அரும்பதவுரை: கண்ணிவரிசை; 68. வெஞ்சினம் - கொடிய கோபம்; மஞ்சு - மேகம்; 69. மந்த்ரம் - மலை; 71. மக்கரை - மல்லர்களை; பரியான் - குதிரையை யுடையவன்; 72. ஒன்னூர் - எதிரிகள்; 75. வெய்யவன் - சூரியன்; வீரமத வாணரம - வீரவெறி கொண்ட யானை; 76. தார் - மாலை.

9. கொடி

பற்றிஇரா குக்கேதுப் பாம்புகளைத் தேடுதல்போல் 78
சுற்றும் கருட துவசத்தான் - சற்றுமனம்

10. ஆணை

பார்க்குள் அடங்கார்க்கும் பாரரச ராசர்முதல் 79
யார்க்கும் பயம்கொடுக்கும் ஆணையான் - சீர்க்கமலத்

சேதுபதியின் பிற சிறப்புக்கள்

தேமாந் தவளமலர் சேர்ந்துவளர் நாமாது 80
மாமாது வீற்றிருக்கும் வாசலினுன் - மாமாலை

பூணுதமிழ்க் கொண்டுவந்து பொன்வரிசை தந்துகவி 81
வாணர்கலி தீர்க்குமணி வாசலினுன் - மாணிக்கம்

சிங்களதே சத்தரசர் சீனத் தரசருடன் 82
வங்காளர் கப்பமிடும் வாசலினுன் - இங்கிதநூல்

கண்டு நெறிமுறைமை கல்லார் இறுமாப்புக் 83
கொண்டதுபோல் மீறியகற் கோட்டையினுன் -
விண்டறிவால்

ஆழ்ந்தகன்ற கல்வி அறிஞர் குணம்போலே 84
ஆழ்ந்தகன்று நீண்ட அகழியான் - சூழ்ந்தஉடல்

தேய்படா மற்களங்கம் சேராமல் பாம்பினெச்சில் 85
வாய்படாச் சோதி மதிமுகத்தான் - பாயும்வஞ்சக்

காமனை வென்றமலர்க் கண்ணனிவ னேயென்று 86
மாமாது வீற்றிருக்கும் மார்பினுன் - நாமாதே

வாய்த்தகலை எல்லாம்சொல் வண்மைபோல் வச்ரமணி 87
சேர்த்து விளங்கும் செவியினுன் - ஆர்த்தெழுந்து

பச்சிரத்தம் ஓடப் பரராச ரைத்துணிக்கும் 88
வச்சிரவாள் சேர்க்கும் மருங்கினுன் - பச்சமுடன்

அரும்பதவுரை: கண்ணிவரிசை; 78. கருடத்துவசம் - கருடக் கொடி; 79. ஆணையான் - ஆட்சியாளன்; 80. தவள மலர் - வெண்மையான மலர்; 88. பச்சி ரத்தம் - பச்சை இரத்தம்; பரராசர் - வேற்றரசர்; வச்சர வாள் - வைரவாள்.

வேற்றரசர் பொற்பூவும் வெள்ளிப்பூ வுந்தூவிப் 89
போற்றிநிற்கும் செங்கமலப் பூம்பதத்தான் - நால்திசையில்
சேர்க்கையுடன் பாநுமதி தெற்குவடக் காணுலும் 90
வாக்கிரண்டு சொல்லாத மானபரன் - பார்க்குள்

புலவரார் என்றழைத்துப் பூணுமன்பால் நூற்றுக் 91
கலவார கன்கொடுக்கும் கையான் - நிலவுகொன்றைச்
செங்கமலம் தாங்குசடைச் சென்னிமங்க ளேசரடிச் 92
செங்கமலம் தாங்கும் திருமுடியான் - பொங்கால
கந்தரத்தான் அந்தரத்தான் கண்மணியைச் சண்
முகனைக் 93
கந்தனைத்தாள் போற்றும் கருத்தாளன் - வந்துதலம்
எங்கும் பணிகொள் இராஜரா ஜேஸ்வரிபொற் 94
பங்கயத்தாள் போற்றும் பரந்தாமன் - தங்கச்
சிலைக்கரத்தான் வெள்ளிச் சிலம்பையும்கைப் பற்றிக் 95
குலுக்குமத யானையின்மேல் கொண்டு-நிலத்தையுண்ட
மாற்கடலை வெல்லும்வடி வாள்போல் அலைகொழிக்கும் 96
பாற்கடலைப் போல்குதிரைப் பந்திவரச் - சேற்கிடமாம்
அக்கடலை உண்ண முகில் அவ்வளவும் சூழ்ந்ததுபோல் 97
கொக்கரித்துக் காரானைக் கூட்டம்வர - மைக்கருஞ்சூல்
கொண்டல்முழக் கம்போல் குமுறுமுர சம்சுமந்து 98
கொண்டுவரும் ஒட்டகமோர் கோடிவர - மண்டுதுகள்
வான வரைமறைக்க மாற்ருர் மனம்பதைக்கச் 99
சேனை திரண்டு திரண்டுவர - வானேரை
பன்னிரண்டில் ஒன்றின் பகையைவெல்லத் தாவுதல்
போல் 100
உன்னியநு மக்கொடியு லாவிவர - இந்நிலத்தோர்
ஆர்க்கும்வெற்றி காட்டி அமரா வதியைவெல்லப் 101
பார்க்கும் கருடப் பதாகைவரப் - பார்க்கதிரோன்

அரும்பதவுரை: கண்ணிவரிசை; 89. போற்றி - புகழ்ந்து; 90. பானுமதி - சந்திரன்; 92. சென்னி - தலை; 94. பங்கயம் - தாமரை; 95. தங்கச்சிலை - தங்கவில்; 96. வடிவாள் - உடுக்கிலே வடித்த கூரியவாள்; 97. முகில் - மேகம்; கொக்கரித்தல் - ஆரவாரஞ் செய்தல்; 99. மண்டுதுகள் - நெருங்கிய தூசிகள்; 100. பன்னிரண்டில் ஒன்று - பன்னிரெண்டு ராசிகளில் ஒன்ருகிய விருச்சிகராசி; (தேள்) 101. கருடப்பதாகை - கருடக்கொடி.

தன்குலத்து வேந்தனுடன் தானும்வந்து சேர்ந்தது
போல் 102
மீன்கதிர்க்கா விக்குடைமேல் மேல்விளங்க - மன்னெதிரே
வீறுடனே விற்பிடித்த வீரருண்டேல் வாருமென்று 103
கூறுதல்போல் வீரசின்னம் கொம்பூத - வீறுகொண்ட
கோல அட்ட திக்கும்வெற்றி கொண்டுவரும் ஆல
வட்டம் 104
தாலவட்டம் சக்ரவட்டம் தாண்டிவரக் - கரலமழைக்
காளமே கம்போல் கடல்போல் ஒலித்திடுமெக் 105
காளமுடன் பேரி கைமுழங்க - வாளமர
சுத்தரண வீரர்செய சூராதி சூரர்தள 106
கர்த்தர் துரை மக்கள் கலந்துவரச் - சத்துருக்கள்
போர்க்களத்தின் ஊடே புகுந்தெதிர்ந்த மன்னர்
வெற்றித் 107
தார்க்கலங்கள் எல்லாம் தகர்ந்துவிழ - ஆர்க்குமணிச்
சங்கம் முழக்குமன்னர் தத்தளித்துச் சோரியிலே 108
அங்கம் உழக்கி அலைந்துலையப் - பொங்கி
வருகு திரைக்கடல்வாய் வாளிதொட்ட மன்னர் 109
பெருகு திரைக்கடல்வாய்ப் பேர - இருபிளவாய்க்
கண்டமறக் கண்தகரக் கண்டிதொரு கண்டமெனக் 110
கண்டமெனக் கண்டகரும் கண்டோட - மண்டமரில்
கேடகமுண் டானதினிக் கேடகமேன் வாளென்மொழி 111
கேடகவென் றோடவழி கேட்போரும் - நீடுசமர்
உன்மத் தரைநிகராய் ஓங்குமொன்னார் மின்னார்கை 112
வன்மத் தரைதயிராய் மாழ்கிவிழத் - துன்னுறுதார்க்
காமதக கூவெனவே கண்ணீர் ததும்பஇனித் 113
தாமதமா காதென்று தாளில்விழ - வாமமரத்

அரும்பதவுரை: கண்ணிவரிசை; 102. மின்கதிர் - மின்னுகின்ற ஒளிக்கதிர்; 103. வீறுடனே - வீரத்துடனே; 104. கோலம் - அழகு; 106. தளகர்த்தர் - தளபதிகள்; 107. தார் - மாத; ஆர்த்தல் - ஒலிசெய்தல்; 108. சோரி - இரத்த வெள்ளம்; அங்கம்- உடம்பு; உழக்கி - கலக்கி; உலைதல் - கெடுதல்; 109. வாளி - அம்பு; தொட்ட - கொடுத்த; கண்டகம் - ஆபத்து; கண்டகர் - கொடிய நெஞ்சத்தையுடையவர்கள் 111. தகவு - தகுதி; துன்உறு-நெருங்கப் பெற்று; 113. காமதகனன் - சிவபெருமான்-(மன்மதனை எரித்தவன்) வாமம் - ஒளி.

துக்கோடி முக்கோடி தும்பிதும்பி யாகஎட்டுத் 114
திக்கோடி முக்கோடிச் சென்றுவிழத் - தக்க
ஒருகுடைவாழ் வேந்தா ! உயிரெமைக்கா என்று 115
சொருகுடைவாழ் வேந்தர்வந்து சுற்றப் - பெருகி
வருமிதப்பாம் சோரியென்று மன்னர் உடலைத் 116
தருமிதப்பாய்க் கொண்டுகரை சார - நிரையாய்ப்
பரும்பருந்தா டிச்சிரங்கள் பட்டுவிழச் சூழ்ந்து 117
கரும்பருந்தா டிக்குடரைக் கவ்வப் - புரண்டுவிழும்
அக்கொடியார் மேற்பொன் அருங்கொடிக்கு மூத்தகொடி 118
கைக்கொடியாய் நின்றகொடி கத்திவிழ - மிக்க
பலகை பலகை பரப்பியதில் வாரி 119
அலகை அலகை அடையப் - பலவிதமாய்ப்
பொங்கு குருதிரண பூமி திசைதிசைகள் 120
எங்கும் பெருங்காற் றெடுத்தோட - அங்கங்கே
பச்சைக் குடைகமலப் பத்திரம்போ லேயிலங்க 121
உச்சக்காம் பேநாளம் ஒப்பாக - மிச்சமாய்ச்
சந்த்ரகா விக்குடைசெந் தாமரைப்பூப் போல்மலர 122
விந்தைபெறு வெண்குடைவெண் தாமரைபோல் - வந்
துலவும்
விள்ளரிய மன்னர்குடை மேற்கிடக்கும் சாமரைகள் 123
வெள்ளோதி மந்துயிலும் விந்தைபெறத் - துள்ளுசமர்
வேடங்கள் மாறி விருதரசர் போட்டபல்லக்கு 124
ஓடங்க ளாயலகை ஓட்டிவரக் - கேடகங்கள்
பங்கம் அடக்கவே பார்த்துப் பதுங்குகின்ற 125
வெங்கமடம் போலே மிதந்தமிழ்ந்தச் - செங்கண்மரு
வாரைவென்று வாகைகொண்டு வாளிலங்கு பாநு
திங்கள் 127
நேரில்வந்து சூழ்சிலம்பின் நீள்முடிமேல் - சேர்கருட

அரும்பதவுரை : கண்ணிவரிசை ; 114. முக்கு - முனை. 116. மிதப்பு - தெப்பம் ; நிரையாய் - வரிசையாக; 117. குடர் - குடல்; 118. மூத்தகொடி - மூத்தவளானதேவி ; கைக்கொடி - காக்கை ; 119. பலகை - பல கைகள் ; அலகை - பேய்கள் ; 120. குருதி - இரத்தம் ; 121. நாளம் - தாமரைத் தண்டு ; 123. விள் அரிய - சொல்ல இயலாத ; 125. கமடம் - ஆமை ; 126. வாகை - வெற்றி மாலை.

கேதனத்தை நாட்டிக் கிரீடமன்னர் கொண்டுவரு 128
மாதனத்தைக் கப்பமென வாங்கியே - நீதனந்த

மக்கரங்கர் ஆதிமன்னர் வந்துதொழ வையமெல்லாம் 129
சக்கரம்ந டாத்தும் தநுராமன் - மிக்கபுகழ்

சேர்க்கும் சிலைராமன் சேதுகண்ட நாள்முதலாக் 130
காக்கும் தநுக்கோடி காவலவன் - தாக்கியசெங்

காவிச் சிவிகையான் காவிக் கொடியினுன் 131
காவிக் குடையான் கவிக்குடையான் - பூவிலங்கும்

வாசமுல்லை மாலையான் மாலிரணி யாகர்ப்ப 132
யாசி ரவிகுலசி லாக்கியவான் - பேசில்

அடைக்கலங் காத்தான் அநுமத்வ சத்தான் 133
படைத்திடுமுத் துச்சலா பத்தான் - பிடித்திருக்கும்

வங்கார டாலினுன் மாநாடு காவலான் 134
சிங்கார மான திறைகொண்டோன் - செங்காவி

டாலினுன் பஞ்சவர்ண டாலினுன் கூருமுனை 135
வேலினுன் தாலிக்கு வேலியான் - ஒலிடுமா

முன்வந்து காத்த முகுந்தனொரு வீமனுக்கு 136
முன்வந்தான் என்னவந்த மூர்த்திகரன் - மின்னும்மழைக்

கொண்டல்வண்டி னந்திரண்ட கொந்தளந்த னந்த
னங்கள் 137
விண்டுசெண்டு பந்துகொம்பு மென்குடங்கள் - கண்டு
செஞ்சொல்

செங்கணங்கு டங்கையம்பு சிந்துகொண்ட சங்கு
தொண்டை 139
பங்கயங்கள் செங்கையென்று பண்பொருந்து - பெண்
களின்ப

மாரனுக்கு நேருரைக்கும் வாலசித்ர ரூபன்வெற்றி 138
மேருவொத்த தீரசுத்த வீரன்மிக்க - சீரார்

அரும்பதவுரை : கண்ணி வரிசை ; 128. கேதனம் - கொடி; மாதனம் - பெருஞ்செல்வம்; சிலைராமன் - வில்லேந்திய இராமன்; 131. சிவிகை - பல்லக்கு ; 132. முத்துச் சலாபம் - முத்துக்குளிக்கும் துறை ; 134. வங்காரம் - தங்கம்; திறை - கப்பம்.

தனதன்அரி ஐந்து தருவெல் கரன்பொன் 139
மனமகிழ்ந்து வாழும் புயன்பு - வனமடந்தை
விந்தைநித்த முந்தழைக்கும் வென்றிவிக்ரமனதுதித்து 140
முந்தழைத்த சிந்துரத்தின் முன்புதித்தோன் - சந்ததமும்
தன்ம தியானம் தழைக்குமதி யான்வதன 141
நன்மதியான் தெவ்வரைக்கண் ணூல்மதியான்-தென்மலைய
வந்தனத்தான் தந்தைபத வந்தனத்தான் மார்பிலணி 142
சந்தனந்தான் பொன்னனின்மிச் சந்தனத்தான் - பந்து
சனத்தான்மிக் கோர்பா சனத்தான் அரியா 143
சனத்தான் இதவ சனத்தான் - இனித்த
கரும்புரசம் போல்முக் கனிரசம்போல் யாரும் 144
விருமபு மொழிபகரும் வேந்தன் - பெரும்புகழ்சேர்
மேதினியாள் முத்து விஜய ரகுநாத 145
சேதுபதி சிங்கா சனபதிக்கும் - ஆதரவாய்த்
தஞ்சநீ என்றுவந்து சார்ந்தோர்கள் யாவரையும் 146
அஞ்சலென்று காத்தருளும் அன்புத்தாய் - மிஞ்சுபெரும்
தன்மப் பயிர்தழைக்கத் தார்ணியெ லாந்தழைக்க 147
நன்மைப் பயிர்வளர்க்கும் ஞானத்தாய் - பொன்மங்கைத்
தேவைப் பதியுமன்பால் சிந்தைவைத்துப் பூசித்த 148
தேவைப் பதிகாக்கும் செல்வத்தாய் - மாவளஞ்சேர்
வாசமலர் மாதைப்போல் வந்ததாய் சேதுமகா 149
ராசிமுத்து வீராயி ராணிக்கும் - வாசமுள்ள
புத்திரசி ரோமணிஇப் பூமிமுழு தும்புரக்கும் 150
சத்ரபதி எங்கள்சிவ சாமிமன்னன் - முத்தளந்து
வங்கரங்கர் கொங்கர் மலையாளர் யாழ்ப்பாணர் 151
சிங்களவி ராடர் திறைகுவிக்கச் - செங்கைகொண்டு
வங்காள மன்னர் வணங்கக் கொலுவிருக்கும் 152
சிங்காச னாதிபதி சேதுபதி - பொங்குமநு

அரும்பதவுரை: கண்ணிவரிசை; 139. தனதன் - செல்வந்தன்; ஐந்து தருவேல் கரன் - கற்பகத்தைப் போன்று விரும்பியவற்றைக் கொடுக்கும் வள்ளல் தன்மையும் வெற்றியையுங் கொண்ட கரத்தை யுடையவன்; 141. தன்மம் - தர்மம்; தெவ்வர் - எதிரிகள்; 142. வந்தனத்தான் - வணங்குபவன்; பொன்னன் - குபேரன்; 143. இதவசனத்தான் - இதமாகப் பேசுபவன்; 145. மேதினி - உலகம்; 147. பொன்மங்கை - இலட்சுமி.

நீதிபதி கோடி நிதிபதிமுத் துச்செல்லச் 153
சேது பதிக்குத் திருமருகன் -ஓதுதமிழ்

வித்தைக் ககத்தியனை வில்லுக் கருச்சுனனைச் 154
சித்த சனைவால சீவகனை - மொய்த்த

கனகனைக்கு பேரனைமார்க் கண்டனைமெய்ஞ் ஞான 155
சனகனைச்சற் கீர்த்திதழைத் தானை - இனியமொழிச்

சத்தியவான் மால்ராம சாமிமகா ராசனைத்தான் 157
மைத்துனனென் றேயழைக்கும் மானபரன் - சித்தமிசை

ஆதரவாய்ப் பாண்டவரை ஆண்ட விஜயரகு 157
நாதசிவ சாமி நராதிபதி - ஓதுபுகழ்

பாடியகற் றோர்க்குயபய பல்லக்குத் தந்துபுகழ் 158
தேடும் சிவசாமி சேதுபதி - நீடுகவி

ஆழ்ந்த பெரியோர்க் கநுகூலன் கற்றுமனம் 159
தேர்ந்தோன் சிவசாமி சேதுபதி - வாய்ந்தவெற்றி

வில்விஜயன் ராணிமுத்து வீராயி நாச்சியார் 160
செல்வன் சிவசாமி சேதுபதி - நல்லமலர்

ஏட்டுக்குப் போலுலகம் ஈரேழும் கீர்த்திநிலை 161
நாட்டும் சிவசாமி ராஜேந்திரன் - வேட்டணியும்

அம்புலிவே ணிப்பெருமான் அம்புயத்தாளைத்துணை
யாய் 162
நம்பும் சிவசாமி ராஜேந்த்ரன் - வம்பர்நிலை

நாட்டான்தென் பாண்டிவள நாட்டான் உயர்ந்தசெம்பி 163
நாட்டான்:சிவசாமி ராஜேந்த்ரன் - தோட்டுமலர்

மாமனுக் காக வனமான்மேல் வாளிதொட்ட 164
பூகான் சிவசாமி பூபாலன் - மாமணத்தை

வேட்டரசர் முன்னே மிதிலா புரிச்சிலைநாண் 165
பூட்டும் சிவசாமி பூபாபாலன் - நாட்டம்வைத்துத்

அரும்பதவுரை : கண்ணி வரிசை; 153. நிதிபதி - செல்வமுடையவன்; திருமருகன் - முருகன்; 154. சித்தசன் - மன்மதன்; 158. உபய பல்லக்கு - இரட்டைப்பல்லக்கு; 162. அம்புலி வேணிப் பெருமான் - சிவபெருமான் ; 165. வேட்டு-விரும்பி; சிலை-வில்.

தேசமெங்கும் செங்கோல் செலுத்தும் மகராஜ 166
போசன் சிவசாமி பூபாலன் - காசினியில்

ஐந்துதரு வைப்போல் அளகைக்கு பேரனேப்போல் 167
வந்த சிவசாமி மார்க்கண்டன் - முந்து மங்கை

ஈசன் உதவுமுரு கேசன்மேல் பத்திவிசு 168
வாசன் சிவசாமி மார்க்கண்டன் - ஆசையாய்த்

தெள்ளமுதும் பாற்குழம்பும் சீனியும்கற் ரோர்க்குதவு 169
வள்ளல் சிவசாமி மார்க்கண்டன் - விள்ளுபுகழ்த்

தென்முகவை யூர்தழைக்கத் தேவைப் பதிதழைக்கத் 170
தன்மநெறி என்றும் தழைத்தோங்க - நன்னலமெய்ஞ்

ஞானந் தழைக்க நலந்தழைக்க, நாளுமன்ன 171
தானம் தழைக்கத் தவந்தழைக்க - மாநிலத்தில்

பொய்யென் றுரைப்பதெல்லாம் பூவையர்கள்
சிற்றிடையின் 172
ஐயமன்றி மெய்யுலகை ஆதரிக்க - வையகத்தோர்

எத்தனைபேர் வந்தாலும் இன்னும்வரு வார்வழிபார்த்து 173
அத்தனைபே ருக்குமமு தம்படைத்து - முத்தலமும்

சித்தம் களிகூரத் தென்முகவை மேவுமன்ன 174
சத்திரம்நாள் தோறும் தழைத்தோங்க - இத்தலத்தில்

பொன் முகம்போல் பூத்தகஞ்சப் போதுவளர் மாமாது 175
தன்முகம்போல் செல்வம் தழைத்திருக்கும் - தென்முகவை

வாவிக்குத் தென்கரையில் வாழ்விசுவ நாதருக்கும் 176
தேவிக்கும் பூஜை தினந்தழைக்கச் - சேவிக்கும்

தேவர் பணியும் திருப்பணியும் உண்டாக 177
மூவர் திருவருளும் முன்னிற்க - மேவுமநு

நீதம் தழைக்கச்செந் நெற்பயிரெ லாந்தழைக்க 178
மாதமும் மாரி மழைபொழிய - மேதினியாள்

அரும்பதவுரை : கண்ணி வரிசை; 166. பூபாலன் - பூமியைக் காப்பவன்; 167. அளகை - அளகாபுரி; 169. பாற் குழம்பு-பாசந்தி; 170. முகவை - இராமநாதபுரம்; 172. பூவையர் - பெண்கள்; 175. கஞ்சப்போது - தாமரை மலர்; 176. வாவி - தடாகம்; 178. மேதினியாள் - பூமி யாள்பவன்.

நாதன் விஜயரகு நாத சிவசாமி 179
சேதுபதி செங்கோல் செலுத்துநாள் - ஓதுதிரு

அவதானி பிறப்பு முதலியன

ஆடானை நன்னகரில் ஆதிரத்னம் ஐயனெனும் 180
தாடாளன் செய்த தவத்துதித்தேன் - நாடுவயது

எல்லேயோர் ஐந்தில் எனது மனந்திருந்தக் 181
கல்விச்சா லைக்குள்வைத்துக் கற்பித்தார் - செல்வயது

பன்னிரண்டி லேதெலுங்கும் பைந்தமிழும் ஆரியமும் 182
கன்னடமும் கற்றுக் கவிபாடிச் - சொன்னவிஞச்

சொல்லத் திரைமறைவில் சூதுவிளை யாடிவரக் 183
கல்லுநெல்லும் எண்ணிக் கணக்குரைக்க - வெல்லக்

கரும்பு ருசிவெண் கலவோசை யாரும் 184
விரும்பும் படியே விளம்பப் - பெருஞ்சபையில்

வைத்தசது ரங்கம் மறைவில்விளை யாடிவரச் 185
சித்திரத்தைத் தீட்டியகைச் சீட்டாட - முத்தமிழோர்

காட்டுமொழிக் கெல்லாம் கணம்உரைகள் காணஇசை 186
கூட்டுமுன்னே ராகக் குறிப்புரைக்கப்-பாட்டுரைப்போர்க்கு

இங்கிதப்ர சங்கம் இசைக்கக் கைலாட 187
சங்கிலியும் கோவைசெய்து தான்கழற்றச் - சிங்கார

விந்தைக் குதிரையடி வெண்பாச் சொலக்கணித 188
பந்தனத்தில் சொன்னதொகை பார்த்தடைக்கப் -
பைந்தமிழோர்

மெச்சும் படியேவாய் வேலுமயில் என்றுரைக்க 189
அச்சரவ தானம்அவ தானிக்கப் - பச்சமுள்ள

பாடலெழுத் தாணிபதி ளுறுக்கும் பாட்டுரைக்கும் 190
சோடசவ தானியென்று தோன்றினேன் - நீடுதிரு

அரும்பதவுரை : கண்ணி வரிசை; 180. செலுத்து நாள் - செலுத்துகின்ற காலத்தில்; ஆடானை - திருவாடானை என்னும் ஊர்; ஆதிரத்னம் ஐயன் - அவதானியின் தந்தையின் பெயர்; 182-லிருந்து 190. முடிய பதினறு வகையான செயல்களை ஒரே சமயத்தில் செய்யக்கூடிய சோடச அவதானம் விளக்கப்பட்டுள்ளது.

திருமணமும் பிறவும்

மாலிருக்கும் புல்லாணி மங்களேயன் பெற்றெடுத்த 191
சேலிருக்கும் கண்ணுளேத் தேமொழியைக் - கோலத்

துணமாலே என்னுமொரு தோகை மயிலே 192
மணமாலே இட்டுநான் வாழ்ந்தேன் - இணபிரியா

ஓர்நாள் திருவுத் தரகோச மங்கையிலே 193
தேர்நாள்என் ருரத் திருநாட்கு - நேராகச்

சென்றேன் ஒருவன் சிறுபயலென் கூடவந்தான் 194
அன்றே ஒருவே சையைக்கலந்தேன் - நன்ருகக்

காணிக்கை கொண்டுவந்த கட்டி வராகனெலாம் 195
மாணிக்கத் தாட்கு வழங்கினேன் - பேணி

உதயா தியிலெழுந்தேன் ஊர்க்குவந்தேன் தம்பி 196
இதையார்க்கும் சொல்லாதே என்றேன் - சதிராக

வையாற்றுத் தண்ணீரில் வந்துசந்தி பண்ணினேன் 197
பொய்யாலே கெட்டமுழுப் போக்கறுவான் - பையமுன்னே

போனுன் மனேவியிடம் புன்சிரிப்பா கச்சிரித்தான் 198
தேனுள் விசேடமுண்டோ செப்பென்ருள் - மானேயுன்

ஐயரையே அல்லால் அதிசயமுண் டோவேசைத் 199
தையலேயே கூடித் தழுவினுர் - பையவெளித்

திண்ணேயில்இ ராமுழுதும் தெய்வமே என்றுநான் 200
கண்ணுறக்கம் இல்லாமல் காத்திருந்தேன் - பெண்ணழகி

பொன்னேறு பூண்முலேக்குப் பூசையல்லால் நம்மளம்
மன் 201
பொன்னேறு பூண்முலேக்குப் பூசையில்லே - கன்னியல்குல்

அரும்பதவுரை; கண்ணிவரிசை; 191. மால் - விஷ்ணு; மங்களேயன் - அவதானியின் மாமனரின் பெயர்; சேல் - மீன்; 195. மாணிக்கத்தாள் - அவ்வேசையின் பெயர்; 196. சதிர் - ஒழுக்கம்; 197. சந்தி - சந்தியா வந்தனம்; 198. செப்பு - சொல்லு.

வாடியுத யாதியிலே வந்தார்பிர யாணமென்றார் 202
நாடியுமை விட்டிரேன் நானென்றாள் - தேடியிங்கு

நாளையே வாரமென்றார் நல்லதுபோய் வாருமென்றாள் 203
மீளஇதோ வாரார்நான் விட்டுவந்தேன் - ஆளழகா!

இந்த ரகசியத்தை யார்க்குமுரை யாதேயென்று 204
அந்தரங்கம் சொன்னார் அவரென்று - வந்ததெல்லாம்

கண்டித்துச் சொல்லிமனைக் கன்னிமனம் வேருக்கி 205
வண்டப் பயலும்வைச்சு வாங்கினான் - பெண்டி

கொடுகொடுப்பை வந்துகண்டு கொண்டேன் முகத்தில் 206
கடுகடுப்பை யுங்கூடக் கண்டேன் - இடுசோற்றில்

வெஞ்சினத்தை நான்காணேன் வீட்டுக்கும் வாசலுக்கும் 207
வெஞ்சினத்தைக் கண்டுநான் மெய்ம்மறந்தேன் - வஞ்சி
கிட்டப்

போனேன் வெறுமனே போஎனைநீ தீண்டாதே 208
சிநீயுன் தாசியிடம் செல்லென்றாள் - ஏனேன்

உறவே தெனக்கும் உனக்குமினி என்று 209
பறைபோல் அலறிப் பகர்ந்தாள் - இறைவனோடு

ஏறுமா றான மனையாளும் இம்மூன்றும் 210
நீறுநீ றாகிவிடும் என்றசொல்லைத் - தேறிமனம்

அவதானி யாத்திரை

தானே வெறுத்துத் தலங்களெல்லாம் போய்ப்பணிந்து 211
ஞானோ தயம்பெறுவோம் நாமென்று - மேல்நிரம்பும்

மாமணியும் ஆபரண வர்க்கமும்செம் பொன்முடிப்பும் 212
தாமெடுத்தி ராநடுவில் தப்பினேன் - காமவி

காரத்தை நீக்கிக் கதிபெறுவோம் என்றுவரு 213
நேரத்தைச் சற்றும் நினையாமல் - சீர்பெற்ற

நாரியொரு பாகனுக்கு நானொருவே ளாளன்முளை 214
வாரியமு திட்ட மணிநகரும் - காரணமாய்ப்

அரும்பதவுரை: கண்ணிவரிசை; 207. வெஞ்சினம் - பலவித காய்கறி; வெஞ்சினம் - கொடுங்கோபம்; வஞ்சி - பெண்; 208. பறை - தம்பட்டம்; 210. தேறி - தெளிந்து; 212. மாமணி - பெரிய மாணிக்கக் கற்கள்; நாரியொரு பாகன் - சிவபெருமான்; முளை - விதை; வேளாளன் - இளையான் குடிமாறன்; மணிநகர் - அழகிய ஊர்.

பொய்ப்பிள்ளை யாயிருந்த பொற்பிள்ளை பாண்டியற்கு 215
மெய்ப்பிள்ளை யான வியனகரும் - எப்புகழும்
சூடும் இரணியனுர் துன்பத்துக் காஇமையோர் 216
கூடியளப் பிட்டிருந்த கோநகரும் - கோடி
விஷவாள் அரவணிந்தோன் வேசைஒருத் திக்கு 217
ரசவாதம் சொன்ன நகரும் - அசுரர்பகை
வென்றுவச்ர பாணிபெற்ற வேழத்தை வேற்பெருமான் 218
மன்றல் முடித்த வளம்பதியும் - அன்றுதிர்ந்தது
ஒட்டுக்காய் தாவென்று உமைபாகன் அன்றொருநாள் 219
பிட்டுக்காய் மண்சுமந்த பேரூரும் - கட்டளையாய்
மைப்புயல்போல் வண்ணன் வருடத்தி லேயொருநாள் 220
சப்பரத்தில் ஏறும் தனிமலையும் - பொற்பாவை
மேவுமணி மார்பனொரு வீடணன்கைப் பெட்டகத்தில் 221
தாவி இருந்த தடம்பதியும் - பூவுலகும்
தேவரும் அஞ்சச் சிதம்பரத்தான் தாணையத்தார் 222
மூவரில்பின் ஒன்றழைத்த மூதூரும் - மேவுமுகில்
விண்மாரி என்னவொரு மென்சிவந்திப் பூவுக்கா 223
மண்மாரி பெய்த மணிநகரும் - அண்ணலெதிர்
ஆனவடி வப்பிரமன் அன்னவடி வாய்த்திருமால் 224
ஏனவடி வான எழில்நகரும் - மேன்மைநுதல்
கண்ணுடையான் தன்னுடைய கைப்பாத்தி ரங்காட்டி 225
மண்ணுடையா னைக்காத்த மாநகரும் - எண்ணுமனத்
திண்டாட்ட மாகச் சிவனுர் ஒருவணிகன் 226
பெண்டாட்டி யைக்கேட்ட பேரூரும் - பண்டொருநாள்
வள்ளையுண்ட காதிமய மங்கைமுலைப் பாலையொரு 227
பிள்ளையுண்டு மேன்மைபெற்ற பேரூரும் - கள்ளூறும்
எண்ணிக்கை மாங்கனியை ஈசனரு ளாலழைத்த 228
பெண்ணிருந்து வாழ்ந்த பெரும்பதியும் - வண்ணவளை

அரும்பதவுரை: கண்ணிவரிசை; 215. வியன்நகர் - காளையார் கோவில்; 216. கோநகர் - திருக்கோஷ்டியூர்; 218. வஜ்ரபாணி - தேவேந்திரன்; வேழத்தை - தெய்வயானையை; வேற்பெருமான் - முருகன்; மன்றல் - திருமணம்; 219. பேரூர் - மதுரை; 220. மைப் புயல்போல் வண்ணன் - திருமால்; தனிமலை-அழகர்மலை 221. தடம் பதி - ஸ்ரீரங்கம்; 222. மூதூர் - சிதம்பரம்; 224. எழில்நகர் - திரு வண்ணமலை; பேரூர் - புகார் என்று வழங்கப்படும் காவிரிப்பூம் பட்டினம்; 228. வண்ண வளை - அழகிய உருவுடைய சங்கு.

துன்று திரைக்கடலைத் தொட்டார் பொருட்டாக 229
அன்றுவந்த கங்கை அணிநகரும் - சென்றுதிரைக்
கங்கையுடை யான்வணங்கக் கங்கையுடை யான் 230
வணங்கும்
கங்கைநதி ஆடிக் கரையேறி - அங்கிருந்த
செப்பரிய சங்கமுக தீர்த்தமா டிச்சீனக் 231
கப்பலிலே ஏறிக் கடல்வழியாய்ச் - செப்புதமிழ்ப்
பாமதுரம் பாடிப் பதின்மூன்று நாளையிலே 232
ராமே சுரத்துக்கு நான்வந்தேன் - சோமனணி
தாணுவையும் போற்றித் தநுக்கோடி நீராடித் 233
தோணிவழி பாம்பன் துறைகடந்தேன் - தூணிமதன்
வில்லாணி முத்துமதன் வெள்ளைமுத்தும் மேவுதிருப் 234
புல்லாணி மால்பதத்தைப் போற்றிசெய்தேன்-
சொல்வளஞ்சேர்
செல்வ முதுகுளத்தூர்ச் செவ்வேளைப் போற்றியங்கு 235
கல்வியுடை யோர்கள்சிநே கம்பெற்றேன் - நல்வழியாய்
ஆழ்வார் திருநகரி ஆண்டாரைப் பூஜித்தேன் 236
வேள்வாழ் திருச்செந்தூர் மேவினேன் - நீளசுரக்
குன்றெறிந்த வேலவரைக் கும்பிட்டுத் தென்புறம்போய் 237
நின்றுகன்னி யாகுமரி நீராடிச் - சென்றுமனப்
பற்றுக வேஙடந்து பாபநா சம்பணிந்து 238
குற்றால நாதரையும் கும்பிட்டேன் - கற்றூர்வாழ்
முல்லையப்ப ஞலே முளைத்த பரஞ்சோதி 239
நெல்லையப்பர் தாள்பணிந்து நேசித்தேன் - தொல்லைக்
கருச்சுழியை நீக்கும் கழுகுமலை போற்றித் 240
திருச்சுழிகை யூர்க்குவந்து சேர்ந்தேன் - பருப்பதவில்
கையவனைப் போற்றிக் கனிந்து முதுகுளத்தூர் 241
ஐயன்முரு கையனெமை ஆண்டபிரான் - செய்யமலர்ப்

அரும்பதவுரை : கண்ணிவரிசை : 229. துன்று திரை - பொங்கும் அலை ; கங்கை அணிநகர் - கங்கையை அணிந்துள்ள காசி நகர்; 230. கங்கையுடையான் - சிவபெருமான் ; பிர்மா 231. செப்பரிய- புகழ் வாய்ந்த; சங்கமுக - நதி கடலோடு கலக்கும் இடம்; 232. சோமன் - சந்திரன். 233. தாணு - சிவபெருமான்; தூணி - அம்புறுத்தூணி. மதன் - மன்மதன். 234. மதன் வெள்ளைமுத்து - மன்மதனின் வெண்முத்துப் போன்ற மல்லிகை. 235. செவ்வேள் - முருகன்; 236. வேள் - முருகன்; 239. நெல்லையப்பர் - திருநெல்வேலிக் கோயிலின் கடவுள் பெயர். 240. கருச்சுழி - கருவில் சுற்றுதல்; பிறவி. பருப்பதம் - மலை. 241. வில் கையவன் - இராமபிரான்.

வேதமையன் நட்பு

பாதம் பணிசெய்தேன் பத்துநாள் அங்கிருந்தேன் 242
வேதமையன் நட்பை விரும்பினேன் - ஆதிமறை
ஓதும் திருமருதூர் உட்சேபம் கண்டுவர 243
மாதவரே நீர்கூட வாருமென்றேன் - ஏதுகாண் !
தீர்க்க விசாரணைநீர் செய்யவில்லை யோபுகார் 244
ஊர்க்குள்ளே செட்டியொரு கோவலன் - பாக்யமுள்ள
கண்ணகியாள் சொல்லைக் கடந்தொருவே சைகைக்குள் 245
பொன்னையெலாம் தோற்றுப் புலையாடிப் - பின்னுமவன்
பேரிழந்து பேதைதலை வெட்டுண்டு வீழ்ந்தான் இப் 246
பாரிலவன் நாடகத்தைப் பார்க்கலையோ?-நீர்சென்றல்

மோகனமுத்துவின் பிறப்பு

ஊதியத்தைக் கேளுமந்த ஊர்க்கோவில் தாசிகளில் 247
கோதையொரு பொல்லாக் குடிகேடி - மாதவள்பேர்
செங்கமல வல்லி திருகுதா ளக்காரி 248
மங்கைவெகு நாளாய் மலடிருந்து - செங்கிடாய்
ஐயனுக்கு வெட்டியப்பால் அம்மனுக்குப் பொங்கலிட்டுச் 249
செய்யவடி வேலவற்குத் தெண்டனிட்டுத்-துய்யவெள்ளி
எண்ணி விரதமிருந் தீசர்க் கபிடேகம் 250
பண்ணியபின் ஏழாம் பருவத்தில் - வண்ணவண்ண
மாப்பிளைமார் கைவலுவால் மாப்பழுக்கும் நாளையிலே 251
பூப்பதுபோல் கர்ப்பம் பொருந்தினள் - வாய்ப்பாகப்
பள்ளத்தில் பஞ்சிட்டுப் பாரம் எழுந்ததுபோல் 252
வெள்ளையமுக் குப்போல் மிகுந்திட்டாள்-அள்ளியுண்ட
எல்லாம் குமட்டிமசக் கேறி இடைசிறுத்து 253
மெல்லமெல்லக் கண்குழிந்து மேல்பசந்து-பல்விளர்ந்து
சித்தம் மருண்டாளென் சேதுபதி மால்யானை 254
மத்தகத்தைப் போல வயிறுனள் - பத்தாகும்

அரும்பதவுரை : கண்ணிவரிசை: 242. ஆதிமறை - ரிக்வேதம்; 243. உட்சேபம் - ஊர் நடப்பு. 244. புகார்-காவிரிப்பூம்பட்டிணம். 245. வேசை - மாதவி; 246. பேரிழந்து - புகழ் இழந்து; 247. ஊதியம் - பயன்; 255. குமட்டி - வாந்தி செய்து; மசக்கு ஏறி - மசக்கை உண்டாகி; மேல் பசந்து - உடம்பிலே பசலை நிறம் தோன்றி; மால் யானை - பெரிய யானை.

மாத்தையிலே நாகபட வாய்வழியே ரத்னமணி 255
பூத்ததுபோல் பெற்ருளோர் பொற்கொடியைப் -
பார்த்தவர்கள்

ஆண்பிள்ளை யேஎன்ருர் அப்போதே வேசையிது 256
வீண்பிள்ளையே இல்லையென்று மீண்டெழுந்தாள் -
சேண்புவியில்

மிச்சமாய்ச் செம்பொன் விளையும் ரசவாதப் 257
பச்சிலையீ தென்று பரிந்தெடுத்தாள் - முச்சகத்தில்

மோகனமுத்துவின் வளர்ப்பு

கோதையிவள் காமக் குளிராட்ட வந்தவளென்று 258
ஆதரவாய் மஞ்சள்நீர் ஆட்டிஞள் - சாதிநாம்

ஈரமில்லாச் சாதிநமக் கீரமேன் என்றுடம்பில் 259
ஈரமில்லா மல்துவட்டி ஏந்திஞள் - காருடக்

கத்தரிப்பும் சூதும் கவடும் பகடமும் 260
தித்திரிப்பும் திட்டாந் திரத்தொழிலும் - சித்தத்தைப்

பங்கப் படுத்திவைக்கும் பாசாங்கும் வஞ்சமும்பொய் 261
யுங்கலந்து சேனைப்பால் ஊட்டிஞள் - "எங்கருணைக்

கண்ணே ! என் கண்மணியே ! காம ரசக்கரும்பே ! 262
பெண்ணே ! யான் பெற்ற பெரும்பேறே ! - வண்ணக்

குயிலே ! மரகதமே ! கோமளமே ! பச்சை 263
மயிலே !" எனத்துடைமேல் வைத்தாள் - ஒயிலாக

ஒற்றைப் பிறைவயிற்றில் உண்டான முப்பிறைபோல் 264
நெற்றிக் கழகாய்வெண் ணீறணிந்தாள் - முற்றமயல்

பூட்டிவந்த வாலிபர்கைப் பொன்னையெல்லாம் -
வாங்கக்கை 265
தீட்டென்று சிந்தூரம் தீட்டிஞள் - ஆட்டிவைக்கும்

மால்விழிக்கும் போதெல்லாம் வாலிபருக் குண்டாக்கும் 266
சேல்விழிக்கும் அஞ்சனத்தைத் தீட்டிஞள் - மேலுலவு

அரும்பதவுரை ; கண்ணிவரிசை: 257. முச்சகம்-மூன்று உலகம்; கோதை -பெண்; 259. ஈரம் - இரக்கம்; 261. சேனைப்பால் - குழந்தைக்குப் பிறந்தவுடன் ஊட்டுகின்ற பால்; 262. பெரும்பேறே- பெறவரிய செல்வமே; 263. ஒயிலாக - அழகாக; 264. வாங்கக் கை தீட்டி - பொன்னை வாங்க கையைத் தீட்டிக்கொள்.

வன்னப் புதுமதியில் வந்தகளங் கம்போல 267
கன்னத்தின் ஊடே கறுப்பிட்டாள் - மின்னுசை
மாற்றுவார் தங்களுக்கும் வாலிபர்க்கும் பேராசை 268
ஏற்றுவாய் என்றுதொட்டில் ஏற்றினுள் - போற்றியுனைச்
சேராரார் கண்டாசை தீராரார் பொன்னையள்ளித் 269
தாராரார் என்றுதா ராட்டினுள் - ஆராய்ந்து
கொற்றவர்கைப் பொன்னையெல்லாம் கொள்ளையடித்
தவ்வளவும் 270
சுற்றென்று திட்டிகையால் சுற்றினுள் - உற்றிளைஞர்
தேட்டையெலாம் தந்து திரும்பவிருந் தால்வழியைக் 271
காட்டென்று வெண்ணிலவு காட்டினுள் - தாட்டீகர்
குத்திப்பொன் அவ்வளவும் கொள்ளையடி என்றுசெவி 272
குத்திப்பொன் வாளி குலுக்கியிட்டாள் - சித்திரக்கை
வெட்டுவாள் மன்னவர்போல் வீட்டு முதலையெலாம் 273
கொட்டுவாய் என்றுவட்டில் கொட்டினுள் - இட்டமுடன்
தென்முகவை ஆளும் சிவசாமி சேதுபதி 274
தன்மம் வளர்ப்பதுபோல் தான்வளர்த்தாள் - மின்னுள்
அடியெடுத்தாள் காமுகர்பொன் அவ்வளவும் கொட்ட 275
அடியெடுத்தாள் கூன்கிழவெள் ளாட்டி - குடிலமாய்ப்
பார்க்குமிரு கண்மருட்டிப் பார்த்திட்டாள் அவ்வூரில் 276
யார்க்கும் புதுமுறையுண் டாக்கினுள் - தாய்க்கிழவி
சிற்ருடை இட்டாள் சிலம்பிட்டாள் பீலியிட்டாள் 277
பொற்ரு லவடமிட்டாள் பூச்சிட்டாள் - குற்றமிலா
வாப்பிட்ட மெய்யாட்கு மாரன் திருநாட்குக் 278
காப்பிட்டாப் போலேகைக் காப்பிட்டாள் - தோப்பிலுள்ள
வண்டையிட்ட கண்ணுட்கு வாரியிட்டாள்
குப்பியிட்டாள் 279
தண்டையிட்டாள் சொர்னச் சதங்கையிட்டாள் -
ஒண்டொடியை

அரும்பதவுரை : கண்ணிவரிசை : 266. வன்னம் - அழகு. மின்னுசை - பெண்ணுசை; 269. கொற்றவர் - மன்னவர். 270. தேட்டை - செல்வம்; 274. குடிலம் - வஞ்சகம்; 276. சிலம்பு - நூபுரத் தண்டை; பீலி - மயில் இறகு; 277. வாப்பிட்ட - கடைந் தெடுத்ததைப் போன்ற; தோப்பு - சோலை. 278. வாரி, குப்பி, தண்டை, சதங்கை—ஆகியவை அணிகள். ஒண்தொடி - ஒளிவீசும் வளையணிந்த பெண்.

மாகன மாலையெல்லாம் வாலிபர்க்கு நீகொடென்று 280
மோகன மாலையிட்டாள் முத்திட்டாள் - சேகரித்துக்
கொண்டுவந்து செம்பொன் கொடாதசிறு சண்டிகளைக் 281
கண்டியென்று மார்பிலொரு கண்டியிட்டாள் - உண்டாய்
வழியொன்றும் இல்லாமல் வந்தவர்க்குப் பைய 282
நெழியென்று தங்கநெழி இட்டாள் - அழகாய்
வரிகிடந்த கண்ணுட்கு வாலிபர்பொன் எல்லாம் 283
சரியிடென்று கூனிசரி இட்டாள் - அரிவையர்க்குத்
தக்கையிட்டாள் ஓலையிட்டாள் தங்கப் பதக்கனிட்டாள் 284
கைக்குவளை இட்டாள் கடகமிட்டாள் - சொற்கடங்கா
முத்துமூக் குத்தியிட்டாள் முப்புவியும் பெற்றவிலைக் 285
கொத்துமுரு கிட்டாள் கொலுசிட்டாள் - சித்திரக்கல்
மோதிரங் கையிலிட்டாள் மோகனமுத்
தென்றுசொல்லிப் 286
பேதைக் குலகறியப் பேரிட்டாள் - ஆதரவாய்ச்
செந்தமிழும் கன்னடமும் தேன்பாகு போல்தெலுங்கும் 287
சந்தநய மும்பரத சாத்திரமும் - அந்திசந்தி

மோகனமுத்து பருவமடைதல்

நேர்த்தியா கப்படித்து நித்தம் சரஸ்வதிக்கும் 288
வாத்தியார் என்ன மகிமைபெற்ருள் - சாத்திரமும்
ஆரியமும் கற்ருள் அலங்கார மங்கையொரு 289
காரியத்தின் மேலும் கருத்தானுள் - பூராயம்
பேசுவதும் கொஞ்சம் பிலுக்குவதும் கிட்டவரக் 290
கூசுவதும் முத்துக் குலுக்குவதும் - வாசமலர்
சூடுவதும் விண்ணுரம் சொல்லுவதும் கானரசம் 291
பாடுவதும் கண்மருட்டிப் பார்ப்பதுவும் - ஆடவரைக்
கொண்டாடிக் கொள்ளுவதும் கூடிவிளை யாடுவதும் 292
கண்டாள் கிழவி களிகூர்ந்தாள் - மிண்டர்

அரும்பதவுரை : கண்ணிவரிசை: 279. மாகனமாலை - பெரிய கனமுள்ள மயக்கவுணர்வு; 280. கண்டி - கண்டனஞ் செய்; ஒரு நகை. 382. சரியிடி - சரிக்கட்டி விடுதல்; ஒருநகை. அரிவை - பெண்; 286. சந்தநயம் - நயமான பதங்களையுடைய சங்கீத நயம். பரத சாத்திரம் - பரத நாட்டியம். 287. சரஸ்வதிக்கும் வாத்தியார் - கலைமகளுக்கே கல்வி கற்பிக்கும் திறமை பெற்றவள். 288. பூராயம் - விசித்திரப் பேச்சு.

குடியைமுழு துங்கெடுத்துக் கொள்ளையிடும் மாயப் 293
பொடியை மகட்குரைத்துப் போட்டாள் - படியேறி

நல்ல திருநாளில் நாகலிங்கர் சந்நிதியில் 294
எல்லவரும் காணஅரங் கேற்றினாள் - வல்லுப்போல்

தீர்க்கமும்கா மப்பழக்கச் சித்திரமும் ஆடவர்மேல் 295
நோக்கமும் தாய்க்கிழவி நோக்கினாள் - சேர்க்கையுள்ள

தாய்க்கிழவியின் போதனை

பெண்ணை அருகிருத்திப் பேச்சிட்டு நான்பெற்ற 296
கண்ணே ! யுன் புத்திக்குக் கண்ணுண்டே - வண்ணமணி

வல்லார் தனத்து மயிலே ! குலவித்தை 297
கல்லாமல் பாதிவரும் கண்டாயே - அல்லவடி

பட்டத்துப் பெண்ணே ! பலாப்பழத்துக் கீப்பிடித்து 298
விட்டபேர் உண்டோ விளம்புவாய் - கட்டாகப்

பார்விளக்கில் பற்றவைத்த பந்தம்நீ யானாலும் 299
தார்குழலே என்புத்தி சற்றேகேள் ! - நேராக

என்னை மறந்தாலும் எங்கோன் சிவசாமி 300
மன்னவன்மேல் கோவை மறவாதே - எந்நாளும்

பாலை பழுக்குமோ? பாற்சோறு கிட்டுமோ? 301
காலத்து வேளாண்மை கைப்பலனே - மேலான

செட்டிக் கொருதட்டுச் சேவக னுக்குமொரு 302
வெட்டுனக்கிப் போதொருவி யாழவட்டம் - கட்டுவிட்டே

ஊடுநரை கண்டுகன்ன மும்சுரித்தால் நம்மைவந்து 303
தேடிநிதி யார்கொடுப்பார் செல்வமே ! - வீடு

பெருக்க வரும்நமக்குப் பேரா முதலைப் 304
பெருக்கவரு மோஅருமைப் பெண்ணே ! - ஒருத்தருனக்கு

ஆத்தே! பணத்தை அளந்தளந்து தந்தாலும் 305
மாத்தைப் படியென்று வாங்காதே! - நேர்த்தியாய்த்

அரும்பதவுரை : கண்ணி வரிசை: 294. நாகலிங்கர் - மருதூரில் வீற்றிருக்கும் சிவபெருமான்; 295. தீர்க்கம் - முடிவு; காமப் பழக்கச் சித்திரம் - காமத்திலே திகழும் அழகு; 296. வண்ணமணி - அழகிய ரத்தினம். 297. வல் ஆர் தனம் - சூதாடும் காயை ஒத்த ஸ்தனம். 299. தார் குழல் - மாலையணிந்த கூந்தல்.

தம்பலங்கள் தின்பதற்கும் தப்புமொழி சொல்வதற்கும் 306
சும்பனங்கள் செய்வதற்கும் சோம்பாதே! - வம்பிபெற்ற
சேயே! பணங்கொடுக்கும் சீமான் களுக்குநம்மள் 307
வாயே படிக்கமடி வாணுதலே! - ஓயாமல்
முக்கோடி செம்பொன் முகந்தளந்து தந்தாலும் 308
கொக்கோகம் பார்த்தவரைக் கூடாதே! - கைக்கெதுவாய்
அண்டிப் பணம்கொடுத்தோர் ஆரொருவர் வந்தாலும் 309
பண்டுமுறை எவ்வளவும் பாராதே! - கொண்டுவந்து
தாய்க்கீழாம் பிள்ளைபணம் தந்தணைந்த போதவர்க்கு 310
வாய்க்கீழ் வடுக்களைநீ வையாதே! - பேய்மகளே!
பத்துநவ கோடி பசும்பொன் கொடுத்தணைந்த 311
சுத்தருக்கும் உள்ளவர்மம் சொல்லாதே! - எத்தாக
உல்லாசப் பெண்ணே! உனக்கு முழுக்குநாள் 312
எல்லையொரு வர்க்கும் இயம்பாதே! - சொல்லிலே
பூசிமெழு கிச்சாடை போட்டு வெறும்பேச்சுப் 313
பேசுவர்பால் வீண்பேச்சுப் பேசாதே! - மோசமடி!
கள்ளுக் குடித்தவர்க்கும் கஞ்சாக் குடித்தவர்க்கும் 314
எள்ளளவும் நீசற் றிணங்காதே! - பிள்ளைமார்
கைச்சரசம் காட்டும் கருணீகர் வந்தாக்கால் 315
கைச்சரசம் எள்ளளவும் காட்டாதே! - மெச்சிக்
கருத்தாய்ச் சிரித்தாலும் காற்காசு காணச் 316
சிரித்தலே நேர்த்தியடி தேனே! - பொருத்தியிரா
முப்பது நாழிகைக்கு முப்பதுபேர் வந்தாலும் 317
கைப்பொருளை வாங்கக் கருதடி - எப்போதும்
தேம்பதும மாதே! செகத்தில் பணமென்ருல் 318
பாம்புந் தலையெடுத்துப் பார்க்குமே ....

★

"என்மேலே ஆசையுண்டா" என்பா ரவர்களைப்பார்த்து 319
"உன்னுசை நான்விட் டொழிவேனு? - உன்னைவிட

அரும்பதவுரை: கண்ணி வரிசை 306. தம்பலம் - வெற்றிலைப் பாக்கு; சோம்பாதே - சோம்பலாக இருக்காதே; 307. படிக்கம் - எச்சில் உமிழும் பாத்திரம்; நுதல் - நெற்றி; 308. முகந்து - மொண்டு; 311. உள்ள வர்மம் - உண்மையான நடப்புகள்.

வேறுமுகம் பார்ப்பேனு ? விட்டுப் பிரிவேனு ? 320
தேறுவனு ? சீவன் இருக்குமா ? - மாறிமனம்

பற்றுவனு ? நித்திரையும் பண்ணுவனு ? உண்பேனு ? 321
சற்றேயென் காலும் தரிக்குமா ? - மற்றவரைப்

போலொருவர் கிட்டவுநான் போவேனே ? - முந்தியினி 322
மேலொருவ ருக்கு விரிப்பேனு ? - நீலாஎன்

தேகம் நிலைக்குமா ? சிந்தை மறக்குமா ? 323
ஓகோ ! உலோகமொப்புக் கொள்ளுமா ? - ஆகெடுவாய் !

பூவிற்ற பேர்கடையில் புல்லுவிற்பா ரா ?'' என்று 324
கோவித் தழுதுபையக் கூட்டிப்போய்ச் - சீவச்

சவடம் அவனைநடுச் சந்தியிலே போட்டுக் 325
கவடியடி நான்பெற்ற கண்ணே ! - புவியிலிதை

ஆளுக்காள் சொல்லி அவர்கள் தலையிலடி ! 326
மீளத்தான் கையால் விளக்கிலடி ! - நீளவட்டில்

சோற்றுத் தலையிலடி ! சொல்லிநூ ருணையிடு ! 327
தேற்றிக் கழுத்தறுக்கும் சீரிதுவே - வேற்றுரைக்கும்

எத்துக்கும் வஞ்சனைக்கும் இட்டிடும்பொய் யாணைக்கும் 328
சத்தியங்க ளுக்குமநீ தாழாதே ! - தித்திரிப்பும்

சூதும் கபடமும் சொல்புரட்டும் வஞ்சகமும் 329
கோதாய் ! நமக்குக் குடியிருப்பே - மாதே !

இனிமை தயவிரக்கம் எல்லாம் நமக்குக் 330
கனவினிலும் இல்லையடி கண்ணே ! - தினநமக்குப்

பொய்யே குலவித்தை போடுவதே கண்வெட்டு 331
மெய்யேது நாமேது மெல்லியலே ! - வையுமா

தெய்வம்நம்மை என்னசெய்யும் தேவர் அடியார்நாம் 332
ஐயமில்லைப் பொய்யாணைக் கஞ்சாதே - தையலே !

அந்நாள் எழுத்தும் அழியுமா உள்ளபடி 333
முன்னுள் விதிதான் முடியுமடி - தன்மனொரு

அரும்பதவுரை : கண்ணி வரிசை; 322. முந்தி - முந்தானை; முந்தி இனி விரிப்பேனே என்றால் சேரமாட்டேன் என்று பொருள். 324. சீவச்சவடம் - நடைப்பிணம்; 325. கவடி - வஞ்சனை செய்; 326. வட்டில் - சோற்றுத் தட்டு; 327. வேற்றுரை - திரித்துப் பேசுதல்; 328. தாழாதே - தாழ்ந்து போகாதே.

பொய்சொல்லி வாழ்ந்தான் புகழுமரிச் சந்த்ரனொரு 334
பொய்கிடையா மல்தேசம் போக்கடித்தான் - கையிலே

செல்லாப் பணம்தருவார் சில்வாய் களைக்கிழித்து 335
மல்லாற்றி நல்லபணம் வாங்குவேன் - வல்லியிதைப்

பன்னி உரைப்பதென்னே ! பார்த்தால் பசுவடிநான் 336
பொன்னே ! புகுந்தால் புலியடி - தன்னாலே

கட்டிவரா கன்கொடுத்த காவல ரும்நமக்குப் 337
பெட்டிவரா கன்கொடுத்த பெயர்களும் - ஒட்டியிங்கே

கண்டமட்டும் அந்திசந்தி காத்திருந்தால்
திண்டு முண்டாய்ச் 338
சொண்டெனக்குச் சொல்லத் தெரியாதா - மண்டுகிறேன்

"வேசைமனை அம்பலமா? வீணரெல்லாம் கூடியென்ன 339
பேசுகிறார் ஞாயமல்ல; பெண்மயிலே ! - வாசலிலே

போகச்சொல் !" என்கிறேன் போகாட்டால்
கிட்டப்போய் 340
"சோகைத் தடியா ! சுடுமுகரா ! - ஆகட்டும் !

போ ! வெளியிலேபோ ! பொதுவீடா ! நீஇதற்குக் 341
காவலா ! கொப்பமார் காணியா ! - பாவியிது

சத்திரமா ! என்வீடு சந்தையா !" என்றதட்டிப் 342
புத்திசொல்வேன் ; அப்படியும் போகாட்டால் -
மெத்தமெத்த

ஏசுவேன் ; பின்னும் இருந்தாக்கால் நாயைவிட்டுச் 343
சூசுவேன்; பின்னதிலும் தொட்டிருந்தால் - வாசல்மாறு

இல்லையா ? கையில் எடுக்கிறேன் ரோசமற்ற 344
மொல்லைகளைத் தூர முடுக்கிறேன் - புல்லறுத்துப்

பாய்விற்ற பேரும் பனங்கொடுத்தால் இந்தவித்தை 345
தாய்வித்தை என்றே தழுவிவிடு ! - நாய்விற்ற

காசு குலைக்குமா ? கைத்தவேப் பெண்ணெய்விற்ற 346
காசு கசக்குமா ? கார்கையே ! - கூசுபுளி

அரும்பதவுரை : கண்ணி வரிசை ; 338. மண்டுகிறேன் - பதுங்கிப் பாய்கிறேன்; 340. சோகைத் தடியா - உபயோகமற்ற முரடனே; 342. மொல்லை - ஆடு; 346. கூசு புளி - பல்லைக் கூசவைக்கும் புளி.

மேவியக ளாக்காய்போல் வெற்றிரசம் கொள்ளுவதே 347
தேவடியார்க் குள்ள திராணியடி - பாவையே !

ஆடவர்மேல் வைத்திருக்கும் ஆசைபுளி யம்பழமும் 348
தோடும்போ லேயிரடி தோகையே ! - தேடியுன்பால்

அண்ணனும் தம்பியும்வந் தாலதற்கு நாணுதே ; 349
திண்ணைவெவ்வே றுண்டடியென் செல்வமே ! -
எண்ணுமல்

வாயடியால் வந்தசில வண்டரையென் கைத்தடியால் 350
நாயடித்தால் போலவே நானடிப்பேன் - நீயே

கெதியடியென் றுன்னைவந்து கெஞ்சுவரை உன்கால 351
மிதியடியால் போட்டு விரட்டு - நிதமும்

குருடர் பணத்தில் குருட்டுக்கண் உண்டோ ? 352
திருடர்பணம் செல்லமாட் டாதா ? - ஒருவர்

தமக்குநாம் சொந்தமுண்டா ? தார்குழலே ! அந்தக் 353
கமுக்கமெலாம் கேளடியென் கண்ணே ! - நமக்குப்

பணம்கொடுப்பார் தெய்வம் பணம்கொடார் தீண்டாப் 354
பிணமடிநான் பெற்றெடுத்த பேதாய் ! - குணமுடனே

மன்மதப்பேய்க் கெவ்வளவும் வைத்துப் படைக்காத 355
சென்மமென்ன சென்மம்வீண் சென்மமே - இன்னங்கேள்

வெட்டைகிரந் திக்காரர் வேணதுதந் தாலுமவர் 356
கிட்டவும்போ காதே கிளிமொழியே ! - கட்டழகி !

செம்பிநாட் டுத்தலைமைத் தேவமா ருக்குநம் 357
கும்பிடே போதுமடி கொம்பனையே ! - பைம்பொன்முடி

வேந்தரிடம் நீசேர்ந்தால் வேறொருவர் கிட்டவாரார் 358
மாந்தரிகர் கிட்டவும்பொன் வாங்காதே ! - சேர்ந்த

சலுகைநமக் குண்டுபிர தானிகளாள்விட்ட 359
வலியப்போய் மேவிவிடு மானே ? - உலகிலுள்ள

அரும்பதவுரை: கண்ணிவரிசை : 350. வாய்அடி - வாய் சவுடால்; 353. கமுக்கம் - இரகசியம்.

சாமாசி கத்தார் சமஸ்தானக் கள்வரந்தச் 360
சீமான்கள் சேகரமும் வேணுமடி - நேமுகமாய்

அட்டவணைப் பிள்ளைமார் ஆரொருத்தர் வந்தாலும் 361
கிட்ட அணைத்துக் கிடத்திக்கொள் ! - ஒட்டிக்

குமஸ்தாக்கள் வந்தால் குறைநமக்குண் டாமே 362
சமஸ்தானம் நாமடியென் தாயே ! - இமைக்குமுன்னே

ராயச காயருக்கு நாமிணங்க வேணுமவர் 363
ஆயாசம் வந்தால் அழகலவே ! - தோயவரும்

நம்பியார் ஐயருக்கு நம்மைத்தொட் டென்னஒரு 364
கும்பிடலல்லால் பின்னையென்ன கொள்ளையடி - கெம்பாமல்

மாதே இருட்டில் வருவார் குருக்களையர் 365
பேதாய் அதைவெளியில் பேசாதே ! -ஓதுவான்

தந்தவரி சைக்குச் சரசமாய் நீசிரிக்கும் 366
தந்த வரிசை சரிதாண்டி - வந்திசையாய்ச்

சத்தமிட்ட நாகசின்னச் சங்கீதக் காரனுக்கோர் 367
முத்தமிட்டா லும்போதும் மொய்குழலே ! - எத்தியெத்தி

நட்புடனுன் தேடியுண் ணும் நாளையிலோர் வேடிக்கை 368
செப்பக்கேள் மைமந் திரமுடுக்கன் - தப்பிலியோர்

ஆரியப் பன்திருவை யாற்றிலொரு தாசிமுத்துக் 369
கூரிகைப் பொன்னையெலாம் கொள்ளையிட்டான் - நேரான

கொச்சிச் சிவக்கொழுந்தைக் கொட்டிக் குலைத்தவளைப் 370
பிச்சைக்கு விட்டான் பிளங்தெறிவான் - இச்சையாய்ச்

செந்தூர்க் கமலிமுதல் சேரப் பறித்தவளைச் 371
சந்தியிலே விட்டான் சதிகேடன் - இந்தமுறை

வெள்ளவரத் தால்தேடும் வேசையர்கைப்
பொன்னையெலாம் 372
கொள்ளையடித் தான்மடைவாய்க் கொக்குப்போல் -
கள்ளமடைக்கு

அரும்பதவுரை: கண்ணி வரிசை; 360. சாமசிகத்தார் - வழக்குத் தீர்ப்பவர்; நேமுகம் - நியமனம்; 363. ராயசகாயர் - ராஜவிஸ்வாசி; தோயவரும் - அனுபவிக்க வருகின்ற; 364. கெம்பாமல் - பேச்சு மூச்சில்லாதபடி; 368. மை மந்திர முடுக்கன் - மை போன்ற ஜாலங்களில் வல்லவன்; தப்பிலி - இழிவானவன்.

எல்லாரும் வாரி எதுப்பைகட்டி ஞர்களல்லால் 373
வல்லான்கைப் பொன்ஞெருவர் வாங்கவில்லை -
சல்லியென்னை

இட்டமாய்த் தேடிவந்தான் இன்றுசமை யல்புரையின் 374
கிட்டமுயல் வந்ததென்று கெர்ச்சித்துக் - கட்டளையாய்ச்

செம்மராட் டங்கறியைத் தீன்பழக்கிப் பார்ப்பமிந்தப் 375
பொம்மலாட் டென்றவனைப் புல்லினேன் - வெம்முனைக்கை

வாளுருவிச் சோற்று மயக்கம் சரிசாம 376
வேளையிலேங் தாம்நாள் வெளியேறிக் - கேளாய்

ஒருகால் செருப்பிட் டொருகணுக்கு மையிட்டு 377
ஒருகாதுக் கோலையும்நான் இட்டுப் - பெரியசடை

பின்னிழ டேந்திப் பிறந்தகோ லத்துடனே 378
உன்னிமயா னத்தில் ஒருகுழியில் - கன்னிகள்ளப்

பேருல் உடன்புதைத்த பிள்ளைமண்டை நெய்வடித்துக் 379
கூருய் அதைவீட்டில் கொண்டுவந்து - சோறதிலே

தானிட்டுப் பாலிலிட்டுச் சர்க்கரையில் இட்டவலில் 380
தீனிட் டவன்கைத் திரவியத்தை - மானரசே !

பண்டுபெரும் பூதமுலைப் பாலுமுயி ருந்திருமால் 381
உண்டதுபோல் நானுறிஞ்சி ஒட்டிவிட்டேன் - கண்டாயோ

சந்தியிலே நின்று தலைபுழுத்த நாயைப் போல் 382
அந்தா சுணைகெட் டலைகிருன் - முந்தத்

தினக்கட் டளையாய்ச் சிறுகச் சிறுக 383
எனக்குச் செலவுபோய் இன்னம் - உனக்கோர்

கரண்டி இருக்குதுன்மேல் காதல்கொண்ட பேரைக் 384
கரண்டிவிடு நான்பெற்ற கண்ணே ! - பிறந்ததுபோல்

தானே துலாவேறித் தாசி முழுமோசம் 385
போனதுபோல் நீமோசம் போகாதே ! - மானததால

வெட்டுண் டவளையொரு மின்காரித் துப்பினதும் 386
பெட்டிமணல் வாரும் பெருங்கதையும் -சட்டமாய்ப்

அரும்பதவுரை : கண்ணி வரிசை: 373. எதுப்பை கட்டுதல் - பிறருக்குக் கொடுத்தல்; 374. கெர்ச்சித்து - ஆர்ப்பாட்டம் செய்து; 375. புல்லினேன் - தழுவினேன்; 385. துலா - திராசு; 386. மின் - மங்கை.

பண்டுரைக்கக் கேட்கலேயோ ? பாவாயிச் செய்தி
யெலாம் 387
விண்டுனக்குச் சொல்லவுந்தான் வேண்டுமோ -
கெண்டைவிழி
வெட்டுமொரு வேசை விடசூ ரணப்பொடியாள் 388
பட்ட அபகடமும் பார்த்துக்கொள் - கெட்டிகெட்டி
தாழி வராகனுக்காச் சர்ப்பனேயோர் வேசைசெய்த 389
காளிதா சன்கதையும் கேட்கலேயோ ? - வாள்விழியாய்
இந்தவகை யாய்த்தேடி ஈழத்து வள்ளியென்றும் 390
செந்தூர் முழுகியென்றும் சின்னியென்றும் - சந்தான
நெல்லூர் மருதியென்றும் நெட்டூர் அழகியென்றும் 391
புல்லாணிச் செங்கமலப் பூவியென்றும் - செல்வமுள்ள
வெங்களூர்ச் செல்வியென்றும் மேன்மைபெற்றுர்
என்றுமெத்தச் 392
சங்கையிலா மாயமெலாம் தாய் சொன்னுள் - இங்கே
வெகுமதிகள் சொன்னதெலாம் மின்னுள் நமக்கு 393
வெகுமதிதான் என்றுவிருந் திட்டாள் - செகமீது

தோழிகளின் சாகஸம்

ஆட்கண்ட ராமியென்றும் ஆனேமா ருடியென்றும் 394
கோட்கண்ட மாயைக் குளிகையென்றும் - நாட்கொண்ட
காருடக் கள்ளியென்றும் கண்டவரை எத்தியென்றும் 395
வீரியத்து ராக்காயி வெட்டியென்றும் - போராடிப்
பாதை மறித்தாள்என்றும் பையப் பசப்பியென்றும் 396
தாதியெட்டுப் பேர்களுண்டு தையலுக்குச் - சாதகமாய்
அக்கினியில் நீர்பிழிவார் ஆற்றுமண லேத்திரிப்பார் 397
கைக்குள்ளே வைகுந்தம் காட்டுவார் - தொக்காக
வானத்தை வில்லாய் வளேத்திடுவார் கொல்லவரும் 398
கானப் புலியையும்வாய் கட்டுவார் - தேனனேய

அரும்பதவுரை : கண்ணி வரிசை: 387. பாவாய் - மங்கை; விண்டு - விரித்து; 388. விடசூரணப் பொடியாள் - வேசியின் பெயர்; அபகடம் - அவமானம்; 389. தாழி - வாயை ஒத்த சட்டி; சர்ப்பனே-வஞ்சகம்; வாள்விழி - கத்தி போன்ற கண்; 390. ஈழம் - யாழ்ப்பாணம்; முழுகி, சின்னி - பெயர்கள்; 393. செங்கமலப் பூவி - ஒரு பெண்ணின் பெயர்; 395, 396, 397 - தோழிகளின் பெயர்கள்.

சேயிழையார் இந்தமுறை செய்திடப்பொன்
தேடிவைக்கும் 399
மாயமங்கை மூரலுக்கும் வாயிதழ்க்கும் - சாயலுக்கும்
சேல்விழிக்கும் வாணுதற்கும் தேமொழிக்கும்
வாசனைக்கும் 400
கால்களுக்கும் நூலிடைக்கும் கார்குழற்கும் - மால்பிடித்து,

மோகனமுத்தின்மீது மோகங்கொண்ட காமுகர்கள்

காட்டும்நெடும் பாய்மரத்துக் காகம்போல் சுற்றுவரும் 401
சேட்டுமத்தில் ஈப்போல் தியங்குவரும் - கோட்டுவர்ண
வம்பிட்ட கொங்கைநல்லாள் வாசல் தலைக்கடையில் 402
கும்பிட்டு வீழ்ந்து குழைவாரும் - சொம்பிட்ட
வாளாம் சிவந்தவிழி மானுட் கிருபுறமும் 403
காளாஞ்சி ஏந்திக் கனிவாரும் - நாளெல்லாம்
ஆணிப்பொன் ஆழி அளந்தளந்து தந்தவட்குக் 404
காணிக்கை வைத்தடப்பம் கட்டுவரும் - பேணியிரு
கையைப் பிடித்திரண்டு காலுமடி மேலிருத்திப் 405
பையச் சுடக்குப் பறிப்பாரும் - ஒய்யாரச்
சேலேறும் கண்ணுட்குத் திண்டோரம் நின்றுகொண்டு 406
மேலே மயில்விசிறி வீசுவரும் - நாலிடமும்
கன்னிமஞ்சள் நீரையள்ளிக் கண்ணிரண்டும்
தாம்கழுவிச் 407
சென்னியிலுங் கூடத் தெளிப்பாரும் - முன்னிருந்த
வெள்ளித்தாம் பாளத்தை விற்றுக் கருங்கிழட்டுக் 408
கொள்ளித்தே ளுக்குக் கொடுப்பாரும் - உள்ளாகக்
கொட்டகையில் வந்துவந்து கூடி நரைத்தகிழட்டு 409
ஒட்டகையைக் கண்டே உலைவாரும் - இட்டமாய்
மின்னுளைக் காணவரும் வேளைநரைக் கூன்கிழட்டுச் 410
செந்நாயைக் கண்டே திகைப்பாரும் - கன்னிநம்மைக்

அரும்பதவுரை : கண்ணிவரிசை; 399. சேயிழையார் - பெண்கள்; மூரல் - புன்சிரிப்பு; 400. மால்-மயக்கம்; 401. நெடும் - நீண்ட; 402. வம்பு - வாசனை; குழைவாரும் - வருந்துவாரும்; சொம்பு - அழகு; 405. சுடக்குப் பறித்தல் - நெட்டியொடித்தல்; 409. நரைத்த கிழட்டு ஒட்டகை - தாய்க்கிழவியாகிய செங்கமல வல்லி; உலைதல் - வருந்துதல்.

காப்பாடு வாளென்று காணவந்த பேர்கிழட்டுத் 411
தோப்பாடி யைக்கண்டே சோர்வாரும் - சீப்பிட்ட

மைக்கார் குழலியிடம் வந்தபேர் கூனல்நரைக் 412
கொக்கால் அகப்பட்டுக் கொள்வாரும் - பொய்க்கிழட்டு

மூளிதான் சாகாளோ முற்றும் மதமதக்கத் 413
தாழியோ என்று சலிப்பாரும் - காளிமுன்னே

தீக்கொளுத்தி மாதவிடாய்ச் சேலைசுட்டு மந்திரத்தைத் 414
தாக்கியொரு சக்கரமும் தாபித்துத் - தோல்கிழட்டுத்

தீப்பாவை மாளவென்று சென்றுநடுச் சாமத்தில் 415
மாப்பாவை தான்புதைத்து வைப்பாரும்-பேய்ப்படுவார்

வெட்கமெலாம் போட்டுமங்கை வீட்டுப் புழக்கடையின் 416
பக்கமெலாம் எட்டியெட்டிப் பார்ப்பாரும்-கைக்கெதுவாய்க்

கஞ்சமுக மங்கையிரு கண்காண அம்மியிலே 417
மஞ்சள் அரைத்து வழிப்பாரும் - கெஞ்சியே

தேமல் அழகிமுகம் சிந்துகுறு வேர்வையெலாம் 418
சோமனுல் மெல்லத் துடைப்பாரும் - நேமுகமாய்

வண்டுவந்த கண்ணுட்கு மாங்கனியும் தேன்குழலும் 419
கொண்டுவந்து தின்னக் கொடுப்பாரும் - ஒண்டொடிக்குக்

கால்பிடித்து மேல்பிடித்துக் கைபிடித்து நிற்பாரும் 420
மால்பிடித்து நின்று மலைப்பாரும் - பால்கொடுக்க

மாடு கொடுத்ததற்கு மங்கைநல்லாள் என்னதந்தாள் 421
ஓடு கொடுத்தாளென் ருேதுவரும் - சோடாகச்

சீப்புக் கொடுத்ததற்குத் தேனுர் குழலியரை 422
ஆப்புக் கொடுத்தாளென் றஞ்சுவரும் - சாப்பிட்ட

வட்டில் விளக்குவரும் வாசல் பெருக்குவரும் 423
முட்டியிலே தண்ணீர் முகப்பாரும் - கட்டளையாய்

நெல்லெடுத்துக் குத்துவரும் நெய்யுருக்கி வைப்பாரும் 424
புல்லறுத்துக் கொண்டுவந்து போடுவரும்-கல்லடுப்பில்

அரும்பதவுரை : கண்ணி வரிசை; 411. காப்பாடுவாள் - ஆதரிப்பாள்; 412. மைக்கார் குழலி - கரிய கூந்தலையுடையவள்; 414. தாக்கி - ஏற்றி; 415. தீப்பாவை - கெட்ட பெண்; மாப்பாவை - மாவினுல் செய்யப்பட்ட பெண்; 417. கஞ்சம் - தாமரை; 421. சோடு - இரண்டு.

தீயூது வாருமவள் தின்றதம்ப லந்தனக்கு 425
வாயூறிக் கொண்டே வருவாரும் - சாயுமிடை

ஆடையிலே சுற்றிநிழல் ஆடையிலே உப்பரிகை 426
மேடையிலே கண்டு மெலிவாரும் - நீடியகைச்

சாட்டையிலே பம்பரம்வைச் சாட்டையிலே சுற்றுமதில் 427
கோட்டையிலே ஏறிக் குதிப்பாரும் - நீட்டுவிழிக்

கெண்டையிலே முன்சரிகைக் கெண்டையிலே
பூமுடிக்கும் 428
கொண்டையிலே ஆவி குலைவாரும் - திண்டுமேல்

சாயையிலே பின்னழகுச் சாயையிலே வேல்விழிகள் 429
பாயையிலே ஆவி பதைப்பாரும் - ஓயாமல்

கெண்டையிட்ட கூர்விழிக்காய்க் கீசகனும்
வீமனும்போல் 430
சண்டையிட்டு மற்பிடித்துச் சாய்வாரும் - ஒண்டொடிக்கு

மேற்கட்டி கட்டினபேர் மெத்தமன்னை கட்டியதில் 431
சீக்கட்டி கொண்டே திரிவாரும் - நோய்க்கிடமாய்

ஆயாசப் பட்டிருமி அச்சுக் குலைந்தொதுங்கித் 432
தேவாங்குபோலே திரிவாரும் - பாவையரைக்

கண்கண்ட தெய்வமென்று கையெடுத்த பேர்கிரந்திப் 433
புண்கண்டு மேலசந்து போவாரும் - விண்கண்ட

பாவாடை வீசமணிப் பல்லக்கில் ஏறியந்தப் 434
பூவைதலை வாசல்வழி போவாரும் - யாவர்களும்

கண்ணுரக் காண அந்தக் கன்னிமுட்டுச்
சேலைகொண்டு 435
வண்ணான் துறைக்கு வருவாரும் - எண்ணவொண்ணுக்

காமவித்துப் போலெழுந்த காரிகைக்குக் காணிவிற்றுப் 436
பூமிவிற்றுத் தட்டழிந்துபோவாரும் - நாமிருந்த

வீட்டைவிற்றோம் மாட்டைவிற்றோம் மெத்தைவிற்றோம்
வட்டில் விற்றோம் 437
ஆட்டைவிற்றோம் என்றே அலைவாரும் - கோட்டைமன்னர்

கன்னியிடம் வந்தணையக் கட்டிலுக்கால் உள்ளோடி 438
முன்னிருந்த பேர்பயந்து முக்குழிக்க - அந்நேரம்

பாழான இந்திரியம் பல்லிடுக்கி லேவழியக் 439
கீழாய்ப் பதுங்கிக் கிடப்பாரும் - ஊழ்விதியால்

யாருமே இப்படி அலேந்திருக்கும் நாளிலிந்த 440
ஊரிலே ராமய்யனென் ஞேர்பார்ப்பான் - பாரவான்
ஆளில் அழகன் அருச்சுனன் கோவலன் 441
நாளுமிந்த ஊர்க்கொருபி ராமணிகன் - கேளும்
ஒருகணிசம் பைய உரசப்போய் மாடு 442
திருகுணிக்குள் ளாகிவிட்ட சீர்போல் - கருதி
ஒருபொழுது நாடிமரு தூர்தேடிப் போனுன் 443
தெரிவையரைக் கண்டவளேச் சேர்ந்தான் - அரசழிவாள்
கூடிமருந் திட்டாள்பொன் கொள்ளேயிட்டாள்
கையிழந்த 444
சாடையறிந் தாள்வெளியே தள்ளினுள் - சேடியரின்
முன்கடுகி வந்தொருத்தி முட்டினுள் மற்ருெருத்தி 445
பின்குடுமி தன்னேப் பிடித்திழுத்தாள் - வன்கொடிய
நக்குவாய்க் காலகடி நாய்தனேயும் சூழவிட்டாள் 446
பொக்குவாய் நாயும் புகுந்ததே - திக்குவேறு
இல்லாமல் தன்ஞெழுக்கம் எல்லாம் தவறிமனப் 447
பொல்லாத நோய்கொண்டு புண்ணுகிப் - பல்விழுந்து
ராமய்ய னென்றுசொன்ன நாதிப்பேர் பூதிமங்கி 448
ஊமையன் என்றுபேர் உண்டானுன் - மாமனதும்
பேதகமாய் இங்கே பிறந்தகோ லத்துடனே 449
பாதையிலே போரான்நீர் பார்க்கலேயோ ? - ஈதல்லால்
அப்புவையன் போய்ச்சேர்ந்தான் அன்றுமுதல்
இன்றுவரை 450
வெப்புவையன் ஆனுன்காண் வேதியரே ! - கப்பலூர்ச்
சங்கரையன் போய்ச்சேர்ந்தான் தாலிவிற்றுக் கூறை
விற்றுப் 451
பங்கரையன் ஆனுன்காண் பாவலரே ! - வெங்களூர்ப்
பாற்கரையன் போய்ச்சேர்ந்தான் பாழே கிரந்தி
கொண்டு 452
மூர்க்கரையன் ஆனுன்காண் முன்னவரே ! - மாற்கமிலாப்

அரும்பதவுரை : கண்ணிவரிசை; 440. பாரவான் - பெரிய மனிதன்; 443. அரசழிவாள் - சந்ததியில்லாமல் போவாள்; 444. கையிழந்த - கைப்பொருள் இழந்த; சாடை - குறிப்பு; 446. பொங்குவாய் நாய் - தாய்க்கிழவி; 448. மாமனது - பெரிய மனது ; 451. கூறை - ஆடை; பங்கரையான் - கோரசொரூபன்.

பேரிப் படிமயங்கிப் பேய்கொண் டலைந்தவர்கள் 453
ஊருக்கூர் மெத்த ; இந்த ஊரிலே - பாருமையா !
இந்தா ஒருவன் இளைக்கிறுன் சந்தியிலே 454
அந்தா ஒருவன் அலைகிறுன் - கொந்திமன்னன்
வல்லிகிட்டப் போய்த்திரும்ப வந்தானு உள்ள
தெல்லாம் 455
சொல்லிவிட்டேன் என்பேரில் தோஷமில்லை - கல்வியுள்ள
ஞானியையன் சொன்னபுத்தி நாடிநட வாமல்அவ 456
தானியையன் போனதுவும் தானறிவீர் ! - ஆனதினுல்
இவ்விதமாய்த் தேடியுண்ணும் ஏந்திழையாள்
வாழ்மருதூர்க்கு 457
எவ்விதம்போ வீர்வருவ தெவ்விதங்காண் !-சொல்வீரென்று

அவதானி மருதூர் சென்றமை

ஆரியம் தேர்ந்தகுரு ஐயர்புத்தி சொல்லநல்ல 458
காரியந்தான் என்றிரண்டு கைகொட்டி - வீரியமாய்
அங்கே நகைத்திங்கே அந்தப்பாம் பாடாது 459
பொங்கியபால் நெஞ்சில் புரையுண்டா ? - தங்காட்டை
விட்டுப் புலிபசித்தால் மீண்டுபுல்லைத் தின்னுமா ! 460
பட்டும் அறியேனு ?கற் பாறையிலே - நெட்டுமுளை
கைக்கடிசால் ஏறுமா ? கட்டுமெழு குப்பாவை 461
அக்கினிப் பந்தலுக்குள் ஆடுமா ? - மெய்க்குமுன்னே
நிற்குமா பொய்யும்? நிறைகுடம்த ளும்புமா ? 462
பிக்கில் உடம்பறியாப் பேயாட்டா ? - எக்காலும்
தன்னெஞ் சறியாப்பொய் தானுண்டோ போம்போம்நீர் 463
என்னெஞ் சறியீர் எனவுரைத்தேன் - சொன்னேனுன்
பட்டறி கெட்டறி பத்தஞ் சிறுத்தறியென்று 464
எட்டிவந்தார் புத்திசொன்ஞர் என்பிறகே - கட்டளையாய்
பொன்மேனி நெல்விளைவு பூத்த வயல்வளஞ்சூழ் 465
நென்மேனி தாண்டிவைவை நீராடி - நன்மதுர
வெல்லங் கடந்தமதன் வில்மகவான் வில்லைமுட்டும் 466
வல்லம் கடந்து வழிக்கொண்டு - மெல்ல

அரும்பதவுரை : கண்ணிவரிசை. 458. ஆரியம் - சமஸ்கிருதம் 461. கை கடிசால் - கை பலத்தால்; 462. பிக்கில் (பிக்கு இல்) - பிசகில்லாமல்; 464. பத்தஞ் சிறுத்தறி (பத்து அஞ்சு இறுத்து அறி) - பத்து ஐந்து கொடுத்தாலாவது தெரிந்துகொள்.

இருமருதூ டோடடந்தான் இந்திரன்விண் போற்றும் 467
திருமருதூ ருக்கருகே சென்று - வரமுதவு
மாகதீர்த் தம்போலிம் மண்டலத்தில் பண்டுதித்த 468
நாகதீர்த் தம்புகுந்து நான்படிந்து - சேகரமாய்ச்
சந்தி நியமம் தவறாம லேமுடித்துச் 469
சிந்தை புலன் சென்றவழி செல்லாமல் - பந்தித்துப்
பொன்னாகர் சேவடியைப் போற்றிசெய்து சந்நிதிக்கு 470
முன்னாக வந்துநந்தி முன்பணிந்து - பன்னுமறைக்
கஞ்சரத்தை முன்புபெற்ற கண்மணியை வெண்
மருப்புக் 471
குஞ்சரத்தைக் கண்டுகையால் கும்பிட்டு - மஞ்சுதொடும்
கம்பமெதிர் வந்து, தென்றல் காலிருக்கும்
குன்றையொரு 472
கும்பனுக்குத் தந்த குணக்குன்றை - இன்பமுற
ஆகம் பசந்த அழகிய நாயகியோர் 473
பாகம் சுமந்த பரஞ்சுடரை - மோகமுள்ள
தொண்டருள்ளத் தேவிளங்கும் தூண்டா
மணிவிளக்கை 474
அண்டருக்கும் தேடரிய ஆரமுதை - முண்டகத்தாள்
நித்தம் துதித்துமுத்தி நீணெறிசேர் மூவரன்புச் 475
சித்தம் தழைத்த சிவக்கொழுந்தை - முத்தமிழின்
பண்காட்டி அந்தாதி பாடியமெய்த் தொண்டனுக்குக் 476
கண்காட்டி ஆண்டுகொண்ட கண்ணுதலை - மண்காணத
தாய்பேசு பேசென்று சாற்றினும்பே சாமூங்கை 477
வாய்பேசச் செய்தமகா மந்திரத்தை - மீயுலவும்
வில்வத்தின் பால்முளைத்து வேதமுத லாய்க்கிளைத்த 478
செல்வத்தைக் கண்டு தெரிசித்து - நல்லதெய்வ
வாரணத்தைத் தோய்ந்தமத வாரணத்தை ஓர்மருப்பு 479
வாரணத்தை ஈன்றபிடி வாரணத்தை - ஆரணத்தாய்
“ஏனப்பா காழிவளர் என்னப்பா உண்ணப்பா” 480
ஞானப்பால் என்றூட்டும் நாயகியை - வானிறைஞ்சும்

அரும்பதவுரை ; கண்ணிவரிசை. 470. பன்னுமறை - வேதத்தை. விளக்குகின்ற; 471. கஞ்சரத்தை (கஞ்சர் அத்தை) பிர்மாவின் அத்தையாகிய பார்வதி தேவியை; மருப்பு - கொம்பு; மஞ்சு - மேகம்; 473. கும்பன் - அகஸ்தியர்; 474. முண்டகம் - தாமரை; 479. ஆரணத்தாய் - வேதமாதா.

தன்பதத்தில் ஏற்றிமலர் தானருச்சிப் பார்வணங்கும் 481
முன்பதத்தில் ஏற்றிவைக்கும் முக்கனியை - அன்புத்தேன்
ஊற்றிருக்கும் மெய்யடியார் உள்ளமலர் ஆலயத்தில் 482
வீற்றிருக்கும் ஜோதி விளக்கொளியை - நாற்றிசைக்கும்
அன்னை மருதூர் அழகிய நாயகியைச் 483
சந்நிதிமுன் நின்று தரிசித்தேன் - அந்நேரம்

மோகன முத்தின்மீது மோகம் கொண்டது

மாகனக மண்டபத்தில் வந்துநிற்கும் போதுகண்டேன் 484
மோகனமுத் தென்னுமொரு மொய்குழலை - ஏகநுதல்
வில்லழகும் பாய்ந்தவிழி வேலழகும் காலழகும் 485
சொல்லழகும் மாலையிட்ட தோளழகும் - பல்லழகும்
கையழகும் மார்பழகும் காதழகும் மூக்கழகும் 486
மெய்யழகும் கண்டவுடன் மெய்மறந்தேன் - ஒய்யாரக்
கட்டழகி வள்ளைமணிக் காதுகண்டேன் காடைவலைத் 487
தட்டில்விழுந் தாப்போல் தட்டழிந்தேன் - இட்டமினுள்
வாய்ந்தமயற் குள்ளாய் மதயானை போயளறு 488
பாய்ந்தகதை போலே பதைபதைத்தேன் - காந்திமணிச்
சங்கம் தரித்தசெங்கைத் தாமரைகண் டேன்மேனி 489
அங்கம் தெரித்தநெற்போல் ஆயினேன் -
கொங்கையென்று
கல்லையோ பண்ணிவைத்தான் கஞ்சனிவ ளுக்கிடையும் 490
இல்லையோ என்றுமனத் தெண்ணினேன் - சொல்லியசங்
கீதத்தைப் பாடினுள் கிண்ணமுலைப் பேதையவள் 491
பாதத்தைப் போய்ப்பிடிக்கப் பார்த்திட்டேன் - கோதற்ற
தேன்பிறந்த சொல்லாளைச் சேராமல் நாம்வீணுக்கு 492
ஏன்பிறந்தோம் பூமியிலென் றெண்ணினேன் -
மான்போல்வாள்
சேல்வைத்த கண்ணைச் சிமிட்டினுள் மங்கையிதென் 493
மேல்வைத்த பார்வையென்று மெச்சினேன் - கால்வைத்து
மத்தளத்துக் கொக்கவடிவைத்தாள்நான்மெய்ம்மறந்து 494
தத்தளித்துக் காலசந்து தட்டழிந்தேன் - தித்திகுழல்

அரும்பதவுரை : கண்ணிவரிசை. 488. அளறு - சேறு; 489. சங்கம் - வளையல் ; அங்கம் - எலும்பு ; 490. கஞ்சன் - பிர்மா ; 491. கோது - குற்றம்.

கைத்தாளத் துக்கேற்பக் கைபிடித்தாள் காமனெனை 495
அத்தாளம் போடும்வகை ஆயினேன் - தத்தைவெகு
முத்துமுத்தாய் ஆடினுள் மொய்குழலார் சூழவொரு 496
சித்திரம்போல் தன்மனைக்குள் சென்றிட்டாள் -
புத்திசொல்லி
ஒக்கவந்த வேதியரை உள்ளேகல் தூண்மறைவுப் 497
பக்கத்தில் விட்டுமெள்ளப் பம்மினேன் - வக்கணையாய்
ஐயர்சொன்ன புத்தியெலாம் ஆலவாய்த்
தின்கரும்பாய்க் 498
கைதவறிக் கொட்டும் கமழ்பாலாய் - ஐயையோ !
கீரையாய் மாவடுவாய்க் கெட்ட புளிச்சாறுய்க் 499
கார்கடலி லேகவிழ்ந்த கப்பலாய் - ஏருழுத
சேற்றில்நட்ட கம்பமாய்ச் சிந்தியதண் ணீரெழுத்தாய் 500
ஆற்றில் கரைத்தபுளி ஆனதுவே - தோற்றுமல்
நங்கையுடன் நானும் நடந்தேன் அலங்கார 501
மங்கைவரக் கண்டோர் வழிதோறும் - அங்கங்கே
சேணேறும் பாக்குவெட்டிச் சீவயிலே மெய்ம்மறந்து 502
வீணேதன் கைவிரலை வெட்டுவரும் - பூணர
வண்ணமணித் தோள்வேட்டி மங்தையினூ டேநழுவத் 503
திண்ணமொடு காணுமல் செல்வாரும் - வெண்ணீற்றை
நாசித்தூள் போடுவரும் நாசித்தூள் வெண்ணீருப் 504
பூசித்தான் மெய்சோர்ந்து போவாரும் - வேசைக்காய்
இன்னவித மாய்மயங்கும் எல்லையிலே சூழ்ந்துநின்று 505
கன்னியர்கள் ஏந்திவரும் கைலாகில் - வன்னமணிக்
கும்பம்போல் விம்முமுலைக் கோதை மனைபுகுந்தாள் 506
கம்பம்போல் வாசலில்நான் காத்துநின்றேன் - வெம்பாரப்

தோழிகள் ஜாலம்

பொய்யிட்ட கப்பலரிப் பூச்சிகள்ளக் கூளி யென்னும் 507
பையப் பசப்பியொரு பாங்கிவந்தாள் - ஐயரே !
நீரிருப்ப தெந்தவூர் ? நீரிங்கே வந்ததென்ன ? 508
பேருரைப்பீர் ! என்றுமெள்ளப் பேச்சிட்டாள் - காரிகையே!

அரும்பதவுரை : கண்ணிவரிசை. 495. கை பிடித்தாள் - அபிநயம் செய்தாள்; 497. பம்மினேன் - நழுவினேன்; ஒக்க வந்த - கூட வந்த; 502. சேண் - உயரம்; 503. வெண்ணீறு - விபூதி 504. நாசித்தூள் - மூக்குப்பொடி; 506. கம்பம் - தூண்.

ஆடானை யென்னூர் ஆதிரத்னம் ஐயன்மகன் 509
தாடாளன் முத்தையனென் சம்பந்தி - கூடலூர்
நாராணய்யன் மாமனுன் நாகமய்யன் தம்பிநான் 510
ஆரணய்ய னுக்குநான் அம்மான்சேய் - பேரெனக்குச்
சல்லாப சோடசவ தானகவி சுந்தரையன் 511
இல்லாள் மனவெறுப்பாய் எங்கும்போய் - தொல்லுலகில்
எந்நதியும் ஆடிவந்தேன் எத்தலமும் நாடிவந்தேன் 512
அன்னமே! இந்நகர்ப்பொன் ஆலயத்தில் - சந்நிதிமுன்
சொன்னக் கொடிபோலே சுற்றிவளைந் தாடிவந்த 513
மின்னற் கொடியார்? விளம்பென்றேன் - மன்னவரே!
தெள்ளமுதை! பாற்குழம்பை! செண்பகவல்லிக்கொழுந்தை! 514
பிள்ளைமுடி தீர்க்கவந்த பெண்ணரசை! - கள்ளவிழும்
சோலைக் கருங்குயிலை! சொர்னப் பசுங்கிளியை! 515
கோலப் பருவமுலைக்கோமளத்தை! - வேலையன்ன
காமரச தாழிக் கரும்பை! செழுங்கனியை! 516
தேமலிளங் கொங்கைத் திரவியத்தை! - காமுகருக்கு
அற்புதத்தை! தேனை! அதிமோக ரஞ்சிதத்தை! 517
கற்பகத்தை! சர்க்கரையை! கற்கண்டை! - செப்புமுலை
இங்கிதப்பொன் மோகனமுத் தென்னுமெங்கள் பெண்ணரசை! 518
செங்கமல வல்லிபெற்ற செல்வத்தை! எங்கும்
தெரிந்திருக்க நீர்தாம் அறியீரோ என்று 519
சொரிந்திருக்கும் தேமல்முலை சொன்னுள் - திருந்திழாய்!
வில்லன்ன வாணுதலாள் வீட்டுக்கின் ருர்வருவார் 520
சொல்லென்றேன் சொல்லத் தொடங்கினுள் - கல்வீட்டுச்
சுப்பையரோ சத்திரத்துச் சோமாசி பட்டரோ 521
அப்பைய தீட்சதரோ அண்ணுவோ குப்பையரோ
நட்டுமுட்டுக் காரனே நாகசின்னக் காரனே 522
கட்டழகன் தானக் கணக்கனே - பட்டனே

அரும்பதவுரை: கண்ணிவரிசை. 509. ஆடானை - திருவாடானை; சம்பந்தி - பெண் கொடுத்தவர். 512. எந்நதியும் ஆடி வந்தேன் - புண்ணிய தீர்த்தங்களில் நீராடி வந்தேன்; 513. சொன்னம் - சுவர்ணம்; 514. கள்ள விழும் (கள் அவிழும்) தேன் சொட்டுகிற; 519, தேமல் முலை - தோழிகளின் ஒருத்தியின் பெயர்.

ஆணிமுத்த னேஉள் ளுறைமணிய காரனே 523
காணும் பலவேலைக் காரனே - சேணியனே

ஊர்மணிய காரனே ஓதுவார் மூர்த்தியோ 524
பேரான சம்புருதிப் பிள்ளேயோ - காரிகைமேல்

காதல்வைத்துப் பொன்முடிப்புக் காணிக்கை
கொண்டுமன 525
ஆதரவாய் ஓரிரவுக் காயிரம்பேர் - மோதி

வருவாரும் தாதியர்க்கு வாரிவா ரிப்பொன் 526
தருவாரும் எத்தனேயோ சாலம் - புரிவாரும்

மன்மதனைப் போலழகு வாய்த்தவரும் எத்தனேபேர் 527
அன்னவரில் ஆர்க்குமெங்கள் ஆரணங்கு - பொன்னே

மலிவாய்த்தந் தாலும் மனதிணங்காள் சற்றும் 528
புலிபசித்தால் தின்னுமோ புல்லே - உலகிலுமைப்

போலே அழகுகல்வி போதமுள் ளன்புடையோர் 529
மேலே மனது விரும்புவள்காண் - சீலமறை

வேதியரே கல்வியுள்ள வித்தகரே என்றுசொல்லித் 530
தாதியுள்ளே சென்ருள் சகிப்பேனே - காதல்மிஞ்சித்

தேக்கிலேநீர் போலத் தியங்கயிலே மற்றெருத்தி 531
பாக்கிலேநீர் தாருமென்று பையவந்தாள் - தாக்குமிரு

குன்றுவந்த பாரமுலைக் கோமளப்பெண் ஆரமுதை 532
இன்றுவந்து சேர்வார் எவரென்றேன் - நன்றுநன்று

சொந்தம் ஒருவருண்டோ சொர்னமுமக் குண்டானுல் 533
மந்தையிலே நிற்பதேன் வாருமென்ருள் - தந்தமெலாம்

முத்துமுலே மாதே! ரா முப்பதுக் கெத்தனேபொன் 534
குத்துமுலே யாட்குக் கொடுப்பதென்றேன் - மெத்தவில்லே

மங்கைநல்லாட் காயிரம்பொன் மாமிக் கதிற்பாதி 535
எங்களுக்குக் கால்வாசி என்றுசொன்ஞள் - செங்கையால்

அங்கா யிரத்தெழுநூற் றைம்பதுபொன் ஓர்முடிப்பாய் 536
நங்காய் பிடியென்று நான்கொடுத்தேன் - தங்காமல்

அரும்பதவுரை : கண்ணிவரிசை; 528. மனதிணங்காள் - மனதுடன் ஒப்பமாட்டாள். 531. தேக்கிலே - தேக்கு மரத்தின் இலே; பாக்கிலே - வெற்றிலே; 533. மந்தை -'தெரு.

பணிப்பெண்கள் உபசாரம்

கள்ளிருந்த கூந்தலிடம் கன்னிகொண்டு
போய்க்கொடுத்தாள் 537
உள்ளிருந்து வந்தார்கள் ஒன்பதுபேர் - மெள்ளஎன்னை
வந்துநின்று கும்பிட்டார் வாழ்த்தினர் வாருமென்றார் 538
சந்தடிவி லக்கினர் தாக்கினர் - முந்தியொரு
சுப்பிஅடப் பம்பிடித்தாள் சோமிபடிக் கம்பிடித்தாள் 539
குப்பிமுன்னே கைவிளக்குக் கொண்டுவந்தாள் - அப்பாலும்
மாரிகை லாகுதந்தாள் வள்ளிநடை மெத்தையிட்டாள் 540
வீரிவெட்டி வேர்விசிறி வீசினள் - ஓர்புரத்தில்
பொன்னிசெம்பு கொண்டுவந்தாள் பூரணிபன்
னீர்தெளித்தாள் 541
சின்னிகுஞ்சம் போட்டாள் ஜெயம்சொன்னள் - அந்நேரம்

மனைக்குள் சென்றிருத்தல்

கப்பல் கவிழ்ந்ததுபோல் கானவலை வெம்புலிபோல் 542
கொப்பத்தி லேவீழும் குஞ்சரம்போல் - தப்பாமல்
ஒட்டில்விழும் சிட்டுப்போல் ஓடி விளக்கில்விழும் 543
விட்டிலைப்போல் நானும்வள் வீடுசென்றேன் -
கட்டுமெட்டாய்
அண்ட முகட்டை அளாவுமணி மண்டபத்தில் 544
கண்டு விரித்தரத்னக் கம்பளத்தில் - திண்டொலுகு
பாசாங்காய்ப் பொட்டுவைத்தார் பையவிகு வாய்நடந்து 545
ராசாங்க மோடியாய் நானிருந்தேன் - கூசிநடந்து

மோகனமுத்தின் முகமன்

ஆணிப்பொன் மோகனமுத் தன்றிரண்டு தேங்காயும் 546
காணிக்கை கொண்டுவந்து கையெடுத்தாள் - நாணித்தான்
நின்றள் தலைகவிழ்ந்தாள் நேர்வரவும் கூசினள் 547
ஒன்றுமறி யார்போல் ஒதுங்கினள் - நன்றுதட்டில்
கொஞ்சம் சிரித்துக் குனிந்துவாய் பொத்திமனம் 548
அஞ்சி ஒதுங்கி அடுத்துநின்று - வஞ்சகமாய்

அரும்பதவுரை : *கண்ணிவரிசை;* 537. *கள் - தேன்;* 539 to 541 தோழிகளின் பெயர்கள் முறையே சுப்பி, சோமி, குப்பி, மாரி, வள்ளி, வீரி, பொன்னி, பூரணி, சின்னி, ஜெயம். 542. கொப்பம் - யானை பிடிப்பதற்காக வெட்டுகிற குழி.

என்னை முகம் பார்த்துருகி என்சாமி உம்மைநான் 549
சந்நிதியில் ஆடையிலே தான்கண்டேன் - பொன்னியைவிட்

டுக்கூட்டி வாவென்றேன் உம்மையெங்கும் காணும் 550
அக்கக்கா வெட்கக்கே டாஇதென்ன - பக்கமா

தூரமா காதமா சொந்தம்நீர் இங்குவந்தால் 551
ஆருந் தடுப்பாரா அப்புறத்தில் - நீர்நிற்க

வேண்டிய தென் இந்த வீடுமக்கு வேற்றுமையா 552
ஆண்டவர்நீர் நாங்களுமக் காளடிமை - பூண்டிருக்கும்

பாக்கியமெல் லாமுமது பாக்கியமே எங்களுக்கு 553
நாக்குமுக் குங்கொடுத்த நாதனே - யோக்கியமென்

சாமிவலு வுண்டு சலுகையுண்டு வாய்ச்செலவும் 554
ஆமாமா என்னிதுகாண் ஐயரே! - சீமையிலே

கண்குளிர்ந்த மாப்பிள்ளையைக் கண்டணைந்த
பெண்களல்லோ 555
பெண்களென்று ஜாலமெல்லாம் பேசினுள் - எண்காணுக்

கள்ளம் கரையில்லாக் காந்தாரி பெற்ற மகள் 556
உள்ளம் கரைய உருகினுள் - எள்ளளவும்

கல்லார்போல் அந்தவஞ்சக் கன்னிசொன்ன
பொய்ப்பாசாங்கு 557
எல்லாம் நிஜமென்றே எண்ணிவிட்டேன் - வல்லிஎன்னை

எத்துகின்ற வஞ்சமறி யேன்தேவைக் காரனுக்குப் 558
புத்திகொஞ்சம் என்றகதை போலானேன் - தத்தைமொழி

கையைப் பிடித்திருத்திக் கண்குளிர நான்பார்த்தேன் 559
பையச் சிரித்தரைக்கண் பார்வையிட்டுக் - கையிலே

வீணையெடுத் தாளிசையை மீட்டினுள் மூடர்மன 560
வீணையெடுத் தாள்விழியை:வீசினுள் - கோணுமல்

நாகேசர் மேற்பதமும் ராமேசர் மீதுதேன் 561
பாகேபோல் கீர்த்தனையும் பத்தியமும் - சேகரமாய்ச்

சோதிவடி வேலர்மேல் சொன்னவண் ணத்துறையும் 562
நாதர்மங்க ளேசர்பத நல்தெலுங்கும் - சேதுபதி

அரும்பதவுரை : கண்ணிவரிசை; 543. ஆடையிலே - ஆடுகின்ற போது; 555. என் காணு - எங்கும் காணுமல்; 556. கரையில்லா - எல்லையில்லாத; 558. எத்துகின்ற - ஏமாற்றுகிற; தத்தை - கிளி; 561. பத்தியமும் - இசைப் பாட்டும்.

தேவைத் துரையென் சிவசாமி மன்னவன்மேல் 563
கோவைத் துறையும் குயிலிசைபோல் - நாவிசையக்
கான இசைகாட்டிக் கண்காட்டிப் பண்காட்டிப் 564
பால்மொழியான் நானுருகப் பாடினுள் - மானரசை
இச்சையுடன் கொண்டாடி எண்ணூறு
பொன்பெறுமோர் 565
வச்ரமணி மாலையவள் மார்பிலிட்டேன் - அச்சணத்தில்

தாய்க்கிழவி உபசரித்தல்

தோப்பைமுலை யும்சுரித்த சொள்ளைமுக முங்கிழட்டு 566
மூப்பும் வறட்டுடலும் முக்காடும் - சாய்ப்பும்
குணுகுணுத்த மூக்கும் குறுகுறுத்த கண்ணும் 567
முணுமுணுத்த வாயின்மேல் மூச்சும் - துணிவளைத்து
நீட்டுங் கழுத்தும் நெழிப்பும் எலிச்செவியும் 568
போட்ட புகையிலையும் பேழ்வாயும் - காட்டித்
தடிக்கம்பும் ஊன்றித் தலையும் நடுக்கி 569
அடிக்கடிகால் தூக்கித் தள்ளாடி - கிடுகிடென்று
கூனிக் குறுகிக் குமட்டித்தோல் வற்றிநரைச் 570
சூனைவயிற் றுத்தாயும் தோன்றினுள் - மான்மயிரைக்
கொத்தையார் பஞ்சைநிகர் கூந்தலா ரேநமக்கும் 571
அத்தையார் ஆமென் றறிந்துகொண்டேன்-எத்தியென்னை,
"தங்கத் துரையே! தமிழ்க்கடலே! நான்பெற்ற 572
மங்கைக் குயிரே! நீர் வந்தீரோ? - எங்களைநீர்
தேடிவந்த தெங்கள்முன்னோர் செய்தவமோ? அல்லதிந்த 573
வீடுசெய்த புண்ணியவி சேடமோ? - நாடிநான்
செய்தநன்மை தானே? திருவுளச காயமோ? 574
தையலிவள் செய்த தவப்பயனே? - ஐயர்சொன்ன
சோசியமும் ராக்கண்ட சொற்பனமும் மேலாந்தை 575
வீசியதும் சோதிவிளக் குப்பொறியும் - பேசும்
வனக்குறத்தி கைக்குறியும் வள்ளுவனுர் சொல்லும் 576
உனக்குநல்ல மாப்பிள்ளை உண்டாம் - எனச்சொன்னேன்

அரும்பதவுரை : கண்ணிவரிசை; 566. சுரித்த - சுருக்கம் விழுந்த; சொள்ளை - ஒட்டிய; வறட்டுடல் - மெலிந்த உடம்பு ; 568, பேழ் வாயும் - பொக்கு வாயும்; 570. சூனை வயிறு - பெரு வயிறு; 571. எத்தி என்னை - என்னை ஏமாற்றி.

மைவிழிக்குச் சொன்ன மறுநாளே எங்கள்குல 577
தெய்வம்போல் வந்தீரே! சேயிழையைக் - கைதவற

விட்டுவிடா தேயும்! பின் வேறுகதி இல்லே! என் 578
கட்டழகிக் கும்மிடமேல் காதல்மெத்த ! - எட்டிரண்டு

சொன்னுலும் தோற்ருது சூதுதெரி யாள்பலவீடு 579
இன்னமறி யாள்வினயம் ஏதுமில்லே - சின்னவயசு

அன்னம் இதுவரைக்கும் ஆண்பூடு கண்ட றியாள் 580
கன்னியழி யாப்பருவ காலமிது - பின்னுமனக்

கள்ளம் அறியாள் கபடறியாள் பொய்யறியாள் 581
எள்ளளவும் கைப்பொருள்மேல் இச்சையில்லே -
அள்ளிச்சோறு

உண்ணத் தெரியாதே உம்மிடத்தில் கூசாமல் 582
வண்ணத் துரைச்சிகிட்ட வந்தாளா ? - பெண்ணுமது

கம்பளமும் சேர்ந்தாளா ? கண்விழித்துப் பார்த்தாளா? 583
செம்பதும வாயும் திறந்தாளா ? - மின்போல்

மருங்கிலேயென் ருலும் மருவிஉமைக் கூட 584
மருங்குண்டு நீர்பட்சம் வைத்தால் - தரும்தருவோடு

எண்ணுயி ரங்கோடி இந்திரன்வந் தாலுமினிக் 585
கண்ணுலும் பாராள் கனவினிலும் - பெண்ணுடனே

பூவும்மண மும்போல் புகழ்குருவும் சீடனும்போல் 586
சீவனுங்கூ டும்போல் தினங்கலந்து - மேவிப்

பிதிர்வாழ நீங்கள் பெருவாழ்வு வாழ்ந்து 587
பதினுறும் பெற்றுப் பலுகி - நிதமிருங்கள்

இன்னுர்க்கு மாமியிவள் என்றுலகில் யாருமெனேச் 588
சொன்னுல் அதுபோதும் சொற்பமோ ? - மன்னவரே !

தேகவடி வாளிவளேச் சேர்ந்திருநீர்'' என்றுசொல்லி 589
மாகவடி பின்னுக்கு வாங்கினுள் - போகையிலே

கன்னிக்குச் சற்றேகண் காட்டினுள் சாடைகண்டு 590
தன்னிச்சை யாய்நடந்தார் தாதியரும் - என்னேப்பார்த்து

அரும்பதவுரை : கண்ணிவரிசை; 580. ஆண் பூடு - ஆண் வாடை; 584. மருங்கிலே - இடையில்லா விட்டாலும்; மருங்குண்டு- இடமுண்டு; 587. பிதிர் - சந்ததி; 589. தேகவடிவாள் - தேகக்கட்டு உடைய; மாகவடி - மகா வஞ்சகக் காரி.

பள்ளியறைச் சிறப்பு

உள்ளறைக்குள் வாருமென்றாள் ஒண்ணுதலாங்
பின்போனேன் 591
வெள்ளிவட்டத் தூண்நிறுத்தும் மேல்முகப்போ ! -
பள்ளியறைத்
தூங்குமஞ்சப் பத்தியோ ! சொர்னமணி மண்டபமோ! 592
தாங்குநவ ரத்னமிட்ட சட்டமோ ! - ஓங்கியமேல்
கட்டியோ ! திண்டு ! தலையணையோ ! கண்ணுடிப் 593
பட்டமோ ! தங்கப் படிக்கமோ ! - கொட்டகையில்
ஒத்திருக்கும் கம்பளமோ ! உப்பரிகை மேடையோ ! 594
வைத்திருக்கும் தூண்டா மணிவிளக்கோ ! - சித்திரமாய்
ஒன்றுகை லாகுதர ஒன்றுவழி கூட்டிவர 595
.ஒன்றிருகை ஏந்தி உபசரிக்க......

பாழ்த்தடத்தி லேதவறிப் பாரப் பொதியெருது 596
வீழ்ந்ததுபோல் சப்ரமஞ்ச மேல்படுத்தேன் - ஏந்திழையார்

மாமி இட்ட வரிசை

வள்ளத்தில் சந்தனமும் வாச மருக்கொழுந்தும் 597
வெள்ளிக் கமலத்தில் வெள்ளிலையும் - புள்ளிநிற
வண்ணப்பீங் கானில் மணத்தசவா தும்புழுகும் 598
கிண்ணத்தில் ஏலம் கிராம்புகளும் - உண்ணப்பால்
பைங்கனியும் தண்ணீரும் பன்னீரும் வெந்நீரும் 699
கொங்குமலர்ச் செண்டுகளும் கொண்டுவந்தார் -இங்கேஎன்
சாமிதர விட்டகுறை தானென்றே உங்களுடை 600
மாமிவர விட்ட வரிசையென்றாள் - ஆமாமென்று
எண்ணுமுன்னே அத்தைசுருள் என்றொருத்தி
ஐந்துபொன்னென் 601
கண்ணுமுன்னே வைத்திரண்டு கைதொழுதாள் -
பெண்ணழகி
மாப்பிளைக்கென் றுருடனே மாமிக்கூ றைக்காயோர் 602
பூப்புடவை நான்கொடுத்துப் போகவிட்டேன்......

அரும்பதவுரை : கண்ணிவரிசை; 597. வள்ளத்தில் - கும்பாவில் வெள்ளிலை - வெற்றிலை ; 599. கொங்கு - வாசனை ; 600. வரிசை - சீர்வகை.

போகம் துய்த்தல்

மஞ்சணை து வண்டிடம ருங்குலுநு டங்கிவிழ 603
அஞ்சனம ழிந்திடவ ணிந்தவளை - யுஞ்சிதற
மென்குழல விழ்ந்திடமி கும்மலர சம்பெருக 604
நன்கலவை சந்தனம ணந்துதிர - பொன்குலவு
தண்டைகள்சி லம்புகள்ச தங்கைகள்பு லம்பமலர் 605
விண்டுதிர வெண்புளொலி மிஞ்சவெயர் - வொண்டரணி
சிந்தவிசை கொண்டெதிர்ள முந்துவிழு ஜீவனுற 606
வந்தமத மென்புனல்வ ழிந்தணைமி - தந்திடவே
பாயுமொரு பாற்கடலில் பாவை மணிமார்பன் 607
சாயும் அனந்த சயனமாய் - ஆயாச
யோகநித்ரை கொண்டோம் ஒருநா ழிகைக்குமேல் 608
சேகரமாய்ச் சோபத் தெளிவானோம் - வாகாய்
எனதுகம்பிச் சோமன் எடுத்தொருமுன் தானை 609
தனையிடுக்கிப் போய்க்கதவைத் தள்ளிப் - பனிமொழியாள்
போனாள் அவள்பிறகே போனேனான் வெந்நீரால் 610
தானேக போகம் தனைத்துடைத்தோம் - மானாளும்
நானும் திரும்பிவந்தோம் நங்கைமடி மேற்சாய்ந்து 611
தானிருகை யாலென் தலைவளைத்து - மேனோக்கி

மோகனமுத்துவின் பாராட்டு

ஆவிமுத்தம் இட்டுமைப்போல் ஆரிப்ப டிக்கலவி 612
பாவிப்பார் மன்மதனும் பற்றாதே - தேவரீர்
அல்லால் இனியொருவர்க் காசையுண்டோ? நட்சத்ரம் 613
எல்லாம் நிலவுக் கிணையாமோ? - வில்லைவட்டு
வெல்லக் கரும்புதின்றோர் வேப்பங்காய் தின்பாரோ? 614
எல்லைப் புவிமேல் இருக்குமட்டும் - நல்லபுது
மாப்பிளைநீர் என்றுகனி வர்க்கமற்ற சிற்றாணும் 615
சாப்பிடுமென் றூட்டியுப சாரமிட்டாள் - பார்ப்பானான்
உண்ணப்பின் வாங்குவனா உண்டேன் மறுபடியும் 616
எண்ணத் தொலையாதே என்கலவி - பெண்ணரசே!

அரும்பதவுரை : கண்ணிவரிசை; 609. சோமன் - வேஷ்டி; 613. நிலவு - சந்திரன்; 615. சிற்றாண் - ஆகார வகை.

விடிந்தபின் தடுமாற்றம்

பாதிசொல்ல ஆனாலும் பத்துநாள் செல்லுமிராப் 617
போதுவிடிந் தூருணிக்குப் போனேனான் - ஆதளையைப்
பைந்துழாய் என்றே பறித்தேன் தருப்பையென்றே 618
அந்துவிழும் கோரைமுடி அள்ளினேன் - இந்தமட
மான்முழுக்கு நாளும் மருவவரந் தாருமென்று 619
நான்முழுக நாகசுனை நண்ணினேன் - மேன்மைநீர்
ஆடினேன் செம்பைமறந் தப்பால்போய் மீண்டும்வந்து 620
தேடினேன் காணேன் திரும்பினேன் - நாடிவரும்
சூத்திரரைக் கண்டால் தொழுதேன் பிராமணரைப் 621
பார்த்தாசீர் வாதமென்றப் பாலேகி - ஆத்திரமாய்
வன்னமுத்துப் பல்லானை வந்துகண்டேன் சாமியுமக்கு 622
அன்னமுத்து வீட்டிலே அன்னமென்றாள் -
சொன்னசொல்லைச்
சென்னிமேல் கொண்டு திரும்பியவள் ஆத்தினில்போய் 263
உன்னி இலைமுன் உழுக்காந்தேன் - என்னெனவோ
வைத்தாள் அவையெலாம் வாய்க்கே வழங்கவில்லைக் 624
கைத்தே இருந்ததுநான் கையலம்பித் - தந்தையைப்போய்க்
கண்டணைந்தேன் ஆசைக் கடலாய் விளக்கில்வந்து 625
வண்டணைந்தால் போலே மயங்கினேன் - சண்டாள

அவதானியை வஞ்சிக்க மூலிகை சேர்த்தல்

மைமயக்குக் காரியுந்தன் மாதாவும் கூடியென்னைக் 626
கைமயக்குச் செய்யக் கருவெடுத்தார் - செய்மருந்தில்
மின்னிக்காய் மாங்காய் விளங்காய்புல் லாமணக்காய் 627
கன்னிக் கிழங்குவெரு கங்கிழங்கு - புன்னைக்காய்
காட்டுக் கிழங்கு கருவாழைச் சல்லிவேர் 628
காட்டுப்பா கைக்காய்க் கருநாவி - ஆட்டுக்கால்
முள்ளி முருகம்பூ முட்குறண்டி வெப்பாலை 629
வெள்ளரளி செல்வரளி வெள்ளறுகு - வள்ளி
முக்கரசி வேப்பரசி முத்துமல்லி நெல்லிப் 630
பருப்பு களாச்சிப் பருப்பு - மருக்காரைச்

அரும்பதவுரை : கண்ணிவரிசை; 617. ஊருணி - ஊர் கிணறு அல்லது குளம்; 618. பைந்துழாய் - துளஸி; 623. சென்னி - தலை; 624. கைத்தே - கசப்பாகவே; 627. செய்மருந்து - வசியம் செய்யும் மருந்து.

கண்டைகரு வேற்கொழுந்து தோதகத்தி போதகத்தி 631
தொண்டைசிறு கீரை சுடுதுரத்தி - இரண்டு
முடக்கொத்தான் மாவிலங்கை முன்னை புளிய 632
மடல்குரண்டை பாம்பு வணங்கி - கிடைப்பூக்
கரிப்பான் இலைச்சாறு கற்றாளஞ் சோறு 633
பருத்தியிலைச் சாறு பணுட்டு - மருக்கொழுந்து
மத்தங்காய் வெள்ளரிம ருமத்துச் செவ்வகத்தி 634
கொத்தவரை பச்சைச்சுங்கம் குப்பிவேர் - அத்திமொக்குத்
தைவேளை வெட்டிவேர் தான்றிகொடி வேலிவேர் 635
ஐவிரலி குன்றி அவிரித்தொயில் - செய்யாரை
ஆடைதொட்டி செந்தொட்டி ஆமணக்குச் சின்னிவேர் 636
பாடவரை தும்பை பழம்பாசி - காடுமுட்டி
பேய்துவரை பேய்த்துமுட்டி பேய்வாளை பேய்மிதுக்கு 637
பேய்ப்பாகல் பேய்க்குமட்டி பேய்மருட்டி - நாய்க்கடுகு
தொட்டில்சு ருட்டிதொட்டில் கண்டுதொட்டில்
வாடியல்லி 638
செட்டிவெள்ளைக் குன்றி நிலம்புரண்டி - எட்டி
மனமடக்கிக் கொண்டான் மயக்குதிகைப் பூடு 639
பனைபிரியா நங்கை பரலி - சுனையறுகு
வேம்புமேல் புல்லுருவி வேலாமேல் புல்லுருவி 640
மாம்பூ நெறிஞ்சிப்பூ மாதுளம்பூ - சேம்பூ
திருகுகள்வி எல்லாம் திருட்டுக் கிழட்டுத் 641
திருகுகள்ளி கொண்டுவந்து சேர்த்தாள் - பரிவாம்ப்

கடைச் சரக்குச் சேர்த்தல்

பொரிகாரம் போரக்கை பூலாங் கிழங்கு 642
கரியபவ ளம்காகக் கட்டி - கெருடபச்சை
கட்டுபுக் கஸ்தூரிக் கன்ம தங்கற் பாசிநவ்வல் 643
கொட்டைகோ ரோசனைகோ தும்பையகில் - கட்டையரி
தாரமொடு செந்தூரம் சாதிலிங்கம் இஞ்சிகடல் 644
ஆரையூ சிக்காந்தம் அக்ராணி - கார்போகி

அரும்பதவுரை : கண்ணிவரிசை ; 631. கருவேற்கொழுந்து - கருவேம்பின் பசுந்தளிர் ; 636. ஆடை தொட்டி - ஆடாதொடா என்ற பச்சிலை; 639. பூடு பூண்டு.

பாசாணம் நேர்வாணம் பச்சை கற்பூ ரம்சூடன் 645
தேசா வரந்துசு செண்பகப்பூ - மாசக்காய்

தேவதா ரங்கமுகு சென்ஞவி வான்மிளகு 646
சாவற்பூ செந்தி சவுக்காரம் - பூவழலை

சித்திரமூ லஞ்சாரம் சீனக்கா ரம்கோட்டம் 647
துத்தம் சிறுதேக்குச் சுக்கரக்கு - எக்காரம்

திப்பிலிகற் றைக்காம்பு சித்திரத்தை சீனிசத 648
குப்பைமஞ்சள் பாஷாணம் குங்கிலியம் - செப்பில்

உருட்டுமுண்டை மாத்திரையும் ஓவாய்க் கிழட்குத் 649
திருட்டுமுண்டை கொண்டுவந்து சேர்த்தாள்-மருட்டுவிழிப்

பிராணிகளின் உறுப்புக்கள் சேர்த்தல்

புள்ளிமான் மூளை புலிநகம்செம் போத்திறகு 650
கள்ளியடிச் செஞ்சூகைக் கண்பீழை - முள்ளெலிப்பல்

காக்கைக் கடைக்கண் கருநாகத் திந்திரியம் 651
தூக்கணத்தான் ஈரல்பருந் துப்பிடரி - ஈக்கடைவாய்

பெட்டைநாய் வால்பூனைப் பின்தட்டுக் கூகைமுகம் 652
நட்டுவக் காலிக்கால் நாய்முகரை - அட்டையுடல்

கட்டெறும்புப் பின்வால் கரிக்குருவி வால்முசுறு 653
முட்டை கறுங்கரடி முன்வாய்ப்பல் - ஒட்டகைப்பால்

ஆட்காட்டிப் பித்துமா டப்புரு எச்சமனைந் 654
தேட்கொடுக்குப் பேயனுடல் சிக்கமுக்குத் - தாக்கும்

பொலிப்பெருகப் பீசம் புழுகுபூ னைத்தோல் 655
எலிக்கொசுகி ரத்தமுள்ளான் எசெம் - கலையுலகு

கொண்டலத்தி நாக்கு குதிரைக் குடலாந்தை 656
முண்டவிரு வெளவால் முதுகுத்தோல் - நண்டோடு

கீரிச் செவியானை கீழ்வாய் அலகுகிழட் 657
டோரி முரகுகாட் டோணன்பல் - தேரைவால்

மரன்முதுகும் பச்சை மயில்முதுகும் தர்க்கிழட்டுக் 658
கூன்முதுகுத் தாய்க்கிழவி கொண்டுவந்தாள் -
ஊன்குழந்தை

ஆனைக்கண் தாழியிலிட் டாறுநாள் ஊறவைத்துக் 659
காணப் பெருமருந்தைக் கண்டித்துத் - தேன்விட்டுக்

கட்டுங் கடைமருந்தில் கள்ளைக் கலந்தபினை 660
இட்டுத் தயிலம் எடுத்திறக்கி - ஒட்டுக்குத்

தள்ளிப் புடம் போட்டுச் சத்தெல்லாம் வாங்கியிரா 661
வெள்ளி எரிந்து விழும் வேளையிலே - கள்ளமகள்
பல்லழுக்கும் நாவழுக்கும் பாவி தலையழுக்கும் 662
அல்குல் அழுக்குமதில் மத்தித்துக் - கொல்புலிப்பால்
கள்ளிப்பால் ஆன்பால் கறுப்பிமுலைப் பால்கூட்டி 663
அள்ளியம்மி மேல்வைத் தரைத்துருட்டிக் - கொள்வாய்க்
கன்னீலி தன்மகளைக் கண்காட்டி இந்த மருந்து 664
என்னவோ என்றுநீ எண்ணுதே - முன்னமே
கொந்திமன்னன் வாழ்வைக் குலைத்ததிது தாசிகளுக்கு 665
இந்தமுறை தானடி என்மகளே! - வந்தவரைச்
செள்ளையடி யாயடித்துச் செம்பொனெலாம் ஓயாமல் 666
கொள்ளையடி யென்று கொடுத்திட்டாள் - கள்ளச்
சிறுக்கியதை வாங்கியொரு செப்பிலே மூடி 667
இறுக்கியெனக் கப்பளத்தில் இட்டாள் - மறுத்தவலில்

மருந்தீடு மயக்கம்

பார்த்திட்டாள் வாழைப்பழத்தி லிட்டாள்
மாப்பொடியில் 668
சேர்த்திட்டாள் நாளெல்லாம் தின்றிட்டேன் -
தேர்த்திருநாள்
எல்லாம் மறந்துவிட்டேன் எவ்வளவும் சோற்றிறக்கம் 669
செல்லாது கண்ணுறக்கம் தேடாது - வல்லியிடம்
தள்ளாட்டங் கொண்டு தவறித் திருகுணிக்குள் 670
எள்ளாட்டும் செக்கின் எருதானேன் - வள்ளம்போல்
வல்லார் முலைக்குமரி வாசற் படிநடக்கும் 671
கல்லாய்க் கிடந்து கரைந்துவிட்டேன் - வல்லிவாய்த்
தம்பலத்தைத் தின்பதல்லால் சாமி திருக்கோவில் 672
அம்பலத்தை நான்கண் டறிந்ததில்லை - வம்பிதுடை
நாக தரிசனமே நான்கண்ட தல்லாது 673
நாகதரிசனத்தை நான்காணேன் - மோகமுள்ள

அரும்பதவுரை : கண்ணிவரிசை: 664. கன்னீலி (கல் நீலி) - கல் நெஞ்சு கொண்ட நீலி; 666. செள்ளை - தவடை; 669. சோற்றிறக்கம் செல்லாது - சோறு இறங்காது; 671. தள்ளாட்டம் - தடுமாற்றம்.

நாயகியைத் தெண்டனிட்டேன் அல்லால் அழகிய 674
நாயகியைத் தெண்டனிட்டு நானறியேன் - தீயாள்
அவதானம் பார்ப்பதே அல்லாமல் நான்செய் 675
அவதானம் பார்ப்பார் அறியேன் - அவளே
குலதெய்வம் என்றவளைக் கும்பிட்டேன் 676
குலதெய்வம் கும்பிடஉட் கொள்ளேன் - கலகமொன்றை

வஞ்சிக்கச் சதி

எண்ணினுள் கூனி இதுகண்டால் கேட்பாளோ 677
ஒண்ணுதற்குச் சொன்னுள் உபாயத்தைப் - புண்ணியரே !
நீரோடும் வாய்க்கால் நெருங்கும் திருச்சுழிகைத் 678
தேரோடு தென்ரூர் திருநாட்கு - நீரும்போய்
வந்தால் எமக்குநன்மை வாராதோ என்றுரைத்தாள் 679
அந்தக் கணமேநான் ஆமென்றேன் - பந்துமுலைத்

திருவிழாக்காணப் போதல்

தோகாயுன் செய்தியென்ன சொல்லென்றேன் உம்மைவிட்டு 680
மாகாணி நாழிகையும் வாழ்வதுண்டோ ? - மோகியென்று
முத்தணையும் பல்லால் மொழிந்துநகை அவ்வளவும் 681
பித்தளையால் பூட்டியென்றன் பின்வந்தாள் - அத்தையரும்
கூடவந்தார் அன்றே கொடுமளூர் வந்துடையில் 682
நாடியசெவ் வேளைவள்ளி நாயகனை - ஆடுமயில்
ஏறுபெரு மானையன்பர்க் கின்பம் தருவானை 683
ஆறுமுகத் தானையென்னை ஆண்டானை - நீறணிந்த
மெய்யானைச் சோதிவடி வேலானைப் பன்னிரண்டு 684
கையானை அன்பருள்ளங் கையானைப் - பொய்யரெதிர்
வாரானைத் தென்கொடுமூர் வந்தானைப் பூங்கடப்பந் 685
தாரானைத் தண்ணருளைத் தந்தானை - நேராகக்
கண்டெதிரே நின்று கருத்துருகிக் கைகுவித்துத் 686
தெண்டனிட்டு வாழ்த்தித் திரும்பினேன் - பண்டுபுத்தி

அரும்பதவுரை: *கண்ணிவரிசை:* 676. கலகமொன்றை - சூழ்ச்சி ஒன்றை; 677. ஒண்ணுதற்கு - மெப்புக்கு; 678. திருச்சுழிகை - ஒரு புண்ணியஸ்தலம்; 679. பந்துமுலைத்தோகை-பந்து போன்ற ஸ்தனங்களையுடையவளே. 686. பண்டுபுத்தி - நல்ல புத்தி.

சொன்னகுரு வேதமய்யர் சுக்கிரவா ரத்துக்கோ 687
என்னகவைக் கோவங் கெதிர்வந்தார் - அந்நாள்
ஒதுங்கி யொருபால் உடைமரத்துக் குள்ளே 688
பதுங்கினேன் சென்ருர்தன் பாட்டில் - பிதுங்குமுலைப்
பொற்ருெடியும் தாயும் புறப்பட்டார் பாதையில்வந் 689
துற்ருேம் திருச்சுழிகை ஊர்புகுந்தோம் - முற்றும்
கருமேனி நாயகனும் கஞ்சனும் காணுத 690
திருமேனி நாதர்பதஞ் சேவித்து - ஒருமனதாய்
நின்ருேர் நிமிடத்தில் நேரிசைவெண் பாக்கவிதை 691
ஒன்ருேதி வாழ்த்தினேன் உள்ளன்பாய்த் - துன்றும்
துணைமாலை வென்றகுழல் சுந்தரியென் னம்மை 692
துணைமாலை பாதம் தொழுது - மணமாலை
பட்டரையர் தந்தார் பணிந்திருகை யால்வாங்கி 693
ஒட்டிவந்தங் கோர்நாள் இருந்திட்டோம் - ஒட்டகையும்
பேரா ஊனயுமோர் பிடியானை யும்போலே 694
ஊர்நாடி வந்தோம் உதயத்தில் - நேராய்க்

திரும்புகையில் செய்த மோசம்

கருதிப் பரம்பைநகர் கண்டுவைகை ஆற்றில் 695
வரும்பொழுது மாது வயிற்றைப் - பொருமி
வலிக்கிதொரு சுக்குவர வேணுமென்ருள் நெஞ்சம் 696
கலக்கமுற்றுச் சென்றேன் கடையில் - விலைக்கொண்டு
எடுத்துவரு முன்நகைகள் எல்லாம் கழற்றிக் 697
கொடுக்கிலிட்டு முன்சென்ருள் கூனி - அடுத்துநான்
போனேன் கரிக்கட்டை போலநின்ருள் ஏனென்றேன் 698
தானே வலிபோச்சுத் தாய்க்கிழவி - மானரசே
வாபோக என்ருளென் மாப்பிளேயை விட்டுவரேன் 699
நீபோனுல் போவென்றே நீங்கினுள் - மாபாவி
கள்ளனிங்கே வந்தான் கனத்தநகை யவ்வளவும் 700
கொள்ளைகொண்டான் என்ருள்நான் குப்புற்றேன் -
மெள்ளக்

அரும்பதவுரை : கண்ணிவரிசை: 687. சுக்ரவாரம் - வெள்ளிக்கிழமை; என்னகவைக்கோ - என்ன வகைக்காகவோ ; 695. பரம்பை - பரமக்குடி; பொருமி - கிள்ளி; 700. குப்பிற்றேன் - திகைத்துவிட்டேன்.

கொடியிடையைத் தேற்றிநான் கூட்டிவந்தேன்
கண்டாள் 701
கடினமனத் தாய்மகளைக் கட்டி - அடிநாச
காலிநகை எங்கென்ருள் கள்ளர்பறி கொண்ட
தென்ருள் 702
நீலியிரு கையும் நெரித்திட்டாள் - மேல்வயிற்றைப்

கிழவியின் பொய்ப்புலம்பல்

பிச்சாள் விழுந்தாள் பிசைந்தழுதாள் தாரைவிட்டாள் 703
கைச்சாள் உடைமைகொண்ட கள்வனுனே - நைச்சடித்துக்
கொன்ருலும் கொல்வனே கொள்ளை கொடுக்கிறநாள் 704
இன்ரு நமக்குவிதி இப்படியா - நன்று நன்று
பாவியிதோர் பேச்சுப் பழியாச்சே நம்மையொத்த 705
தேவடியாட் கெல்லாம் சிரிப்பாச்சே - பாவியிது
கொஞ்ச நகையா குறைந்த பொருளா என் 706
நெஞ்சு தரிக்குமா நிட்டூரம் - அஞ்சு
தலைமுறையாய் வந்ததல்லோ தப்பிலி உன்தேட்டு 707
உலையேறச் செம்புக்கா சுண்டா - பல்விதமாய்க்
கஞ்சாவுக் கிட்டாேே கள்ளுக்கு விற்ருேே 708
பஞ்சாப் பறந்ததோ பாவிநகை - கொஞ்சமா
அட்டியலுக் கொத்த அழகிதென்றே நான்பண்ணி 709
இட்டமுத்து மாலை இழந்தாயோ - தொட்டபுவிக்கு
ஆதரவாய்த் தென்முகவை ஆளும் சிவசாமி 710
சேதுபதி சங்கராந் தித்தினத்தில் - மாதேயுன்
நாட்டியத்தைக் கண்டுநவ ரத்னமய மாய்ச்சமைத்துப் 711
பூட்டுபதக் கங்கோடி பொன்பெறுமே - நாட்டிலிசைத்
தென்னவன்போல் வந்தமுத்துச் செல்வமகா ராசனிட்ட 712
பொன்னரை ஞாண் அஞ்சுலட்சம் பொன்பெறுமே -
மன்னர்புகழ்
தாமோ தரன்ராம சாமிமகா ராஜனிட்ட 713
கோமே தகமும்விலை கொஞ்சமோ - காமனிகர்

அரும்பதவுரை: கண்ணிவரிசை: தாரை : கண்ணீர்; 706. நெஞ்சு தரிக்குமா - நெஞ்சி பொருக்குமா; நிஷ்டூரம் - அநியாயம்; 707. தேட்டு - சம்பாத்யம்; 712. தென்னவன் - பாண்டியன்.

தண்டிகைக்கோ மான்குழந்தைச் சாமிமக ராசனிட்ட 714
கண்டிவிலே சொல்லக் கணக்கிலேயே - முண்டகப்பூப்
பொன்மருவு மார்பன்வன்னிப் பூலாரு சாமி தந்த 715
பொன்முருகு போற்கிடைக்கப் போகுதோ - மின்
மலர்க்கைத்
துங்கவளே யேந்தும் துரைராம ராஜனிட்ட 716
தங்கவளே போற்கொடுப்பார் தானுண்டோ - பொங்குமதி
மந்திரிசா மாவைய மானபரன் கல்லழுத்தித் 717
தந்தமணி ஓலே தலம்பெறுமே - சுந்தரவேள்
வெங்கிடசுப் பையரிட்ட வெண்முத்து
மாலேயைப்போல் 718
எங்கடசிப் போனுலும் எய்துமோ - பொங்குசெல்வ
மாகனவான் பார்புகழும் வாலகிஷ்ண மால்கொடுத்த 719
மோகனமா லேக்கெவரும் மோகமே - தோகையர்வேள்
திக்கரசர் கொண்டாடும் சேஷய்யங்கார் முன்புதந்த 720
கைக்கடகம் போலஇனிக் காண்பேனே - மிக்கசிவ
கங்கை நகராளும் கவுரிவல்ல பேந்த்ரனிட்ட 721
தங்கச் சரிக்குச் சரியுண்டோ - இங்கிதமால்
எட்டமா ராஜன்மகிழ்ந் திட்டகொப்புப் போலுமொரு 722
தட்டான் அறிந்து சமைப்பானே - நட்டுலகில்
ஆர்க்கும்உப காரி அரியலூ ரான்கொடுத்த 723
மூக்குத்தி யார்க்கு முதலாச்சோ - தார்க்குழலாய்
நாமினிஎன் செய்வோம் நமைமதிப்பார் யாரென்று 724
மாமி புலம்பி மயங்கினுள் - காமிநான்

புதிதாக நகை செய்தல்

பண்பாகத் தேற்றிப் பதினுயி ரம்பொனெண்ணிக் 725
கண்பார்த்துத் தட்டான் கடைக்குப்போய்ப் -
பெண்பாவை
வாட்டமெலாம் தீர வகைவகையா நான்செய்து 726
போட்டழகு பார்த்துடம்பு பூரித்தேன் - கோட்டுமுலே

அரும்பதவுரை: கண்ணிவரிசை; 714. முண்டகம் - தாமரை; 718. எங்கடசி (எங்கு அடசி) - எவ்வளவு தூரம்: 721. தங்கசரி - தங்க நகைகளில் ஒரு விதம்; 722. நட்டுலகில் - நடன நட்டுவ உலகில்.

ஙீலிப் பறிபாதி நிட்டுரத் தட்டார்கைக் 727
கூலிப்பறிபாதி கொள்ளையிட்டார் - கோலமெத்தை

ஆடை வாங்கிக் கொடுத்தல்

மேலிருந்து நாங்கள் விளையாடும் போதுகிழ 728
நீலிவந்து பக்கத்தில் நின்றுபையச் - சேலையெல்லாம் -
வன்னமில்லைக் கோடியில்லை மாற்றஉடை
இல்லையென்று 729
சந்நிதிக்குப் போகத் தடைஏண்டி ? - மின்னே !
நிறைந்த குடந்தளும்பி நிற்குமோ யார்க்கும் 730
பிறந்தஅழ கேயல்லால் பின்னுண்டே? -
குறைந்திருந்தால்
நாணலென்ன கோணலென்ன நாடறிந்த
பார்ப்பார்க்குப் 731
பூணூலும் வேணுமோ போவென்றாள் - வேணதெல்லாம்
என்னிடத்தில் சொல்லாமல் ஏனிருந்தாய் என்றுடனே 732
கன்னியரைக் கூட்டிக் கடைக்குப்போய் - அந்நேரம்
ஈரஞ் சுணைரோசம் இல்லாக் கழுநீலிக்கு 733
ஆரஞ்சுச் சேலையிலே ஈரைஞ்சு - பாரிலெனைக்
இட்டைக் கரைச்சேல கூறுமுழுப் பாதகிக்குப் 734
பட்டைக் கரைச்சேலை பன்னிரண்டு - துட்டக்
குரக்குச்சா யற்கிழட்டுக் கூனிபெற்ற மூளிக்கு 735
அரக்குச்சா யச்சேலை ஆறு - மருட்டிப்
படக்குத்துங் கண்ணுட்குப் பஞ்சவர்ணச் சாய 736
வடக்குத்திச் சேலையொரு வர்க்கம் - மடக்கூன்
குணக்கேடி ஈன்ற கொடுஞ்சூரக் கள்ளிக்கு 737
அணக்குடிச்சல் லாச்சேலை அஞ்சு - பணம்பணமென்று
என்னைக் கருக்கும் எமக்கூனி பெற்றமகட்டு 738
அன்னக் கருக்கிலே ஆறேழு - மின்னிப்
பசந்தகெண்டைச் சேலைப் பழிக்கும் விழியாட்கு 739
உசந்தகெண்டைச் சேலையிலே ஒன்று - கசந்தமுற்றல்

அரும்பதவுரை : கண்ணிவரிசை: 728. கிழநீலி - தாய்க் கிழவி; 729. வன்னமில்லை - சாயம் போய் விட்டது; 730. சந்நிதிக்கு - கோயிலுக்கு; 733. ஈரம் - ஈவிரக்கம்; 734. குட்டு - ரகஸியம்; சுணை- சுரணை; ஈரைஞ்சு - பத்து.

வேம்புவர்ணச் சொற்கிழட்டு வீணிபெற்றப் பாவிக்கு 740
பாம்புவர்ணக் கண்டாங்கி பத்தெட்டு - வீம்பைவென்ற

வெற்றிக்கம் பத்துமத வேழமுலேச் சேயிழைக்குச் 741
சுற்றுக்கம் பிச்சேலே சோடிரண்டு - முற்றுமன

வஞ்சத்துச் சல்லாப மாரீசக் கள்ளிக்குக் 742
கஞ்சத்துச் சல்லாவில் கட்டிரண்டு - செஞ்சேல்

அயிர்க்கண்ணுச் சேயிழையாள் ஆச்சரியம் கொள்ள 743
மயிற்கண்ணுச் சேலேயொன்றும் வாங்கி - உயர்த்தி

அடுக்கினேன் மங்கையுங்கள் அத்தைக்கோ என்ருள் 744
திடுக்கிட்டேன் மூன்றுசல்லாச் சேலே - எடுத்தேன்

முலேயுயர்ந்த மங்கையைத்தன் முன்கண்ட செட்டி 745
விலேயுயர்ந்த வேடிக்கை மெத்த - நிலவுநுதல்

கீற்றிருள் தாயாம் கிழட்டொட் டகை முதுகில் 746
ஏற்றிருள் வீட்டிற்போய் இன்புற்ருேம் - சோற்றுவட்டத்

பலவகைப் பொருள்களுக்கும் கொடுத்தல்

தட்டென்றும் செப்பில் சவாதென்றும் கொச்சுவானப் 747
பட்டென்றும் தங்கப் படிக்கமென்றும் - வட்டென்றும்

சீப்பென்றும் தந்தச் கிமிழென்றும் கைக்கிசைந்த 748
காப்பென்றும் வாடைக் கதம்பமென்றும் - சாப்பிடநெய்

மீனென்றும் குத்து விளக்கென்றும் மாவென்றும் 749
தேனென்றும் பாலென்றும் சீனியென்றும் - தானேயிலே

வன்னமென்றும் முத்தென்றும் மாணிக்கக் கல்வயிரச் 750
சன்னமென்றும் நாட்குநாள் சாதகமாய் - என்னே

வழிக்கட்டிக் கேட்பார்கள் வாரிவா ரிப்பொன் 751
கிறிக்கட்டிக் கட்டிநான் கெட்டேன் - விழித்து

சாமிக்குக் கொடுத்தல்

வலேசுற்றும் கண்மருட்டி மாறியொரு ராவே 752
தலேசுற்றி யாடிவந்தாள் தையல் - வலியகிழட்டு

ஓரி தலேயாட் டொருபங்கி னும்அந்த 753
நாரி தலேயாட்டு நாலுபங்கு - பாருமென்று

அரும்பதவுரை : கண்ணிவரிசை: 740. வேம்பு வர்ணச் சொல் கசப்பான மொழிகள்; வீம்பை - பெண்ணே; 742. மாரீசக் கள்ளி - நயவஞ்சகக்காரி; 752. ராவே - இரவே: 752. ஓரி - நரி.

நான்கண்டு நிற்கையிலே நாடிவந்தாள் கூனியத்தை 754
ஏன்கண்ட கூறிதென்றேன் எங்களிலோர் - மான்பண்டு
கன்னிதீப் பாய்ந்தமருள் காணுமென்றாள் மாமியிதற்கு 755
என்னசொல்லும் என்றேன்மற் றேதுமில்லை - வன்னநிறப்
பட்டொன்று வேலொன்று பன்றியொன்று
மா முனிக்குத் 756
துட்டுத் தடியொன்று சோமனஞ்சு - கட்டுகருங்
கச்சையெட்டுச் கேவல்பத்துக் கப்பறைப்பூ
சைச்செலவும் 757
மிச்சமொரு சூலாடும் வேணுமென்றாள் - அச்சணமே
என்ஊறு பாடகல இந்தா பிடியுமென்று 758
முந்நூறு பொன்னைத் முடித்தெறிந்தேன் - அந்நாள்

கையிருப்பைக் கொடுத்து வைத்தல்

அரிவையிடம் நான்கேட்டால் அன்றுநீ தாவென்று 759
ஒருவைரம் கையகலம் உண்டு - பருவி
உழக்குமுத்தும் ஆயிரம்பொன் னும்கொடுத்து
வைத்தேன் 760
வழக்குமுற்றும் என்றறியமாட்டேன் - முழக்கமுள்ள

கடன்கள் தீர்த்தல்

பூதநரைக் கூனிவந்த பேயர்களைச் சீறியடி 761
சேதி தெரியாதா சிறுக்கிகாள் - ஏது
கரும்பு ரசனையென்று கண்டீரோ ஏண்டி 762
இருந்தஇடம் மேவுதோ ஏதும் - தரும்படிக்குத்
தம்பியிடம் கேட்டால் சரிப்படா தென்பளந்த 763
வம்பிகிட்டப் பேயிவரை வைவானேன் - செம்பொனிதைக்
கோள்வாய் சிறுக்கிகட்குக் கொட்டுமென்று
நான்கொடுத்தேன் 764
பேழ்வாய்ச் சிறுக்கி புதையலிட்டாள் - நீள்கண்ணுன்

அரும்பதவுரை : கண்ணிவரிசை; 754. ஏன் கண்ட கூறி தென்றேன் - இந்நிலைக்குக் காரணமென்ன என்று கேட்டேன்; 756. சோமன் - வேட்டி; 757. சூலாடு (சூல் ஆடு) - குட்டி போடாத ஆடு; 761. பூத நரை - பெரும்பாலும் நரைத்துவிட்ட: பேயர்களை - கடன்காரர்களை: 764. புதைய லிட்டாள் - புதைத்து வைத்தாள்.

செம்புவிலை என்றுவந்தான் சேலைவிலை என்றுசெட்டி 765
வம்புசெய்தான் பொன்எவ் வளவென்றேன் - தம்பி
ஒருநூறு பொன்என்ருள் ஒட்டிக் கிரட்டி 766
இருநூறு பொன்னை எறிந்தேன் - அரிசிவிற்ற
நாரிவந்தாள் உங்களுக்கு ஞாயமோ என்ருள்நான் 767
வாரி எரிந்தேன் வராகனெலாம் - வீரியமாய்
மீனுறு மாத்தைவிலை என்ருெருத்தி வந்திட்டாள் 768
நானூறு ரூபாயை நான்கொடுத்தேன் - மானுள்முன்
பட்டுநூற் காரன் பழையகடன் என்றுவந்தான் 769
எட்டுநூ றள்ளி எடுத்தெறிந்தேன் - கட்டளையாய்க்
கள்ளென்று விற்றகடைக் காரன்வந்தான் பின்னுக்குத் 770
தள்ளென்று முப்பதுபொன் தான்கொடுத்தேன் -
பிள்ளைநெற்றிச்
சுட்டிக்கு வேனுமென்ஒள் தோப்பை மூலைக்கிழட்டுச் 771
சுட்டிக்கிட் டேன்ரூபாய் தொண்ணூறு - வட்டவெள்ளி
முக்காலி வேணுமென்ருள் மூளிக்கா துக்கிழட்டு 772
முக்காலிக் கீந்தேன்பொன் முந்நூறு - கொக்கித்
திருமுரு கில்லையென்ருள் சேம்பொன்இரு நூறு 773
திருமுருகன் ஞளுக்குச் செய்தேன் - அரிவை சிறு
வாலு நரிபோல் மயிரிலெண்ணெய் வாங்குவது 774
போலே பறித்தாளென் பொன்னையெலாம் - மேலிழந்து

அவதானி தன் உடமையையும் விற்றது

பாவை எனநான் பசையற் றிருக்கையில்பொன் 775
தரவென்ருள் பொன்னரைஞாண் தான்விற்றேன் - மேவும்
கடுக்கன் விற்றேன் கண்டிவிற்றேன் கள்ளிக்கு
மேலும் 776
கொடுக்கவகை யற்றுக் குனிந்தேன் - ஒடுக்கமென்று

அவதானியைத் துறத்த முயற்சி

கண்டுகொண்டார் என்னைக் கடத்த வழிபார்த்தார் 777
வண்டுகொண்ட கண்ணிகிட்ட வந்துமிரான் - பண்டிருந்த

அரும்பதவுரை : கண்ணிவரிசை ; 773. அரிவை - பெண்; 774. மேலிழந்து - எல்லாவற்றையும் இழந்து; 775. பசையறறு - காசு ஏது மில்லாமல் வறண்டு; 776. ஒடுக்கமென்று - பணம் தீர்ந்துவிட்ட தென்று; 777. கடத்த - துறத்தியடிக்க.

பாராட்டை விட்டாள் படுக்கவராள் வந்தாலும் 778
போராட்டம் கொள்வாள் புழுங்குவாள் - ஓரி
செருமுவாள் அந்தச் செருமலைக்கேட்டிந்த 779
அரிவைவெளி யேறுவாள் அங்கே - ஒருவரல்ல
முப்பது மாப்பிள்ளைமார் மூலைக்கு மூலையதை 780
எப்படிநான் பார்த்திருப்பேன் ஏங்கினேன் - அப்பால்

கிழவி தன்னை ஏசினமை

எனக்கு வயிற்றெரிச்சல் இவ்வளவென் றில்லை 781
மனக்கவட்டுத் தாய்க்கிழகி வந்தாள் - உனக்கு நெஞ்சில்
ஈரம் இலையா ? இருந்தஇடம் காணியா ? 782
ஆரும்வந்தால் கண்டொ துங்கல் ஆகாதா ? - தூப
மடத்திற்போ ! திண்ணையிற்போ ? மந்தையிற்போ !
என்ருள் 783

தாய் மகளை வைதல்

கிட்டவைத்துக் கூனிசொல்வாள் கெட்டபுத்திக்
காரன் முழு 784
மட்டிஇவன் மேலாசை வையாதே ! - கெட்டிவெகு
சட்டமொரு காசுமில்லைத் தன்கை இழந்தவனை 785
விட்டு விரட்டல்லோ வேணுமடி ! - மட்டியுனக்கு
என்னசொன்னுன் நீயவனுக் கென்னசொன்னுய்
நீயுமென்ன 786
சின்ன வயசா தெரியாதா ! பின்னிவனைத்
தொட்டுநமக் காவதென் ? சுட்டமண்ணும்
பச்சைமண்ணும் 787
ஒட்டுமா ? மாப்பிள்ளைமார் ஒட்டுக்கு - வட்டமிட்டுப்
பாந்தித் திரியப் பசையற்ற பையலைநீ 788
ஏந்தித் திரிவ திழுக்கடி - காந்தமருந்து
இட்டாளு கீரைவேர்க் கேவேலும் வேணும்மா 789
தெட்டும் உபாயம் தெரியாதா - தொட்டுனக்கு
மைக்கணிநான் தந்த மருந்துக்குச் சூரியனும் 790
தெற்குவடக் காகத் திரும்புமே - சக்கைப்

அரும்பதவுரை : கண்ணிவரிசை: 778. பாராட்டை - புகழ்ந்து பேசுவதை; புழுங்குவாள் - வேதனைப்படுவாள்; ஓரி - தாய்க் கிழவி; 782. காணியா - நிலையானதா; 785. தன் கை இழந்தவன் - தன் கைப்பொருளை இழந்தவன்; 788. பாந்தித்திரிய - ஆசை வைத்து சுற்றுவதற்கு.

பயலைவிரட் டென்ருள்நான் பையஒண்டித் தட்டி 791
அயலினின்று கேட்டேன் அசந்தேன் - கயவர்க்கு

சண்டையிடல்

எழுநூறு நன்றிசெய் தொன்றுதீ தாமேல் 792
எழுநூறும் தீதாகும் என்று - கழுவிவந்தேன்
பாயிலே சேர்ந்தோர் பணத்தையெல்லாம்
கொள்ளையிட்டு 793
வாயிலே தேய்த்தனுப்பும் மாமியார் - ஓயாமல்
காசைக் கொடுத்தோர் கலவித் தொனிகேட்டு 794
வாசற் படியிருக்கும் மாமியார் - பேசிவைத்த
பொன்னைக் கெடாமலொட்டிப் போவாரைப் போய்ப்
புலிபோல் 795
மன்னைக் குருபாயும் மாமியார் - பன்னும்
செல்லக் கலவியோர் செம்புத்தண் ணீர்தனக்கும் 796
வல்லிக்கும் சாய்க்குமொட்டை மாமியார் - நல்லமகள்
சேர்ந்தகல வித்தொழிலைத் திட்டிவா சற்கதவில் 797
ஆந்தியாந் திப்பார்க்கும் அத்தையார் - பாந்தமாய்க்
கைப்பொனுள்ள பேரைக் கணவனன்றும்
வீணர்களை 798
அப்பனென்றும் சொல்லும்வறட் டத்தையார் -
தப்பிமெள்ளப்
பிக்குரைத்துப் போவாரைப் பீசத்தைப் பற்றியிழுத்து 899
அக்கணமே பொன்பறிக்கும் அத்தையார் - சிக்கெனவந்து
ஏதடா பார்ப்பான்நீ என்னசொன்னய் சொன்னதற்குள் 800
காதை அறுத்திரண்டு காணிபிடுங்கி - மோதிவிழச்
சீல்வாயைப் பேர்த்தெடுத்துத் தேங்காயைப் பின்குடுமி 801
யில்வீழக் கட்டினல் என்சினம்போம் - அல்லவடா
வாவென் றுனையார் வரவழைத்தார்? உன்பாட்டில் 802
போவென்ருல் போயோ போக்கறுவாய் - பாவியிவட்டு
அம்மான் மகனுநீ அத்தைமக ளாஇவளும் 803
சும்மா வருவாளா சொந்தமுண்டா - பம்மியொரு

அரும்பதவுரை : கண்ணிவரிசை; 791. தட்டி அயலில் - தட்டிக்குப் பக்கத்தில்; 787. ஆந்தி யாந்தி - எட்டி யெட்டி; 799. பிக்கு - ஏமாற்று வார்த்தை; சிக்கென - விரைந்து; 802. உன் பாட்டில் - நீ வந்த வழியே; போக்கறுவாய் - போக்கற்றவனே; 803. பம்மி - பசப்பி.

முக்கிலே நின்று முணுமுணுப்ப தென்னடா 804
நக்கலே வாடாவுன் நாற்றமெலாம் பக்கத்தில்
பீத்தாதே சும்மா பிதற்ருதே அக்காடி ' 805
ஆத்தே கொடுப்பேனே ஆகட்டும் - பேர்த்துன்
கடையெடுத்துக் கட்டென்று கச்சைக்கட்டி வந்தாள் 806
அடைகிடக்கும் பாம்புசினந் தாப்போல் - உடனே
நெருங்கி எருக்கிலைக்கு நீர்வார்த்தால் போலே 807
இருந்ததே பாதகத்தி ! ஏழைக் - குரங்கொன்று
உபகாரம் செய்ய ஒருபாவி தேடன் 808
அபகாரம் செய்தகதை ஆச்சே ! - வீபகாரம்
வந்ததே அத்தே ' மருமகனென் றில்லையோ 809
எந்தன் வயிறும் எரியுதே - தந்திரமாய்
என்னதந்தாய் என்றுரைந்தாய் இவ்வூர் அறியாதா 810
கன்னியறி யாளாநீ காணுயா - பின்னும்
ஒருகை அடித்தால் ஒருகை அணையாதா 811
விரிவாய்நான் தந்ததெல்லாம் வீணு - இருபத்து
நாலாண்டுக் குண்டுமக்கு நான்கொடுத்த
தென்றுரைத்தேன் 812
காலாந்த கள்பேச்சைக் கண்டீரோ - கீலாநீ
தந்ததுகால் காசுண்டா சாட்சியுண்டா
இத்தனைப்பேச்சு 813
இந்தப் படுவானுக் கேதென்று - வந்துவந்து
தில்லுமல்லாய்ப் பேசினுள் சீறுமாட் டின்கழுத்துச் 814
சல்லிபோல் கவள்ளைநரைப் சண்டாளி - நல்லபட்டாக்
கத்திகொணிடு மேற்சிலுப்பாக் காரனெரு மொங்காரிச் 815
சத்திரியன் அங்கே சலுகைவந்தான் - அத்தறுவாய்
பித்தவெறி மட்டாம்ப் பிரட்டுத் திழிநாவி 816
பத்தமிலாப் பொல்லாப் படுக்காளி - செத்தநாய்ப்
பல்லா ! சுணைகெட்ட பாழ்ப்பதரே ! சீரழிந்த 817
மொல்லாய் ! கடைப்பட்ட முடிடாளே ! - பொல்லாத

அரும்பதவுரை : கண்ணிவரிசை: 804. முக்கிலே -மூலையிலே. 805 பீத்தாதே - ஜம்பம் அடிக்கதே; 806. கச்சை கட்டி - வரிந்து கட்டிக் கொண்டு; 812. கீலா நீ - கிறுக்கனுகிய நீ: 815. சலுகை வந்தான் - பரிந்து கொண்டு வந்தான்.

சங்கைகொட்ட மாடே ! ததிப்பட்ட குக்கலே 818
பொங்கல்முட்டி தூக்கி ! புழுக்கையா !.- பங்கரையா !
சத்திகெட்ட பேநாயே ! சாதிகெட்ட ஓநாயே ! 819
புத்திகெட்டு லச்சைக்கெட்டுப் போனுயே ! - வித்தையாய்
வண்டுபண்ணும் கன்னியிடம் வைத்திருக்கு
தென்றுயே 820
உண்டுபண்ண வாடா ஒழுவாடி - சண்டிமாட்டா !
என்றுமடி யைப்பிடித்தாள் எட்டிமயிர் நான்பிடித்தேன் 821
அன்று குடுமி அவள்பிடித்தாள் - நின்றுசிலம்
பத்திலொரு லாகுகொண்டு பாய்ந்துவலு சாறுபோல் 822
அத்தையைக்கீ ழேபோட் டமுக்கினேன் - தத்தியவிழ்ந்து
என்சேோ மனுமுரிய ஈனக் கிழட்டோரி 823
தன்சேலை யும்போய்ச் சமுசியமாய் -...

★

கூனிமிரக் கீழே குழல்பறிய நீர்மலமும் 824
தாஞெழுக மாமிதலை பஞ்சுதிரக் - கூனியொரு
வவ்வால்போல் தொத்தவலு சாறுபோல் நானமுக்கச் 825
செவ்வாய்க் கொடிய சிறுக்கிவந்து - தவ்வி
விலக்கடியாய் என்னை வெளுக்க நரைக் கூனி 826
பிலக்கநகத் தால்துடையைப் பிய்க்க - அலக்கழிவாய்
நானுமோர் ஆரியப்பேய் நாரிமேரர் மோகினிப்பேய் 827
கூனியுமோர் புல்லிப்பேய்க் கோலமாய் - மானமற்று
வாழைமரத் தூடே மருமகனும் மாருயரும் 828
கீழ்மேலு மாகக் கிடக்கையிலே - சூழத்
துறட்டை விலக்கிவிட்டார் சுற்றிநின்ருர் பின்பு 829
வறட்டோரி சீறி மகளைப் - புறப்படென்று

சபையில் வழக்காடல்

கந்தைசுற்றி மேலெல்லாம் நாரைமுள்ளால் குத்திரத்தம் 830
சிந்தவடித் தென்னைச் சினந்துறுப்திப் - பைந்தொடியை
முன்னே நடத்தி முறையோ முறையோயென்று 831
அந்நேரம் போயழுதாள் அம்பலத்தில் - பின்னுலே

அரும்பதவுரை : கண்ணிவரிசை; 818. குக்கலே - நாயே; 825. 825. தவ்வி - எகிறிக் குதித்து; 826. வெளுக்க - அடிக்க; 829. துறட்டை - சண்டையை; 831 . அம்பலத்தில் - பஞ்சாயத்து சபையில்.

நானும்போய் அங்குநின்றேன் ஞானம்நடு வில்லையோ 832
தானிகரே கோயில் தலத்தாரே - மானீரென்று
ஓலமிட்டாள் கூவென் றுரைத்திட்டாள் மெத்தமெத்தச் 833
சாலமிட்டாள் பின்னுமுத்துச் சாமிபட்டர் - நாலுமுறை
ஐயமில்லா மல்தேர்ந்த ஐயாத் துரைப்பட்டர் 834
வையகத்தோர் போற்றுமகா லிங்கபட்டர் - செய்யில்
மணக்கும் கமலம் மருதூர்ப்பொற் கோயில் 835
கணக்குத் துரைராஜ காமன் - இணக்கம்
பழகியநா வாளன் பதியரசர் நேயன் 836
அழகிய நாகலிங்க அண்ணல் - மழஏது
எருதப்பர் பாதமலர் எப்பொழுதும் போற்றும் 837
மருதப்ப சுந்தரவில் மாரன் - கருதுசுவைப்
பால்போல் மனது படைத்த குணசாலி 838
மால்ராம சாமி மதியூகி - கோல
மதன்ராப சாமியையர் ளள்ளல்பிச்சு வையர் 839
முதலானோர் முன்னர்முறை யிட்டாள் - பதைபதைத்தாள்

கிழவி கட்சி

சண்டியிந்தப் பார்ப்பாள் சனியன்போல் என்வீட்டில் 840
பண்டொருநாள் தந்தான் பணங்கொடுத்தான் -
ஒண்டொடியை
ஆவலுடன் சேர்ந்திருந்தான் அப்பால் விடிந்தவுடன் 841
போவானென் றேயிருந்தேன் போகவில்லைப் - பாவியிவட்கு
என்னபொடி போட்டானோ என்னையும்வாய்
கட்டிவிட்டான் 842
பின்னொருவர் கிட்டவந்ததும் பேசவொட்டான்- கன்னிலகப்
பாமரனுக் கையோ பகலென்றும் ராவென்றும் 843
ஏதென்றும் சாமமென்றும் இல்லையே -...
பொன்னுடம்பில் இந்தப் பிழந்தெறிவான் பல்பட்ட 844
புண்ணுமினி மேலாறப் போகுதா - நண்ணும்
முகமினுக்குக் காரனொரு முட்டாள் விநாடி 845
மகளைத் துடைமடக்க வொட்டான் - பகலெல்லாம்

அரும்பதவுரை : கண்ணிவரிசை; 832. மானீரே - மானமே பெரிதெனக் கருதுபவர்களே. சாலமிட்டால் - பசப்பினாள்; 840. பண்டு - முன்பு.

அத்தையத்தை என்பான்பின் அந்திபட்டால்
கிட்டவந்து 846
சத்தைசத்தை என்பான் தலேகுளிவான் - மெத்தக்
குதிரையுமே றிக்குதிரைக் குட்டியுந்தான் ஏற 847
மதிகொண்டல் லோதிரிந்தான் மட்டட - சதிகாரப்
பொய்யனிவன் தண்ணீரில் போட்டாலும்
தான்நனையான் 848
வெய்யலிலே போட்டாலும் வெந்திடனே் - கையாரப்
ஏதும் கொடுத்ததில்லே ஏனப்பா இந்தமட்டும் 849
போதும்நீ போவென்ருல் போகாஞே - மூதேவி
தானும்த ரானும் தருவாரை யுந்தரவொட் 850
டாஞ மீதென்ன அநியாயம் - யீனஞெரு
புலலிப் பசாகவந்தால் போலவந்தான் வாசலிலே 851
நல்லார்பொல் லாரகளேயும் நாடவொட்டான் -
சொல்லிநித்தம்
சம்பளமாத் தந்தமுத்துச் சாமியா பிள்ளேயந்தர் 852
செம்பிகிட்டப் போஞன் திரும்பானே - வம்பியிவன்
ஆதரவைக் கண்டே அழகாத்திரி நாயகன் 853
கோதையைப்போம் வைப்புவைத்துக் கொண்டானே -
ஏதோ
ஒருகோடி தாரமென்ருன் ஒப்பாக் குடிக்கி 854
ஒருகோடி யுங்கொடுத்த துண்டோ ? - பெருமையாய்
மச்சிருக்கும் வீடுகட்டி வைப்பனென்ருன் வீடெல்லாம் 855
மச்சிருக்கக் கண்டேன் மறுத்தறியேன் -
மொச்சையென்றும்
தோசையென்றும் அப்படென்றும் சோமனென்றும்
பாலென்றும் 856
வாசக் கதம்பமென்றும் மாலேயென்றும் - பேசித்
தனக்கென் றிவன்பறித்த தல்லாமல் வேயே 857
எனக்கென் றிவன்கொடுத்த தில்லே - தனிப்படுக்கைக்கு
எள்ளுப் பொடியென் றிவன்மகட்பான்
இல்லேயென்ருல் 858
சள்ளுப் பிடுப்பாள்இச் சண்டிமட்டை - உள்ளறைக்குள்
பண்ணேக் கடாப்போல் படுத்துக் கொடுங்கிரந்திப் 859
புண்ணேக் கொடுத்தானே யேக்கிறுவான் - பெண்ணழகி

அச்சுப்போய் மேனி அழகுப்போய்ப் பாருமிவள் 860
எச்சுப்போ ளுள்இனிநான் என்செய்வேன் - லச்சைகெட்ட
சந்தைமாங் கொட்டை சலுப்பர் பொதிசுமக்கும் 861
கிந்துகால் முட்டாள் கெடுகம்பன் - மந்தன்
முரண்டடளு காசவலே முற்றும்பா தாம 862
கரண்டி கிராளி கசடன் - பொருங்ய்கின்ற
நல்ல மரத்தில் நரையான்போல் வாழ்மனேயில் 863
வல்லகுரு நாதனடி வைத்தால்போல் - சய்லியிடன்
ஆடெடுத்த கள்வனைப்போல் ஆட்கண்ட
ராமனைப்போல் 864
நாடிநக் கப்புகுந்த நாயைப்பாபால் - தெடிவந்தான்
ஆத்தே கொடுப்பானே ஆட்டுக் கிடையைநாய் 865
காத்தால்போல் என்வீட்டைக் காத்தானே - நேத்தியிது
நேய மகளை நிறைபொதியி லேகழுதை 866
வாயைவைத்தாற் போலே வழிவைத்தான் - பெயனிவன்
பாழுறுவான் என்மகளைப் பங்கப் படுத்திவிட்டான் 867
ஏழரைநாட் டானுக்கும் ஏற்றமிவன் - ஊழ்விதியோ
தாங்கி நிலுவைச் சனியனை சட்டிக்கு 868
வாங்கினது போல வலியவந்தான் - ஆங்காண்
நடத்தையுல கத்திவ நரிக்கிடங்கொ டுத்தால் 869
கிடைக்கிரண் டாடுதின்னக் கேட்கும் - அடுக்கவெனக்கு
உள்ளமுதல் எல்லாம் ஒருமிக்க நாட்குநாள் 870
கொள்ளையடித் தானே குடிகேடன் - எள்ளளவோர்
துட்டுமில்லை என்வீட்டைத் தூர்த்தகளம்
ஆக்கிவிட்டான் 871
கட்டவொரு தசலையில்லைக் காணுமொரு - வட்டத்துண்டு
ஆனாலும் வாங்கிமகட் கானலும் தாருமென்று 872
நாளுக இன்றுசொன்னேன் நான்கொடேன் - பேநாயே
அப்புறம்போ என்றுன்பின் ஆர்கொடுப்பார் காணு
மென்றென் 873

அரும்பதவுரை : கண்ணிவரிசை; 861. சலுப்பர் - வண்ணார்; 863. நாரையான் - புல்லுருவி; 870. எள்ளளவோர் - சிறிது கூட; 871. தூர்த்த களம் - பாழடைந்த வீடாய்: 873. தப்பினி - திருட்டு; வெள்ளாட்டி - வேலைக்காரி.

தப்பிலிவெள் ளாட்டியென்று தள்ளிஞன் - குப்புறப்போய்
எட்டிவிழுந் தேன்தலையில் எட்டுமிதி போட்டான்பற் 874
கிட்டிவிழுந் தேன்மகளைக் கீழ்ப்போட்டுத் - தொட்டித்தான்
நின்ருேர் விலக்கிவிட்டார் நீங்கிப் பிழைத்துவந்தோம் 875
இன்றே இவனையடித் தென் முதலை - ஒன்றும்
நிலுவை விடாமலெல்லாம் நீர்வாங்கித் தந்து 876
தொலிதொலி என்றே தொலித்துக் - கலிகாலப்
பட்டுக் கிடப்பானைப் பார்ப்பாரப் பேயைஎல்லை 877
விட்டுக் கடத்துமென்ருள் வெங்கூனி - சட்டென்று

அவதானி கட்சி

மாதவரெல் லோருமெனை வாருமென்ருர்போய்நின்றேன்878
ஏதுகாண் இந்த இரைச்சல்என்ருர் - சாதகமாய்
முந்துவார் முந்துமுன் முடிச்சவிழ்க்கி முந்திஞல் 879
பிந்திவழக் கென்னநான் பேசுவது - இந்தமுண்டை
வல்லுரைக்குப் பட்ட மரமும் தழையுமே 880
நல்வயிற்றுப் பிள்ளை நழுவுமே - மெல்லமெல்லப்
பால்பீச் சினவன் பழங்கதையும் தென்னைமரம் 881
மேலேறினவன் வெறுங்கதையும் - நீலியொரு
வம்பிடைச்சி யான்மூக்கு வாங்கிவள விற்போன 882
அம்படைச்சி செய்த அபகடமும் - தம்பிள்ளைக்கு
அன்று தலைமேல் அரைச்சேலை யைச்சபையில் 883
சென்ருெருத்தி கட்டிவைத்த சித்திரமும் - ஒன்றியொரு
முண்டைகள்ளர் மக்களைப்போய் முத்தமிட்டு
மூக்குப்போய்க் 884
கொண்டவன்மேல் சாட்டிநின்ற கூக்குரலும் பண்டுவந்தார்
தன்னில்இவர் தாமபூ சணம்பூத்த சாமியார் 885
என்னஒரு மங்கைசொல்லி ஏய்த்ததுவும் - உன்ஆணை
கோழியைநான் தின்றவளென் கோதைதலை
தின்றவளென்று 886

அரும்பதவுரை : கண்ணி வரிசை (872) மகடகாணுலும்-மகளுக்காவது: (873) தப்பிலி வெள்ளாட்டி-தவருன திருடி. (874) தொட்டித்தான்-மிதுத்துத் துவைத்தான். (876) தொலி தொலி என்று தொலித்தது-உதை உதை என்று உதைத்து: (877) வெங்கூனி-கொடியகூனி; (880) வல்லுரைக்கு-திறமையான பேச்சுக்கு (884) கொண்டவன்-கணவன்: பண்டு-முன்பு.

ஏழை யொருத்தி இயம்பியதும் - வேழத்தை
வெட்டினேன் என்ருெருத்தி விண்டுகஞ என்றுரைத்த 887
திட்டாங் திரமும் தெரியாதா - துட்ட
மடக்கொடியார் நெஞ்சமும் வானின் முடிவும் 888
கடற்குழியின் ஆழமுமார் கண்டார் - மடக்கியிவள்
ஓடமேற் றிக்கூலி யும்பிடித்து வாங்குவாள் 889
நாடிமலே தன்னே நகட்டுவாள் - தாடகையும்
சாட்டியபொய்ச் சூர்ப்பனகை தானும் இவளுமொரு 890
கூட்டுமுன்பு ராகவனேக் கோட்சொல்லிக் - காட்டில்
விடுங்கூனி சொற்கும் விலகலாம் இந்தக் 891
கொடுங்கூனி பொல்லாதகூனி - நடந்தவகை
ஒன்றுமில்லே மின்ஞள் உடன்கூடி நான்சிலநாள் 892
அன்றிலும்பே டும்போல் அணேந்திருந்தோம் - நன்ருகக்
கூடி யிருக்கையிலே கூனிமருந் திட்டாள்நான் 893
வாடி மயக்கமாய் மதிகெட்டேன் - கோடிக்கு
மேலுண் டிவர்கேட்ட வேளேயெலாம் பொன்னுமுத்தும் 894
நாலுவகையையும் நான்கொடுத்தேன் - நீலிபெற்ற
நாரியர்க்கு மாப்பிள்ளேமார் நம்மையல்லால்
ஆயிரம்பேர் 895
ஆரியர்க்குப்பால் போலும் ஆச்சுதுகாண் - ஓரியிவள்
காசலேயாக் கீரைக் கடைக்கும் எதிர்க்கடையொன்று 896
ஆசிராய் வைத்திருப்பாள் அட்டியிலேப் - பாசாங்குப்
பொய்யிலுள்ளம் பூண்டிருந்த பொன்னேயெல்லாம்
அள்ளிவிட்டுப் 897
பையிலுள்ளதெல்லாம் பசையற்றேன் - கையிளேத்த
சேதியறிங் தென்னேத் தெருவிலே ஓட்டுதற்குப் 898
பேதையுந்தா யுங்கூடிப் பேசிஞர் - 'பாதகா'!
என்னடா நீ கொடுத்தாய் ஏனிருக்கி ருய்இருக்கச் 899
சொன்னவரார்' என்றுமடி தொட்டிழுத்துக் - கன்னத்தில்
அஞ்சாறு போட்டேன் அரைச்சோம ஞேக்கிழித்துப் 900
பிஞ்சோடப் பூணூலேப் பிச்செறிந்து - நெஞ்சிலே

அரும்பதவுரை ; கண்ணி வரிசை. (865) பூசணம்-காளான் பூத்த: (886) இயம்பியதும்-கூறியதும்: (887) விண்டு-சொல்லி (888) மடக்கொடி-பெண்: (892) மின்ஞள்-பெண்: (894) காசலேயா-காசுக்காக அலேந்து: ஆசிராய்-முன்னதாகவே ஒழுங்கு படுத்தி: அட்டியில்லே-தடையில்லே-

தாவி மிதித்துமுகம் தன்னிலே துப்பினுள் 901
பாவி மருகனென்றும் பாராமல் - போவென்று
புந்திநொந்து சொன்னுளே போனதெல்லாம்
போகட்டும் 902
சொந்தஅத்தை என்னைத்தொடலாமோ - இந்தமுறை
செந்நாய்க் கிழட்டேரி செய்ததெல்லாம் கண்டிருந்தும் 903
மின்னுளும் கைநழுவ விட்டாளே - பின்னைநமக்கு
ஆசையென்ன காற்படிமுத் தாயிரம்பொன் ஓர்வயிரம் 904
வாசமங்கை பால்கொடுத்து வைத்திருந்தேன் -
வேசையிவள்
எல்லார்க்கும் பெண்டாட்டி ஈனச்சா திச்சிறுக்கி 905
கல்லிலே நாருரிக்கும் காந்தாரி - சல்லியிடம்
இன்றெனது கைப்பொருளை எய்லாம்வாங் கிக்கொடுங்கள்

கிழவி மறுப்பு

என்றைக்கு நீகொடுத்தாய் எட்டேகா லட்சணமே 907
ஒன்றுபத்து வாளி ஒளுவாடி - நன்றிகெட்டாய்
தூவணுத் தூவணுச் சூவணுச் சூவணுத் 908
தோவணுத் தோவணுத் தோவணுத் - தூவணு
மையனு ஏழஞ்சு மையனுப் பேயனுத் 909
தையனு ஒன்றுமுக்கால் தையனுப் - பொய்யனிவன்
காலும் தலையும்விற்ருல் காசும்பெ ருததிரு 910
வாலி இவன்கொடுத்து வைக்கவில்லை - மேலாவில்
சாலக் கிராமலிங்கம் தப்பாமல் கொல்லுதே 911
மூலைக்கொத் தாள முனியுண்டே - ஏலுவையாய்ச்
சக்கரக்கோட் டைக்கலுங்கில் சத்தி விளங்குதே 912
மெய்க்காரி யன்காவல் வெல்லுதே - கைக்குமெய்யாத்
தீர்ந்து கொடுக்கிருேம் தீப்பறக்கக் காய்ச்சிமழு 913
வேந்தி எடுக்கிருேம் இல்லையென்ருல் - ஒந்தியிந்த
ஐயன் தலையில் அடிப்போம் இருபிறப்புப் 914
பையங்இழுக் கெப்படிச்சொல் வான்பாபி - தொய்யும்

அரும்பதவுரை : கண்ணி வரிசை ; (907) வத்துவாளி-கயவாளி (908) இந்தக் கண்ணியில் வருவதன் பொருள் தூத்து. சூச்சூ, தோதோ, (909) ஏழு அஞ்சை மையன்னு-ஏழு என்ற லக்கத்திற்கு தமிழ் எண்ணுகக் குறிப்பிடும் போது 'எ' என்று போடுவதுண்டு. ஐந்து என்று குறிப்பிடும் போது தமிழ் லக்கம் 'ரு' இதோடு மை என்ற எழுத்தைச் சேர்த்து எருமை என்று பதம்பட சாமர்த்தியமாகக் கோர்க்கப்பட்டிருக்கிறது.

இரவலர்மேல் நீட்டுவர்கை இவ்வுலகை ஆளும் 915
புரவலர்மேல் நீட்டுவர்பொற் றாளென்று - அருமையாய்க்
கம்பர்சொல்ல வில்லையா கைக்கூழுக் காகஅவ்வை 916
அம்பலிற்போய் வெண்பா அறையலையா - அம்பலத்தில்
கன்னிலன் பாருமெனக் கண்டு கனுப்பியென்றும் 917
சொன்னுனே வேருருவர் சொன்னுக்கால் - இந்நேரம்
வாயிலகப் பைக்காம்பை வைப்பேன் ஒருமருங்கு 918
நாயன்மா ரேயுமக்காய் நான்பொறுத்தேன் - ஓயாது
அடுத்தவரெல் லாருமெங்கள் ஆமக்கன் மார்யாம் 919
பிடித்தவர்க்கெல் லாந்தாம்பெண் டாட்டி - படிக்குள்ளே
எங்கள் குலவிருதே இப்படித்தான் ஏச்சுமுண்டோ 920
வெங்கனிவன் ஊரைவிட்டு வந்தபின்னே - அங்கிந்தத்
தோசிப் பயல்மனைவி துட்டமுண்டை யாலவ்வூர் 921
வேசிபிழைப் பெல்லாம்போய் விட்டதென்றுள் - பூசுரர்கள்

அவதானி வேண்டுகோள்

சந்தடியி லேராம சாமியையர் என்னெதிரே 922
வந்துமக்குப் புத்தி மடித்ததோ - இந்தவஞ்ச
மைவிழி யார்தம் மனையகல் என்றுமுன்நாள் 923
அவ்வை உரைத்தமொழிக் கட்டிவந்தால் - தெய்வமல்லோ
கொல்லுமென்றோர் போங்காணும் கூடிப் பிரியலென்
றும் 924
மெல்லிநல்லாள் தோள்சேர வேணுமென்றும் - சொல்லி
இருக்குதே என்றேன் இருந்தவர்கள் எல்லாம் 925
சிரித்திட்டார் நானும் சிரித்தேன் - விருப்பமுள்ள
தத்தையர்க்கென் மேல்மனந்தான் சற்றுநே ரங்
கோபம் 926
அத்தையர்க்குங் கூட அறைமனசு - மெத்தவழக்கு
ஆட்டிவைக்க வேண்டாம் நீர் அம்பலத்தில் என்னை
யினிக் 927
கூட்டிவைக்க வேணுமென்று கும்பிட்டேன் - வாட்டமாய்

அருஞ்பதவுரை ; கண்ணி வரிசை (916) இரவலர்-பிச்சைக்காரர். (919) ஆமக்கன்மார்-கணவன்மார் (920) வெங்கன்-ஒன்று மில்லாதவன். 921) பூசுரர்கள்-அந்தணர்கள். (923) அகல்-நீக்கு.

சபையார் ஆறுதல் மொழி

எல்லவரும் என்முகம்பார்த் தேன்காண் உமக்கொருவர் 928
சொல்வதென்ன சற்றும் சுணையிலையா - அல்லநீர்
வேசையுடன் அம்பலத்தில் வீணே வரலாமா 929
ஏசல்உமக் கல்லஇது எங்களுக்கே - பூசுரரே
வேசை உறவும் வியாபாரி தன்னுறவும் 930
காசுபணத் திற்காண லாமென்றும் - நேசமுள்ள
போதம் தனம்கல்வி பொன்றவருங் காலம்அயல் 931
மாதர்மேல் வைக்கும் மனமென்றும் - ஈதல்லால்
ஈரமிலா நெஞ்சத்தார்க் கீந்த உபகாரம் 932
நீர்மேல் எழுத்துக்கு நேர்என்றும் - நீர்படித்த
பாட்டிலுண்டே வேசைமனப் பற்றிரா தென்றுநீர் 933
கேட்டும் இருப்பீரோ கேளீரோ - நாட்டில்என்றும்
பத்திஇவர்க் குண்டா பழய குருடிகத 934
வைத்திறடி என்றதென்ன வம்புக்கா - எத்தாகக்
கூடவே சாவனென்று கோவணத்தைப் பற்றிமனை 335
தேடிவந்தாள் செய்தி தெரியாதா - ஊடுகுத்துச்
சண்டா ளரையும்இந்தத் தாசியையும் தீயையும்நாம் 936
கண்டால் ஒதுங்குவதே காரியங்காண் - திண்டாடும்
ஈரமில்லா மூளிகளை ஈனமழு மாறிகளைச் 937
சீரழிந்த தோசிச் சிறுக்கிகளை - நீர்தானும்
நட்டாற்றுக் கோரையைப்போல் நம்பலா மாஇதெல்லாம் 938
விட்டாற்றிப் போடுங்காண் வேதியரே - தட்டழிந்து
மட்டதுகெட் டாலுமேன் மக்கள்மேன் மக்களே 939
மட்டிமா தங்கம்க லீரிடுமா - விட்டொழிந்து
போனல் மருங்குண்டு பொன்கொடுத்தி ருக்குதென்றீர் 940
ஆனல் வழக்குக் கழகலகாண் - ஈனத்
திருடன் உறவும் திடற்பூளைப் பஞ்சும் 941
கருடன்வாய்ப் புற்றரவும் கானப் - பெருமழையும்

அரும்பதவுரை : கண்ணி வரிசை (928) சுணையிலையா–ரோசமில்லையா. (931) போதம்–அறிவு: அயல்மாதர்–பிறர் மனைவி. (939) மட்டு–மதிப்பு (946) பூளைப் பஞ்சு–இலவம் பஞ்சு. புற்று அரவு–புற்றினில் இருக்கும் பாமபு.

ஈசனறி யச்சவத்துக் கிட்டஅலங் காரமும் 942
வேசையருக் கிட்டதுவும் மீளுமோ - தேசத்தில்
சென்றூழி யெல்லாம் சிறப்புமது வித்தையில்பொன் 943
ஒன்ருயி ரங்கோடி உண்டாமே - நன்றுநன்று

அவதானி கலங்கித் தெளிதல்

மின்னைவிட்டுப் போமென்று வேண்டினுர் பெண்ஆசை 944
என்னைவிட்டுப் போமோநான் ஏங்கினேன் - அன்னியரைப்
போலே மயங்கிநின்றேன் பூவையை முன்னடத்திக் 945
காலேறிச் சென்ருள் கடுங்கூனி - வேல்விழியாள்
ஏறிட்டுப் பார்ப்பாள்என் றெண்ணினேன் பார்க்கவில்லை 946
மாறிட்டு நானும் வழிக்கொண்டேன் - தேறஇடம்
இல்லையே நம்மிடவூர் எந்தத் திசையோஎன் 947
வல்லி இருப்பெவ் வகையாச்சோ - சொல்லிநம்மை
மெட்டுக் கெடுக்க விரட்டிவிட்ட கூனிஇனிப் 948
பட்டுக் கிடக்கஅறம் பாடுவமா - கெட்ட
நினைவுகொண்டு சீரழிந்து நின்ருேமி தெல்லாம் 949
கனவுகண்டோம் என்றுமனம் கன்றிப் - பனிமொழியாள்
நாக சுனைநீங்கி நாகசுனை நீராடி 950
நாகலிங்கர் பாதமலர் நான்பணிந்து - தேகமெலாம்

கோவில் வழிபாடு

பூரித்து நிற்கையிலோர் பூரண சந்திரனைச் 951
சூரியர்கள் பன்னிருவர் சூழ்ந்ததுபோல் - சேர்குழையில்
வண்டேறு நாகீசர் மார்பில் பதக்கனென்று 952
கண்டேனென் கண்கள் களிகூர்ந்தேன் - பண்டுநான்
பூமிமுற்றும் சுற்றியிது போல்கண்ட தில்லைமுத்துச் 953
சாமிபட்ட ரேவிவரம் சாற்றுமென்றேன் - நேமிதொட்டு
மாலையழைத் தோர்சிந்து மன்னவனை வென்றிதிரு 954
மாலைநிக ராகமுக வைக்குள்வந்தோன் - கோலரத்னப்
பைம்பொன் மகுடபதி பாண்டிநாட் டாதிபதி 955
செம்பிநா டாளவந்த சேதுபதி - அம்புவிக்குள்

அரும்பதவுரை : கண்ணி வரிசை (945) காலேறி-காலால் நடந்து சென்று (945) மாறிவிட்டு-திரும்பி. வழிகொண்டேன்-புறப்பட்டுச் சென்றேன் (948) மெட்டு-மதிப்பு; (951) குழை-காது.

வீமனிகர் முத்து விஜய நாதசிவ 956
சாமியிட்ட பொற்பதக்கன் தான்காணும் - சாமி இது
மட்டுமோ தந்தார் மதிச்சடையான் பங்கில்ளளர் 957
கட்டழகிக் கும்மகர கண்டியிட்டார் - கிட்டப்போய்
பாருமென்ருர் பார்த்திப் பதக்கனிட்ட மன்னவனே 958
தாரணிக்கெல் லாமரசன் தானென்று - சீராகக்
கொண்டாடி நிற்கையிலோர் கோலமணி மண்டபத்
தைக் 959
கண்டிதெவர் செய்தபணி காணென்றேன் - மண்டலத்தில்
ஈதறியார் உண்டோநீர் ஏதறியோம் என்றீர்காண் 960
சேதுபுவீ காக்கும் ஜெகராசன் - மாதுபதி
தாதுபதி கோடி தளபதிமுத் துச்செல்லச் 961
சேதுபவி அன்புடனே செய்துவைத்த ஜோதிமணி
மண்டபங்காண் என்ருர் மகாரா ஜனைநினைத்துக் 962
கொண்டொருவெண் பாப்புகழ்ந்து கூறினேன் - திண்டு
முண்டுச்

இழந்த பொருளுக்கு இரங்கல்

சண்டாளிக் கிட்ட தனத்தையெலாம் இப்படியோர் 963
மண்டபத்தைக் கட்டித்தான் வைத்தோமா! - கண்டமட்டும்
சிங்காரக் கோபுரத்தைச் செய்தோமோ ! சந்நிதிமுன் 964
மங்காமல் தேர்சமைத்து வைத்தோமே ! - இங்கென்று
நொந்தேன் வடதிசையை நோக்கினேன் ஊர்நாடி 965
வந்தேனங் கேயோர் மனங்கொண்டேன் - அந்தோ
இனிக்கோடி ஜென்மம் எடுத்தாலும் பாவம் 966
பினுக்கோடிப் பேருமா பேராத் - தனுக்கோடி
ஆடிவந்தால் தீருமென்றே அன்றே வழிக்கொண்டு 967
வாடிவந்தேன் ஐயர் மடத்தருகே - நாடிவரும்
பாதைஎதி ரேயிரண்டு பல்லக்கின் மேல்கனகச் 968
சோதிமணி ஆபரணத் தோற்றமாய் - ஆதரவாய்
மைத்துனனும் மைத்துனனும் மானவவ தானியிரு 969
வித்வசனர் வந்தெதிரே மேவினுர் - அத்தருணம்

அரும்பதவுரை : கண்ணி வரிசை : (958) மதிச் சடையான்-சந்திரனைச் சடையில் தாங்கும் சிவபிரான். (959) கண்டிதெவர்-கண்டு இதை எவா (960) சேதுபுவி-சேதுநாடு. (964) சமைத்து-செய்து. (966) பினுக் கோடி-பின்னுக்கு ஓடி. பேருமோ-திரும்புமா.

யாவரென்றேன் கூடவந்தோர் ஆதி முதுகுளத்தூர் 970
மேவுவடி வேலனருள் மேவிவளர் ! நாவலவ

தீர வவதானம் செய்சரவ ணப்பெருமாள் 971
பேரனென வந்த பிரபலவான் - சாரம்

தரும்துவாத் ரிம்சதாவ தானிபுல வோர்யா 972
வரும்துதிக்கும் பூங்கணைவில் மாரன் - திருந்துமெழில்

நாடு புகழ்சரவ ணப்பெருமா ளுங்கலைமான் 973
தேடுமவர் மைத்துனசி ரோன்மணியாம் - சோடசவ

தானவே லாயுதமா சற்குண னும் என்றுரைத்தார் 974
நானுமுட னேயவர்பால் நண்ணியே - தானிருகை

ஏந்தியா சீர்வாதம் என்றேன் அவர்கள்வெகு 975
சாந்தமுடன் தெண்டன் சமர்ப்பித்தார் - சார்ந்துநீர்

எங்கிருந்து வாரீர் இயானும்அவ தானியென்றேன் 976
அங்குவரு வாரும்அவ தானியரே - எங்குமுமைச்

சொல்லத் தெரிந்திருப்போம் தோன்றவெதிர்
கண்டதினம் 977
நல்ல சுபதினங்காண் நாவலரே - தொல்லுலகம்

எங்கும் புரக்கும் இராஜேந்தி ரன்முகவைச் 978
சிங்கம் சிவசாமி சேதுபதி - எங்கோன்மேல்

சாற்றும்வருக் கக்கோவைத் தண்தமிழும் பாடிஅரங்கு 979
ஏற்றிஅவ தானமும்செய் தேத்திஞேம் - தோற்றமுள்ள

தண்டமிழ்க்கை யாயிரம்பொன் சாதுராச்
சாலுவைபொன் 980
கண்டைஇட்ட சோமன் கடுக்கன்மணிக் - கண்டியொன்று

தந்தான் பதக்கஞென்று தந்தான் இருசிவிகை 981
தந்தான்கை யால்சிவிகை தாங்கிஞன் - சுந்தரக்கைத்

தாளம் முழங்கத் தவுல்முழங்கப் பேரிகைஎக் 982
காளம் முழங்கடங் காமுழங்க - வாள்வேந்தன்

கல்விப் பயிர்தழைக்கக் காசினியெல் லாந்துதிக்கச் 983
செல்வத் திருப்பவனி செய்துவைத்தான் - வில்விஜயன்

அரும்பதவுரை : கண்ணி வரிசை: (975) தெண்டன்-வணக்கம், (977) தொல்-பழமை (982) எக்காளம்-வாத்ய வகையில் ஒன்று.

ஞான விஜயரகு நாதசிவ சாமிஅவ 984
தானியார் என்றுபெயர் தான்கொடுத்தான் - மாநிலத்தில்
கார்கொடுத்தார் போலக் கதிர்மணிச்சம் பாவிளையும் 985
ஊர்கொடுத்தான் கீர்த்தியைஉண் டாக்கினுன் -
பேர்படைத்த
பாவலரே என்றிரண்டு பாவலரும் என்முகம்பார்த்து 986
ஆவலுடன் சொன்னுர் அதிசயித்தேன் - நாவால்
எமக்கும் தியாகமுண்டோ என்றேன் அடடா '987
உமக்குக் கிடையாத துண்டோ - சமர்த்தன்வெகு
தாராளன் எங்கள்சிவ சாமிமக ராஜன்முல்லைத் 988
தாராளன் கையால் தருங்கொடை - நேராமோ
க்ன்னன் கொடையுமொரு கால்கொடையாம்
வெள்ளிமலை 989
மன்னன் கொடையுமரை மாதவரே - தன்னுலே
ஆல்பழுத்தால் பட்சி அறியாதோ தாகித்தோர் 990
சாப்பிடவா விக்குத் தடையுண்டோ - போய்ப்பாரும்

அவதானி சேதுபதியை அணுகத் துணிதல்

என்றூர் அடையாளம் என்னவென்றேன் எங்கோமான் 991
மன்றல்முர சார்க்குமணி வாயிலிலே - வென்றிகொண்ட
மீனக் கொடியும்நெடு விற்கொடியும் மற்கொடிய 992
கானப் புலிக்கொடியும் கைகுவித்து - வானத்தைத்
தொட்ட கருடத் துவசத்தைச் சூழ்ந்துநித்தம் 993
வட்டமிட்டுச் சுற்றி வலஞ்செய்யும் - அட்டதிசை
மன்னர் திரண்டுகொண்டு வந்தளந்து வைத்தகப்பம் 994
சொன்னமக மேருவைப்போல் தோன்றிநிற்கும்
மின்னுமழைக்
கொண்டல் வழங்கிவரும் கொள்கைபோல் ஓயாமல் 995
தண்டமிழ்ப்பா வாணர் தமிழ்முழங்கும் - வண்டொலிபோல்
சங்கொலிபோல் கஞ்சநா தம்போல் முழவொலிபோல் 996
இங்கிதசங் கீத இசைமுழங்கும் - பொங்குதிரை
வட்ட நெடுங்கடல்போல் மாருக் கொடைகொடுக்கத் 997
தொட்ட முரசுத் தொனிமுழங்கும் - இட்ட

அரும்பதவுரை : கண்ணிவரிசை; 985. கார் - மழை; கீர்த்தி - புகழ்; 989. கன்னன்-கர்ணன்; 990. ஆல் - ஆலமரம்; வாவி-தடாகம்.

அடையாளம் எல்லாம் அறிந்துசென்ருல் அங்கே 998
கிடையாத துண்டோமெய்க் கீர்த்தி - உடையான்பால்

என்றுசொல்லிச் சென்ருர் இதுநல்ல வேளையென்று 999
சென்றேன் அவ்வேசையையும் சிந்தித்தேன் - அன்றுநான்

மருதூர் வீட்டுச் செல்லுதல்

ஆனை இருந்தே அசைந்தாடும் வாசலிலே 1000
பூனை இருந்து புலம்புமே - மேன்மைப்

புலியிருந்த கூட்டிலே போயேறிச் சின்ன 1001
எலியிருந்து சத்தம் இடுமே - வலியவாய்

வைச்சுநான் முத்தமிட்ட வாயிலே மற்ருெருவன் 1002
எச்சில்பட முத்தம் இடுவானே - கட்சிகட்டும்

சல்லியிந்தப் பார்ப்பான் சனியன் கழிந்ததென்று 1003
சொல்லிமுத்தன் வந்து சுகிப்பானே - வல்லியுடன்

தூங்குமஞ்சத் தேறும் சுகத்தை நினைத்து நினைத்து 1004
ஏங்கிப் பெருமூச் சிடுவாளோ - பாங்கியரும்

தேடுவார் கூனல் சிறுக்கிமனம் கல்லுநம்மைக் 1005
கூடவொட்டாள் என்றசந்து குப்புற்று - வாடிப்

பரிகொடுத்த பக்கிரிபோல் பாய்மரக்கா கம்போல் 1006
எரிகொடுத்த சேட்டுமத்தில் ஈப்போல் - கருகியுடல்

ஆவிமிகச் சோரநடந் தன்னையெங்கள் நீலகண்டி 1007
கோவிலெதி ராகநின்று கும்பிட்டேன் - பாவனையாய்

பழைய வேதம் ஐயரைக் காண்டல்

ஆதிமுதல் புத்திசொன்ன ஐயரந்த வேளையிலே 1008
ஏதுகவைக் கோஎன் எதிர்வந்தார் - நீதக்

கடன்காரர் தம்மை எதிர் கண்டவரைப் போலே 1009
உடம்பாடி நின்றேன் ஒருபால் - நடந்துவந்து

நண்ணிக்கை கோத்து நயந்துமுது கைத்தடவிக் 1010
கண்ணுக்குக் கண்ணான காவலரே - எண்ணெய்க்

குடம்போல் அழகிருந்த கோலம்போய் நோஞ்சல் 1011
உடம்பானீர் ஏதென் றுரைத்தார் - நடந்த

அரும்பதவுரை : கண்ணிவரிசை; 1003. சல்லி - இழிவானவன்; 1007. நீலகண்டி - பார்வதி; 1009. உடம்பாடி - உடம் பெல்லாம் - நடுநடுங்கி. 1010. நயந்து - அன்புடன்.

கதையெலாம் சொல்லிநீர் கற்பித்த புத்தி 1012
அதையெலாம் கேளாத தாலே - கெதிபோய்
உருவழிந்தேன் கையிலே உள்ளபொரு ளும்போய் 1013
அருமையும் போனதென்றேன் ஐயா - பெரியமத

வேதம் ஐயர் தேறுதல்மொழி

யானைக்கும் உண்டே அமடு நடக்கிறகால் 1014
தானிடறும் நீரேன் சலிக்கிறீர் - மேனுளில்
விட்டகுறை காணும் விதிவசம் காணுமக்கு 1015
மட்டுமல்லக் காமன் மலர்க்கணையால் - தட்டழிந்து
சங்கரன் தீப் பற்றிஞன் சந்திரனும் அச்சழிந்தான் 1016
இங்கிநீர் ஏங்குவதில் யாதுபயன் ? - சங்கீத
வித்தைக் களஞ்சியமே வேதக் கடலேநீர் 1017
இத்தருண மேஉம தூர்க் கேகுங்காண் - உத்தமரே
கைப்பொருள் தன்னிலே மெய்ப்பொருள்கல்வியென்று 1018
அப்புறம் போனுர் அதன்பின்பு - தப்பாமல்

முகவையை நோக்கி நடத்தல்

பூனை இடம்பாயப் போத்து வலம்பாய 1019
நான்நடந்தேன் தென்முகவை நாடினேன் - ஆனகலி
காலம்நமை விட்டுக் கடந்ததினி மேல்நல்ல 1020
காலமென்று வந்தேன் கடைத்தெருவில் - சோலைமலர்க்

நாட்டுவளம்

கொந்தாரும் மாமரத்துக் கொம்பெல்லாம் வானுலக 1021
மந்தாரக் கொம்பை வளைத்துநிற்க - இந்தநிலத்து
உள்ளானைக் கொம்பெலாம் உம்பருல கத்துலவும் 1022
வெள்ளானைக் கொம்புக்கு மேற்பாயக் - கள்ளுண்ணும்
வண்டு வழிகாட்ட வள்ளை செவிகாட்டக் 1023
கொண்டல் கரிய குழல்காட்டத் - துண்டுதுண்டாய்க்
கஞ்சம் முகங்காட்டக் கமுகு களங்காட்டக் 1024
கொஞ்ச இடையைக் கொடிகாட்ட - மிஞ்சுமலர்க்
காந்தள் கரங்காட்டக் கதலி துடைகாட்ட 1025
ஏந்தும் முலையைஇள நீர்காட்டச் - சேர்ந்த

அரும்பதவுரை : கண்ணிவரிசை; 1018. தப்பாமல் - தவருமல்; 1031. கொந்தாரும் - பூங்கொத்து நிறைந்த; 1022. உம்பர் - தேவர் வெள்ளானை - ஐராவதம்; 1024. கஞ்சம் - தாமரை; கமுகு - பாக்கு 1025. கதலி - வாழை.

பவளமிதழ் காட்டமுத்துப் பல்வரிசை காட்டக் 1026
கவியும்எள்ளுப் பூநாசி காட்ட - உவகையாய்
ஆலுதரம் காட்ட வரால்கணைக்கால் காட்டவுள்ளம் 1027
காலை அனிச்சமலர் காட்டவே - கோலமெல்லாம்
சித்திரம தாய்ப்பூமா தேவிவடி வாகுமென்று 1028
புத்தியினுல் கண்டுமனம் பூரித்தேன் - பத்தியாய்க்

நகர்ச் சிறப்பு

கொத்தளக்கல் கோட்டைகளும் கோலமணி மேடை
களும் 1029
முத்தளக்கும் வாசல் முகப்புகளும் - சித்தரித்த
மாணிக்கக் கொட்டகையும் மாளிகையும் மண்டபமும் 1030
ஆணிப்பொன் வீதி அழகுகளும் - காணும்
அமரா பதிக்கும் அளகா புரிக்கும் 1031
சமமாய் அழகு தயங்கக் - கமலமான்
சேர்க்கையுள்ள வேந்தன் சிவசாமி சேதுபதி 1032
காக்கும் முகவைநகர் கண்டுகொண்டேன் - பார்க்குளன்பர்
பூஜிக்கும் மூலப் பொருளைநெடும் பொற்கோட்டை 1033
வாசற் கணபதியை வாழ்த்தினேன் - ஆசையுள்ளம்
கொண்டேன்நான் உட்புகுந்தேன் கோமான்
அரண்மனையும் 1034
கண்டேன் மிகவும் களிகூர்ந்தேன் - வெண்டிரையால்
முத்தம் கொழிக்கும் முகவூர் அணிகண்டேன் 1035
சித்தம் களிகூர்ந்தேன் தென்புறத்தில் - வைத்த
படித்துறையில் மேவிப் படிந்துநீ ராடி 1036
அடுத்து நியமமுடித் தன்பாய்ப் - படித்துறையை

விசுவநாதர் கோயில் கண்டு வணங்கல்

நானேறி னேன்விசுவ் நாதர்திருக் கோவிலையும் 1037
தானேயோர் மூன்று தரஞ்சுற்றி - வானுலவும்
கம்பத்தின் முன்னின்று கண்டேன்கோ தண்டமெனச் 1038
செம்பொற் கிரிவளைத்த சேவகனை - நம்புமன்பர்
உள்ளத் திருக்கும் உரவோன் உருவிலான் 1039
கள்ளத்தை மாற்றும்நெற்றிக் கண்ணவனை - வள்ளமுலைப்

அரும்பதவுரை : 'கண்ணிவரிசை; 1026. உவகையாய் - மகிழ்ச்சியாக; 1027. ஆல் - ஆலமரம்; உதரம் - வயிறு; 1031. அமராபதி - இந்திரன் வாழும் ஊர்; அளகாபுரி - குபேரன் வாழும் ஊர். 1039. உரவோன் - வலிமை யடையவன்.

பாலுண்ட பிள்ளை பதிகத்துக் காப்பிறவி 1040
மேலுண்டோ இல்லையென்ற வேதியனைச் - சேலுண்ட
கண்மணியைத் தென்னவர்கோன் கண்மணியை
நன்மணியைப் 1041
பெண்மணியை மாலையிட்ட பெம்மானை - வெண்மதியை
ஆதித் தனைவிழியென் றுனையன்று நால்வருக்குப் 1042
போதித்த ஞானபரி பூரணனை - நீதிநெறித்
தன்மனத்தான் அத்தானைத் தண்கடுக்கைத் தாரானை 1043
வன்மனத்தார் கண்ணேதிரே வாரானை - என்மனத்துள்
வந்தானைத் தேவர்குடி வாழ்வேறச் சூரைவென்று 1044
தந்தானை முந்தானை தந்தானைச் - செந்தேனூர்
கந்தமலர் சூழ்முகவை காசியிலும் வாசியென்று 1045
வந்து முளைத்த மறைக்கொழுந்தைச் - சிந்தைமகிழ்ந்து
எங்கோன் சிவசாமி இந்திரன்செய் பூசனைக்காச் 1046
செங்கோல் கொடுத்த சிவக்கொழுந்தைப் - பொங்காழி
மண்டலத்தோர் வாழ்த்துமதி மந்திரிசா மாவையர் 1047
தொண்டுசெய்ய வந்த சுடர்விளக்கைக் - கொண்டமனப்
பத்திக்குள் ளாக்கிப் பரவும் பழவடியார் 1048
புத்திக்குள் தித்திக்கும் புத்தமுதை - முத்தமிழால்
சாற்றும்உயர் கல்வித் தலைவர்பிற விக்கடலை 1049
மாற்றும் பெருங்கருணை வாரிதியைப் - போற்றிமலர்
அள்ளி அருச்சித் தடிபணிந்து தெய்வானை 1050
வள்ளிமண வாளன் மலர்ப்பதத்தை - உள்ளம்வைத்துத்
துண்டப் பிறையணிந்த சொக்கேசர் ஆலயத்தைக் 1051
கண்டுமணி வாசற் கணபதியைத் - தெண்டனிட்டுக்
கோவிலுக்குள் சென்று கொடிமரத்தைச் சுற்றிநந்தி 1052
தேவர் பதத்தைத் தெரிசித்துக் - கூவிநின்று
நாதமறை தேடரிய நாதர்உமை நாதர்சொக்க 1053
நாதரிரு பாதமலர் நான்பணிந்து - மோதுகணை
காதண்ட வாங்கிக்,கதிர்மகன்மூத் தோனைவென்ற 1054
கோதண்ட ராகவனைக் கும்பிட்டு - வீதியிலே

அரும்பதவுரை : கண்ணிவரிசை ; 1041. ஆதித்தன் - சூரியன்; 1042. நீதி நெறி - தன்மனத்தான் அத்தான் - தர்மரின் அத்தானுன-கிருஷ்ணன்; 1043. சூரை-சூரபத்துமன்; வென்று தந்தானை முந்தானை தந்தானை - முருகன், விஞயகன், சிவபெருமான் ஆகியோரை.

சத்திரச் சாப்பாடு

வந்தேன் சிவபூஜை மாருத மீனாட்சி 1055
சுந்தரக் குருக்களெதிர் தோன்றினர் - எந்தவூர்
ஐயரே என்றார்நான் ஆடானை யூரென்பேர் 1056
செய்யஅவ தானியென்று செப்பினேன் - ஐயரே
வாருமென்று சந்நிதிமுன் வாய்த்தஅன்ன சத்திரத்தில் 1057
சேருமென்றார் யார்சத் திரனென்றேன் - பாராள
வந்தமுத்து வீராயி ராணி மகராசி 1058
தந்தசிவ சாமியன்ன சத்திரங்காண் - வந்தோரைச்
சேய்போல அன்புவைத்துச் சீனிதேன் பாலுடனே 1059
தாய்போல் அமுதூட்டும் சத்திரங்காண் - தூயவரே
பாருமென்றார் உள்ளேபோய்ப் பார்த்தேன்நான்
அங்கிருந்தோர் 1060
வாருமென்றார் உள்ள வளத்தையெல்லாம் - பார்த்தங்கு
வானாவி னாலும் வழுத்தஅரி தாகிலதை 1061
நானாவி னால்நவிலக் கூடுமோ - ஆனாலும்
அள்ளிமலை போல்குவித்த அன்னமலை யைக்கண்டு 1062
வெள்ளிமலை இன்னம்வெள்ளை வேண்டிநிற்கும் - உள்ளபடி
பொன்னம் பருப்பனமேல் போடும் பருப்பைக்கண்டு 1063
இன்னம் பருப்போமென் றெண்ணிநிற்கும் என்ன
சொல்வேன்
பச்சடியின் வாசனையைப் பார்த்துத்தே வேந்திரனும் 1064
இச்சைவைத்து வந்திருகை ஏந்திநிற்பான் - வைச்சபால்
பாயாசங் கண்ணாலே பார்த்தாலும் வெய்யபசி 1065
ஆயாசம் எல்லாம் அகன்றோடும் - தூயபொடித்
தூவலுக் காசைவைத்துச் சூழ்ந்தமுதம் வாரியுண்ட 1066
தேவரும்சி பார்சு செய்துநிற்பர் - மேவுதில்லை
ஆட்டுக்கு வாய்த்தானும் ஆயனும்வே தக்கோனும் 1067
கூட்டுக் கறிக்குவந்து கூடுவார் - தேட்டமுடன்
வைத்த ரசங்கண்டோர் வானத் தமுதிரசம் 1068
கைத்தரசம் என்றே கருதுவார் - சத்திரத்தில்

அரும்பதவுரை : கண்ணிவரிசை; 1055. செப்பினேன் - சொன்னேன்; 1058. சேய் - குழந்தை; தூயவர் - பரிசுத்தமானவர்; 1060. வான்நாவினாலும் - தேவர்கள் நாவால்; வழுத்த - புகழ; 1064. வெய்யபசி - கொடிய பசி. 1066. ஆட்டுக்கு வாய்த்தான் - ஆடலுக்கே தோன்றிய சிவபெருமான்; கைத்தரசம் - கசப்பான ரசம்.

ஆக்கும் அமுதையுண் டார்க்குமனம் இன்ன
மொன்றை 1069
நோக்குமோ கன்னல்நுகர்ந் தோர்வேம்பை - நோக்குவரோ
குன்ரு மதுரம் கொழிக்கும்ப லாச்சுளையைத் 1070
தின்ருல் பிறவிதொறும் தித்திக்கும் - இன்றைக்குப்
பந்திவைத்த மாங்கனிபோல் பண்டிருந்தால்
சங்கரனைத் 1071
தொந்திவயிற் றைந்துகரன் சுற்றிவரான் - செந்தேறல்
ஊறுகத லிக்கனியை உண்டால் நரைதிரையும் 1072
மாறுமென்ருல் வெம்பசியை வைக்குமோ - நூறுவிதம்
வைத்த பலகார வர்க்கவகை யித்தனையென்று 1073
அத்தனையும் சொல்லஎன்ருல் ஆகுமோ - நித்தநித்தம்
வானுறு போல்கையால் வாரியிட்ட நெய்யாரும் 1174
தேனுறு பாலாறும் சேர்ந்திருக்கும் - மேன்மைத்
தனுக்கோடி ஆடியங்கோன் தன்முகங் கண்ட 1075
மனுக்கோடி கோடியாய் வந்து - தினப்படியே
பந்திவைத்துப் போசனஞ்செய் பண்புகண்டேன்
என்வயிறுங் 1076
தொந்திவைக்க உண்டு சுகங்கண்டேன் - வந்தவர்கள்
வெம்பசிதீர்ப் போர்மேல் விசாரணைசெய் வோர்மணியம் 1077
சம்புருதி செய்துவரும் தாட்டீகர் - அன்புடனே
தந்தார்தாம் பூலம் தரித்தேன் சிவசாமி 1078
இந்திரனைக் காணமனத் தெண்ணினேன் - வந்து

அரண்மனை கண்டு சென்றமை

திருவளரும் வீதிவழி சென்றேன் அநேக 1079
விருதுகளும் மேன்முகப் புவீடும் - வரிசையாய்
உப்பரிகை மேடைகளும் உச்சமணிச் சாளரமும் 1080
புற்பரா கத்தால் புரிசைகளும் - செப்பமுள்ள
வெண் தரளப் பந்தல் விரித்தமணிக் கோபுரமும் 1081
மண்டபமும் தூண்டா மணிவிளக்கும் - கொண்டிருக்கும்
சிங்காரங் கண்டேன் சிவசாமி சேதுபதி 1082
எங்கோன் அரண்மனையி தென்றறிந்தேன் - அங்கேபொன்

அரும்பதவுரை : கண்ணிவரிசை; 1069. கன்னல் - கரும்பு; குன்ரு மதுரம் - குறையாத இனிப்பு; 1071. தேறல் - தேன்; கதலிக்கனி-வாழைப்பழம்; 1074.:மனு-மக்கள்; திருவளரும் - லக்ஷ்மிகரமான.

கோடுண்டு சொர்னக் குடங்கொண் டிருக்கும்
மெத்தை 1083
வீடுகண்டேன் சுந்தரவி லாசமென்று - நாடினேன்
சொற்கோட்டை இல்லாத் துரைகளெல்லாம்
காத்துநிற்கும் 1084
கற்கோட்டை வாசல் கடந்துவந்தேன் - நிற்கும்
குதிரைலா யங்கடந்தேன் குஞ்சரங்கள் நிற்கும் 1085
புதுமைகண்டேன் அப்புறத்தில் போனேன் - எதிரேயோர்
ஒட்டகையைக் கண்டுகிழட் டோரியோ என்றுமனம் 1086
தட்டழிந்து பின்பு தயிரியமாய் - கட்டுமணி
வாசல் கதவோரம் வந்தேன்நீர் ஆர்என்ருர் 1087
ஆசுகவி சோடசவ தானியாம் - தேசுடன்வந்
தோமென்றேன் ஆனுல் உமக்குத் தடையேது 1088
போமென்ருர் நல்லதென்று போயினேன் - பூமிமேல்

சிவசாமி சேதுபதி கொலுச் சிறப்பு

தங்கத் தகட்டுத் தளந்திருத்தி நாலணியாய்த் 1089
துங்கமா ணிக்கரத்னத் தூண்நிறுத்திப் - பொங்குகதிர்ப்
பச்சைரத்னத் தாலே பரும்போ திகைசேர்த்து 1090
வச்சிரத்தால் உத்திரங்கள் வைத்திணக்கி - மிச்சமாய்
நீலரத்னக் கையேற்றி நித்திலத்தை வைத்தசொர்ணக் 1091
கோலத் தகடு கொடுவேய்ந்து - மேலாக
ஒன்பதுரத் னத்தையொன்ருய் உம்மிசம்
செய்தமைத்த 1092
செம்பொற் கலசச் சிகரம்வைத்துக் - கம்பிகொண்டு
நித்திலத்தைக் கோத்த நெடுஞ்சாலர்
வைத்திணைத்துத் 1093
தைத்தமேல் கட்டியொன்று தான்கட்டிக் - கொத்துமலர்
மாலையிட்டு முத்துமணி மாலையிட்டுச் சித்திரப்பொன் 1094
வேலையிட்டுப் பொற்படங்கள் மேலிட்டு - மேலுலகத்
தேவரம்பை வந்துநடம் செய்வதுபோல் செங்கமலப் 1095
பூவரம்பைப் பாவைநடம் பூண்டுசெய்யக் - கோவையிட்டுத்
தேவேந் திரனரசு செய்யுமணி மண்டபம்போல் 1096
மேவுமணி மங்களவி லாசத்தில் - பூவிருக்கும்

அரும்பதவுரை : *கன்னிவரிசை;* 1083. சொர்னக்குடம் - தங்கக் கலசம்; 1088. துங்கம் - மாசுமருவற்ற; 1089. இணக்கி - இணைத்து; 1090. நித்திலம் -முத்து.

பொன்னும் திருவிருக்கப் பூண்டதுபோல்
சோதிரத்னம் ,1097
மின்னும் தவிசு விரித்திரிக்க - மன்னுகதிர்
ஆதித்தர் ஆயிரம்வந் தன்புவைத்துக்
காண்பதுபோல் 1098
சோதிப் பெருவிளக்கம் சூழ்ந்திருக்க - ஓதுபகல்
வர்த்திமதி தன்களங்கம் மாற்றவே தூண்டுதல்போல் 1099
பத்திமத்தி யாகஇரு பால்விளக்க - மொய்த்தமன்னர்
தஞ்சம்பார் வேந்தாநீ தான்பார்கண் பாரென்று 1100
குஞ்சப்பா வாடைகரங் கொண்டுநிற்க - நெஞ்சிலுனது
ஆற்றலறி யாதுபகை ஆனேம் சிறைவிடென்று 1101
வேற்றரசர் வெண்கவரி வீசிநிற்கப் - போற்றும்பிர
தாபாசுத் க்ரீபா தரியலர்கோ பாபதும 1102
நாபாபூ பாரநர பாலகுல - தீபா
கனதனகு பேராச காயசம்ர தாயா 1103
தனதான கண்ணு சனகா - வனதான
சோமா பரிதிகுல சுந்தரா முல்லைமலர்த் 1104
தாமாசங் ராமா தனுராமா -வீமசெய
சத்ருசங் காரா சமரரண கம்பீரா 1105
மித்ருபரி பாலனு வில்விஜயா - மொய்த்துவரு
மைக்கால முக்கடம ழைப்புனல்கொ ழித்துலவு 1106
கைக்கரிமி குத்திடுக திப்பரிகள் - திக்கரசர்
கப்பமிட மிக்கமகிழ் கைப்பதும வச்சிரதா
மப்புயவி லட்சணம கத்துவசு - கற்சுதசந்
தானசந்தி ராசவுந்த ராபுரந்த ராநிறைந்த 1107
ஞானதந்தி ராசிறந்த ராமச்சந்த்ரர - மேன்மைதரு
மேதினியை ஆளுமது வேந்தா விஜயாகு 1108
நாத சிவசாமி ராஜேந்த்ரா - நீதிநெறி
வேந்தா பராக்கு விஜயா பராக்கென்று 1109
சேர்ந்தொருபால் கட்டியங்கள் செபிபிநிற்க - வாய்ந்தகஞ்ச
மாதுபதி யாகவளர் மார்பன் சிவசாமி 1110
சேதுபதி சிங்கா தனத்திருக்க - ஆதரவாய்

அருமபதவுரை : கண்ணிவரிசை; 1086. தவிசு - கம்பளம்; 1088. மொய்த்த - சூழ்ந்த. 1093. பரிதிகுலம் - சூரிய குலம்: தாமம் - மாலை. 1094. சத்ரு - எதிரி; மித்ரு - நண்பர்; 1065. மைக்கால முக்கட மழைப்புனல் கொதித்து உலவு கைக்கரி - கறுத்த பருவகால மழை போன்ற மூன்று மதத்தை. கொட்டித் திரியும் துதிக்கையைக் கொண்டயானை.

இந்திரன்போல் வீற்றிருக்கும் எங்கோன் மனதுமகிழ் 1111
மந்திரிசா மாவையர் வந்திருக்கச் - சுந்தரம்சேர்
தானு பதிகள் தான தந்திரிகள் மந்திரிகள் 1112
சேனு பதிகள்வந்து சேர்ந்திருக்க - மாநாட்டுப்
பூமன்னர் கட்டுதிறை பொன்மலைபோ லேகுவிய 1113
மாமறையோ ஆசீர்வதித்திருக்கத் - தாமவேல்
போர்த்தலைவர் சிங்கங்கள் போல்வந்தெங்
கோன்சமயம் 1114
பார்த்தெதிரே நின்று படைதிரட்டி - ஆர்த்தகலிங்
கத்தரச ரைப்பிடித்துக் கட்டவோ கண்டுசீ 1115
னத்தரசை வென்றுகொடி நாட்டவோ - மட்டில்லா
வங்கர்தமை வென்றுதிரை வாங்கவோ
வந்துதொழாக் 1116
கொங்கர்புவி எங்கும்கைக் கொள்ளவோ - எங்கள்தமைக்
காவையா என்றவரைக் காக்குமன்னு உத்தரவு 1117
தாவையா என்றெதிரே சாற்றிநிற்கத் - தாவுமணித்
தங்கப் பிரம்புகொண்டு தாள்பணியா மண்டலிகர் 1118
அங்கத்தை வாட்டும் அரிக்காரர் - அங்கங்கே
கொங்கரை யாயிரம்பொன் கொட்டினுர்
கோடிசெம்பொன் 1119
கங்கர்கொண்டு வந்துதிறை கட்டினுர் - மங்களஞ்சேர்
சிங்களத்தார் பத்துலட்சம் செம்பொன்நிறுத்
துக்கொடுத்தார் 1120
வங்களத்தார் மாணிக்க மாலைதந்தார் - மங்காமல்
அச்சியர் அச்சிமட்டம் ஆயிரந்தந் தார்துளுர் 1121
பச்சையிலே பத்துப் படியளந்தார் - மச்சர்
மலையாமல் கோடிபரி வந்துதந்தார் வங்கர் 1122
கொலையானை நூறு கொடுத்தார் - சலநிதிசூழ்
மண்பார் புரக்கும் மணிமகுட வேந்தாநின் 1123
கண்பார்ப்பாய் என்றெதிரே காட்டிநிற்கப் - பண்பாய்
இணங்கமழு வாளேந்தி ஈட்டிகொடு தும்பை 1124
மணங்கமழும் வீரர் வளையக் - குணங்காத

அரும்பதவுரை ; கண்ணிவரிசை; 1100. எங்கோன் - எமது அரசன்; தளதந்திரிகள் - தளபதிகள்; தாமவேல் - மாலைசூடிய வேலாயுதம்; 1010. சலநிதி - கடல்.

அம்புவில்நா ணேகொண் டசையவரும் மன்னர்சிலர் 1125
அம்புவிநாணேந்தி அடர்ந்துநிற்கச் - செம்பொன்
சிறைநாட்டொன்ஞர்வணங்கும் சென்னியின்மேல்
மின்ஞர் 1126
முறைநாட்டி யந்தான் முழங்க - நிறையொலிசேர்
வீரியங்கொள் மும்முரசம் வேலையொலி
போல்முழங்கத் 1127
தூரியங்கள் மேளத் தொனிமுழங்கப் - பாரிலுள
துங்கப் புரவலர் சோதிமுடி மீதுசிலர் 1128
தங்கப் பிரம்புகொண்டு சாடிநிற்கச் - செங்கண்மால்
எங்கோன் சிவசாமி இந்திரன்போல் வீற்றிருக்கும் 1129
சிங்காரம் கண்டு தெரிசித்தேன் - அங்கோநான்

அவதானி பா அரங்கேற்றல்

மங்களமென் ருசீர் வதித்திருகை யால்எலுமிச் 1130
சங்கனியும் கைக்கொடுத்துத் தானிருந்தேன் - துங்கமிகு
சத்துரு சங்காரா சங்கிராம கெம்பீரா 1131
சுத்தரண சூர துரந்தரா - மித்ருபரி
பாலா தருமபரி பாலஞ வெஞ்சமர 1132
கோலாக லாவீர கோதண்டா - மாலாவ
தாரா தவளமலர்த் தார தரளணித் 1133
தாரா உதார சவுந்தரா - வீராதேர்த்
தண்டாப்ர சண்டா சகலகுண சம்பஞ 1134
கண்டா மணியணி காண்டீபா - தொண்டர்பணி
தாணுபதம் போற்றிசெயும் தாய்முத்து வீராயி 1135
ராணிபெற்ற செல்வ நரபாலா - சேஞர்
மகபதிக்கு நேராக வந்துலகோர் வாழ்த்த 1136
முகவைநகர் காக்கும் முதல்வா - சகடிசையோர்
தாதாவாய் வந்தபரந் தாமா விஜயரகு 1137
நாத சிவசாமி ராஜேந்த்ரா - மாதவன்கை
காட்டுமுனம் சிந்தரசைக் கைக்கணையால் வென்று
புகழ் 1138
நாட்டும் சிவசாம ராஜேந்த்ரா - நீட்டியகை

அரும்பதவுரை: கண்ணிவரிசை; 1116. வேலை - கடல். சாடி - தாக்கி; 1121. மாலாவதாரா - திருமாலின் அவதாரமானவனே; 1124. தாணு - சிவன்; 1125. மகபதி - இந்திரன்.

ஊற்றுமத யானைலட்சம் ஒன்னார் திறைகொடுத்துப் 1139
போற்றும் சிவசாமி பூபாலா - சாற்றுமணி

வண்ணப் பரிதிகுல மன்னுதென் னுவென்று 1140
வண்ணப்பா வெண்பா மணிமாலை - பண்ணுகத்

தானகன்ன னுக்கெதிரே சர்க்கரைப் பந்தலின்மேல் 1141
தேன்மாரி பெய்த சிறப்புப்போல் - நானிதமாய்ப்

பாடிப்ர சங்கித்தேன் பண்ணுமவ தானமுறை 1142
நாடிப் பதினாறும் நான்செய்தேன் - கூடினபேர்

காளமே கம்போல் கவிபொழிந்த தால்இவனும் 1143
காளமே கப்புலவன் காணென்றார் - நீளுமனக்

கண்ணுல்எங் கோன்தெளிவாய்க் கண்டான்
அகத்தியற்கும் 1144
அண்ணுவி யாமென் றதிசயித்தான் - வண்ணமணிச்

பரிசில் பெற்றமை

சாதுராச் சோமனஅங்கி சாலுவைமா ணிக்கம்வைத்த 1145
மோதிரம்பொன் ஆழிமுத் துக்கடுக்கன் - சோதிமணி

முத்தாரம் கண்டி முருகுமத யானைபரி 1146
கொத்தாரம் தந்துபணம் கோடிதந்தான் - அத்தரொக்கம்

சம்பளந்தந் தான்தங்க தண்டிகைதந் தான்தயவாய் 1147
உம்பளந் தான்விளையும் ஊர்தந்தான் - அம்புவியாள்

மன்னன்முத்துச் செல்ல மகராஜன் வாய்த்தகொடைக் 1148
கன்னன்முத்து மாலை கழுத்திலிட்டான்-தென்னவனென்று

பூமிபுகழ் சற்கீர்த்தி பூண்டதிரு மால்ராம 1149
சாமிமன்னன் கண்ட சரந்தந்தான் - நேமமுள்ள

தன்மமனத் தான்குழந்தைச் சாமி பதக்கனிட்டான் 1150
வன்னிபூ லாறுரத்ன மாலைதந்தான் - எந்நாளும்

பாலாரும் சொல்லே பகருமகி பாலன்வெள்ளாப் 1151
பூலாறு முக்குறுணி பொன்தந்தான் - மாலாகத்

தாமோத ரன்களறிச் சாமியையா ராஜன்எங்கள் 1152
கோமான் கனகக் கொலுசுதந்தான் - மாமகிழ்வாய்க்

கொத்துச் சரப்பணியைக் கோனேரி நன்னகர்வாழ் . 1153
முத்துச் சுவாமி முகில்கொடுத்தான் - மொய்த்தகதிர்ச்

அரும்பதவுரை : கண்ணிவரிசை; 1129. தென்ன - பாண்டியா; 1120. தான - தர்ம; 1133. அண்ணுவி - ஆசிரியன்; 1134. ஆழி - மோதிரம்.

செங்கதிரோன் போலென் செவியில்மா ணிக்கமிரண்டு 1154
எங்கோன் இராமரா ஜேந்த்ரன் இட்டான் - செங்கையிடத்
தங்கமணிக் காப்புத் தருமன்எனப் பேர்படைத்த 1155
துங்கன் இராமசுவாமி தந்தான் - பொங்கமரில்
தீட்டுகணை பூட்டும் சிலைவிஜயன் வெங்தோணிக் 1156
கோட்டை மன்னன் தந்தான் குறுணிமுத்துத் -
தோட்டு மலர்
வாசமுல்லை மார்பன் வயித்தியனேங் தற்சாமி 1157
ராஜன்லயி ரக்கடுக்கன வாலுதந்தான் - வீசுகதிர்த்
திங்கள்அளா வுஞ்சோலை சேர்ந்துவளர் முத்துவயல் 1158
மங்கள சாமிவச்ர மாலைதந்தான் - பொங்குகொடைக்
கன்னன் துரைச்சாமி காண்டீபன் என்செவிக்குச் 1159
சொன்ன மணிமுருகுத் தொங்கலிட்டான் -
தென்னவன்போல்
வங்தோன் படைவெட்டி வன்னிகுழங்தைச்சாமி 1160
தந்தான் குதிரை தரந்தெரிந்தான் - வங்தேறும்
வேளையொத்த ரூபன்மதி மேவுசெக வீரவன்னி 1161
பாளையத்துச் சாமிதந்தான் பல்லக்கு - நீள்புவிக்குள்
சுந்தரஞ்சேர் செல்வத் துரைசாமா வையமதி 1162
மந்திரியோர் மாணிக்க மாலைதந்தான் - முந்துகொடைக்
கன்னன்எங் கோன்சமுகக் கச்சேரி யார்களெலாம் 1163
பொன்மயமாய் ஆபரணம் பூட்டினர் - மன்னுகதிர்ச்
சீத மதிமுகத்தார் சீமைக்கச் சேரியார் 1164
ஆதரவாய்த் தந்தார்கள் ஆயிரம்பொன - சேதுபதி
காவலவ னுக்கடப்பம் கட்டுவோர் எல்லோரும் 1165
ஆவலுடன் தந்தார்நூ ருணிமுத்து - காவணைத்தும்
வந்தாரும் தாலுகா மாகாணத் தார்களெல்லாம் 1166
தந்தார்ஐங் நூறுகலம் சம்பாநெல் - முந்துமுனை
வேலாயு தக்காரர் வில்லாயு தக்காரர் 1167
மாலான சேவகரும் மற்றோரும் - நாலா
விதமான வஸ்த்ரமுதல் மெய்வரிசை தந்தார் 1168
இதுவே வரிசைஙமக் கென்று - சதிராகத்

அரும்பதவுரை : கண்ணிவரிசை; 1043. செங்கதிரோன் - சூரியன்; 1044. பொங்கமர் - சண்டை நடுவில் ; 1045. குறுணி - எட்டுப்படி; 1050. நீள்புவி - நீண்ட பூமி.

தண்டிகைமால் யானை சரப்பணியோர் கோடிசெம்
பொன் 1169
கண்டி பதக்கன் கடுக்கனுடன் - மண்டலத்தோர்
ஆருந் துதிக்க அதிகசெல் வங்கொடுத்தான் 1170
தீரன் சிவசாமி சேதுபதி - பாரிலெனக்கு

விறலி விடு தூது

ஏதும் குறைவுண்டோ ! இவ்வரிசை பெற்றவெலாம் 1171
மாதே ! விறலி மடமானே ! - காதல்
மனையாட்குச் சொல்லி மனந்திருத்தி என்றும் 1172
எனையா தரிக்கும்வகை எல்லாம் - மனதாரச்
சேலை நழுவினுல் செங்கையே தாங்கும்முலை 1173
சாலவிழுந் தால்வயிறே தாங்குமென்று - மேலுமங்கே
நான்பட்டபாடும் நடத்தையும்நான் வந்ததுவும் 1174
தேன்பட்ட சொல்லாட்குச் செப்பியே - கானஇசை
காட்டிமயல் காட்டிநெறி காட்டியுட னேவரவு 1175
காட்டிவர வேற்றுக் கருணையாய்க் - கூட்டிவந்து
புல்வாய் எனஅவள்பால் போய்உண்மை யாய்வாழி ! 1176
சொல்வாய் விறலிநீ தூது.

வெண்பா வாழ்த்து

வேதமுதல் வாழி ! முத்து வீராயி நாச்சியார்
சீதஅருள் வாழி ! செகம்வாழி ! - ஆதிஎன்ற
சிந்துரமுன காத்த சிவசாமி சேதுபதி
இந்திரனைப் போல்வாழி யே ! .

அரும்பதவுரை : கண்ணிவரிசை; 1162. சேலை நழுவினுல் செவ்கையே தாங்கும் முலை, சால விழுந்தால் வயிறே தாங்கும்-இளமைக் காலத்தில் தன்னைத்தானே காப்பாற்றிக் கொள்ளலாம். வயது காலத்தில் பெற்ற பிள்ளைதான் காப்பாற்றும்,

முற்றும்.

பிழை திருத்தம்

கூளப்ப நாயக்கன் காதல்

பக்கம்	கண்ணி	பிழை	திருத்தம்
14	19	மீண்டு என்பதை	மட்டு
14	25	வல்லரக்கர்	வல்லக்கா
16	26	பின்னிகிங்க	பின்னிலங்க
18	46	அலறித்	ஆலித்
22	67	செய்யா	செயடால்
22	69	குடிவாங்க	குடியேற
23	71	மங்கலஞ் சேர்நகர்	மங்கலஞ்சேர் பெஞ்சை நகர்
38	167	நீராமின்னுயோ	நீரரமின்னுளோ
42	188	என்றலலோ	என்றலவோ

கூளப்ப நாயக்கன் விறலி விடு தூது

பக்கம்	கண்ணி	பிழை	திருத்தம்
132	539	பொண்பூனூல்	பொன்பூணூல்
134	563	தேடிக்கடையில்	தேடிக் கட்டிக் கடையில்
136	592	கண்ணி எண் 692	592
142	650	பூவென்றெங்கே	பூவென்றெங்கே
147	688	கட்டுமட்ட்ாம்	கட்டுமட்டாம்
148	702	வேல்விழிபாள்	வேல்விழியாள்
149	710	தோடுத்தாள்	தொடுத்தாள்
150	719	கொண்டேனுன்	கொண்டேநான்
152	724	மாமியார் ?	மாமியார்—
165	834	கிழித்தான்	கிழித்தாள்
167	849	கோலில்	கோவில்
177	945	சேலைக்குள்	சோலைக்குள்
178	958	கண்ணி எண் 858ஐ	958
,,	,,	சந்தகமும்	சந்ததமும்
179	964	கீந்நிலத்து	கீந்தந்நிலத்து
,,	966	தென்புறுத்திற்	தென்புறத்திற்
,,	972	பூண்முளையாள்	பூண் முலையாள்
182	1014	சுகமுப்ர	சுமுகப்ர

பிழை திருத்தம்

சேதுபதி விறலி விடு தூது

பக்கம்	கண்ணி	பிழை	திருத்தம்
213	79	பார ராசர்	பரராசர்
215	113	காமதககூவெனவே	காமதகனுவெனவே
219	164	பூகான்	பூமான்
	165	பூபாபாலன்	பூபாலன்

★